சட்டத்தமிழாய்வு அறிஞர்
பி.ஆர்.ஜெயராஜன்

இந்திய ஒப்பந்தச்சட்டம் - I

பொதுக்கோட்பாடுகள்

Indian Contract Act - I

General Principles

11-ஆம் பதிப்பில்
திருத்தச்சட்டங்களின்படி

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்®

பி.ஆர்.ஜெ.
அவர்களின் கடைக்கண்ணில் ...

திருத்தச் சட்டங்கள் உள்ளடங்கிய
பதினொன்றாம் பதிப்பில்.....

இந்திய ஒப்பந்தச்சட்டம் - I

[பொதுக் கோட்பாடுகள்]

Indian Contract Act - I

[General Principles of Contract]

இது ஒரு ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ் தயாரிப்பு

பொருளடக்கம்

இந்திய ஒப்பந்தச் சட்டம் – I

1. இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 - ஒரு அறிமுகம் [The Indian Contract Act, 1872 - An Introduction] 1

2. ஒப்பந்தத்தின் வரையறை [Definition of Contract] 3
   - சட்டவியல் அறிஞர்கள் தரும் வரையறை 4
   - இந்திய ஒப்பந்தச் சட்டம் தரும் வரையறை 5
   - புரிவுரை (அல்லது) முனைவு 5
   - ஏற்பு 5
   - உறுதியுரை 6
   - மறுபயன் 6
   - உடன்பாடு 6
   - சட்டத்தால் வலியுறுத்தப்படக் கூடிய உடன்பாடாகும் 10
   - அனைத்து உடன்பாடுகளும் ஒப்பந்தகளாகாது: அனைத்து சட்டக் கடப்பாடுகளும் ஒப்பந்தங்களாகாது 11

3. செல்லத்தகு ஒப்பந்தமொன்றின் அடிப்படைக் கூறுகள் [Essentials of a Valid Contract] 14

4. ஒப்பந்தங்களின் வகைப்பாடு [Classification of Contracts] 19
   - சட்டத்தால் வலியுறுத்தப்படக் கூடிய தன்மைக்கேற்ப 20
   - உருவாக்கத்திற்கேற்ப 22
   - நிறைவேற்றத்தின் அடிப்படையில் 23

5. புரிவுரை (அல்லது) முனைவு [Proposal (or) Offer] 25
   - முனைவு - விளக்கம் 25
   - ஒரு செல்லத்தகு முனைவின் விதிகள் 25
   - ஒரு முனைவின் சிறப்பியல்புகள் 33
   - முனைவும், முனைவிற்கான அழைப்பும் - வேறுபாடு 34
   - விலைப்புள்ளிக்கான முக்கிய எடுத்துக்காட்டு வழக்குகள் 35

6. ஏற்பு
[Acceptance] 39

– ஏற்பு - வரையறை 40
– ஒரு செல்லத்தகு ஏற்பின் இன்றியமையாக் கூறுகள் 40
– ஒருவரின் 'மௌனம்' ஏற்பாகுமா? 46

7. முனைவு, ஏற்பு ஆகியவற்றை அறிவித்தல் (தெரிவித்தல்) மற்றும் திரும்பப் பெறுதல்
[Communication and Revocation of Offer and Acceptance Offer] 48

– முனைவை அறிவித்தல் 50
– ஏற்பை அறிவித்தல் 50
– திரும்பப் பெறுதலை அறிவித்தல் 51
  – திரும்பப் பெறல் குறித்த நடைமுறை விதிகள் 52
    – முனைவைத் திரும்பப் பெறுதல் 52
    – ஏற்பதைத் திரும்பப் பெறுதல் 52
– அஞ்சல் வழி ஒப்பந்தங்களில் ஆங்கிலச் சட்டத்திற்கும் இந்தியச் சட்டத்திற்கும் இடையே உள்ள ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் 53
– முனைவு முடிவுறும் பல்வேறு சூழ்நிலைகள் (அல்லது) முனைவைத் திரும்பப் பெறுவதற்கான பல்வேறு சூழ்நிலைகள் 54

8. மறுபயன்
[Consideration] 59

– மறுபயன் - விளக்கம் 60
– ஒரு செல்லத்தக்க மறுபயன் குறித்த விதிகள் 60
– மறுபயனுக்கு வெளியார் 62
  – மறுபயனுக்கு வெளியார் வழக்கிட முடியுமா? 63
    – 'மறுபயனுக்கு வெளியார் வழக்கிட முடியாது' எனும் ஆங்கிலச் சட்ட விதிக்கு விதிவிலக்குகள் 65
– ஒப்பந்தத்திற்கு வெளியார் (அல்லது) ஒப்பந்தச் சார்புறவு 67
  – ஒப்பந்தத்திற்கு வெளியார் வழக்கிட முடியுமா? - இந்திய மற்றும் ஆங்கிலச் சட்டத்தின் நிலைப்பாடு 67
    – விதிவிலக்குகள் 69
– மறுபயன் - வகைகள் 71
  – கடந்த கால மறுபயன் (அல்லது) முந்தைய மறுபயன் 71

- நிகழ்கால மறுபயன் 71
- எதிர்கால மறுபயன் 72

- கடந்த கால மறுபயனின் சட்ட நிலை 72
- மறுபயன் போதுமானதாக இருக்க வேண்டியது அவசியமில்லை 74
- மறுபயன் உண்மையானதாக இருக்க வேண்டும் 76
- மறுபயனில்லாத உடன்பாடு இல்லாநிலையதாகும் 77
  - விதிவிலக்குகள் 78

9. ஒப்பந்தத் தகவுடைமை (அல்லது) தரப்பினர்களின் ஒப்பந்தத் தகுதி [Capacity to Contract (or) Competency of Parties] 82

- உரிமை வயதடையாத இளவர் 85
  - இளவர் செய்து கொள்ளும் உடன்பாடுகள் பற்றிய விதிகள் 85
  - இளவர் ஒப்பந்தங்கள் - இந்திய மற்றும் இங்கிலாந்து சட்டப்படி 97
- திடமற்ற மனமுடையோர் 98
- சட்டம் எதனாலும் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தகுதியிழக்கப்பட்ட நபர்கள் 100

10. தன்னிச்சையான இசைவு (அல்லது) இசைவில் குறைபாடு [Free Consent (or) Flaw in Consent] 104

- இசைவு - வரையறை 105
- தன்னிச்சையான இசைவு - வரையறை 105
- இசைவு தன்னிச்சையாக இல்லையெனும் பொழுது ஏற்படும் விளைவு 106
- வலுக்கட்டாயம் 106
  - வலுக்கட்டாயம் - பிரிவு 15 கூறும் வரையறை 106
  - வலுக்கட்டாயம் யாரிடமிருந்து யாருக்குச் செய்யப்பட வேண்டும்? 107
  - உடற்கட்டாயம் 109
  - வலுக்கட்டாயம், உடற்கட்டாயம் - வேறுபாடுகள் 109
  - வலுக்கட்டாயத்தின் சட்ட விளைவு 110
- தகாநிலை செல்வாக்கு (அல்லது) தகாநிலை வற்புறுத்தம் 111
  - தகாத செல்வாக்கு - பிரிவு 16(1) கூறும் வரையறை 111
  - அடிப்படைக் கூறுகள் 111

- தகாத செல்வாக்கு துணிபு செய்யப்படும் உறவு முறைகள் 113
- தகாத செல்வாக்கின் சட்ட விளைவு 114
- வலுக்கட்டாயம், தகாத செல்வாக்கு - வேறுபாடுகள் 114
- மோசடி 115
  - மோசடி - பிரிவு 17 கூறும் வரையறை 116
  - மோசடிக்கு தேவைப்படும் முக்கியக் கூறுகள் 117
  - இழப்பு இன்றேல் மோசடி இல்லை; பாதிப்பு இன்றேல் இழப்பீடு இல்லை 119
  - மோசடியின் சட்ட விளைவு 119
  - பேசாதிருத்தல் மோசடியாகாது 119
    - பேசாதிருந்தல் எப்பொழுது மோசடியாகும்? 120
- திரித்துக்காட்டல் 121
  - திரித்துக்காட்டல் - பிரிவு 18 கூறும் வரையறை 122
  - திரித்துக்காட்டலின் முக்கியக் கூறுகள் 122
  - திரித்துக்காட்டலின் சட்ட விளைவுகள் 125
  - மோசடி, திரித்துக்காட்டல் - வேறுபாடுகள் 126
- தவறு 127
  - தவறின் வகைகள் 128
    - சட்டத் தவறு 128
    - பொருண்மைத் தவறு 129
  - இருதலைத் தவறு - இரு விதங்களில் 130
  - ஆவணப் பிழை வாதம் 138

11. சட்டப்படியான மறுபயனும் நோக்கமும் [Lawful Consideration and Object] 139

- விளக்கம் 139
- ஒரு உடன்பாட்டின் மறுபயனும் நோக்கமும் சட்டத்திற்கு புறம்பானதாகக் கருதப்படும் சூழ்நிலைகள் 140
- பொதுக் கொள்கைக்கு முரணான உடன்பாடுகள் 143
- சட்ட வழக்குத் தொடர்வை தடை செய்யும் உடன்பாடுகள் 151
- வணிகத்தை தடுத்து நிறுத்தும் உடன்பாடுகள் 151
- பகுதியளவில் சட்டப்புறம்பாக இருக்கும் மறுபயன்களும் நோக்கங்களும் - பிரிவு 24 கூறுவதாவது 158
  - பிரிபடக்கூடிய தன்மை 159
  - நீலநிறப் பென்சில் விதி 159

- எதிரெதிரான உறுதியுரைகள் 160
- ஒற்றை மாற்று உறுதியுரைகள் 161
- 'இல்லாநிலை', 'சட்ட முரணான' ஒப்பந்தம் - வேறுபாடு 163

12. சட்டத்தால் இல்லாநிலையதென அறிவிக்கப்பட்ட உடன்பாடுகள் [Agreements Declared Void by Law] 167

- பணைய உடன்பாடுகள் அல்லது பகடைப் பணையம் 169
  - பிரிவு 30 கூறும் வரையறை 170
  - எடுத்துக்காட்டுகள் 170
  - பணையத்தின் முக்கியக் கூறுகள் 170
  - பணைய உடன்பாடுகளுக்கு விதிவிலக்குகள் 171
  - பணைய உடன்பாடும், காப்பீட்டு ஒப்பந்தமும் - வேறுபாடுகள் 171
  - பணைய உடன்பாட்டின் விளைவு 172
- நிகழ்வுசார் ஒப்பந்தம் 173
  - விளக்கம் 173
  - பிரிவு 31 கூறும் வரையறை 173
  - எடுத்துக்காட்டு 173
  - அடிப்படைக் கூறுகள் 173
  - நிகழ்வுசார் ஒப்பந்தம் தொடர்பான விதிகள் 174
  - பணைய உடன்பாடு, நிகழ்வுசார் ஒப்பந்தம் - வேறுபாடுகள் 176

13. ஒப்பந்த நிறைவேற்றம் [Performance of Contract] 178

- சட்ட விளக்கம் 178
- ஒப்பந்த நிறைவேற்றம் யாரால் செய்யப்பட வேண்டும்? 178
- யார் ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கோரலாம்? 180
- நிறைவேற்றத்தின் இரு முக்கிய வகைகள் 181
  - நடைமுறை நிறைவேற்றம் 181
  - முயற்சிக்கப்பட்ட நிறைவேற்றம் (அல்லது) நிறைவேற்ற அளிப்பு முனைவு 182
    - ஒரு செல்லத்தக்க அளிப்பு முனைவிற்கான மூலக் கூறுகள் 182
- இணைந்த உறுதியுரைகள் 184
  - இணைந்த உறுதியுரை நிறைவேற்றம் குறித்த விதிகள் 184
- ஒப்பந்த நிறைவேற்றத்திற்கான காலம் 183

- நிறைவேற்றத்திற்கான இடம் 189
- நிறைவேற்றும் முறை 189
- காலம், ஒப்பந்தத்தின் ஓர் இன்றியமையாக் கூறு 189
- எதிரெதிரான உறுதியுரைகள் 191
- எதிரெதிரான உறுதியுரைகளின் நிறைவேற்றம் பற்றிய விதிகள் 192
- தொகை ஒதுக்கல் (அல்லது) தொகையைப் பயன்படுத்தல் தொடர்பான விதிகள் 194
  - கிளோட்டன் வழக்கு விதி 196
- ஒப்பந்தங்களை மீளாமாற்றுரிமை அளித்தல் 197

14. ஒப்பந்த விடுவிப்பு [Discharge of Contract] 198

- ஒப்பந்த விடுவிப்பு - விளக்கம் 199
- ஒப்பந்த விடுவிப்பு முறைகள் 200
  - ஒப்பந்த நிறைவேற்றத்தின் மூலம் அல்லது நிறைவேற்ற அளிப்பு முனைவு மூலம் 200
  - நிறைவேற்ற இயலாமையின் மூலம் 200
    - தொடக்கத்திலிருந்த இயலாமை 201
    - இடையிட்டு நிகழ்வுறு இயலாமை 201
  - புதிய உடன்பாடு அல்லது இசைவு மூலம் 205
  - ஒப்பந்த மீறுகையின் மூலம் 213
    - உள்ளபடியான மீறுகை 213
    - முன்னிகழ்வான மீறுகை 215
  - சட்டச் செயல்பாட்டால் 217
  - கருநிலைத் திருத்தத்தின் மூலம் 217
  - காலம் கடந்தமையால் 218
- ஒப்பந்த நிலைகுலைவு கோட்பாடு 220

15. ஒப்பந்த மீறுகைக்கான தீர்வழிகள் [Remedies for Breach of Contract] 224

- ஒப்பந்த நீக்கம் அல்லது இறுத்தம் 225
- இழப்பீடு 225
- பணித்தகு தொகை 225
- ஏற்றதை குறித்த வகையில் அளிக்கும்படி கோரல் 227
- உறுத்துக்கட்டளை கோரி வழக்குரைத்தல் 228

- இழப்பீடு - தன்மை 229
- இழப்பீடு குறித்து பிரிவு 73 கூறுவதாவது 229
- இழப்பீடுகளின் வகைகள் 230
- இழப்பீட்டை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படை விதிகள் 234
- தண்டத் தொகையும் (தண்டப்பணம்) அறுதியிட்ட இழப்பீடும் 238

16. ஒப்பந்தப் போல்வு [Quasi-Contract] 241

- ஒப்பந்தப் போல்வு - விளக்கம் 242
- ஒப்பந்தப் போல்வின் நோக்கம் 242
- சட்டங்கள் கூறுவதென்ன? 243
- ஒப்பந்தமும், ஒப்பந்தப் போல்வும் - வேறுபாடுகள் 243
- ஒப்பந்தப் போல்வின் வகைகள் 243

17. பிரச்சனைகளும் தீர்வுகளும் [Problems and Solutions] 248

- சட்டத்தால் வலியுறுத்தப்படக் கூடிய உடன்பாடுகளே ஒப்பந்தங்கள் 248
- முனைவும் ஏற்பும் 250
- ஒப்பந்தப் புள்ளி (அல்லது) முனைவிற்கான அழைப்பு 253
- முனைவு மற்றும் ஏற்பை அறிவித்தல் 255
- மறுபயன் 257
- ஒப்பந்தத்திற்கு வெளியார் 259
- தரப்பினர்களின் ஒப்பந்தத் தகுதி 261
- தன்னிச்சையான இசைவு (அல்லது) இசைவில் குறைபாடு 265
- சட்ட முரணான உடன்பாடுகள் 266
- வணிகத்தை தடை செய்யும் உடன்பாடுகள் 268
- நிகழ்வுசார் ஒப்பந்தம் 269
- ஒப்பந்த நிறைவேற்றம் 270
- ஒப்பந்த விடுவிப்பு 272
- ஒப்பந்தப் போல்வு 273
- அறுதியிட்ட இழப்பீடும் தண்டப் பணமும் 274
- குறித்தவகை நிவாரணச் சட்டத்தின் கீழான சில பிரச்சனைகள் 277

-o0o-

சிறு குறிப்புகள் [Short Notes]

1. தவிர்த்தகு ஒப்பந்தம் [Voidable Contract] 19
2. முனைவிற்கான அழைப்பு [Invitation to treat] 33
3. முனைவு மற்றும் முனைவிற்கான அழைப்பு [Offer and invitation to offer] 33
4. முனைவுக்கு அழைப்பு [Invitation to offer] 33
5. மறுபயன் [Consideration] 59
6. ஒப்பந்தத்திற்கு அயலார் [Stranger to contract] 66
7. மறுபயன் கோட்பாட்டின் விதிவிலக்குகள் [Exceptions to the Doctrine of consideration] 66
8. ஒப்பந்தச் சார்புறவு [Privity of contract] 66
9. முந்தைய மறுபயன் [Past consideration] 70
10. இளவரின் ஒப்பந்தம் [Minor's contract] 84
11. அத்தியாவசியப் பொருள்களுக்காக இளவருடன் ஒப்பந்தம் [Minor's contract for necessaries] 84
12. தன்னிச்சையான இசைவு [Free consent] 105
13. தகாநிலை வற்புறுத்தம் [Undue influence] 111
14. முழு நம்பிக்கையில் எழுகின்ற ஒப்பந்தங்கள் [Uberimae fidei contracts] 121
15. தவற்றுக்கோள் [Mistake] 128
16. ஆவணப் பிழை வாதம் [*Non est factum*] 128
17. பொதுக் கொள்கைக்கு எதிரான ஒப்பந்தங்கள் [Contracts opposed to Public Policy] 142
18. பொதுக் கொள்கை [Public Policy] 142
19. வழக்குவகைப்பங்கு ஊதியமும் வழக்காடு உதவியும் [Champerty and Maintenance] 151
20. வணிகத்தை தடுத்து நிறுத்தும் உடன்பாடுகள் [Agreements in Restraint of Trade] 151
21. நார்டன்பெல்ட் எதிர் மாக்ஸிம் நார்டன் பெல்ட் கம்பெனி [Norden felt v. Maxim Norden felt and Co.] 151
22. நீலநிறப் பென்சில் விதி [Blue Pencil Rule] 158
23. பிரிபடக்கூடிய தன்மை [Severability] 158
24. எதிரெதிரான உறுதியுரைகள் [Reciprocal promises] 158
25. ஒற்றைமாற்று உறுதியுரைகள் [Alternative promises] 158

26. பகடை பணைய ஒப்பந்தங்கள் [Wagering contracts] 169
27. பகடை பணைய உடன்படிக்கைகள் [Wagering agreements] 169
28. நிகழ்வுசார் ஒப்பந்தம் [Contingent Contract] 173
29. நிறைவேற்ற அளிப்பு முனைவு [Tender of Performance] 181
30. இணைந்த உறுதியுரைகள் [Joint Promises] 185
31. ஒப்பந்தங்களை மீளாமாற்றுரிமை அளித்தல் [Assignment of consent] 197
32. நிறைவேற்றம் மூலம் முடிவுறுதல் [Discharge by Performance] 199
33. புத்தீடு [Novation] 218
34. புத்தீடு கோட்பாடு [Doctrine of Novation] 218
35. முன்னிகழ் ஒப்பந்த மீறுகை [Anticipatory breach of contract] 219
36. முன்னிகழ் மீறுகை [Anticipatory breach] 219
37. நிலைகுலைவு [Frustration] 220
38. பணித்தகு தொகை [Quantum Meuit] 228
39. பெயரளவு இழப்பீடு [Nominal damages] 229
40. சிறந்த இழப்பீடு [Special damages] 229
41. ஹாட்லி எதிர் பாக்ஸண்டேல் [Hadley v. Baxendale] 229
42. ஒப்பந்த முறிவின் இழப்பீடுகள் [Damages for breach of contract] 233
43. தண்டப்பணம் [Penalty] 238
44. அறுதியிட்ட இழப்பீடு [Liquidated damages] 238
45. ஒப்பந்தப் போல்வு [Quasi-contract] 242
46. தன்னிச்சையான இசைவு [Free consent] 105

வேறுபாடுகள் [Distinctions]

1. Offer and Invitation to offer 33
2. Minor's Contract - Indian and England Law 97
3. Coercion and Duress 109
4. Coercion and Undue influence 115
5. Fraud and Misrepresentation 126
6. Void and Illegal Contract 163
7. Wagering agreement and Contract of Insurance 171
8. Wagering agreement and Contingent Contract 176
9. Damages and Penalty 238

-o0o-

வழக்குளின் பட்டியல் [List of Cases]

"A"

1.	Abdul Azeez v. Mazum Ali	16,78,257
2.	Abdul Gaffar v. Plarelal	264
3.	Ajudhia Prasad v. Chandan Lal	91
4.	Allcard v. Skinner	114
5.	Ammi Raju v. Seshamma	108
6.	Ammi Raju v. Seshamma	265
7.	Apparao v. Ramalingamurthi	165
8.	Atkinson v. Denby	164, 166

"B"

9.	B. Sunley & Co. v. Cunard White Star Ltd.	229
10.	Baily v. De Crespigny	203
11.	Balfour v. Balfour	9,12,26,249
12.	Bannerman v. White	123
13.	Bansraj v. Secretary of State	109
14.	Behn v. Burness	215
15.	Benett v. Benett	146
16.	Besant v. Narayaniah	147
17.	Bettini v. Gye	215
18.	Bhudra Chand v. Betts	214
19.	Brahmaputra Tea Company Ltd. v. E. Scarth	154
20.	Brogden v. Metropolitan Railway Co.,	46
21.	Byirne v. Van Tienhoven	55

"C"

22.	Caltex (India) Ltd. v. Bhagwan Devi	190
23.	Carlill v. Carbolic Smoke Ball Co.,	37, 47
25.	Cellulose Acetate Silk Co. v. Widnes Foundry	236
26.	Central London Property Trust Ltd. v. High Trees House Ltd.	212
27.	Chimanram v. Divana Chand	135
28.	Cook v. Lister	212
29.	Cooper v. Phibbs	129

30. Cundy v. Lindsay 136

"D"

31. Davlat Singh v. Pandu 161
32. De Ka Bare v. Pearson 75
33. Derry v. Peek 118
34. Deveynes v. Noble (Clayton's Case) 196
35. Dickinson v. Dodds 57
36. Dunlop Pneumatic Tyre Co. Ltd., v. New Garage and Motor Co. Ltd., 239
37. Dunlop Pneumatic Tyre Co. v. Selfridge & Co. Ltd. 68
38. Durga Prasad v. Baldeo 61
39. Dutton v. Poole 64, 65

"E"

40. Eliasaon v. Henshaw 42
41. Esso Petroleum Co. Ltd. v. Mardon 124
42. Esso Petroleum Co. Ltd., v. Harper's Garage (Stourport) Ltd., 269
43. Exall v. Partridge 244

"F"

44. Faulkner v. Lowe 9
45. Felthouse v. Bindley 47
46. Financings Ltd. v. Stimson 56
47. Fisher v. Bell 36
48. Fitch v. Snedakar 28,251
49. Ford Motor Co. v. Armstrong 240
50. Foster v. Mckinnon 134
51. Fraser & Co., Bombay Ice Manufacturing Co., 154

"G"

52. Galloway v. Galloway 130
53. Goldsoll v. Goldman 160
54. Great Northern Railway Co. v. Witham 31
55. Guthing v. Lynn 27

"H"

56. Hadley v. Baxendale 231, 235

57.	Harvey v. Facey	35
58.	Hem Singh v. Bhagwat	135
59.	Henkel v. Pape	132
60.	Hermann v. Charlesworth	149
61.	Hind Construction Contractors v. State of Maharashtra	190
62.	Hochster v. De La Tour	216
63.	Hutchinson v. Bowker	41
64.	In re. Nursey Spinning & Weaving Co.,	125
65.	Indran Ramaswamy v. Anthappa	90
66.	Ingram v. Little	138

"K"

67.	Kalai haldar v. Sheikh	8, 249
68.	Kedar Nath v. Gorie Mohamed	257
69.	Khwaja Muhamad v. Husaini Begum	260
70.	Krell v. Henry	204, 222
71.	Krishnaswamy Iyer v. Natesa Iyer	195

"L"

72.	Lalman Shukul v. Gauri Dutt	28 ,251
73.	Lampleigh v. Brathwait	74
74.	Ledu Coachman v. Hiralal	143
75.	Leslie v. Sheill	92
76.	Lowe v. Peers	149
77.	Lumley v. Wagner	277

"M"

78.	Macpherson v. Appanna	35
79.	Malli Muktar v. Mt. Bibi Rahimunnisa	195
80.	Mason v. Provident Clothing & Supply Co. Ltd.,	157
81.	Megaraj v. Mst. Bayabai	195
82.	Mitchel v. Reynolds	154
83.	Mohari Bibi v. Dharmadas Ghose	86, 264
84.	Muthiah Chettiar v. Karuppan Chetti	108

"N"

85.	Nash v. Inman	94
86.	Neville v. Dominion of Canada News Co. Ltd.	147

87. Nicholson & Venn v. Smith Merriott 132
88. Nordenfelt v. Maxim Nordenfelt Guns and Ammunition Co., 155
89. Nursingdass Kothari v. Chuttoo Lal 131

"O"

90. Oakes & Co. v. Jackson 153

"P"

91. Peek v. Gurney 118
92. Phillips v. Brooks (The Emerald Case) 137
93. Pinnel v. Cole (Pinnel's Case) 211
94. Poonoo Bibi v. Fyez Buksh 79, 161
95. Powell v. Lee 46

"R"

96. Raffles v. Wichelhaus 131
97. Ragavachariar v. Srinivasa Raghavachariar 89
98. Raj Rani v. Prem Adib 88
99. Rajah Venkata Subhadrayyamma Garu v. Sri Poosapathy Venkatapathi Raju 144
100. Rajluckhy Debee v. Bhoothnath Mookerjee 79
101. Ramsgate Victoria Hotel Co. v. Montefiore 43, 56
102. Ranga Raju v. M.Basapa 264
103. Ranganayakamma v. Alwar Chetty 107
104. Rayadurai v. Muttuswami 191
105. *Re* Andrews 147
106. *Re* McArdle 73
107. Regina v. Demers 30
108. Reilly v. The King 203
109. Reynolds v. Atherton 58
110. Roberts v. Gray 95
111. Robinson v. Davison 273
112. Robinson v. Davison 202
113. Rose Frank & Co. v. Crompton Bros. 28
114. Rosooria v. Thomas 73
115. Routledge v. Grant 41
116. Ryder v. Wombwell 93

"S"

117. Sadiq Ali Khan v. Jai Kishore 89
118. Saroj Bandu v. Jnanada 146
119. Satyabrata Ghose v. Magneram Bangur 223
120. Scott v. Coulson 131
121. Shakil Kala v. Ram Saran Bhagat 154
122. Shepherd v. Kain 124
123. Shuppu Ammal v. Subramanyan 261
124. Shuppu Ammal v. Subramanyan 69
125. Simpson v. London and North Western Railway Co. 235
126. Sindha v. Abraham 72
127. Smith v. Huges 134
128. Smith v. Reese River Co., 125
129. State of M.P. v. Goverdhan Das 31
130. State of West Bengal v. B.K. Mondal & Sons 245
131. Stocks v. Wilson 91
132. Sundararaja v. Lakshmi Ammal 69 ,261

"T"

133. Taylor v. Caldwell 202, 221
134. Taylor v. Portington 27
135. Thomas v. Thomas 74
136. Thoroughgood's case 135
137. Tinn v. Hoffman & Co. 32
138. Tweddle v. Atkinson 65

"V"

139. Vaithyanadham v. Gangarazu 150
140. Venkata Krishna v. Venkatachalam 150
141. Venkatchinnaya v. Venkatramaya 63
142. Venkayyaswamy v. Rangaswamy 79

"W"

143. Watters v. Morgan 124
144. Webster v. Cecil 133
145. Weeks v. Tybald 26

-o0o-

அண்மைக்காலத்தில் இயற்றப்பட்ட சட்டங்களால் இந்திய ஒப்பந்தச்சட்டம், 1872-இல் ஏற்பட்ட சட்ட விளைவுகள் - ஒரு பார்வை

ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுச்சீரமைப்பு சட்டம், 2019

(சட்டம் எண். 34 / 2019)

The Jammu and Kashmir Reorganisation Act, 2019

(34 of 2019)

சட்ட விளைவு : இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872 இந்திய முழுமைக்கும் அளவில் நிற்கும்

ஜம்மு–காஷ்மீர் மாநிலம் நமது இந்திய ஒன்றியத்தின் ஓர் பகுதியாக இருந்தாலும், அதன் தகுநிலை (அந்தஸ்து) இந்தியாவின் பகுதியாக உள்ள மற்ற மாநிலங்களின்தகுநிலையைக் காட்டிலும் வேறுபட்டதாகும். அம்மாநிலத்திற்கென சிறப்புத் தகுநிலையை (Special Status) இந்திய அரசியலமைப்பின் 370–ஆம் உறுப்பு அதற்கு வழங்கியுள்ளது. இதனால் நமது இந்திய நாடாளுமன்றம் இயற்றும் சட்டங்கள் அனைத்தும் அதன் அளவுகோலையைப் பொறுத்தவரை "ஜம்மு–காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியா முழுமைக்கும் பொருந்தும்" என்று ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தை தவிர்த்துவிடும். அதாவது ஜம்மு–காஷ்மீர் மாநிலம் தனக்கென ஓர் தனி அரசியலமைப்பைக் கொண்டு இயங்கி வந்தது. (எனினும் இந்திய அரசின் நிர்வாகத்துறை அதிகாரத்தின் கீழ் ஜம்மு–காஷ்மீர் மாநில ஆட்சி நடைபெற்று வந்தது.) இந்த சிறப்பு தகுநிலை காரணமாக மைய சட்டங்களுக்கு இணையான சட்டங்களை ஜம்மு–காஷ்மீர் மாநிலம் சில வரம்புகளுக்குட்பட்டு தனக்காக தானே இயற்றிக் கொள்ளும்.

இந்நிலையில் ஜம்மு–காஷ்மீர் மாநிலத்திற்கு வழங்கப்பட்டிருந்த சிறப்பு தகுநிலையை நீக்கும் பொருட்டு **ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுச்சீரமைப்பு சட்டம், 2019-ஐ** நாடாளுமன்றம் இயற்றியது. **இச்சட்டம் செயல்திறத்திற்கு வந்த 31-10-2019**–ஆம் தேதியில் இருந்து ஜம்மு–காஷ்மீர் மாநிலத்திற்கென வழங்கப்பட்டிருந்த சிறப்புத் தகுநிலை நீக்கப்பட்டது. இதனால் இந்தியாவின் மற்ற மாநிலங்கள் மைய அரசுடன் எத்தகு சட்ட உறவு கொண்டு கூட்டாட்சியில்

இருந்து வருகிறதோ, அதே உறவு கொண்டு விளங்கும் ஓர் ஆட்சி நிலப்பரப்பாக ஜம்மு–காஷ்மீர் ஆனது. இதன் விளைவாக வெளி மாநிலத்தவர் எவரும் ஜம்மு–காஷ்மீரில் அசையாச் சொத்து வாங்க முடியாது, அரசுப் பணியில் அமர முடியாது என்றெல்லாம் வகை செய்யும் உறுப்பு 35A–ம் நீக்கறவு செய்யப்பட்டது. இதன் விளைவாக ஒரே இந்தியாவாகி கூட்டாட்சி வலுப்பெற்றது.

அந்த வகையில் ஜம்மு–காஷ்மீர் மாநிலத்திற்கு பொருந்ததாக இருந்த வந்த இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872, தற்போது பொருந்தும் வண்ணமாக மாறியது. இந்தச் சட்டம் மட்டுமல்ல, நமது நாடாளுமன்றம் இயற்றிய பல சட்டங்களும் ஜம்மு–காஷ்மீர்–க்கு 31–10–2019–ஆம் தேதிமிலிருந்து பொருந்தும் படி மேற்சொன்ன **ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுச்சீரமைப்பு சட்டம், 2019** ஆக்கியுள்ளது.

முந்தைய இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **பிரிவு 1**–இன் கீழ் வரும் **அளவுகை மற்றும் தொடக்கநிலையில்** (Extent and Commencement), "இச்சட்டம் **ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் நீங்கலாக** இந்தியா முழுமைக்கும் அளாவி நிற்கும்" என்று இருந்தது, தற்போது **ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுச்சீரமைப்பு சட்டம், 2019**–இன் பிரிவுகள் 95, 96 மற்றும் அட்டவணை V–இன்படி, **"ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் நீங்கலாக"** என்ற சொற்கள் முற்றிலுமாக அகற்றப்பட்டுவிட்டன. இதனால் தற்போது இந்திய ஒப்பந்தச்சட்டம் **இந்தியா முழுமைக்கும் அளாவி நிற்கும் ஓர் சட்டமாக ஆனது.** [The words "except the State of Jammu and Kashmir" omitted by Act 34 of 2019, Ss. 96, 96 and Sch. V (**w.e.f. 31-10-2019**)].

மேற்படி மறுச்சீரமைப்புச் சட்டத்தால் இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872–இன் தொடக்கத்தில் (Preliminary) பிரிவு 1–இன் சொற்றொடரில் ஏற்பட்ட மாற்றத்தின் ஆங்கில வடிவம் வருமாறு:–

PRELIMINARY

1. Short title.- This Act may be called THE INDIAN CONTRACT ACT, 1872.

Extent, Commencement.- It extends to the whole of India [1][* * *]; and it shall come into force on the first day of September, 1872.

---

1. The words "except the State of Jammu and Kashmir" omitted by Act 34 of 2019, Ss. 95, 96 and Sch. V (w.e.f. 31-10-2019)

வங்கிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம், 2012

(சட்டம் எண். 4 / 2013)

Banking Laws (Amendment) Act, 2012

(4 of 2013)

சட்ட விளைவு : வங்கி மற்றும் நிதிநிறுவனத்தின் பொறுப்புறுதிக்கு பிரிவு 28-லிருந்து விலக்கு; வழக்கிடுவற்கான காலவரம்பை உடன்பாட்டில் நிர்ணயித்துக் கொள்ளலாம்.

வங்கி ஒழுங்குமுறைச் சட்டம் 1949, வங்கி நிறுவனங்கள் (தொழிலாற்றும் நிறுவனங்கள் கையகப்படுத்தல் மற்றும் மாற்றுதல்) சட்டம் 1970, வங்கி நிறுவனங்கள் (தொழிலாற்றும் நிறுவனங்கள் கையகப்படுத்தல் மற்றும் மாற்றுதல்) சட்டம் 1980 ஆகியவற்றை மேலும் திருத்துவதற்காக **2012-ஆம் ஆண்டில் வங்கிச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம்** இயற்றப்பட்டது.

இது 18–01–203–ஆம் நாள் முதல் செயல்திறத்திற்கு வந்தது.

இது இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 28–இல் ஒரு முக்கியமான திருத்தத்தைக் கொண்டு வந்தது. பிரிவு 28, **சட்ட நடவடிக்கைகளைத் தடை செய்யும் உடன்பாடுகள் இல்லாநிலையது** (Agreements in restriant of legal proceedings void) என்று கூறுகிறது. இப்பிரிவு குறித்தும், இதற்கு இருக்கும் இரண்டு விதிவிலக்குகள் (Exception) பற்றியும் நாம் இந்நூலின் பக்கம் எண்கள். 145 மற்றும் 146–இல் விரிவாகக் காணலாம்.

தற்போது மேற்கண்ட திருத்தச் சட்டம் பிரிவு 28–க்கு மூன்றாவதாக ஒரு விதிவிலக்கைச் சேர்த்திருக்கிறது. இது **ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் வங்கிகளின் நலனைக் கருத்தில் கொண்டு சேர்க்கப்பட்டதாகும்.** வேறு வகையில் சொன்னால், பொதுவாக சட்ட நடவடிக்கைகளைத் தடை செய்யும் உடன்பாடுகள் எதுவும் இல்லாநிலையதாகும். இது பிரிவு 28 கூறும் நிலைப்பாடு. எனினும் முன்சொன்னது போல் இதற்கு இரண்டு விதிவிலக்குகள் உள்ளன. அதன்படி, (1) ஒரு விடயம் குறித்து இரண்டு நபர்களுக்கிடையே தகராறு எதுவும் எழுந்தால் அதனை (நீதிமன்றத்தில் வழக்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக) இசைவுத் தீர்ப்புக்கு விடுவதாக உடன்பாடு செய்து கொண்டால், அவ்வுடன்பாடு செல்லத்தக்கதே. (2) அவ்வாறே ஏற்கனவே எழுந்துள்ள தகராறை இசைவுத் தீர்ப்புக்கு விட்டு தீர்த்துக் கொள்வதாக இரு தரப்பினர் உடன்பாடு செய்து கொண்டால் அதுவும் செல்லத்தக்கதே; சட்டமுரணானதாக ஆகாது.

இந்த வரிசையில் மேற்கண்ட திருத்தச் சட்டம் புதிதாகச் சேர்த்திருக்கும் **3–ஆம் விதிவிலக்கு** வருமாறு.

விதிவிலக்கு 3.– வங்கி அல்லது நிதி நிறுவனம் ஒன்றின் பொறுப்புறுதி உடன்பாட்டிற்கு விலக்கு.– குறித்துரைக்கப்பட்ட ஓர் காலஅளவு முடிவுறுவதன் பேரில் பொறுப்புறுதி அல்லது உடன்பாட்டின் கீழான அல்லது அது குறித்த பொறுப்பு எதிலிருந்தும் அதற்குரிய தரப்பினர் எவரையும் விடுவிப்பதற்கான அல்லது உரிமைகள் மறைந்து போவதற்கான பொறுப்புறுதிக்கு வழிவகை செய்யும் வரைவுரை ஒன்றை அத்தகு பொறுப்புறுதி அல்லது உடன்பாட்டில் விதித்து வங்கி அல்லது நிதி நிறுவனம் எதுவும் செய்து கொள்ளும் எழுத்துப் பூர்வமான ஒப்பந்தம் ஒன்றை இந்தப் பிரிவு சட்டமுரணானதாக ஆக்காது. அந்தக் குறித்துரைக்கப்பட்ட காலஅளவு என்பது மேற்சொன்ன பொறுப்பிலிருந்து அத்தகு தரப்பினரை விடுவிப்பதற்கான அல்லது உரிமைகள் மறைந்து போவதற்கான ஓர் குறிப்பிட்ட நிகழ்வு நடக்கும் அல்லது நடக்காதிருக்கும் தேதிலிருந்து ஓராண்டுக்கும் குறையாமல் இருக்க வேண்டும்.

இதன் ஆங்கில மூலம் வருமாறு:–

[1]*Exception 3.*- **Saving of a guarantee agreement of a bank or a financial institution.-** This section shall not render illegal a contract in writing by which any bank or financial institution stipulate a term in a guarantee or any agreement making a provision for guarantee for extinguishment of the rights or discharge of any party thereto from any liability under or in respect of such guarantee or agreement on the expiry of a specified period which is not less than one year from the date of occurring or non-occurring of a specified event for extinguishment or discharge of such party from the said liability.

இந்த 3–ஆம் விதிவிலக்கை வாசிக்கும் போதே "குழப்பாக உள்ளதே" என்ற உணர்வு தோன்றினால், அது இயற்கையே. எனவே இதை சரியான கோணத்தில் புரிந்து கொள்ள நாம் மீண்டும் பிரிவு 28–இன் கீழ் வரும் இரண்டு வகைமுறைகளின் சாரத்தைக் காண வேண்டியது அவசியமாகும். அவற்றின்படி,

(அ) ஒப்பந்தம் ஒன்றின் கீழ் ஒருவருக்கு ஏற்படும் உரிமைகளை அவர் தக்க நீதிமன்றத்தில் வழக்கிட்டு வலியுறுத்தி செயல்படுத்துவதை தடுத்தும் நிறுத்தும் வண்ணமோ, காலவரையறைச் சட்டம் குறிப்பிடும் கால வரையறைக்கு முரணாக இன்ன கால கட்டத்திற்குள் வழக்கிட வேண்டும் என்றோ,

1. Inserted by Banking Laws (Amendment) Act, 2012 (Act of 2013) , S. 17 and Sch. (w.e.f. 18-1-2013)

(ஆ) குறிப்பிட்ட காலம் முடிவுற்றவுடன் அவ்வுரிமைகளையே இல்லாமலாக்கும் பொருட்டோ அல்லது ஒப்பந்தப்படி பொறுப்புடைய ஒரு தரப்பினரை அப்பொறுப்பிலிருந்து விடுவிக்குமாறோ

செய்து கொள்ளப்படும் உடன்பாடுகள் இல்லாநிலையதாகும்.

ஆனால் அதே நேரத்தில் ஒரு வங்கி அல்லது நிதி நிறுவனம் தரப்பினர் ஒருவரின் பொறுப்பு நிலைக்கு (liability) மற்றொரு தரப்பினருக்கு பொறுப்புறுதி (guarantee) அளித்திருந்து, அத்தரப்பினர் தான் ஏற்றுக் கொண்ட பொறுப்பின் படி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நடக்கவில்லையென்றால், அதிலிருந்து குறைந்தபட்சம் ஓராண்டிற்குள் அம்மற்றொரு தரப்பினர், வங்கி வழங்கிய பொறுப்புறுதியை செயலாக்க வங்கி மீது வழக்கிட வேண்டும். அந்த ஓராண்டு முடிவுற்ற பிறகு வங்கி அல்லது நிதி நிறுவனத்தின் மீது வழக்கிட்டு நிவாரணம் பெற முடியாது. இவ்வகை ஒப்பந்தத்திற்கு பிரிவு 28 விலக்களிக்கிறது.

முன்னதாக **National Insurance Co. Ltd., v. Sujir Ganesh Nayk & Co.,**[1] என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறிய கருத்துகளை இங்கு கவனிப்பது நம்மை மேலும் தெளிவாக்கும். அதாவது, ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குள் வழக்கிட வேண்டும் என்று காலவரையறைச் சட்டம் கூறுகிறது. அந்த காலஅளவை உடன்பாடு ஒன்றின் மூலம் தரப்பினர்கள் குறைத்துக் கொள்வது அனுமதிக்கப்படாது. ஆனால் அதே நேரத்தில் அதற்கும் குறைவான ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் கோரிக்கையை வலியுறுத்தி வழக்கிடும் உரிமையை செயற்படுத்தவில்லையெனில், அந்த உரிமையே மறைந்துபோகும் என்று வழி வகை செய்து உடன்பாடு செய்து கொள்வது அனுதிக்கப்படக் கூடியது.

Union of India v. Indusind Bank Ltd.,[2] – 2013–ஆம் ஆண்டின் மேற்படி திருத்தச் சட்டத்திற்குப் பிறகு தீர்ப்புரைக்கப்பட்ட இவ்வழக்கின் சங்கதிகள்படி, பஞ்சு இறக்குமதியாளர்கள் பலரும் தங்கள் இறக்குமதி தொழிலுக்காக இந்திய அரசிடம் ஏற்படுகின்ற பணப்பொறுப்பைத் தீர்க்க அதற்கு வங்கிப் பொறுப்புறுதி ஒன்றை வழங்கினர். இதற்காக முத்தரப்பு உடன்படிக்கை ஒன்றும் எழுதிக்கொள்ளப்பட்டது. இதன்படி பஞ்சு இறக்குமதியாளர்கள் இந்திய அரசிடம் தங்களுக்கு ஏற்பட்ட பொறுப்பைத் தீர்க்கத் தவறியதிலிருந்து, இந்திய அரசு வங்கிப் பொறுப்புறுதியை வலியுறுத்திச் செயற்படுத்துவதற்கான காலஅளவு மூன்று மாதங்கள் எனவும் நிர்ணயிக்கப்பட்டது.

இந்நிலையில் பஞ்சு இறக்குமதியாளர்கள் தங்களுக்கு இந்திய அரசிடம் ஏற்பட்ட பொறுப்பைத் தீர்க்க முடியவில்லை. எனவே உடன்பாட்டின்படி 3 மாதங்

1. (1997) 4 SCC 366
2. (2006) 9 SCC 720 : (2006) 4 SCC (Civ) 545

களுக்குள் பஞ்சு இறக்குமதியாளர்களுக்காக வங்கி வழங்கிய பொறுப்புறுதியை செயலுக்கு கொணர்ந்து, தனது தொகையைக் கோரி இந்திய அரசானது வங்கி மீது வழக்கிட வேண்டும். ஆனால் இந்திய அரசு அவ்வாறு வழக்கிடாமல் மூன்று மாதங்கள் கடந்த பிறகு வங்கியிடம் கோரிக்கை செய்தது. ஆனால் பொறுப்புறுதி உடன்பாட்டில் ஒத்துக் கொள்ளப் பட்ட மூன்று மாதங்கள் முடிந்து விட்டதால், இறக்குமதியாளர்களுக்கு ஏற்பட்ட பொறுப்புக்கு, தான் பணம் செலுத்த முடியாது என்று இந்திய அரசின் கோரிக்கையை வங்கி நிராகரித்துவிட்டது.

ஆனால் இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 28–இன்படி அவ்வாறு வங்கி நிராகரிக்க முடியாது என்றும், ஒரு கோரிக்கைக்காக நீதிமன்றத்தில் வழக் கிடுவதை மூன்று மாத காலஅளவுக்குள் செய்ய வேண்டும் என்று வரம்பிட முடியாது என்றும், அந்தக் காலஅளவு காலவரையறைச் சட்டம் நிர்ணயித்துள்ள காலஅளவாகத்தான் இருக்க வேண்டுமே தவிர, அதை ஒரு உடன்பாட்டின் மூலம் குறைவாக நிர்ணயித்துக் கொள்ள முடியாது என்றும் அரசு எதிர் வாதிட்டது.

இந்த எதிர்வாதத்தை நிராகரித்து தீர்ப்புரைக்கையில், பம்பாய் உயர் நீதிமன்றமானது, உடன்பாட்டில் நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள் வங்கிப் பொறுப்புறுதியை இந்திய அரசு செயற்படுத்தவில்லை என்று கூறி, வங்கிக்கு எதிராக இந்திய அரசு தாக்கல் செய்த உரிமை வழக்குகளை தள்ளுபடி செய்து தீர்ப்புரைத்தது. இதனை உச்ச நீதிமன்றமும் உறுதி செய்து, இந்திய அரசு செய்த மேல்முறையீடுகளைத் தள்ளுபடி செய்தது.

இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்புரையில் அளித்த சட்டப் பொருள் விளக்கம் பலவற்றுக்கிடையில், இவ்வாறு வழக்கிடுவதற்கான கால வரம்பை நிர்ணயித்துக் கொள்வதற்கான வரைவுரைகள், 2013–ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்திற்குப் பிறகு, 'குறித்துரைக்கப்பட்ட காலஅளவானது' குறைந்த பட்சம் ஓராண்டு என ஆவதால், அது சட்டத் தேவைகளை நிறைவு செய்கிறது எனச் சொல்வதே போதுமானதாக உள்ளது என்று தெளிவுபடுத்தியது.

நிறைவாக பொறுப்புறுதியை செயற்படுத்துவதற்காக காலவரையறைச் சட்டம் கூறும் காலவரம்பு மூன்று ஆண்டுகள் ஆகும். இதை பொறுப்புறுதி உடன் பாட்டில் வரைவரை ஒன்றைச் சேர்ப்பதன் வாயிலாக தற்போது 3–ஆம் விதிவிலக் கின்படி குறைந்தபட்சம் ஓராண்டு என வரம்பிட முடியும். பொறுப்புறுதியை செயலாக்கி நீதிமன்றத்தில் கோரிக்கை செய்வதற்கான காலவரம்பை நிர்ணயித்துக் கொள்ளுவது என்பது வங்கி அல்லது நிதி நிறுவனம் மற்றும் பொறுப்புறுதி பெற்றவர்களுக்கிடையே உடன்பாட்டின் வழியாக நடக்கும் ஒரு செயலாகுமே தவிர, பிரிவு 28 உள்ளிட்ட வேறு எந்த சட்டப் பிரிவையும் இங்கு கருத்தில் கொள்ள வேண்டிய அவசியமில்லை.

உங்கள் கவனத்திற்கு : தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000-லிருந்து கேட்கப்படும் வினாவிற்கான விடை

Originator, addressee, electronic record and electronic signature under the Information Technology Act - Write Short Notes.

தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் கீழ் தொடங்குபவர், பெறுநர், மின்னணு பதிவேடு மற்றும் மின்னணு கையொப்பம் – சிறு குறிப்பு எழுதுக.

ஒப்பந்தச் சட்டத்தில் தகவல் தொழில்நுட்பச்சட்டம் - விளக்கம்:

தரப்பினர்கள் எழுத்துவடிவில் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்த காலம் சிறிதுசிறிதாக மாறிவருகிறது. காரணம் அறிவியல் முன்னேற்றம்; தகவல் தொழில் நுட்ப வளர்ச்சி. இன்று மின்னணு ஒப்பந்தங்கள் (e-contracts) வணிக உலகில் மிகப் பிரபலமாகி வருகின்றன. அதுபோல் மின்னணு பதிவேடுகள் (electronic records) வந்துவிட்டன. தரப்பினர்கள் நேர்முகமாக சந்திக்காமல் மின்னணு கையொப்பமிடுதல் (electronic signature) மூலம் ஒப்பந்தங்கள் சட்ட விளைவு பெறுகின்றன.

இப்பதங்கள் யாவும் 2000–ம் ஆண்டின் தகவல் தொழில்நுட்பச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளன. அவற்றை பின்வருமாறு காண்போம்.

உருவாக்குபவர் (Originator) - வரையறை:

"உருவாக்குபவர்" என்பது மின்னணு தகவல் எதையும் அனுப்புகிற, உருவாக்குகின்ற, சேமித்து வைக்கின்ற அல்லது வேறு நபர் எவருக்கும் மாற்றித் தருகின்ற ஓர் நபர் அல்லது மின்னணு தகவல் எதையும் அனுப்புவதற்கு, உருவாக்குவதற்கு, சேமித்து வைப்பதற்கு அல்லது வேறு நபர் எவருக்கும் மாற்றித் தருவதற்குச் செய்விக்கின்ற ஓர் நபர் என்று பொருள்படும்; ஆனால் இது இடையீட்டாளர் (intermediary) ஒருவரை உள்ளடக்காது. **[தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் பிரிவு 2(1)(za)].**[1]

1. "Originator" means a person who sends, generates, stores or transmits any electronic message; causes any electronic message to be sent, generated, stored or transmitted to any other person but does not include an intermediary **[S.2(1)(za)]**

முகவரிதாரர் (Addressee) - வரையறை:

"முகவரிதாரர்" என்பது எந்த நபர் மின்னணு பதிவேட்டைப் பெறுவ தற்காக உருவாக்குபவரால் கருதப்படுகிறாரோ அந்த நபர் என்று பொருள்படும்; ஆனால் இது இடையீட்டாளர் (intermediary) எவரையும் உள்ளடக்காது.**[பிரிவு 2(1)(b)].**[1]

மின்னணு பதிவேடு (Electronic Record) - வரையறை:

"மின்னணு பதிவேடு" என்பது மின்னணு வடிவம் அல்லது நுண் படம் அல்லது கணினி உருவாக்கிய் தகவல்சேமிப்பு நுண்தகடு ஒன்றில் சேமிக்கப்பட்ட, பெறப்பட்ட அல்லது அனுப்பப்பட்ட தகவல்தரவு, பதிவேடு அல்லது உருவாக்கப் பட்ட தகவல்தரவு, படம் அல்லது ஒலி என்று பொருள்படும். **[பிரிவு 2(1)(t)].**[2]

மின்னணு கையொப்பம் (Electronic Signature) - வரையறை:

"மின்னணு கையொப்பம்" என்பது இரண்டாவது அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட மின்னணு தொழில்நுட்பம் மூலம் கைச்சாட்டிடும் நபர் ஒருவரால் மின்னணு பதிவேடு எதுவும் அதிகாரபூர்வமாக்கப்படல் என்று பொருள்படும்; மேலும் இது இலக்கமுறை கையொப்பத்தையும் உள்ளடக்கும். **[பிரிவு 2(1)(ta)].**[3]

---

1. "addressee" means a person who is intended by the originator to receive the electronic record but does not include any intermediary **[S.2(1)(b)].**
2. "electronic record" means data, record or data generated, image or sound stored, received or sent in an electronic form or micro film or computer generated micro fiche **[S.2(1)(t)].**
3. "electronic signature" means authentication of any electronic record by a subscriber by means of the electronic technique specified in the Second Schedule and includes digital signature **[S.2(1)(ta)].**

1

இந்திய ஒப்பந்தச் சட்டம், 1872- ஒரு அறிமுகம் [The Indian Contract Act, 1872 - An Introduction]

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், இந்திய நாட்டின் வட்டார சூழலுக்கு பொருந்தக் கூடிய ஆங்கில ஒப்பந்தச் சட்டமானது, முதலாம் ஜார்ஜ் மன்னரால் கிழக்கிந்திய நிறுவனத்திற்கு 1726–ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட பட்டயத்தால் (by the Charter of 1726) சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மாகாணப் பெரு நகரங்களில் (Presidency Towns) அறிமுகப்படுத்தப்பட்டது.

பின்னிட்டு 1781–ஆம் ஆண்டில் பிரிட்டன் பாராளுமன்றத்தால் இயற்றப் பட்ட தீர்வகைச் சட்டமானது (Act of Settlement), இசுலாமியர்கள் மற்றும் இந்துக்களிடையே மரபுரிமை மற்றும் வாரிசுரிமை, மற்றும் ஒப்பந்தங்கள் குறித்த விஷயங்களைப் பொறுத்து எழும் வழக்குகளானது அந்தந்த மதத்தினருக்குப் பொருந்தக் கூடிய சட்டத்தால் தீர்க்கப்பட வேண்டும் என்று வழிவகை செய்தது. இந்நிலைப்பாடு, வழக்கிற்குரிய தரப்பினர்கள் இருவரும் ஒரே மதத்தைச் சார்ந்தவராக இருக்கும் பொழுது மட்டுமே ஆகும். எனவே அத்தரப்பினர்களில் எவரேனும் ஒருவர் இசுலாமியராகவும், மற்றொரு தரப்பினர் இந்துவாகவும் இருப்பின், அவர்களுக்கிடையிலான வழக்கு 'பிரதிவாதிக்குரிய சட்டங்கள் மற்றும் வழக்காறுகளால்' (by the laws and usages of the defendant) தீர்க்கப்பட

வேண்டும் என்றும் அச்சட்டத்தில் மேலும் வகை செய்யப்பட்டிருந்தது. இவையெல்லாம் மேற்கண்ட பெரு நகரங்களைப் பொறுத்து மட்டுமே பொருந்தக் கூடியதாகும். சிறு நகரங்களில் (mofussil) அதாவது பெரு நகரங்களுக்கு வெளியில் உள்ள நிலப்பரப்புகளுக்கு பொருந்தக் கூடிய வகையில் ஒப்பந்தங்கள் குறித்து எச்சட்டமும் இல்லை. எனவே, அங்கெல்லாம் ஒப்பந்தங்கள் குறித்து எழும் வழக்குகளானது நீதி, நேர்மை மற்றும் நன் மனச்சான்றின் (Justice, Equity and Good Conscience) அடிப்படையில் தீர்க்கப்பட்டன.

இவ்வாறு இந்தியாவில் ஒப்பந்தங்கள் குறித்து முன்னதாக இருந்த சட்டங்களில் ஒரே சீரான, நிச்சயமான தன்மை இல்லை. அனைவருக்கும், அனைத்து நிலப்பரப்புகளுக்கும் ஒரே மாதிரியாக பொருந்தக் கூடிய வகையில் ஒப்பந்தங்கள் குறித்த சட்டம் இந்தியாவில் அமைந்திருக்கவில்லை. எனவே இந்நிலையைக் களையும் பொருட்டு, **1872–ஆம் ஆண்டில் இந்திய ஒப்பந்தச் சட்டம் இயற்றப்பட்டு, அது அந்த ஆண்டின் செப்டம்பர்த் திங்கள் முதல் நாளில் இருந்து அமலுக்கு வந்தது.**

இச்சட்டத்தில் மொத்தம் 238 பிரிவுகள் உள்ளன. அவற்றில் 1 முதல் 75 வரையிலான பிரிவுகள் ஒப்பந்தத்தின் பொதுக் கோட்பாடுகள் (General Principles of Contract) குறித்து விளக்குகின்றன. அதற்கடுத்து வரும் சட்டப் பிரிவுகள் சிறப்பு ஒப்பந்தங்கள் அல்லது தனிவகை ஒப்பந்தங்கள் (Special Contracts) குறித்து விளக்குகின்றன. சிறப்பு ஒப்பந்தங்கள் என்பன, ஈட்டுறுதி ஒப்பந்தம் மற்றும் பொறுப்புறுதி ஒப்பந்தம் (பிரிவுகள் 124 முதல் 147 வரை) (Indemnity and Guarantee), ஒப்படைவு (பிரிவுகள் 148 முதல் 181 வரை) (Bailment), முகவாண்மை (பிரிவுகள் 182 முதல் 238 வரை) (Agency) போன்றவையாகும். மேற்கண்ட பிரிவுகளுக்கு இடையில் வரும் 76 முதல் 123 வரையிலான பிரிவுகள் முன்னதாக சரக்குகள் விற்பனை (Sale of Goods) ஒப்பந்தத்தைப் பற்றி குறிப்பிட்டன. பின்னிட்டு 1930–ஆம் ஆண்டில் தனியாக கொண்டு வரப்பட்ட சரக்குகள் விற்பனைச் சட்டத்தால் (Sale of Goods Act, 1930) மேற்படி பிரிவுகள், இந்திய ஒப்பந்தச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டன. அதுபோல், மேற்படி சட்டத்தில் 239 முதல் 266 வரையிலான பிரிவுகள், கூட்டாண்மை ஒப்பந்தம் (Partnership) குறித்து வகை செய்திருந்தன. ஆனால் 1932–ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தால் (Indian Partnership Act, 1932), அப்பிரிவுகளும் இந்திய ஒப்பந்தச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டன.

நாம் இந்நூலில், 1 முதல் 75 வரையிலான சட்டப் பிரிவுகளின் வாயிலாக கூறப்பட்டிருக்கும் ஒப்பந்தத்தின் பொதுக் கோட்பாடுகளை மட்டும் காண உள்ளோம். மேலே தொடர்வோமா?

2

ஒப்பந்தத்தின் வரையறை [Defintion of Contract]

1. "The definition of a Contract in Sec. 2 of the Contract Act appears to built upon a succession of definition of the elements which go to make a contract" - Explain. ("ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 2–ல் உள்ள ஒப்பந்த வரையறை ஒப்பந்தத்தினை ஏற்படுத்தும் மூலங்களின் வரையறைகளின் மீது உருவாக்கப்பட்டதாக தோன்றுகிறது"– விவாதிக்கவும்)

(அல்லது)

The elements constituting the phenomena of an agreement are successively defined in the Contract Act. State and explain these elements. (ஒரு உடன்படிக்கை நிகழ்வை உருவாக்குகின்ற மூலக் கூறுகள் ஒப்பந்த சட்டத்தில் அடுத்தடுத்து வரையறுக்கப் பெற்றுள்ளன. இம் மூலக்கூறுகளைக் கூறி விளக்கு.)

முன்னுரை :

'ஒப்பந்தம்' (Contract) என்ற சொல் 'கான்டிராக்டம்' (Contractum) எனும் இலத்தீன் சொல்லிலிருந்து பிறந்ததாகும். இதன் பொருள் 'ஒருமித்தல்' அல்லது 'ஒன்றுதல்' என்பதாகும். ஆகவே, ஓர் ஒப்பந்தம் ஏற்பட வேண்டுமானால்

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களிடையே சம்பந்தப்பட்ட பொருள் பற்றி ஒருமித்த உணர்வுடன் கூடிய ஓர் உடன்பாடு நிகழ வேண்டும். எனினும் பல்வேறு சட்டவியல் அறிஞர்கள் 'ஒப்பந்தத்திற்கு' வரையறை தந்துள்ளனர். அவை வருமாறு:

ஒப்பந்தம் – சட்டவியல் அறிஞர்கள் தரும் வரையறை:

சட்டவியல் அறிஞர் சர் ஜான் சால்மண்ட் (Sir John Salmond) அவர்கள், "நபர்களிடையே கடப்பாடுகளை உருவாக்கி, அவற்றை வரையறுக்கும் ஒரு உடன்பாடே, ஒப்பந்தமாகும்,"[1] என்று கூறுகிறார்.

சர் வில்லியம் ஆன்சன் (Sir William Anson) என்பார், "இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களிடையே சட்ட முறைப்படி கட்டுப்படுத்தக் கூடியவாறு செய்து கொள்ளப்படும் ஒரு உடன்பாடே ஒப்பந்தமாகும் ....,"[2] என்று கூறுகிறார்.

"இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையில், சட்டப்படி வலியுறுத்தப்பட வேண்டுமென்ற எண்ணத்துடனும், ஒரு செயலைச் செய்ய அல்லது அதனைச் செய்வதிலிருந்து நிறுத்திக் கொள்ள ஒரு தரப்பினரால் செய்யப் பட்ட புரிவுரையை (முனைவு) மற்றொரு தரப்பினர் ஏற்றுக் கொள்வதால் உருவானதுமான ஒரு உடன்பாடே ஒப்பந்தமாகும்,"[3] என்று இங்கிலாந்து நாட்டின் ஹால்ஸ்பரியின் சட்டங்களில் (Halsbury's Laws of England) கூறப் பட்டுள்ளது.

சேவக்னி (Savigny) என்பார், "தங்களுக்குள் கடப்பாட்டை உருவாக்கிக் கொள்ளும் நோக்கத்தோடு ஒருமித்த விருப்பத்தினைத் தெரிவித்து பலர் ஒன்று சேருவதே ஒரு ஒப்பந்தம்,"[4] என்கிறார்.

பொல்லாக் (Pollack) எனும் அறிஞர், சட்டப்படி வலியுறுத்தப்படக் கூடிய உறுதியுரை மற்றும் உடன்பாடு ஒவ்வொன்றும், ஒப்பந்தமே,"[5] என்கிறார்.

---

1. "An agreement creating and defining obligations between the parties" - Sir John Salmond. **Salmond on Contracts, p. 10**
2. "A legally binding agreement made between two or more persons..." - Sir William Anson. **Anson on Contracts, 17th Edn. p. 8**
3. "A contract is an agreement made between two or more persons which is intended to be enforceable at law and is constituted by the acceptance by one party of an offer made to him by the other party to do or abstain from doing some act" - **Halsbury's Laws of England, Vol. VIII.**
4. "The union of several in an accordant expression of will with the object of creating an obligation between them". **Savigny.**
5. "Every agreement and promise enforceable at law is a ccontract". - **Pollack.**

மேற்கண்ட பல்வேறு வரையறைகளின் அடிப்படையில், இந்திய ஒப்பந்தச் சட்டமானது 'ஒப்பந்தம்' எனும் பதத்திற்கு பின்வருமாறு வரையறை தருகிறது.

ஒப்பந்தம் - இந்திய ஒப்பந்தச் சட்டம் தரும் வரையறை:

1872–ஆம் ஆண்டின் இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 2(h) ஆனது, **"சட்டத்தால் வலியுறுத்தப்படக்கூடிய ஓர் உடன்பாடே ஒப்பந்தமாகும்,"**[1] என்று கூறுகிறது.

மேற்கண்ட வரையரையில் உள்ள **'உடன்பாடு' (Agreement)** என்ற சொல்லின் விளக்கத்தை நாம் அறிந்து கொண்டால்தான், ஒரு 'ஒப்பந்தத்தைப்' பற்றி முழுமையாக அறிந்து கொள்ள முடியும். அதற்கு முதலில் புரிவுரை (Proposal), உறுதியுரை (Promise), மறுபயன் (Consideration) ஆகிய பதங்களின் விளக்கத்தை அறிந்து கொள்ள வேண்டும். இவைதாம், ஒரு உடன்படிக்கையை உருவாக்கும் மூலக்கூறுகள் ஆகும் (Constituting elments). இவை 1872–ஆம் ஆண்டின் இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 2–வது பிரிவின் கீழ் அடுத்தடுத்து வரையறுக்கப்பட்டுள்ளன (successively defined). அவை வருமாறு :

புரிவுரை அல்லது முனைவு [Proposal (or) Offer] - [பிரிவு 2 (a)]:

ஒருவர் மற்றொருவரிடம் ஒரு செயலைச் செய்வதாக அல்லது செய்யாமலிருப்பதாக அறிவித்து, அதற்கு அவரது இசைவைப் பெற விரும்பினால் அது **'புரிவுரை' (Proposal)** எனப்படும்,[2] என்று இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 2(a) கூறுகிறது. இதுவே ஆங்கிலச் சட்டத்தில் **'முனைவு' (offer)** என்றும் அழைக்கப்படுகிறது. புரிவுரை அளிப்பவர், **'புரிவுரையாளர்' (Promisor or Offeror)** என அழைக்கப்படுகிறார்.

ஏற்பு (Acceptance) -[பிரிவு 2 (b)]:

எவரொருவரின் இசைவைப் பெறவேண்டி புரிவுரை செய்யப்பட்டதோ, அவர் அதனை ஏற்கும் செயல்தான் 'ஏற்பு' என்று சொல்லப்படுகிறது.

---

1. "An agreement enforceable by law is a Contract" - **Section 2(h) of the Indian Contract Act, 1872.**

2. "When one person signifies to another his willingness to do or abstain from doing anything, with a view to obtaining the assent of that other to such act and abstinence, he is said to make a proposal" - **Section 2(a) of the Indian Contract Act, 1872.**

உறுதியுரை (Promise) - [பிரிவு 2 (b) & (c)]:

யாரிடம் புரிவுரை செய்யப்பட்டதோ, அதற்கு அவர் தனது இசைவைத் தெரிவித்தால், அப்புரிவுரை அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகிறது. இவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட புரிவுரையே, 'உறுதியுரை' (Promise) எனப்படுகிறது. அதாவது ஒருவர் ஒரு செயலைச் செய்வதாக அல்லது செய்யாமலிருப்பதாக மற்றொருவரிடம் அறிவித்து, அதனை அவர் ஏற்றுக்கொண்டால் அது 'உறுதியுரை' ஆகிறது.[1] [பிரிவு 2 (b)].

அவ்வாறு புரிவுரையைத் தெரிவிக்கும் நபர் 'உறுதியுரை அளிப்பவர்' (Promisor) என்றும், அதனை ஏற்றுக்கொள்பவர் 'உறுதியுரை ஏற்பவர்' (Promisee) என்றும் அழைக்கப் பெறுவர்.[2] [பிரிவு 2 (c)].

மேற்கண்ட நிலைப்பாட்டை பின்வரும் சமன்பாடு மேலும் தெளிவாக்கும்.

உறுதியுரை = புரிவுரை + ஏற்பு

மறுபயன் (Consideration) - [பிரிவு 2 (d)]:

ஒருவர் மற்றொருவருக்கு உறுதியுரை அளிக்கும் நோக்கமே, அவரிடமிருந்து ஏதேனும் ஒரு கைம்மாறு கருதிதான். ஆகவே உறுதியுரை அளிப்பவர் விரும்பியபடி, உறுதியுரை ஏற்பவர் அல்லது மற்றொருவர் செய்யும் செயல் அல்லது செயல் தவிர்ப்பு அல்லது அளிக்கும் உறுதியுரை 'மறுபயன்' (Consideration) என்று கூறப்படும்.[3]

உடன்பாடு (Agreement) -[பிரிவு 2 (e)]:

"உறுதியுரை (promise) ஒவ்வொன்றும் மற்றும் உறுதியுரைகளின்

1. "When the person to whom the proposal is made signifies his assent thereto, the proposal is said to be accepted. A proposal, when accepted, becomes a promise" - **Section 2(b) of the Indian Contract Act, 1872.**

2. "The person making the proposal is called the 'promisor', and the person accepting the proposal is called the 'promisee'. - **Section 2(c) of the Indian Contract Act, 1872.**

3. "When, at the desire of the promisor, the promisee or any other person has done or abstained from doing, or does or abstains from doing, or promises to do or abstain from doing something, such act or abstinence or promise is called a consideration for the promise" - **Section 2(d) of the Indian Contract Act, 1872.**

தொகுப்பு ஒவ்வொன்றும் (every set of promises) ஒன்றுக்கொன்று மறுபயன் (Consideration) அளிக்கக்கூடியதாயின், அது ஒரு உடன்பாடாகும்,"[1] என பிரிவு 2(e) கூறுகிறது. இங்கு மறுபயனை உருவாக்கும் உறுதியுரைகள் உடன்பாடாகிறது. சுருங்கக்கூறின், உடன்பாடென்பது மறுபயனுக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட புரிவுரையாகும். இதனை பின்வரும் சமன்பாடு எளிதில் விளக்கும்.

உடன்பாடு = புரிவுரை + ஏற்பு + மறுபயன்

முடிவுரை :

இவ்வாறு இறுதியாக, 'சட்டத்தால் வலியுறுத்தப்படக்கூடிய ஓர் உடன்பாடே ஒப்பந்தமாகும்' என பிரிவு 2 (h) கூறும் வரையறையில், ஒப்பந்தத்தின் பொருள் அமைகிறது.

ஒப்பந்தம் = உடன்பாடு + சட்டத்தால் வலியுறுத்தப்படக் கூடிய தன்மை

மேற்படி வரையறை திடீரென கூறப்பட்டு விடவில்லை. ஒரு ஒப்பந்தத்தினை உருவாக்கும் மேற்கண்ட மூலங்களின் (elements) வரையறைகளின் மீது படிப்படியாக உருவாக்கப்பட்டதாகும். மேலும் சில மூலக்கூறுகளாகிய ஒப்பந்தம் செய்து கொள்வதற்கான தகுதி, சட்டத்திற்குகந்த மறுபயன் மற்றும் நோக்கம், தரப்பினர்களின் தன்னிச்சையான இசைவு பற்றி பிரிவு 10 கூறுகிறது.

2. "An agreement enforceable by law is a contract"- Explain. ("சட்டத்தால் வலியுறுத்தப்படக்கூடிய ஒரு உடன்பாடு ஒரு ஒப்பந்தமாகும்" – விளக்குக.)

(அல்லது)

"To create a contract there must be a common intention of the parties to enter into legal obligations"- Examine. ("ஒப்பந்தம் ஒன்றை உருவாக்க சட்டக் கடப்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்னும் ஒரு பொது எண்ணம் ஒப்பந்த தரப்பினர்களுக்கு இருக்க வேண்டும்" – ஆராய்க.)

1. "Every promise and every set of promises, forming the considertion for each other, is an agreement" - **Section 2(e) of the Indian Contract Act, 1872.**

ஒப்பந்தம் - சட்டம் தரும் வரையறை:

"சட்டத்தால் வலியுறுத்தப்படக்கூடிய ஓர் உடன்பாடே ஒப்பந்தமாகும்" என இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **பிரிவு 2 (h)** –ஆனது கூறுகிறது. இதன்படி ஒரு ஒப்பந்தத்திற்கு பின்வரும் இரு அடிப்படை கூறுகள் தேவைப்படுகின்றன. அவை,–

1. **ஒரு உடன்பாடு**
   (An agreement)
2. **சட்டத்தால் வலியுறுத்தப்படக்கூடிய தன்மை**
   (Enforceability by law)

1. ஒரு உடன்பாடு (An agreement):

ஒரு புரிவுரையானது ஏற்கப்படும் பொழுது அது உடன்பாடாகிறது என்று நாம் முன்னரே கண்டோம். அதாவது, உடன்பாடு = புரிவுரை + ஏற்பு.

2. சட்டத்தால் வலியுறுத்தப்படக்கூடிய தன்மை (Enforceability by law) :

உடன்பாடு என்பது மிக விரிந்த பொருளுடைய சொல்லாகும். அது சமூக உடன்பாடாகவோ (Social) அல்லது சட்டப்பூர்வ உடன்பாடாகவோ (Legal) இருக்கலாம்.

உதாரணமாக, A என்பவர் B என்பவரை விருந்துக்கு அழைக்கிறார். B அதனை ஏற்கிறார். இது ஒரு சமூக உடன்பாடுதான். ஒரு சமூக உடன்பாடு அல்லது குடும்ப உடன்பாடு ஒப்பந்தக் கடமைகளை ஏற்படுத்துவதில்லை. அதை ஒரு நீதிமன்றத்தால் வலியுறுத்த முடியாது. எனவே சட்டப்பூர்வமான, சட்டத்தால் வலியுறுத்தப்படக் கூடிய தன்மையுடைய உடன்பாடுதான், ஒரு ஒப்பந்தக் கடப்பாட்டை தரப்பினர்களிடையே ஏற்படுத்தும்.

சுருங்கக்கூறின், "ஒப்பந்தம் ஒன்றை உருவாக்க சட்டக் கடப்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்னும் ஒரு பொது எண்ணம் ஒப்பந்தத் தரப்பினர்களுக்கு இருக்க வேண்டும்" ("To create a contract there must be common intention of the parties to enter into legal obligations"). இது குறித்து பின்வரும் சில முக்கியமான வழக்குகளை காண்போமா?

Kalai haldar v. Sheikh[1]

A என்பவர் B என்பவரை விருந்திற்கு அழைத்தார். B என்பவர்

1. 23 W. R. 217

விருந்திற்கு செல்ல இயலவில்லை. மேற்படி A என்பவர் B என்பவருக்காகத் தயாரிக்கப்பட்ட உணவு வீணாயிற்று என்று வழக்குத் தொடுத்தார். ஆனால், இங்கு தரப்பினர்களிடையே சட்டக் கடப்பாடு ஏதுமில்லையாதலால் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

Balfour v. Balfour[1] 1919

A என்பவர் இலங்கையில் பணி செய்து வருகிறார். அவரது மனைவி B என்பவர் உடல் நலம் சரியில்லாததால் இங்கிலாந்தில் வசித்து வருகிறார். அவ்வாறு அவர் அங்கு வசித்து வரும் காலம் வரையிலும் மாதந்தோறும் 3 பவுன் அளிப்பதாக மேற்படி A ஒப்புக் கொண்டிருந்தார். ஆனால் ஒப்புக் கொண்டபடி மேற்படி A நடந்து கொள்ளவில்லை. ஆகவே, அவர் மீது, அவரது மனைவியாகிய B வழக்குத் தொடுத்தார். ஆனால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. நீதிபதி அட்கின் தனது தீர்ப்பில், இத்தகைய ஒப்பந்தங்கள் நெருக்கமான குடும்ப உறவின், நட்பின் காரணமாக ஏற்பட்ட ஒப்பந்தங்கள். ஆகவே சட்டபடி செல்லத்தக்கவை அல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

Faulkner v. Lowe[2] 1848

ஒரு ஒப்பந்தத்தில் சட்டக் கடப்பாடு என்பது இரண்டு நபர்களுக்கிடையே ஏற்படுவதாகும். எனவே ஒருவர் தனக்கே கடப்பாடு உடையவராக இருத்தல் முடியாது. மேற்படி வழக்கில், A என்பவர், தானும் B என்பவரும் உரிமையாளர் களாக உள்ள ஒரு கூட்டுக் கணக்கிலிருந்து பணம் கடன் பெற்றுக் கொண்டார். இங்கு கடன் பெற்ற பணத்தை திரும்பச் செலுத்த வேண்டும் என்ற கடப்பாடு A-க்கு உள்ளது. ஆனால் இந்த கடப்பாட்டை வலியுறுத்திச் செயல்படுத்த முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஏனெனில், இங்கு A என்பவரே கடன் பெற்றவ ராகவும், அதே சமயத்தில் கடன் கொடுத்தவராகவும் உள்ளார்.

முடிவுரை:

மேற்படி சட்டப் பிரிவுகளையும் வழக்குகளையும் காண்கையில் 'சட்டத்தால் வலியுறுத்தப்படக் கூடிய ஒரு உடன்பாடே ஒப்பந்தமாகும்' என்பதும், 'ஒப்பந்த தரப்பினர்களிடையே சட்டக் கடப்பாடுகளில் (legal Obligations) ஈடுபடும் எண்ணம் இருக்க வேண்டும்' என்பதும் புலனாகும். எனவே ஒரு ஒப்பந்தமென்பது = உடன்பாடு + சட்டத்தால் வலியுறுத்தப்படக்கூடிய தன்மை என்பது சரியே.

1. (1919) 2 K.B. 571
2. (1848) 154 E.R. 628; 76 R.R. 697

3. "All agreements are not contracts; but all contracts are agreements". Discuss the statement. ("எல்லா உடன்பாடுகளும் ஒப்பந்தங்களாகா; ஆனால் எல்லா ஒப்பந்தங்களும் உடன்பாடுகளாகும்." இக்கூற்றினை விளக்குக.)

எல்லா உடன்பாடுகளும், ஒப்பந்தமாவதில்லை:

'உடன்பாடு' ஒன்று மட்டுமே ஒப்பந்தமாவதில்லை. அது சட்டத்தால் வலியுறுத்தப்படும் பொழுதுதான் (enforceable by law) ஒப்பந்தமாகிறது. ஏனெனில் சமூக உடன்பாடுகள் பல உள்ளன. அவை எவ்வித சட்டக் கடப்பாட்டையும் உருவாக்குவதில்லை. மேலும் அவற்றை நீதிமன்றத்தால் வலியுறுத்தவும் முடியாது. உடன்பாடு என்பது ஆரம்பநிலையாகும். அதில் சட்டத் தன்மை என்ற கலவை சேர்க்கப்படும் பொழுது, அது ஒப்பந்தம் ஆகிறது. அத்தகு சட்டத் தன்மைகளைப் பற்றி பிரிவு 10 கூறுகிறது.

சட்டத்தால் வலியுறுத்தப்படக் கூடிய உடன்பாடே ஒப்பந்தமாகும்:

பொதுவாக, ஒரு உடன்பாடு ஒப்பந்தமாகக் கருதப்பட வேண்டுமெனில், இந்திய ஒப்பந்தச் சட்டம் பிரிவு 10–ல் கூறப்பட்டுள்ள சட்ட நிபந்தனைகளானது நிறைவேற்றப்பட வேண்டும். பிரிவு 10–ன்படி, "அனைத்து உடன்பாடுகளும் ஒப்பந்தங்களே: ஆனால் அவை தகுதி வாய்ந்தவர்களிடையே தன்னிச்சையான இசைவுடன் சட்டத்திற்குகந்த மறுபயனும் நோக்கமும் கொண்டு ஏற்பட்டிருக்க வேண்டும். மேலும் இச்சட்டத்தால் அவ்வொப்பந்தம் இல்லாநிலையதென வெளிப்படையாக அறிவிக்கப்பட்டிருத்தல் கூடாது"[1]. எனவே ஒரு உடன்பாடு ஒப்பந்தமாக வேண்டுமெனில்,–

1. அதில் சட்டத்திற்குகந்த மறுபயன் (lawful consideration) வேண்டும்.

2. சட்டத்திற்குகந்த நோக்கம் (lawful object) வேண்டும்.

3. சம்பந்தப்பட்ட நபர்கள் ஒப்பந்தம் செய்வதற்கு தகுதி உடையவர்களாக (parties competant to contract) இருத்தல் வேண்டும்.

4. தரப்பினர்கள் ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு அளித்த இசைவு

1. "All agreements are contracts if they are made by the free consent of parties competent to contract, for a lawful consideration and with a lawful object, and are not expressly declared to be void" - **Section 10 of the Indian Contract Act, 1872.**

தன்னிச்சையானதாக (Free consent) இருத்தல் வேண்டும். அதாவது கட்டாயப் படுத்தி, மோசடியாக, திரித்துக் கூறி, தகாநிலை செல்வாக்கைப் பயன்படுத்தி, தரப்பினர்களின் இசைவு பெற்றிருத்தல் கூடாது.

5. அவ்வொப்பந்தம், இந்திய ஒப்பந்தச் சட்டத்தால் இல்லாநிலையதாக வெளிப்படையாக அறிவிக்கப்பட்டிருத்தல் கூடாது (not expressly declared to be void).

6. மேற்கண்டவற்றுடன் "கருத்தொருமையும்" (Consensus ad - idem) இருத்தல் வேண்டும். முனைவு (offer) மற்றும் ஏற்பு (acceptance) ஆகிய இவை இரண்டிலும் இந்தக் கருத்தொருமை காணப்பட வேண்டும்.

முடிவுரை:

மேற்கண்டவற்றிலிருந்து சட்டத்தால் வலியுறுத்தப்படக் கூடிய தன்மை வாய்ந்த உடன்பாடுகள் மட்டுமே ஒப்பந்தங்களாகும் என்பது தெளிவாகப் புரியும். ஆகவே ஒரு ஒப்பந்தம், உடன்பாடேயாகும். ஆனால் ஒரு உடன்பாடு ஒப்பந்தமாக வேண்டுமெனில் அது சட்டக்கடப்பாடுகளை (legal obligation) உண்டாக்க வேண்டும். சட்டக் கடப்பாடுகளை ஏற்படுத்தாத உடன்பாடு ஒப்பந்தமாகாது. இதையே வேறு விதத்தில் கூறுவதெனில் "எல்லா உடன்பாடுகளும் ஒப்பந்தங் களாகா; ஆனால் எல்லா ஒப்பந்தங்களும் உடன்பாடுகளாகும்."

4. "The law of contract is not the whole law of agreements nor is it the whole of obligations" - Explain. ("ஒப்பந்தச் சட்டமானது அனைத்து உடன்பாடுகளையும் கொண்ட சட்டமும் அன்று அல்லது அனைத்துச் சட்டக் கடப்பாடுகள் அடங்கிய சட்டமும் அன்று"– விளக்குக.)

முன்னுரை:

அனைத்து உடன்பாடுகளும் ஒப்பந்தங்களாகாது. அதே சமயத்தில் அனைத்து சட்டக் கடப்பாடுகளும் (legal Obligations) ஒப்பந்தங்களாகாது. இதைப் படிக்கையில் எவைதான் ஒப்பந்தமாகும் என்ற வினா எழுந்தால், அதில் வியப்பொன்றுமில்லை. இதன் விடையை பின்வருமாறு கவனிப்போம்.

அனைத்து உடன்பாடுகளும் ஒப்பந்தங்களாகாது; அனைத்து சட்டக் கடப்பாடுகளும் ஒப்பந்தங்களாகாது - விளக்கம் :

இது குறித்து நாம் ஏற்கனவே வினா எண். 2 மற்றும் 3–ல் விரிவாகக்

கண்டுள்ளோம். இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 2(h)–ன்படி, சட்டத்தால் வலியுறுத்தப்படக்கூடிய உடன்பாடுகளே ஒப்பந்தங்களாகிறது. எனவே, சட்டத்தால் வலியுறுத்திச் செயல்படுத்த முடியாத உடன்பாடுகள் ஒப்பந்தங்கள் ஆவதில்லை.

உதாரணமாக, ஒரு நண்பர் விருந்திற்கு அழைக்கும் பொழுது, அதில் கலந்து கொள்வேன் என உறுதியளிப்பது, அவ்வாறே திரைப்படத்திற்கு வருகிறேன் என உறுதியளிப்பது இவையெல்லாம் உடன்பாடுகள்தான். ஆனால், இவற்றை சட்டத்தால் வலியுறுத்திச் செயல்படுத்த முடியாது. விருந்திற்கு வராத நண்பரை, கட்டாயம் விருந்திற்கு செல்ல வேண்டும் என சட்டம் ஆணையிட முடியாது. ஏனெனில் தரப்பினர்களிடையே சட்டப் பிணைப்பு (legal relationship) ஏதும் கிடையாது.

எனவே ஒரு உடன்பாடு ஒப்பந்தமாக மாற வேண்டுமெனில் அவ்வுடன்பாடு தரப்பினர்களிடையே ஒரு சட்டப்பிணைப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஒரு சட்டக் கடப்பாட்டை (சட்டப் பிணைப்பு) ஏற்படுத்தும் எண்ணமில்லாத சமூக உடன்பாடுகள் (Social agreements), ஒப்பந்தங்களாவதில்லை.

நாம் முன்பே கண்ட **Balfour v. Balfour**[1] எனும் வழக்கில், "நெருக்கமான குடும்ப உறவின் நட்பின் காரணமாக ஏற்பட்ட ஒப்பந்தங்கள் சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல," என்று **நீதிபதி அட்கின்** கூறுகிறார்.

ஒரு சில கடப்பாடுகள் (Obligations) ஒப்பந்தங்கள் ஏதும் இல்லாமலே எழுகின்றன. உதாரணமாக நாட்டின் சட்டத்தை மதிக்க வேண்டிய கடப்பாடு, நீதிமன்றத் தீர்ப்பினால் சுமத்தப்படும் கடப்பாடுகள். இத்தகு கடப்பாடுகள் தரப்பினர்களிடையே உடன்பாடு ஏதும் இல்லாத பொழுதும் சட்டக் கடப்பாட்டை ஏற்படுத்துகின்றன. மேற்கண்டவை யாவும் ஒப்பந்தப் போல்வினால் எழும் கடப்பாடுகள் (Quasi-contractual obligations) என்று கூறலாம். இவை ஒப்பந்தங்களிலிருந்து எழும் கடப்பாடுகள் ஆகாது. எனவே இவை 'ஒப்பந்தம்' என்பதின் வரையறைக்கு அப்பாற்பட்டதாகும்.

எவைதான் ஒப்பந்தங்களாகின்றன ?

இறுதியாக எவைதான் ஒரு ஒப்பந்தமாகும் என்று கேட்கப்பட்டால், சட்டப்பிணைப்புகளை (கடப்பாடுகளை) ஏற்படுத்தும் உடன்பாடுகள் மட்டுமே ஒப்பந்தமாகும், என்று கூறலாம். எதிர்மறையாக கூறுவதானால், ஒரு கடப்பாடு, நாட்டின் பொதுச் சட்டத்தால் சுமத்தப்பட்டிருந்தும் (நீதிமன்றத் தீர்ப்பு, சட்ட.

[1] (1919) 2 K.B. 571

விதிகளை கடைப்பிடிப்பது போன்று), அங்கு அது குறித்து தரப்பினர்களிடையே உடன்பாடு ஏதும் இல்லையென்றால், அது ஒரு ஒப்பந்தமாகாது. சுருங்கக்கூறின் சட்டப்படியான பிணைப்புகளை ஏற்படுத்த வேண்டும் எனும் பொதுவான எண்ணத்தின் அடிப்படையில் எழுந்ததும், சட்டத்தால் வலியுறுத்திச் செயல் படுத்தக் கூடியதுமான உடன்பாடுகளே ஒப்பந்தமாகிறது.

முடிவுரை :

மேற்கண்டதைத்தான், சர் ஜான் சால்மண்ட் (Sir John Salmond) எனும் சட்டவியல் அறிஞர், "ஒப்பந்தச் சட்டமானது அனைத்து உடன்பாடுகளையும் கொண்ட சட்டமும் அன்று அல்லது அனைத்து சட்டக் கடப்பாடுகள் (பிணைப்புகள்) அடங்கிய சட்டமும் அன்று; அது சட்டக் கடப்பாடுகளை உருவாக்கும் உடன்பாடுகளைக் கொண்ட சட்டமும், உடன்பாடுகளின் அடிப்படையில் ஏற்பட்ட சட்டக் கடப்பாடுகளையும் கொண்ட சட்டமாக உள்ளது"[1] என்று மிகச் சரியாக விளம்புகிறார்.

1. "The law of contracts is not the whole law of agreements nor is it the whole law of obligations. It is law of those agreements which create obligations and those obligations which have their source in agreements" - **Sir John Salmond.**

3

செல்லத்தகு ஒப்பந்தமொன்றின் அடிப்படைக் கூறுகள் [Essentials of a Valid Contract]

5. What is meant by Contract ? Elucidate the essentials of a valid contract as required by the Indian Contract Act. (ஒப்பந்தம் என்றால் என்ன? ஒரு செல்லத்தகு ஒப்பந்தத்திற்கு இந்திய ஒப்பந்தச் சட்டம் தேவையெனக் கூறும் அடிப்படைக் கூறுகளை விளக்குக.)

(அல்லது)

Define 'Contract' and examine the essentials of valid contract. ('ஒப்பந்தம்' என்பதினை வரையறுத்து ஓர் செல்லத்தக்க ஒப்பந்தத்தின் இன்றியமையாக் கூறுகளை ஆராய்க.)

(அல்லது)

Define Contract. What are the essentials of valid contract? (ஒப்பந்தத்தை வரையறு. ஒரு செல்லத்தக்க ஒப்பந்தத்தின் முக்கிய ஆக்கக் கூறுகள் என்னென்ன ?)

(அல்லது)

Define Contract under Indian Contract Act, 1872. Explain

in brief the necessary requisites for a valid contract. (1872, இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் ஒரு ஒப்பந்தத்தை வரையறு. ஒரு செல்லத் தக்க ஒப்பந்தத்திற்கு தேவையான கூறுகளை சுருக்கமாக விளக்குக.)

(அல்லது)

Explain the essential features of a valid contract. (ஒரு செல்லத் தக்க ஒப்பந்தத்தின் முக்கியக் கூறுகளை விளக்குக.)

ஒப்பந்தத்தின் வரையறை :

[வினா எண் 1–ன் விடையில் காண்க]

ஒரு செல்லத்தகு ஒப்பந்தத்திற்கு இந்திய ஒப்பந்தச் சட்டம் தேவையெனக் கூறும் அடிப்படைக் கூறுகள் (Essential Elements of a Valid Contract):

"தகுதி வாய்ந்தவர்களிடையே தன்னிச்சையான இசைவுடன், சட்டத்திற்குகந்த மறுபயனும் நோக்கமும் கொண்டு ஏற்படும் அனைத்து உடன் பாடுகளும் ஒப்பந்தங்களாகும். அவை இச்சட்டத்தின்படி, இல்லா நிலையதாக (Void) அறிவிக்கப்பட்டிருத்தல் கூடாது" என இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 10–வது பிரிவு கூறுகிறது. ஆகவே ஒரு உடன்பாடு ஒப்பந்தமாக வேண்டுமெனில், அது கீழ்வரும் அடிப்படைக் கூறுகளைப் பெற்றிருக்க வேண்டும். அவை,

1. முனைவும் ஏற்பும் (Offer and Acceptance):

இதற்குக் குறைந்தது இரு நபர்கள் தேவை. ஒருவர் முனைவு செய்ய மற்றவர் அதை ஏற்க வேண்டும். முனைவின் வரையறைகள் திட்டவட்டமான தாகவும், ஏற்பு வரையறைக்குட்படாததாகவும் (unqualified), முழுமையான தாகவும் (absolute) இருத்தல் வேண்டும். ஏற்பு குறிப்பிடப்பட்ட முறையில் இருக்க வேண்டும். அது முனைவாளருக்கு (Offeror) அறிவிக்கப்பட வேண்டும்.

2. சட்டப் பூர்வ மறுபயன் (Lawful Consideration):

'சட்டப்பூர்வ மறுபயன்' என்பது ஒப்பந்தத்தின் மற்றொரு இன்றியமையாத அடிப்படைக் கூறாகும். இதன் பொருள் 'எதிர்மாற்றாக ஏதாவது ஒன்று' (something in return) ஆகும். ஒரு நபரிடமிருந்து மற்றொருவருக்கு மாறிச் செல்லும் ஏதாவது ஒரு நன்மை அல்லது நலன் எனவும் கூறலாம். எதையும் மறுபயனாகப் பெறாமல் ஏதாவதொன்றைச் செய்வதாக உறுதியுரை கூறுதல் சட்டத்தால் செயல்படுத்தத்தக்கதல்ல. எனவே அது இல்லாநிலை ஒப்பந்தமாகி

விடும். மறுபயன் பணமாகவோ, பொருளாகவோ இருக்க வேண்டியதில்லை. அது ஒரு செயலாகவோ, செயல் தவிர்ப்பாகவோ இருக்கலாம். மேலும், ஒரு செயலைச் செய்யவோ செய்யாதிருக்கவோவான உறுதியுரையாகக் கூட இருக்கலாம்.

Abdul Azeez v. Mazum Ali[1]

மசூதி ஒன்றினைப் புதுப்பிக்க B என்பவருக்கு ரூ.500/– கொடுப்பதாக A என்பவர் உறுதியுரை செய்தார். ஆனால் அவர் அத்தொகையினைத் தரவில்லை. அந்த உறுதியுரையின் வாயிலாக ஏற்பட்ட ஒப்பந்தத்தினால் A என்பவருக்கு எவ்விதமான நன்மையும் ஏற்படவில்லை. அதுபோல் B என்பவருக்கு எவ்விதமான இழப்பும் ஏற்படவில்லை. எனவே அவ்வொப்பந்தம் இல்லா நிலையது என மேற்படி வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டது. இங்கு மறுபயன் ஏதும் கிடையாது என்பது கண்கூடாகப் புலனாகும்.

3. ஒப்பந்தத் தரப்பினரின் சட்டத் தகுதி (Competency to Contract):

ஒரு ஒப்பந்தம் செய்து கொள்வதற்கான சட்டத் தகுதி, அந்த ஒப்பந்தத்தின் இரு தரப்பினருக்கும் இருந்தாக வேண்டும். அச்சட்டத் தகுதிகள் குறித்து பிரிவு 11 விளக்குகிறது. அதன்படி, ஒப்பந்தத்தில் ஈடுபடும் ஒவ்வொரு நபரும் (அ) உரிமை வயதடைந்தவராக இருத்தல் வேண்டும்; (ஆ) திட சித்தம் உடையவராக இருக்க (அதாவது முழு புத்தி சுவாதீனம் உடையவராக) இருத்தல் வேண்டும்; (இ) எந்த நாட்டுச் சட்டத்திற்குட்பட்டவராக இருக்கிறாரோ, அந்நாட்டுச் சட்டப்படி அவர் ஒப்பந்தம் செய்ய தகுதி மறுக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.

4. சட்டக் கடப்பாடு (Legal Obligation) :

ஒப்பந்தத்தின் இரு தரப்பினரும், ஒப்பந்தம் செய்யும் போது, அவ்வொப் பந்தத்தின் வாயிலாக சட்டக் கடப்பாடு ஒன்றை ஏற்படுத்தும் எண்ணம் கொண்டோராக இருத்தல் வேண்டும். அவ்வித எண்ணம் அவர்களிடையே இல்லையெனில், அவர்களிடையே 'ஒப்பந்தம்' ஏற்படவில்லை என்று பொருளாகும். அதாவது தரப்பினர்களிடையே சட்டப்படியான பிணைப்பு (Legal Relationship) இருத்தல் வேண்டும். ஒரு உடன்பாடு நெருக்கமான குடும்ப உறவின் காரணமாக எழுவதாக இருப்பின் அது ஒப்பந்தமாகாது. நாம் முன் கண்ட **Balfour v. Balfour** வழக்கை இங்கு எடுத்துக்காட்டிற்காக நினைவு கூறலாம்.

5. சட்டப்பூர்வமான நோக்கம் (Lawful object) :

ஒப்பந்தத்தின் நோக்கம் சட்டபூர்வமானதாக இருத்தல் வேண்டும்.

1. (1914) I.L.R. 36 All. 268

இங்கு மறுபயனுக்கும் நோக்கத்திற்கும் தொடர்பு இல்லை. நோக்கம் என்பது செயல் நோக்கம் (Purpose), உள்நோக்கம் (Design) பற்றியதாகும். ஒரு ஒப்பந்தத்தின் நோக்கம், சட்ட முரணானதாகவோ (illegal), நன்னெறிக்கு புறம்பானதாகவோ (immoral) இருத்தல் கூடாது. ஒரு ஒப்பந்தம் ஏதாவதொரு சட்டக் குறைபாட்டை (legal flaw) உடையதாக இருந்தால், அது சட்டத்தால் செயல் படுத்தத்தகாததாகிவிடும்.

6. கருத்தொருமை (Consensus *ad-idem*):

ஒரே கருத்துடன் இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர் ஒன்றைக் குறித்து உடன்படுதல் கருத்தொருமையாகும். இதனையே கருத்தொற்றுமை கொண்ட உள்ளங்களிடையே நிலவும் உடன்பாடு எனலாம். கருத்தொருமை உண்டா, இல்லையா என்பதனை, முனைவு மற்றும் ஏற்பின் மொழி நடை மூலம் அறிந்து கொள்ளலாம்.

உதாரணமாக, A என்பவருக்கு மதுரையில் ஒரு வீடும், திருச்சியில் ஒரு வீடுமாக இரு வீடுகள் உள்ளன. அவர் அவற்றில் ஒன்றினை B என்பவருக்கு விற்க முனைகிறார். B என்பவரும் அதற்கு உடன்படுகிறார். A என்பவர் விற்க எண்ணியது மதுரையில் இருந்த வீடாகும். B என்பவர் வாங்க எண்ணியதோ திருச்சியில் இருந்த வீடாகும். ஆக இருவர் உடன்பாட்டிலும் தெளிவு இல்லாமையால், அதாவது கருத்தொருமை இல்லாமையால் இவ்வொப்பந்தம் இல்லாநிலை ஒப்பந்தமாகிறது (Void).

7. புறத் தூண்டுதலற்ற இசைவு (Free Consent) :

ஒப்பந்தத் தரப்பினர் ஒப்பந்தத்திற்கு புறத்தூண்டுதலற்ற இசைவு தந்திருக்க வேண்டும். **பிரிவு 13–ன்படி,** ஒரு பொருள் குறித்து இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஒரே கருத்துடன் உடன்பாடு கொண்டால், அவர்கள் இசைந்துவிட்டதாகக் கருதப்படும். ஒரு ஒப்பந்தம், கருத்தொருமை இல்லாமல் அல்லது, வலுக்கட்டாயத்தினாலோ, மோசடியினாலோ, திரித்துக்காட்டலினாலோ, தகாத நிலை வற்புறுத்தலினாலோ பெறப்படும் இசைவினால் ஏற்பட்டிருந்தால், அவ்வொப்பந்தம் செல்லாததாகிவிடும். கருத்தொருமை இல்லையெனில் அவ்வொப்பந்தம் இல்லாநிலை (Void), ஒப்பந்தமாகவும், ஏனையவற்றால் ஏற்படும் ஒப்பந்தம் தவிர்தகு (Voidable) ஒப்பந்தமாகவும் கருதப்படும்.

8. சட்டத்தால் இல்லாநிலை ஒப்பந்தமென அறிவிக்கப் பட்டிருத்தல் கூடாது (Not expressly declared to be void by law):

மேற்கூறிய எல்லா அடிப்படைக் கூறுகள் இருந்தாலும், ஒரு நாட்டின்

சட்டம் வெளிப்படையாக சில உடன்பாடுகளை, இல்லாநிலையதென அறிவித்திருந்தால் அவை ஒப்பந்தங்களாகாது. எடுத்துக்காட்டாக, இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 11, 20, 23–லிருந்து 30 வரை, 50 ஆகிய பிரிவுகள் சில குறிப்பிட்ட உடன்பாடுகளை இல்லா நிலையதாக அறிவித்துள்ளன. ஆகவே ஒரு உடன்பாடு ஒப்பந்தமாக வேண்டுமானால், அது இல்லாநிலையதென அறிவிக்கப்பட்டிருத்தல் கூடாது.

9. ஒப்பந்தத்தின் நிறைவேற்றம், நிச்சயமானதாகவும், சாத்தியமானதாகவும் இருக்க வேண்டும் (The performance of the contract must be certain and possible):

ஒப்பந்தத்தின் கருத்து தெளிவானதாக இருக்க வேண்டும். அதாவது ஒப்பந்தத்தின் சரத்துக்கள் தெளிவற்றதாக (vague), அறுதியற்றதாக (indefinite) இருத்தல் கூடாது. மேலும் அதன் நிறைவேற்றம் நிச்சயமற்றதாக (uncertain) அல்லது அசாத்தியமானதாக (நிறைவேற்ற இயலாததாக) (impossible) இருத்தல் கூடாது. அவ்வாறிருந்தால் அது செயல்படுத்தத் தகாததாகிவிடும். எனவே ஒரு ஒப்பந்தம் நிறைவேற்றம் செய்யத்தக்கதாக இருக்க வேண்டும். பிரிவு 56–ன்படி, "இயலாத ஒன்றை செய்வதற்கான உடன்பாடு இல்லாநிலையதாகும்."

10. சட்டப்பூர்வமான சடங்குகள் (Legal formalities) :

ஒரு ஒப்பந்தம் எழுத்து வடிவிலோ, வாய் மொழியானதாகவோ இருக்கலாம். எழுத்து வடிவிலான ஒப்பந்தத்தை தகுந்த மதிப்புடைய முத்திரைத் தாளிகளில் (பத்திரங்களில்) எழுதி, சட்ட முறைப்படி பதிவு செய்தல் வேண்டும். இச்சட்டச் சடங்குகளை பின்பற்றப்படாவிடில் அவ்வொப்பந்தம் சட்டத்தால் செயல் படுத்தத்தகாத ஒன்றாகி விடும்.

6. "Two or more persons are said to consent when they agree upon the samething in the same sense". Discuss this statement. Illustrate your answer. ("ஒரே பொருள் குறித்து ஒரே கருத்துடன் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உடன்பட்டால், அவர்கள் இசைந்துவிட்டதாகக் கூறப்படும்". இவ்வுரையை விவாதிக்க.)

(முந்தைய வினாவின் விடையில் 6 மற்றும் 7–ஆம் எண் கொண்ட பத்திகளில் காண்க.)

4

ஒப்பந்தங்களின் வகைப்பாடு
[Classification of Contracts]

7. State the different classifications of contracts. (ஒப்பந்தங்களின் பல்வேறு வகைப்பாடுகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Define Contract. How the contracts are classified? (ஒப்பந்தத்தை வரையறு. ஒப்பந்தங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன?)

(அல்லது)

Distinguish between void and voidable contract. (இல்லாநிலை மற்றும் தவிர்தகு ஒப்பந்தத்திற்கிடையே உள்ள வேறுபாட்டைக் கூறுக.)

(அல்லது)

Distinguish between executed contract and executory contract. (நிறைவேறிய மற்றும் நிறைவேற்ற வேண்டிய ஒப்பந்தத்திற்கிடையே உள்ள வேறுபாட்டைக் கூறுக.)

(அல்லது)

Voidable Contract - Write short notes. (தவிர்தகு ஒப்பந்தம் – சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

ஒப்பந்தங்களை, அவற்றின் I. சட்டத்தால் வலியுறுத்தப்படக் கூடிய தன்மை; II. உருவாக்கம்; III. நிறைவேற்றம் ஆகியவற்றின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

I. சட்டத்தால் வலியுறுத்தப்படக் கூடிய தன்மைக்கேற்ப வகைப்படுத்தல் (Classification on the basis of enforceability or validity) :

1. செல்லத்தகு ஒப்பந்தம் (Valid Contract) :

சட்டத்தால் வலியுறுத்திச் செயல்படுத்தக்கூடிய உடன்பாடு, ஒரு செல்லத் தக்க ஒப்பந்தமாகும். அதாவது பிரிவு 10–ல் கண்ட எல்லா அடிப்படைக் கூறுகளும் ஒரு உடன்பாட்டில் பொதிந்திருந்தால், அது ஒரு செல்லத்தகு ஒப்பந்தமாகிறது.

2. இல்லாநிலை ஒப்பந்தம் (Void Contract) :

"ஒரு ஒப்பந்தம் சட்டத்தால் வலியுறுத்தி செயல்படுத்த முடியாததாகி விட்டால், அது அவ்வாறு செயல்படுத்த முடியாமல் போனவுடனேயே 'இல்லாநிலை' (void) ஆகிவிடுகிறது,"[1] என்று பிரிவு 2 (j) வரையறுக்கிறது.

இல்லாநிலையை அடைந்த ஒரு ஒப்பந்தம் எவ்விதமான சட்ட விளைவையும் ஏற்படுத்தாது. ஒரு ஒப்பந்தம் தொடக்கம் முதலே (ab initio) இல்லா நிலையை அடைந்திருக்கலாம் அல்லது உருவாக்கத்திற்கு பின்னர் 'இல்லா நிலையை அடைந்திருக்கலாம்'. 'இல்லாநிலை ஒப்பந்தம்' என்பதைவிட 'இல்லாநிலை உடன்பாடு' என்பதே சரியான சொற்றொடர் ஆகும். ஏனெனில் ஒரு ஒப்பந்தம் இல்லாநிலையாகிய பின், அது ஒரு ஒப்பந்தமேயல்ல. உதாரணமாக, இளவருடன் (Minor) செய்து கொண்ட உடன்பாடு, ஒரு இல்லாநிலை ஒப்பந்தமாகும். அதனை வலியுறுத்திச் செயல்படுத்த முடியாது.

3. தவிர்தகு ஒப்பந்தம் (Voidable Contract) :

தவிர்தகு ஒப்பந்தமென்பது, ஒப்பந்தத்தில் ஈடுபடும் நபர் அதனை தவிர்த்துக் கொள்ளும் தன்மை கொண்டதாகும்.

இதனையே இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 2(i) ஆனது பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, " ஒருவரின் அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினர்களின் விருப்பப்படி, ஆனால் மறுதரப்பினரின் விருப்பமின்றி, ஒரு உடன்பாடு சட்டப்படி

1. "A Contract which ceases to be enforceable by law becomes void when it ceases to be enforceable" - Section 2(j) of the Indian Contract Act, 1872.

வலியுறுத்திச் செயல்படுத்தத்தக்கதாயின் அது, தவிர்தகு ஒப்பந்தமாகும்"[2] என்று கூறுகிறது.

சுருங்கக் கூறின் ஒரு உடன்பாட்டில் புறத்தூண்டுதலற்ற தன்னிச்சையான இசைவு பெறப்படாவிடில், அது தவிர்தகு ஒப்பந்தம் ஆகிறது. எந்த நபரின் இசைவு புறத்தூண்டுதலால் தன்னிச்சையற்றுப் பெறப்பட்டதோ, அந்த நபர் விரும்பினால் அந்த உடன்பாட்டை தவிர்த்துக் கொள்ளலாம் அல்லது தவறு இருந்தும் அதனை ஏற்றுக் கொள்ளலாம். தவிர்தகு ஒப்பந்தமொன்று, அதனை தவிர்க்கும் உரிமை கொண்டவர் தவிர்க்கும் வரையில் ஒரு நல்ல ஒப்பந்தமாகவே தொடர்ந்திருக்கும். வேறுவிதத்தில் கூறுவதானால் வலுக்கட்டாயம், மோசடி, திரித்துக்காட்டல், தகாநிலை செல்வாக்கு ஆகியவற்றின் விளைவால் ஏற்பட்ட உடன்பாடுகள், தவிர்தகு ஒப்பந்தங்கள் ஆகின்றன.

4. வலியுறுத்திச் செயல்படுத்த முடியாத ஒப்பந்தம் (Unenforceable Contract) :

ஒப்பந்தம் எல்லா வகையிலும் முறைப்படி அமைந்திருந்து சட்டநுணுக்கம் சார்ந்த குறைபாட்டினால் நீதிமன்றத்தால் செயல்படுத்த முடியாமல் போனால், அவ்வொப்பந்தம் வலியுறுத்திச் செயல்படுத்த முடியாத ஒப்பந்தமாகும். இந்திய ஒப்பந்தச் சட்டத்தின்படி, சில ஒப்பந்தங்கள் அரசின் முத்திரைத் தாள்களில் (பத்திரங்களில்) மட்டுமே (Stamp Papers) எழுதப்பட வேண்டும். மேலும் ஒப்பந்தத் தொகைக்கேற்ப முத்திரைத் தாள்கள் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இவை நிறைவேற்றப்படாவிட்டால் ஒப்பந்தம் செயல்படுத்த முடியாத ஒப்பந்தமாகும். உதாரணமாக, ஒப்பந்தம் குறைவான மதிப்புள்ள முத்திரைத் தாளில் எழுதப் பட்டால், அது செயல்படுத்த முடியாத ஒப்பந்தமாகிவிடும். தேவையான மதிப்புள்ள முத்திரைத் தாள் சேர்க்க அனுமதிக்கப்பட்டால், அவ்வொப்பந்தம் செயல்படுத்தக் கூடியதாகும்.

5. சட்ட முரணான ஒப்பந்தம் (Illegal Contract) :

சட்டத்தால் தடை செய்யப்பட்ட ஒப்பந்தம், சட்ட முரணான ஒப்பந்த மாகும். ஒரு குற்றம் செய்வதற்காக ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தமும் இவ் வகையானதே. இவை ஆரம்ப முதலே (ab initio) இல்லா நிலையதாகி விடுகிறது. "சட்ட முரணான ஒப்பந்தம்" என்பதை விட "சட்ட முரணான உடன்பாடு" (Illegal Agreement) என்பதே சரியான தொடராகும்.

---

1. "An agreement which is enforceable by law at the option of one or more of the parties thereto, but not a. the option of the other or others is a voidable contract" - **Section 2(i) of the Indian Contract Act, 1872.**

"எல்லா சட்ட முரணான உடன்பாடுகளும் இல்லாநிலை உடன்பாடுகளே, ஆனால் எல்லா இல்லாநிலை உடன்பாடுகளும் சட்ட முரணானவை அல்ல" (All illegal agreements are void; but all void agreements are not necessarily illegal). உதாரணமாக, பந்தய ஒப்பந்தங்கள் (Wagering contracts) இல்லாநிலையது. ஆனால் சட்ட முரணானவை அல்ல. இது போன்றே இளவருடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாடு இல்லாநிலையது. ஆனால் சட்ட முரணானதல்ல.

II. உருவாக்கத்திற்கேற்ப வகைப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் (Classification on the basis of formation or mode of creation):

1. வெளிப்படையான ஒப்பந்தம் (Express Contract) :

உறுதியுரைக்கான ஒரு முன்மொழிதலோ (அதாவது புரிவுரை) அல்லது அதன் ஏற்போ, வார்த்தைகளின் வடிவில் செய்யப்படுமிடத்து, அவ்வுறுதியுரை வெளிப்படையானதாகும். வெளிப்படையான உறுதியுரையின் அடிப்படையில் எழும் ஒப்பந்தம், வெளிப்படையான ஒப்பந்தமாகும். (பிரிவு 9)

2. உட்கிடையான ஒப்பந்தம் (Implied Contract) :

ஒப்பந்தத் தரப்பினரின் நடத்தையின் மூலமாகவோ, நடைமுறைத் தொடர்பு மூலமாகவோ ஊகிக்கப்படும் ஒப்பந்தம் உட்கிடை ஒப்பந்தமாகும். உறுதியுரைக்கான ஒரு முன்மொழிதலோ (Proposal - புரிவுரை), ஏற்போ (Acceptance) வார்த்தைகளாலன்றி வேறுவிதத்தில் செய்யப்பட்டால், அந்த உறுதியுரை உட்கிடையானதாகிறது. உட்கிடை உறுதியுரையின் அடிப்படையில் எழும் ஒப்பந்தம், உட்கிடையான ஒப்பந்தமாகும். (பிரிவு 9)

3. ஒப்பந்தப் போல்வு (Quasi - Contract) :

இது ஒரு ஒப்பந்தமே அல்ல. ஒப்பந்தம் என்பது, அதன் தரப்பினரால் மனதாரத் திட்டமிடப்பட்டு ஏற்படுவதாகும். ஆனால் ஒப்பந்தப் போல்வு சட்டத்தால் உண்டாக்கப்படுவதாகும். இது ஒரு தரப்பினர் கட்டாயமாய் நிறைவேற்ற வேண்டியதாக்கப்பட்ட, சட்டத்தால் கமத்தப்பட்ட சட்டக் கடப்பாடு ஆகும். ஒப்பந்தம் போல் தோற்றமளிக்கும் இந்த ஒப்பந்தப் போல்வில் உரிமைகளும் கடப்பாடுகளும் உடன்பாட்டின்பால் எழுவதில்லை. சட்டத்தின் செயல்பாட்டால் எழுகின்றன. உதாரணமாக, 'A' என்பவர் ஒரு பொருளைக் கண்டெடுக்கிறார். அவர் அதன் உரிமையாளரைக் கண்டுபிடித்து அப்பொருளை அவரிடம் சேர்க்க வேண்டியது சட்டத்தால் ஏற்பட்ட கடமையாகிறது. இது ஒப்பந்தப் போல்வாகும்.

III. நிறைவேற்றத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் (Classification on the basis of execution):

1. நிறைவேறிய ஒப்பந்தம் (Executed Contract) :

ஒப்பந்தத்தின் இரு தரப்பினரும், சட்டக் கடப்பாட்டின் தங்கள் தங்கள் பங்கினை முழுவதுமாக நிறைவேற்றிவிட்டால், அது நிறைவேறிய ஒப்பந்தமாகிறது. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு ரொக்க விற்பனையாகும்.

2. நிறைவேற்ற வேண்டிய ஒப்பந்தம் (Executory Contract) :

ஒப்பந்தத்தின் இரு தரப்பினரும் தங்கள் சட்டக் கடப்பாடுகளைச் செய்து முடிக்க வேண்டியுள்ளதாக இருந்தால், அவ்வகை ஒப்பந்தம் நிறைவேற்ற வேண்டிய ஒப்பந்தமாகும். இது வருங்காலத்தில் செய்ய வேண்டிய ஏதாவது ஒன்றிற்காக உடன்படுதலாகும். **உதாரணமாக,** ஒரு வீடு கட்டித் தர 'B' என்பவருக்கு ரூ. 50,000/– தருவதாக 'A' உடன்படுகிறார். இதில் 'A' ரூ.50,000/– கொடுக்க வேண்டியுள்ளது. 'B' வீட்டைக் கட்டித் தர வேண்டியுள்ளது. இங்கு இரண்டு சட்டக் கடப்பாடுகளும் நிறைவேற்றப்பட வேண்டியவைகளாக உள்ளன. எனவே இது ஒரு நிறைவேற்ற வேண்டிய ஒப்பந்தமாகும்.

3. ஒருதலை ஒப்பந்தம் (Unilateral Contract) :

இது ஒரு தரப்பினரை மட்டும் கட்டுப்படுத்தும் ஒப்பந்தமாகும். ஒப்பந்தம் செய்து கொள்ளும் பொழுதே, ஒரு தரப்பினர் தன் கடப்பாட்டை நிறைவேற்றியிருக்க, மறு தரப்பினர் தன் பங்கை நிறைவேற்றாமல் இருப்பார். இதனை நிறைவேறியுள்ள மறுபயன் கொண்ட ஒப்பந்தம் என்றும் கூறலாம். உதாரணமாக, 'A' என்பவரின் பயணப் பொருள்களை 'B' எனும் கூலியாள் வண்டியில் தூக்கி வைக்கிறார். 'A' அதனை அனுமதிக்கிறார். 'B' தன் பங்கை செய்து முடித்து விட்டார். ஆனால் 'A' தன் பங்காக கூலியைக் கொடுக்க வேண்டியுள்ளது.

4. இருதலை ஒப்பந்தம் (Bilateral Contract) :

இது இரு தரப்பினர்களையும் கட்டுப்படுத்தும் ஒப்பந்தமாகும். ஒப்பந்தத்தின் இரு தரப்பினருமே தங்கள் தங்கள் சட்டக் கடப்பாடுகளை நிறைவேற்றாமல் இருப்பர். இது ஒரு வகையில் நிறைவேற்ற வேண்டிய ஒப்பந்தமாகும். இதனை நிறை வேற்ற வேண்டிய மறுபயனுள்ள ஒப்பந்தம் எனவும் கூறலாம். **உதாரணமாக,** 'A' தனது காரை 'B' என்பவருக்கு ரூ. 15,000/–க்கு 15 தினங்களில் விற்பனை செய்ய உடன் படுகிறார். 'B' இந்த விலையை 'A' தனது காரை ஒப்படைக்குங்கால் தருவதாக உடன்படுகிறார். இதில் இருவருமே தங்கள் பங்கைச் செய்ய வேண்டியுள்ளது.

ஒப்பந்தங்களின் வகைப்பாடு

I. சட்டத்தால் வலியுறுத்தப் படக் கூடிய தன்மைக்கேற்ப வகைப்படுத்தல் (Classification on the basis of enforceability or validity)

1. செல்லத்தகு ஒப்பந்தம் (Valid Contract)
2. இல்லாநிலை ஒப்பந்தம் (Void Contract)
3. தவிர்தகு ஒப்பந்தம் (Voidable Contract)
4. வலியுறுத்திச் செயல்படுத்த முடியாத ஒப்பந்தம் (Unenforceable Contract)
5. சட்ட முரணான ஒப்பந்தம் (Illegal Contract)

II. உருவாக்கத்திற்கு ஏற்ப வகைப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் (Classification on the basis of formation or mode of creation)

1. வெளிப்படையான ஒப்பந்தம் (Express Contract)
2. உட்கிடையான ஒப்பந்தம் (Implied Contract)
3. ஒப்பந்தப் போல்வு (Quasi -Contract)

III. நிறைவேற்றத்தின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் (Classification on the basis of execution)

1. நிறைவேறிய ஒப்பந்தம் (Executed Contract)
2. நிறைவேற்ற வேண்டிய ஒப்பந்தம் (Executory Contract)
3. ஒருதலை ஒப்பந்தம் (Unilateral Contract)
4. இருதலை ஒப்பந்தம் (Bilateral Contract)



5

புரிவுரை (அல்லது) முனைவு
[Proposal (or) Offer]

8. What is an Offer? State the rules to a valid offer. (முனைவு என்றால் என்ன ? ஒரு செல்லத்தக்க முனைவின் விதிகளை கூறுக.)

(அல்லது)

Discuss the requisites of a valid offer. (ஒரு செல்லத்தக்க முனைவின் தேவையான கூறுகளை விவாதிக்க.)

முனைவு - விளக்கம் :

ஒருவர் மற்றொருவரிடம் ஒரு செயலைச் செய்வதாகவோ அல்லது செய்ய வில்லையென்றோ அறிவித்து, அதற்கு அவரது இசைவைப் பெற விரும்பினால் அது 'புரிவுரை' (Proposal) ஆகும், என்று இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 2(a) கூறுகிறது. இதுவே ஆங்கிலச் சட்டத்தில் 'முனைவு' (Offer) என்றும் அழைக்கப்படுகிறது. புரிவுரை அளிப்பவர் 'புரிவுரையாளர்' (Promisor or Offeror) என அழைக்கப்படுகிறார். (விரிவாக அடுத்த வினாவில் காண்க.)

ஒரு செல்லத்தக்க முனைவின் விதிகள் :

1. ஒரு முனைவானது சட்டப்பூர்வமான தொடர்பை அல்லது

கடப்பாட்டை உருவாக்கும் எண்ணத்துடன் செய்யப்பட வேண்டும் (Offer must be made with a view to create legal relation or obligation):

ஒரு முனைவு சமுதாய விஷயங்கள் சார்ந்தவையாக அல்லது நெருங்கிய குடும்ப உறவின் அடிப்படையில் அமைந்ததாக இருத்தல் கூடாது; சட்டப்படியான தொடர்பை அல்லது சட்டக் கடப்பாட்டை ஏற்படுத்தும் எண்ணத்துடன் முனைவு செய்யப்பட வேண்டும். பின்வரும் வழக்குகள் இதைத் தெளிவாக்கும்.

Balfour v. Balfour[1]

A என்பவர் இலங்கையில் பணி செய்து வருகிறார். அவரது மனைவி B என்பவர் உடல் நலம் சரியில்லாததால் இங்கிலாந்தில் வசித்து வருகிறார். அவ்வாறு அவர் அங்கு வசித்து வரும் காலம் வரையிலும் மாதந்தோறும் 3 பவுன் அளிப்பதாக மேற்படி A ஒப்புக் கொண்டிருந்தார். ஆனால் ஒப்புக் கொண்டபடி மேற்படி A நடந்து கொள்ளவில்லை. ஆகவே, அவர் மீது, அவரது மனைவியாகிய B வழக்குத் தொடுத்தார். ஆனால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. நீதிபதி அட்கின் தனது தீர்ப்பில், இத்தகைய ஒப்பந்தங்கள் நெருக்கமான குடும்ப உறவின், நட்பின் காரணமாக ஏற்பட்ட ஒப்பந்தங்கள். ஆகவே சட்டபடி செல்லத் தக்கவை அல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

Weeks v. Tybald[2]

இவ்வழக்கில் ஒரு தந்தை ஏதோ பேச்சுவாக்கில் அவர் மகளைத் திருமணம் செய்து கொள்ள ஒத்துக் கொள்பவருக்கு 100 பவுண்டு பணம் தருவதாகச் சொன்னார். ஆனால் இது சட்டப்பூர்வமான முனைவு இல்லை என்று நீதிமன்றம் தீர்ப்பு கூறியது.

2. முனைவின் வரையறைகள் நிச்சயமானதாக, திட்டவட்டமான தாக இருக்க வேண்டும் (The terms of the offer must be certain and definite):

எச்செயலைச் செய்ய அல்லது செய்யாமலிருக்க முனைவு செய்யப் படுகிறதோ, அதற்குண்டான சரத்துகள் (வரையறைகள்) நிச்சயமானதாக, திட்ட வட்டமானதாக இருக்க வேண்டும். வேறுவிதத்தில் சொன்னால், முனைவின் வரையறைகள் தெளிவற்றதாக அல்லது உறுதியற்றதாக இருத்தல் கூடாது. (The terms of the offer must not be vague or ambiguous).

1. (1919) 2 K.B. 571 at p.p. 578-79
2. (1604) 74 E.R. 982

Taylor v. Portington[1]

இவ்வழக்கில் 'அ' என்பவர் 'ஆ' என்பவரின் வீட்டை ஆண்டு ஒன்றுக்கு 85 பவுண்டு வாடகை வீதம், மூன்றாண்டுகளுக்கு வாடகைக்கு எடுத்தார். அதற்கான வரையறை, வீடு முழுவதும் பழுது பார்க்கப்பட்டு, வரவேற்பு அறை தற்கால நாகரிகப்படி அலங்கரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதாகும். ஆனால் இவ்வரையறை நிச்சயமானதாகவோ, திட்டவட்டமானதாகவோ இல்லை. ஏனெனில் விநாடிக்கு விநாடி மாறி வருகின்ற நாகரிகத்தை யாராலும் நிச்சயிக்க முடியாது. ஆகவே மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

Guthing v. Lynn[2]

இவ்வழக்கில் குதிரை ஒன்றை வாங்கியர், தான் வாங்கிய குதிரை அதிர்ஷ்டத்தை அள்ளித் தந்தால், வாங்கிய விலைக்கு மேல் 5 பவுண்டு பணம் தருவதாக அல்லது மேலும் ஒரு குதிரையை வாங்கிக் கொள்வதாக, அக் குதிரையை விற்றவரிடம் உடன்பாடு செய்து கொண்டார். இங்கு உடன்பாட்டின் வரையறைகள் தெளிவானதாக இல்லை. எனவே சட்டத்தால் வலியுறுத்திச் செயல்படுத்த இயலாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

3. முனைவு தனி நபர் ஏற்கும் முனைவாகவோ அல்லது பொதுவாக உலகினர் அனைவரும் ஏற்கும் முனைவாகவோ இருக்கலாம் [Offer may be specifc or general (Offer at large)]:

ஒரு முனைவு ஒரு தனி நபரிடம் செய்யப்பட்டால் அது "குறித்த வகை முனைவு" (Specific Offer) எனப்படும். அதுவே உலகினர் அனைவருக்கும் அறிவிக்கப்பட்டால் அது "பொது முனைவு" (General Offer) எனப்படும். ஆனால் அதனை உறுதி செய்யப் பெற்ற (Ascertained) அல்லது நிச்சயிக்கக்கூடிய எவரேனும் ஒரு நபர் ஏற்கின்ற வரையில் ஒப்பந்தம் ஏற்படாது. (இது குறித்த எடுத்துக் காட்டுகளையும் முக்கிய வழக்கு ஒன்றினையும் வினா எண் 10–ல் காண்க.)

4. முனைவு வெளிப்படையானதாகவோ, உட்கிடையானதாகவோ இருக்கலாம் (Offer may express or implied):

வாய் வார்த்தைகளாலோ, எழுத்து மூலமாகவோ செய்யப்படும் முனைவு 'வெளிப்படை முனைவாகும்' (Express offer). இதே சொல் அல்லது எழுத்தினா லன்றி வேறு விதமாக செய்யப்பட்டால் அது, 'உட்கிடை முனைவாகும்' (Implied offer). **உதாரணமாக,** பேருந்தில் ஏறுவதைக் கூறலாம்.

1. (1855) 44 E.R. 128 : (1855) 109 R.R. 107.
2. (1831) 109 E.R. 1130

5. ஒவ்வொரு முனைவும் முனைவேற்பாளருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் (Every Offer must be communicated) :

ஒரு முனைவு முழுமை பெற வேண்டுமென்றால், அது முனைவேற் பாளருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். முனைவு தெரிவிக்கப்படாவிட்டால், ஏற்புச் செய்ய முடியாது. முனைவு இருப்பதே அறியாமல், ஏற்புச் செய்தால் அது ஏற்பேயாகாது. ஏற்பாளருக்கு எவ்வித உரிமையையும் அது வழங்காது.

Fitch v. Snedakar[1]

'S' என்பவர் காணாமற்போன தன் நாயைக் கண்டுபிடித்துக் கொடுப்ப வருக்கு பரிசுத் தொகை தருவதாக முனைவு செய்தார். 'F' என்பவர் 'S'-ன் நாயைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்தார். ஆனால் 'S'-ன் முனைவை அவர் அறியவில்லை. 'F' அந்தப் பரிசுத் தொகைக்கு உரிமையுடையவரல்ல எனத் தீர்ப்புக் கூறப்பட்டது.

Lalman Shukul v. Gauri Dutt[2]

வாதி, பிரதிவாதியிடம் பணி புரிந்து வந்தார். பிரதிவாதியின் காணாமல் போன உறவுக்காரப் பையனைக் கண்டுபிடித்து வர வாதி அனுப்பப்பட்டார். பின்னர் பையனைப் பற்றிய தகவல் தருவோருக்குப் பரிசு வழங்குவதாகப் பிரதிவாதி அறிவிப்பு ஒன்றினை வெளியிட்டிருந்தார். இந்த அறிவிப்பினைக் காணாமலேயே வாதி, பையனைக் கண்டுபிடித்துக் கொணர்ந்தார். சில நாட்கள் கழித்து வாதி பரிசு கோரி வழக்கிட்டார். நீதிமன்றம், முனைவு பற்றிய அறிவிப்பினை அறியாமல் ஏற்பு செய்ய இயலாது என மேற்படி வழக்கில் தீர்ப்பு வழங்கியது.

6. முனைவு சட்ட விளைவை ஏற்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும் (Offer should create legal consequence) :

சட்ட விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய வகையில் முனைவு செய்யப்பட வேண்டும். அதற்கான எண்ணத்தைத் தரப்பினர்கள் கொண்டிருக்க வேண்டும். இந்த எண்ணம் இல்லையெனில், அங்கு ஒப்பந்தமும் ஏற்படாது.

Rose Frank & Co. v. Crompton Bros.[3]

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மேற்கண்ட இரு நிறுவனங்களும் மெல்லிழைத் தாள் (Tissue Paper) வாங்கி விற்க ஒப்பந்தம் செய்து கொண்டன. ஒப்பந்தத்தின் எந்த ஒரு கட்டத்திலாவது தரப்பினர்கள் செய்து கொண்ட ஒப்பந்த

1. (1868) 38 N.Y. 248
2. (1918) 11 All. L.J. 489 : 19 I.C. 576
3. (1923) 2 K.B. 161, affirmed on appeal in (1925) A.C. 445.

உறுதியுரையில் (Promise) முறிவு ஏற்பட்டால், அதற்காக வழக்காட நீதிமன்றம் செல்லக்கூடாது என்பது மேற்படி ஒப்பந்தத்தின் ஒரு நிபந்தனையாகும். இந்த நிபந்தனையால் தரப்பினர்களுக்கு சட்டத் தீர்வழி இல்லாமல் போய்விட்டது. உறுதியுரை முறிவு ஏற்பட்டு ஒரு நிறுவனம் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. அது ஒரு செல்லத்தக்க ஒப்பந்தம் இல்லையென்பதால், அவ்வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

7. ஒரு முனைவு இசைவைப் பெறும் நோக்கங் கொண்டு செய்யப்பட வேண்டும்:

ஒரு செயலைச் செய்யவோ, செய்யாமலிருக்கவோ செய்யப்படும் முனைவு அது அறிவிக்கப்படும் மற்றவரின் இசைவைப் பெறும் நோக்கத்தினைக் கொண்டதாக இருக்க வேண்டும். 'முனைவு' செய்யும் நோக்கத்தைத் தெரிவிப்பதாக மட்டுமே, அது இருந்திடல் கூடாது.

8. முனைவில் ஒரு வரையறை கூறப்பட்டு அவ்வரையறையை நிறைவேற்றாமல் போனால் அதனை ஒரு ஏற்பாக ஊகம் செய்யும் வகையில் முனைவு அமைதல் கூடாது:

ஒரு முனைவு நிபந்தனைக்குட்பட்டு இருக்கலாம். ஆனால் அந்த நிபந்தனையை ஏற்றுக் கொள்ளாவிடில், அம்முனைவு ஏற்றுக் கொள்ளப்பட்டதாக ஊகிக்கப்படும் என்றவாறு அம்முனைவு அமைதல் கூடாது. எடுத்துக்காட்டாக, ஒருவர் 'வரும் செவ்வாயன்று ஏற்பு அறிவிக்கப்படாவிட்டால், முனைவு ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்' என்றவாறு முனைவு செய்தல் கூடாது.

9. ஒரு முனைவு நிபந்தனையுடன் கூடியதாக இருக்கலாம் :

ஒரு முனைவு நிபந்தனைக்குட்பட்டு இருக்கலாம். எனவே, ஏற்பும் அந்த நிபந்தனைக்குட்பட்டதாகவே இருக்க வேண்டும்.

10. சிறப்பு வரையறைகள் கொண்ட முனைவுகள் முனைவேற்பாளருக்கு தெரிவிக்கப்பட வேண்டும். (Special terms attached to an offer must be communicated):

முனைவில் சிறப்பு வரையறைகள் ஏதேனும் இருந்தால், அவற்றை முனைவு செய்யும் பொழுதே முனைவேற்பாளரின் கவனத்திற்கு முனைவாளரால் கொண்டு வரப்பட வேண்டும். அவ்வாறு செய்யப்படவில்லையெனில், பின்பு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டால், முனைவேற்பாளரை அவ்வரையறைகள் கட்டுப்படுத்தாது. உதாரணமாக, பயணச்சீட்டுகளின் பின்புறம் 'பயண மூட்டைகள் தொலைந்தால் நிறுவனம் பொறுப்பு அல்ல' என்ற அச்சிட்டிருப்பதைக் கூறலாம். இச்சிறப்பு

வரையறை, பயணச் சீட்டை வழங்கும் போது பயணிகளிடம் சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

11. முனைவைத் திரும்பப் பெறுதல் (Revocation of Offer):

ஒரு முனைவு ஏற்றுக் கொள்ளப்படாமல் இருக்கும் வரை திரும்பப் பெறப் படலாம் (Revoke). முனைவு செய்பவர் அம்முனைவு 'ஏற்பு' செய்யப்படும் நேரத்திற்கு முன்னர் எந்நேரம் வேண்டுமானாலும் திரும்பப் பெறலாம். ஒரு முனைவு குறிப்பிட்ட காலம் வரை செய்யப்படலாம். அவ்வாறாயின் அது அக்காலவரம்பு முடிந்தவுடன் காலாவதி ஆகிவிடும். இருப்பினும் அம்முனைவு ஏற்புச் செய்யப் படாவிடில், அக்காலவரம்பு முடிவுறும் முன்னர் எப்போது வேண்டுமானாலும் திரும்பப் பெறப்படலாம். காலவரம்பு எதுவும் குறிப்பிடாத முனைவு, நியாயமான (reasonable) காலம் முடிந்த பின்னர் காலாவதி ஆகிவிடும்.

12. முனைவு பின்வருபவைகளிலிருந்து மாறுபட்டதாகும் :

(i) ஒப்பந்தப்புள்ளி (Tender): ஒரு ஒப்பந்தப் புள்ளி முனைவாகாது. அது நிலைத்த முனைவு (Standing offer) அல்லது தொடரும் முனைவு (Continuous offer) ஆகும். அதிக அளவில் அளவில் சாமான்கள் அல்லது சேவைகள் (services) தேவைப்படும் பொழுது இந்த ஒப்பந்தப் புள்ளிகள் (அதாவது குறிப்பிட்ட விலை அல்லது கட்டண வீதத்தில் பொருள் அல்லது சேவை வழங்கும் முனைவேற்பு) வரவேற்கப்படுகின்றன. ஒரு ஒப்பந்தப் புள்ளி, முனைவிலிருந்து எவ்வாறு மாறுபடுகின்றன என்பதை பின்வரும் கூறுகள் விளக்கும்.

(அ) ஒப்பந்தப்புள்ளி கொடுத்தோரைத் தவிர வேறு நபர்களிடமும், பொருள் வாங்குவோர் (ஒப்பந்தப்புள்ளிக்கு அழைப்பு விடுத்தவர்) தன்னிச்சைப்படி, பொருள் வாங்க அனுப்பாணை (Order) கொடுக்கலாம்.

(ஆ) ஆனால் அனுப்பாணை கொடுத்த பின்னர் ஒப்பந்தப்புள்ளிக்கு அழைப்பு விடுத்தவர் பொருள் வாங்க மறுக்கக்கூடாது. அங்கு தரப்பினர்களை கட்டுப்படுத்தும் ஒப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது. ஒப்பந்தப்புள்ளிகள், முனைவிற்கான அழைப்பு (invitation to offer) மட்டுமேயாகும். இது குறித்து பின்வரும் முக்கிய வழக்கொன்றை கவனிப்போம்.

Regina v. Demers[1]

ஒரு குறிப்பிட்ட கட்டண விகிதத்தில் எட்டு ஆண்டுகளுக்கு அரசு வெளியீடுகள் சிலவற்றை அச்சிட்டு பைண்டு செய்வதற்காக வரவேற்கப்பட்ட

1. (1900) A.C. 103

ஒப்பந்தப் புள்ளிக்கு, மேற்படி டெமர்ஸ் என்பவர் தனது கட்டண விகிதத்தைக் குறிப்பிட்டு ஒப்பந்தப்புள்ளியை அனுப்பி வைத்தார். அவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டது. ஆனால் பின்னர் அரசாங்கத்தில் ஏற்பட்ட மாறுதல்களினால் டெமர்ஸ்க்கு எவ்வித அனுப்பாணையும் (Order) அனுப்பப்படவில்லை. எனவே, வெறுமனே ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொண்டது மட்டும் எவ்வித சட்டக் கடப்பாட்டையும் உருவாக்காது என்றும், அனுப்பாணை கொடுக்கப்படாத பொழுது எவ்வித கட்டணத்தையும் பிரதிவாதி மேற்படி டெமர்ஸ்–க்கு கொடுக்கக் கடமைப் பட்டவரல்ல என்றும், ஒப்பந்தப்புள்ளி தந்தவரிடமே அச்சு வேலைகள் அனைத்தையும் தர வேண்டுமென்று எவ்வித கட்டாயமும் கிடையாது என்றும் மேற்படி வழக்கில் நீதிமன்றம் கூறியது. இதனடிப்படையில் டெமர்ஸ் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. சுருங்கக்கூறின் இங்கு எவ்வித ஒப்பந்தமும் உருவாகவில்லை.

Great Northern Railway Co. v. Witham[1]

இவ்வழக்கில், ஓராண்டு காலத்தில் வாதி நிறுவனம் அவ்வப்போது அனுப்பும் அனுப்பாணைக்கு (Order) ஏற்ப இரும்பை அளிக்க பிரதிவாதி ஒப்பந்தப்புள்ளி கொடுத்தார். அவரது ஒப்பந்தப்புள்ளி, வாதி நிறுவனத்தால் ஏற்கப்பட்டது. வாதி நிறுவனத்தின் அனுப்பாணைக்கு ஏற்றபடி சில காலத்திற்கு இரும்பை அளித்த பிரதிவாதி, பின்னிட்டு அவ்வாறு அளிக்கவில்லை. எனவே வாதி நிறுவனம், இழப்பீடு கோரி பிரதிவாதி மீது வழக்கிட்டது. ஆனால், மேற்படி ஒப்பந்தப்புள்ளிபடி அனுப்பாணை அனுப்புவதற்கும், அதற்கேற்ப இருப்பை அளிப்பதற்குமிடையே எவ்வித பரஸ்பர தன்மையோ, மறுபயனோ கிடையாது என்றும், ஏனெனில், அனுப்பாணை அனுப்ப வேண்டும் எனும் கடப்பாடு வாதி நிறுவனத்திற்கு ஏதுமில்லை என்றும், அதுபோல் இரும்பை அளித்தே ஆக வேண்டும் எனும் கடப்பாடு தனக்கும் இல்லை என்றும் பிரதிவாதி எதிர்வாதம் புரிந்தார். வழக்கை ஆராய்ந்த நீதிமன்றம், பிரதிவாதி அளித்த ஒப்பந்தப்புள்ளிபடி, அனுப்பாணை அனுப்பப்படும் பொழுது, அவ்வாறு அனுப்பப்படும் அனுப்பாணை ஒன்றே அங்கு போதுமான மறுபயனாக உள்ளது என்றும், எனவே அது நிலையான முனைவை (ஒப்பந்தப்புள்ளியை), ஒரு ஒப்பந்தமாக்குகிறது என்றும் தீர்ப்புரைத்தது.

State of M.P. v. Goverdhan Das[2]

மேற்கண்ட இந்திய வழக்கின் பொருண்மைகளின்படி, ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் பொழுது, பிணையத் தொகையையும் (Security Deposit) அத்துடன் சேர்த்து அனுப்ப வேண்டும் என்று கூறப்பட்டது. இங்கு ஒப்பந்தப்புள்ளியை அனுப்பியவர் அவ்வாறு பிணையத் தொகையை சேர்த்து அனுப்பவில்லை.

1. (1873) 9 C.P. 16
2. AIR 1973 SC 1164

பிணையத் தொகையையும் சேர்த்து அனுப்ப வேண்டும் என்பது, இங்கு ஒரு ஒப்பந்தம் ஏற்படுவதற்கான முன் நிபந்தனையாகும். இது பூர்த்தி செய்யப்படாததால், அங்கு செல்லத்தக்க ஒப்பந்தம் ஏதும் ஏற்படவில்லை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

(ii) விலைப்புள்ளி (Quotation): ஒரு பொருளின் விலைப்புள்ளி முனைவாகாது. (மேலும் விரிவாக அடுத்த வினாவின் விடையில் காண்க).

(iii) விலைப்புள்ளி தர அழைப்பு (Invitation to treat): இதுவும் ஒரு முனைவாகாது. (மேலும் விரிவாக வினாவின் விடையில் காண்க.)

(iv) குறுக்கு முனைவுகள் (Cross Offers) : ஒன்றுக்கொன்று நிகராக உள்ள முனைவுகளை, இரு தரப்பினர்களில் ஒருவர், மற்றவர் தனக்கு அவ்வித முனைவை அனுப்பியிருப்பதை அறியாதவராய் அவ்விருவரும் பரஸ்பரம் செய்து கொண்டால், அம்முனைவுகள் 'குறுக்கு முனைவுகள்' எனப்படும். நீதிமன்றம் முதல் முனைவை, முனைவாகவும், இரண்டாம் முனைவை ஏற்பாகவும் கருதாது; ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டதாகவும் கருதாது.

Tinn v. Hoffman & Co.[1]

பிரதிவாதியானவர் ஒரு குறிப்பிட்ட அளவு இரும்பை ஒரு குறிப்பிட்ட விலைக்கு வாங்க விரும்புவதாக வாதிக்கு கடிதம் அனுப்பினார். அதே சமயத்தில் வாதியும் அதே அளவு இரும்பை அதே விலைக்கு விற்க பிரதிவாதிக்கு ஒரு கடிதம் அனுப்பினார். மேற்கண்ட இரண்டு கடிதங்களும் மேற்படி வாதி, பிரதிவாதிக்கு ஒரே நாளில் கிடைத்தன. இவை இரண்டும் குறுக்கு முனைவுகளே தவிர, ஒன்று 'முனைவு' என்றும், மற்றொன்று 'ஏற்பு' என்றும் கருதப்பட முடியாது என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆகவே அங்கு செல்லத்தக்க ஒப்பந்தம் ஏதும் எழவில்லை.

9. Explain the term 'offer' and state how "Invitation to offer" is different from it with illustrations. ("முனைவு" எனும் சொல்லை விளக்கு. "முனைவு தர அழைப்பு" என்பது அதனின்றும் எவ்வாறு வேறுபடுகிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.)

(அல்லது)

Explain with illustrations the statement that a Quotation or an Invitation to treat is different from an offer. (ஒரு விலைப்புள்ளி அல்லது ஒரு விலைப்புள்ளித் தர அழைப்பு முனைவினின்றும் வேறுபட்டது என்ற கூற்றினை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.)

1. (1873) 29 L.T. Exch. 271

(அல்லது)

Distinquish between an offer and an invitation to treat with the help of decided cases. (தீர்மானிக்கப்பட்ட வழக்குகளின் உதவியுடன் ஓர் முனைவையும் முனைவிற்கான அழைப்பையும் வேறுபடுத்திக் காண்க.)

(அல்லது)

Invitation to treat - Write short notes. (முனைவிற்கான அழைப்பு – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Offer and invitation to offer - Write short notes. (முனைவு மற்றும் முனைவிற்கான அழைப்பு – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Invitation to offer - Write short notes. (முனைவுக்கு அழைப்பு – சிறு குறிப்பு வரைக.)

முனைவு (Offer) - விளக்கம் :

முனைவு என்பது ஒரு நபர் மற்றொருவருடன் உடன்பாடு கொள்ளச் செய்யும் "புரிவுரையேயாகும்" (Proposal) இச்சொல் 'முனைவு' (Offer) என இங்கிலாந்திலும், 'புரிவுரை' என இந்தியாவிலும் ஒரே பொருளில் அழைக்கப் படுவதாகும்.

இந்திய ஒப்பந்தச் சட்டம் தரும் வரையறை :

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **பிரிவு 2(a)**-ஆனது, "ஒருவர் மற்றொருவரிடம் ஒரு செயலைச் செய்வதாக அல்லது செய்யாமலிருப்பதாக அறிவித்து, அதற்கு அவரது இசைவைப் பெற விரும்பினால் அது **'புரிவுரை' (Proposal)** எனப்படும்" என்று முனைவை வரையறுக்கிறது. புரிவுரை செய்பவரை "புரிவுரையாளர்" (Offeror or Promisor) என்றும் புரிவுரை ஏற்பவரை 'முனைவேற்பாளர்' (Offeree or Promisee) எனவும் கூறலாம். **[பிரிவு 2(c)]**.

ஒரு முனைவின் சிறப்பியல்புகள் :

(1) அது ஒரு செயலைச் செய்ய அல்லது செய்யாமலிருப்பதற்கான விருப்பத்தைத் தெரிவிப்பதாக இருக்க வேண்டும்.

(2) அது மற்றொரு நபருக்குச் செய்யப்பட வேண்டும்.

(3) அது அச்செயல் அல்லது செயல் தவிர்ப்பு குறித்து அம்மற்றொரு நபரின் இசைவைப் பெறும் பொருட்டு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(4) இசைவைப் பெறும் விருப்பத்தைத் தெரிவிப்பது சட்டக் கடப்பாட்டை ஏற்படுத்தும் நோக்கம் கொண்டதாக இருத்தல் அவசியம்.

எடுத்துக்காட்டு :

X என்பவர் தன்னுடைய காரை Y என்பவருக்கு ரூ. 10,000/–க்கு விற்க விரும்புவதாக ஒரு கடிதம் எழுதுகிறார். இங்கு X ஒரு முனைவைச் (Offer) செய்தவராகிறார். மேற்படி முனைவை ஒப்புக் கொள்ளும் வண்ணம் Y என்பவர், மேற்படி X என்பவருக்கு ஒரு பதில் கடிதம் எழுதினால் அது 'ஏற்பு' (Acceptance) எனப்படுகிறது.

முனைவும் முனைவிற்கான அழைப்பும் - வேறுபாடு [Difference between Offer and Invitation to Offer (or) Invitation to treat] :

முனைவும், முனைவிற்கான அழைப்பும் வேறுபட்டவையாகும். "முனைவு" என்பது நாம் முன் கண்டது போல், ஒருவர் மற்றொருவரிடம் ஒரு செயலைச் செய்வதாக அல்லது செய்யாமலிருப்பதாக அறிவித்து, அதற்கு அவரது இசைவைப் பெற விரும்புதலாகும். "முனைவிற்கான அழைப்பு" என்பது, முனைவுக்கான பேரமாகும் (Offer to negotiate) அல்லது முனைவை பெறச் செய்யப்படும் முனைவாகும் (Offer to receive offer). எடுத்துக்காட்டாக, ஒரு நபர் தனது வீட்டை வாடகைக்கு விடுவதாக விளம்பரம் செய்வாரானால், அது முனைவு ஆகாது. அது முனைவிற்கான அழைப்பேயாகும். இங்கு வாடகைக்கு விட விரும்புபவர், முனைவிற்கான பேரத்தைத்தான் செய்ய உள்ளார். அதுபோல், சரக்குகளை விளம்பரப்படுத்தி, அவற்றிற்கான விலைப்பட்டியலை வெளியிடுபவர், முனைவிற்கான அழைப்பைத்தான் செய்கிறாரே தவிர, அப்பட்டியலே ஒரு முனைவாகிவிடாது.

முனைவிற்கான அழைப்பை ஏற்றுக் கொள்ள இசைவைத் தெரிவிக்கும் எவரும், முனைவாளர் ஆகிறார். இங்கு முனைவிற்கான அழைப்பை ஏற்றுக் கொள்தலே, முனைவாகிறது. அம்முனைவிற்கு இசைவைத் தெரிவிக்கும் நபர், முனைவேற்பாளர் ஆகிறார்.

ஒரு முனைவு யாரிடம் செய்யப்பட்டதோ, அதை அவர் ஏற்றுக் கொண்டவுடன் ஒரு ஒப்பந்தம் உருவாகிவிடுகிறது. ஆனால், முனைவிற்கான அழைப்பை ஏற்றுக் கொள்வதால் மட்டும், அவ்வாறு ஒரு ஒப்பந்தம் உருவாவதில்லை.

பின்வருவன முனைவிற்கான அழைப்புகளாகும் :

1. வணிகர் காட்டும் விலைப்புள்ளி (Quotation), 2. ஒரு விலைப் புள்ளி தர அழைப்பு (Invitation to treat), 3. பொருளின் விலைப்பட்டியல் (Catalogue of goods for Sale), 4. பேரத்திற்கான விசாரணையின் பொழுது கூறப் படும் குறைந்த அளவு விலை விபரம், 5. ஒப்பந்தப்புள்ளி கோரும் விளம்பரம் (Tender), 6. ஏல விற்பனையாளர் ஒரு பொருளை ஒரு குறிப்பிட்ட நாளில் ஏலம் விடுவதற்கான அறிவிப்பு (Auction), 7. தொடர்வண்டி கால அட்டவணை, 8. விலைச்சீட்டுடன் விற்பனைப் பொருள்களை கண்காட்சியாக வைத்தல் ஆகியவை முனைவிற்கான அழைப்பே தவிர, அவையே ஒரு முனைவாகிவிடாது.

விலைப்புள்ளிக்கான முக்கிய எடுத்துக்காட்டு வழக்குகள் (Illustrative Cases for Quotation) :

Harvey v. Facey[1]

இவ்வழக்கில் A என்பவர் B என்பவருக்கு பின்வருமாறு தந்தி அடித்தார். "'பம்பர் ஹால் பென்' (Bumber Hall Pen) எங்களுக்கு விற்பனை செய்வீர்களா? குறைந்த விலையைத் தந்தி மூலம் தெரிவிக்கவும். பதிலுக்குப் பணம் செலுத்தப் பட்டுள்ளது." [இங்கு பம்பர் ஹால் பென் என்பது ஒரு அசையாச் சொத்து (பேனா அல்ல)]. மேற்படி B என்பவர் பின்வருமாறு பதில் தந்தி அடித்திருந்தார். "பம்பர் ஹால் பென்னின் குறைந்த விலை 900 பவுண்டு (£ 900)." இதைத் தவிர பதில் தந்தியில் வேறு ஒன்றும் இல்லை. "பம்பர் ஹால் பென்னை வாங்கச் சம்மதம். சுவாதீனத்தை விரைவாக எடுத்துக் கொள்ள ஏதுவாக, அதன் உரிமை மூலப் பத்திரங்களை அனுப்பவும்," என்று A மற்றொரு தந்தி மேற்படி B–க்கு அடித்தார். ஆனால் இதற்குப் பதில் வரவில்லை. A என்பவர் B மீது வழக்குத் தொடுத்தார். பம்பர் ஹால் சொத்தை விற்பதற்கு B-யிடமிருந்து முனைவு யாதுமில்லை என்று கூறி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. பம்பர் ஹாலின் விலையை மட்டும் கூறியதே முனைவாகிவிடாது. அதை விற்பதற்கான B-யின் விருப்பத்தை மேற்படி தந்தி குறிப்பிடவில்லை. ஆகவே, மேற்படி B என்பவர் விலைப் புள்ளியைக் குறிப்பிட்டது, முனைவிற்கான அழைப்பு மட்டுமே ஆகும், என மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

Macpherson v. Appanna[2]

ஒரு பொருளின் விலைப்புள்ளியை தெரிவித்த பின்னர், அதே விலைக்குத்தான் அப்பொருளை தனக்கு விற்க வேண்டும் என ஒருவர் கூற

1. (1893) A.C. 552
2. AIR 1951 SC 184

முடியாது. ஏனெனில் விலைப் புள்ளியை தெரிவிப்பது முனைவிற்கான அழைப்பே தவிர, ஒரு முனைவாகாது என மேற்படி வழக்கில் நமது உச்ச நீதிமன்றம் கூறியது.

விலைப்புள்ளி தர அழைப்பிற்கான முக்கிய எடுத்துக்காட்டு வழக்கு (Important case law for an invitation to treat):

Fisher v. Bell[1]

இவ்வழக்கில் பெல் என்பவர் தன்னுடைய கடையின் விளம்பர ஜன்னலுக்குள் (Show window) ஒரு கத்தியினை, அதன் விலைச் சீட்டுடன் பார்வைக்கு வைத்திருந்தார். ஃபிஷர் என்பவர் மேற்படி கடையில் நுழைந்து அக்கத்தியை எடுத்துக் கொண்டு அதில் குறிப்பிட்டுள்ள விலையை செலுத்த முயற்சித்த பொழுது, கடைக்காரர் பெல், பணத்தை வாங்க விரும்பியது 'ஏற்பு' ஆகும் என்றும், எனவே இது தரப்பினர்களை சட்டப்படியாக கட்டுப்படுத்தும் ஒப்பந்தம் ஆகும் என்றும் வாதாடினார். ஆனால் இவரது வாதம் தள்ளுபடி செய்யப் பட்டது. இவ்வழக்கினை விசாரித்த தலைமை நீதிப்பெருமகனார் பார்க்கர் (Lord Parkar C.J.) தன்னுடைய தீர்ப்புரையில், கத்தியை பார்வைக்கு வைத்திருந்த தானது விலைப்புள்ளி தர அழைப்பாகுமே தவிர, ஒரு முனைவு ஆகாது என்று கூறினார். அதாவது, இது முனைவிற்கான அழைப்பு மட்டுமே ஆகும். ஆகவே, கடையில் உள்ள பொருட்களை பொதுமக்கள் தொடர்பு கொண்டு வாங்க முயலும் போது, கடை உரிமையாளர் அப்பொருளை விற்பனை செய்ய மறுக்கலாம்.

10. "An Offer need not be made to an ascertained person; but no contract can raise untill it has been accepted by an certained person." Explain and illustrate this principle referring leading cases. ("நிச்சயிக்கப்பட்ட ஒருவருக்குத்தான் முனைவு விடுக்கப்பட வேண்டும் என்பது தேவையில்லை; ஆனால் அது நிச்சயிக்கப்பட்ட ஒருவரால் ஏற்றுக் கொள்ளப்படும் வரை எந்த ஒரு ஒப்பந்தமும் ஏற்படுவதில்லை." இந்தக் கோட்பாட்டை வழிகாட்டும் வழக்குகளைக் குறிப்பிட்டு எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக.)

முன்னுரை :

"நிச்சயிக்கப்பட்ட ஒருவருக்குத்தான் முனைவு விடுக்கப்பட வேண்டும் என்பது தேவையில்லை; ஆனால் அது நிச்சயிக்கப்பட்ட ஒருவரால் ஏற்றுக் கொள்ளப்படும் வரை எந்த ஒரு ஒப்பந்தமும் ஏற்படுவதில்லை" என்ற கூற்று மிகச்சரியே. இதன் விளக்கம் வருமாறு.

(1961) I.Q.B. 394

விளக்கம்:

பொதுவாக ஒரு முனைவு, தனி நபர் ஏற்கும் முனைவாகவோ அல்லது பொதுவாக உலகினர் அனைவரும் ஏற்கும் முனைவாகவோ (Offer at large) இருக்கலாம். இதிலிருந்து தெரிவது யாதெனில், ஒரு முனைவு என்பது நிச்சயிக்கப்பட்ட ஒருவருக்குத்தான் விடுக்கப்பட வேண்டுமென்பதில்லை; அது எவருக்கும் பொதுவாக விடுக்கப்படலாம். ஆனால் அம்முனைவை, உறுதி செய்யப் பெற்ற அல்லது நிச்சயமான நபர் (ascertained) எவரேனும் ஏற்கின்ற வரையில் ஒப்பந்தம் ஏற்படாது. இதனை மேலும் விளக்குவதற்கு முன்னர், மேற்படி கூற்றின் அடிப்படையில் அமைந்த முனைவின் இரு வகைகளை இங்கு காணல் அவசியம். ஒரு முனைவு தனியொரு நபரிடம் செய்யப்பட்டால், அது "குறித்த வகை முனைவு" (Specific Offer) எனப்படும். அதுவே உலகினர் அனைவருக்கும் பொதுவாக அறிவிக்கப்பட்டால், அது "பொது முனைவு" (General Offer) எனப்படும். இதனை பின்வரும் இரு எடுத்துக்காட்டுகள் மேலும் தெளிவாக்கும்.

எடுத்துக்காட்டுகள் :

1. A என்பவர் B என்பவரிடம் தனது காணாமற் போன நாயைக் கண்டு பிடித்துக் கொடுத்தால் ரூ. 200/– தருவதாக முனைவு செய்தால், அது **"குறித்த வகை முனைவு" (Specific Offer)** ஆகும்.

2. A என்பவர் தனது காணாமற்போன நாயைக் கண்டுபிடித்து கொடுக்கும் எவருக்கும் ரூ. 200/– தருவதாக விளம்பரம் செய்தால், அது **'பொது முனைவு' (General Offer)** ஆகும்.

முக்கிய எடுத்துக்காட்டு வழக்கு :

பின்வரும் வழக்கில் 'பொது முனைவின்' சிறப்பு விளக்கப்பட்டது. உலகினர் அனைவருக்கும் பொதுவாக விடப்பட்ட முனைவை, நிச்சயிக்கப்பட்ட ஒரு நபர் ஏற்றுக் கொண்டவுடனே, அவருடன் ஒப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது, என்ற மேற்கண்ட கூற்று இவ்வழக்கில்தான் நிலைநிறுத்தப்பட்டது.

Carlill v. Carbolic Smoke Ball Co.,[1]

Carbolic Smoke Ball Co., எனும் நிறுவனம் தனது தயாரிப்பான குளிர்க் காய்ச்சலைப் (Influensa) போக்கும் மருந்தை விளம்பரத்தில் அறிவித்துள்ள முறைப்படி, நாளொன்றுக்கு மூன்று வேளை வீதம் தொடர்ந்து இரண்டு வாரங்கள் பயன்படுத்தி வந்த பின்பும், எவருக்கேனும் இன்புளூயன்சா எனும் குளிர்க் காய்ச்சல்

1. (1893) I.Q.B.256

நீடித்திருந்தால், தாங்கள் 100 பவுண்டு பணம் தருவதாக விளம்பரம் செய்தனர். திருமதி. கார்வில் என்பவர் அந்நிறுவனம் அறிவித்துள்ள முறைப்படி மருந்தினைப் பயன்படுத்தியும் குளிர் காய்ச்சலினால் தாக்கப்பட்டார். எனவே அவர் மேற்படி நிறுவனத்தின் மீது வழக்கு தொடர்ந்தார்.

அவ்வழக்கில் அந்த நிறுவனத்திடமிருந்து அவர் அத்தொகையைப் பெற முடியுமென்று தீர்ப்புக் கூறப்பட்டது. தீர்ப்பில் அவர் அந்த மாத்திரைகளை முறைப்படி உபயோகித்ததால் அந்நிறுவனத்தின் முனைவை அவர் ஏற்றுக் கொண்டார் என்றும், அவ்விளம்பரம் ஒரு முனைவுக்கான அழைப்பு அல்ல; முனைவேதான் என்றும் கருத்துக்கள் கூறப்பட்டன. அதாவது மேற்படி நிறுவனம் உலகனைத்திற்கும் விளம்பரம் செய்தது ; அதை கார்வில் என்ற நிச்சயிக்கப்பட்ட நபர் ஏற்றுக்கொண்டவுடன் ஒப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

மேற்படி வழக்கில் கூறப்பட்ட விதிகள் வருமாறு :

1. உலகனைத்துக்கும் விடப்பட்ட முனைவை, யாராகினுமொரு குறிப்பிட்ட நபர் ஏற்காவிடில் ஒரு 'ஒப்பந்தம்' நிகழ்ந்ததாக கூற முடியாது.

2. இவ்வித முனைவுகள் தொடர்த்தன்மை உடையவை. ஒருவரால் அல்லது பலரால் ஏற்றுக் கொள்ளத்தக்கவை.

3. விளம்பரம் ஒன்றை என்றுமே 'முனைவிற்கான அழைப்பு' (invitation to offer) எனக் கொள்வதற்கில்லை. சில வேளைகளில் அதுவே முனைவாகவும் உள்ளது.

4. பொது முனைவு என்பது ஒரு குறிப்பிட்ட நபருக்கானது அல்ல என்றாலும், அத்தகைய முனைவு பேரம் பேசி முடிவாக வேண்டியது என்றாலும், முனைவின் நிபந்தனையை ஏற்று, அதன்படி ஒருவர் நடப்பின், அங்கு ஒரு ஒப்பந்தம் உருவாகிவிடுகிறது.

5. இத்தகு விளம்பர முனைவினால், முனைவாளர் பல வழக்குகளுக்கு உள்ளாகி பெரும் இழப்பீட்டைக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும் எனும் காரணத்திற்காக, ஒரு செல்லத்தக்க ஒப்பந்தத்திலிருந்து முனைவாளரை விடுவிக்க வேண்டுமென்பதில், எவ்வித நியாயமும் கிடையாது.

6

ஏற்பு
[Acceptance]

11. Define 'Acceptance' and examine the ingredients of valid acceptance. ('ஏற்பு' என்பதினை வரையறுத்து ஓர் செல்லத்தக்க ஏற்பிற்கான இன்றியமையாக் கூறுகளை ஆராய்க.)

(அல்லது)

Define 'Acceptance'. What are the essentials of a valid acceptance ? ('ஏற்பு' என்பதனை வரையறு. ஒரு செல்லத்தக்க ஏற்பின் முக்கிய கூறுகள் யாவை?)

(அல்லது)

"In order to convert a proposal into a promise the acceptance must be absolute and unqualified" - Examine. ("ஒரு முனைவை ஒரு உறுதியுரையாக மாற்றுவதற்கு, ஏற்பு முழுமையானதாகவும் கட்டுவரம்பற்ற தாகவும் இருக்க வேண்டும்" – ஆராய்க.)

முன்னுரை:

ஒரு ஒப்பந்தத்தை உருவாக்க முனைவும் ஏற்பும் தேவைப்படுகிறது. ஒப்பந்தம் என்ற நாணயத்தின் ஒரு பக்கம் 'முனைவு' என்றால், மறுபக்கம் 'ஏற்பு'

ஆகும். முனைவின் வரையறைகளுக்கு கட்டுப்படுவதாக முனைவேற்பாளர் தனது விருப்பத்தை தெரிவித்தால், அது 'ஏற்பு' என்றாகிவிடுகிறது.

அறிஞர் ஆன்சனின் கூற்று :

"ஒரு வெடி மருந்து தொடருக்கு கொளுத்தப்பட்ட தீக்குச்சி எப்படியோ அப்படியே ஒரு முனைவுக்கு ஏற்பு என்பதாகும்" என்று அறிஞர் ஆன்சன் அவர்கள் 'ஏற்பைப்' பற்றி நயம்பட கூறுகிறார். (அடுத்த வினாவில் விரிவாகக் காண்க.)

ஏற்பு (Acceptance) – சட்டம் தரும் வரையறை :

ஒரு செயலைச் செய்ய அல்லது செய்யாமலிருக்க எவரொருவரின் இசைவைப் பெற வேண்டி முனைவு (புரிவுரை) செய்யப்பட்டதோ, அவர் அதனை ஏற்கும் செயல்தான் 'ஏற்பு' என்று சொல்லப்படுகிறது, என்று இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **பிரிவு 2(b)** –ஆனது ஏற்பை வரையறுக்கிறது. அதாவது முனைவேற்பாளர் தன் இசைவை முனைவாளருக்குத் தெரிவித்து விட்டால், அம்முனைவு 'ஏற்பு' செய்யப்பட்டதாகக் கருதப்படும். ஒரு முனைவு ஏற்பு செய்யப்பட்ட பின் உறுதியுரை (Promise) ஆகிவிடுகிறது.

எடுத்துக்காட்டு :

A தனது காரை B–க்கு ரூ. 1,00,000/–க்கு விற்க முனைவு செய்கிறார். மேற்படி B என்பவர், அக்காரை அவ்விலைக்கு வாங்க தனது இசைவைத் தெரிவிக்கிறார். அவ்விசைவு 'ஏற்பு' ஆகும். உடனே மேற்படி A-யின் முனைவு (புரிவுரை) 'உறுதியுரை' ஆகிவிடுகிறது.

ஒரு செல்லத்தக்க ஏற்பின் இன்றியமையாக் கூறுகள் (பிரிவு 7 மற்றும் 8) :

1. 'ஏற்பு' முழுமையானதாகவும் நிபந்தனையற்றதாகவும் இருக்க வேண்டும் (Acceptance must be absolute and unqualified) [பிரிவு 7(1)] :

முனைவில் (புரிவுரையில்) கண்ட வரையறைகள் முக்கியமானதாக அல்லது மிகச் சாதாரணமானதாக இருக்கலாம். பெரிய அளவிலோ அல்லது சிறிய அளவிலோ இருக்கலாம். ஆனால் அவை எவ்வித மாற்றமும் இன்றி அப்படியே முழுமையானதாகவும் (absolute) எவ்வித நிபந்தனையின்றியும் (unqualified) ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அதாவது ஒரு முனைவை உறுதியுரையாக மாற்ற, அதற்கான ஏற்பானது முழுமையானதாகவும், நிபந்தனையற்றதாகவும் இருத்தல்

வேண்டும்"[1] என்று இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 7(1) கூறுகிறது. முக்கிய வழக்குகள் வருமாறு.

Routledge v. Grant[2]

இவ்வழக்கில் A என்பவர் தனது வீட்டை B என்பவருக்கு விற்பதற்கு புரிவுரை (முனைவு) ஒன்று அனுப்பினார். அதில் ஜூலை 24–ஆம் தேதியன்று வீட்டை சுவாதீனம் எடுத்துக் கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. B என்பவர் அப்புரிவுரையை ஏற்றுக் கொண்டார். ஆனால் ஜூலை 24–ஆம் தேதிக்கு பதில் ஆகஸ்ட் 1–ஆம் தேதி வீட்டை சுவாதீனம் எடுத்துக் கொள்வதாக தனது ஏற்பில் குறிப்பிட்டிருந்தார். புரிவுரையில் உள்ள வாசகங்களை முழுமையாக ஏற்றுக் கொள்ளாமல் தேதி சம்பந்தமாக அதில் மாற்றம் செய்து இருப்பதால், அது நிபந்தனையற்ற, முழுமையான ஏற்பல்ல என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Hutchinson v. Bowker[3]

இவ்வழக்கில் 'நல்ல பார்லி' (good barley) என்ற தானியத்தை விற்க புரிவுரை செய்யப்பட்டது. ஆனால் 'நயமான பார்லிக்கு' (Fine barley) ஏற்பு செய்யப்பட்டது. இது முழுமையான ஏற்பாகாது. எனவே இங்கு ஒப்பந்தம் ஏதும் எழவில்லை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

2. முனைவு யாருக்குச் செய்யப்பட்டதோ அவர் மட்டுமே 'ஏற்பு' செய்ய வேண்டும் (Acceptance must be made by the offeree alone):

குறிப்பிட்ட ஒருவருக்குச் செய்யப்பட்ட முனைவு அவரால் மட்டுமே 'ஏற்பு' செய்யப்பட வேண்டும். வேறு எந்த மூன்றாம் நபராலும் ஏற்பு செய்ய முடியாது. வேறு யாராவது 'ஏற்பு' செய்ய முற்பட்டால், அதனால் ஒரு ஒப்பந்தம் எழாது.

3. 'ஏற்பு' முனைவாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும் (Acceptance must be communicated) [பிரிவு 7(2)]:

முனைவு எவ்வாறு முனைவேற்பாளருக்கு அறிவிக்கப்பட வேண்டுமோ, அவ்வாறே 'ஏற்பும்' முனைவாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும். மனத்தளவில் மட்டும் முனைவை ஏற்றுக் கொண்டு அதை முனைவாளருக்கு அறிவிக்காமல் இருந்தால் அது சட்டப்படியான ஏற்பாகாது. ஏனெனில் ஒரு மனிதனின் மன

1. In order to convert a proposal into a promise, the acceptance must be absolute and unqualified - **Section 7(1) of the Indian Contract Act, 1872.**
2. (1828) 130 E.R. 920 : 29 R.R. 672
3. (1839) 151 E.R. 227 : 52 R.R. 821

நிலையை நீதிமன்றம் சாதாரண நிலையில் தெரிந்து கொள்ள முடியாது. (மேலும் விரிவாக வினா எண். 13–ல் காண்க.)

4. ஏற்பு குறிப்பிட்ட முறையில்தான் செய்யப்பட வேண்டும் (Acceptance must be according to the mode prescribed) [பிரிவு 7(2)]:

முனைவாளர் எம்முறையில் முனைவு ஏற்கப்பட வேண்டுமென்று விழைகிறாரோ, அம்முறையில் மட்டுமே 'ஏற்பு' செய்யப்பட வேண்டும். எவ்வித முறையும் குறிப்பிடப்படவில்லையெனில், அம்முனைவு வழக்கமான அல்லது நியாயமான முறையில் (usual or reasonable manner) ஏற்கப்பட வேண்டும். உதாரணமாக, முனைவாளர் ஏற்பை தந்தி மூலம் தெரிவிக்க வேண்டும் என்று கூறினால், முனைவேற்பாளர் தந்தி மூலம் ஏற்பை அறிவிக்க வேண்டும்.

Eliasaon v. Henshaw[1]

300 பீப்பாய் அளவு அரைத்த மாவு தேவையென E என்பவர் H-க்கு தெரிவித்து ஒரு கடிதத்தின் வாயிலாக புரிவுரை அனுப்புகிறார். அதில் காரோட்டி மூலம் பதில் அனுப்புமாறு குறிப்பிட்டு இருந்தார். H என்பவர் உடனடியாக அந்த முனைவை ஏற்றுக் கொள்கிறார். ஆனால் அவர் அவ்வாறு ஏற்றுக் கொண்ட தகவலை காரோட்டி மூலம் அனுப்பவில்லை. மாறாக அஞ்சல் மூலம் அனுப்பினார். அந்த அஞ்சல் E–க்கு கிடைக்க தாமதம் ஆனது. இதற்கிடையில் காரோட்டி மூலம் பதில் வரவில்லையென்று தெரிந்ததால், E–க்கு தேவையான அரைத்த மாவை அவர் வேறு நபரிடமிருந்து வாங்கிக் கொண்டார். எனவே H அனுப்பிய மாவை E வாங்க மறுத்து திருப்பி அனுப்பிவிட்டார். இதனால் H என்பவர், E செய்த முனைவை தான் ஏற்றுக் கொண்டதாகவும், அதற்கான ஏற்புக் கடிதத்தை அஞ்சலில் இட்டவுடன் தனக்கும் E–க்கு இடையே ஒரு செல்லத்தக்க ஒப்பந்தம் உருவாகி விட்டது என்றும், ஒப்பந்தப்படி E நடக்காததால் தனக்கு இழப்பீடு கொடுக்க பொறுப்புடையவர் என்றும் E மீது வழக்கிட்டார். ஆனால் இவ்வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. ஒரு முனைவு குறிப்பிட்ட முறையில்தான் ஏற்கப்பட வேண்டுமென அம்முனைவில் குறிப்பிடப்பட்டிருப்பின், அம்முறையில்தான் முனைவை ஏற்க வேண்டுமே தவிர, வேறு முறையில் அல்ல என நீதிமன்றம் தீர்ப்பு கூறியது.

5. 'ஏற்பு' நியாயமான காலத்துக்குள் செய்யப்பட வேண்டும். (Acceptance must be given within a reasonable time)[பிரிவு 7(2)]:

ஏற்புக்கு காலக்கெடு கொடுக்கப்பட்டிருந்தால் அந்தக் காலக் கெடுவிற்

1. (1819) Sup Ct. U.S. 4 Wheaton 225

குள்ளும், அவ்வாறில்லையெனில் நியாயமான காலத்துக்குள்ளும் 'ஏற்பு' செய்யப்பட வேண்டும்.

Ramsgate Victoria Hotel Co. v. Montefiore[1]

ஏற்பிற்கான நியாயமான காலமானது, வழக்குகளுக்கேற்ப மாறுபடும் என மேற்படி வழக்கில் கூறப்பட்டது. வழக்கின் பொருண்மைகளை விரிவாக வினா எண். 15–ன் விடையில் காண்க.

6. 'ஏற்பு' முனைவை முந்திச் செல்ல முடியாது :

அறிவிக்கப்படாத முனைவுக்கு ஏற்பு இருக்க முடியாது. முனைவைப் பற்றிய அறிவிப்பைப் பெறாதவர் அதை ஏற்றார் என்று கூற முடியாது. ஏனெனில், அவர் தற்செயலாகத்தான் முனைவில் கூறியபடி நடந்திருப்பார்.

7. 'ஏற்பு' உறுதியுரையை நிறைவேற்றும் எண்ணத்தை வெளிப் படுத்த வேண்டும் :

உறுதியுரைப்படி நடக்க ஏற்பாளர் விரும்புகிறார். எனவே, அவரால் அது முடியும் என்பதைக் காட்டும் சூழ்நிலையில் 'ஏற்பு' செய்யப்பட வேண்டும். ஏற்பாளருக்கு அவ்வித எண்ணம் இல்லை என்றால் 'ஏற்பு' செல்லத்தக்கதாகாது.

8. முனைவு வீழ்ந்துபடுமுன் (Lapse) திரும்பப் பெறப்படுமுன் (Revocation) அல்லது மறுக்கப்படுமுன் (Rejection) 'ஏற்பு' செய்யப்பட வேண்டும்.

9. மௌனத்தை (Silence) ஏற்பாகப் பொருள் கொள்ள முடியாது :

முனைவேற்பாளரின் மௌனத்தை அல்லது பதிலளிக்காமலிருப்பதை ஏற்பாகக் கருத முடியாது. (விரிவாக வினா எண். 13–ன் விடையில் காண்க.)

12. "An acceptance to offer is what a lighted match is to a train of Gun powder" - Elucidate. ("ஒரு வெடி மருந்து தொடருக்குக் கொளுத்தப்பட்ட தீக்குச்சி எப்படியோ அப்படியே ஒரு முனைவுக்கு ஏற்பு என்பதாகும்" – விளக்குக.)

(அல்லது)

"An acceptance to an offer is what a lighted match is to a train of gun powder"- Elucidate bringing out the requirements of a valid acceptance. ("துப்பாக்கி வெடி பொருள் வரிசை ஒன்றிற்கு ஒரு

1. 1866) L.R. 1 Ex. 109

தீக்குச்சி எப்படியோ, அப்படி ஒரு முனைவுக்கு ஒரு ஏற்பு அமைகிறது." ஒரு ஏற்பின் இன்றியமையாத கூறுகளை எடுத்துக் கூறி விளக்கவுரை தருக.)

(அல்லது)

"Acceptance to offer is what a lighted match is to a train of gun power. It produces something which cannot be recalled or undone." - Comment. ("ஒரு வெடி மருந்து தொடருக்குக் கொளுத்தப் பட்ட தீக்குச்சி எப்படியோ அப்படியே ஒரு முனைவுக்கு ஏற்பு என்பதாகும். அது திரும்ப அழைக்க முடியாத அல்லது திரும்பச் செய்யவியலாத நிகழ்வு ஒன்றை விளைவிக்கிறது"– விமர்சிக்க.)

முன்னுரை :

"ஒரு வெடி மருந்து தொடருக்குக் கொளுத்தப்பட்ட தீக்குச்சி எப்படியோ அப்படியே ஒரு முனைவுக்கு ஏற்பு என்பதாகும்" என்று 'ஏற்பின்' முக்கியத்துவத்தை அறிஞர் சர் வில்லியம் ஆன்சன் (Sir William Anson) அவர்கள் நயம்பட உவமையுடன் கூறுகிறார். இதன் விளக்கம் வருமாறு :

விளக்கம் :

மேற்கண்ட கூற்றின்படி, எரியும் தீக்குச்சி (ஏற்பு), வெடிமருந்தில் (முனைவு) பற்றி வெடித்துச் சிதறி, சாம்பலாக (ஒப்பந்தம்) மாறி விடுகிறது. அந்தச் சாம்பலை மீண்டும் வெடிமருந்தாக மாற்ற முடியாது. ஒரு முறை ஏற்பு செய்து விட்டால், அதனை மீண்டும் திரும்பப் பெற முடியாது, என்பது இதன் பொருளாகும்.

மேற்படி கூற்று இந்தியச் சட்டத்திற்கு பொருந்துமா ?

ஆங்கிலச் சட்டப்படி முனைவு மட்டுமே திரும்பப் பெறப்படத் தக்கது. ஏற்பானது (அறிஞர் ஆன்சனின் கூற்றுப்படி) திரும்பப் பெறப்படத் தக்கதல்ல. ஆனால் இந்தியச் சட்டப்படி முனைவு, ஏற்பு ஆகிய இரண்டையுமே திரும்பப் பெறலாம். (இந்திய ஒப்பந்தச் சட்டம் பிரிவு 5–ன்படி). ஆகவே அறிஞர் ஆன்சனின் மேற்படி உவமைக் கூற்று ஆங்கிலச் சட்டத்திற்கு மட்டுமே பொருந்தும். இந்தியச் சட்டத்திற்கு முழுமையாக பொருந்தாது. (ஒரு ஏற்பு திரும்பப் பெறப்படுதல் குறித்து பிரிவு 5 கூறும் வகைமுறைகளை அடுத்த அத்தியாயத்தில் கண்டு தேர்வினில் எழுதிடுக.)

13. "A mere mental acceptance not evidenced by words or conduct is, in the eye of law, no acceptance" - Explain this statement by giving examples. (சொற்களாலும் செயலாலும்

சான்றளிக்கப்படாத வெறும் மனத்தளவான ஏற்பு, சட்டத்தின் பார்வையில், ஒரு ஏற்பாகாது". இக்கூற்றை உதாரணம் காட்டி விளக்குக).

(அல்லது)

"Silence does not amount to acceptance" - Discuss. ("மௌனமாக இருத்தல் ஏற்பாகாது" – விவாதி).

முன்னுரை :

ஒரு முனைவு எப்படி முனைவேற்பாளருக்கு அறிவிக்கப்பட வேண்டுமோ, அவ்வாறே 'ஏற்பும்' முனைவு செய்தவருக்கு அறிவிக்கப்பட வேண்டும் (Acceptance must be communicated) என, இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 7(2) கூறுகிறது. அதாவது, சொற்களினாலோ அல்லது செயல்களினாலோ அல்லாமல் வெறுமனே மனத்தளவில் மட்டும் முனைவை ஏற்றுக் கொண்டு, அதை முனைவு செய்தவருக்கு அறிவிக்காமல் இருந்தால், அது சட்டத்தின் பார்வையில், ஒரு செல்லத்தக்க ஏற்பாகாது. ஏனெனில் ஒரு மனிதனின் மனநிலையை நீதிமன்றம் சாதாரண நிலையில் தெரிந்து கொள்ள முடியாது. ஆகவே, முனைவு ஒன்றிற்கு மௌனம் (Silence) சாதிக்கப்பட்டால், அதனை 'ஏற்பு' எனக் கருத இடமில்லை.

ஏற்பு எம்முறையில் அறிவிக்கப்பட வேண்டும்?

ஒரு முனைவு எம்முறையில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று அம்முனைவில் குறிப்பிடப்படாதிருப்பின், அதற்குரிய ஏற்பை வழக்கமான அல்லது நியாயமான முறை எதன்படியும் முனைவாளருக்கு அறிவிக்கலாம். ஒரு முனைவை எம்முறையில் ஏற்றுக் கொள்தல் வேண்டும் என்று அம்முனைவில் குறிப்பிடப் பட்டிருந்து, அத்தகு முறையில் ஏற்பு செய்யப்படவில்லையானால், அம்முனைவில் குறிப்பிட்ட முறைப்படிதான் முனைவை ஏற்பு செய்தல் வேண்டும்; வேறு முறையில் அல்ல என தனக்கு ஏற்பு அறிவிக்கப்பட்ட பிறகு ஒரு நியாயமான காலத்திற்குள், முனைவாளர் முனைவேற்பாளரை வலியுறுத்த வேண்டும். இவ்வாறு வலியுறுத்த வில்லையானால், முனைவாளர் அம்முனைவேற்பை ஏற்றுக் கொண்டவராகிறார்,[1] என இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 7(2)–ஆனது குறிப்பிடுகிறது.

1. In order to convert a proposal into a promise, the acceptance must be expressed in some usual and reasonable manner, unless the proposal prescribes the manner in which it is to be accepted. If the proposal prescribes a manner in which it is to be accepted, and the acceptance is not made in such manner, the proposer may, within a reasonable time after the acceptance is communicated to him, insist that the proposal shall be accepted in the prescribed manner, and not otherwise; but if fails to do so, he accepts the accetance - **Section 7(2) of the Indian Contract Act, 1872.**

Brogden v. Metropolitan Railway Co.,[1]

இவ்வழக்கில், நிலக்கரி வழங்குவதற்கான வரைவு உடன்பாட்டில் (draft agreement) இரயில்வே நிறுவன மேலாளர், "அங்கீகரிக்கப்பட்டது" (approved) என்று எழுதி, அது குறித்து முறையான ஒப்பந்தம் ஒன்றை வரையும் பொருட்டு நிறுவன வழக்குரைஞருக்கு அனுப்புவதற்காக தன் மேஜையறையிலேயே வைத்துக் கொண்டார்; வழக்குரைஞருக்கு அனுப்பவேயில்லை. எனவே இங்கு ஏற்பானது முனைவாளருக்கு அறிவிக்கப்படவில்லை என்றும், இதனால் எவ்வித செல்லத்தக்க ஒப்பந்தமும் எழவில்லை என்றும் நீதிமன்றம் தீர்ப்பு கூறியது.

Powell v. Lee[2]

A என்பவர் ஒரு உயர் நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் பதவிக்கு மனு செய்து இருந்தார். அப்பள்ளியின் நிர்வாகக்குழு A என்பவரை நியமிப்பதென முடிவு செய்தது. குழு எடுத்த மேற்படி முடிவை, அக்குழுவின் உறுப்பினர் ஒருவர் A–யிடம் பேச்சுவாக்கில் தெரிவித்தார். ஆனால், இந்நியமனம் அதிகாரப்பூர்வமாக A–க்கு அறிவிக்கப்படவில்லை. பின்னிட்டு அக்குழு அப்பதவி நியமனத்தை இரத்து செய்தது. எனவே A, நிர்வாகக் குழுவின் மீது வழக்கு தொடர்ந்தார். ஆனால், மேற்படி A என்பவருக்கும், குழுவுக்கும் இடையே முடிவான ஒப்பந்தம் ஏதும் உண்டாகவில்லை எனக் கூறி, A–யின் வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இவ்வழக்கில் 'ஏற்பானது' முனைவாளருக்கு (A என்பவருக்கு) அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

அறிவிக்கும் முறை (Mode of Communication) :

ஏற்பை ஓர் குறிப்பிட்ட முறையில்தான் அறிவிக்க வேண்டுமென்பதில்லை. ஒப்பந்தம் செய்து கொள்ளும் நபர்களின் விருப்பத்திற்கிணங்க எம்முறையில் வேண்டுமானாலும் எழுத்து மூலமாகவோ, அல்லது பேச்சு மூலமாகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட செய்கை மூலமாகவோ ஏற்பைத் தெரிவிக்கலாம். உதாரணமாக ஏலம் விடுபவர் ஏலத்தை ஏற்றுக் கொண்டதற்கு அறிகுறியாக சுத்தியலை, ஏல மேஜையில் அடித்தால் அது சட்டப்படியான ஏற்பாகும்.

ஒருவரின் மௌனம் ஏற்பாகுமா? (Does silence amount to acceptance?)

ஒருவரின் மௌனத்தை (Silence), முனைவிற்கான ஏற்பாகக் கொள்ள வியலாது. இந்நிலைப்பாட்டை பின்வரும் முக்கிய வழக்கு ஒன்று விளக்குகிறது.

1. (1877) 2 A.C. 666
2. (1908) 99 L.T. 284

Felthouse v. Bindley[1]

A என்பவர் B என்பவரின் குதிரையை 30 பவுண்டு பணத்திற்கு வாங்குவதற்கான தன் முனைவினைத் தெரிவித்தார். மேலும் 'இது பற்றி நீ ஒன்றும் சொல்லாமல் இருந்தால் 30 பவுண்டு விலைக்கு குதிரை என்னுடையதாகி விட்டதாக நான் கருதுவேன்' என்ற தம் முனைவை அதில் வெளியிட்டார். B என்பவர் அதற்குப் பதில் அளிக்கவில்லை. ஆனால் தம் ஏலதாரரான (Auctioner) C என்பவரிடம் குதிரையை ஏலம் விடத்தேவையில்லை என்று கேட்டுக் கொண்டார். எனினும் C என்பவர் தவறுதலாக குதிரையினை ஏலம் விட்டுவிட்டார். A என்பவர் குதிரையினை ஏலம் விட்டதற்காக வழக்குத் தொடர்ந்தார். மேற்படி வழக்கில் B என்பவரின் மௌனத்தை ஏற்பாகக் கருதுவதற்கில்லை என்றும், அறிவிக்கப்படாத ஏற்புடன் கூடிய ஒப்பந்தத்தை முடிந்த ஒன்றாகக் கருத முடியாது என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

'மௌனம் என்பது ஏற்புக்கு அடையாளமல்ல' என்பதற்கான விதிவிலக்குகள் :

1. முன்பே ஏற்பட்டுள்ள நடவடிக்கைகள் மூலம், ஏற்பாளர் தனது மௌனம் ஏற்பாகவே கருதப்பட வேண்டும் என்பதை முனைவாளருக்கு உணர்த்தியிருந்தால்;

2. முனைவாளர், ஏற்பாளர் ஏற்பை அறிவிக்க வேண்டியதில்லை என்று உணர்த்தியிருந்தால்; இது பெரும்பாலும் வழக்கின் சூழ்நிலையைப் பொறுத்து அறியப்படும்.

3. முனைவாளர், முனைவில் சில வரையறைகளைக் கூறியிருந்து, அவற்றை எவ்வித அறிவிப்பும், ஏற்புக்கான தகவல் எதும் இல்லாமலும் நிறைவேற்றி இருந்தால்; **(Carlill v. Carbolic Smoke Ball Co.,** வழக்கின் பொருண்மைகளை இங்கு ஒப்பு நோக்கல் நலம்.)

4. முனைவேற்பாளருக்கு முனைவை மறுத்தொழிக்க நியாயமான சந்தர்ப்பம் இருந்தும், முனைவின் பயனை அனுபவித்திருந்தால்.

உதாரணமாக A என்பவர் 'கதிர்' நாளிதழின் வாசகர். அவர் அதற்கு ஓராண்டு சந்தா தொகை செலுத்தியிருந்தார். ஓராண்டு கழிந்த பின்னும், மேலும் இரண்டாண்டுகளுக்கு நாளிதழை 'கதிர்' நிறுவனம் அவருக்கு அனுப்பியிருந்தது. A அதனைப் பெற்றுப் பயனுற்று வந்தார். 'கதிர்' நாளிதழ் அனுப்புவதை நிறுத்த A-க்கு நியாயமான சந்தர்ப்பம் இருந்ததும், அவர் அதனைச் செய்யவில்லை. எனவே, அவர் இரண்டாண்டு சந்தாத் தொகையை செலுத்த வேண்டியவராகிறார்.

1. (1862) 142 E.R. 1037 : 132 R.R. 784

7

முனைவு, ஏற்பு ஆகியவற்றை அறிவித்தல் (தெரியப்படுத்தல்) மற்றும் திரும்பப் பெறுதல்
[Communication and Revocation of Offer and Acceptance]

14. (a) How is a proposal communicated ? State the effect of a Counter-Offer.

(b) State the rules regarding Communication of acceptance and communication of revocation.

(அ) 'புரிவுரை' எவ்வாறு தெரிவிக்கப்படுகிறது ? ஒரு எதிர்முனைவின் விளைவுகளைக் கூறு.

(ஆ) ஏற்பு பற்றி தெரிவித்தல் மற்றும் மறுத்தளிப்பு பற்றி தெரிவித்தல் குறித்துள்ள விதிகளைக் கூறுக.

(அல்லது)

Explain the rules relating to Communication and revocation of an offer and acceptance. (முனைவு, ஏற்பு ஆகியவற்றை தெரிவித்தல், திரும்பப் பெறுதல் குறித்த விதிகளை விளக்குக.)

(அல்லது)

"The idea of mutual assent is at the root of contract and is crystalised into the language of offer and acceptance". Explain with reference to the manner of accepting an offer and communicating the same. ("பரஸ்பர இசைவு எனும் கருத்து ஒப்பந்தத்தின் அடிவேறாக உள்ளது மற்றும் அது முனைவு மற்றும் ஏற்பின் மொழி நடையினால் தெளிவாக்கப்படுகிறது". முனைவை ஏற்றுக் கொள்ளும் முறை மற்றும் அதனை அறிவித்தல் ஆகியவற்றை தொடர்புபடுத்தி விளக்குக.)

(அல்லது)

When in a contract through post concluded? Refer to leading cases and briefly state the statutory provisions in this regard. (அஞ்சல் வாயிலாக ஒரு ஒப்பந்தம் எப்பொழுது முடிவுறுகிறது? இது குறித்த சட்ட வகைமுறைகளை முக்கிய வழக்குகளுடன் சுருக்கமாகக் குறிப்பிடுக.)

(அல்லது)

When is a communication complete in respect of (a) Proposal (b) Acceptance (c) Revocation. [(அ) முனைவு (ஆ) ஏற்பு (இ) திரும்பப் பெறுதல் ஆகியவை தொடர்பான அறிவித்தல் எப்பொழுது முடிவுறுகிறது?]

முன்னுரை :

இரு தரப்பினர்களிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட வேண்டுமெனில், ஒப்பந்தச் செயல் அல்லது செயல் தவிர்ப்பு குறித்து, அவ்விரு தரப்பினர்களுக்கு இடையேயும் பரஸ்பர இசைவு இருத்தல் வேண்டும். இந்த பரஸ்பர இசைவு எவ்வாறு பெறப் படுகிறது? ஒரு தரப்பினர் ஒரு செயலைச் செய்ய அல்லது செய்யாமல் இருக்க மற்றொருவரின் இசைவைப் பெற வேண்டி முனைவு செய்கிறார். அம்மற்றொருவர் அம்முனைவை ஏற்பு செய்தால், அங்கு ஒரு செல்லத்தக்க ஒப்பந்தம் உருவாகிறது. எனவே மேற்கண்ட 'முனைவும்' அதன் 'ஏற்பும்' முழுமை பெற வேண்டுமானால் அது பரஸ்பரம் மேற்கண்ட இரு தரப்பினர்கள் இடையேயும் அறிவிக்கப்படல் (Communication) வேண்டும். முனைவு அறிவிக்கப் படவில்லையானால், அதை 'ஏற்பு' செய்ய முடியாது. மேலும் முனைவை அறியாமல் ஏற்பதும் ஒரு செல்லத்தக்க ஏற்பாகாது. அவ்வித 'ஏற்பு' முனைவேற்பாளருக்கு எவ்வித உரிமையையும் வழங்கிடாது. அதுபோல் பொதுவாக ஏற்பு, முனைவாளருக்கு அறிவிக்கப்படாமல் ஒப்பந்தமும் எழாது. இவ்வாறு அறிவித்தல் குறித்த விதிகள் வருமாறு.

அறிவித்தலின் விதிகள் (Rules relating to Communication) (பிரிவு 4) :

(அ) முனைவை அறிவித்தல் (Communication of an offer):

எவருக்கு முனைவு செய்யப்படுகிறதோ, அவரது அறிவுக்கு எட்டிய பின், முனைவின் அறிவிப்பு முடிவுறுகிறது (பிரிவு 4–ன் கீழான முதற்பத்தி). அதாவது முனைவைத் தாங்கிய கடிதம் ஏற்பாளரை அடைந்தவுடன் முனைவின் அறிவிப்பு முடிகிறது.

எடுத்துக்காட்டுகள் :

1. 'A' தன்னுடைய வீட்டை ரூ. 1,00,000/–க்கு 'B'க்கு விற்பனை செய்ய முனைவு செய்கிறார். இதற்கான கடிதம் மே 10–ஆம் தேதி அஞ்சலில் இடப்படுகிறது. அது மே 12–ஆம் தேதி 'B'–யை அடைகிறதெனில், முனைவின் அறிவித்தல் மே 12–ஆம் தேதி முடிவுறுகிறது.

2. 'A'தன் வீட்டை ரூ. 1,00,000/–க்கு 'B'க்கு விற்க முனைவு செய்து கடிதம் அனுப்புகிறார். அக்கடிதம் B-யை அடையவே இல்லை. எனவே இங்கு முனைவின் அறிவிப்பு முடிவுறவில்லை.

(ஆ) ஏற்பை அறிவித்தல் (Communication of acceptance):

(i) முனைவாளருக்கு எதிராக ஏற்பின் அறிவித்தல் (Communication of acceptance as against the proposer): கடிதம் அனுப்புகை முறையில் ஏற்பாளரால் இடப்பட்டு, அவரது சக்திக்கு அப்பாற்பட்டதானவுடன் ஏற்பின் அறிவித்தல் முடிகிறது.

(ii) முனைவேற்பாளருக்கு எதிராக ஏற்பின் அறிவித்தல் (Communication of acceptance as against the acceptor): ஏற்பானது முனைவாளரின் அறிவுக்கு எட்டியபின் முடிகிறது. (பிரிவு 4–ன் கீழான இரண்டாம் பத்தி)

எடுத்துக்காட்டுகள் :

1. 'A' தன்னுடைய வீட்டை ரூ. 1,00,000/–க்கு 'B'க்கு விற்பனை செய்ய முனைவு செய்கிறார். 'B' தனது ஏற்பை அறிவித்து 'A'-க்கு கடிதம் அனுப்புகிறார். இங்கு அக்கடிதம் 'B'–யால் அஞ்சலில் இடப்பட்டவுடன், 'A'–க்கு எதிராக (அதாவது முனைவாளருக்கு எதிராக) ஏற்பு முடிவுறுகிறது. அதுபோல், அக்கடிதம் 'A'–யால் பெறப்பட்டவுடன் 'B'-க்கு எதிராக (அதாவது முனைவேற்பாளருக்கு எதிராக) ஏற்பு முடிவுறுகிறது.

2. 'A' தனது வீட்டை 'B'–க்கு விற்றிட சனவரி 1–ஆம் தேதி கடிதம் அனுப்புகிறார். 'B' அக்கடிதத்தை சனவரி 2–ஆம் தேதி மதியம் 1 மணிக்கு பெறுகிறார். 'B' ஏற்பிற்கான கடிதத்தை சனவரி 3–ஆம் தேதி காலை 11 மணிக்கு அஞ்சலில் இடுகிறார். இக்கடிதம் 'A' வை சனவரி 4–ஆம் தேதி மாலை 4 மணிக்கு அடைகிறது.

இந்த தேர்வில் :

(i) முனைவின் அறிவித்தல் சனவரி 2–ஆம் தேதி மதியம் 1 மணிக்கு முடிவுறுகிறது (முழுமையடைகிறது).

(ii) ஏற்பின் அறிவித்தல் 'A'–க்கு எதிராக, சனவரி 3–ஆம் தேதி, காலை 11 மணிக்கு ஏற்புக் கடிதம் முனைவேற்பாளரால் அஞ்சலிலிடப்பட்டு, அவரது சக்திக்கு அப்பாற்பட்டதாகிவிட்டதால் முடிவுறுகிறது.

(iii) ஏற்பின் அறிவித்தல் 'B'–க்கு எதிராக ஏற்புக் கடிதம் 'A'–யை வந்தடையும் சனவரி 4–ஆம் தேதி மாலை 4 மணிக்கு முடிவுறுகிறது.

ஒரு எதிர் முனைவின் விளைவு (Effect of Counter-Offer):

ஒரு முனைவேற்பாளர் வரையறையுடன் கூடிய ஏற்பு செய்தாலோ அல்லது புதிய வரையறைகளை ஏற்பில் புகுத்தி இருந்தாலே, அவரது முனைவு ஒரு ஒப்பந்தமாக முடிவுறாது. மாறாக, அது எதிர்முனைவாகவே (Counter-offer) கருதப் படும். ஆகவே, ஒரு எதிர்முனைவு, ஒரு முனைவினைத் திரும்பப் பெற்றதாக்கி விடுகிறது. பொதுவாக, இத்தகு எதிர் முனைவினை ஏற்பது முனைவாளரின் விருப்பத்தினைப் பொறுத்ததாகும்.

எடுத்துக்காட்டு :

வீடு ஒன்றினை ரூ.50,000/–க்கு விற்பதற்கான முனைவினை ரூ.40,000/–க்கு ஏற்பதாக அறிவித்தால், அது ஏற்பாகாது. மாறாக அது ஒரு எதிர் முனைவாகும். இத்தகு எதிர் முனைவினை ஏற்பது, முனைவு செய்தவரின் விருப்பத்தைப் பொறுத்து அமைவதாகும். ரூ.40,000/–க்கு மேற்படி வீட்டை விற்க முனைவாளர் உடன்படலாம் அல்லது மேற்படி வீட்டை ரூ. 50,000/–த்திற்கு விற்பதற்கு செய்த முனைவினை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

(இ) திரும்பப் பெறுதலை அறிவித்தல் (Communication of Revocation) :

திரும்பப் பெறுதல் என்றால் 'பின் வாங்குதல்' என்பதாகும். அது முனைவைத் திரும்பப் பெறுதலாகவோ, ஏற்பைத் திரும்பப் பெறுதலாகவோ இருக்கலாம்.

திரும்பப் பெறுதலின் அறிவித்தல் (i) 'திரும்பப் பெறுதலை' செய்பவருக்கு எதிராக 'திரும்பப் பெறுதல்' கடிதம் அனுப்புகை முறையில் அஞ்சலிலிடப்பட்டு, அவரது சக்திக்கு அப்பாற்பட்டதாக ஆனவுடன் முடிவுறுகிறது. (ii) 'திரும்பப் பெறுதல்' யாருக்குச் செய்யப்படுகிறதோ அவருக்கு எதிராக, அவருடைய அறிவுக்கு எட்டியவுடன் முடிவுறுகிறது. **(பிரிவு 4–ன் கீழான மூன்றாம் பத்தி).**

எடுத்துக்காட்டுகள் :

முனைவைத் திரும்பப் பெறுதலுக்கான எடுத்துக்காட்டு: 'A' என்பவர் தனது வீட்டை 'B' என்பவருக்கு விற்க முனைந்து மார்ச்சு 3–ஆம் தேதியில் கடிதம் அனுப்புகிறார். 'B' அக்கடிதத்தை மார்ச்சு 5–ஆம் தேதி பெறுகிறார். 'A' தன் முனைவை மார்ச்சு 4–ஆம் தேதியில் அஞ்சலிலிடப்பட்ட கடிதத்தின் வாயிலாக திரும்பப் பெறுகிறார். இக்கடிதம் 'B'–யை மார்ச்சு 6–ஆம் தேதியில் வந்தடைகிறது. இங்கு முனைவைத் திரும்பப் பெறுதல் 'A'–க்கு எதிராக மார்ச்சு 4–ஆம் தேதியிலும், 'B'–க்கு எதிராக மார்ச்சு 6–ஆம் தேதியிலும் முடிவுறுகிறது.

ஏற்பைத் திரும்பப் பெறுதலுக்கான எடுத்துக்காட்டு: மேற்சொன்ன எடுத்துக்காட்டில், 'A' செய்த முனைவை 'B' என்பவர் மார்ச்சு 6–ஆம் தேதியில் ஏற்று 'A'–க்கு கடிதம் அனுப்புகிறார் என்றும், அக்கடிதம் 'B'–யை மார்ச்சு 8–ஆம் தேதியில் வந்தடைவதாகவும் கொள்வோம். மார்ச்சு 7–ஆம் தேதியில் 'B' தன் ஏற்பை திரும்பப் பெற்று கடிதம் அனுப்பி, அக்கடிதம் 'A'–யை மார்ச்சு 9–ஆம் தேதி வந்தடைகிறது. இங்கு ஏற்பைத் திரும்பப் பெறுதல் 'B'-க்கு எதிராக 7–ஆம் தேதியிலும், 'A'–க்கு எதிராக 9–ஆம் தேதியிலும் முடிவுறுகிறது.

திரும்பப் பெறல் குறித்த நடைமுறை விதிகள் (பிரிவு 5) :

(அ) முனைவைத் திரும்பப் பெறுதல் (Revocation of Offer):

பிரிவு 5–ன் கீழான முதற் பத்தி இது குறித்து குறிப்பிடுகிறது. அதனை விரிவாக அடுத்த வினாவின் விடையில் 'முனைவு முடிவுறும் பல்வேறு சூழ்நிலைகள்' எனும் தலைப்பின் கீழ்க் காண்க. இவ்வினாவிற்கு தேர்வில் சுருக்கமாக எழுதுக.

(ஆ) ஏற்பைத் திரும்பப் பெறுதல் (Revocation of Acceptance):

5–வது பிரிவின் கீழான இரண்டாம் பத்தி, ஏற்பின் அறிவித்தல், ஏற்பாளருக்கு எதிராக முடிவுறும் முன்னர், எந்நேரமும் ஏற்பைத் திரும்பப் பெறலாம்; ஆனால் அதற்குப் பின்னிட்டு முடியாது, என்று கூறுகிறது.

எடுத்துக்காட்டு :

'C' என்பவர் தன் வீட்டை 'D' என்பவருக்கு ரூ. 50,000/–ற்கு விற்க மார்ச்சு முதல் தேதி அஞ்சல் மூலம் முனைந்தார். 'D' இதை ஏற்பு செய்து மார்ச்சு 5–ஆம் தேதி கடிதம் அனுப்பினார். அக்கடிதம் 'C'–யை மார்ச்சு 7–ம் நாள் மாலை 4 மணிக்கு அடைந்தது. 'D' தன் ஏற்பை மார்ச்சு 7–ம் நாள் மாலை 4 மணி வரை திரும்பப் பெறலாம். அதன் பின் முடியாது.

அஞ்சல் வழி ஒப்பந்தங்களில் ஆங்கிலச் சட்டத்திற்கும் இந்தியச் சட்டத்திற்கும் இடையே உள்ள ஒற்றுமைகளும் வேற்றுமைகளும்:

ஆங்கிலச் சட்டம்	இந்தியச் சட்டம்
1. முனைவிற்கான கடிதமானது அஞ்சலில் இடப்பட்டு, அது ஏற்பாளரை அடைந்தவுடன் முனைவு செய்யப்பட்டதாகி விடுகிறது.	இங்கும் அவ்வாறே.
2. அதுபோல் ஏற்புக் கடிதம், அஞ்சலில் இடப்பட்டவுடனேயே முனைவாளர், ஏற்பாளர் இவர்கள் இருவரைப் பொருத்தும் 'ஏற்பு' முடிவுற்று விடுகிறது.	இங்கு இந்தியச் சட்டம் வேறுபடுகிறது. அதாவது ஏற்பினை அஞ்சலில் சேர்த்தவுடன் முனைவாளரைப் பொறுத்து மட்டுமே ஏற்பு முடிவுற்று விடுகிறது. ஏற்பாளரை பொறுத்து ஏற்பு முனைவாளரின் அறிவுக்கு எட்டிய பின்தான் முடிவுறுகிறது.
3. ஒரு முனைவினை, ஏற்புக் கடிதம் அஞ்சலிடப்படும் நேரத்திற்கு முன்னர் எந்நேரத்திலும் முனைவாளரால் திரும்பப் பெறப்படலாம்.	இங்கும் அவ்வாறே.
4. ஏற்பினை, ஏற்பாளர் அறிவித்துவிட்டால் அதனை திரும்பப் பெற இயலாது. "வெடி மருந்தைத் தாங்கி வரும் புகை வண்டியினை எரியும் நெருப்புக் குச்சி கொண்டு அணுகுவதும் முனைவை ஏற்பதும் ஒன்றே" என்கிறார், ஆன்சன்.	ஏற்பானது, முனைவாளரின் அறிவுக்கு எட்டுவதற்கு முன், அவர் அதனைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம், (தந்தி மூலமாக அல்லது வேறு வழியில்). ஆன்சனின் நெருப்புக்குச்சி உவமைக் கோட்பாடு இங்கு பொருந்தாது.

தொலைபேசி வாயிலாக செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் :

இது பற்றி இந்திய ஒப்பந்தச் சட்டம் எதுவும் கூறாவிட்டாலும், நேரில் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்களுக்குண்டான விதிமுறைகளே இதற்கும் பொருந்தும். பேசிக் கொண்டிருக்கையில் தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப் பட்டால், மீண்டும் முனைவைக் கூறி, ஏற்பைப் பெற்று ஒப்பந்தத்தை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

15. What are the various ways in which an offer comes to an end? Can acceptance be revoked under the English and Indian Law? (முனைவு எந்தெந்த வகைகளில் முடிவு பெறுகிறது? ஆங்கில மற்றும் இந்திய சட்டத்தில் ஏற்பை பின்னழைப்புதல் செய்ய முடியுமா?)

(அல்லது)

"Termination of the offer may come about in a number of ways" (Anson). Enumerate the circumstances in which offer terminates. ("முனைவின் முடிவுறுதல் பல வழிகளில் ஏற்படலாம்" (ஆன்சன்). முனைவு முடிவுறக் கூடிய சூழ்நிலைகளைச் சுட்டிக்காட்டுக.)

முன்னுரை :

முனைவாளர் செய்த முனைவை ஏற்றுக் கொண்டு, முனைவேற்பாளர் தனது முனைவேற்பை முனைவாளருக்கு அறிவித்துவிட்டால், அங்கு ஒரு செல்லத் தக்க ஒப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது. இவ்வாறு முனைவு ஏற்றுக் கொள்ளப்படும் வரை, சட்டக் கடப்பாடுகள் ஏதும் எழுவதில்லை. எனவே முனைவாளர் தனது முனைவை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். அதாவது இங்கு முனைவு முடிவிற்கு வருகிறது. இவ்வாறு முனைவு எச்சூழ்நிலைகளிலெல்லாம் முடிவிற்கு வருகிறது என்பதை அடுத்து வரும் பத்திகள் விளக்குகின்றன.

முனைவு முடிவுறும் பல்வேறு சூழ்நிலைகள் (அல்லது) முனைவைத் திரும்பப் பெறுவதற்கான பல்வேறு சூழ்நிலைகள்:

(1) திரும்பப் பெற்றுக் கொள்ளும் அறிவிப்பை அனுப்புவதன் மூலம் முனைவின் முடிவு (By the communication of notice of revocation of offer): இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **5–வது பிரிவின் கீழான முதற்பத்தி,** ஒரு முனைவை ஏற்றுக் கொண்டதாக அதன் ஏற்பாளர் அறிவிப்பதற்கு முன்னதாக,

முனைவாளருக்கு எதிராக, எந்நேரத்திலும் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படலாம்; ஆனால் அதற்குப் பின்னிட்டு முடியாது, என்று கூறுகிறது.

எடுத்துக்காட்டாக, A என்பவர் தனது காரை B என்பவருக்கு விற்க சனவரி முதல் தேதியில் அஞ்சலிலிடப்பட்ட கடிதத்தின் வாயிலாக முனைகிறார். அக்கடிதத்தை B, 2–ஆம் தேதி பெற்று, 4–ஆம் தேதி 'பகல் 1 மணிக்கு' தனது ஏற்பை கடிதம் மூலம் அனுப்புகிறார். இங்கு A தனது முனைவை 4–ஆம் தேதி பகல் 1 மணிக்கோ, அதற்கு முன்போதான் திரும்பப் பெற முடியும். அந்நேரத்திற்குப் பின் முடியாது.

அதுபோல், **4–வது பிரிவின் கீழான இரண்டாம் பத்தி,** முனைவை ஏற்றுக் கொண்டதற்கான முனைவேற்புக் கடிதம் முனைவேற்பாளரால் அஞ்சலில் இடப்பட்டு, அவரது சக்திக்கு அப்பாற்பட்டதாக ஆனவுடன், முனைவாளருக்கு எதிராக ஏற்பின் அறிவித்தல் முடிவுகிறது. எனவே முனைவேற்புக் கடிதம் முனைவேற்பாளரால் அஞ்சலில் இடப்படுவதற்கு முன்பாக, முனைவாளர் தனது முனைவை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆனால் இவ்வாறு முனைவை திரும்பப் பெற்றுக் கொண்டதை, முனைவாளர் ஒரு அறிவிப்பின் மூலம் எதிர்த்தரப்பினருக்கு (முனைவேற்பாளர்) அறிவிக்க வேண்டும், என்று **பிரிவு 6(1)** குறிப்பிடுகிறது.

Byirne v. Van Tienhoven[1] – எனும் வழக்கில், முனைவை திரும்பப் பெற்றுக் கொண்டதை மறு தரப்பினருக்கு அறிவிக்கவில்லையானால், அது நடைமுறைப்படியும் சட்டப்படியும் முனைவை திரும்பப் பெற்றுக் கொண்டதாகாது என்று **லிண்ட்லே நீதிப்பெருமகனார்** கூறினார். இவ்வழக்கில், தகர தட்டுகளை விற்பனை செய்வதற்காக முனைவு செய்யப்பட்டது. ஆனால் அதனை பின்னிட்டு முனைவாளர் திரும்பப் பெற்றுக் கொள்ள விழைந்தார். ஆனால், அம்முனைவை ஏற்றுக் கொண்டதாக முனைவேற்பாளர் தனது முனைவேற்புக் கடிதத்தை அஞ்சலில் இடுவதற்கு முன்னதாக, முனைவாளர், தனது முனைவை திரும்பப் பெற்றுக் கொண்டதாக முனைவேற்பாளருக்கு அறிவிக்கவில்லை. எனவே முனைவேற்பாளருக்கு இழப்பீடு வழங்க நீதிமன்றம் ஆணையிட்டது.

(2) காலம் முடிவுறுவதால் முனைவின் முடிவு (By the lapse of time): இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **பிரிவு 6(2)–ன்படி,** முனைவை ஏற்றுக் கொள்வதற்கு என ஒரு குறிப்பிட்ட காலத்தை முனைவாளர் அம்முனைவில் வரையறுத்துக் குறிப்பிட்டிருந்து, அக்காலத்திற்குள் அம்முனைவு ஏற்றுக் கொள்ளப்படவில்லை யெனில், அது முடிவுறுகிறது. ஒருக்கால், அவ்வாறு காலம் எதுவும் அம்முனைவில்

1. (1880) 5 C.P.D. 344, 348

வரையறுத்துக் குறிப்பிடப்படவில்லையெனில், அங்கு ஒரு நியாயமான காலத்திற்குள் (reasonable time) முனைவேற்பு அறிவிக்கப்படாத பொழுது, அம்முனைவு முடிவுறுகிறது. மேற்கண்டதில் நியாயமான காலம் எது என்பதை அந்தந்த வழக்கின் பொருண்மைகளை ஆராய்ந்த பிறகே தீர்மானித்தல் வேண்டும்.

Ramsgate Victoria Hotel Co. v. Montefiore[1] – எனும் வழக்கில் ஒருவர் நிறுவனமொன்றின் பங்குகளை வாங்க விழைந்து, அதற்காக 08–06–1864–ஆம் தேதியில் விண்ணப்பம் செய்தார். (அதாவது பங்குகள் வாங்க முனைவு செய்தார்). ஆனால் அவருக்கு பங்குகளை ஒதுக்கிய விபரமடங்கிய கடிதத்தை (அதாவது முனைவேற்புக் கடிதம்), அந்நிறுவனம் 23–11–1864–ஆம் தேதியில் அனுப்பியது. இங்கு, பங்குகள் வேண்டும் என்று செய்யப்பட்ட முனைவை அந்நிறுவனம் ஒரு நியாயமான காலத்திற்குள் ஏற்றுக் கொள்ளாததால், அது திரும்பப் பெறப்பட்டதாகிறது என்றும், மேற்கண்ட முனைவிற்கும், ஏற்பிற்கும் இடையிலான அய்ந்து மாத காலகட்டம், ஒரு நியாயமான காலமாகாது என்றும், எனவே நிறுவனம் ஒதுக்கிய பங்குகளை அவர் பெற்றுக் கொள்ளவேண்டியதில்லை என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

(3) நிபந்தனை ஒன்றை பூர்த்தி செய்யத் தவறுகையினால் முனைவின் முடிவு (By the failure to fulfil a condition): இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 6(3)–ன்படி, முனைவேற்பு செய்வதற்கு முன்நிபந்தனையாக உள்ளதை, முனைவேற்பாளர் பூர்த்தி செய்யத் தவறும் பொழுது, முனைவு முடிவிற்கு வருகிறது. அதாவது முனைவாளர் ஒருவர் தனது முனைவில், சில நிபந்தனைகளை விதித்து, அவற்றை பூர்த்தி செய்த பிறகுதான் ஏற்பு முழுமையடைவதாக குறிப்பிட்டிருக்க லாம். அச்சமயத்தில் அந்நிபந்தனைகளை முனைவேற்பாளர் பூர்த்தி செய்யாமல், அம்முனைவை ஏற்பு செய்ததாக அறிவித்தால், அது செல்லாது. அங்கு முனைவு முடிவுற்றதாகிறது.

Financings Ltd. v. Stimson[2] – எனும் வழக்கில் கார் ஒன்றை வாங்க முனைவு செய்யப்பட்டது. ஆனால் அப்பொழுது கார் வாங்க விழையும் முனைவாளர், நிபந்தனையொன்றை விதித்தார். அதன்படி, கார் வாங்கப்படும் நிமிடம் வரை அப்பொழுதிருந்த அதே நிலையிலேயே அக்காரை வைத்திருக்க வேண்டும் என்பதாகும். ஆனால் பின்னிட்டு அக்கார் சேதமாக்கப்பட்டிருந்தது. இங்கு முனைவாளர் தனது முனைவில் விதித்த நிபந்தனையை, அக்காரை விற்கும் முனைவேற்பாளர் பூர்த்தி செய்யவில்லை. எனவே முனைவு முடிவுற்றதாகிறது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

1. (1866) L.R. 1 Ex. 109
2. (1962) I.W.L.R. 1184

(4) முனைவாளரின் மரணம் அல்லது புத்தி சுவாதீனமின்மையால் முனைவின் முடிவு (By the death or insanity of the proposer): இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 6(4)-ன்படி, ஒரு முனைவை ஏற்றுக் கொள்வதற்கு முன்னதாக, முனைவாளர் மரணமடைந்துவிட்டதாக அல்லது புத்தி சுவாதீன மற்றவராக ஆகிவிட்டதாக முனைவேற்பாளரின் அறிவுக்கு எட்டியிருந்தால், அங்கு முனைவு முடிவுற்றதாகிறது. இங்கு ஒன்றைக் கவனத்தில் கொள்வது மிகவும் அவசியம். அஃதாவது, முனைவாளரின் மரணம் அல்லது புத்தி சுவாதீனமின்மை யால் முனைவு முடிவுற்றதாகிறது என்பதை கூற விழையும் அவரது வாரிசுகள், அச்சங்கதி குறித்து முனைவேற்பாளர் அவரது ஏற்பை அறிவிப்பதற்கு முன்னதாகவே அறிந்து கொண்டிருந்தார் என்பதை மெய்ப்பித்தல் வேண்டும். அப்பொழுதுதான் ஒப்பந்தப் பொறுப்பிலிருந்து விடுபட முடியும்.

எடுத்துக்காட்டாக, பதிப்பக உரிமையாளர் ஒருவர் புத்தகமொன்றை எழுதும்படி, ஒரு நூலாசிரியருக்கு முனைவு செய்கிறார். அதனை ஏற்றுக் கொண்டு அந்நூலாசிரியரும், சம்பந்தப்பட்ட நூலை எழுதி முடித்துவிடுகிறார். ஆனால் இதற்கிடையில் அப்பதிப்பக உரிமையாளர் மரணமடைந்துவிடுகிறார் அல்லது புத்தி சுவாதீனமற்றவராக மாறிவிடுகிறார் என்று வைத்துக் கொள்வோம். இங்கு இச்சங்கதியானது, அந்நூலாசிரியர் தனது முனைவேற்பை அறிவிப்பதற்கு முன்னதாகவே அவரது அறிவிற்கு எட்டிவிட்டது என்பதை அப்பதிப்பக உரிமையாளரின் வாரிசுகள் மெய்ப்பிக்க வேண்டும். அப்பொழுதுதான் முனைவு முடிவுற்றதாகிறது. அவ்வாறு மெய்ப்பிக்கத் தவறினால், அங்கு ஒரு செல்லத்தக்க ஒப்பந்தம் மேற்கண்ட இருவருக்குமிடையே உருவாகியுள்ளது என்று பொருளாகும். இதனால், நூலை எழுதிக் கொடுத்தமைக்கான உரிமைத் தொகையை (Royalty) அந்நூலாசிரியர் அவ்வுரிமையாளரின் சொத்துக்களிலிருந்து பெற வழக்குத் தொடரலாம்.

Dickinson v. Dodds[1] – எனும் வழக்கில் "முனைவொன்றைச் செய்யும் மனிதன் மரணமடைந்துவிட்டால், அவனது முனைவை 'ஏற்பு' செய்தல் இயலாது என்பது சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு நிலைப்பாடாகும்" என்று **நீதிப்பெருமகனார் மெல்லிஷ் (Mollish L.J.)** கருத்துரைக்கிறார்.

(5) யாரிடம் முனைவு செய்யப்பட்டதோ, அவரின் மரணத்தால் முனைவின் முடிவு (By the death of offeree): மேற்கண்டவாறு பல சூழ்நிலைகளிலும் ஒரு முனைவு முடிவிற்கு வருகிறது என்பதை விளக்கமாகக் கூறிய இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 6-ஆம் பிரிவு, யாரிடம் முனைவு செய்யப்பட்டதோ, அவரின் மரணத்தால் முனைவு முடிவுறுகிறது என்பதைக் குறிப்பிடத் தவறிவிட்டது.

1. (1876) 2 Ch.D. at 475

எனினும் **Reynolds v. Atherton**[1]–எனும் வழக்கில் "மரணமடைந்த ஒருவரிடம் முனைவு செய்ய விழையப்படுவதில்லை" என்று நீதிப்பெருமகனார் வாரிங்டன் (Warrington L.J.) அவர்கள் சரியாகச் சுட்டிக்காட்டுகிறார்.

(6) மறுத்தளித்தலின் மூலம் முனைவின் முடிவு (By the rejection of offer): செய்யப்பட்ட முனைவை ஏற்றுக் கொள்ளாமல், மறுப்பதன் வாயிலாகவும் ஒரு முனைவு முடிவிற்கு வருகிறது. இம்மறுப்பு வெளிப்படையானதாகவோ அல்லது உட்கிடையானதாகவோ இருக்கலாம். ஒரு முனைவை, எதிர் முனைவு (counter offer) ஒன்றைச் செய்வதன் வாயிலாகவும் முடிவிற்குக் கொண்டு வரலாம்.

(7) சட்டத்தில் கொண்டு வரப்படும் திருத்தங்களின் காரணமாகவும் ஒரு முனைவு முடிவுறலாம் (By the amendments made in statutes).

(8) விளம்பரம் வாயிலாக செய்யப்பட்ட பொது முனைவு ஒன்றை, அவ்வாறே விளம்பரம் வாயிலாகத் திரும்பப் பெறலாம். எனவே முடிவு முடிவுறுகிறது.

முன்னுரை :

'முனைவின் முடிவுறுகை பல வழிகளிலும் ஏற்படலாம்' என்று அறிஞர் ஆன்சன் கூறிய கூற்று மிகச் சரியானதே என்பதை மேற்கண்டவற்றிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம்.

16. Counter - Offer - Write short notes. (எதிர் முனைவு–சிறு குறிப்பு வரைக.)

(முந்தைய வினாவின் விடையில் காண்க.)

17. State the provisions of the Indian Contract Act for the revocation of offer and acceptance and point out in what respects they differ from the corresponding English Law. (முனைவு மற்றும் ஏற்பினை திரும்பப் பெற்றுக் கொள்ளுதல் குறித்த இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் வகைமுறைகளைக் குறிப்பிட்டு, அவை எந்த வகைகளில் தொடர்புடைய ஆங்கிலச் சட்டத்திலிருந்து வேறுபடுகின்றன என்பதைச் சுட்டிக் காட்டுக.)

(14–ஆம் விடையின் இறுதிப் பகுதியிலும், 15–ஆம் வினாவின் விடையிலும் காண்க.)

1. (1921) 125 LT 690

8

மறுபயன்
[Consideration]

18. Define 'Consideration'. Explain the rules of a valid consideration. ('மறுபயன்' என்பதனை வரையறு. ஒரு செல்லத்தக்க மறுபயன் குறித்த விதிகளை விளக்குக.)

(அல்லது)

"A Promise without consideration is a gift." Salmond - Discuss. ("மறுபயனிலா உறுதியுரை, கொடையாகும்" – சால்மண்ட். விவாதி.)

(அல்லது)

Consideration - Write short notes. (மறுபயன் – சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை :

ஓர் உடன்பாட்டை சட்டப் பிணைப்புள்ள ஒப்பந்தமாக மாற்றுவதற்கு மறுபயன் தேவைப்படுகிறது. மறுபயன் இல்லாத ஒரு உடன்பாடு ஒப்பந்தமாக முடியாது. எனவேதான், இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 10–வது பிரிவு, ஒரு உடன்பாட்டை ஒப்பந்தமாக மாற்ற சட்டப்படியான மறுபயன் தேவை என்று வலியுறுத்துகிறது. அதுபோல், ஒப்பந்தச் சட்டத்தின் 25–வது பிரிவு, "மறுபயனில்லாத உடன்பாடு இல்லா நிலையது (Void)" எனத் திட்டவட்டமாக கூறுகிறது. (எனினும் இதற்கு

சில விதிவிலக்குகள் உண்டு. அவற்றைப் பின்னர் காண்போம்.) ஆகவே உடன்பாட்டினை ஒப்பந்தமாக மாற்றுவது சட்டப்படியான மறுபயனே.

மறுபயன் – விளக்கம் :

'Consideration' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு யோசனை செய்தல், இரக்கம் கொள்ளுதல் எனும் பொருள்கள் உண்டு. ஆனால் அதன் சட்ட மொழியாக்கம் வேறுபட்டது. அஃதாவது, ஒருவர் ஒரு பொருளை அளிப்பதற்கு அல்லது ஓர் செயலைச் செய்வதற்கு ஒப்புக் கொண்டால், அதற்கு பதிலாக அவருக்கு ஏதேனும் ஒன்று திரும்ப கிடைக்க வேண்டும். அவ்விதம் திரும்பக் கிடைக்கும் ஏதேனும் ஒன்றுதான் (something in return) மறுபயன் எனப்படும்.

எடுத்துக்காட்டு : A தன் காரை, B–க்கு ரூ. 50,000/–த்திற்கு விற்க சம்மதிக்கிறார். இதில் தன் காரை B–க்கு விற்பதில் A–க்கு மறுபயனாக ரூ. 50,000/– கிடைக்கிறது. அதற்கு மறுபயனாக B–க்கு A–யிடமிருந்து கார் கிடைக் கிறது. ஆக A–க்கு ரூ.50,000/– மறுபயனாகவும், B-க்கு கார் மறுபயனாகவும் அமைகிறது. மறுபயனாக எதுவும் பெற்றுக் கொள்ளாமல் A தன் காரை B–க்கு கொடுக்க ஒப்புக் கொண்டால் அது கொடை (gift) ஆகும். ஒப்பந்தமாகாது.

மறுபயனுக்கு அறிஞர்கள் கூறும் வரையறை:

"ஒரு சாதாரண ஒப்பந்தத்தை உருவாக்கவும், மறுபயன் அவசியமாகும்" என்று கூறுகிறார் அறிஞர் ஆன்சன்.

"மறுபயன் என்பது மற்றவரின் 'உறுதியுரையை' வாங்கக் கொடுக்கப் படும் விலையாகும். அவ்வாறு விலை கொடுக்கப்பட்ட உறுதியுரையே, சட்டத்தால் செல்லத்தக்கதாகும்," என்று கூறுகிறார் அறிஞர் பெல்லாக்.

மறுபயன் – இந்திய ஒப்பந்தச் சட்டம் தரும் வரையறை:

பிரிவு 2(d)–ன்படி, "உறுதியுரை அளிப்பவரின் விருப்பத்திற்கிணங்க உறுதியுரை ஏற்பவர் அல்லது மற்றவர் ஒரு செயலைச் செய்திருப்பினும், செய்யத் தவிர்த்திருப்பினும் அல்லது செய்தலும், செய்யாது தவிர்த்தலும் அல்லது ஒரு செயலைச் செய்யவோ, செய்யாது தவிர்க்கவோ உறுதியுரையளிப்பின் அத்தகைய அவரின் செயல், அல்லது செயல்தவிர்ப்பு அல்லது உறுதியுரை, உறுதியுரையளிப்ப வரின் உறுதியுரைக்கான மறுபயனாகும்."

ஒரு செல்லத்தக்க மறுபயன் குறித்த விதிகள் :

1. மறுபயன் உறுதியுரை அளிப்பவரின் விருப்பத்தின்

பேரில் அமைய வேண்டும் (Consideration must move at the desire of the Promisor): குறிப்பிட்ட ஒரு செயல் அல்லது செயல் தவிர்ப்பு உறுதியுரைக்கு மறுபயனாக அமைய வேண்டும் எனில், அச்செயல் அல்லது செயல் தவிர்ப்பு உறுதியுரை அளிப்பவரின் விருப்பத்தின் பேரிலேயே செய்யப்பட அல்லது செய்யாமல் தவிர்க்கப்பட வேண்டும். உறுதியுரை ஏற்பவரின் விருப்பத்தின் பேரில் அல்லது தன்னிச்சையானதாக ஒரு செயல் செய்யப்பட்டால் அல்லது ஒரு செயல் செய்யப்படாமல் தவிர்க்கப்பட்டால், அச்செயல் அல்லது செயல் தவிர்ப்பு மறுபயனாக அமையாது.

Durga Prasad v. Baldeo[1]

இவ்வழக்கில் துர்கா பிரசாத் என்பவர் மாவட்ட ஆட்சியாளரின் வேண்டுகோளின்படி சந்தையை சீர்படுத்த பணம் செலவு செய்தார். பால்தியோ என்பவர் அச்சந்தையை பயன்படுத்தி வந்ததால் அதை சீர்படுத்தியதற்காக துர்கா பிரசாத்திற்கு பணம் தருவதாக உறுதியுரை அளித்தார். ஆனால் பணம் தரவில்லை. இவ்வழக்கில் மறுபயன் பால்தியோ விருப்பத்திற்கிணங்க தோன்றவில்லை. மாறாக மாவட்ட ஆட்சியாளரின் வேண்டுகோளுக்கிணங்க ஏற்பட்டது என்று கூறி மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

2. மறுபயன் உறுதியுரை ஏற்பவரிடமிருந்து அல்லது பிற நபரிடமிருந்து தோன்றலாம் (Consideration may move from the promisee or any other person).

3. மறுபயன் கடந்த காலத்தில் செயலானதாகவோ, நிகழ்காலத்தில் செய்யப்படுவதாகவோ அல்லது எதிர் காலத்தில் செய்யப்பட வேண்டியதாகவோ இருக்கலாம் (Consideration may be past, present or future).

4. மறுபயன் போதுமானதாக இருக்க வேண்டியதில்லை (Consideration need not be adequate).

5. மறுபயன் உண்மையானதாக இருக்க வேண்டும் (Consideraton must be real.)

6. மறுபயன் சட்டப்பூர்வமானதாக இருக்க வேண்டும் (Consideration must be lawful): அது சட்ட முரணானதாகவோ (illegal), அறநெறிக்கு முரணானதாகவோ (immoral), பொதுக் கொள்கைக்கு எதிரானதாகவோ (opposed to public policy) இருத்தல் கூடாது.

1. ILR (1880) 3 All. 221

7. மறுபயனற்ற உடன்பாடு இல்லாநிலையது (Agreement without consideration is void).

(மேற்படி விதிகளை விரிவாக அடுத்து வரும் வினாக்களின் விடைகளில் காண்க.)

முடிவுரை:

மறுபயனின் விளக்கம், வரையறை மற்றும் விதிகளை மேற்கண்டவாறு காண்கையில், மறுபயனில்லாமல் ஒரு செல்லத்தக்க ஒப்பந்தம் உருவாகாது என்பதை நாம் அறிகிறோம். மறுபயன் எதையும் பெறாமல் உறுதியுரை ஒன்றைச் செய்தால், அதனை ஒப்பந்தம் என்றழைக்க முடியாது. எனவே அறிஞர் சால்மண்ட் அவர்கள் கூறியபடி, "மறுபயனிலா உறுதியுரை, ஒரு கொடையே" எனும் கூற்று சரியானதே.

19. 'A stranger to consideration cannot sue'. State the exceptions to the said rule and point out the difference between the Indian and the English Law. ("ஒப்பந்தத்தின் மறுபயனுக்கு அயலார் ஒருவர் வழக்குத் தொடர முடியாது" என்ற விதியின் விலக்குகளைக் கூறி, இந்திய மற்றும் ஆங்கிலேய சட்டத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டினைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Show how far the doctrine of privity of consideration is followed in India. Distinguish it from privity of contract. (மறுபயன் சார்புறவுக் கோட்பாடு இந்தியாவில் எவ்வளவில் பின்பற்றப்படுகிறதெனக் காட்டு. ஒப்பந்த சார்புறவிலிருந்து இதனை வேறுபடுத்துக.)

(அல்லது)

"No stranger to consideration can take advantage of a contract although made for his benefit". Discuss with decided cases. Point out the difference between Indian Law and English Law. ("ஒரு ஒப்பந்தம் ஒருவருக்கு பயனளிப்பதற்காக உருவாக்கப்பட்டாலும், அவர் மறுபயனுக்கு அயலவராக இருப்பின் அதன் அனுகூலத்தைப் பெறவியலாது". தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் விவாதி. இந்திய மற்றும் ஆங்கிலச் சட்டத்திற்கு இடையே உள்ள வேறுபாட்டைச் சுட்டிக் காட்டுக.)

மறுபயனுக்கு வெளியார் (Stranger to consideration):

பொதுவாக மறுபயன் உறுதியுரை ஏற்பவரிடமிருந்து தோன்றுதல் வேண்டும்(Consideration may move from the promisee). இதே

வெளியார் எவரிடமிருந்தாவது தோன்றினால், அவர் 'மறுபயனுக்கு வெளியார்' என அழைக்கப்படுவார்.

எடுத்துக்காட்டு : ரகு என்பவர் ஒரு வைத்தியர். அவர் வையாபுரி என்பவருக்கு வைத்தியம் செய்கிறார். ஆனால் அதற்குரிய கட்டணத்தை வாங்க மறுத்து விடுகிறார். எனவே வையாபுரி, தனது வைத்தியரான மேற்படி ரகுவின் குமாரரான காளிதாஸ் என்பவரின் படிப்புச் செலவிற்காக ரூ.500/– தருவதாக உறுதியுரை அளித்தார். வையாபுரியின் உறுதியுரைக்கு காளிதாஸ் எவ்வித மறு பயனையும் தராவிட்டாலும், அவ்வுறுதியுரையை வற்புறுத்தி பணம் கேட்கலாம். இங்கு, மேற்படி மறுபயனுக்கு காளிதாஸ் ஒரு வெளியார் (stranger to consideration). ரகுவின் சேவை, காளிதாஸுக்கு வையாபுரி அளித்த உறுதியுரைக்கு மறுபயனாகத் திகழ்கிறது.

மறுபயனுக்கு வெளியார் வழக்கிட முடியுமா? (Can the stranger to consideration sue ?)

இந்தியச் சட்டபடி :

இந்தியச் சட்டபடி மறுபயனுக்கு வெளியார் வழக்கிட முடியும். ஏனெனில் அவரிடமிருந்து மறுபயன் தோன்ற இந்திய ஒப்பந்தச் சட்டம் அனுமதிக்கிறது. பிரிவு 2 (d)–ன்படி, "உறுதியுரையேற்றவர் அல்லது பிற நபரிடமிருந்து," (the promisee or any other person) மறுபயன் தோன்றலாம் என்ற சொற்றொடர் இதனை உறுதி செய்கிறது. இங்கு உறுதியுரை அளித்தவருக்கும் (Promisor), வெளியாருக்கும் (Stranger) இடையே மறுபயனைப் பொறுத்த வரையில் சட்டத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட உறவு (privity of consideration) நன்றாகவே நிலவுகிறது. இந்த சட்ட உறவின் அடிப்படையில் வெளியார் ஒருவர், உறுதியுரை ஏற்றவருக்கு அளிக்கப்பட்ட உறுதியுரையை வலியுறுத்தி, உறுதியுரை அளித்தவர் மீது வழக்கிடலாம். பின்வரும் இந்திய வழக்கு இதனை மேலும் விளக்கும்.

Venkatchinnaya v. Venkatramaya[1]

இவ்வழக்கில் ஒரு தாய் தன் சொத்துக்களை அவள் மகளுக்கு கொடையாக எழுதிவிட்டார். பதிலுக்கு அம்மகள் தன் தாயின் சகோதரர்களுக்கு (மாமன்கள்) ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட தொகையை அளிப்பதாக உறுதியுரை செய்தார். தாய் இறந்த பின்னர் மாமன்களுக்கு அளிக்க வேண்டிய தொகையை அவள் தரவில்லை. அவள் மீது மாமன்கள் வழக்குத் தொடர்ந்து வெற்றியும் பெற்றார். இங்கு மறுபயனுக்கு அந்த மாமன்கள் வெளியராக இருந்தாலும், வழக்குத்

1. ILR (1881) 4 Mad. 137

தொடர்ந்து நிவாரணம் பெற உரிமை ஏற்பட்டது. மாமன்களுடைய சகோதரி (அதாவது தாய்), அவள் மகளுக்குச் சொத்துக்களை கொடையாகத் தந்தபோது ஏற்பட்ட மறுபயன் அவர்களைக் காப்பாற்றியது. எனவே இந்திய ஒப்பந்தச் சட்டத்தின்படி மறுபயனுக்கு வெளியராக இருப்பவரும் கூட ஒப்பந்தத்தை வலியுறுத்தி வழக்குத் தொடரலாம்; வெற்றி பெறலாம்.

ஆங்கிலச் சட்டப்படி :

ஆங்கிலச் சட்டப்படி மறுபயனுக்கு வெளியார் வழக்கிட முடியாது. ஏனெனில் அவரிடமிருந்து மறுபயன் தோன்ற ஆங்கிலச் சட்டம் அனுமதிப்பதில்லை. மறுபயன், உறுதியுரை ஏற்பவரிடமிருந்து மட்டுந்தான் தோன்ற வேண்டும். இங்கு உறுதியுரை அளித்தவருக்கும் (Promisor), மறுபயனுக்கு வெளியாருக்குமிடையே சட்டத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்த உறவு (Privity of contract) கிடையாது. இது குறித்து எழுந்த முதல் வழக்கில், மறுபயனுக்கு வெளியார் வழக்கிட முடியும் என்று ஒரு வழக்கில் முதலில் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் பின்னிட்டு எழுந்த வழக்கில் மறுபயனுக்கு வெளியார் வழக்கிட முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. அவ்வழக்குகள் வருமாறு.

Dutton v. Poole[1]

இவ்வழக்கில் ஒரு தகப்பனார் தன் மகளின் திருமணத்திற்காக தம் நிலத்தில் உள்ள எல்லா மரங்களையும் வெட்ட ஆரம்பித்தார். ஆனால் அவர் மகன், அவருடைய மகளுக்கு (சகோதரிக்கு) 1000 பவுண்டு தருவதாகவும், மரங்களை வெட்ட வேண்டாம் என்றும் தகப்பனாரைக் கேட்டுக் கொண்டார். அதன்படி தகப்பனாரும் மரங்களை வெட்டவில்லை. ஆனால் சிறிது நாட்களுக்குப் பின் உறுதியுரை அளித்தபடி அவர் மகளுக்கு, மதன் பணம் தரவில்லை. மகள் வழக்குத் தொடுத்தாள். இங்கு ஆங்கிலச் சட்டத்தின்படி மறுபயனுக்கு வெளியார் வழக்குத் தொடர முடியாததால் அந்த உறுதியுரையை வற்புறுத்த முடியாது என்று நீதிமன்றம் கூறியது. எனினும், மேற்படி வழக்கின் பிரத்யேக சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்புரைத்தது. அஃதாவது, யாரிடமிருந்து மறுபயன் தோன்றியதோ அவரும், யாரிடம் உறுதியுரை செய்யப்பட்டதோ அவரும், இரத்த பந்தத்தினாலும், இயல்பான அன்பு மற்றும் பாசத்தினாலும் பிணைக்கப் பட்டுள்ளவர்களாக இருப்பார்களேயானால், யார் வழக்குத் தொடர்ந்தாரோ அவரிடமிருந்து மதிப்புமிக்க மறுபயன் தோன்றுள்ளதாக அனுமானிக்கப்படுகிறது என்றும், இது 'கொள்நிலையான மறுபயன்' (Constructive consideration) என்றும், எனவே மகளுக்கு அத்தொகை கிடைக்கத்தக்கதே என்றும் தீர்ப்புரைத்தது.

1. (1688) 89 E.R. 352

Tweddle v. Atkinson[1]

நாம் முன்கண்ட Dutton v. Poole வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பு, சுமார் இரண்டு நூற்றாண்டுகளுக்கு பின்னிட்டு எழுந்த எந்த வழக்கிலும் பின்பற்றப் படவில்லை. ஆனால் அதன் பின் எழுந்த மேற்படி வழக்கில், அத்தீர்ப்பு வாதியால் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால் அதனை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை.

மேற்படி வழக்கின் பொருண்மைகளின்படி, வாதி, மணமகன் ஆவார். பிரதிவாதி, மணமகளின் தகப்பனார் ஆவார். இங்கு வாதியின் தகப்பனாருக்கும், பிரதிவாதிக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் ஏற்படுகிறது. அதன்படி பிரதிவாதியின் மகளை மணந்து கொள்ள, வாதிக்கு, பிரதிவாதி ஒரு குறிப்பிட்ட தொகையை அளிக்க வேண்டும். ஆனால் உறுதியுரைத்தபடி, பிரதிவாதி அத்தொகையை வாதிக்கு அளிக்கவில்லை. எனவே, வாதி மேற்படி வழக்குத் தொடர்ந்தார். வழக்கு வாதத்தின் பொழுது, **Dutton v. Poole** வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பை ஆதாரமாகச் சுட்டிக் காட்டினார். இங்கு நேரடியான மறுபயன் (Direct consideration) இல்லாது போனாலும், 'கொள்நிலையான மறுபயன்' உள்ளது என்றும், எனவே, தான் மறுபயனுக்கு வெளியாராக இருப்பினும், அத்தொகையை பெற உரிமை உடையவர் என்றும் வாதி வாதம் புரிந்தார். ஆனால், நீதிமன்றம், Dutton v. Poole வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பை ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே வாதியின் வழக்கை தள்ளுபடி செய்தது. அப்பொழுது, நீதிபதி விட்மேன் **(Wightman J.)** அவர்கள், **"ஒரு ஒப்பந்தம் ஒருவருக்கு பயனளிப்பதற்காக உருவாக்கப்பட்டாலும், அவர் மறுபயனுக்கு அயலவராக இருப்பின் அதன் அனுகூலத்தைப் பெறவியலாது என்பது தற்பொழுது நன்கு நிலைநிறுத்தப்பட்ட ஒன்றாக உள்ளது"**, என்று கருத்துரைத்தார்.

"ஒப்பந்தத்தின் மறுபயனுக்கு வெளியார் வழக்கிட முடியாது" எனும் ஆங்கிலச் சட்ட விதிக்கு, விதிவிலக்குகள் (Exceptions) :

1. மாற்றுமுறை ஆவணங்களை (Negotiable Instruments) வலியுறுத்துவோர், மறுபயனை அவர்களே கொடுத்திருக்கத் தேவையில்லை.

2. பொறுப்புரிமை அமைப்பின் (Trust) ஏற்பாடுகளை வற்புறுத்தும் பயனாளி (Benificiary), மறுபயனுக்கு முற்றிலும் வெளியாராக இருக்கலாம்.

3. கடலாண்மைக் காப்பீட்டுச் சட்டத்தில் (Maritime Insurance

1. (1861) 121 E.R. 762 : 14 L.J.R. 610

Act) காப்பீட்டு நிறுவனத்திற்கு, வாடிக்கையாளர் செலுத்த வேண்டிய முனைமத்தைக் (Premium) கட்ட இடைநிலைத்தரகர் (Broker) பொறுப்பேற்க வேண்டிவராகிறார். இயக்கவூர்தி சட்டத்தில் (Motor Vehicles Act) மூன்றாம் நபர்களுக்கேற்படும் விபத்துக்களினின்றும் காப்பாற்றக் காப்பீடு செய்து கொண்டால், காப்பீட்டு நிறுவனம் அம்மூன்றாம் நபர்களுக்குப் பொறுப்பாகிறார்.

20. "A Stranger to contract cannot sue upon it, while a stranger to consideration can"- Discuss with exceptions if any. ("ஒப்பந்தத்திற்கு புறம்பாக உள்ளவர் அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழக்குத் தொடர இயலாது, மறுபயனுக்கு புறம்பானவருக்கு இயலும்" – விதிவிலக்குகள் எவையேனும் இருப்பின் அவைகளுடன் கூர்ந்து ஆராய்க.)

(அல்லது)

"A contract cannot confer any right on one who is not a party to the contract, eventhough the very object of the contract may have been to benefit him" - Discuss. ("ஒரு ஒப்பந்தம், அந்த ஒப்பந்தத்தின் தரப்பினரல்லாத ஒருவர் மீது, அந்த ஒப்பந்தத்தின் நோக்கமே அவருக்கு பயனிக்க வேண்டுமென்பதாக இருந்த போதிலும் கூட, எந்த வித உரிமையையும் வழங்க முடியாது" – விவாதிக்கவும்.)

(அல்லது)

Stranger to contract - Write short notes. (ஒப்பந்தத்திற்கு அயலார் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Exceptions to the Doctrine of Consideration - Write short notes. (மறுபயன் கோட்பாட்டின் விதிவிலக்குகள் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Privity of contract - Write short notes. (ஒப்பந்தச் சார்புறவு – சிறு குறிப்பு வரைக.)

மறுபயனுக்கு வெளியார் (Stranger to Consideration):

பொதுவாக மறுபயன் உறுதியுரை ஏற்பவரிடமிருந்து தோன்றும் (Consideration may move from the promisee). இதே வெளியார் எவரிடமிருந்தாவது தோன்றினால், அவர் 'மறுபயனுக்கு வெளியார்' என அழைக்கப் படுவார். இந்தியச் சட்டப்படி 'மறுபயனுக்கு வெளியார்' (Stranger to Consideration) வழக்குத் தொடர உரிமை படைத்தவர். ஆங்கிலச் சட்டப்படி, அவர் வழக்குத்

தொடர உரிமையுள்ளவர் என நாம் சென்ற வினாவின் விடையில், வழக்குகள் மற்றும் விதிவிலக்குகளுடன் விரிவாகக் கண்டோம்.

ஒப்பந்தத்திற்கு வெளியார் (அல்லது) ஒப்பந்தச் சார்புறவு [Stranger to Contract (or) Privity of Contract]:

ஒப்பந்தத்திற்கு சம்பந்தமில்லாதவர், 'ஒப்பந்தத்திற்கு வெளியார்' ஆவார். அதாவது, இரண்டு நபர்களுக்கிடையே ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கும் பொழுது, அவ்வொப்பந்தம் அவ்விரண்டு நபர்களை மட்டுமே கட்டுப்படுத்துவதாகும். அது மூன்றாம் நபர் ஒருவருக்கு எவ்வுரிமையையும் வழங்காது. அதாவது ஒப்பந்தத்திற்கு சம்பந்தப்பட்ட நபர்களையே, அவ்வொப்பந்தம் கட்டுப்படுத்தும்.

ஒப்பந்தத்திற்கு வெளியார் வழக்கிட முடியுமா?- இந்திய மற்றும் ஆங்கிலச் சட்டத்தின் நிலைப்பாடு (Can the stranger to contract sue ?)

'மறுபயனுக்கு வெளியார் வழக்கிட முடியும்' இந்தியச் சட்டம் கூறுகிறது. அவ்வாறு வழக்கிட முடியாது என்று ஆங்கிலச் சட்டம் வேறுபட்டு நிற்கிறது. ஆனால் ஒரு ஒப்பந்தத்திற்கு வெளியாரைப் பொறுத்தவரை, இந்தியச் சட்டமும், ஆங்கிலச் சட்டமும் (இங்கிலாந்து சட்டமும்) ஒற்றுமையாக 'ஒப்பந்தத்திற்கு வெளியார் (Stranger to contract) அவ்வொப்பந்தத்தின் பேரில் வழக்காற்ற முடியாது', என்று ஒரே குரலில் கூறுகின்றன. ஏனெனில் ஒப்பந்தத்தின் வெளியாருக்கும் ஒப்பந்தத் தரப்பாளர்களுக்கும் இடையே "சட்டத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்த உறவு" (Privity of contract) ஏற்படவில்லை. ஒரு ஒப்பந்தம் அதன் தரப்பாளர் தவிர மற்றெவருக்கும் உரிமைகளை வழங்க முடியாது; எவர் மீதும் சட்டமுறைக் கடப்பாடு (legal obligation) ஏற்படுத்த முடியாது. எடுத்துக் காட்டாக A-யும், B-யும் ஒப்பந்தம் செய்து கொண்டால், C, அவ்வொப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டு வழக்குத் தொடர முடியாது.

இதற்கு ஒரு படி மேலாக அறிஞர் ஆன்சன், **"ஒரு ஒப்பந்தம், அந்த ஒப்பந்தத்தின் தரப்பினரல்லாத ஒருவர் மீது, அந்த ஒப்பந்தத்தின் நோக்கமே அவருக்கு பயனிக்க வேண்டுமென்பதாக இருந்த போதிலும் கூட, எந்தவித உரிமையையும் வழங்க முடியாது என்பது ஆங்கிலச் சட்டத்தின் பொது விதி"** என்று கூறுகிறார்.

1. ".... it is a general rule of English law that a contract cannot confer any rights on one who is not a party to the contract, eventhough the very object of the contract may have been to benefit him" - **Anson, Law of Contract, 23rd Edition, pp. 89-90**

Dunlop Pneumatic Tyre Co. v. Selfridge & Co. Ltd.[1]

இது ஒரு மிக முக்கியமான வழக்காகும். இதன் பொருண்மைகளின்படி, டன்லப் டயர் நிறுவனம், டயர் மற்றும் டியூப் உற்பத்தியாளர்கள் ஆகும். அந்நிறுவனம், M/s. Dew & Co. எனும் நிறுவனத்திற்கு ஒரு ஒப்பந்தத்தின் அடிப்படையில் டயர்களையும், டியூப்களையும் விற்றனர். அவ்வொப்பந்தத்தில் கண்ட நிபந்தனைகளின்படி, டன்லப் டயர் நிறுவனம் குறிப்பிட்டுக் கொடுக்கும் விலைக்கும் குறைவாக டயர் மற்றும் டியூப்களை மற்ற சிறு வணிகர்களுக்கு (Sub-dealers) மேற்படி M/s. Dew & Co. நிறுவனம் விற்கக் கூடாது; அவ்வாறு விற்றால், விற்கப்படும் ஒவ்வொரு டயர் மற்றும் டியூபிற்கும் அய்ந்து பவுண்டு தொகையை இழப்பீடாக அளிக்க வேண்டும். மேற்படி M/s. Dew & Co. நிறுவனம், அது வாங்கிய டயர் மற்றும் டியூப்களை Selfridge & Co. Ltd. எனும் நிறுவனத்திற்கு மேற்கண்ட அதே நிபந்தனைகளை (அதாவது டன்லப் நிறுவனம் குறிப்பிட்டுக் கொடுத்த விலைக்கும் குறைவாக விற்கக் கூடாது. அவ்வாறு விற்றால் இழப்பீடு கொடுக்க வேண்டும் எனும் அதே நிபந்தனைகள்) விதித்து ஒப்பந்தம் செய்து கொண்டு விற்றது. ஆனால் மேற்படி Selfridge & Co. Ltd. நிறுவனம், டன்லப் டயர் நிறுவனம் குறிப்பிட்ட விலைக்கும் குறைவாக டயர் மற்றும் டியூப்களை மற்றொருவருக்கு விற்றது. இதை அறிந்து கொண்ட மேற்படி டன்லப் டயர் நிறுவனம், ஒப்பந்த மீறுகைக்காக இழப்பீடு கோரி மேற்படி Selfridge & Co. Ltd. நிறுவனம் மீது வழக்கிட்டது. ஆனால் வழக்கை ஆராய்ந்த நீதிமன்றம், இங்கு டன்லப் டயர் நிறுவனத்திற்கும் மேற்படி Selfridge & Co. Ltd. நிறுவனத்திற்கும் இடையே எவ்வித ஒப்பந்தத் தொடர்பும் இல்லை; அந்நிறுவனம் M/s. Dew & Co. நிறுவனத்துடன்தான் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. எனவே டன்லப் டயர் நிறுவனம், ஒப்பந்தத்திற்கு வெளியார் ஆகும். அதற்கு Selfridge & Co. Ltd. நிறுவனத்தின் மீது ஒப்பந்த மீறுகைக்காக வழக்கிட உரிமையில்லை, என்று தீர்ப்புரைத்து வழக்கை தள்ளுபடி செய்துவிட்டது.

மேலும் ஆங்கிலச் சட்டத்தின்படி, மறுபயன் என்பது, உறுதியுரை ஏற்பவரிடமிருந்து தோன்ற வேண்டும் (Consideration must move from the promisee) என்றும், ஆனால் இங்கு அம்மறுபயன், அவ்வாறு டன்லப் டயர் நிறுவனத்திடமிருந்து தோன்றி மேற்படி Selfridge & Co. Ltd. நிறுவனத்திற்குச் செல்லவில்லை என்றும் நீதிமன்றம் கூறியது. (அதாவது டன்லப் டயர் நிறுவனம், டயர் அல்லது டியூப் (மறுபயன்) எதனையும் நேரடியாக Selfridge & Co. Ltd. நிறுவனத்திற்கு விற்கவில்லை). **(இவ்வழக்கை 'மறுபயனுக்கு வெளியார் வழக்கிட முடியாது' எனும் சென்ற வினாவின் விடைக்கும் சுட்டிக்காட்ட வேண்டும்.)**

1. (1915) A.C. 847

விதிவிலக்குகள் (Exceptions) :

'ஒப்பந்தத்திற்கு வெளியார், அவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் வழக்குத் தொடர முடியாது' எனும் விதிக்கு பின்வரும் விதிவிலக்குகள் உள்ளன.

1. பொறுப்புரிமையின் பயனாளி (Benificiary of a Trust): ஒரு பொறுப்புரிமை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டால், அதன் பயனாளி அப்பொறுப்புரிமை ஒப்பந்தத்தின் தரப்பாளராக இல்லையெனினும், ஒப்பந்தத்தைச் செயலாக்கலாம்.

2. குடும்ப ஏற்பாடு (Family Settlement): இந்துக் குடும்பங்களில் ஆண்களால் செய்யப்படும் குடும்ப ஏற்பாட்டில் பெண்களுக்கு பலன் ஏற்பட்டிருந்தால், அவ்வேற்பாட்டு ஒப்பந்தத்தில் தரப்பினர்களாக இல்லாத பெண்கள், அதன் மீது வழக்குத் தொடரலாம். பெண்ணின் திருமணம், குடும்பச் சொத்து, பாகப்பிரிவினை முதலியவற்றில் எவருக்கேனும் பயன் ஏற்பட்டிருந்தால் அந்தப் பயனாளி அந்தப் பலனைப் பெற வழக்கு தொடர முடியும்.

Shuppu Ammal v. Subramanyan[1] – எனும் வழக்கில், சொத்துக்களை பாகம் பிரித்ததின் பேரில், இரு சகோதரர்கள் தங்களது தாயின் பராமரிப்புக்கான தொகையை சரிசமமாகப் பிரித்து அளித்து வருவது என அவர்கள் இருவரும் ஒப்பந்தம் செய்து கொண்டனர். இங்கு அவர்களது தாயார் ஒப்பந்தத்திற்கு வெளியார். இருப்பினும், மேற்கண்ட விதிவிலக்கின்படி மேற்படி இரு மகன்களிடத்திலிருந்தும் பராமரிப்புத் தொகையைப் பெற வழக்குத் தொடர முடியும் என மேற்படி வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

Sundararaja v. Lakshmi Ammal[2] – எனும் மற்றொரு வழக்கில், குடும்ப பாகப்பிரிவினையின் பொழுது, சகோதரிக்கு திருமணச் செலவுகளை அளிக்க வேண்டும் என்று சகோதரர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் சகோதரி ஒரு தரப்பினராக இல்லை. எனினும், அச்செலவுகளைப் பெற அவள் வழக்கிட உரிமை படைத்தவள் என்றும், அதனை சகோதரர்கள் அளிக்க வேண்டும் என்றும் சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

3. பொருட்பிணைப் பொறுப்பு (Charge): ஒருவருக்குச் சாதகமாக அவரது நன்மைக்காக சட்ட முறையிலோ, ஒப்பந்தம் வாயிலாகவோ, ஒரு நிலையான சொத்தின் மீது பொருட்பிணைப் பொறுப்பு (Charge) அல்லது வேறு அக்கறை (interest) ஏற்படுத்தியிருந்தால், அவர், ஒப்பந்தத் தரப்பாளராக இல்லாவிடினும் அவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் வழக்கிட்டு, வலியுறுத்தலாம்.

1. (1910) ILR 33 Mad. 238 : 4 I.C. 1083 ; 19 MLJ 739
2. (1915) ILR 38 Mad. 788 : 24 I.C. 943

4. முரண்தடை (Estoppel) அல்லது சட்ட முறைப்படி கடப்பாட்டை (liability) ஒப்புக்கொள்ளுதல் (Acknowledgment): ஒரு ஒப்பந்தத்தின் தரப்பாளர் மூன்றாமவருக்கு (ஒப்பந்தத்தின் வெளியார்க்கு) தனது கடப்பாட்டை ஒப்புக் கொண்டுவிட்டால் அதை அவர் பின்பு மறுக்க முடியாது. இதை முரண்தடை என்பார். அந்த மூன்றாமவர், அவ்வொப்பந்தத்தினை வலியுறுத்திச் செயல்படுத்த வழக்கிடலாம்.

5. ஒப்பந்தம் மீளா உரிமை மாற்றப்பட்டிருந்தால் (Assignment of Contract) : மீளா உரிமை மாற்றுப் பெற்றவர் (Assignee) அவ்வொப் பந்தத்திலுள்ள அவரது பலனைப் பெற, அதன் அடிப்படையில் வழக்கிடலாம்.

6. முகமை ஒப்பந்தம் (Contract of Agency): முகவர் முதல்வருக்காக மற்றவரிடம் செய்து கொண்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில், முதல்வர் அந்த ஒப்பந்தங்களுக்கு வெளியாராயினும் வழக்குத் தொடரலாம். எனினும், முகவர் தனக்குரிய ஒப்பந்தத்தின் வரையறைகளுக்குட்பட்டு செயல் பட்டிருத்தல் வேண்டும்.

7. மாற்றுமுறையாவணங்கள் தொடர்பான சட்டம் (Law relating to Negotiable Instruments): மாற்றுமுறையாவணங்களுக்கு (கடனுறுதிச் சீட்டு, காசோலை மற்றும் மாற்றுச் சீட்டு) வெளியாராக இருக்கும் நபர்களும், அவற்றின் அடிப்படையில் தங்கள் உரிமைகளை வலியுறுத்திச் செயல் படுத்த வழக்கிடலாம்.

எடுத்துக்காட்டாக, A என்பவருக்கு ஐசிஐசிஐ வங்கியில், சேமிப்பு கணக்கு ஒன்று உள்ளது. அவர் ரூ.1000/–த்திற்கு B என்பவர் பெயருக்கு காசோலை ஒன்றை வரைந்து கொடுக்கிறார். B அக்காசோலையை அவ்வங்கியில் முன்னிட்டு பணம் பெற்றுக் கொள்கிறார். இங்கு மேற்படி வங்கிக்கும் B–க்கும் இடையே எவ்வித ஒப்பந்த உறவும் இல்லையென்றாலும், அவ்வங்கி காசோலைத் தொகையை B–க்கு வழங்கப் பொறுப்புடையதாகும். A–யின் கணக்கில் போதுமான தொகை இருந்தும், அவ்வாறு பணம் வழங்கவில்லை என்றால், அவ்வங்கியின் மீது B வழக்கிட்டு, இழப்பீடு பெறலாம்.

21. "Past consideration is no consideration"- Explain. ("முந்தைய மறுபயன் மறுபயனாகாது" – விளக்குக.)

(அல்லது)

Past consideration - Write short notes. (முந்தைய மறுபயன் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Define consideration and examine the statement 'past consideration is no consideration'. (மறுபயன் என்பதை வரையறுத்து 'முந்தைய மறுபயன் மறுபயனாகாது' என்ற கூற்றை ஆராய்க.)

மறுபயன் - இந்திய ஒப்பந்தச் சட்டம் தரும் வரையறை:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 2(d)-ன்படி, "உறுதியுரை அளிப்பவரின் விருப்பத்திற்கிணங்க உறுதியுரை ஏற்பவர் அல்லது மற்றவர் ஒரு செயலைச் செய்திருப்பினும், செய்யத் தவிர்த்திருப்பினும் அல்லது செய்தலும், செய்யாது தவிர்த்தலும் அல்லது ஒரு செயலைச் செய்யவோ, செய்யாது தவிர்க்கவோ உறுதியுரையளிப்பின் அத்தகைய அவரின் செயல், அல்லது செயல்தவிர்ப்பு அல்லது உறுதியுரை, உறுதியுரையளிப்பவரின் உறுதியுரைக்கான மறுபயனாகும்."

மறுபயன் - வகைகள் :

மேற்கண்ட வரையறையிலிருந்து மறுபயன் என்பது கடந்த காலத்தில் செயலானதாக, நிகழ்காலத்தில் செய்யப்படுவதாக அல்லது எதிர்காலத்தில் செய்யப்பட வேண்டியதாக இருக்கலாம். இதை மேற்படி பிரிவு 2(d)-ல் வரும் செய்திருந்தால் (done), செய்தால் (does) அல்லது செய்வதாக (to do) உறுதியுரைத்தால், எனும் சொற்றொடர் உறுதி செய்கிறது. எனவே மறுபயன் மூவகைப்படும். அவை : 1. கடந்தகால மறுபயன்; 2. நிகழ்கால மறுபயன்; 3. எதிர்கால மறுபயன்.

கடந்த கால மறுபயன் அல்லது முந்தைய மறுபயன் (Past Consideration) :

முதலில் ஒரு செயல் செய்யப்பட்டு அதற்கு மறுபயனாக பின்னர் ஒரு உறுதியுரை அளிக்கப்பட்டால், அது கடந்த கால மறுபயன் எனப்படுகிறது.

உதாரணமாக, A என்பவர் B-யின் உயிரை ஒரு விபத்திலிருந்து காப்பாற்றுகிறார். இதனால் மனம் மகிழ்ந்த மேற்படி B என்பவர், A-க்கு ரூ.1000/- அளிப்பதாக உறுதியுரை அளிக்கிறார். அதாவது இவ்வுறுதியுரை மேற்படி செயலுக்கு பின்னர் தரப்பட்டதாகும். ஆகவே, இது கடந்த கால மறுபயன் ஆகும்.

நிகழ்கால மறுபயன் (Present Consideration) :

உறுதியுரை அளிக்கின்ற காலத்திலேயே அதற்குரிய மறுபயனும் அளிக்கப்பட்டிருந்தால், அது நிகழ்கால மறுபயன் எனப்படுகிறது.

உதாரணமாக, A என்பவர் தனது குதிரையை B-க்கு ரூ.1,000/–த்திற்கு விற்க உடன்படுகிறார். இங்கு குதிரையின் விலையை மேற்படி B என்பவர் உடனடியாக A-க்கு கொடுத்து விடுகிறார். அதே நிகழ்விலேயே, மேற்படி A என்பவர் தனது குதிரையை B-க்கு உடனடியாக கொடுத்து விடுகிறார். இங்கு உறுதியுரையும், மறுபயனும் ஏக காலத்தில் நிகழ்வதால், இது நிகழ்கால மறுபயன் ஆகும்.

எதிர்கால மறுபயன் (Future Consideration) :

ஒருவர் அளித்த உறுதியுரைக்குரிய மறுபயனை உடனடியாகச் செலுத்தாமல் எதிர்காலத்தில் செலுத்தினால் அது எதிர்கால மறுபயனாகும்.

உதாரணமாக, A என்பவர் B-ன் வீட்டில் தங்கிப் படித்து வருகிறான். அவனுக்குண்டான உணவு, உடை, கல்விச் செலவுகளை மேற்படி B–யே செய்து வருகிறார். அச்செலவுகளின் மொத்த தொகையை மேற்படி A என்பவர் ஆண்டு இறுதியில் தருவதாக உறுதியளித்தால், அது எதிர்கால மறுபயன் ஆகும்.

கடந்த கால (அல்லது) முந்தைய மறுபயனின் சட்டநிலை:

இந்தியச் சட்டப்படி :

கடந்த கால (அல்லது) முந்தைய மறுபயன் (Past Consideration) இந்தியச் சட்டப்படி [பிரிவு 2 (d)] செல்லத்தக்கதாகும். முன் கண்ட உதாரணத்தில் B–யின் உயிரை ஒரு விபத்திலிருந்து காப்பாற்றியதற்காக, A–க்கு ரூ. 1000/– அளிப்பதாக மேற்படி B உறுதியுரைக்கிறார். இங்கு அவ்வாறு B உறுதியுரைக்கும் வரை, மேற்படி A-க்கும் B-க்குமிடையே எவ்வித ஒப்பந்தமும் எழவில்லை. ஆனால், மேற்படி B ரூ.1000/– தருவதாக உறுதியளித்த பின், அதனைப் பெற மேற்படி A சட்டப்படி உரிமை படைத்தவராகிறார். ஆகவே கடந்த கால மறுபயன், இந்தியச் சட்டப்படி ஒரு செல்லத் தகுந்த மறுபயனேயாகும்.

Sindha v. Abraham[1]

இவ்வழக்கில் B என்பவர் இளவராக இருந்த போது A அவருக்குத் தொண்டு செய்தார். எனவே B வயது வந்ததும் A–யினுடைய தொண்டிற்காகப் பரிசளிப்பதாக உறுதியுரை அளித்தார். இந்த உறுதியுரை இறந்தகால சேவை பற்றி இருந்தாலும், A என்பவர் இவ்வுறுதியுரையை வலியுறுத்தலாம் எனப்பட்டது.

ஆங்கிலச் சட்டப்படி :

ஆங்கிலச் சட்டப்படி "முந்தைய மறுபயன் மறுபயனாகாது" (Past consi-

1. ILR (1895) 20 Bom. 755.

deration is no consideration). நிகழ்கால மற்றும் எதிர்கால மறுபயன்களே, மறுபயன்களாகக் கருதப்படுகின்றன. அவற்றைப் பொறுத்தே ஒப்பந்தமும், வழக்கிடும் உரிமையும் எழுகின்றன.

Rosooria v. Thomas[1]

இவ்வழக்கில் R என்பவர் T என்பவரிடமிருந்து குதிரை ஒன்றை விலைக்கு வாங்கினார். அதன் பின்னர் ஒரு நாள், குதிரையை விற்ற மேற்படி T என்பவர், தாம் விற்ற குதிரை அடங்கி நடக்கக் கூடியது என்றும், ஆரோக்கியமானது என்றும் மேற்படி R என்பவரிடம் உத்திரவாதமளித்து உறுதியுரை கூறினார். ஆனால், குதிரையைப் பராமரிக்கும் பொழுது ஒரு நாள், அது அடங்காமல் மேற்படி R-க்கு காயம் விளைவித்து விட்டது. இதனால் அவர்உறுதியுரை மீறியமைக்காக நஷ்ட ஈடு கோரி T மீது வழக்கிட்டார். இங்கு குதிரையின் தன்மை குறித்து கொடுக்கப் பட்ட உறுதியுரையானது, அக்குதிரையை விற்ற பிறகு ஏற்பட்டதாகும். ஆகவே இது முந்தைய (Past) மறுபயனாகும். எனவே மேற்படி உறுதியுரையை வலியுறுத்த முடியாது என மேற்படி வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

Re McArdle[2]

இவ்வழக்கில், தந்தை எழுதி வைத்த உயிலின்படி, தாயாரின் இறப்பிற்குப் பிறகு தந்தைக்குச் சொந்தமான ஒரு வீட்டை அவர்களது மகன்கள் அடைய வேண்டியது. அம்மகன்களில் ஒருவரது மனைவி, அவ்வீட்டில் சில மேம்பாட்டுப் பணிகளைச் செய்தார். இதற்குப் பின்னிட்டு, இம்மேம்பாட்டிற்காக 488 பவுண்டு பணத்தை அம்மனைவிக்கு அளிப்பதாக பிற மகன்கள் உறுதியுரை அளித்தனர். எனவே அப்பணத்தைக் கோரி அம்மனைவி மேற்படி வழக்குத் தொடர்ந்தாள். ஆனால் அப்பணத்தைப் பெற அம்மனைவிக்கு உரிமையில்லை என்றும், ஏனெனில் பணத்தைக் கொடுப்பதாக உறுதிரை அளித்து எழுதப்பட்ட ஆவணத்தில் அம் மகன்கள் கையொப்பமிட்ட தேதிக்கும் முன்னதாகவே, அம்மனைவி செய்த மேம் பாட்டுப் பணிகள் முடிவுற்றுவிட்டன என்றும், இது ஒரு முந்தைய மறுபயனாகும் என்றும், எனவே இது ஒரு மறுபயனே அல்ல என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

எனினும் ஒரு நடவடிக்கைக்குப் பின்னிட்டும், அதற்குத் தொடர்பில்லாத வகையிலும் (subsequent and independent of the transaction), ஒரு மறு பயனுக்காக உறுதியுரை அளிப்பவரின் விருப்பத்தின்படி ஒரு செயல் செய்யப் பட்டிருந்தால் (if the act has been done at the desire of the promisor), அது ஒரு நல்ல மறுபயன் என்று பின்வரும் ஒரு வழக்கில் தீர்ப்புரைக்கப்பட்டது.

1. (1842) 114 E.R. 496.
2. (1951) Ch 699

Lampleigh v. Brathwait[1] எனும் வழக்கில் கொலைக் குற்றத்திற் காக பிரதிவாதிக்கு தண்டனை அளிக்கப்பட்டது. அவர் மன்னரிடமிருந்து தனக்கு மன்னிப்பு பெற்றுத் தரும்படி வாதியிடமே கோரிக்கை ஒன்றை வைத்தார். வாதியும் தன்னால் இயன்றவரை முயன்றார். இதன் பொருட்டு அவருக்கு சில செலவுகள் ஏற்பட்டன. இதற்கு மறுபயனாக, வாதிக்கு 100 பவுண்டு பணம் அளிப்பதாக பிரதிவாதி உறுதியுரைத்தார். ஆனால் பின்னிட்டு கொடுக்கவில்லை. எனவே அப் பணத்தைக் கோரி வாதி வழக்குத் தொடர்ந்தார். இது உறுதியுரை அளிப்பவரின் விருப்பத்தின் அடிப்படையில் செய்யப்பட்ட செயலுக்காக எழுந்த மறுபயன் என்றும், எனவே இதைப் பெற வாதிக்கு உரிமையுண்டு என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

22. "While consideration need not be adequate, must be real" - Discuss. ("மறுபயன் போதுமானதாக இருக்க வேண்டியது அவசியமில்லை என்றாலும், அது உண்மையானதாக இருக்க வேண்டும்"– விவாதிக்க.)

மறுபயன் போதுமானதாக இருக்க வேண்டியது அவசியமில்லை (Consideration need not be adequate) :

மறுபயன் என்பது 'மாறாக ஏதாவதொன்று' என்பதாகும். அந்த 'ஏதாவதொன்று' போதுமான ஒன்றாக (adequate) இருக்க வேண்டியதில்லை. சட்டம் ஒரு ஒப்பந்தத்தில் மதிப்புள்ள மறுபயன் இருக்க வேண்டுமென எதிர் பார்க்கிறது. ஆனால் போதுமானதா என்பதைப் பற்றி அது கவலைப்படுவதில்லை. **'100 பவுண்டு மதிப்புள்ள பொருளுக்கு ஒரு சிறு மிளகும் நல்ல மறுபயனே' (A pepper corn may be a good consideration for the release of 100 pounds)** என இங்கிலாந்து நாட்டு சட்ட முதுமொழி கூறுகிறது.

Thomas v. Thomas[2]

இந்த வழக்கில் பெரிய வீடு ஒன்றை 'A' என்பவர் ஆண்டொன்றுக்கு 1 பவுண்டு வீதம் வாடகை செலுத்துவதாக ஒப்புக் கொண்டு வாடகைக்கு எடுத்துக் கொண்டார். இதில் வாடகை மிகவும் குறைவாக இருப்பதால் ஒப்பந்தம் செல்லுமா, என்ற கேள்வி எழுந்தபோது, ஆண்டொன்றுக்கு 1 பவுண்டு வாடகை என்பது குறைவானதுதான் என்றாலும், மறுபயன் என்ற அளவில் ஒரு தொகை இருப்பதால் சட்டப்படி அவ்வொப்பந்தம் செல்லுபடியாகக் கூடியதே என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

1. (1915) Hob. 105
2. (1842) 114 E.R., 330

De Ka Bare v. Pearson[1]

இவ்வழக்கின்படி, பிரதிவாதிகள் செய்தித்தாள் ஒன்றின் உரிமையாளர்கள் ஆவர். வாசகர்கள் தங்கள் பணத்தை பாதுகாப்பான முறையில் எவ்வாறு முதலீடு செய்வது என்பதற்கு தாங்கள் ஆலோசனை வழங்குகிறோம் என்று அச்செய்தித் தாளில் பிரதிவாதிகள் விளம்பரம் செய்தனர். இவ்விளம்பரத்தைக் கண்ட வாசகர் ஒருவர் பிரதிவாதிகளின் ஆலோசனையைக் கோரினார். மேலும் ஒரு நல்ல பங்குத் தரகரின் (stock broker) பெயரைப் பரிந்துரைக்குமாறும் கோரினார். இதன் அடிப்படையில், பிரதிவாதிகள் பங்குத் தரகர் ஒருவரின் பெயரைப் பரிந்துரைத்தனர். ஆனால் அவரோ நொடிப்பு நிலை எய்தியவர் (an undischarged bankrupt). இச்சங்கதி, பிரதிவாதிகளுக்குத் தெரியாது. அத்தரகர், நம்பகமானவர் என்று நம்பி, அவரது பெயரைப் பரிந்துரைந்துவிட்டனர். இதற்கிடையில், வாதி தனது பணத்தை பங்குகளில் முதலீடு செய்ய ஒரு குறிப்பிட்ட தொகையை அத்தரகரிடம் கொடுத்தார். ஆனால் அவர் அத்தொகையை கையாடல் செய்துவிட்டார். எனவே அத்தொகையை திரும்பத் தரக் கோரி வாதி, பிரதிவாதிகளின் மீது வழக்கிட்டார். அப்பொழுது நீதிமன்றத்தின் முன் எழுந்த வினா யாதெனில், நிதி ஆலோசனை வழங்க செய்த முனைவு ஒரு போதுமான மறுபயனாக அமையுமா என்பதுதான். மேற்கண்ட மாதிரியான விளம்பரங்கள், செய்தித்தாளின் விற்பனை அதிகரிக்கச் செய்யும் நோக்குடன் செய்யப்படுபவையாகும் என்றும், எனவே இது ஒரு நல்ல மறுபயனே என்றும், ஒரு உடன்பாட்டில் மறுபயன் போதுமானதாக உள்ளதா என்று கண்டறிவது நீதிமன்றத்தின் பணியல்ல (it is not the business of the court to look into the adequacy of consideration) என்றும், அங்கு உண்மையில் மறுபயன் இருந்தால் அதுவே போதுமானது என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் விளக்கம் :

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **25–வது பிரிவின் கீழ் தரப்பட்டிருக்கும் இரண்டாவது விளக்கத்தின்படி,** "உறுதியுரையளிப்பவரின் இசைவு கட்டாயம் எதுவுமின்றி பெறப்பட்டிருந்தால், மறுபயன் போதுமானதல்ல என்ற ஒரே காரணத்துக்காக மட்டுமே ஒரு ஒப்பந்தம் இல்லாநிலை அடைந்ததாகிவிடாது. ஆயினும் இசைவு கட்டாயமின்றிப் பெறப்பட்டதா என்பதை அறிய, மறுபயன் போதுமானதா என்று நீதிமன்றம் கண்டறியும்."[2]

1. (1908) 1 KB 280
2. "An agreement to which the consent of the promisor is freely given is not void merely because the consideration is inadequate, but the inadequacy of consideration may be taken into account by the court in determining whether the consent of the promisor was freely given" - **Explantion 2 to Section 25 of the Indian Contract Act, 1872.**

எடுத்துக்காட்டு : ரூ. 1,000/– மதிப்புள்ள குதிரையை A என்பவர் ரூ.10–க்கு B என்பவருக்கு விற்கிறார். மேற்படி A-யின் இசைவு எவ்வித கட்டாயமுமின்றி பெறப்பட்டிருந்தால், மறுபயன் போதுமானதாக இல்லாவிட்டாலும் இந்த உடன்பாடு ஒப்பந்தமாகிறது.

ஆனால், A–யின் இசைவு அச்சுறுத்தலின் பேரில் பெறப்பட்டிருப்பதாக நீதிமன்றத்திற்கு தெரிய வந்தால், 'A' அச்சுறுத்தப்பட்டாரா என்பதனை அறியும் பொருட்டு நீதிமன்றம் "மறுபயனின்" போதுமான தன்மையைப் பற்றிக் கணக்கிலெடுத்துக் கொள்ளும்.

சுருங்கக்கூறின் ஒரு ஒப்பந்தம் ஏற்பட மறுபயன் தேவை; ஆனால் அந்த மறுபயன் போதுமானதாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. மறுபயன் என பெயரளவில் இருந்தால் கூட போதுமானது.

மறுபயன் உண்மையானதாக இருக்க வேண்டும் (Consideration must be real) :

மறுபயன் உண்மையானதாக, தகுதி வாய்ந்ததாக இருத்தல் வேண்டும். பொய்யானதாக, போலியானதாக இருத்தல் கூடாது. (consideration must be real and not illusory). அது தெளிவாகக் கூறப்பட்டிருத்தல் வேண்டும்.

உதாரணமாக, A என்பவன் மணலை கயிறாகத் திரிக்கிறேன் என உறுதியுரை அளிக்கிறான். அதற்கு B ரூ. 100/– கொடுக்க வேண்டும். இங்கு மணலை கயிறாகத் திரிப்பது நடைமுறைச் சாத்தியமல்ல. ஆகவே மறுபயன் உண்மையானதாகாது.

எப்பொழுது மறுபயன் உண்மையானதாக இருப்பதில்லை?

1. பொய்யான மறுபயன் : மறுபயன் உறுதியேற்பவரின் சட்டப்படியாற்ற வேண்டிய கடமையின் அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். ஒருவர் ஏற்கனவே உள்ள ஒப்பந்தப்படி அல்லது சட்டப்படி ஒன்றைச் செய்யக் கடமைப்பட்டவராக இருக்கலாம். அவ்வாறெனில், ஏற்கனவே உள்ள ஒப்பந்தத்தைச் செயலாற்ற ஏற்படும் புதிய மறுபயன் செல்லத்தக்கதாகாது.

2. சட்டப்படி நிறைவேற்ற முடியாமை (Legal impossibility): மறுபயன் சட்டப்படி நிறைவேற்ற முடியாததாக இருந்தால், ஒப்பந்தம் செல்லத்தக்கதாகாது.

3. மனிதனால் செய்ய முடியாமை (Physical impossibility): மறுபயன் மனிதனால் செய்ய முடியாத ஒன்றை செய்வதற்காகவென்றால், அது ஒரு செல்லத்தக்க ஒப்பந்தத்தை உருவாக்காது.

4. உறுதியற்ற தன்மை : மறுபயன் உறுதியானதாகவும், தகுதி வாய்ந்த தாகவும் இருத்தல் அவசியம். 'A' என்பவர், 'B' செய்யும் நியாயமான வேலைக்கு நியாயமான பணம் தருவதாக உறுதியுரைக்கிறார். இங்கு மறுபயன் உறுதியற்ற தாக உள்ளது. ஆகவே உடன்பாடு செல்லத்தக்கதல்ல.

முடிவுரை :

மேற்கண்ட கூற்றுக்களைக் காண்கையில், "மறுபயன் போதுமானதாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்றாலும், அது உண்மையானதாக இருக்க வேண்டும்." என்ற விதி கண்கூடாகப் புலனாகும்.

23. Define "Consideration." Explain the exceptions to the rule that an agreement without consideration is void. ("மறுபயனுக்கு" இலக்கணம் தருக. மறுபயனில்லாத உடன்பாடு இல்லா நிலையதாகும், என்ற விதிக்குள்ள விலக்குகளை விவரி.)

(அல்லது)

State the circumstances in which a contract without consideration may be treated as valid. (மறுபயனில்லாத ஒப்பந்தம் செல்லத்தக்க உடன்பாடாகக் கருதப்படும் சூற்நிலைகளை எடுத்துக் கூறுக.)

(அல்லது)

What are the exceptions to the rule that contract without consideration is void under Indian and English law? (இந்திய ஆங்கிலச் சட்டத்தில் மறுபயன் இல்லாத ஒப்பந்தம் செல்லுபடியற்றது என்று கோட்பாட்டிற்குள்ள விதிவிலக்குகள் யாவை?)

மறுபயன் - இலக்கணம் :

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 2(d)-ன்படி, "உறுதியுரை அளிப்பவரின் விருப்பத்திற்கிணங்க உறுதியுரை ஏற்பவர் அல்லது மற்றவர் ஒரு செயலைச் செய்திருப்பினும், செய்யத் தவிர்த்திருப்பினும் அல்லது செய்தலும், செய்யாது தவிர்த்தலும் அல்லது ஒரு செயலைச் செய்யவோ, செய்யாது தவிர்க்கவோ உறுதியுரையளிப்பின் அத்தகைய அவரின் செயல், அல்லது செயல்தவிர்ப்பு அல்லது உறுதியுரை, உறுதியுரையளிப்பவரின் உறுதியுரைக்கான மறுபயனாகும்."

"மறுபயனில்லாத உடன்பாடு இல்லாநிலையாகும்"

புரிவுரை (முனைவு) + ஏற்பு = உடன்பாடு. அதுபோல் உடன்பாடு +

மறுபயன் = ஒப்பந்தம். ஆகவேதான் மறுபயன் இல்லாத உடன்பாட்டை வெற்றுடன்பாடு (Nudum pactum) என்பவர். மறுபயன் இல்லாத உடன்பாட்டின் அடிப்படையில் வழக்கிட இயலாது என்ற சட்டக் கோட்பாட்டை **"Ex nudo pacto non oritur actio"** என்ற இலத்தீன் சட்ட முதுமொழி கூறுகிறது. சட்டத் தமிழில் **"மறுபயனில்லா ஒப்பந்தத்து உறுபயனில்லை வழக்குரிமை"** என்று அழகாகக் கூறலாம். இவற்றையே இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 25–வது பிரிவானது. "மறுபயனில்லாத உடன்பாடு இல்லாநிலையதாகும் (Void)" எனக் கூறுகிறது.

Abdul Aziz v. Masum Ali[1] – ஒரு மசூதியைப் புதுப்பிக்க B என்பவருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுப்பதாக A என்பவர் உறுதியுரை செய்தார். ஆனால் அத்தொகையைத் தரவில்லை. இவ்வொப்பந்தத்தினால் A என்பவருக்கு எந்த விதமான நன்மையோ அல்லது B என்பவருக்கு எந்த விதமான இழப்போ ஏற்படாததனால், மேற்படி வழக்கில் மறுபயனில்லை எனப்பட்டது. இங்கு மறுபயன் ஏதும் கிடையாது என்பது கண்கூடாகப் புலனாகும்.

விதிவிலக்குகள் (Exceptions) :

"மறுபயனில்லாத உடன்பாடு இல்லாநிலையதாகும் (Void)" என்ற மேற்படி விதிக்கு, பின்வரும் விதிவிலக்குகள் உண்டு. அவை.

1. இயற்கையான அன்பினாலும், பாசத்தாலும் ஏற்பட்ட ஒப்பந்தம் (Natural love and affection) [பிரிவு 25(1)] :

உடன்பாடு செய்து கொள்ளும் இரு நபர்களும் நெருங்கிய உறவினர் களாகவும், அவர்களுக்குள் செய்து கொள்ளும் அந்த உடன்பாடு இயற்கையான அன்பினாலும், பாசத்தினாலும் (Natural love and affection) ஏற்பட்டதாகவும், அது எழுத்து வடிவில் பதிவு செய்யப்பட்டதாகவும் இருப்பின், அந்த உடன்பாட்டினை அதில் மறுபயன் இல்லாவிட்டாலும் கூட சட்டப்படி நீதிமன்றத்தில் செயலுறுத்த முடியும். **உதாரணமாக,** A என்பவர் இயற்கையான அன்பினாலும், பாசத்தாலும் தனது மகனாகிய B என்பவருக்கு ரூ. 1000/– தருவதாக உறுதியுரை அளித்தார். அவ்வுறுதியுரையை எழுதி, சட்டப்படி பதிவும் செய்கிறார். இங்கு B-யிடமிருந்து A-க்கு எவ்வித மறுபயனும் செல்லாவிட்டாலும், இது ஒரு சட்டப்படியான ஒப்பந்தமேயாகும்.

இதற்கான நிபந்தனைகள்: 1. அது இயற்கையான அன்பாலும், பாசத்தாலும் ஏற்பட்டிருக்க வேண்டும். 2. அது எழுத்து வடிவில் இருக்க வேண்டும். 3. அது பதிவு செய்யப்பட்டிருக்க (Registered document) வேண்டும். 4. தரப்பினர்கள் ஒருவருக்கொருவர் நெருங்கிய உறவினராக இருத்தல் வேண்டும்.

1. (36 All. 268)

Venkayyaswamy v. Rangaswamy[1]

V என்பவர் R என்பவரின் சகோதரர் ஆவார். அவர், ஒரு பதிவு செய்த ஒப்பந்தத்தின் மூலம் அவரது சகோதரர் மேற்படி R என்பவர் மேல் ஏற்பட்ட இயற்கையான அன்பினாலும், பாசத்தாலும், R என்பவர், ஒரு B என்பவருக்குத் தர வேண்டிய கடனை, தானே (V) அடைத்து விடுவதாக உறுதியுரைக்கிறார். ஆனால் V அந்தக் கடனை அடைக்கவில்லை. இந்நிலையில் மேற்படி R என்பவர், தான் B–க்கு தர வேண்டிய கடனுக்காக, மேற்படி ஒப்பந்தத்தின் அடிப்படையில் தனது சகோதரரான மேற்படி V என்பவர் மீது வழக்கு தொடர்ந்தார். இங்கு மேற்படி ஒப்பந்தத்தின் வாயிலாக R என்பவரிடமிருந்து எவ்வித மறுபயனும் மேற்படி V என்பவருக்கு செல்லவில்லை. எனினும் R என்பவர் அவ்வொப்பந்தத்தின்படி நடக்கக் கோரி V என்பவர் மீது வழக்குத் தொடர உரிமை கொண்டுள்ளார் என்றும், அவ்வொப்பந்தம் மேற்கண்ட இரு சகோதரர்களையும் பரஸ்பரம் கட்டுப் படுத்தக் கூடியது என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. இருப்பினும் நெருங்கிய உறவு ஒன்று மட்டுமே இயற்கையான அன்பினையும், பாசத்தையும் உண்டாக்காது என்றும் மேற்படி வழக்கில் சுட்டிக்காட்டப்பட்டது.

Rajluckhy Debee v. Bhoothnath Mookerjee[2]

ஒரு இந்துக் கணவன், தன் மனைவிக்கும் தனக்கும் ஏற்பட்ட சண்டை சச்சரவுகளை மேற்கோள் காட்டி எழுதிய பதிவு செய்த பத்திரம் ஒன்றில் தன் மனைவிக்கு பராமரிப்புத் தொகை (Maintenance) வழங்கிட உறுதியுரைத்தார். இந்த ஒப்பந்தத்தில் அவரது மனைவியிடமிருந்து மறுபயனெதுவும் செல்லவில்லை எனக் கூறி ஒப்பந்தம் இல்லாநிலை எய்தி விட்டதாகத் தீர்ப்பளிக்கப்பட்டது. ஏனெனில், இங்கு "இயற்கையான அன்பும் பாசமும்" இல்லை.

Poonoo Bibi v. Fyez Buksh[3]

இவ்வழக்கில் ஒரு இசுலாமியக் கணவன், தனது சம்பாத்தியத்தை தனது மனைவிக்குத் தருவதாக உறுதியுரையளித்து, பத்திரம் ஒன்றை எழுதி, பதிவு செய்து கொடுத்தார். இது இயற்கையான அன்பினாலும், பாசத்தினாலும் ஏற்பட்ட ஒப்பந்தம் என்றும், அதற்குரிய நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப் பட்டுள்ளது என்றும் கூறி, அவ்வுறுதியுரை வலியுறுத்திச் செயல்படுத்தத் தக்கதே என்று நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

1. (1903) 13 MLJ 428
2. (1900) 4 C.W.N. 488
3. (1874) 15 Bom. LR (Appx.) : 5 23 W.R. 66

2. தன்னிச்சையாகச் செய்யப்படும் சேவைகளை ஈடு செய்ய மேற்கொள்ளும் ஒப்பந்தம் (Compensation for Voluntary services) [பிரிவு 25(2)] :

ஒருவர் தன்னிச்சையாக செய்த சேவைகளுக்கு, பகுதியாக அல்லது முழுமையாக ஈடு செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் மறுபயன் இல்லையென்றாலும், அது செல்லத்தக்கதே

இதற்கான நிபந்தனைகள் : 1. சேவைகள் தன்னிச்சையானதாக இருக்க வேண்டும். 2. அச்சேவைகள் உறுதியுரைப்பவருக்காக இருக்க வேண்டும். ஆனால் உறுதியுரைப்பவரின் விருப்பத்தால் செய்யப்பட்டிருக்கக் கூடாது. 3. உறுதியுரைப்பவர் சேவையின்போது உயிருடன் இருந்திருக்க வேண்டும் (Existence) 4. உறுதியுரைப்பவர், அச்சேவைக்கு ஈடு செய்ய விழைந்திருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டுகள் : 1. 'A' என்பவர் 'B'–யின் பணப்பையைக் கண்டெடுத்து 'B'–யிடம் சேர்க்கிறார். இதற்காக 'B' ரூ.50/– தர உறுதியுரைக் கிறார். இங்கு 'A'–யிடமிருந்து 'B'–க்கு மறுபயன் ஏதுமில்லை. எனினும் இது ஒரு செல்லத்தக்க ஒப்பந்தமாகும்.

2. ஆற்றில் மூழ்கிக் கொண்டிருந்த 'A' என்பவரை 'B' என்பவர் காப்பாற்றுகிறார். இதற்காக 'A' ரூ.200/– தருவதாக உறுதியுரைக்கிறார். இது ஒரு செல்லத்தக்க ஒப்பந்தமாகும்.

3. காலவதியான கடனை திருப்பிச் செலுத்துவதாகச் செய்யப் படும் ஒப்பந்தம் (Promise to pay a time barred debt) [பிரிவு 25(3)] :

காலவரையறைச் சட்டத்தின்படி (Law of Limitation) காலாவதியாகி விட்ட கடனைத் திருப்பித் தர கடனாளியோ, அவரது முகவரோ செய்து கொள்ளும் ஒப்பந்தம், மறுபயனற்றதாயினும் செல்லத்தக்கதேயாகும். காலாவதியான கடனை ஒப்புக் கொண்டால் மட்டும் போதாது. அக்கடனைத் திருப்பிச் செலுத்துவதாக எழுதி உறுதியுரைக்க வேண்டும். அது முழுமையாகவோ, பகுதியாகவோ திருப்பிச் செலுத்துவதாக இருக்கலாம்.

எடுத்துக்காட்டுகள் : 1. 'A' என்பவர் 'B'–க்கு "நான் என் காலாவதியான கடனுறுதிச் சீட்டை புதுப்பிக்க விழைகிறேன். என்னை வந்து பார்க்கவும்" என்று எழுதினார். 'A' அதைப் புதுப்பிக்கவில்லை. மேலே குறிப்பிட்ட கூற்று, பணம் செலுத்துவதற்கான உறுதியுரையாகாது. எனவே ஒப்பந்தமாகாது.

2. 'A' என்பவர் 'B' என்பவருக்கு ரூ.1000/– கடன்பட்டிருக்கிறார். ஆனால் இது காலவரையறைச் சட்டப்படி காலாவதியானதாகும். 'A' எழுதிய பத்திரம்

ஒன்றில் ரூ.1,000/– தருவதாக உறுதியுரைக்கிறார். இது ஒப்பந்தமாகும்.

4. செய்து முடிக்கப்பட்ட கொடை (Gift) (பிரிவு 25-ன் கீழான முதல் விளக்கம்) :

மெய்யாகவே முழுமையாகச் செய்து முடிக்கப்பட்ட கொடைகளுக்கு "மறுபயனில்லையேல் ஒப்பந்தமில்லை" எனும் விதி பொருந்தாது. ஒரு முறை செய்து முடிக்கப்பட்ட கொடையை, "மறுபயனில்லை" என்று கூறித் திரும்பப் பெற முடியாது.

5. முகமை (Agency) :

இந்திய ஒப்பந்தச் சட்டப் பிரிவு 185–ன்படி முகமையை உருவாக்க மறுபயன் தேவையில்லை.

24. "Insufficiency of consideration is immaterial; but an agree ment without consideration is void." Explain. ("ஒப்பந்தத்தில் மறுபயன் போதியனவாக இல்லாதிருப்பதைப் பற்றி சட்டம் பொருட்படுத்தவில்லை; ஆனால் ஓர் உடன்படிக்கையில் மறுபயன் இல்லாமல் இருந்தால் அந்த உடன்படிக்கை இல்லாநிலை அடைந்துவிடும்." இக்கூற்றினை விளக்குக.)

(வினா எண். 22 மற்றும் 23–க்குண்டான விடைகளைத் தொடர்புபடுத்தி எழுதுக.)

9

ஒப்பந்தத் தகவுடைமை (அல்லது) தரப்பினர்களின் ஒப்பந்தத் தகுதி [Capacity to Contract (or) Competency of Parties]

25. "All agreements are contracts if they are made by the parties competent." - Examine. ("தரப்பினர்கள் ஒப்பந்தம் செய்து கொள்ள தகுதியுடையவர்களாக இருந்தால் எல்லா உடன்பாடுகளும் ஒப்பந்தங்கள் ஆகும்." – ஆராய்க.)

(அல்லது)

Explain the term 'competency of parties' to enter into a contract. Enumerate the kind of incompetency arising out of mental deficiency and briefly explain about the same . ('ஒப்பந்தம் மேற்கொள்ள தகுதியுடையவர்கள்' என்பதினை விளக்குக. மனக் குன்றினால் ஏற்படும் தகுதியின்மையினை குறிப்பிட்டு அதனைப் பற்றி சுருக்கமாக விளக்கவும்.)

(அல்லது)

"Parties to a contract must be competent to contract"- Elucidate. ("ஒப்பந்தத் தரப்பாளர்கள் ஒப்பந்தம் செய்ய தகுதி படைத்தவர் களாக இருத்தல் வேண்டும்.–விளக்குக")

(அல்லது)

State wheter the following persons are having the capacity to enter into contract. Discuss. (a) Minors (b) Insane persons (c) Idoits (d) Drunken persons (e) Bankrupts. [பின்வருவோர் ஒப்பந்தம் மேற்கொள்ள தகுதி உடையவர்களா என்பதை விவாதிக்க. (அ) இளவர்கள் (ஆ) பித்து நிலையர் (இ) பிறவிமந்தர்கள் (ஈ) குடியர்கள் (உ) நொடிப்பு நிலையர்.]

(அல்லது)

"Law curtails in various ways the contractual capacities of individuals" - Elucidate. ("தனிநபர்களின் ஒப்பந்த தகவுடைமையை சட்டமானது பல்வேறு வகைகளில் வரம்பிற்குள்ளாக்கிறது" – விளக்குக.)

(அல்லது)

State and briefly explain the kinds of persons disqualified from contracting. (ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள தகுதியின்மைக்கான நபர்களின் வகைகளைக் குறிப்பிட்டு சுருக்கமாக விளக்கவும்.)

(அல்லது)

"Certain persons are by law incapable, wholly or in part, of binding themselves by a promise, or of enforcing a promise made to them." ("முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ உறுதியுரையில் தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளவோ அல்லது தங்களிடம் உறுதியுரை அளிக்கப்பட்டதை செயல்படுத்தவோ சில நபர்கள் சட்டத்தில் இயலாதவர்களாக இருக்கிறார்கள்" – ஆராய்க.)

(அல்லது)

Comment on the contractual capacity of minors in England and India with reference to leading cases. (இளவர்கள் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளும் தகுதியைச் சார்ந்து, இங்கிலாந்திலும் மற்றும் இந்தியாவிலும் முக்கியமான வழக்குகளைக் குறிப்பிட்டு விளக்கக் குறிப்புத் தருக.)

(அல்லது)

State the circumstances under which contracts entered into by a Minor and enforceable by and against the Minor under English and Indian law. (ஆங்கில மற்றும் இந்தியச் சட்டப்படி இளவர் ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் இளவராலோ அல்லது அவருக்கு எதிராகவோ வலியுறுத்தப்படக்கூடிய சூழ்நிலைகளை விளக்குக.)

(அல்லது)

"In India a contract by a minor is void". Examine the correctness of this statement. Refer to the relevant statutory provisions and leading cases. ("இளவர் ஒப்பந்தம் இந்தியாவில் இல்லா நிலையானது." இக்கூற்றின் உண்மைதனை ஆராய்க. தொடர்புடைய சட்டப் பிரிவுகளையும் முக்கிய வழக்குகளையும் சுட்டிக்காட்டுக.)

(அல்லது)

Discuss the validity of a contract entered into by a minor. (இளவர் ஒருவரால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தமொன்றின் செல்லுநிலை குறித்து விவாதிக்க.)

(அல்லது)

Explain the doctrine of restitution. Can restitution be claimed against a minor ? (மீட்டளிப்பு கொள்கையை விளக்குக. மீட்டளிப்பு இளவருக்கு எதிராக கோர இயலுமா?)

(அல்லது)

Minor's contract - Write short notes. (இளவரின் ஒப்பந்தம் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Minor's contract for necessaries - Write short notes. (அத்தியாவசியப் பொருள்களுக்காக இளவருடன் ஒப்பந்தம் – சிறு குறிப்பு வரைக.)

ஒப்பந்தத் தகுதிமை (அல்லது) ஒப்பந்தத் தகுதி :

ஒரு உடன்பாடு, ஒப்பந்தமாக வேண்டுமெனில் அதன் தரப்பினர் ஒப்பந்தம் செய்து கொள்ள தகுதியுடையவர்களாக இருத்தல் வேண்டும். இதைத்தான் இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 10–வது பிரிவு, "தரப்பினர்கள் ஒப்பந்தம் செய்து கொள்ள தகுதியுடையவர்களாக (compotent) இருந்தால் எல்லா உடன்பாடுகளும் ஒப்பந்தங்கள் ஆகும்."[1] என்று கூறுகிறது.

ஒப்பந்தம் செய்து கொள்ள தகுதி பெற்றவர்கள் யார் ?

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 11–வது பிரிவு பின்வரும் நபர்களை ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள தகுதி பெற்றவர்கள் எனக் கூறுகிறது. அதன்படி (1) உரிமை வயதை அடைந்தவர்கள் (Major person); (2) திடமான நிலையில் உள்ளவர்கள் (Person with sound mind); (3) எச்சட்டத்தினாலும் ஒப்பந்தம்

1. "All agreements are contracts if they are made ..... by the parties competent to contract..." - **Section 10 of the Indian Contract Act, 1872.**

செய்து கொள்ளக்கூடிய தகுதியை இழக்காதவர்கள் (Person not disqualified from contracting by any law)[1].

ஆகவே, I. உரிமை வயதடையாத இளவர்களும் (Minors) II. திடமற்ற மனநிலையை உடையவர்களும் (Persons of unsound mind) மற்றும் III. ஒப்பந்தம் செய்து கொள்ளக் கூடிய தகுதியை இழந்ததாக சட்டத்தால் அறிவிக்கப் பட்டவர்களும், ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளக்கூடிய தகுதியற்றவர்கள் ஆவார்கள். இவர்களைப் பற்றி சற்று விரிவாகப் பின்வருமாறு காண்போமா?

I. உரிமை வயதடையாத இளவர் (Minor) :

1875 ஆம் ஆண்டின் இந்திய உரிமை வயதடைந்தோர் சட்டத்தின்படி (Indian Majority Act, 1875), 18 வயது நிரம்பப் பெறாதவர்கள், உரிமை வயதடையாத இளவர்கள் (Minors) ஆவர். ஆயினும், கீழ்கண்ட சூழ்நிலைகளில் 21 வயது நிரம்பிய பின்னரே உரிமை வயதடைந்தவராகக் கருதப்படுவார். (1) காப்பாளர் மற்றும் காப்பிலுள்ளோர் சட்டத்தின்படி (Guardian and Wards Act, 1890) ஒரு இளவரையும் அவரது சொத்துக்களையும் பாதுகாக்க நீதிமன்றம் ஒரு காப்பாளரை நியமித்திருந்தால்; (2) இளவரது சொத்துக்களின் ஆளுகை, பாதுகாப்பிலுள்ளோர் நீதிமன்றத்தின் (Court of Wards) கீழிருந்தால். எனினும் மேற்கண்ட வயது வேறுபாடுகள் இந்தியாவைப் பொறுத்தவரை மட்டுமே; இங்கிலாந்தில் எல்லா நிலைகளிலும் 21 வயது ஆனவுடனே ஒருவர் உரிமை வயது அடைந்தவராகக் கருதப்படுவார்.

இளவர் செய்து கொள்ளும் உடன்பாடுகள் பற்றிய விதிகள் (Rules regarding Minor's Agreements):

1. இளவரொருவர் செய்து கொள்ளும் ஒப்பந்தம் இல்லா நிலையதா அல்லது தவிர்தகு நிலையதா? (Whether minor's contract is void or voidable?)

இளவர்கள் ஒப்பந்தம் செய்யத் தகுதியற்றவர்கள் எனக் கண்டோம். ஆனால், இளவர் ஒருவர் மற்றொருவருடன் உடன்பாடு செய்து கொள்கிறார் என வைத்துக் கொள்வோம். இச்சூழ்நிலையில் அந்த உடன்பாட்டின் நிலைமை என்ன? அதை "இல்லாநிலை" (void) ஒப்பந்தமெனக் கருத வேண்டுமா அல்லது 'தவிர்தகு' (voidable) ஒப்பந்தமென கருத வேண்டுமா, எனும் இரு வினாக்கள்

1. "Every person is competant to contract who is of the age of majority according to the law to which he is subject, who is of sound mind, and is not disqualified from contracting by any law to which he is subject" - **Section 11 of the Indian Contract Act, 1872.**

எழுகின்றன. "இல்லாநிலை" எனக் கருதப்பட்டால் இளவர் செய்து கொள்ளும் உடன்பாடு ஆரம்பம் முதலே சொல்லாது என்றும், அவ்வுடன்பாடு இளவரை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும், இளவரே விருப்பப்பட்டாலும் கூட அதை ஓர் செல்லுநிலை ஒப்பந்தமாகக் கூற முடியாது என்றும் பொருள்படும். "தவிர்தகு நிலை" எனக் கருதப்பட்டால், இளவர் உரிமைவயதடைந்த பின் (18 வயது) தான் விரும்பினால், அவ்வுடன்பாட்டை நிறைவேற்றாமல் தவிர்த்து விடலாம். தான் செய்து கொண்ட உடன்பாட்டை நிறைவேற்றுவதும் அல்லது நிறைவேற்றாமல் தவிர்த்து விடுவதும் இளவரின் விருப்பத்திற்கு (option) விடப்பட்டதாகப் பொருள்படும்.

மேற்கண்ட நிலைப்பாடு குறித்து இந்திய ஒப்பந்தச் சட்டம் என்ன சொல்கிறது?

இளவர் ஒருவர் செய்து கொள்ளும் உடன்பாடு இல்லாநிலை ஒப்பந்தமா அல்லது தவிர்தகு நிலையதா, என்பது குறித்து இந்திய ஒப்பந்தச் சட்டம் யாதொன்றும் கூறவில்லை. ஒரு குறிப்பிட்ட கருத்து குறித்து சட்டத்தில் யாதொன்றும் கூறப்படாமலிருக்கின்ற பொழுது அடுத்து நமக்கு வழிகாட்டியாக இருப்பது நீதிமன்றத்தின் தீர்ப்புகளேயாகும்.

நீதிமன்றத் தீர்ப்புகள் கூறுவதென்ன ?

இந்தியாவில் உள்ள உயர் நீதிமன்றங்கள் இளவர் செய்து கொள்ளும் உடன்பாடுகள் குறித்து ஒரே கருத்தினைக் கூறவில்லை. இளவர் செய்து கொள்ளும் உடன்பாடு இல்லா நிலையதென சில உயர் நீதிமன்றங்களும், தவிர்தகு நிலையதென வேறு சில உயர் நீதிமன்றங்களும் மாறுபட்ட கருத்துக்களைக் கூறி வந்தன. முடிவில் 1903–ஆம் ஆண்டில் சுதந்திரமடையாத இந்தியாவின் உச்ச நீதிமன்றமாக விளங்கிய "பிரிவி கவுன்சில்" நீதிமன்றம், மொஹரி பீபீ – எதிர் – தர்மதாஸ்கோஸ் (Mohori Bibi v. Dharmadas Ghose) எனும் வழக்கில் இளவர் ஒருவர் செய்து கொள்ளும் உடன்பாடு 'ஆரம்பம் முதலே இல்லாநிலை'(void ab initio) ஒப்பந்தமெனத் தீர்ப்புக் கூறி இப்பிரச்சனைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. இன்றளவும் அத்தீர்ப்பில் கூறப்பட்ட கருத்தே பின்பற்றப்பட்டு வருகிறது. பெரும்புகழ் பெற்ற அவ்வழக்கின் பொருண்மைகளையும் தீர்ப்பையும் பின்வருமாறு காண்போம்.

Mohari Bibi v. Dharmadas Ghose[1]

இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, பிரதிவாதி 'டி' என்பவர் ஒரு இளவர் ஆவார். அவர் தமது வயதை அதிகரித்துக் கூறி எவரிமிருந்தாவது கடன் பெற விழைந்தார். அதன்படி, 'எம்' எனும் வாதிக்கு ரூ.20,000/–க்கு அடைமானப்

1. (1903) I.L.R. 30 Cal. 539.(P.C.) See also (1904) 20 L.Q.R. 8.

பத்திரம் ஒன்றை எழுதிக் கொடுத்தார். ஆனால் 'எம்' என்பவர், மேற்படி இளவர் 'டி'க்கு ரூ.8000/– மட்டுமே கடனாகக் கொடுத்தார். இங்கு 'டி' என்பவர் உண்மையில் ஒரு இளவர் என்பது, அவருக்கு மேற்கண்டவாறு கடன் கொடுக்கும் காலத்திலேயே 'எம்' என்பருக்குத் தெரியும்.

இந்நிலையில் 'டி' என்பவர் உரிமை வயதடைந்தவர் ஆனார். அவர் மேற்படி அடைமானத்தை இரத்து செய்யக் கோரி வழக்கிட்டார். ஒரு அடைமானம் என்பது சொத்துரிமை மாற்றமாகும். அதற்குரிய அடைமானப் பத்திரத்தை எழுதிக் கொடுக்க சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் உரிமை வயதடைந்தவர்களாக இருக்க வேண்டும் என்பது சட்டம் விதிக்கும் நிபந்தனையாகும். எனவே உரிமை வயதடையாத பொழுது 'டி' என்பவர் செய்து கொண்ட அடைமானத்தை நீதிமன்றம் இரத்து செய்தது.

இதை எதிர்த்து 'எம்' என்பவர் பிரிவி கவுன்சிலில் மேல்முறையீடு செய்தார். அங்கு இளவர் செய்து கொண்ட அடைமானம் இரத்து செய்யப்படும் பொழுது, அந்த இளவர் அந்த அடைமானத்தின் அடிப்படையில் பெற்றுக் கொண்ட தொகையை இழப்பீடாக திருப்பியளிக்க வேண்டும் என்றும், இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **65–ஆம் பிரிவின்படி**, ஒரு ஒப்பந்தம் இல்லா நிலையதாகும் பொழுது, அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் எவரேனும் அனுகூலம் எதையும் பெற்றிருந் தால், அதை திருப்பியளிக்கக் கடமைப்பட்டவர் அல்லது அதற்குரிய இழப்பீட்டைக் கொடுக்க கடமைப்பட்டவர் என்றும் சுட்டிக்காட்டி வாதம் புரிந்தார். மேலும் இளவர் ஒருவர் செய்து கொள்ளும் ஒப்பந்தம் 'தவிர்தகு' (voidable) ஒப்பந்தமே என்றும், அதை இளவர் தவிர்த்துக் கொள்ளும் பொழுது 'இல்லாநிலை' (becomes void) ஒப்பந்தமாகிவிடுகிறது என்றும், எனவே இதற்கு மேற்படி பிரிவு 65–ன் வாசகங்கள் பொருந்தும் என்றும் வாதம் புரிந்தார்.

ஆனால் இவ்வாதங்களையெல்லாம் பிரிவி கவுன்சில் நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **11–ஆம் பிரிவிற்கு** பொருள் காணும் பொழுது, அது இளவரின் ஒப்பந்தத்தை ஒரு தவிர்தகு ஒப்பந்தமாகக் கூறுகிறது என்று பொருள் கொள்ளக் கூடாது என்றும், இளவர் ஒருவர் செய்து கொள்ளும் ஒப்பந்தம் 'ஆரம்பம் முதலே இல்லாநிலையது' (void ab initio) என்றும், அவ்வொப்பந்ததை தவிர்த்துக் கொள்ளுதல் அல்லது ஏற்புறுதி செய்தல் எனும் பேச்சுக்கே இங்கு இடமில்லை (there was no question of avoiding the contract or ratifying it) என்றும், பிரிவு 65–ன் வாசகங்கள் இளவரின் ஒப்பந் தத்திற்குப் பொருந்தாது என்றும், எனவே அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெற்றுக் கொண்ட பணத்தை இளவர் 'டி' திரும்பத் தர வேண்டியதில்லை என்றும் பிரிவி கவுன்சில் நீதிமன்றம் **இளவர் 'டி'–யின் பக்கம் தீர்ப்புரைத்தது.**

மேலும் 'டி' என்பவர் தான் உரிமை வயதடைந்த நபர் என்று தனது வயதை உயர்த்திக் கூறி மோசடியாக கடன் பெற்றுள்ளார். ஆனால், மேற்படி வழக்கில் தான் அடைமானப் பத்திரம் எழுதிக் கொடுக்கும் பொழுது, இளவராக இருந்ததாக வாதிடுகிறார். அவரது இவ்வாதம் முன்னுக்குப் பின் முரணாக உள்ளது. எனவே இவ்வாறு வாதம் புரிய, அவரை முரண்தடைக் கோட்பாட்டின்படி (Doctrine of Estoppel) அனுமதிக்கக் கூடாது என்று 'எம்' கூறிய மற்றொரு வாதத்தையும் பிரிவி கவுன்சில் நீதிமன்றம் நிராகரித்தது. ஏனெனில், இளவர் 'டி'–க்கு கடன் கொடுக்கும் சமயத்திலேயே, அவர் ஒரு இளவர் என்பது 'எம்'–க்கு நன்கு தெரியும். எனவே இளவர் என்று தெரிந்து கொண்டே அவருடன் ஒப்பந்தம் செய்து கொண்டதால், முரண்தடைக் கோட்பாட்டை இளவருக்கு எதிராக பயன்படுத்த இயலாது என்று பிரிவி கவுன்சில் கூறியது.

மேற்கண்ட வழக்கிலிருந்து இளவர் ஒருவர் கொள்ளும் உடன்பாடு, **ஆரம்பம் முதலே இல்லாநிலையது (void ab initio)** என்பது தெளிவாகிறது.

Raj Rani v. Prem Adib[1]

இவ்வழக்கில் 14 வயதுடைய ராஜ்ராணி என்பவள் திரைப்படம் ஒன்றில் நடிப்பதற்காக திரைப்பட தயாரிப்பாளர் ஒருவருடன் உடன்பாடு செய்து கொண்டாள். அந்த உடன்பாட்டில் ராஜ்ராணியின் சார்பாக அவரது தந்தையார் கையொப்பம் செய்தார். ஆனால் உடன்பாட்டின்படி அத்திரைப்பட தயாரிப்பாளார் ராஜ்ராணியை நடிக்க வைக்கவில்லை. எனவே இழப்பீடு கோரி ராஜ்ராணி, தனது தந்தையாரை வழக்குத் துணைவராகக் கொண்டு அத்தயாரிப்பாளர் மீது வழக்குத் தொடர்ந்தார். ஆனால் உடன்பாட்டில் இளவரின் சார்பாக தந்தை கையொப்பமிட்டாலுமே, இளவர் செய்து கொண்ட ஒப்பந்தம் 'ஆரம்பம் முதலே இல்லாநிலையது' என்று பம்பாய் உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்து, ராஜ்ராணியின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டது. இத்தீர்ப்பிற்கு, மொஹாரி பீபி வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பை ஆதாரமாகச் சுட்டிக் காட்டியது.

2. இளவர் உறுதியுரை ஏற்பவராகவும், ஒப்பந்தத்தின் பலனைப் பெறுபவராகவும் இருக்கலாம் (Minor can be a promisee or beneficiary) :

ஒரு ஒப்பந்தம் கடப்பாடுகளை உருவாக்கும் பொழுதுதான், அவ்வொப்பந்தத்தை செய்து கொள்ள தகுதியுள்ளதா, இல்லையா எனும் கேள்வி எழுகிறது. ஆனால், ஒப்பந்தத்தின் வாயிலான பலனைப் பெற இளவர் ஒருவருக்கு உரிமையில்லை என்று சட்டம் கூறுவதில்லை. அதாவது இளவர் ஒருவரின்

1. AIR 1949 Bom. 215

பயனுக்காக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டால், அவர் அவ்வொப்பந்தத்தின் பலனைப் பெறப் பெற முடியும். எடுத்துக்காட்டாக, இளவர் ஒருவர் சொத்து விற்பனை அல்லது அடைமானத்தில் அல்லது கடனுறுதிச்சீட்டு உள்ளிட்ட மாற்றுமுறை ஆவணத்தில் மேலெழுதப் பெற்றவராகவும் (Endorsee), பணம் பெறுநராகவும் (Payee) உரிமை பெற்றால், அவர் அவ்வுரிமையை வலியுறுத்திச் செயல்படுத்தலாம்.

Ragavachariar v. Srinivasa Raghavachariar[1]

இளவர் ஒருவர் அளித்த உறுதியுரையை வலியுறுத்திச் செயற்படுத்த முடியாது. ஆனால் அவர் ஒரு உறுதியுரை ஏற்பவராக (promisee) இருக்கலாம். அந்த வகையில் மேற்படி வழக்கில் 'A' எனும் இளவர் அடைமானத்தின் பேரில் 'B' என்பவருக்கு பணம் கடன் கொடுத்தார். இங்கு 'A' உறுதியுரை எதையும் அளிக்கவில்லை. மாறாக, உறுதியுரை ஏற்பவராக உள்ளார். எனவே கொடுத்த கடன் திரும்பாத பொழுது, அந்த அடைமானத்தை மேற்படி 'A' எனும் இளவர் வலியுறுத்தலாம் என்று தீர்ப்புரைக்கப்பட்டது.

3. இளவர் எந்நிலையிலும் வயதடையாமையை வாதாடலாம் (Minor can always plead minority) (அல்லது) இளவருக்கு முரண் தடைக் கோட்பாடு பொருந்காது (The Doctrine of Estoppel does not apply to a Minor):

நேர்மையற்ற முறையில் ஒரு இளவர் தம்மை வயதடைந்தோராகக் காட்டிக் கொண்டு ஒப்பந்தம் செய்து கொண்டிருந்து, இதனால் அவர் மீது பிற்காலத்தில் வழக்கொன்று எழுந்தால், அப்பொழுது அவர் தனது வயதடையாத நிலையை பாதுகாப்பாகக் காட்டி எதிர்வாதம் புரிதலை சட்டம் தடுப்பதில்லை.

எனவே "முரண்தடைக் கோட்பாடு" (Doctrine of Estoppel) இளவருக்கு பொருந்தாது. அவர், திரித்துக் காட்டுதல் மூலம் தன் வயதை உயர்த்திக் கூறி மோசடி புரிந்திருந்தாலும், பின்னர் அவருக்கெதிராக வழக்கு ஏதேனும் எழுந்தால், அதில் அவர், தான் ஒப்பந்தம் செய்து கொண்ட பொழுது ஒரு இளவராக இருந்தேன்; மாறாக உரிமை வயதடைந்தவராக இல்லை என்று மறுத்துக் கூற தடையேதுமில்லை.

Sadiq Ali Khan v. Jai Kishore[2]

இவ்வழக்கில் இரு இளவர்கள், தாங்களை வயதடைந்தவர்களாகக் காட்டிக் கொண்டு, அடைமானப் பத்திரம் ஒன்றை எழுதிக் கொடுத்து கடன்

1. 40 Mad. 308 (FB)
2. AIR 1928 P.C. 152 : 26 ALJ 685

பெற்றனர். கடன் கொடுத்தவர் பணத்தைத் திரும்பக் கோரி வழக்குத் தொடர்ந்த பொழுது, அடைமானப் பத்திரம் எழுதிக் கொடுக்கும் பொழுது, தாங்கள் இருவரும் இளவர்களாக இருந்தோம் என்று கூறி அதனை உரிய ஆவணச் சாட்சியத்தின் வாயிலாக நிரூபிக்கவும் செய்தனர். எனவே அவ்விளவர்கள் செய்து கொண்ட அடைமான ஒப்பந்தம் இல்லாநிலையதானது. ஒப்பந்தமே இல்லாநிலையதானதால், இளவர்களுக்கு முரண்தடைக் கோட்பாடு பொருந்தாது என்றும், அவர்கள் தாங்கள் அடைமானப் பத்திரம் எழுதிக் கொடுக்கும் பொழுது இளவராக இருந்ததாக வாதாடுவதைத் தடுக்கவியலாது என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

4. இளவர் தான் செய்து கொண்ட ஒப்பந்தங்களை, உரிமை வயது எய்திய பின்னர் ஏற்புறுதி செய்ய இயலாது (No Ratification) :

இளவருடன் செய்த ஒப்பந்தம் முழுவதும் செல்லாது. எனவே அவர் இளவராக இருக்கும் போது செய்த ஒப்பந்தத்தை வயது வந்தவுடன் ஏற்புறுதி (Ratification) செய்ய முடியாது. இளவர் ஒருவர், தான் இளவராக இருக்கும் போது வாங்கிய கடனை வயது வந்தவுடன் திருப்பித் தருகிறேன் என்று உறுதி மொழி தந்தால் அது செல்லாது. ஏனெனில், இளவராக இருக்கும்போது பெற்ற மறுபயன், ஒரு மறுபயனாகவே கருதப்படாது.

Indran Ramaswamy v. Anthappa[1]

இவ்வழக்கில் A என்ற இளவர் B என்பவரிடமிருந்து ரூ.1000/– கடனாகப் பெற்றுக் கொண்டு கடனுறுதிச் சீட்டு ஒன்று எழுதிக் கொடுத்தார். A என்பவர் இளவராய் இருக்கும் பொழுது எழுதிக் கொடுத்த கடனுறுதிச் சீட்டு செல்லாது என்பதை அறிந்த B என்பவர் மேற்படி A என்ற இளவர், உரிமை வயதடைந்தவுடன் அதே தொகைக்கு A என்பவரிடம் புதிதாக ஒரு கடனுறுதிச் சீட்டு எழுதி வாங்கிக் கொண்டார். இங்கு இரண்டாவதாக எழுதி கொடுக்கப்பட்ட கடனுறுதிச் சீட்டு செல்லுபடியாகுமா என்ற கேள்வி எழுந்தது. இரண்டாவதாக எழுதிக் கொடுக்கப் பட்ட மேற்படி கடனுறுதிச் சீட்டுக்கு மறுபயனே, அவ்விளவர் உரிமை வயதடையாத சமயத்தில் எழுதிக் கொடுத்த முந்தய கடனுறுதிச் சீட்டாகும். ஆனால் மொஹரி பீபி வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின்படி, இளவர் செய்து கொள்ளும் உடன்பாடு இல்லாநிலையதாகும். எனவே முந்தய கடனுறுதிச் சீட்டு இல்லாநிலையது. அது இல்லாநிலையை அடைந்ததால், அதற்கு பதிலாக புதிதாக எழுதிக் கொடுக்கப் பட்ட கடனுறுதிச் சீட்டும் இல்லாநிலையடைந்து, செல்லாததாகிறது. எனவே இளவர் ஒருவர் தான் உரிமை வயதடையாத சமயத்தில் செய்த உடன்பாட்டை, உரிமை வயதடைந்த பின் ஏற்புறுதி செய்ய முடியாது எனும் அடிப்படையில் புதிதாக எழுதிக் கொடுக்கப்பட்ட கடனுறுதிச் சீட்டு செல்லாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

1. (1906) 16 M.L.J. 422.

5. மீட்டளிப்பு (Restitution) :

உரிமை வயதடையாத ஒருவரை மற்றவர்கள் சுரண்டிப் பிழைத்துவிடக் கூடாதென்பதற்காக சட்டம் பாதுகாப்பளிக்கிறது. எனினும் இது ஒரு பாது காப்பேயன்றி, அவருக்கு வழங்கப்படும் தனி சலுகையாகாது. அவர் இந்தப் பாது காப்பைத் துணைக்கொண்டு எவரையும் வஞ்சிக்க (cheat) முடியாது. எடுத்துக் காட்டாக, உரிமை வயதடையாத ஒருவர் கடனுக்குப் பொருள்களை வாங்குகிறார். விற்றவர் பணத்தைப் பெற முடியாது. எனினும் பொருள்களைப் பெற முடியும். இதையே **மீட்டளிப்பு (Restitution)** என்கிறோம்.

தன் வயதை மோசடியாக உயர்த்திக் கூறி, இளவர் ஒருவர் மோட்டார் சைக்கிள் ஒன்றை கடனில் விலைக்கு வாங்குகிறார் என்று கொள்வோம். அந்த மோட்டார் சைக்கிள் அவரிடமே இருந்தால் அதை மீட்டுப் பெற முடியும். அவர் அதை விற்றிருந்தால் அந்தப் பணத்தை வேறு எந்தச் செலவையும் செய்யாமல் தடுக்கலாம். ஆனால் அந்தப் பணத்தை அவர் செலவு செய்திருந்தால், அவருக்கு மோட்டார் சைக்கிள் விற்றவர் அப்பணத்தைப் பெற முடியாது. எப்படியிருப்பினும், இளவர் மீது சொந்தப் (personal) பொறுப்பு ஏற்படுவதேயில்லை. இங்கு இளவர் மோட்டார் சைக்கிளுக்குரிய பணத்தை திரும்பச் செலுத்த தொடங்கி விட்டால், அங்கு மீட்டளிப்பு கிடையாது. இதுவே, "பணம் திரும்பச் செலுத்தல் தொடங்கும்போது, மீட்டளிப்பு முடிகிறது" எனப்படுகிறது. (Restitution stops where repayment begins).

Ajudhia Prasad v. Chandan Lal[1]

இவ்வழக்கில், ஒரு இளவர் தன் இரு வீடுகளை அடைமானம் செய்து பெற்ற பணத்தை செலவழித்து விட்டார். ஒப்பந்தத்தின் மறுதரப்பாளர் பணத்தைத் திரும்பப் பெற வழக்காடினார். ஆனால் இங்கு பணம் செலவழிந்து விட்டதால், மீட்டளிப்பு பெற வழியில்லை எனத் தீர்ப்புக் கூறப்பட்டது.

Stocks v. Wilson[2]

இளவர் ஒருவர் தம்மை உரிமை வயதடைந்தவராக மோசடியாகக் கூறி, 100 பவுண்டு (£ 100) மதிப்புள்ள மரச்சாமான்களை வாங்குகிறார். பின்னர் அவற்றை 30 பவுண்டு பணத்திற்கு விற்றுவிடுகிறார். மேற்படி மரச் சாமான்களை விற்றவர் தொடுத்த மேற்படி வழக்கில், மேற்கண்டவாறு இளவர் மரச்சாமான்களை விற்று விட்டதால், அவர் பொறுப்பிலிருந்து விடுபட முடியாது என்றும், அவர் அம்மரச் சாமான்களை விற்ற தொகையான 30 பவுண்டு பணத்தை திருப்பியளிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

1. ILR (1937) All. 860 (FB)
2. (1913) 2 K.B. 235

Leslie v. Sheill[1]

இவ்வழக்கில், இளவர் ஒருவர் தன்னை வயது வந்தவர் என்று மோசடியாகக் கூறி, நிறுமம் ஒன்றிலிருந்து இரு தடவையில் 400 பவுண்டு (£ 200, £ 200) பணத்தைக் கடனாகப் பெற்றார். கடன் கொடுத்தவர் நேர்மை நெறியின் அடிப்படையில் (in equity) பணத்தைத் திரும்பக் கேட்டு வழக்கிட்டார். ஆனால் இதற்கிடையில் அவ்விளவர் கடனாகப் பெற்ற பணம் முழுவதையும் செலவழித்து விட்டார். வழக்கை ஆராய்ந்த **நீதிப்பெருமகனார் சம்னர் (Lord Sumner)** அவர்கள், மேற்படி வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று தள்ளுபடி செய்துவிட்டார். இதற்கு காரணமாக அவர் பின்வரும் கருத்துக்களை கூறினார். அஃதாவது, இளவர் ஒருவர் தனது வயதை மோசடியாக உயர்த்திக் கூறி சொத்து எதையும் பெற்றிருந்தால், அதனை மீட்டளிப்பு செய்து திரும்ப ஒப்படைக்க உத்தரவிடலாம். ஏனெனில் அச்சொத்தை அடையாளம் காணலாம். ஆனால் கடனாகப் பணம் பெற்றிருந்து, அதை அவ்விளவர் செலவழித்துவிட்டிருந்தால், அப்பணத்தைக் கண்டறிய இயலாது. எனவே அப்பணத்தை மீட்டளிக்கச் செய்ய முடியாது. ஆனால் அதே சமயத்தில் அவ்விளவர் அப்பணத்தை திரும்பச் செலுத்தத் தொடங்கி விட்டால், அங்கு மீட்டளிப்பும் முடிந்துவிடுகிறது (Restitution stops where repayment begins).

எனவே இளவரால் பெறப்பட்ட பொருள்களின் அல்லது பணத்தின் அடையாளத்தை கண்டு கொள்ள முடியவில்லையென்றாலோ, அவை இளவரின் உடைமையில் இல்லையென்றாலோ, அங்கு மீட்டளிப்பு செய்யவியலாது என்பதை நாம் மேற்கண்ட வழக்கிலிருந்து அறியலாம்.

6. இளவருக்கு எதிராக "ஏற்றது ஆற்றுக" என்ற கோட்பாட்டை செயல்படுத்த முடியாது (No Specific Performance against a minor):

இளவர் செய்யும் ஒப்பந்தங்கள் இல்லாநிலையாகும். ஆகவே, அவரை ஒப்பந்தச் சரத்துக்களின்படி 'ஏற்றுக் கொண்டதை செயலாற்றுக' என வலியுறுத்த முடியாது.

7. இன்றியமையாப் பொருள்களுக்கான பொறுப்பு (Liability for Necessities) :

இளவர் அல்லது அவரைச் சார்ந்திருப்பவர்களுக்கு (Dependants) வழங்கப்பட்ட இன்றியமையாப் பொருள்களுக்கு, மேற்படி இளவரின் சொத்து பொறுப்புடையதாகிறது. இளவரின் ஒப்பந்தம் இல்லா நிலையதென்றாலும், தன்

(1914) 3 K.B. 607

இன்றியமையாதவற்றுக்காக அவர் செய்யும் ஒப்பந்தம் மூலம் அவர் தனிப்பட்ட பொறுப்பை (personally not liable) அடையாவிட்டாலும், அவரது சொத்துக்கள் பொறுப்புடையதாகின்றன **(பிரிவு 68).**

(எ.கா.) 1. A என்பவர் B என்னும் இளவருக்கு அவரது வாழ்வுக்கு தகுந்த இன்றியமையாதவற்றை வழங்குகிறார். இதற்கு மேற்படி B எனும் இளவரின் சொத்துக்களிலிருந்து இழப்பீடு பெற A உரிமையுடைவராகிறார்.

2. X எனும் இளவரின் மனைவிக்கும், அவரது குழந்தைகளுக்கும், அவர்களது வாழ்க்கைக்குத் தேவையான இன்றியமையாத பொருட்களை Y வழங்குகிறார். இங்கு மேற்படி X-ன் சொத்துக்களிலிருந்து அப்பொருட்களுக்கு உண்டான பணத்தைப் பெற மேற்படி Y-க்கு உரிமை உண்டு.

'இன்றியமையாதவை' (Necessities) என்பன (1) பொருள்களாகவும் இருக்கலாம், அல்லது (2) சேவைகளாகவும் இருக்கலாம்.

1. இன்றியமையாப் பொருட்கள்:

சாதாரண வாழ்வுக்கான பொருள்கள் மட்டுமின்றி நியாயமான முறையில் இளவரின் தகுதிக்கிணங்கத் தேவைப்படும் பொருட்கள் அனைத்தும் இன்றியமையாப் பொருட்களே. கைக்கடிகாரம், சைக்கிள் முதலியன இவ்வகையனவாகும். நிச்சயதார்த்த மோதிரம் இவ்வகையானதுதான். எனினும் அலங்கார ஒப்பனைப் பெட்டி (Vanity Bag) இவ்வகையானதல்ல.

Ryder v. Wombwell[1]

இவ்வழக்கில் பிரதிவாதி ஒரு இளவர். அவர் பெரும் செல்வச் சீமானின் இளைய புதல்வன். அவர் உரிமை வயதடையும் பொழுது, ஆண்டொன்றுக்கு 500 பவுண்டு வருமானமும், 20,000 பவுண்டு மதிப்புள்ள சொத்துக்களும் அவருக்குக் கிடைக்கும். மேல்தட்டு சமூகத்தினருடன் பழகும் அவ்விளவர், தனது நண்பன் ஒருவனுக்கு பரிசளிப்பதற்காக, 15 பவுண்டு விலை கொண்ட பழமையான ஒரு தங்கக் குடி கோப்பையையும் (antique golden goblet), 25 பவுண்டு விலை கொண்ட மாண்க்கமும், வைரமும் பதித்த ஒரு சோடி கைப்பொத்தான்களையும் [a pair of crystal ruby and diamond solitairs (cuff-links)] கடனில் விலைக்கு வாங்கினார். ஆனால் அக்கடனைச் செலுத்தவில்லை. எனவே அவற்றை விற்ற கடைக்காரர், அவ்விளவர் மீது விலைக்காக வழக்குத் தொடர்ந்தார். கீழமை விசாரணை நீதிமன்றம், மேற்கண்ட பொருட்கள் அவ்விளவரின் வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருட்கள் என்று கூறி, அவ்விலைத் தொகையை திரும்பத் தரக்

1. (1867) 3 Ex. 90 (96) on appeal (1868) 4 Ex. 32.

கோரி இளவருக்கு ஆணையிட்டது. ஆனால் இதை எதிர்த்து, அப்பொருட்கள் இன்றியாதவையல்ல என்றும், எனவே தான் பணம் கொடுக்கப் பொறுப்புடையவரல்ல என்றும் கூறி இளவர் மேல்முறையீடு செய்தார். அங்கு இளவர் வாழ்ந்து வரும் செல்வச் செழிப்பான வாழ்க்கையை கருத்தில் கொள்கையில், அவர் வாங்கிய மேற்கண்ட பொருட்கள் அவரது வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாகும் என்று கடைக்காரர் எதிர் வாதம் புரிந்தார்.

ஆனால் மேற்படி மேல்முறையீட்டை ஆராய்ந்த **நீதிபதி பரோன் பரம்வெல் (Baron Bramwell)** அவர்கள், "சில பொருட்கள் இன்றியமையாதவையல்ல என்பது தெளிவாகக் தெரியக் கூடியதாகும். எடுத்துக்காட்டாக, ஆண்களுக்கு காதணி, பார்வையற்றவருக்கு கண் கண்ணாடி. அந்த வகையில் ஒரு இளவருக்கு குடி கோப்பை இன்றியமையாதது என்று வாதிடுவது முரண்பாட்டிற்கு வழி கோலுகிறது. ..... சில பொருட்கள் நிச்சயமாக இன்றியமையாதவையாகும். அவை உணவு, இறைச்சி, காய்கறி போன்றவை. சில பொருட்கள் இன்றியமையாதவை யாக இருக்கலாம் அல்லது இன்றியமையாததல்லவையாகவும் இருக்கலாம். இதை வழக்கின் சூழலைக் கருத்தில் கொண்டு நடுவர்கள் தீர்மானிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, இளவர் ஒருவர் விலையுயர்ந்த மேலங்கியை (expensive coat) தைக்கக் கோருவது..... ....".

இந்த வகையில் மேற்படி வழக்கில் பிரதிவாதியாக உள்ள இளவர், சமூகத்தில் மேல்தட்டு வர்க்கத்தில் இருந்தாலுமே கூட, அவருக்கு விற்கப்பட்ட பொருட்கள், அவரது வாழ்க்கைக்கு இன்றியமையாதவையல்ல என்றும், அவர் பணம் கொடுக்க வேண்டியதில்லை என்றும் இறுதியாக அவர் தீர்ப்புரைத்தார்.

Nash v. Inman[1]

இவ்வழக்கில் பிரதிவாதி ஒரு இளவர். அவர் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது வாதி அவருக்கு பதினொரு இடுப்புச் சட்டைகள் (waistcoats) உள்ளிட்ட சில நவின ஆடைகளை அளித்தார். அவற்றின் மதிப்பு 145 பவுண்டு ஆகும். அப்பணத்தை திரும்ப அளிக்கக் கோரி வாதி, மேற்படி இளவர் மீது வழக்குத் தொடர்ந்தார். அச்சட்டைகளை பெறும் பொழுது, மேற்படி பிரதிவாதி ஒரு இளவராக இருந்தார் என்பதை மேற்படி வழக்கில் அவ்விளவரின் தந்தையார் நிரூபித்தார். மேலும் அவ்விளவருக்கு, வாதி மேற்கண்ட சட்டைகளை அளிக்கும் சமயத்தில், தாம் தேவையான சட்டைகளை வாங்கிக் கொடுத்திருந்ததாகவும் தந்தை சாட்சியமளித்தார். எனவே பிரதிவாதிக்கு போதுமான சட்டைகள் இருந்த போதும், மேலும் பதினொரு சட்டைகளை வாதி

1. (1908) 2 K.B. 1

அளித்தது, இன்றியமையாப் பொருட்களில் சேராது என்றும், எனவே அதற்குரிய பணத்தைப் பெற வாதிக்கு உரிமையில்லை என்றும் கூறி, வாதியின் வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

2. இன்றியமையாச் சேவைகள் (Services) :

கல்வி கற்பித்தல், மருத்துவ ஆலோசனை, சட்ட ஆலோசனை, இளவரின் திருமணத்திற்காக கொடுக்கப்பட்ட பணம் ஆகியவை இளவருக்குச் செய்யும் இன்றியமையாச் சேவைகளாக கருதப்படுகின்றன. இவ்வாறு சேவை செய்தவர்கள் அதற்குண்டான தொகையை இளவரின் சொத்துக்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

Roberts v. Gray[1]

மேற்கண்ட வழக்கில் இராபர்ட்ஸ் என்பவர் புகழ்பெற்ற **தொழில்முறை மேசைக்கோல் பந்து விளையாட்டு வீரர் (professional billiards player).** கிரே என்பவர் ஒரு இளவர். மேற்படி இராபர்ட்ஸ் என்பவர், மேற்படி விளையாட்டிற்காக உலகச் சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவிருந்தார். அவருடன் சேர்ந்து விளையாட கிரே விரும்பினார். எனவே அவர்களுக்கிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி மேற்படி விளையாட்டை சேர்ந்து விளையாடும் பொருட்டு, அச்சுற்றுப் பயணத்தில் இராபர்ட்ஸ்–வுடன் கிரே செல்ல வேண்டியது. அதற்கான செலவுகளை இராபர்ட்ஸ் ஏற்றுக் கொள்ள வேண்டியது. கிரே–விற்கு சம்பளமாக 1,500 பவுண்டு பணத்தைக் கொடுக்க வேண்டியது. ஆனால் ஒப்பந்தப்படி கிரே அச்சுற்றுப் பயணத்தில் கலந்து கொள்ளாமல் ஒப்பந்த மீறுகை புரிந்துவிட்டார். எனவே இழப்பீடு கோரி கிரே மீது இராபர்ட்ஸ் வழக்குத் தொடர்ந்தார். அதில் கிரே என்பவர், 1,500 பவுண்டு பணத்தை இழப்பீடாக இராபர்ட்ஸ்–க்கு கொடுக்க வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

அப்பொழுது **நீதிபதி கோஸன்ஸ்–ஹார்டி (Cozens-Hardy, M.R.)** அவர்கள், "மேசைக்கோல் பந்தாட்டத்தை ஒரு தொழில்முறை விளையாட்டாக கற்றுக் கொள்ள விழையும் ஒரு இளவர் ஒருவர், மற்றொருவருடன் அதுவும் இராபர்ட்ஸ் போன்ற குறிப்பிடத் தகுந்த விளையாட்டு வீரருடன் சேர்ந்து விளையாடுவது, அவ்விளவருக்கு அளிக்கப்படும் பயிற்சிகளிலேயே மிக முக்கியமான வகையைச் சார்ந்ததாகும். மேற்படி ஒப்பந்தம் ஒரு இளவரின் நலனுக்காக கற்பித்தல், பயிற்சியளித்தல், பணியளித்தல் ஆகியவற்றிற்கான விளைவைக் கொண்ட நியாயமான ஒன்றாகும்," என்று கருத்துரைத்தார்.

எனவே கிரே எனும் இளவரைப் பொறுத்த வரை, மேற்படி விளையாட்டிற்கான பயிற்சி அவரது வாழ்க்கைக்குண்டான ஒரு இன்றியமையாத சேவை என்றும்,

1. (1913) 1KB 520 : All. ER 870

இச்சேவையைப் ஒப்பந்தப்படி பெற்றுக் கொள்ளாமல், ஒப்பந்தத்தை மீறியதால், அதற்குண்டான இழப்பீட்டைக் கொடுக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் தீர்ப்பு புரைத்ததை நாம் மேற்கண்ட வழக்கிலிருந்து தெளிவாக அறியலாம்.

8. இளவரின் பெற்றோரும், பாதுகாவலரும் (Minor's Parents and Guardian) :

இளவர் செய்யும் ஒப்பந்தம் அவரது இன்றியமையாத் தேவைகளுக்காக இருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும் அவ்வொப்பந்தம் அவரது பெற்றோரையோ அல்லது பாதுகாவலரையோ கட்டுப்படுத்தாது. ஆயினும் அவர் பெற்றோருக்கோ அல்லது பாதுகாவலருக்கோ முகவராக (Agent) செயல்பட்டிருந்தால், அது அவர்களைக் கட்டுப்படுத்தும்.

9. முகவராக இளவர் (Minor as an Agent) :

ஓர் இளவரை முகவராக நியமிக்கலாம். இளவர் தன்னுடைய முதல்வருக்காக மூன்றாவது நபருடன் ஒப்பந்தம் செய்யலாம். முகவராக செயல்படும் இளவரின் செயல்களுக்கு முதல்வரே, மூன்றாம் நபருக்கு பொறுப்பாவார். மாறாக, இளவர் பொறுப்பாகமாட்டார். இளவரின் செயலால் ஏற்படும் நட்டத்திற்கு, அவரிடமிருந்து இழப்பீடு ஏதும் கோர முடியாது.

10. கூட்டாளியாக இளவர் (Minor as a Partner) :

கூட்டாண்மை (Partnership) என்பது, கூட்டாண்மை ஒப்பந்தத்தின் அடிப்படையில் எழுவதாகும். இளவர் ஒருவர் ஒப்பந்தத்தில் ஈடுபட முடியாது. எனவே அவர் ஒரு கூட்டாண்மை வணிகத்தில், கூட்டாளியாக (Parter) முடியாது. எனினும் கூட்டாண்மை வணிகத்தினால் ஏற்படும் பலனுக்காக, இளவர் ஒருவரை கூட்டாளியாக சேர்த்துக் கொள்ளலாம் (Minor admitted to the benefits of Partnership). அவருக்கு அக்கூட்டு வணிகத்தில் எந்த அளவிற்கு அக்கறை உள்ளதோ, அந்த அளவிற்கு மட்டுமே அவர் பொறுப்பாவார். கூட்டாண்மை வணிக நிருவாகத்தில் தலையிட அவருக்கு உரிமையில்லை. அதுபோல், அவ்வணிகத்தின் கணக்குகளை நகல் எடுத்துக் கொள்ளவும், மேற்பார்வையிடவும் அவருக்கு அதிகாரமில்லை.

11. இளவரின் பிணையாளர் (Surity for a Minor) :

ஒரு இளவர் பெறும் கடன் தொகைக்கு பிணையாளராக நிற்கும் ஒருவர் மீது வழக்குத் தொடர்ந்து அவரைப் பொறுப்பேற்கச் செய்யலாம். ஆனால் இளவரை பொறுப்பேற்கச் செய்ய முடியாது. அதுபோல் உரிமை வயதையடைந்த ஒருவர் இளவர் ஒருவருடன் சேர்ந்து கடனுறுதிச் சீட்டோ, அல்லது வேறு பத்திரமோ

எழுதிக் கொடுத்தால், அதற்கு அந்த உரிமை வயதடைந்த நபர்தான் பொறுப்பாவானே தவிர, இளவர் பொறுப்பாகமாட்டார்.

12. இளவரும் நொடிப்பு நிலையும் (Minor and Insolvency) :

ஒரு இளவரை நொடிந்தவர் என நீதிமன்றம் வினம்ப முடியாது. ஏனெனில் அவர் கடன் பெறுதலுக்கான ஒப்பந்தம் செய்யத் தகுதியற்றவராக இருக்கிறார்.

13. நிறுவனத்தின் உறுப்பினராக இளவர் (Minor as a member of a company) :

ஒரு இளவர் ஒப்பந்தம் செய்யும் தகுதியற்றவராதலால், அவரால் ஒரு நிறுவனத்தின் உறுப்பினராக முடியாது.

இளவர் ஒப்பந்தங்கள் - இந்திய மற்றும் இங்கிலாந்து சட்டப்படி :

இந்திய சட்டப்படி	இங்கிலாந்து சட்டப்படி
1. இந்திய சட்டப்படி இளவரின் ஒப்பந்தம் ஆரம்பம் முதலே இல்லா நிலைய தாகும். (void abinitio).	இளவரின் இன்றியமையாத் (necessaries) தேவைகளை அளிக்கும் பொருட்டு ஏற்பட்ட ஒப்பந்தங்களைத் தவிர, இளவரின் கடன் (loan) ஒப்பந்தங்கள், கணக்குத் தொடர்பான ஒப்பந்தங்கள் ஆகியனவ இல்லா நிலையதாகும். (Infant's Relief Act, 1874)
2. இளவருக்கு அளிக்கப்பட்ட இன்றியமை யாச் சேவைகளுக்கான (Service) ஒப்பந்தத்தில், அவரை தனிப்பட்ட விதத் தில் பொறுப்புக்குள்ளாக்க முடியாது.	இளவரின் நலனுக்கென அளிக்கப் பட்ட சேவைகளுக்கான ஒப்பந்தத்தில் அவ்வினவரை இச்சட்டத்தின் கீழ் பொறுப்புக்குள்ளாக்கலாம்.
3. இளவரின் இன்றியமையாத்தேவைகளை அளிக்கும் பொருட்டு ஏற்பட்ட ஒப் பந்தங்களில் இளவரின் சொத்துக் களை பொறுப்புள்குள்ளாக்க முடியும்.	இங்கு அந்த இளவரையே தனிப்பட்ட விதத்தில் பொறுப்புக்குள்ளாக்க முடியும் (personally liable.)
4. ஒரு ஒப்பந்தமானது இளவரின் நலனுக் காகவும் (benefit) அவ்வினவரின்	இங்கு எந்நிலையிலும் குறித்த வகை நிறைவேற்றம் கிடையாது.

காப்பாளராலும் (guardian) செய்யப் பட்டிருந்தாலொழிய, அவ்வொப் பந்தத்தை அவ்விளவருக்கு எதிராக அல்லது அவ்விளவரால் குறித்த வகையில் நிறைவேற்றுதல் செய்யக் கட்டாயப்படுத்த முடியாது (No specific performance).	
5. ஒரு இளவரின் ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டால் பாதிக்கப்பட்டவருக்கு குறித்த வகை நிவாரணச் சட்டத்தின் (Specific Relief Act) கீழ் இழப்பீடு வழங்கப்படும்.	இங்கு "பணம் திரும்பச் செலுத்தல் தொடங்கும்போது மீட்டளிப்பு முடிந்து விடுகிறது" (Restitution stops where repayment begins) என்ற விதி பின்பற்றப்படுகிறது. (முன்னர் காண்க.)
6. 1875–ஆம் ஆண்டின் இந்திய உரிமை வயதடைந்தோர் சட்டப்படி 18 வயது நிரம்பப் பெறாதவர்கள், 'இளவர்கள்' எனக் கருதப்படுகின்றனர். அதே சமயத்தில் காப்பாளர் மற்றும் காப் பிலுள்ளோர் சட்டத்தின்படி சில சூழ் நிலைகளில் 21 வயதிற்குட்பட்டவர்கள் 'இளவர்களாக' கருதப்படுகின்றனர்.	இங்கிலாந்து சட்டப்படி, 21 வயதிற்குட் பட்டவர்கள் அனைவருமே 'இளவர்கள்' தாம்.

இளவர்களின் நிலைபற்றி முடிவாக அறிஞர் சால்மண்ட் கூறுவதாவது :

அறிஞர் சால்மண்ட் அவர்கள், "சட்டம்" இளவர்களை காப்பாற்றுகிறது; அவர்களின் உரிமைகளையும் பாதுகாக்கிறது;அவர்தம் குறைகளை மன்னிக்கிறது. அவர் தம் வேண்டுகோளுக்கு செவி சாய்க்கிறது; நீதிபதிகள் அவர்தம் ஆலோசகர்கள்; நடுவுநிலைத் தீர்ப்பு கூறுவோர்கள் (Jury) அவர்தம் பணியாளர்கள்; சட்டம் அவர்தம் பாதுகாப்பாளர்" என இளவர்களின் உரிமைப்பற்றி நயமாக எடுத்துக் கூறுகிறார்.

II. திடமற்ற மனமுடையோர் (Persons of Unsound Mind):

ஒப்பந்தத்திற்கான திட மனம் (Sound Mind) - சட்ட வரையறை:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 12–வது பிரிவு ஒப்பந்தம் செய்து கொள்ளும்

நோக்கத்திற்காக திட மனம் என்றால் என்ன (What is a sound mind for the purposes of contracting) என்பதற்கு பின்வருமாறு வரையறை பகர்கிறது. அதன்படி,

"ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்துங்கால், ஒருவர் அவ்வொப்பந்தத்தை புரிந்து கொள்ளும் திறன் படைத்தவராகவும், அவ்வொப்பந்தம் தனது நலன்களை எவ்வாறு பாதிக்கும் என்பதனை கணிக்கும் அறிவு படைத்தவராகவும் இருந்தால், அவர் ஒப்பந்தம் செய்யும் பொருட்டு திடமான மனம் படைத்தவராகக் கொள்ளப் படுவார்.

வழக்கமாக திடமற்ற மனத்தையும், ஆனால் எப்பொழுதாவது திடமான மனத்தையும் கொண்ட ஒருவர், திடமான மனத்துடன் இருக்கும் பொழுது, ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளலாம்.

வழக்கமாக திடமான மனத்தையும், ஆனால் எப்பொழுதாவது திடமற்ற மனத்தையும் கொண்ட ஒருவர், திடமற்ற மனத்துடன் இருக்கும் பொழுது ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளலாகாது."[1]

மேற்கண்ட வரையறையில் முதல் பத்தியில் கண்டுள்ள குணாதிசயங்கள் எவருக்கு இல்லையோ, அவரை திடமற்ற மனத்தைக் கொண்டவராக (Person of unsound mind) நாம் அறியலாம். அவர் கொள்ளும் ஒப்பந்தம் செல்லாது.

கீழ்க்காணும் நபர்கள் திடமற்ற மனத்தைக் கொண்டவர்களாகக் கருதப்படுவர்.

1. பைத்தியக்காரர்கள், பித்தர்கள் (Lunatics and Insane Persons): பைத்தியக்காரர்கள் என்பவர் மூளை குழம்பியவராவார். பித்தர் என்பவர் சில சமயங்களில் நல்ல மனநிலையுடையவராகவும் வேறு சில சமயம் மனம் குழம்பிய நிலையிலும் இருப்பார். இவர்கள் நல்ல மனநிலையில் இருக்கும் போது (Lucid intervals) ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். இவர்கள் தங்கள் பைத்திய அல்லது பித்துத் தன்மைக்காக வாதாடி ஒப்பந்தத்தைத் தவிர்க்கலாம். ஒப்பந்தம்

1. **What is a sound mind for the purposes of contracting.**- A person is said to be of sound mind for the purpose of making a contract, if, at the time when he makes it, he is capable of understanding it and of forming a rational judgment as to its effect upon his interests.

   A person who is usually of unsound mind, but occasionally of sound mind, may makes a contract when he is of sound mind.

   A person who is usually of sound mind, but occasionally of unsound mind, may not make a contract when he is of unsound mind. - **Section 12 of the Indian Contract Act, 1872.**

செய்தபோது மேற்படி நபர் நல்ல மனநிலையில் இருந்தார் என்பதை வழக்குத் தொடுத்த வாதிதான் நிரூபிக்க வேண்டும்.

2. பிறவி மந்தன் (முழுமூடன்) (Idiot) : சிந்தனைத்திறம் சிறிதுமற்ற, அல்லது பகுத்தறிந்து முடிவெடுக்கத் திறமற்ற ஒருவரை 'பிறவிமந்தன்' எனலாம். பிறவி மந்தம் என்பது மூளை வளர்ச்சிக் குறைவால் ஏற்படும் பிறவிக்கூறான குறைபாடாகும். இவருடன் செய்யும் உடன்பாடு முழுமையாக இல்லாநிலை (Void) அடைகிறது.

மேற்கூறிய இருவகை நபர்களுமே சொந்தப் பொறுப்பு அற்றவர்களாகிறார்கள். ஆனால் அவர்களுக்கு வழங்கப்பட்ட இன்றியமையாதனவற்றுக்காக, அவர்களுடைய சொத்துக்கள் பொறுப்பேற்க வேண்டும்.

3. மது அருந்தியவர் (Drunken persons) : மது அருந்தியவர் நிலையும் வைத்தியக்காரர் நிலையும் சட்டத்தின்பால் ஒன்றே. அவர் தற்காலிகமாக ஒப்பந்தம் செய்யத் தகவுடைமையற்றவராகிறார். மது அருந்தியவரின் உடன்பாடு இல்லா நிலையதாகும். அதை, அவர் நல்ல நிலைக்குத் திரும்பிய பின் ஏற்புறுதி (Ratification) செய்ய முடியாது.

மது அருந்தியவரின் ஒப்பந்தம் இல்லாநிலை பெற, குடித்தன்மை முழுமையானதாகவும், மெய்யானதாகவும் இருக்க வேண்டும். மது அருந்தியவரால் அறிவார்ந்த முடிவு எடுக்க முடியாத நிலை இருக்க வேண்டும். மேலும் அவர் ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தை தெரிந்து கொள்ள முடியாதவராகவும், அதன் சட்டபூர்வ விளைவுகளை உணர முடியாதவராகவும் இருத்தல் வேண்டும்.

எனினும் பிரிவு 68–ன்படி மது அருந்தியவர், அவருக்கும் அவரால் சட்டப்படி பாதுகாக்கப்படுபவர்களுக்கும் வழங்கப்படும் இன்றியமையாத பொருள்களுக்காக பொறுப்பு ஏற்க வேண்டியவராவார்.

ஆங்கிலச் சட்டம் : ஆங்கிலச் சட்டப்படி, மேற்கண்டோர் செய்யும் ஒப்பந்தம் தவிர்தகு (Voidable) நிலை பெறுகிறது. அவ்வாறு தவிர்க்க எண்ணுபவர் தன்னுடைய தகுதியில்லாத் தன்மையை மெய்ப்பிப்பதுடன், மற்றவர் தன் உண்மை நிலையை அறிந்தவராக இருந்தார் என்பதையும் மெய்ப்பிக்க வேண்டும்.

III. சட்டம் எதனாலும் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தகுதியிழக்கப்பட்ட நபர்கள் (Persons disqualified from contracting by any law):

ஒப்பந்தம் செய்து கொள்பவர்கள் சட்டப்படி உரிமை வயது அடைந்தவர்

களாகவும், நல்ல மன நிலையில் உள்ளவர்களாகவும் இருந்த போதிலும், அவர்களது தகுநிலையின் காரணமாக அவர்கள் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தகுதியற்றவர்களாக சட்டத்தால் ஆக்கப்படலாம். அதாவது அவர்கள் ஒப்பந்தம் செய்து கொள்ளக் கூடிய தகுதியை சட்டம் விளம்புகிறது. அத்தகு நபர்கள் வருமாறு.

1. பகை நாட்டவர் (Alien Enemy) :

நமது இந்திய நாட்டுடன் பகை கொண்டு இருக்கும் நாடு 'பகை நாடு' எனப்படுகிறது. அந்நாட்டில் வாழ்பவர் அல்லது வணிகம் செய்பவர், 'பகை நாட்டவர்' ஆவர். இந்தியாவுக்கும், பகை நாட்டுக்குமிடையே போர் அறிவிக்கப் பட்டு, அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது, 1. அப்பகை நாட்டவர் ஒருவர், இந்தியக் குடிமகன் ஒருவருடன் உடன்பாடு செய்து கொள்ள முடியாது. மேலும், 2. போர் அறிவிக்கப்படுமுன் பகை நாட்டவரும் இந்தியக் குடிமகனும் செய்து கொண்டிருந்த ஒப்பந்தம் போர் அறிவிக்கப்பட்டவுடன் முடிவிற்கு வந்துவிடுகிறது அல்லது போர்க் காலத்தில் நிறுத்தி வைக்கப்பட்டு, அது காலாவதியாகாமலிருந்தால் போர் முடிந்ததும் புதுப்பிக்கப்படுகிறது.

2. அயல்நாட்டு அரசரும் தூதரும் (Foreign Sovereign and Ambassador):

இங்கிலாந்துச் சட்டப்படி : இங்கிலாந்துச் சட்டப்படி அயல்நாட்டு அரசரும், தூதரும் மற்றவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளவும், அதை நீதிமன்றத்தில் செயலுறுத்தவும் உரிமையுடையவர்களாக இருக்கிறார்கள். அதாவது ஒப்பந்தத்தை நிறைவேற்றும் பொருட்டு மறுதரப்பினர் மீது வழக்குத் தொடர அவர்களுக்கு உரிமை உண்டு. எனினும் மறுதரப்பினர்கள் அவர்கள் மீது தொடரும் வழக்குகளில் அவர்களுக்கு சில சிறப்புரிமைகளும் (Privilege), பாதுகாப்புரிமைகளும் (immunities) உண்டு.

இந்தியச் சட்டப்படி : இந்திய உரிமையியல் நடைமுறைச் சட்டம் (Code of Civil Procedure) பிரிவு 86–ன் படி அயல்நாட்டு அரசர் அல்லது அரசுத் தலைவர், தூதுவர், அரசுப் பேராள் (Envoy) முதலியோருக்கு எதிராக இந்திய நீதிமன்றங்களில் வழக்குத் தொடர வேண்டுமெனில், மத்திய அரசின் ஒப்புதல் தேவை.

அயல்நாட்டு அரசர் முதலானோர், இந்தியாவில் வாழும் அவர்களின் முகவர் மூலம் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். அச்சந்தர்ப்பத்தில் முகவர்கள் ஒப்பந்த நிறைவேற்றத்திற்கு சொந்தப் பொறுப்பு ஏற்றவர் (personally liable) ஆகிறார்.

3. தண்டனைக் கைதிகள் (Convicts) :

சிறைப்படுத்தப்பட்டிருக்கும் தண்டனைக் கைதிகள் அவர்களது சிறைத் தண்டனைக் காலத்தில் ஒப்பந்தம் செய்ய அருகதையற்றவர்களாவர். தண்டனைக்

காலம் நிறைவு பெற்றதும், அவ்வியலாமை முடிவுறுகிறது. ஆயினும், அவர்கள் பிணையத்தின் பேரில் விடுதலை செய்யப்பட்டிருந்தாலோ, சட்டப்படி விடுதலை பெற்றாலோ, நீதிமன்றம் மன்னித்து விடுதலை செய்தாலோ, ஒப்பந்தம் செய்ய அல்லது அதன் மீது வழக்காடவோ முடிந்தவராகி விடுகின்றனர்.

4. வாழ்க்கைத் தொழிலர்கள் (Professionals) :

இங்கிலாந்தில் மாவழக்கறிஞர்கள் (Barristers) தங்கள் தொழில்பற்றி ஒப்பந்தங்களைச் செய்யவோ, தங்கள் கட்டணங்களுக்காக வழக்குத் தொடரவோ அல்லது வழக்குத் தொடரப்படவோ அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் இந்தியாவில் இவ்விதத் தடையேதுமில்லை.

5. நொடித்தவர் (Insolvent or Bankrupt) :

ஒரு கடனாளி நொடிப்பு நிலை அடைந்துவிட்டவராக நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டு விட்டால், நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட சொத்தாட்சி அதிகாரி (Official Receiver) அல்லது வழக்குறு சொத்துப் பேணுநர் (Official Assignee) என்பவரிடம் நொடித்தவரின் சொத்துக்கள் யாவும் ஒப்படைக்கப் படுகின்றன. நொடித்தவரின் சொத்துப்பற்றி ஒப்பந்தம் செய்ய அவர்களுக்கே அருகதையுண்டு. அவர்களே மற்றவரின் மேல் அச்சொத்துக்கள் பற்றி வழக்காடவோ, வழக்காடப்படவோ தகுதி பெற்றவர்கள். நீதிமன்றம் ஒரு நொடித்தவரை அந்நொடிந்த நிலையிலிருந்து விடுபட்டு விட்டதாக (discharge) அறிவித்து விட்டால், அவர் பின்பு ஒப்பந்தம் செய்து கொள்ளத் தகுதி பெற்றவராகி விடுகிறார்.

6. கூட்டுருமங்கள் (Corporations), கூட்டுப்பங்கு நிறுவனங்கள் (Joint Stock Companies):

இவை சட்டத்தால் ஏற்படுத்தப்படும் 'செயற்கை நபர்'கள் (Articial Persons) எனப்படும். இவைகள் ஒப்பந்தம் செய்வது பற்றி இந்திய ஒப்பந்தச் சட்டம் எதுவும் கூறவில்லை. இவைகள், அவற்றுக்கென ஏற்படுத்தப்பட்டிருக்கும் தனிப்பட்ட சட்டங்கள், நிறுவனச் சட்டம் முதலியவற்றின் கீழ் சிறப்புரிமை பெறத் தக்கனவாக உள்ளன. இவை மற்றவர்களுடன் ஒப்பந்தம் செய்ய உரிமையுடையவை. இவைகளால் சொத்துக்களை வாங்க, விற்க முடியும்; கடனுக்காக ஒப்பந்தம் செய்து கொள்ள முடியும்; மற்றவர்கள் மேல் வழக்காற்ற முடியும்; மற்றவர்களும் அவற்றின் மேல் வழக்காற்ற முடியும்.

7. திருமணமான பெண்கள் (Married Women):

கணவருக்கு முகவராக நடந்து தன் குடும்பத்தின் இன்றியமையாதன

வற்றுக்காக (மட்டும்) கடன் பெற்றிருந்தால், ஆங்கில இந்தியச் சட்டங்களின்படி ஒரு மணமான பெண் தன் கணவனைச் சட்டப்படி கட்டுப்பட்டவராக்க முடியும். இந்தியச் சட்டப்படி ஒப்பந்தத் தகவுடமை ஆணுக்கொன்றும் பெண்ணுக்கொன்றும் என மாறுபட்டவையல்ல. ஆகவே, பெண் மணமானவராக இருந்தாலும், இல்லாவிட்டாலும், ஒப்பந்தங்களில் ஈடுபட்டு, தன் சொந்தச் சொத்தைக் கட்டுப்பாட்டுக் குள்ளாக்கலாம். எனவே அவர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் மற்றவர் மீது வழக்காற்ற முடியும். அதுபோல் அவர் மீதும் மற்றவர் வழக்கிட முடியும்.

26. State the position of law regarding the fraudulent representation made by a minor that he is a major. (ஒரு இளவர் தம்மை ஒரு வயதடைந்தவராக நேர்மையற்ற முறையில் கூறுவது குறித்து சட்டத்தின் நிலையை எடுத்துரைக்க.)

(முந்தைய வினாவின் விடையில் I-வது பகுதியில்
பத்தி எண். 3 மற்றும் 5–அய் எழுதுக. பத்தி எண். 7–ம் சுட்டிக்காட்டலாம்.)

27. "Apart from minority and unsoundness of mind the capacity of a person to contract may be affected by virtue of any special law to which he is subject." Comment. ("இளவர் நிலை, திடமனதற்ற நிலை தவிர, ஒருவர் தான் உட்பட்டுள்ள சிறப்புச் சட்டம் எதனின் வாயிலாகவும் ஒப்பந்தம் செய்து கொள்ளும் தகுதியானது பாதிப்படையலாம்." விமர்சிக்க.)

(முந்தைய வினாவின் விடையில் III-வது பகுதியில் காண்க.)

10

தன்னிச்சையான இசைவு (அல்லது) இசைவில் குறைபாடு
[Free Consent (or) Flaw in Consent]

28. When is a consent of a party said to be free ? What is the effect when the consent is not free ? (ஒரு ஒப்பந்தத் தரப்பினரின் இசைவு தன்னிச்சையானதாக இருக்கிறது என்று சொல்லப்படுவது எப்பொழுது? இசைவு தன்னிச்சையானதாக இல்லையெனும் பொழுது ஏற்படும் விளைவு யாது?)

(அல்லது)

What are the circumstances under which consent of parties to a contract may not be free ? Explain. (ஒரு ஒப்பந்தத்தின் தரப்பினர்களின் இசைவு தன்னிச்சையானதாக இல்லாமல் இருக்கக்கூடிய சூழ்நிலைகள் யாவை ?)

(அல்லது)

What is meant by Flaw in consent ? Explain with reference to provisions of Indian Contract Act. (இசைவில் குறைபாடு என்றால் என்ன? இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் வகைமுறைகளைக் குறிப்பிட்டு விளக்குக.)

(அல்லது)

Free Consent - Write short notes. (தன்னிச்சையான இசைவு – சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை :

உடன்பாடு செய்து கொள்பவர்கள் உடன்பாட்டுப் பொருள் குறித்து ஒருமித்த கருத்துடையவர்களாக (Consensus ad idem) இருத்தல் வேண்டும். மேலும் அவர்கள் அவ்வுடன்பாட்டிற்கு அளிக்கும் இசைவும் தன்னிச்சையானதாக (free consent) இருத்தல் வேண்டும், என்று இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 10–வது பிரிவு வலியுறுத்துகிறது. சற்று விரிவாகச் செல்லும்முன், 'இசைவு' எனும் பதத்தின் பொருளை இங்கு அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

இசைவு (Consent) - வரையறை :

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 13–வது பிரிவின்படி "இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள், ஒரே பொருள் குறித்து, ஒரே உணர்வுடன் உடன்பாடு செய்து கொண்டால், அவர்கள் இசைகிறார்கள் எனக் கொள்ளப்படும்."[1] அதாவது ஒப்பந்தத்தின் ஒரு தரப்பினர் ஒன்றினைப் பற்றி என்ன நினைக்கிறாரோ அதனையே மற்றவரும் அதே உணர்வுடன் நினைக்க வேண்டுமென்பது, மேற்படி பிரிவு 13-ன் பொருளாகும். எனினும் மேற்படி இரு தரப்பினரும் ஒரே மாதிரியாக நினைத்து உடன்பாட்டால் மட்டும் போதாது. மேற்சொன்னதுபோல், அவர்கள் உடன்பாட்டுப் பொருள் குறித்து தரும் இசைவு தன்னிச்சையானதாக இருத்தலும் வேண்டும். அதாவது அந்த இசைவு பிறருடைய தூண்டுதலின்றி, கட்டாயமின்றி கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

தன்னிச்சையான இசைவு (Free Consent) - வரையறை:

பிரிவு 14–ன்படி இசைவு தன்னிச்சையாக அமைய வேண்டுமென்றால், அது பின்வருவனவற்றால் தூண்டப்பட்டிருக்கக் கூடாது.

1. வலுக்கட்டாயம் (Coercion) (பிரிவு 15)
2. தகாத செல்வாக்கு (Undue Influence) (பிரிவு 16)
3. மோசடி (Fraud) (பிரிவு 17)
4. திரித்துக்காட்டல் (Misrepresentation) (பிரிவு 18)
5. தவறு (Mistake) (பிரிவுகள் 20, 21 & 22)

1. "Two ir more persons are said to consent when they agree upon the same thing in the same sense. - **Section 13 of the Indian Contract Act, 1872.**

இசைவு தன்னிச்சையானதாக இல்லையெனும்பொழுது ஏற்படும் விளைவு (Effect) :

மேற்கண்டவற்றால் தூண்டப்பட்டு எழுந்த இசைவு, ஒப்பந்தத்தை தவிர் தகு ஒப்பந்தமாகவோ (Voidable) அல்லது இல்லாநிலை ஒப்பந்தமாகவோ (Void) செய்துவிடும்.

(அடுத்துவரும் 1 முதல் 5 தலைப்புகளின் கீழான கருத்துக்களை சுருக்கமாக குறிப்பிடவும்)

1. வலுக்கட்டாயம் [Coercion] [பிரிவு 15]

29. Define 'Coercion' and discuss the principles arising out of it. ("வலுக்கட்டாயத்தை" வரையறுத்து அது குறித்த சட்டக் கோட்பாடுகளை விவாதிக்க.)

(அல்லது)

What is meant by coercion ? What is the effect of coercion on a contract? Point out the distinction between coercion and duress. (வலுக்கட்டாயம் என்றால் என்ன? ஒரு ஒப்பந்தத்தின் மீதான வலுக்கட்டாயத்தின் விளைவு யாது? வலுக்கட்டாயத்திற்கும் உடற்கட்டாயத் திற்குமிடையே உள்ள வேறுபாட்டை சுட்டிக்காட்டுக.)

(அல்லது)

Differentiate between coercion and duress. (வலுக்காட்டாயத்தையும் உடற்கட்டாயத்தையும் வேறுபடுத்துக.)

(அல்லது)

Coercion - Write short notes. (வலுக்காட்டாயம் – சிறு குறிப்பு எழுதுக.)

வலுக்கட்டாயம் (Coercion) - விளக்கம்:

உடல் பலத்தைக் கொண்டு அச்சுறுதியும், மிரட்டியும் ஒருவர் மற்றொருவரால் ஒப்பந்தம் செய்து கொள்ள கட்டாயப்படுத்தப்பட்டாரென்றால், அங்கு 'வலுக்கட்டாயம்' பயன்படுத்தப்பட்டிருப்பதாகக் கொள்ளலாம்.

வலுக்கட்டாயம் - பிரிவு 15 கூறும் வரையறை:

'யாராகிலும் ஒருவரை உடன்பாடு ஒன்றில் சேர வைக்கும் நோக்கோடு,

இந்திய தண்டனைச் சட்டத்தால் (i) தடை செய்யப்பட்டுள்ள குற்றச் செயலொன்றை செய்தல், அல்லது (ii) செய்வதாக அச்சுறுத்தல், அல்லது (iii) சட்டப்புறம்பாக அவரது உடைமையை கொடாமல் வைத்தல், அல்லது (iv) வைத்துக் கொள்வதாக அச்சுறுத்தல் வலுக்கட்டாயமாகக் கருதப்படும்'[1] என இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **15–வது பிரிவு** கூறுகிறது.

எடுத்துக்காட்டாக, கத்தியால் குத்தி அல்லது துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்துவிடுவதாக அச்சுறுத்துவது, குற்றங்கருதி மிரட்டுவது, காயம் ஏற்படுத்துதல், கற்பழிக்க, மான நட்டம் ஏற்படுத்த, பொய்சாட்சி சொல்லப்போவ தாக அச்சுறுத்தல், தற்கொலை செய்து கொள்வதாக மிரட்டுதல் முதலியவை இந்திய தண்டனைச் சட்டத்தால் குற்றமெனத் தடை செய்யப்பட்ட சில செயல்களாகும்.

'வலுக்கட்டாயம்' யாரிடமிருந்து யாருக்கு செய்யப் படுதல் வேண்டும்?

'வலுக்கட்டாயம்' என்பது ஒப்பந்தத் தரப்பாளரிடமிருந்து வர வேண்டு மென்பதில்லை. மூன்றாவது நபர், ஒருவரிடமிருந்தும் தோன்றலாம். அதுபோலவே, அதை ஒப்பந்த மறுதரப்பாளருக்கு எதிராகத்தான் பயன்படுத்த வேண்டுமென்ப தில்லை. எவருக்கெதிராகவும் பயன்படுத்தப்படலாம் (ஆனால் அது, சம்பந்தப்பட்ட தரப்பினரை மறைமுகமாக பாதிப்பதாக அமைய வேண்டும்). வலுக்கட்டாயமென்பது பயமேற்படுத்தல், உடலால் கட்டாயப்படுத்துதல், பொருட்சேதம் செய்தல் ஆகிய வற்றையும் குறிக்கும்.

முக்கியமான வழக்குகள் :

(i) இந்திய தண்டனைச் சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ள செயலைச் செய்தல்:

Ranganayakamma v. Alwar Chetty[2]

ஒருவர் தனது இளம் மனைவியை விட்டுவிட்டு இறந்தார். அவரது சுற்றத்தினர், ஒரு சிறுவனை 'தத்தெடுப்பு' (Adoption) செய்ய வேண்டுமென்றும், அவ்வாறு செய்யாவிட்டால் அவரது சவத்தை இறுதிச் சடங்குகளுக்காக எடுத்துச் செல்ல முடியாது என்றும், மேற்படி விதவையை வலியுறுத்தினர். இந்த பிரச்சனை

1. **"Coercion"** is the committing of threatening to commit any act forbidden by the Indian Penal Code (XLV of 1860), or the unlawful detaining, or threatening to detain, any property, to the prejudice of any person whatever, with the intention of causing any person to enter into an agreement. - **Section 15 of the Indian Contract Act, 1872.**

2. (1889)13 Mad. 214

யிலிருந்து மீள, அந்தக் குறிப்பிட்ட சிறுவனை அவ்விதவை தத்தெடுப்பு செய்தார். பின்பு அவர் தொடர்ந்த வழக்கில், அவரது இசைவு வலுக்கட்டாயத்தின் பேரில் பெறப்பட்டது என்றும், எனவே தத்தெடுப்பு ஒப்பந்தம் தவிர்க்கத்தக்கது (Voidable) என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது (சவத்தை அப்புறப்படுத்துவதைத் தடுத்து நிறுத்தும் ஒரு செயல் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 297–ன்படி ஒரு குற்ற மாகும்). மேற்படி வழக்கில் இறந்துபோன கணவரின் சவத்தை இறுதி சடங்கிற் கென எடுத்துச் செல்வதை தடுத்து நிறுத்தியது மேற்படி பிரிவின்படி ஒரு குற்றமாகும்.

(ii) இந்திய தண்டனைச் சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ள செயலை செய்யப் போவதாக அச்சுறுத்தல்:

Ammi Raju v. Seshamma[1]

இந்த வழக்கில் ஓர் கணவன் தனது மனைவியும், மகனும் அவர்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களை தன் பெயருக்கு விடுதலைப் பத்திரம் (Release-deed) எழுதி வைக்காவிடில், தான் தற்கொலை செய்து கொள்ளப் போவதாகப் அச்சுறுத்தினார். உண்மையிலே அவர் தற்கொலை செய்து கொண்டு விடுவாரோ என அஞ்சிய அவரது மனைவியும், மகனும் அவரது விருப்பப்படியே அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை, அவர் பெயருக்கு விடுதலைப் பத்திரம் ஒன்று எழுதிக் கொடுத்தார்கள். பின் மேற்சொன்ன விடுதலைப் பத்திரம் அவர்களை வலுக்கட்டாயப்படுத்தி எழுதி வாங்கப்பட்டதென்றும், எனவே அவ்விடுதலைப் பத்திரம் சட்டப்படி செல்லாதென்றும் அவர்கள் வழக்குத் தொடர்ந்தார்கள். தற்கொலை செய்து கொள்ள முயற்சிப்பது (attempt to commit suicide) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 309–வது பிரிவின்படி குற்றமாகும் என்றும் அக்குற்றச் செயலை செய்யப்போவதாக பயமுறுத்தி தனது மனைவியிடமும், மகனிடமும் இசைவு பெற்றது வலுக்கட்டாயம் என்றும், மேற்சொன்ன விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுப்பது சம்பந்தமாக கொடுத்த இசைவு தன்னிச்சையாக கொடுக்கப்பட்டதல்ல என்றும், எனவே அவர்கள் எழுதிக் கொடுத்த விடுதலைப் பத்திரம் செல்லாதென்றும் நீதிமன்றம் தீர்ப்பு கூறியது.

(iii) சட்டப்புறம்பாக ஒருவரது சொத்தின் உடைமையைக் கொடாமலிருத்தல்:

Muthiah Chettiar v. Karuppan Chetti[2]

இவ்வழக்கில் ஒரு முகவர் தன்னை எல்லாப் பொறுப்புகளிலுமிருந்தும் விடுவித்தாலொழிய அவருடைய கணக்குப் புத்தகங்களைத் தர முடியாது என்று

1. (1917) 41 Mad. 33 : M.L.J. 494 : 5 L.W. 735 : (1917) M.W.N. 423
2. (1927) 50 Mad. 786

அச்சுறுத்தினார். முதல்வர் முகவரைப் பொறுப்புகளிலிருந்து விடுவிப்பதாக ஒப்பந்தம் செய்து கணக்குகளைப் பெற்றார். இங்கு 'வலுக்கட்டாயம்' பயன்படுத்தப் பட்டிருப்பதாகக் கூறி, விடுவிப்பு தவிர்க்கத்தக்கது (Voidable) எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டது.

(iv) சட்டப்புறம்பாக ஒருவரது உடைமையை கொடாமல் வைத்துக் கொள்வதாக அச்சுறுத்தல்:

Bansraj v. Secretary of State[1]

இந்த வழக்கில், 'A' என்பவர் அரசுக்கு அபராதம் கட்ட வேண்டியிருந்தது. அவர் அதை கட்டாமல் ஏமாற்றினார். எனவே அந்த அபராதத் தொகையைச் செலுத்தா விட்டால் 'A' என்பரின் தகப்பனாருடைய சொத்துக்கள் ஜப்தி செய்யப்படும் என அவரது தகப்பனாரை அரசாங்கம் அச்சுறுத்தியது. அவரது தகப்பனாரும் தன் மகன் 'A' செலுத்த வேண்டிய அபராதத்தை உடனடியாகச் செலுத்தினார். எனினும், தனது மகன் கட்ட வேண்டிய அபராதத்திற்காக, தனது சொத்தை ஜப்தி செய்வதாக அச்சுறுத்தி, தன்னிடம் அவ்வாறு அபராதம் வசூலித்தது செல்லாது எனக் கூறி அரசு மீது அத்தகப்பானார் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். சொத்தை ஜப்தி செய்யப் போவதாக அச்சுறுத்தி அபராதத் தொகையை அரசு வசூலித்தது வலுக்கட்டாயமாகும் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

உடற்கட்டாயம் (Duress) :

இந்தியச் சட்டத்திலுள்ள "வலுக்கட்டாயம்" என்ற சொல்லுக்கு இணையான இங்கிலாந்துச் சட்டச் சொல் "உடற்கட்டாயம்" (Duress) ஆகும். "ஒப்பந்தத்திற்கு சம்மதிக்குமாறு செய்தற் பொருட்டு, உடல் வருத்தம் விளைவித் தல் அல்லது சிறைப்படுத்தல் அல்லது அவ்வாறு செய்வதாக அச்சுறுத்தல்" என உடற்கட்டாயத்திற்கு வரையறை தரப்பட்டுள்ளது. எனினும், இது வலுக்கட்டாயத் திலிருந்து பரந்த அளவில் வேறுபடுகிறது. அவ்வேறுபாடுகள் வருமாறு.

வலுக்கட்டாயம், உடற்கட்டாயம் - வேறுபாடுகள்:

வலுக்கட்டாயம் [Coercion]	உடற்கட்டாயம் [Duress]
1. இது இந்திய ஒப்பந்தச் சட்டப்படி அமைந்ததாகும்.	இது இங்கிலாந்து நாட்டுச் சட்டப்படி அமைந்ததாகும்.

1. (1939) A.W.R. (H.C.) 247.

1. வெளியார் உட்பட யாருக்கு எதிராகவும் இதனைப் பயன்படுத்தலாம்.	ஒப்பந்தத்தின் மறுதரப்பாளர் அல்லது அவரது குடும்பத்தாரின் உயிருக்கும் உரிமைக்கும் எதிராக மட்டுமே இதனைப் பயன்படுத்தியிருத்தல் வேண்டும்.
2. சட்டப் புறம்பாக சொத்துக்களைக் கொடுக்காமல் நிறுத்தி வைத்துக் கொள்வதையும் இது உள்ளடக்கும்.	இது அவ்வாறு உள்ளடக்காது.
3. இதனை ஒப்பந்தத் தரப்பாளர்தான் செய்ய வேண்டுமென்பதில்லை. யார் வேண்டுமானாலும் செய்யலாம்.	இதனை ஒப்பந்தத் தரப்பாளர் அல்லது அவரது முகவர் மட்டுமே செய்திருக்க வேண்டும்.
4. உடல் வருத்துதல், சிறை வைத்தல் போன்றவை செய்யப்பட்டிருக்க வேண்டுமென்பதில்லை.	இவைகளிலொன்று செய்யப்பட்டிருக்க வேண்டும்.
5. உடனடியாகக் கொடுமைக்குள்ளாக்க வேண்டுமென்பதில்லை.	உடனடியாகக் கொடுமைக்குள்ளான நிலையை அடைய வேண்டும்.
6. இயல்பான திடமனம் கொண்டவரை பாதிக்க வேண்டும் என்ற விதியில்லை.	இயல்பான திடமனம் கொண்டவரைப் பாதிக்கக் கூடிய அளவிலாவது இது இருக்க வேண்டும்.

வலுக்கட்டாயத்தின் சட்ட விளைவு (Effect) :

ஒரு ஒப்பந்தத்தில் எத்தரப்பினரின் இசைவு வலுக்கட்டாயத்தின் பேரில் பெறப்பட்டுள்ளதோ, அவர் தனது விருப்பத்தின் பேரில் அவ்வொப்பந்தத்தை தவிர்த்து (Voidable) விடலாம் (பிரிவு 19).

30. When is consent said to be given under coercion? What is the liability of a person to whom money has been paid or goods have been delivered under coercion ? (இசைவு எந்தெந்த தருணங்களில் வலுக்கட்டாயமாக பெறப்பட்டதாக இருக்கும்? ஒருவர் மற்றொருவருக்கு சரக்கு அல்லது பணம் வலுக்கட்டாயத்தின் அடிப்படையில் கொடுக்கப்பட்டிருந்தால் அப்பொருளையோ அல்லது பணத்தினையோ பெற்றவரின் பொறுப்பு நிலை என்ன?)

எந்தெந்த தருணங்களில் 'இசைவு' வலுக்கட்டாயமாக பெறப்பட்டதாக

இருக்கும் என்பதற்கு முந்தய வினாவின் விடையை படித்தறிக. வலுக்கட்டாயத்தை ஒப்பந்தத் தரப்பினர்களில் ஒருவர் மற்றொருவருக்குத்தான் செய்ய வேண்டும் என்பதில்லை. அவரைச் சார்ந்த எவருக்கும் வலுக்கட்டாயம் செய்து பணத்தையோ அல்லது பொருளையோ கொடுக்குமாறு செய்யலாம். அவ்வாறு பணம் அல்லது பொருளைப் பெற்றவர், அதை உரியவர் வசம் திரும்ப ஒப்படைக்க வேண்டிய பொறுப்பில் உள்ளார். வலுக்கட்டாயத்தின் பேரில் பெறப்பட்டதற்கு அவர் சொந்தம் கொண்டாட முடியாது.

2. தகாநிலை செல்வாக்கு (அல்லது) தகாநிலை வற்புறுத்தம் [Undue Influence] [பிரிவு 16]

31.When is a contract said to be induced by undue influence? (ஒரு ஒப்பந்தம் எப்போது தகாநிலை வற்புறுத்தலால் தூண்டப்படுகிறது ?)

(அல்லது)

Discuss the nature and effect of undue influence. (தகாநிலை செல்வாக்கின் தன்மை மற்றம் விளைவை விவாதிக்க.)

(அல்லது)

Define 'undue influence' and briefly explain the circums tances with suitable illustrations in which a consent is said to be induced by undue influence. ('தகாநிலை செல்வாக்கு' என்பதை வரையறுத்து, எச்சூழ்நிலைகளில் ஒரு இசைவு தகாநிலை செல்வாக்கினால் தூண்டப்பட்டுள்ளது என்பதை பொருத்தமான எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.)

(அல்லது)

Undue influence - Write short notes. (தகாநிலை வற்புறுத்தம் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Distinguish between coercion and undue influence. (வலுக் கட்டாயப்படுத்தல், தகாநிலை வற்புறுத்தல் இவற்றை வேறுபடுத்துக.)

தகாத செல்வாக்கு (Undue Influence) - பிரிவு 16(1) :

ஒப்பந்தத் தரப்பாளர்களுக்கிடையேயுள்ள உறவானது, ஒருவர்

மற்றொருவருடைய சிந்தனைத் திறனை (மனத்திட்பம் – Will) ஆதிக்கம் செய்யக் கூடிய நிலையில் இருந்து, அவர் நேர்மையற்ற அனுகூலம் ஒன்றை அம்மற்றொரு வரிடமிருந்து பெற அந்நிலையைப் பயன்படுத்தியிருந்தால், அவ்வாறு ஏற்பட்ட ஒப்பந்தம் 'தகாத செல்வாக்கு' மூலம் பெறப்பட்டதாகக் கொள்ளப்படும் என இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 16(1)[1] கூறுகிறது.

அடிப்படைக் கூறுகள் :

'தகாத செல்வாக்கு' கீழ்காணும் மூன்று இன்றியமையாத அடிப்படைக் கூறுகளைக் கொண்டதாகும். அவை,

1. சம்பந்தப்பட்ட இருவருக்கும் இடையிலான உறவு, ஒருவர் மற்றொருவரின் சிந்தனைத் திறனை ஆதிக்கம் செலுத்தக் கூடிய வகையில் இருக்க வேண்டும்.

2. நியாயமற்ற அனுகூலத்தைப் பெற அவ்வுறவுநிலை பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

3. அந்நியாயமற்ற அனுகூலத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

ஒருவர் மற்றவருடைய சிந்தனைத் திறனை ஆதிக்கம் செய்யக்கூடிய நிலை என்பதற்கு விளக்கம் – பிரிவு 16(2)–ன்படி :

1. ஒருவர் மற்றொருவர் மீது மெய்யான அல்லது வெளிப்படையான அதிகாரம் (Authority) பெற்றிருந்தால்; (எ.கா.) எசமான்–பணியாளர் உறவு.

2. ஒருவர் மற்றொருவருடன் பொறுப்பாண்மைச் சார்ந்த (Fiduciary) உறவில் இருந்தால்; பொறுப்பாண்மைச் சார்ந்த உறவு என்றால் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட உறவு ஆகும். (எ.கா.) தகப்பன் – மகன் உறவு.

3. ஒருவரது அறிவுத்திறன், தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக வயது, சுகவீனம், மூளை அல்லது உடல் வருத்தம் இவற்றில் ஏதாவதொரு காரணத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் பொழுது அவருடன், மற்றொருவர் ஒப்பந்தம் செய்து கொண்டால். (எ.கா.) மருத்துவர் – நோயாளி உறவு.

மேற்கண்ட மூன்று தருணங்களிலும் 'தகாத செல்வாக்கு' பயன்படுத்தப் பட்டிருப்பதாகக் கொள்ளப்படும்.

---

1. **"Undue influence"** defined:- (1) A contract is said to be induced by "undue influence" where the relations subsisting between the parties are such that one of the parties is in a position to dominate the will of the other and uses that position to obtain an unfair advantage over the other - **Section 16(1) of the Indian Contract Act, 1872.**

தகாத செல்வாக்கு - துணிபு செய்யப்படும் உறவு முறைகள் (Presumption of Undue influence):

பிரிவு 16(2)-ல் கூறப்பட்டுள்ள ஏன்று வகையான உறவு முறைகளிலும் "தகாத செல்வாக்கு" இருப்பதாகவே துணிபு செய்யப்படும். அதாவது அவ்வித உறவுமுறை இருந்தாலே அங்கு 'தகாத செல்வாக்கு' இருப்பதாக அனுமானிக்கப் படும் (துணிபு என்றால், அனுமானம் என்று பொருளாகும்).

அந்த வகையில் பின்வரும் உறவு முறைகளிலும் 'தகாத செல்வாக்கு' இருப்பதாக 'துணிபு' கொள்ளப்படும். (1) பெற்றோர் – குழந்தை (Parent - Child); (2) பாதுகாவலர் – பாதுகாப்பிலுள்ளோர் (Guardian - Ward); (3) பொறுப்புரிமையர் – பயனாளி (Trustee - Beneficiary); (4) மதகுரு–சீடர் (Spirutual Master - Disciple); (5) வழக்கறிஞர் – கட்சிக்காரர் (Lawyer - Client); (6) மருத்துவர் – நோயாளி (Doctor - Patient); (7) மண உறுதி செய்யப்பட்ட ஆண்–மண உறுதி செய்யப்பட்ட பெண்; (8) முதுமை எய்திய எழுத்தறிவில்லாதவருடன் கொண்ட ஒப்பந்தம் (9) பர்தாநஷின் (Pardanashin) பெண்ணுடன் கொண்ட ஒப்பந்தம்.

எனினும் கீழ்காணும் உறவுகளில் 'தகாத செல்வாக்கு' துணிபு கொள்ளப் படுவதில்லை. (1) கணவன் – மனைவி (Husband - Wife); (மனைவி பர்தாநஷின் பெண் என்றால் துணிபு உண்டு) (2) நிலக்கிழார் – குத்தகைதாரர் (Landlord - Tenant); (3) கடன்பட்டோர் – கடனீந்தோர் (Debtor- Creditor). இத்தகு உறவுகளில் 'தகாத செல்வாக்கு' இருந்தது என்று மெய்ப்பிக்கப்படுதல் வேண்டும். தானாக துணிபு கொள்ள முடியாது.

தகாத செல்வாக்கினால் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தூண்டப்படவில்லை என்பதை மெய்ப்பிக்கும் பொறுப்பு (Burden of proving that the contract is not induced by undue influence) - பிரிவு 16(3):

ஒருவர் மற்றொருவரது சிந்தனைத் திறத்தை ஆதிக்கம் செலுத்தக் கூடிய நிலையில் இருந்து, அவருடன் ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட்டால், அங்கு அவர் தகாத செல்வாக்கைப் பயன்படுத்தியிருக்கிறார் என்று துணிபு கொள்ளப்படும். ஆனால் அந்த ஒப்பந்தம் தகாத செல்வாக்கினால் தூண்டப்படவில்லை என்று மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு, எவர் மற்றொருவரின் சிந்தனைத் திறத்தை ஆதிக்கம் செலுத்தக் கூடிய நிலையில் உள்ளாரோ அவரைச் சார்ந்ததாகும்.

தகாத செல்வாக்கு குறித்த மிக முக்கியமான வழக்கு :

Allcard v. Skinner[1]

இந்த வழக்கில் ஆல்கார்டு எனும் பெண்மணி கன்னிமாடம் ஒன்றில் 1862–ஆம் ஆண்டு சேர்ந்தாள். அப்பொழுது, அக்கன்னிமாடத்தின் தலைவியாக (religious superior) 'ஸ்கின்னர்' என்ற பெண்மணி பொறுப்பு ஏற்றிருந்தார். தலைவி ஸ்கின்னரின் கீழ் ஆல்கார்டு தன்னுடைய சொத்துக்களை கன்னிமாடத் திற்கு கொடையாக (gift) கொடுத்தாள். 1879–ம் ஆண்டில் ஆல்கார்டு கன்னி மாடத்தை விட்டு வெளியேறினார். வெளியேறி ஆறு ஆண்டுகளுக்குப் பின் 1885–ஆம் ஆண்டில், தான், கன்னிமாடத்திற்கு கொடையாகக் கொடுத்த சொத்துக் களை திரும்பக் கேட்டு ஆல்கார்டு வழக்குத் தொடர்ந்தார். மதத் தலைவி ஸ்கின்னரின் ஆதிக்கத்திற்குட்பட்டு அவரது தகாத செல்வாக்கின் காரணமாகத்தான் தன் சொத்துக்களையெல்லாம் கன்னிமாடத்திற்கு கொடையாகக் கொடுத்ததாக தன் வழக்கில் ஆல்கார்டு கூறியிருந்தார். ஆனால், இருவரிடையே இருந்த உறவுமுறை (மதகுரு – சீடர்) தகாத செல்வாக்கை ஏற்படுத்தும் துணிபினை அளிப்பதாக இருந்தாலும், கன்னி மாடத்தை விட்டு வெளியேறி ஆறு ஆண்டுகள் வரை எவ்வித நடவடிக்கையும் எடுக்காத அவரது செய்கை அவர் கொடுத்த கொடைகளை உறுதிப்படுத்துவதாக உள்ளதென நீதிமன்றம் தீர்ப்பளித்து, ஆல்கார்டு வழக்கை தள்ளுபடி செய்தது.

'தகாத செல்வாக்கின்' சட்ட விளைவு (Effect of Undue influence) (பிரிவு 19-A) :

ஒரு உடன்பாடு தகாத செல்வாக்கினால் ஏற்பட்டதென்றால், அவ்வுடன் பாடு அவ்வாறு இசைவு தந்த தரப்பாளரின் விருப்பத்துக்கிணங்க தவிர்தகு (Voidable) ஒப்பந்தமாகிறது. அத்தகு ஒப்பந்தம் எதுவும் முழுமையாக இரத்து செய்யப்படலாம் அல்லது அவ்வொப்பந்தத்தை தவிர்த்துக் கொள்ள உரிமை பெற்றவர், அதன் கீழ் பலன் எதையும் பெற்றிருப்பின், நீதிமன்றம் நியாயமானது என்று கருதி விதிக்கும் அத்தகு வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் அது இரத்து செய்யப்படலாம்.

வலுக்கட்டாயம், தகாத செல்வாக்கு – வேறுபாடுகள் (Differences between Coercion and Undue influence) :

இவை இரண்டுமே, பாதிக்கப்பட்ட தரப்பாளர் விரும்பினால், தவிர்க்கத் தக்க ஒப்பந்தங்களாகும். எனினும் அடுத்துவரும் வேறுபாடுகள் குறிப்பிடத்தக்கவை.

1. (1889) 36 Ch.D. 145

வலுக்கட்டாயம் [Coercion]	தகாத செல்வாக்கு [Undue Influence]
1. உறவுமுறை: ஒப்பந்தம் கொள்ளும் நபர்கள் தங்களுக்குள் எவ்வித உறவு முறையும் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.	இங்கு ஒருவர், மற்றொருவரின் சிந்தனைத் திறத்தை ஆதிக்கம் செய்யக் கூடிய நிலையில் உள்ள உறவு முறை இருத்தல் அவசியம்.
2. அச்சுறுத்தல்: இந்தியத் தண்டனைச் சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ள குற்றச் செயலைச் செய்தோ, செய்வ தாக அச்சுறுத்தியோ, சொத்தைக் கொடுக்காமல் வைத்துக் கொண்டோ, அவ்வாறு வைத்துக் கொள்வதாக அச்சுறுத்தியோ ஒப்பந்தம் செய்து கொண்டு அதன் மூலம் அனுகூலம் பெறப்படுகிறது.	இங்கு உறவுமுறையைப் பயன்படுத்தி, மற்றவரின் சிந்தனைத் திறத்தை ஆதிக்கம் செய்து ஒப்பந்தம் செய்து கொண்டு அதன் மூலம் நியாயமற்ற அனுகூலம் பெறப்படுகிறது.
3. உடல் சார்ந்தது (Physical character): இங்கு உடலின் மீது வலுக் கட்டாயம் பயன்படுத்தப்படுகிறது.	மனம் சார்ந்தது (Mental Charater) : இங்கு மனத்தின் மீது தகா நிலையில் செல்வாக்கு பயன்படுத்தப்படுகிறது.

3. மோசடி [Fraud] [பிரிவு 17]

32. State how "Fraud" has been defined by the Indian Contract Act, 1872. When will silence, amount to fraud? (1872ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டம் எவ்வாறு "மோசடியை" வரையறுத்துக் கூறுகிறது என்பதை எடுத்துக்காட்டுடன் கூறுக. பேசாதிருத்தல் எப்போது மோசடியாகலாம் ?)

(அல்லது)

Explain the essentials of fraud as per the provisions of the Contract Act. (ஒப்பந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி மோசடி என்பதற்குத் தேவையானவைகளை விளக்குக.)

முன்னுரை :

'மோசடி' எனும் பதத்தின் பொருளை பின்வரும் விதத்தில் கண்டால் எளிதில் விளங்கும். அதாவது,

பொதுவாக திரித்துக்காட்டுதல் (Misrepresentation) என்பது இரு வகைப்படும். அவை, 1. மாசற்ற (Innocent) திரித்துக் காட்டுதல். 2. மனதார விரும்பித் திட்டமிட்ட (Wilful) திரித்துக் காட்டுதல். இங்கு மேற்படி மனதாரத் திட்டமிட்ட திரித்துக் காட்டுதலே (Wilful misrepresentation) 'மோசடி' (Fraud) எனப்படுகிறது. அதாவது, ஒரு தரப்பினரால் ஒரு விஷயமானது உண்மையல்ல என முழுமையாகத் தெரிந்தும், அல்லது அதன் உண்மையைப் பற்றி நம்பிக்கை வைக்காமல், விளைவைப் பற்றிக் கவலைப்படாமல், அது உண்மையா அல்லது பொய்யா என்று அக்கறைப்படாமல் எடுத்துரைக்கப்பட்டால் (representation) அது 'மோசடி' எனப்படுகிறது. (திரித்துக் காட்டல் பற்றி பின்னர் காண்போம்). இனி, மோசடியின் வரையறை குறித்து இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 17–வது பிரிவு யாது கூறுகிறது என்பதை பின்வருமாறு கவனிப்போம்.

மோசடி (Fraud) – பிரிவு 17 கூறும் வரையறை :

ஒப்பந்தத்தின் ஒரு தரப்பினர் அல்லது அவரது முகவர் மறு தரப்பினரை அல்லது அவரது முகவரை ஏமாற்றும் நோக்கத்துடன் அல்லது அவரை ஒப்பந்தத்தில் ஈடுபடுமாறு தூண்டுவதற்காக பின்வரும் செயல்களில் ஏதேனும் ஒன்றைச் செய்தாலும் அது மோசடியாகும்.

1. மெய்யல்லாத ஒரு சங்கதியை, மெய்யென நம்பாத ஒருவர், மெய்யெனக் குறிப்பாகத் தெரிவித்தல் (The suggestion, as to a fact, of that which is not true, by one who does not believe it to be true);

2. ஒரு சங்கதி மெய்யென்று தெரிந்திருந்தும் அல்லது நம்பியிருந்தும் அதனை வேண்டுமென்றே மறைத்தல் (The active concealment of a fact by one having knowledge or belief of the fact);

3. நிறைவேற்றும் எண்ணம் எதுவுமின்றி உறுதியுரை அளித்தல் (A promise made without any intention of perfoming it);

4. ஏமாற்றத்தக்க வேறெந்தச் செயலையும் செய்தல் (Any other act fitted to deceive);

5. மோசடியானது என்று சட்டம் தனிப்பட்ட விதத்தில் விளம்பும் அத்தகு

செயல் அல்லது செயல்தவிர்க்கை எதுவும் (Any such act or omission as the law specially declares to be fraudulent).

மோசடிக்குத் தேவைப்படும் முக்கிய கூறுகள் :

பிரிவு 17 கூறும் மேற்கண்ட வரையறையிலிருந்து, மோசடிக்கு பின்வரும் முக்கியக் கூறுகள் தேவைப்படுகின்றன என்பதை நாம் அறியலாம். அவை,

1. ஒப்பந்தத்தின் தரப்பினர்களில் ஒருவராலோ அல்லது அவருடைய முகவராலோ ஒப்பந்தத்தின் கருப்பொருள் குறித்து மறு தரப்பினரிடம் எடுத்துரைக் கப்பட (representation) வேண்டும். அதாவது, அந்நியர் (stranger) ஒருவரால் எடுத்துரைப்பு செய்யப்படக் கூடாது.

2. அத்தகு எடுத்துரைப்பு ஒரு சங்கதியைக் (fact) குறித்ததாக இருக்க வேண்டுமே தவிர, அபிப்ராயம் குறித்ததாக இருத்தல் கூடாது.

3. அது பொய்யென்று தெரிந்தும் அல்லது அது பொய்யா, மெய்யா என்பது பற்றி சிந்திக்காமலும் சொல்லப்பட்ட எடுத்துரைப்பாக இருக்க வேண்டும்.

4. அத்தகைய சங்கதியின் எடுத்துரைப்பு மற்றொருவரை ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

5. அது ஒப்பந்தத்தின் மறு தரப்பினரைத் தூண்டி, ஒப்பந்தம் செய்து கொள்ள வைத்திருக்க வேண்டும்.

6. அது மறு தரப்பினரை ஏமாற்றியிருக்க வேண்டும்.

7. அத்தகைய எடுத்துரைப்பின் பேரில் அம்மற்றொரு நபர் செயல்பட்டு அதனால் அவருக்கு ஏதாவது நட்டம் ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஆக மோசடியான திரித்துக் காட்டலில் மற்றவரை ஏமாற்ற வேண்டுமென்கிற எண்ணமே முக்கிய அம்சமாக அமைகிறது. ஒப்பந்தத்தின் கருப்பொருள் குறித்த உண்மை மறைக்கப்பட்டு அதைப் பற்றித் திரித்துச் சொல்லும் பொழுது, அந்த எடுத்துரைப்பு பொய்யாகிறது. அதாவது, சொல்ல வேண்டிய உண்மையை சொல்லாது மறைத்தாலும், அது பொய்மையே. இது இலத்தீன் முதுமொழியில் *Suppressio veri suggestio falsi* (Suppession of fact is the suggession of falsehood) எனக் கூறப்படுகிறது. அதாவது பொருண்மையை (சங்கதியை) மறைத்தல் என்பது பொய்மையை குறிப்பாக உணர்த்துதலாகும். இது குறித்த முக்கிய வழக்குகள் வருமாறு :

முக்கிய வழக்குகள்:

Peek v. Gurney[1]

இவ்வழக்கில் ஒரு நிறுவனம் தனது தகவலறிக்கையை (Prospectus) வெளியிட்டது. ஆனால் அது தனக்கிருக்கும் ஏகப்பட்ட கடன் பொறுப்புகளை காண்பிக்கும் ஒரு முக்கிய ஆவணத்தைப் பற்றி அந்தத் தகவலறிக்கையில் குறிப்பிடத் தவறிவிட்டது. இதனால் அந்நிறுவனம் நல்ல வளமையான நிலையில் உள்ளது என்று நம்பி, பொதுமக்கள் பலர் அதன் பங்குகளை வாங்கினர். ஆனால் மேற்படி விஷயம் வெளியில் தெரிந்த பொழுது பங்குதாரர்கள் நீதிமன்றத்தில் வழங்கிட்டனர். அந்நிறுவனம் பொறுப்புகளைக் காட்டும் ஒரு ஆவணத்தைப் பற்றி தகவறிக்கையில் குறிப்பிடாது மறைத்தது, ஒரு மோசடி ஆகுமென்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Derry v. Peek[2]

புகழ்பெற்ற டிராம்வே நிறுவனமொன்று குதிரைகளின் துணை கொண்டு டிராம் வண்டிகளை ஓட்டி வந்தன. அந்நிறுவனம் குதிரைகளுக்கு பதிலாக நீராவியில் (Steam) ஓடும் வண்டிகளைப் பயன்படுத்த விரும்பியது. அவ்விதம் பயன்படுத்துவதற்கு நிறுவன விதிமுறைகளின்படி இங்கிலாந்து தொழில் வாரியத்தின் (Board of Trade) அனுமதி பெற வேண்டும். அதற்கு முன்னோடியாக வரைபடங்களைத் தயாரித்து அதைத் தொழில் வாரியத்தின் அங்கீகாரத்திற்கு அந்நிறுவனத்தின் இயக்குநர்கள் அனுப்பி வைத்தனர். மேற்படி தொழில் வாரியம் அவ்வரைபடங்களை அங்கீகரித்துவிட்டால், பின்னர் நீராவியால் ஓடும் டிராம் வண்டிகளை ஓட்டுவதற்கு அதன் அனுமதியைப் பெறுவதும் எளிது என்றும், அவ்வாரியம் மேற்படி அனுமதியை நிச்சயம் கொடுத்துவிடும் என்றும் அந்நிறுவனம் கருதியது. அந்த எண்ணத்தின் பேரில் நீராவியால் ஓடும் டிராம் வண்டிகள் விடுவதற்கு நிறுவனத்திற்கு உரிமை உண்டென்று இயக்குநர்கள் திட்ட அறிவிப்பில் (Prospectus) கூறியிருந்தார்கள். இவ்வறிவிப்பு பீக் என்பவரை அந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கத் தூண்டியது. ஆனால் மேற்படி தொழில் வாரியம் நீராவியால் ஓடும் டிராம் வண்டிகளை ஓட்டுவதற்கு எதிர்பார்த்தபடி அனுமதியளிக்கவில்லை. அதனால் நீராவியால் ஓடும் டிராம் வண்டிகளை மேற்படி நிறுவனத்தால் விட முடிய வில்லை. இதனால் ஏமாற்றமடைந்த பீக், அந்நிறுவனம் மோசடி செய்துவிட்டதாகக் கூறி, அதன் இயக்குநர்கள் மீது வழக்கொன்றைத் தாக்கல் செய்தார். வழக்கை விசாரித்த நீதிமன்றம் நீராவியால் ஓடும் டிராம் வண்டிகள் விடுவதற்கு தொழில் வாரியத்தின் இசைவு நிச்சயம் தங்களுக்கு கிடைத்து விடுமென்று இயக்குநர்கள் நம்பினார்கள்; மோசடி செய்ய வேண்டுமென்ற எண்ணம் (intention to deceive)

1. (1873) 6 H.L. 377
2. (1887) 42 Ch. D. 436

இயக்குநர்களுக்கு இல்லை; எனவே, உண்மையென நம்பியதை எடுத்துரைத்தது மோசடி அல்ல என்று தீர்ப்புக்கூறி, பீக் தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்தது. இவ்வழக்கில் நீதிப்பெருமகனார்கள் அவை (House of Lords), ஒரு மோசடியை நிரூபிக்க வேண்டுமெனில், அம்மோசடி அறநெறியின்படி பார்த்தாலும், ஒரு மோசடியே (Moral Fraud) என்பதை பாதிக்கப்பட்ட தரப்பினர் நிரூபிக்க வேண்டும் என்ற ஒரு முக்கியமான கூற்றைக் கூறியது. [மேற்படி வழக்கில் சட்டப் படியான மோசடி (Legal Fraud) என்று கூறப்பட்டதேயொழிய மேற்கண்ட விதத்தில் நிரூபிக்கப்படவில்லை].

"இழப்பு இன்றேல் மோசடி இல்லை; பாதிப்பு இன்றேல் இழப்பீடு இல்லை" (There can be no fraud without damage and there can be no damages without injury) :

மேற்படி விதி ஒரு பொதுவான சட்ட விதியாகும். மோசடியால் இழப்பு அல்லது பாதிப்பு பண வடிவத்திலோ, பண மதிப்புள்ள பொருள் வடிவத்திலோ அல்லது மதிப்பிடத்தக்க இடையூறாகவோ இருக்க வேண்டும். மறுதரப்பாளரின் எடுத்துரைப்பிற்கிணங்க நடந்து, தவறான வழிச் செலுத்தப்பட்டு, இழப்பு அடைந்தாலொழிய மோசடி இருப்பதாகக் கொள்ள முடியாது. மேற்கண்டவாறு இழப்பு இருந்தால்தான், அதற்கொப்ப இழப்பீடும் வழங்கப்படும்.

மோசடியின் சட்ட விளைவு (Legal Effect) :

ஒரு ஒப்பந்தத்தில் எத்தரப்பினரின் இசைவு மோசடியாகப் பெறப் பட்டுள்ளதோ, அவரது தனது விருப்பத்தின் பேரில் அவ்வொப்பந்தத்தை தவிர்த்து (Voidable) விடலாம் (பிரிவு 19).

பேசாதிருத்தல் மோசடியாகாது - பிரிவு 17-ன் கீழான விளக்கம் (Silence does not amount to fraud) :

உடன்பாட்டு பொருள் பற்றிய மூலாதாரப் பொருண்மை ஒன்றைப் பற்றி எதுவும் தெரிவிக்காது பேசாதிருந்தால், அது மோசடியாகாது. இது, 'வாங்குபவர் விழித்துக் கொள்க' (Caveat Emptor - let the buyer beware) என்ற கோட்பாட்டின்படி அமைந்ததாகும். அதாவது, ஒரு நபர் ஒப்பந்தம் செய்து கொள்ளும் முன், தான் அறிந்த மூலாதாரப் பொருண்மைகள் அனைத்தையும் ஒப்பந்தத்தின் மறுதரப்பாளருக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதில்லை. அப்படி தெரிவிக்காமல் மௌனம் சாதிப்பது ஒரு மோசடியாகாது.

இதைத்தான் 17-ஆம் பிரிவின் கீழான விளக்கத்தின் ஆரம்ப வரிகளானது

(Explaintion to section 17), ஒப்பந்தமொன்றில் ஈடுபட தரப்பினர் ஒருவரின் விருப்பமானது, அதன் மறு தரப்பினர் வெறுமனே மௌனமாக இருப்பதால் அநேகமாக பாதிப்பிற்குள்ளாகும் என்றால், அது ஒரு மோசடியாகாது, என்று கூறுகிறது.

எடுத்துக்காட்டாக, 'A' ஏலத்தில் தன் குதிரையை 'B'க்கு விற்றார். 'A'-க்கு அது நல்ல நிலையில் உள்ள குதிரை அல்ல என்பது தெரியும். ஆனால் இது பற்றி அவர் 'B'க்கு எதுவும் கூறவில்லை. இங்கு 'A' மோசடி எதுவும் செய்யவில்லை.

பேசாதிருத்தல் எப்பொழுது மோசடியாகும் ?

ஒரு மூலாதாரப் பொருண்மையைப் பற்றி சொல்லாமல் பேசாதிருத்தல் மோசடியாகாது என்றாலும், அது பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு மோசடியாகிறது.

1. பேசாமல் மௌனமாக இருப்பது பேச்சுக்கு நிகராக விளங்கும்போது (Silence is, in itself, equivalent to Speech - Explanation to Sec. 17): இதற்கு எடுத்துக்காட்டாக, 'B' என்பவர் 'A'–யிடம் "நீ மறுக்கவில்லை என்றால், குதிரை நல்ல நிலையில் இருப்பதாக நான் எடுத்துக் கொள்கிறேன்" என்கிறார். 'A' பேசாமலிருக்கிறார். இங்கு 'A'–யின் மௌனம், பேச்சுக்கு நிகராகும்.

2. பேசாமலிருப்பவர் பேசக் கடமைப்பட்டவராக இருக்கும் பொழுது (Duty of the person keeping silence to speak - Explanation to Sec. 17): இதற்கு எடுத்துக்காட்டாக, 'B' என்பவர் சமீபத்தில் உரிமை வயதை எட்டியவர். அவர் 'A'–யின் மகளாவார். ஒரு குதிரை, கோளாறுள்ளது என்பது 'A'-க்குத் தெரியும். இங்கு மேற்கண்ட இருவருக்கும் இடையே உள்ள உறவு, 'A'–வை மேற்கண்ட உண்மையை 'B'–க்கு கூறும் கடமையை ஏற்படுத்துகிறது.

பேசவும், வெளிக்கூறவும் உள்ள கடமை, ஒரு ஒப்பந்தத் தரப்பாளருக்கும், மறு தரப்பாளருக்கும் இடையேயுள்ள பொறுப்பையும், நம்பிக்கையையும் கொண்டு அமைகிறது. அப்படிப்பட்ட பொறுப்பும், நம்பிக்கையும் இல்லையென்றால், அங்கு பொருண்மையை (சங்கதி) (fact) எடுத்துரைக்க வேண்டும் எனும் கடமையும் அவர்களுக்கு இல்லை. எனவே எடுத்துரைத்தல் என்பது, ஒரு கடமையாக இல்லாவிட்டால் அது எவ்வளவு ஏமாற்றத்தக்கதானாலும் மோசடியாகாது.

3. ஒப்பந்தத் தரப்பாளரிடையே பொறுப்பாண்மை சார்ந்த உறவு ஏற்பட்டு இருந்தால் : இந்த உறவுக்கு முதல்வர் – முகவர், பொறுப்புரிமையர் – பயனாளி, பாதுகாவலர் – பாதுகாப்பிலுள்ளோர், வழக்கறிஞர் – கட்சிக்காரர் ஆகியவை எடுத்துக்காட்டுகளாகும்.

4. ஒப்பந்தம் முழு நம்பிக்கையில் அமைகின்ற ஒன்றாக இருத்தல் கூடாது (*Uberrimae fidei*): அடுத்த வினாவில் காண்க.

33. *Uberimae fidei* contracts - Write Short notes. (முழு நம்பிக்கையில் எழுகின்ற ஒப்பந்தங்கள் – சிறு குறிப்பு வரைக.)

இவை முழு நம்பிக்கையின் அடிப்படையில் எழுகின்ற ஒப்பந்தங்களாகும். முழு நம்பிக்கையை மீறி ஒரு தரப்பாளர் செயல்பட்டால், மறுதரப்பாளர் அவ்வொப்பந்தத்தை தவிர்க்கலாம். ஒப்பந்தம் தொடர்பான அனைத்து மூலாதாரப் பொருண்மைகளையும் வெளிப்படுத்த வேண்டும் (should disclose all material facts) என்பது, முழு நம்பிக்கையில் எழுகின்ற ஒப்பந்தத் தரப்பினர் களின் கடமையாகும். உண்மையை கூற வேண்டிய கடமை கொண்ட தரப்பினர் ஒருவர் அதனைக் கூறவில்லையென்றால், அது தொடர்பான ஒப்பந்தம் மாசுடைந்த தாகிவிடுகிறது. பின்வரும் ஒப்பந்தங்கள் இவ்வகையைச் சார்ந்தவையாகும்.

1. காப்புறுதி ஒப்பந்தங்கள் (Contracts of Insurance); 2. மண ஒப்பந்தங்கள் (Contracts of Marriage); 3. குடும்ப ஒத்திசைவு ஒப்பந்தங்கள் (Contracts of family arrangements or settlement) 4. அசையாச் சொத்து விற்பனை ஒப்பந்தங்கள் (Contracts for sale of Immovable Property); 5. நிறுவனப் பங்கு ஒதுக்கீடு பற்றிய ஒப்பந்தங்கள் (Contracts regarding Share Allotments); 6. கூட்டாண்மை ஒப்பந்தங்கள் (Contracts of Partnership).

4. திரித்துக்காட்டல் [Misrepresentation] [பிரிவு 18]

34. Define 'misrepresentation' and explain its salient features. (திரித்துக்காட்டுதலை வரையறை செய்து அதன் முக்கிய அம்சங்களை விளக்குக.)

(அல்லது)

Show how far Misrepresentation will vitiate consent of parties. Refer to leading decisions. (திரித்துக் கூறுவது எவ்வாறு தன்னிச்சையன இசைவு கொடுத்தவர்களைப் பாதிக்கிறது? தலையான தீர்ப்புகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Define misrepresentation and distinquish it from fraud. Can silence amounts to representation? (திரித்துக்காட்டுதலை வரையறை செய்து, அதை மோசடியிலிருந்து வேறுபடுத்துக. மௌனமாக இருத்தல் தெரிவித்ததாக கருதப்படுமா?)

(அல்லது)

Distinguish between Fraud and Misrepresentation (மோசடியும், திரித்துக்காட்டலும் – வேறுபடுத்துக)

முன்னுரை :

மாசற்ற திரித்துக் காட்டலையே (Innocent Misrepresentation) சட்டம், 'திரித்துக்காட்டல்' என்கிறது. ஒப்பந்தத்தின் மூலாதாரமான பொருண்மையைப் (Material Fact) பற்றி தவறாக எடுத்துரைப்பு செய்தல் திரித்துக்காட்டல் எனப்படுகிறது. அதாவது ஒரு ஒப்பந்தத்தை செய்து கொள்ளும்போதோ அல்லது அதற்கு முன்போ ஒருவரை அந்த ஒப்பந்தத்தில் சேரும்படிச் செய்யும் எண்ணத்துடன் பொய்யான செய்தியால் அவரை மற்றொருவர் தூண்டி இசைய வைத்தால் அது திரித்துக்காட்டல் எனப்படும். இது செயலாலோ, சொல்லாலோ அல்லது முக்கிய கூற்றினை மறைப்பதாலோ இருக்கலாம்.

திரித்துக்காட்டல் – பிரிவு 18 கூறும் வரையறை :

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 18–வது பிரிவு திரித்துக்காட்டலை பின்வருமாறு வரையறுக்கிறது.

1. எடுத்துரைக்கப்படும் செய்தி உண்மையற்றது என்றாலும், அதனை உண்மையென நம்பி மற்றவரிடம் அறுதியாக உறுதியுரைத்தல் (Positive assertion);

2. ஏமாற்றும் நோக்கில்லாமல் செய்யப்படும் கடமை மீறுகை எதுவும், அதைச் செய்பவருக்கு அல்லது அவர் வழியாக உரிமை கோரும் எவருக்கும், மற்றொருவரை பாதிக்கும் வகையில் அவரைத் தவறாக வழிநடத்தி, அதன் மூலம் ஒரு அனுகூலத்தை பெற்றுத் தருமானால், அத்தகு கடமை மீறுகை (Breach of duty);

3. உடன்பாட்டின் கருப்பொருளாக உள்ள விஷயத்தின் சாரம்சம் குறித்து உடன்பாட்டின் தரப்பினர் ஒருவரை தவறொன்றை செய்யும்படிச் செய்தால். அவ்வாறு தவறு செய்விக்கச் செய்வது எவ்வளவு மாசற்றதாக இருப்பினும், அது இங்கு பொருட்டல்ல. (Causing, however innocently, a party to an agreement, to make a mistake as to the substance of the thing which is the subject of the agreement).

திரித்துக்காட்டலின் முக்கியக் கூறுகள் (Essential Elements of Misrepresentation) :

ஒப்பந்தத் தருணத்திலோ அல்லது அதற்கு முன்னரோ ஒப்பந்தத்தின் கருப்பொருள் குறித்த சங்கதியை உரைத்தல், 'எடுத்துரைப்பு' (representation)

ஆகும். அதைத் தவறாக எடுத்துரைப்பது (Misrepresentation) திரித்துக் காட்டலாகும். அந்த வகையில் திரித்துக்காட்டலின் முக்கிய கூறுகளாவன :

1. உடன்பாட்டின் கருப்பொருள் குறித்த விஷயங்களை, அவ்வுடன் பாட்டின் ஒரு தரப்பினர், மற்றொரு தரப்பினருக்கு எடுத்துரைக்க வேண்டும்.

2. அத்தகைய எடுத்துரைப்பு பொருண்மை (Matter of fact) குறித்த அறுதியான உறுதியுரையாக (Positive assertion) இருக்க வேண்டும். வெறும் அபிப்பிராயமாக இருத்தல் கூடாது. **(எ.கா.)** A என்பவர் தன் நிலத்தை வாங்க விருக்கும் B-யிடம், 'எனது நிலத்தில் ஏக்கருக்கு 10 குவிண்டால் நெல் விளையும்' என்று கூறினால், அது பொருண்மை குறித்த அறுதியான உறுதியுரையாகும். அதை விடுத்து, 'என் நிலம் செழிப்பானது' என்று கூறினால் அது வெறும் அபிப்பிராயமே.

3. அத்தகைய எடுத்துரைப்பு உண்மையற்றதாக (untrue) மாற வேண்டும். உடன்பாட்டின் கருப்பொருள் குறித்து ஒருவர் மற்றொருவருக்கு எடுத்துரைக்கும் விவரங்கள் பின்னர் உண்மையற்றதாக மாறாவிட்டால், அங்கு திரித்துக்காட்டல் என்ற சொல்லுக்கே இடமில்லை. **(எ.கா.)** A என்பவர் தன் நிலத்தை வாங்கவிருக்கும் B-யிடம் 'எனது நிலத்தில் ஏக்கருக்கு 10 குவிண்டால் நெல் விளையும்' என்கிறார். A இதை உண்மையென நம்பப் போதுமான ஆதாரமில்லா விட்டாலும், அதை உண்மையென்று நம்பிக் கூறினார். ஆனால் பின்பு அந்நிலம் ஏக்கருக்கு ஏழு குவிண்டால்தான் விளைவித்தது. இது திரித்துக் காட்டலாகும்.

4. அத்தகு எடுத்துரைப்பு, மறுதரப்பினர் உடன்பாட்டில் சேரத் தூண்டுகிற அளவுக்கு வலிமையுடையதாய் இருத்தல் வேண்டும். **(எ.கா.)** A என்பவர் B என்பவரிடம் தன்னுடைய வீட்டிற்கு ஆண்டுதோறும் ரூ.12,000/– வாடகை வருமென்று கூறி அதை விலைக்கு வாங்க மேற்படி B-யைத் தூண்டுகிறார். இதை நம்பி மேற்படி B-யும் அவ்வீட்டை வாங்கிவிடுகிறார். ஆனால் அவ்வீட்டிலிருந்து ஆண்டு தோறும் ரூ.6,000/–தான் வாடகை வந்தது. இதனால் மேற்படி B வழக்குத் தொடர்ந்தார். அதில் வேண்டுமென்றே உண்மையற்ற விபரத்தை எடுத்துரைத்து உடன்பாடு செய்து கொள்ளத் தூண்டியதால், அவ்வுடன்பாடு செல்லாது என தீர்ப்பளிக்கப்பட்டது.

5. திரித்துக்காட்டலால் நட்டம் ஏற்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் இழப்பீடு கோர முடியும்.

முக்கிய வழக்குகள் :

Bannerman v. White[1]

இவ்வழக்கில் 549 மூட்டைகள் ஹோப் (Hop) செடி வகையை விற்பனை

1. (1861) 142 PR 685

செய்வதற்கு ஒப்பந்தம் ஏற்பட்டது. இச்செடி கந்தகம் கலந்த மண்ணில் பயிரானதாக இருக்கக் கூடாதென்பது நிபந்தனையாகும். ஆனால் அச்செடி பயிரான நிலத்தில் ஒரு பகுதி கந்தகம் கலந்த பகுதியாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது. கந்தகம் பயன்படுத்தப்படவில்லை என்று எடுத்துரைத்தது திரித்துக் காட்டலாகும்.

Shepherd v. Kain[1]

இவ்வழக்கில் தாமிரத்தால் கட்டப்பட்ட கப்பலை விற்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், பின்னர் அது தாமிரத்தால் கட்டப்படாதது என தெரிய வந்தது. ஒப்பந்தம் நிராகரிக்கப்பட்டது. கப்பல் கட்டிய கம்பெனி நட்டஈடு தர வேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. ஏனெனில் இங்கு கப்பலின் விபரம் குறித்து தவறாக திரித்துக்காட்டப்பட்டுள்ளது.

Esso Petroleum Co. Ltd. v. Mardon[2]

இவ்வழக்கில் ஆண்டொன்றுக்கு 2,00,000 கேலன்கள் பெட்ரோல் விற்கும் என்று பெட்ரோலிய நிறுவனம் ஒன்று எடுத்துரைத்தன் அடிப்படையில், மார்டன் என்பவர் அந்நிறுவனத்தின் பெட்ரோல் நிலையம் ஒன்றை வாடகைக்கு எடுத்துக் கொண்டார். அதில் தனது பணம் முழுவதையும் முதலீடு செய்தார். ஆனால் அந்நிறுவனம் கூறியவாறு பெட்ரோல் விற்கவில்லை. மாறாக ஆண்டொன்றுக்கு 78,000 கேலன்கள் பெட்ரோல் மட்டுமே விற்றது. இந்நிலையில் வாடகை நிலுவையைக் கோரி அந்நிறுவனம் மார்டன் மீது வழக்கிட்டது. ஆனால், அந்நிறுவனம் எடுத்துரைத்ததை நம்பியே, தான் அப்பெட்ரோல் நிலையத்தை வாடகைக்கு எடுத்துக் கொண்டதாகவும், ஆனால் அது எடுத்துரைத்த அளவிற்கு பெட்ரோல் விற்கவில்லை என்றும், அதனால், தான் அவ்வாடகை ஒப்பந்தத்தை இரத்து செய்ய விரும்புவதாகவும், மேலும் அந்நிறுவனம் தனக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றும் எதிர்வாதம் புரிந்தார். நீதிமன்றம் அவரது இவ் வாதத்தை எடுத்துக் கொண்டு, அந்நிறுவனம் எடுத்துரைத்த விபரம் ஒரு திரித்துக் காட்டலாகும் என்று கூறி, அவ்வாடகை ஒப்பந்தத்தை இரத்து செய்தது.

Watters v. Morgan[3]

எடுத்துரைக்கப்படும் செய்தி உண்மையற்றது என்றாலும், அதனை உண்மையென நம்பி மற்றவரிடம் அறுதியாக உறுதியுரைத்தல் (Positive assertion),

1. (1821) 106 E.R. 1180
2. (1976) 2 All. E.R. 5 : (1976) QB 801.
3. (1861) 45 E.R. 1056

திரித்துக்கட்டலாகும். இவ்வாறு அறுதியாக உறுதியுரைத்தல் என்பதை செயல்களினால் அல்லது நடத்தையினால் கூட உட்கிடையாக உணர்த்தலாம் என்றும், எடுத்துக் காட்டாக, 'தலையை ஆட்டுதல் அல்லது அசைத்தல் அல்லது புன்முறுவல் பூத்தல்' (a nod or a wink or a shake or a smile may be a representation) ஆகியவை கூட எடுத்துரைத்தலே என்றும் மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

In re. Nursey Spinning & Weaving Co.,[1]

இவ்வழக்கில் நிறுவனமொன்றின் இயக்குநர்கள், சில மாற்றுச் சீட்டுகளில் கையொப்பமிட்டு விற்றனர். அதன் மூலம் அவர்கள் அந்நிறுவனத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்றவர்கள் என்று மக்களுக்கு காட்டிக் கொண்டார்கள். ஆனால் உண்மையில் அப்படிப்பட்ட அதிகாரம் எதையும் அவர்கள் பெற்றிருக்கவில்லை. எனவே இது ஒரு திரித்துக்காட்டலாகும் என்று நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

Smith v. Reese River Co.,[2]

இவ்வழக்கில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வெள்ளித் தாதுப் பொருள் கிடைப்பதாக நிறுவனத்தின் இயக்குநர் தவறாக தகவலறிக்கையில் (Prospectus) குறிப்பிட்டுள்ளார். ஆனால், அவ்வாறு அப்பகுதியில் வெள்ளித் தாதுப் பொருள் எதுவும் இல்லையென பின்னர் தெரியவந்தது. சரியான விவரத்தை ஆராய்ந்து பார்க்காமல் கவனக்குறைவாக விடுத்த இக்கூற்றைத் திரித்துக்காட்டலென நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

திரித்துக்காட்டலின் விளைவுகள் (Effects) :

திரித்துக்காட்டலின் மூலம் ஏற்பட்ட ஒப்பந்தம் தவிர்தகு ஒப்பந்தமாகும். கருப்பொருள் உண்மையை திரித்துக்காட்டி அதன் மூலம் ஒப்பந்தத்தின் மறுதரப் பினரிடமிருந்து பெற்ற இசைவு, ஒரு தன்னிச்சையான இசைவு ஆகாது. இவ்வாறு இசைந்த நபர் அவ்வொப்பந்தத்தை தவிர்க்கலாம் அல்லது மறுக்கலாம் அல்லது ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு திரித்துக்காட்டப்பட்ட தகவல் உண்மையாக இருந்தால், தான் எந்நிலையில் இருந்திருக்க முடியுமோ அந்நிலையில் தன்னைக் கொண்டு செல்ல வற்புறுத்தலாம். இவ்வாறு திரித்துக்காட்டலின் விளைவுகளை ஒப்பந்தச் சட்டம் பிரிவு 19 விளக்குகிறது. திரித்துக் காட்டலினால் ஒப்பந்தத்திற்கு இசைவு அளித்த நபர் உண்மை நிலையை சாதாரணமாக யாவரும் அறியக்கூடிய வழிகளில் அறிந்திருக்க வாய்ப்பிருந்தால், அவருக்கு எவ்வித தீர்வழியும் கிடைக்காது.

1. (1880) ILR 5 Bom. 92.
2. (1866) 2 Eq. 264

மௌனமாக இருத்தல், எடுத்துரைப்பாக கருதப்படுமா? (Can silence amounts to representation?):

பொதுவாக மௌனமாக இருத்தல், ஒரு எடுத்துரைப்பாக கருதப்படாது. என்றும், சில விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே அவ்வாறு கருதப்படும் என்றும் பிரிவு 17–ன் கீழான விளக்கத்தில் கூறப்பட்டிருப்பதை நாம் ஏற்கனவே வினா எண். 32–ல் விரிவாகக் கண்டுள்ளோம். எனவே அங்கு காண்க.

மோசடி, திரித்துக்காட்டல் – வேறுபாடுகள் :

மோசடி [Fraud]	திரித்துக்காட்டுதல் [Misrepreserntation]
1. **தன்மை:** மனதார விரும்பித் திட்டமிட்ட எடுத்துரைப்பு (Wilful Misrepresentation).	மாசற்ற எடுத்துரைப்பு (Innocent Misrepresentation).
2. **நோக்கம்:** ஏமாற்றும் நோக்கைக் கொண்டது.	ஏமாற்றும் நோக்கில்லாதது.
3. **நம்பிக்கை:** பொய்யென்று நம்பியே மெய்யெனக் கூறுதல்.	மெய்யென நம்பிக் கூறுதல்.
4. **நீக்கம் மற்றும் இழப்பீடு:** ஒப்பந்தத்தை நீக்கும் உரிமையும் இழப்பீடு கோரும் உரிமையும் பாதிக்கப்பட்டவருக்கு உண்டு.	நீக்கம் அல்லது தவிர்க்கும் உரிமை மட்டுமே உண்டு.
5. **உண்மை அறிதல் :** பாதிக்கப் பட்டவர் பொது நிலையான செயலறிவு மூலம் உண்மையை அறியும் நிலையில் இருந்தால் கூட ஒப்பந்தத்தை தவிர்க்கலாம்.	பொது நிலையான செயலறிவு மூலம் உண்மையை அறியும் நிலையில் பாதிக்கப்பட்டவர் இருந்தால் ஒப்பந்தத்தை தவிர்க்க முடியாது.
6. **சட்டப் பிரிவு :** இது குறித்து பிரிவு 17 வரையறுக்கிறது.	இது குறித்து பிரிவு 18 வரையறுக் கிறது.

5. தவறு [Mistake] [பிரிவுகள் 20, 21 மற்றும் 22]

35. Enumerate the circumstances in which mistake vitiates a contract. (ஒரு ஒப்பந்தத்தை தவறு எச்சூழ்நிலைகளில் பாதிக்கின்றது என்பதை விளக்கு.)

(அல்லது)

Discuss with reference to leading cases the rule relating to contracts vitiated by mistake as to identify of parties. (தரப்பினர்களின் அடையாளம் குறித்த தவறினால் ஒப்பந்தம் பாதிக்கப்படுவது தொடர்பான விதியை முக்கியமான வழக்குகளைச் சுட்டிக்காட்டி விவாதிக்க.)

(அல்லது)

Discuss in detail the circumstances in which mistake affect the validity of contract. (ஒப்பந்தத்தின் செல்லுதன்மையை தவறு எச்சூழ்நிலைகளில் பாதிக்கின்றது என்பதை விரிவாக விவாதி.)

(அல்லது)

When can 'mistake'be pleaded in avoidance of a contract? What are the kinds of 'mistake' that are not sufficient to avoid a contract? (ஒரு ஒப்பந்தத்தைத் தவிர்த்துக் கொள்வதில் எப்பொழுது 'தவறு' என்பதை வாதுரைக்கவியலும்? ஒரு ஒப்பந்தத்தைத் தவிர்ப்பதற்கு போதுமானதாக இல்லாத 'தவறின்' வகைகள் யாவை?)

(அல்லது)

What is meant by mistake of identity? Write leading cases. (அடையாளம் குறித்து ஏற்படுகிற தவறு என்றால் என்ன? தலையான தீர்ப்புகளைக் கூறுக.)

(அல்லது)

Mistake - Write short notes (தவற்றுக்கோள் – சிறு குறிப்பு எழுதுக)

தவறு (Mistake):

ஒப்பந்தத்தின் கருப்பொருள் குறித்து அல்லது ஒப்பந்தம் செய்து கொள்ளும்

நபர் குறித்து தவறாகப் புரிந்து கொள்ளுதல் 'தவறு' எனப்படும். ஒரு ஒப்பந்தம் தவறின் காரணமாக உருவானால், அது சட்டப்படி செல்லாததாகிவிடுகிறது.

தவறின் வகைகள் :

1. சட்டத் தவறு (Mistake of Law); 2. பொருண்மைத் தவறு (Mistake of Fact)

1. சட்டத் தவறு (Mistake of Law) - 3 பிரிவுகள்

(a) இந்திய சட்டத் தவறு (Mistake as to Indian Law) : ஒவ்வொரு நாட்டு குடிமகனும் தன் நாட்டுச் சட்டத்தை அறிந்திருக்க வேண்டும் என்பது பொதுவிதி. தனக்கு அச்சட்டம் தெரியாதெனக் கூறி சட்டத்தின் பிடியிலிருந்து எவரும் தப்பிக்க இயலாது. அவ்விதம் ஒவ்வொருவரும் வாதிட ஆரம்பித்தால் நாட்டில் அமைதிக்கு இடமில்லாது போய் விடும். எனவே சட்டத்தின் தன்மை தெரியாமல் ஒரு செயலை தவறாகச் செய்துவிட்டதாகக் கூறி ஒப்பந்தத்திலிருந்து ஒருவர் விலக முடியாது. இதையே பிரிவு 21 'இந்தியாவில் அமலிலுள்ள ஒரு சட்டம் பற்றிய தவறு ஏற்பட்டால், அத்தவறால் விளைந்த ஒப்பந்தம் தவிர்தகு (voidable) ஒப்பந்தமாகாது' என்கிறது. ஏனெனில் ஒவ்வொருவரும் அவரவர் நாட்டின் சட்டங்களைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும் என்பது பொது விதியாகும். "சட்ட அறியாமையை சட்டம் மன்னிப்பதில்லை" (Ignorantio juris non excusat) என்பது சட்ட முதுமொழியாகும். எனவே இந்தியச் சட்டத்தில் ஏற்பட்ட ஒரு தவறின் காரணமாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டால், அத்தவறினால் அவ்வொப்பந்தம் செல்லாததாகிவிட்டது என்று கூற முடியாது. அவ்வொப்பந்தம் செல்லத்தக்கதே.

(b) வெளிநாட்டுச் சட்டத் தவறு (Mistake as to Foreign Law): பிரிவு 21–ல் 'இந்தியாவில் அமலில் இல்லாத (வெளிநாட்டுச்) சட்டம் பற்றிய தவறு, பொருண்மை பற்றிய தவறின் சட்ட விளைவையே பெறும் என்று கூறப் பட்டுள்ளது. ஒரு உடன்பாட்டின் இருதரப்பாளரும் வெளிநாட்டுச் சட்டம் பற்றிய தவறினால் உடன்பாடு செய்திருந்தால், அது ஒரு பொருண்மைத் தவறாகும். எனவே அவ்வொப்பந்தம் பிரிவு 20–ன்படி இல்லாநிலை (void) அடைகிறது.

(c) தனி உரிமை பற்றிய தவறு (Mistake of Private Rights): தன்னுடைய உரிமைப் பற்றி தானே அறியாமல் ஏற்பட்ட தவறின் காரணமாக எழுந்த ஒப்பந்தத்தை அத்தரப்பினர் தவிர்த்துக் (voidable) கொள்ளலாம்.

1. "A contract is not voidable because it was caused by a mistake as to any law in force in India, but a mistake as to a law not in force in India, has the same effect as a mistake of fact." - **Section 21 of the Indian Contract Act, 1872.**

Cooper v. Phibbs[1] – என்ற வழக்கில் ஒருவர் ஒரு குட்டையில் மீன் பிடிக்கும் உரிமையை குத்தகைக்கு எடுத்திருந்தார். அவர்தாம் அந்தக் குட்டையின் உரிமையாளர் என்ற உண்மை அவருக்குத் தெரியாமல், அவர் அதில் மீன் பிடிக்கும் உரிமையை மற்றொருவரிடமிருந்து குத்தகைக்கு எடுத்தார். பின்னர், இந்த உண்மை அவருக்குத் தெரியவந்த பொழுது, ஒப்புக் கொண்டபடி குத்தகைப் பணம் தர மறுத்தார். அவ்வொப்பந்தம் தவிர்க்கு நிலையது என நீதிமன்றமும் அவருக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தது.

2. பொருண்மைத் தவறு (Mistake of Fact) :

ஒப்பந்தம் செய்து கொள்ளும் நபர்களுக்கிடையே பொருண்மை (ஒப்பந்தத்தின் சங்கதி) சம்பந்தமாக தவறு ஏற்படுவதுண்டு. அத்தவறு ஒப்பந்த நபர்களிடையே கருத்தொருமித்தலை (Identity of mind) தவிர்க்கிறது. இத்தகைய ஒப்பந்தங்கள் இல்லாநிலை (void) அடைகின்றன.

பொருண்மைத் தவறு - 3 பிரிவுகள் :

(a) பரிமாற்றமான தவறு (Mutual Mistake) : இதில் ஒப்பந்தத் தரப்பாளர் ஒருவருக்கொருவர் தவறாகப் பொருள் கொண்டு விடுவதால், அவர்கள் ஒரே பொருளை ஒரே உணர்வில் (samething in same sense) உடன்படவில்லை. இதையே 'இணைசோத இருதலைத் தவறு' (Non-identical bilateral Mistake) எனவும் கூறுவதுண்டு. ஒரு ஒப்பந்தம் பற்றிய அடிப்படைப் பொருண்மை பற்றி தரப்பாளர் இருவருமே தவறாகப் பொருள் கொள்வதால், இது ஏற்படுகிறது. ஆனால் ஒவ்வொரு தரப்பினரும் வெவ்வேறான தவறு புரிகிறார்கள்.

(எ.கா.) சேகர் தன் 'டயோடா குவாலிஸ்' காரை விற்க முனைகிறார். அப்பாவு மேற்படி அவருடைய காரை 'டாடா சியாரா' காரென எண்ணிக் கொண்டு அம்முனைவை ஏற்கிறார். இது ஒரு இருதலைத் தவறு. ஆயினும், ஒன்றுக்கொன்று இணையானதல்ல.

பரிமாற்றமான தவறின் சட்ட விளைவு : பரிமாற்றமான தவறினால் ஏற்பட்ட ஒப்பந்தம் இல்லாநிலை அடைய வேண்டியதில்லை. ஏனெனில், நீதிமன்றம் 'உறுதியுரையின் உணர்வை' (sense of promise) கண்டுபிடிக்க முயற்சி செய்யும். அவ்வாறு கண்டு கொண்டால் ஒப்பந்தம் செல்லத்தக்கதாகும். இல்லாது போனதால்தான், இல்லா நிலையடையும்.

(b) இருதலைத் தவறு (Bilateral Mistake): பிரிவு 20-ன்படி, ஒரு உடன்பாட்டுக்கு அடிப்படையான பொருண்மை குறித்து அவ்வுடன்பாட்டின்

1. (1867) LR 2 HL 149

தரப்பினர்கள் இருவரின் மனதிலும் ஏற்படுகிற தவறு, இருதலைத் தவறு எனப்படுகிறது. இத்தகு தவறினால் விளைந்த ஒப்பந்தங்கள் இல்லாநிலை (void) அடையும்.

(எ.கா.) 'A' என்பவர் 'B' என்பவரின் ஒரு குறிப்பிட்ட குதிரையை வாங்க உடன்படுகிறார். இவ்வாறு பேரம் செய்யும் பொழுது அக்குதிரை இறந்து விட்டிருந்தது. இப்பொருண்மை (சங்கதி) இருவருக்குமே தெரியாது. எனவே இந்த உடன்பாடு இல்லாநிலையடைகிறது.

Galloway v. Galloway[1] – இவ்வழக்கில் இருவர் தங்களுக்குள் சட்டப்படியாக திருமணம் நடந்துவிட்டதாக பரஸ்பரம் தவறாக எண்ணிக் கொண்டு, விவாகரத்து பத்திரம் ஒன்றை எழுதிக் கொண்டனர். இந்த உடன்பாடு இல்லா நிலையானதாகும்.

பிரிவு 20–ன் கீழான விளக்கத்தில், ஒரு உடன்பாட்டின் கருப்பொருளாக உள்ள ஒன்றின் மதிப்பு குறித்து தவறான அபிப்பிராயம் கொள்வது, பொருண்மை (சங்கதி) சார்ந்த விஷயம் குறித்த ஒரு தவறாகக் கொள்ளப்படமாட்டாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ.கா.) 'A' ஒரு பொருளை அதன் மதிப்பு ரூ.1,000/– என்று நினைத்து வாங்குகிறார். அதன் மதிப்பு ரூ. 500/– தான். இந்த ஒப்பந்தம் இல்லாநிலையதல்ல.

இருதலைத் தவறு – இருவிதங்களில்:

(அ) ஒப்பந்தத்தினை நிறைவேற்றும் சாத்தியம் பற்றிய தவறு (Mistake as to possibility of the performance of contract) : இரு தரப்பாளரும் ஒப்பந்தத்தை நிறைவேற்றலாம் என்று எண்ணி உடன்படு கின்றனர். ஆனால் உண்மையில் அவ்வாறு நிறைவேற்ற எவ்வித சூழ்நிலையும் இல்லையெனில், அந்த இருவரின் இசைவும் இல்லாமல் ஆக்கப்படுகிறது (Nullfied).

(ஆ) ஒப்பந்தத்தின் கருப்பொருள் பற்றிய தவறு (Mistake as to subject matter of contract) : ஒப்பந்தத் தரப்பாளர் இருவரும் ஒப்பந்தத்தின் கருப்பொருள் சார்ந்த தவறின் அடிப்படையில் செயல்பட்டால், அவ்வொப்பந்தம் இல்லாநிலையதாகிறது (Void). (அதாவது அவர்கள் ஒரு பொருள் இருப்பதாக எண்ணுவார்கள். ஆனால் அது இல்லாமல் இருக்கும்). கருப்பொருள் பற்றிய தவறு பின்வரும் வகையனவாகும்.

1. (1914) 30 T.L.R. 531

(i) கருப்பொருளின் உளதாம் தன்மை குறித்த தவறு (Mistake as to existence of subject matter) : ஒப்பந்தத்தின் இரு தரப்பாளர்களும் ஒப்பந்தத்தின் கருப் பொருளின் உளதாம் தன்மை குறித்து தவறான எண்ணம் கொண்டிருந்து, அதன் அடிப்படையில் ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தால், அவ்வொப்பந்தம் இல்லாநிலையடைகிறது (Void). (அதாவது மேற்சொன்னவாறு அவர்கள் ஒரு பொருள் இருப்பதாக எண்ணுவார்கள். ஆனால் அது இல்லாமல் இருக்கும்).

Scott v. Coulson[1] - ஒருவர் பெயரில் ஆயுள் காப்பீட்டுப் பத்திரத்தை விற்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் யார் பெயரில் ஆயுள் காப்பீடு செய்யப்பட வேண்டியிருந்ததோ, அவர் ஒப்பந்தத் தேதியில் இறந்துவிட்டிருந்தார். இப்பொருண்மை அவ்வொப்பந்தத்தின் இரு தரப்பினருக்குமே தெரியாது. எனவே அவ்வொப்பந்தம் இல்லாநிலையது என மேற்படி வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது. இங்கு யார் பெயருக்கு காப்பீட்டுப் பத்திரம் வழங்கப்படவுள்ளதோ, அவர் அவ்வொப்பந்தத்தின் கருப்பொருள் ஆவார். அவர் உயிருடன் உள்ளரா, இல்லையா என்பதை அறிந்து கொள்ளாமலேயே (existence) தவறாக மேற்படி ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டதால், அது இல்லாநிலையதாகி, இரத்து செய்யப்பட்டது.

Nursingdass Kothari v. Chuttoo Lal[2] - எனும் வழக்கில் ஒரு மனை நிலத்தை விற்பதற்காக ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. ஆனால் அம்மனை நிலம், நகர மேம்பாட்டுச் சட்டத்தின் கீழ் கையகப்படுத்தப்படவுள்ள நிலமாக அறிவிக்கப்பட்டிருந்தது. இப்பொருண்மை, அந்நிலத்தை விற்பவருக்கோ, வாங்குபவருக்கோ தெரியாது. ஒப்பந்தத்தின், கருப்பொருள் உள்ளதா, இல்லையா என்பதில் தவறு ஏற்பட்டுள்ளதால், அவ்விற்பனை ஒப்பந்தம், இல்லாநிலையது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இங்கு ஒப்பந்தத்தின் கருப்பொருளான அம்மனை நிலம் ஒப்பந்தக் காலத்தில் அதன் உரிமையாளருக்கு சொந்தமாக இல்லாமல் போய்விட்டது.

(ii) கருப்பொருளின் அடையாளம் பற்றிய தவறு (Mistake as to identity of the subject matter) : ஒப்பந்தத் தரப்பாளர்கள், கருப்பொருள் பற்றிய அடையாளங்களில் உடன்படவில்லை என்றால், அவ்வொப்பந்தம் கருப் பொருளின் அடையாளம் பற்றிய தவறின் அடிப்படையில் இல்லாநிலையதாகும் (Void).

Raffles v. Wichelhaus[3] – இவ்வழக்கில் A என்பவர், பம்பாயிலிருந்து 'எக்ஸ் பியர்லெஸ்' என்ற கப்பலில் இங்கிலாந்திற்கு வந்தடைகிற 125 கட்டுகள்

1. (1903) 2 Ch. 249 (252)
2. (1923) I.L.R. 50 Cal. 615 : 27 C.W.N. 639 : AIR 1923 Cal. 641.
3. (1864) 159 E.R. 375 : 133 R.R. 853

சூரத் பருத்தியை வாங்குவது தொடர்பாக B என்பவரிடம் உடன்பாடு செய்து கொண்டார். 'எக்ஸ் பியர்லஸ்' எனும் ஒரே பெயரில் இரண்டு கப்பல்கள் இருந்தன. அவைகளில் ஒன்று 'அக்டோபர்' மாதத்திலும், மற்றொன்று 'டிசம்பர்' மாதத்திலும் பம்பாயிலிருந்து கிளம்பி இங்கிலாந்தை வந்தடைகின்றன. இங்கு 'B', தான் விற்பது டிசம்பர் மாதத்தில் வரும் கப்பலில் உள்ள பருத்தி என்றும் 'A', தான் வாங்குவது அக்டோபர் மாதம் வரும் கப்பலில் உள்ள பருத்தி என்றும், வெவ்வேறான கருத்துக்கள் கொண்டிருந்தனர். கப்பலின் அடையாளம் குறித்து ஒப்பந்தத் தரப்பினர் இருவரும் வெவ்வேறு கருத்துக் கொண்டு இருந்ததால் அவர்கள் செய்து கொண்ட ஒப்பந்தம் இல்லாநிலையென (Void) தீர்ப்பு வழங்கப்பட்டது.

(iii) கருப்பொருளின் தரம் பற்றி தவறு (Mistake as to quality of the subject matter): ஒப்பந்தத்தின் கருப்பொருள் குறித்த தரம், தரப்பினர்கள் எதிர்பார்த்தபடி இல்லாமல், அதனின்றும் வேறுபட்டு இருந்தால், தவறின் அடிப்படையில் அவ்வொப்பந்தம் இல்லாநிலையதாகும்.

Nicholson & Venn v. Smith Merriott[1] என்ற வழக்கில், 'இங்கிலாந்து மன்னர் முதலாம் சார்லஸ் அவர்களின் அதிகாரப்பூர்வமான சொத்து' என்று விலைப்பட்டியலில் குறிப்பிடப்பட்டிருந்த ஒரு சோடி துண்டுகளை வாதி விலைக்கு வாங்கினார். ஆனால் அவை உண்மையில் ஜார்ஜ் பரம்பரையைச் சேர்ந்ததாகும். எனவே அவ்விற்பனை இல்லாநிலையது என்றும், வாதி பணத்தைத் திரும்பப் பெறத்தக்கவராவார் என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(iv) கருப்பொருளின் அளவு பற்றிய தவறு (Mistake as to quantity to the subject matter) : ஒரு ஒப்பந்தத்தின் கருப்பொருளின் அளவு அல்லது பரப்பளவு (quantity or extent) குறித்தும் தவறு ஏற்படலாம். இதனாலும் அவ்வொப்பந்தம் இல்லாநிலையதாகும்.

Henkel v. Pape[2] – எனும் வழக்கில் பிரதிவாதிக்கு துப்பாக்கிகள் தேவைப்பட்டன. எனவே துப்பாக்கி தயாரிக்கும் தொழிற்சாலையை நடத்தி வரும் வாதியிடம் துப்பாக்கிகளின் விலை குறித்து விசாரித்தும், தனக்கு 50 துப்பாக்கிகள் வரை தேவைப்படலாம் என்றும் குறிப்பிட்டு கடிதமொன்றை எழுதினார். இதற்குரிய பதிலை வாதி அனுப்பினார். அதனடிப்படையில் தனக்கு **'மூன்று துப்பாக்கிகளை அனுப்புக' (Send three rifles)** என்று பிரதிவாதி, வாதிக்கு தந்தி கொடுத்தார். ஆனால் 'மூன்று துப்பாக்கிகளை அனுப்புக' என்று தந்தி கொடுப்பதற்கு பதிலாக தவறுதலாக **'துப்பாக்கிகளை அனுப்புக' (Send the rifles)** என்று தந்தி

1. (1947) 177 L.T. 189.
2. (1870) 6 Ex. 7

கொடுக்கும் அதிகாரி தந்தியடித்துவிட்டார். எனவே, வாதி நிறுவனம், பிரதிவாதி ஏற்கனவே தனது விசாரணைக் கடிதத்தில் விசாரித்திருந்தபடி, 50 துப்பாக்கிகளை பிரதிவாதிக்கு அனுப்பிவிட்டார். பிரதிவாதி அவற்றில் மூன்றை எடுத்துக் கொண்டு, மீதியை திருப்பி அனுப்பிவிட்டார். ஆனால் வாதி 50 துப்பாக்கிகளுக்குண்டான விலையையும் கொடுக்க வேண்டும் என்று வழக்கிட்டார். அவ்வழக்கை ஆராய்ந்த நீதிமன்றம், 50 துப்பாக்கிகள் விற்பதற்கோ, வாங்குவதற்கோ எவ்வித ஒப்பந்தமும் வாதி–பிரதிவாதிக்கிடையே ஏற்படவில்லையென்றும், கருப் பொருளின் அளவில் ஏற்பட்ட தவறின் காரணமாக 50 துப்பாக்கிகளுக்குண்டான விலையை பிரதிவாதி செலுத்த வேண்டியதில்லையென்றும், பிரதிவாதி எடுத்துக் கொண்ட மூன்று துப்பாக்கிகளுக்கு மட்டுமே அவர் விலை செலுத்த வேண்டிய பொறுப்புடையவர் என்றும் தீர்ப்புரைத்தது.

(v) கருப்பொருளின் உரிமை மூலம் பற்றிய தவறு (Mistake as to title of the subject matter) : ஒப்பந்தத்தின் கருப்பொருளை விற்பவருக்கு, அதனை விற்பதற்கு அதன் மீது உரிமை மூலம் உள்ளது என்று அதனை வாங்குபவர் கருதுவார். ஆனால் அவ்வாறு உரிமை மூலம் இல்லையெனில், அவ்வொப்பந்தம் இல்லாநிலையடையும். (முன்கண்ட **Cooper v. Phibbs** வழக்கினைக் காண்க.)

(vi) கருப்பொருளின் விலை பற்றிய தவறு (Mistake as to price of the subject matter) : ஒப்பந்தத் தரப்பாளர் இருவருமே கருப்பொருளின் விலை பற்றி தவறு கொண்டிருந்தால், அவ்வொப்பந்தம் இல்லாநிலை அடைகிறது.

Webster v. Cecil[1] – இவ்வழக்கில் 'B'–க்குச் சொந்தமான ஒரு சொத்தை 2,000 பவுண்டுக்கு வாங்கிக் கொள்வதாக 'A' என்பவர் அவரிடம் முனைவு ஒன்றைச் செய்தார். ஆனால் அம்முனைவை 'B' ஏற்கவில்லை. ஆனால் பின்னிட்டு அச்சொத்தை 1,250 பவுண்டு விலைக்கு (உண்மையில் எழுத்துப் பிழை காரணமாக 2,250 என்று குறிப்பிடுவதற்கு பதிலாக தவறுதலாக 1,250 பவுண்டு என்று குறிப்பிட்டுவிட்டார்) விற்பதாக 'B' என்பவர், 'A'–யிடம் முனைவு செய்தார். 2,000 பவுண்டு விலைக்கு கேட்டு தராததை, 1,250 பவுண்டுக்கு தர முனைகிறாரே என்று 'A'–யும், அம்முனைவை ஏற்றுக் கொள்வதாக உடனடியாக கடிதமொன்றை 'B'–க்கு எழுதினார். இதன் அடிப்படையில் தனக்கு 1,250 பவுண்டு விலைக்கு அச்சொத்தை தனக்கு 'B' விற்க வேண்டும் என்று கோரி 'A' வழக்கிட்டார். ஆனால் இங்கு கருப்பொருளின் விலையைத் தெரிவிப்பதில் தவறு ஏற்பட்டுள்ளது என்பதை நீதிமன்றம் கண்டறிந்து கொண்டது. எனவே 'A'–யின் வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்புரைத்தது.

1. (1861) 54 E.R. 812 : 132 R.R. 185

(c) ஒருதலைத் தவறு (Unilateral Mistake) : ஒப்பந்தத்தின் பொருள் குறித்து இருதரப்பினரில் யாரேனும் ஒருவர் தவறு செய்தால், அது ஒரு தலைத் தவறு எனப்படும். இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 22–வது பிரிவானது, "ஒப்பந்தமொன்று, அதன் ஒரு தரப்பினரால் பொருண்மை பற்றிய விஷயம் (matter of fact) குறித்து செய்யப்பட்ட தவறின் கீழ் ஏற்பட்டுள்ளது எனும் காரணத்தால் மட்டுமே, அவ்வொப்பந்தம் தவிர்தகு நிலையை (Voidable) அடையாது"[1] என்று கூறுகிறது. அதாவது இரு தரப்பினரில் ஒப்பந்தத்தின் பொருண்மை சார்ந்த விஷயம் குறித்து யாரேனும் ஒருவர் தவறு செய்யின், தவறு செய்தவரை அவ் வொப்பந்தம் கட்டுப்படுத்தும்; அவர் அதை தவிர்க்க முடியாது. அவ்வொப்பந்தம் செல்லத்தக்கது என்பதே இப்பிரிவின் பொருளாகும்.

Smith v. Huges[2] - இவ்வழக்கில் A என்பவர் மாதிரி (sample) மூலம் B–க்கு ஓட்ஸ் விற்பனை செய்தார். அவற்றை பழைய ஓட்ஸ் என்று நினைத்து B வாங்கி கொண்டார். ஆனால் அது புதிய ஓட்ஸ்–ஆக இருந்தது. இது ஒரு தரப்பினரின் தவறு மட்டுமே. ஆகவே தவிர்தகு ஒப்பந்தமாகாது. எனவே, அது செல்லத்தக்கதே என்றும், அவ்விற்பனை ஒப்பந்தம் கட்டுப்படுத்தக்கதே என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

விதிவிலக்குகள் : ஒருதலைத் தவற்றின் காரணமாக எழும் ஒப்பந்தங்கள், தவிர்தகு ஒப்பந்தமாகா என்று பிரிவு 22 கூறியுள்ளதை நாம் மேலே கண்டோம். எனினும் பின்வரும் விதிவிலக்கான சூழ்நிலைகளில், ஒரு தலைத் தவற்றினால் ஏற்படும் ஒப்பந்தம் இல்லா நிலையடைகிறது (Void). அவை,

(i) ஒப்பந்தத்தின் தன்மை பற்றிய தவறு (Unilateral mistake as to nature of Contract) : ஒப்பந்தத்தின் ஒரு தரப்பினர் தன் மீது எவ்வித குற்றமும் இன்றி, ஒப்பந்தத்தின் தன்மை குறித்து தவறு செய்தால், அவ்வொப்பந்த இல்லா நிலையடைகிறது. இத்தவறுகள் பெரும்பாலும் ஆவணங்களின் அடிப்படையில் எழுகின்றன. அதாவது ஆவணத்தின் தன்மையை இன்னதென்று அறியாமல் கையெழுத்திட்டாலும், அப்படிக் கையெழுத்திட்டவர் பின்னர் அவ்வொப்பந்தத்தை இல்லாநிலையதாக்கிக் கொள்ளலாம். இவ்வாறு வாதம் புரிதல், 'ஆவணப் பிழைவாதம்' (Non est factum) எனப்படுகிறது. முக்கிய வழக்கு வருமாறு.

Foster v. Mckinnon[3] – இவ்வழக்கில் ஒரு வயதான மனிதர்

1. "A contract is not voidable merely because it was caused by one of the parties to it being under a mistake as to a matter of fact" - **Section 22 of the Indian Contract Act, 1872.**
2. (1871) L.R. 6 Q.B. 597.
3. (1869) 4 C.P. 704.

கண்பார்வைக் குறைவினால் மாற்றுச்சீட்டொன்றில் அதனை ஒரு பொறுப்புறுதிப் பத்திரம் என்றெண்ணி கையெழுத்திட்டார். இவ்வொப்பந்தம் இல்லாநிலையது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

Thoroughgood's case[1] – இவ்வழக்கில் கல்வியறிவில்லாத ஒருவர், தனக்கு சில சொத்துக்களில் இருந்து வரும் வாடகை வருமானங்களை விடுதலை செய்து கொடுக்கும் வகையில் விடுதலைப் பத்திரம் ஒன்றை எழுதி வைக்க வேண்டியிருந்தது. விடுதலைப் பத்திரம் தயாரிக்கப்பட்டு, அதில் அவரது கைரேகை பெறப்பட்டது. ஆனால் அவ்விடுதலைப் பத்திரத்தில் சம்பந்தப்பட்ட சொத்தின் மீது உள்ள அனைத்து உரிமைகளையும் அவர் விடுதலை செய்வதாக குறிப்பிடப்பட்டிருந்தது. இது ஒப்பந்தத்தின் தன்மை பற்றிய தவறின் காரணமாக எழுந்த ஒப்பந்தமாகும் என்றும், இதற்கு ஆவணப் பிழை வாதம் பொருந்தும் என்றும் கூறி, அவ்விடுதலைப் பத்திரத்தை நீதிமன்றம் இரத்து செய்தது.

Chimanram v. Divana Chand[2] – ஒரு ஆவணத்தின் தன்மை இன்னது என்று கருதி கையொப்பமிட்ட பின்னர், அது கருதப்பட்டதற்கு மாறாக பிறிதொன்றாக மாறிவிட்டால், அந்த ஆவணத்தின் வாயிலாக எழுந்த ஒப்பந்தத்தை 'ஆவணப் பிழை வாதம்' எனும் அடிப்படையில் தவிர்த்துக் கொள்ளலாம் என்று பம்பாய் உயர் நீதிமன்றம் கூறியுள்ளது.

Hem Singh v. Bhagwat[3] – இவ்வழக்கில் கண் பார்வையற்ற ஒருவரிடம் ஒரு ஆவணத்தை ஒத்திசைவுப் பத்திரம் (Deed of Compromise) என்று மோசடியாக எடுத்துக் கூறி, ஒரு விடுதலைப் பத்திரத்தில் (Deed of Release) அவரிடம் கையொப்பம் வாங்கிக் கொண்டது, இல்லாநிலையது என்று பாட்னா உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

(ii) ஒப்பந்தம் செய்து கொள்ளும் நபரின் அடையாளம் குறித்த தவறு (Unilateral mistake as to identity of the party): ஒப்பந்தத்தின் ஒரு தரப்பாளர், தான் எண்ணியிருந்த மறுதரப்பாளருடன் அல்லாமல், வேறு ஒரு நபருடன் ஒப்பந்தம் செய்து கொண்டால், அங்கு நபரின் அடையாளம் பற்றிய தவறு ஏற்பட்டுள்ளது என்று பொருளாகும். இத்தகு ஒப்பந்தங்கள் இல்லாநிலையதாகும்.

ஆனால், ஒப்பந்தத் தரப்பாளரின் அடையாளம் குறித்த தவறு பின்வரும் நிபந்தனைக்குட்பட்டே சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தை இல்லாநிலையதாக்கும். அவை, 1. ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட வேண்டிய நபரின் அடையாளம், அந்த

1. (1582) 76 E.R. 408.
2. AIR 1932 Bom. 151.
3. AIR 1925 Pat. 140.

ஒப்பந்தத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருத்தல் வேண்டும். 2. தவறுதலாக ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட நபர், சம்பந்தப்பட்ட மறு தரப்பாளருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள எண்ணியிருத்தல் கூடாது.

Cundy v. Lindsay[1] – 'M/s. Blenkiron & Son' எனும் பெயருடைய ஒரு வியாபார நிறுமம், வுட் தெரு, கதவு எண். 123–ல் வியாபாரம் செய்து வந்த புகழ்பெற்ற ஒரு நிறுமமாகும். அதற்கு அடுத்த தெருவின் மூலையில், ஒரு சன்னல் வுட் தெருவை நோக்கி இருக்கக் கூடிய ஒரு அறையில் 'Alfred Blenkiron' என்பவர் தங்கியிருந்தார். அவர், வுட் தெரு, கதவு எண். 37 எனும் முகவரியுடன் கூடிய கடிதத்தைக் கொண்டு அதில் 'Blenkiron & Co' என்று தோன்றும் படியாக தமது முதலெழுத்துக்கள் இல்லாமல் கையொப்பமிட்டு, கடனில் சரக்குகள் பெற வேண்டி, சரக்குகள் அனுப்பும் நிறுவனங்களுக்கு கடிதங்கள் எழுதி அனுப்பினார். அத்தகு கடிதங்களில் ஒன்று, 'M/s.Lindsay & Co' எனும் நிறுமத்தை அடைந்தது. அவர்களும், அக்கடிதம் 'M/s. Blenkiron & Son' எனும் புகழ்பெற்ற நிறுமத்திடமிருந்து வந்திருப்பதாகக் கருதி, ஆனால் கதவு எண்ணை நினைவில் கொள்ளாமல், விலைப்பட்டியலை தயார் செய்து, கடனில் சரக்குகளை அனுப்பினர். சரக்குகளை பெற்றுக் கொண்ட மேற்படி வழக்கின் நாயகன் 'Alfred Blenkiron' என்பவர், அதனை மூன்றாம் நபர்களுக்கு விற்றுவிட்டார். அவ்வாறு வாங்கிக் கொண்ட நிறுமங்களில் ஒன்றுதான், 'M/s. Cundy & Co.' எனும் நிறுமமாகும். பின்னிட்டு 'Alfred Blenkiron' –னின் குற்றச் செயல்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அவர் தண்டிக்கப்பட்டார்.

இது ஒரு புறமிருக்க, மேற்படி 'M/s.Lindsay & Co' எனும் நிறுமம், அது அனுப்பிய சரக்குகளை கையாடல் செய்துவிட்டதாகவும், எனவே அவற்றை திரும்ப ஒப்படைக்க வேண்டுமென்றும் கூறி 'M/s. Cundy & Co.' எனும் நிறுமத்தின் மீது வழக்கிட்டது. வழக்கை ஆராய்ந்த நீதிப்பெருமகனார்கள் அவை (House of Lords), மேற்படி 'M/s.Lindsay & Co' எனும் நிறுமம், 'Alfred Blenkiron'–வுடன் ஒப்பந்தம் செய்து கொள்ள ஒருபோதும் கருதவில்லை; எனவே தவறான நபருடன் கொண்ட ஒப்பந்தம் இல்லாநிலையதாகும் (void); இங்கு ஒரு ஒப்பந்தத்திற்குத் தேவையான கருத்தொருமித்தல் இல்லை. எனவே, சரக்குகளின் மீதான சொத்துரிமை 'Alfred Blenkiron' –க்கு மாறிச் செல்லவில்லை. அவருக்குச் செல்லாததால், 'M/s. Cundy & Co.' எனும் நிறுமத்திற்கும் செல்ல வில்லை என்று கூறி, 'M/s.Lindsay & Co' எனும் நிறுமம் அச்சரக்குகளை திரும்பப் பெற உரிமை படைத்தது என்று தீர்ப்பளித்தது. இதிலிருந்து சற்றே மாறுபட்ட பொருண்மைகளைக் கொண்ட ஒரு முக்கிய வழக்கு வருமாறு.

1. (1878) 3 A.C. 459

Phillips v. Brooks (The Emerald Case)[1] – மிகவும் முக்கியத் துவம் வாய்ந்த இவ்வழக்கில் நார்த் (North) என்பவர், தாம் இலண்டன் நகரிலுள்ள சர் ஜார்ஜ் புல்லோ (Sir George Bullough) என்று கூறிக் கொண்டு ஒரு நகைக் கடையினுள் நுழைந்து, முத்துக்கள் சிலவற்றையும், ஒரு வைர மோதிரத்தையும் வாங்கினார். அவற்றின் மதிப்பு 450 பவுண்டு ஆகும். நகைக் கடையினர், சர் ஜார்ஜ் புல்லோ என்பவரைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ளனரே தவிர, நேரில் பார்த்ததில்லை. எனவே நகை வாங்கிய நபர், 'சர் ஜார்ஜ் புல்லோ'–தான் எனும் நன்னம்பிக்கையின் அடிப்படையில் நம்பி, அவர் 450 பவுண்டிற்கு கொடுத்த காசோலையை ஏற்றுக் கொண்டனர். அக்காசோலையை வசூலுக்கு நகைக் கடையினர் அனுப்பிய பொழுது, அதன் மதிப்பு மறுக்கப்பட்டது (dishonoured). விசாரணையின் பொழுது, அந்த வைர மோதிரம் 350 பவுண்டிற்கு அடகு வைக்கப் பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே நார்த்தின் மீது ஆள் மாறாட்டத்திற் காக குற்றவியல் வழக்கு தொடரப்பட்டது. அதில் அவருக்கு தண்டனையும் வழங்கப்பட்டது. எனினும் **தவறாக விற்பனை செய்யப்பட்ட** தங்கள் நகையை திரும்பப் பெறுவதற்காக அதனை அடகு பெற்ற பிரதிவாதியின் மீது நகைக் கடையினர் (மேற்படி வழக்கில் வாதி) மேற்கண்ட வழக்கிட்டனர். அதில், பின்வருமாறு வாதம் புரிந்தனர். அதன்படி, நார்த் என்பவர், தன்னை சர் ஜார்ஜ் புல்லோ என்று கூறியதை தவறாக நம்பியதாகவும், அதனால் தாங்கள் சர் ஜார்ஜ் புல்லோ–விற்குத்தான் நகையை விற்றனரே தவிர, நார்த்–திற்கு அல்ல என்றும், எனவே, தவறின் காரணமாக எழுந்த ஒப்பந்தம் இல்லா (void) நிலையதாகும் என்றும், இதனால் நார்த் என்பருக்கு அவ்வைர மோதிரத்தின் மீதான எச் சொத்துரிமையும் சென்றடையவில்லை என்றும், நார்த்திற்கு சொத்துரிமை இல்லாததால் அவரிடமிருந்து அதனை அடகு பெற்ற பிரதிவாதிக்கும் அதில் எவ்வித உரிமையும் கிடையாது என்றும், எனவே பிரதிவாதி அம்மோதிரத்தை திரும்ப தங்களிடம் ஒப்படைக்க வேண்டியவர் என்றும் கூறினர்.

ஆனால் இவ்வாதத்தை நீதிமன்றம் ஏற்கவில்லை. மாறாக, நகைக் கடையினர், தங்களால் பார்வையாலும், பேச்சாலும் அடையாளம் கண்டு கொள்ளப் பட்டவரும், தங்கள் முன் நேரில் ஆஜராகியிருப்பவருமான நபருடனே ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனர். இங்கு ஒப்பந்தம் செய்து கொள்ளத் தூண்டிய காரணத்தில்தான் (mistake in causa) தவறு உள்ளதே தவிர, தரப்பினரை அடையாளம் கண்டு கொள்ளும் கருத்தொருமையில் (no mistake in consensu) இல்லை. அதாவது நார்த் செய்த மோசடியான திரித்துக்காட்டலே, அவ்வைர மோதிரம் உள்ளிட்ட பிற நகைகளை விற்பதற்கு தூண்டிய காரணமாக இங்கு உள்ளது. மோசடியால் தூண்டப்பட்டு, அதனால் விளைந்த ஒப்பந்தம், தவிர்தகு நிலையை

1. (1919) 2 KB 243

(voidable) மட்டுமே அடையத்தக்கதாகும். எனவே அம்மோதிரத்தின் மீதான சொத்துரிமை, நார்த் என்பருக்கு சென்றடைந்து விடுகிறது. அவ்வாறு சென்றடைந்து விட்டதால், நகைக் கடையினர் அவ்வைர மோதிரத்தை பிரதிவாதியிடமிருந்து திரும்பப் பெற முடியாது என்று நீதிமன்றம் மாறுபட்ட கோணத்தில் ஆராய்ந்து தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பிற்கு முற்றிலும் முரணாக பின்வரும் வழக்கொன்றில் தீர்ப்பளிக்கப்பட்டது.

Ingram v. Little[1] – இவ்வழக்கில் வாதிகள் கார் ஒன்றினை விற்க விளம்பரம் செய்தனர். தம்மை 'Hutchinson' என்று கூறிக் கொண்ட நபர் ஒருவர் வண்டியினை வாங்க முனைந்து, காசோலை மூலமாகப் பணம் செலுத்த முன் வந்தார். தமது முனைவு ஏற்கப்படாததைத் கண்ட அந்நபர், தாம் மரியாதைக்குரிய ஒரு பிரமுகர் என்றும், தம்முடைய முகவரி முதலான விவரங்களையும் கூறினார். அஞ்சலகத்தில் இருந்த தொலைபேசி விவரப்பட்டியலில் அவரால் பெயர் கூறப்பட்ட நபர், அவர் கூறிய முகவரியில் வசித்து வருவதைக் கண்டு, அவர் தம்மை 'Hutchinson' என்று கூறியது உண்மையே என்பதாக அறிந்து கொண்ட வாதிகள், காசோலையினைப் பெற்றுக் கொண்டு, வண்டியினை அந்நபரிடம் ஒப்படைத் தனர். பின்னிட்டு அந்நபர், அவ்வண்டியை பிரதிவாதிக்கு விற்றுவிட்டார். இதற்கிடையில் அந்நபர் கொடுத்த காசோலையின் மதிப்பு மறுக்கப்பட்டு (dishonoured) வாதிகளின் கைக்கே திரும்ப வந்துவிட்டது. மேற்படி பிரதிவாதி அவ்வண்டிக்குரிய மதிப்புள்ள மறுபயனை (விலையை) கொடுத்து, அதனை நல்லெண்ணத்துடன் வாங்கியவர் ஆவார். இந்நிலையில், தாங்கள் விற்ற வண்டியை அல்லது அதன் மதிப்பை திருப்பிக் கொடுக்கக் கோரி, வாதிகள் பிரதிவாதியின் மீது வழக்கிட்டனர். மேல்முறையீட்டு நீதிமன்றமானது, வாதிகளுக்கும் அந்நபருக்கும் இடையில் ஏற்பட்ட விற்பனை ஒப்பந்தம், தரப் பினரின் அடையாளம் பற்றிய தவறின் காரணமாக எழுந்ததாகும் என்றும், எனவே அவ்வொப்பந்தம் இல்லாநிலையது (void) என்றும், அவ்வண்டியின் மீதான சொத்துரிமை எவருக்கும் மாறிச் செல்லவில்லை என்றும், அது வாதிகளிடமே உள்ளது என்றும் கூறி, அவ்வண்டியை திரும்ப ஒப்படைக்க பிரதிவாதிக்கு ஆணையிட்டது.

36. Non est factum - Write short notos. (ஆவணப் பிழை வாதம் – சிறு குறிப்பு எழுதுக.)

[முந்தைய வினாவின் விடையில் இறுதிப் பகுதியில் காண்க]

-o0o-

1. (1960) 3 All E.R. 332.

11

சட்டப்படியான மறுபயனும் நோக்கமும் [Lawful Consideration and Object]

37. Enumerate the circumstancs in which the consideration becomes of an agreement are treated as unlawful. (உடன் படிக்கையின் நோக்கமும் மறுபயனும் சட்டத்திற்கு புறம்பாகக் கருதப்படும் சூழ்நிலைகளை விளக்குக.)

(அல்லது)

What is lawful consideration and object? When the consideration becomes unlawful? (சட்டப்படியான மறுபயன் மற்றும் நோக்கம் என்றால் என்ன? மறுபயன் எப்போது சட்டத்திற்கு புறம்பானதாக அமைகிறது?)

சட்டப்படியான மற்றும் மறுபயன் மற்றும் நோக்கம் - விளக்கம் :

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 10–வது பிரிவின்படி, சட்டத்திற்குகந்த மறுபயனுக்காகவும், சட்டத்திற்குகந்த நோக்கத்துடனும் கொண்ட உடன்பாடுகள் யாவும் ஒப்பந்தகளாகும். இதன் பொருள் யாதெனில், சட்டத்திற்குகந்த மறுபயனும், நோக்கமும் இல்லாத உடன்பாடுகள் எதுவும் ஒப்பந்தங்களாகா; அவை சட்டப்படி செல்லத்தக்கவையல்ல என்பதாகும். மறுபயன் என்பது, 'ஏதாவதொன்றுக்கு ஏதாவது' (Something for something - quid pro quo) ஆகும். நோக்கம்

என்பது, உடன்பாடு கொள்வதற்குண்டான கருத்து அல்லது உள்நோக்கம் (Purose or design) ஆகும். சில சூழ்நிலைகளில் உடன்பாட்டின் மறுபயன் சட்டத்திற்கு உகந்ததாகவும், நோக்கம் சட்டப்புறம்பானதாகவும் இருக்கும். அவ்வித உடன்பாடு இல்லா நிலையதாகும். இவை இரண்டுமே சட்டத்துக்கு உகந்தவைகளாக இருக்க வேண்டும். இல்லையேல் ஒப்பந்தம், மேற்சொன்னபடி இல்லாநிலை அடைந்துவிடும்.

ஒரு உடன்பாட்டின் மறுபயனும் நோக்கமும் சட்டத்திற்கு புறம்பாக கருதப்படும் சூழ்நிலைகள்:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 23–வது பிரிவில் சட்டத்திற்குப் புறம்பான மறுபயனும் நோக்கமும் ஆறு வகைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. மறுபயனும் நோக்கமும் அவ்வாறில்லை எனில், அவை சட்டத்திற்குகந்தவை என்ற கூறப் பட்டுள்ளது. பின்வரும் சூழ்நிலைகளில் அவை சட்டத்திற்கு புறம்பாகக் கருதப் படுகின்றன.

1. மறுபயன் அல்லது நோக்கம் சட்டத்தால் விலக்கப்பட்டதாக இருப்பின் (forbidden by law): ஒரு உடன்பாட்டின் மறுபயன் அல்லது நோக்கம் சட்டத்தினால் விலக்கப்பட்ட ஒரு செயலைச் செய்யவெனில், அது இல்லா நிலையை அடைகிறது.

2. மறுபயன் அல்லது நோக்கம் அனுமதிக்கப்பட்டால் அது சட்ட விதிகளைத் தோல்வியடையச் செய்யும் தன்மையுடையதாயிருந்தால் (if permitted, it would defeat provisions of any law): சட்டத்தால் நேரடியாக விலக்கப்படாவிட்டாலும், மறுபயனும் நோக்கமும் அனுமதிக்கப்பட்டால், அவை சட்ட விதிகள் எதையேனும் தோல்வியடையச் செய்யும் தன்மையுடையதாக இருப்பின், அத்தகு மறுபயனும் நோக்கமும் சட்டத்திற்கு புறம்பானதாகக் கருதப் படும்.

3. மறுபயன் அல்லது நோக்கம் மோசடியானதாக இருந்தால் (fradulent) : மற்றவர்களை மோசடி செய்யும் பொருட்டு, ஒரு உடன்பாட்டின் மறுபயனும் நோக்கமும் அமைந்திருந்தால், அவை சட்டத்திற்கு புறம்பானதாகும். உடன்பாடு இல்லாநிலையடையும்.

4. மறுபயன் அல்லது நோக்கம் தீயொழுக்கமானதென நீதிமன்றம் கருதினால் (the court regards it as immoral) : ஒரு உடன்பாட்டின் மறுபயன் அல்லது நோக்கம் தீயொழுக்கமானதாகக் கருதப்பட்டால், அது இல்லா நிலையடைகிறது. நல்லொழுக்கத்துக்கு மாறான எதுவும் தீயொழுக்கமானதாகக்

கருதப்படும். இங்கு 'தீயொழுக்கம்' என்பது பால்வினை பற்றிய (Sexual) தீயொழுக்கத்தையே பொதுவாகக் குறிக்கும். அது கீழ்கண்டவற்றை உள்ளடக்குவ தாகும்.

(அ) பால்வினைத் தீயொழுக்கம் (Sexual immorality), மறைமுகமாக சேர்ந்து வாழ்தல் (Illicit cohabitation), காமக்கிழத்தியர் உறவு (Concubine), பரத்தைமை (Prostitution) முதலியன; (ஆ) பால்வினை தியொழுக்கத்திற்கு துணை போதல்; (இ) மண உறவில் தலையிடல்; (ஈ) பொது ஒழுக்கத்துக்கு எதிரான செயல்.

6. மறுபயன் அல்லது நோக்கம் பொதுக் கொள்கைக்கு முரணானது என்று நீதிமன்றம் கருதினால் (Opposed to public policy) : பொது நலன் கருதி, நீதிமன்றம் சில ஒப்பந்தங்களை பொதுக் கொள்கைக்கு மாறானவையாகக் கருதி சட்டப்படி இல்லா நிலையதென அறிவிக்கலாம்.

எடுத்துக்காட்டுகள் :

1. B என்பவருக்கு அரசுப் பணி ஒன்றை வாங்கித் தருவதாக A என்பவர் உறுதியுரை செய்கிறார். அதற்கு ரூ. 1000/– அளிப்பதாக மேற்படி B என்பவர், A என்பவருக்கு உறுதியுரை செய்கிறார். இவ்வுடன்பாடு இல்லாநிலையதாகும். ஏனெனில், இங்கு மறுபயன் (Consideration) சட்டத்திற்கு புறம்பானதாக உள்ளது.

2. மோசடியால் பெறப் போகும் இலாபங்களை பகிர்ந்து கொள்வது குறித்து A, B மற்றும் C ஒரு உடன்பாடு செய்து கொண்டனர். இவ்வுடன்பாடு இல்லா நிலையது. ஏனெனில் இங்கு உடன்படிக்கையின் நோக்கம் (object) சட்டத்திற்கு புறம்பானதாக உள்ளது.

முடிவுரை :

மேற்கண்டவாறான சூழ்நிலைகளில் ஒரு உடன்படிக்கையின் மறுபயனும், நோக்கமும் சட்டத்திற்கு புறம்பானதாக அமைகிறது. அத்தகு உடன்படிக்கைகள் 'சட்டத்திற்கு புறம்பான உடன்படிக்கைகள்' (Unlawful Agreements) என அழைக்கப்படுகின்றன. இவை இல்லா நிலையை (Void) அடைகின்றன.

38.Give an account of agreement opposed to public policy (பொதுக் கொள்கைக்கு எதிரான உடன்பாடுகளைப் பற்றிய விளக்கம் ஒன்று தருக)

(அல்லது)

Discuess the doctrine of public policy giving examples of agreements opposed to public policy. Are such agreements illegal? (பொதுக் கொள்கைக்கு முரணாக உள்ள உடன்படிக்கைகளுக்கு எடுத்துக் காட்டுகள் கொடுத்து பொதுக் கொள்கை கோட்பாட்டை விவாதி. அத்தகு உடன்படிக்கைகள் சட்டத்திற்கெதிரானவையா?)

(அல்லது)

Discuss the scope and effect of contracts opposed to public policy. Give illustations. (பொதுக் கொள்கைக்கு விரோதமாக இருக்கும் ஒப்பந்தங்களின் பரவெல்லை மற்றும் விளைவை விவாதிக்க. எடுத்துக்காட்டுகள் தருக.)

(அல்லது)

"A Contract shall not be enforced, if the court regards it as opposed to public policy."- Discuss. ("ஒரு ஒப்பந்தத்தை சமுதாய செயல் திற நுட்பத்திற்கு முரண்பட்டதாக நீதிமன்றம் கருதுமேயாயின், அந்த ஒப்பந்தம் செல்லுறுத்தப்படாது." – ஆராய்க.)

(அல்லது)

Discuss the agreements which are considered as opposed to public policy. (பொதுப் பணி சார்ந்த கொள்கைக்கு எதிரிடையானதாகக் கருதப்படும் ஒப்பந்தங்களை விவாதித்து எழுதுக.)

(அல்லது)

Contracts opposed to Public Policy - Write short notes. (பொதுக் கொள்கைக்கு எதிரான ஒப்பந்தங்கள் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Public Policy - Write short notes. (பொதுக் கொள்கை – சிறு குறிப்பு எழுதுக.)

பொதுக் கொள்கை (Public Policy) :

'பொதுக் கொள்கை' என்ற சொல்லுக்கு சுருக்கமாக வரையறை தருவது என்பது இயலாத ஒன்றாகும். அது ஒரு நெகிழக்கூடிய (flexible) சொல்லாகும். அதன் பொருள் நாட்டிற்கு நாடு மாறுபடலாம். மக்களின் வாழ்க்கை முறை பொறுத்து, பொதுக் கொள்கையின் பொருளும் இடத்திற்கு இடம் மாறுபடுகிறது.

பொதுக் கொள்கைக்கு முரணான உடன்பாடுகள் (Agreements opposed to public policy) :

பொதுநலன் கருதி, நீதிமன்றம் சில ஒப்பந்தங்களை பொதுக் கொள்கைக்கு முரணானவை எனக் கூறி, அவற்றை சட்டப்படி இல்லா நிலையதென அறிவிக்கலாம். எனினும், மேலே கண்டதுபோல் 'பொதுக் கொள்கை' என்பதின் பொருளை எளிதில் வரையறுத்து கூறவியலாது. எனவே ஏற்கனவே தீர்ப்பு கூறப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டே, ஒரு ஒப்பந்தம் பொதுக் கொள்கைக்கு முரணானதா, இல்லையா என்பது தீர்மானிக்கப்படும்.

பொதுக் கொள்கைக்கு முரணான உடன்பாடுகள் - எவை?

பொதுக் கொள்கைக்கு முரணானதாகக் கருதி இல்லாநிலையென அறிவிக்கப்பட்ட உடன்பாடுகளை பின்வருமாறு காண்போம்.

1. பகை நாட்டவருடன் வர்த்தகம் மேற்கொள்ள செய்து கொள்ளப்பட்ட உடன்பாடுகள்.

2. பொதுப் பதவிகள், பட்டங்கள் முதலியவற்றை விற்பதற்கான உடன்பாடுகள் (Agreement for the sale of Public Offices and Titles): பணத்துக்காக பொதுப் பதவிகளையோ, பட்டங்களையோ விற்கவோ, மாற்றவோ செய்து கொள்ளும் உடன்பாடு சட்ட முரணானதாகும். இவ்வித உடன்பாடுகளை செல்லத்தக்கதாகக் கருதினால், பொதுவாழ்வில் இலஞ்சமும், ஊழலும் மலிந்து விடும் என்பது நிச்சயம்.

Ledu Coachman v. Hiralal[1] – இவ்வழக்கில் தன் மகனுக்கு 'பியூன்' வேலை கிடைக்கும் பொருட்டு, A என்பவர், அம்மாவட்ட நீதிமன்றத்தின் நாசிர்–ஆக (Nazir of District Court) உள்ள B என்பவரிடம் ரூ.100/– கொடுத்தார். மேற்படி B-யும் வேலை வாய்ப்பளிக்க உறுதியுரை செய்தார். வேலை கிடைக்கவில்லை. ஆகவே, A என்பவர் தாம் கொடுத்த பணத்துக்காக B-யின் மீது வழக்கு தொடர்ந்தார். ஆனால், மேற்படி உடன்பாடு பொதுக் கொள்கைக்கு முரணான ஒன்று என்று நீதிமன்றம் கூறி, அவ்வழக்கை தள்ளுபடி செய்துவிட்டது.

3. நீதிமுறையினை தவறான வழக்கில் பயன்படுத்திக் கொள்ளும் உடன்பாடுகள் (Agreements tending to abuse of Legal Process) :

(i) நீதித்துறையின் நடைமுறையில் குறுக்கீடும் உடன்பாடுகள்: நீதிபதியையோ, வேறு நீதித்துறை அலுவலர்களையோ தவறான வழியில் நடக்கச்

1. (1916) 43 Cal. 115

செய்து கொள்ளும் உடன்பாடுகள் சட்ட முரணானது ஆகும். பொய்ச்சாட்சி சொல்ல ஒருவருடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம் இத்தகையதே. இது இல்லா நிலையடையும்.

(ii) குற்ற வழக்கினை மறைக்க மேற்கொள்ளும் உடன்பாடுகள் : ஒருவர் குற்றம் புரிந்துவிட்டால், அவர் மீது வழக்குத் தொடர்வதும், தண்டனையளிப்பதும் பொது நலனுக்குகந்தது. எனவே குற்றம் புரிந்தவரின் மீது குற்ற முறையீடு செய்வ தில்லையென்றோ அல்லது ஒரு குற்ற வழக்கினை மூடி மறைப்பதற்கோ செய்து கொள்ளும் உடன்பாடுகள் சட்ட முரணானதாகும். அவை இல்லா நிலையடையும்.

(iii) வழக்கு வகைப்பங்கு ஊதியம் மற்றும் வழக்காடு உதவிக்கான உடன்பாடுகள் (Agreements for Champerty and Maintenance) : இங்கு வழக்காடு உதவி (Maintenance) என்பது, வழக்கிற்கு சம்பந்தமேயில்லாத ஒருவர், அவ்வழக்கை மேலும் வளர்ப்பதற்காக அவ்வழக்கின் தரப்பினர் ஒருவருக்கு பொருளுதவி செய்தலாகும்.

'வழக்கு வகைப் பங்கு உதியம்' (Champerty) என்பது, சொத்தை திரும்பப் பெறுவதற்கான வழக்கொன்றில், அச்சொத்தை திரும்பப் பெறுவதற்காக சம்பந்தப்பட்ட வழக்காடிக்கு உதவி செய்து, அவ்வழக்கு வெற்றி பெறுமேயானால், அதற்கு ஊதியமாக அச்சொத்தின் ஒரு பகுதியை பெற்றுக் கொள்ளுதலாகும்.

மேற்கண்ட இரண்டிற்கும் உள்ள நுணுக்கமான வேறுபாடு யாதெனில், முன்னதில் வழக்கை வளர்ப்பதற்காக உதவி செய்யப்படுகிறது. பின்னதில், அவ்வழக்கினால் பெறும் பலனில் பங்கு பெறுவதற்காக உதவி செய்யப்படுகிறது.

வழக்காடு உதவிக்காகவும், வழக்கு வகைப் பங்கு ஊதியத்திற்காகவும் செய்து கொள்ளும் உடன்பாடுகள், **இங்கிலாந்தின் ஆங்கிலச் சட்டப்படி** சட்ட முரணானதாகும். எனவே இல்லாநிலையது.

ஆனால் **இந்தியாவில்** மேற்கண்டவற்றிற்காக செய்து கொள்ளப்படும் உடன்பாடுகள் முற்றிலும் இல்லாநிலையதாக கருதப்படுவதில்லை. வழக்கை நடத்தும் பொருட்டு தரப்படும் உதவி 'நியாயமான முறையில்' இருப்பின், அது தொடர்பான உடன்பாடுகள் செல்லத்தக்கவையே, என தீர்ப்புகள் கூறுகின்றன.

Rajah Venkata Subhadrayyamma Garu v. Sri Poosapathy Venkatapathi Raju[1] - எனும் இந்திய வழக்கில் அச்சுறுத்தி பறிப்பதாக இல்லாத நிலையிலும், உள்ளுணர்விற்கு (மனசாட்சிக்கு) விரோத மில்லாத நிலையிலும் வழக்கு வகைப் பங்கு ஊதியம், வழக்காடு உதவியும்

1. (1924) I.L.R. 48 Mad 230 : AIR 1924 P.C. 162

செய்வது சட்ட முரணானது ஆகாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. இவ்வழக்கில் தீர்ப்பளித்த **நீதிப்பெருமகனார் அட்கின்சன் (Lord Atkinson)** அவர்கள், "இந்தியாவில், வழக்காடு உதவியும், வழக்கு வகைப் பங்கு ஊதியமும் சட்ட முரணானது அல்ல", என்று கருத்துரைத்துள்ளார்.

4. சட்ட நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த மேற்கொள்ளப்படும் உடன்பாடுகள் (Agreements in Restraint of Legal Proceedings): இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **28–வது பிரிவு** இவ்வகையான உடன்பாடுகளை இல்லாநிலையதென கூறுகிறது. இதில் இரண்டு வகையான உடன்பாடுகள் பற்றி விளக்கப்பட்டுள்ளன.

(அ) ஒப்பந்தம் ஒன்றினால் ஒருவருக்கு விளைந்த உரிமைகளை அவர் இயல்பான தீர்ப்பாயங்களில் வழக்கிட்டு வலியுறுத்துவதை முழுவதுமாக தடுத்து நிறுத்தும் வண்ணம் செய்து கொள்ளப்படும் உடன்பாடுகள் இல்லாநிலையதாகும். அதுபோல், அவர் தனது அத்தகு உரிமைகளை வலியுறுத்திச் செயல்படுத்துவதற்காக வழக்கிடுவதற்கான கால வரையறையை கட்டுப்படுத்தும் வண்ணம் செய்து கொள்ளப்படும் உடன்பாடுகளும் இல்லாநிலையதாகும். மேலும்,

(ஆ) ஒப்பந்தம் ஒன்றினால் ஒருவருக்கு விளைந்த உரிமைகளை ஒரு குறிப்பிட்ட காலம் முடிவுற்றவுடன் அவ்வுரிமைகளை வலியுறுத்திச் செயல் படுத்துதை தடுத்து நிறுத்துவதற்காக, அவற்றை மறையச் செய்யும் வண்ணம் அல்லது அவ்வொப்பந்தத்தின் தரப்பினர் எவரையும் பொறுப்பு எதிலிருந்தும் விடுவிக்குமாறு செய்து கொள்ளப்படும் உடன்பாடுகள் இல்லாநிலையதாகும்.

மேற்படி உடன்பாடுகளின் நோக்கம் யாதெனில், ஒப்பந்தம் ஒன்றின் கீழ் ஒருவருக்கு ஏற்படும் உரிமைகளை அவர் தக்க நீதிமன்றத்தில் வழக்கிட்டு வலியுறுத்தி செயல்படுத்துவதை தடுத்து நிறுத்தும் வண்ணமோ, கால வரையறைச் சட்டம் குறிப்பிடும் கால வரையறைக்கு முரணாக இன்ன கால கட்டத்திற்குள் வழக்கிட வேண்டும் என்றோ, அவ்வுரிமைகளையே இல்லாமலாக்கும் பொருட்டோ அல்லது ஒப்பந்தப்படி பொறுப்புடைய ஒரு தரப்பினரை, அப்பொறுப்பிலிருந்து விடுவிக்குமாறோ செய்து கொள்ளப்படும் உடன்பாடுகள் இல்லாநிலையதாக்குவ தாகும். சுருங்கக் கூறின், ஒப்பந்தப்படி உரிமை பெற்ற ஒரு தரப்பினரை, அவ்வுரிமைக் காக வழக்கிடுவதை எவ்வகையிலேனும் தடுக்கும் உடன்பாடுகள் இல்லாநிலையன. எனவே செல்லாதன.

எனினும் இதற்கு பின்வரும் **இரு விதிவிலக்குகள்** உண்டு. அதன்படி, (1) எவ்விஷயம் குறித்தாவாது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கிடையே தகராறு ஏதும் எழும்பட்சத்தில், அதனை இசைவுத் தீர்ப்பிற்கு (Arbitration) விட

வேண்டும் என்று அவர்கள் உடன்பட்டு செய்து கொள்ளும் ஒப்பந்தம் எதையும், மேற்கண்ட பிரிவு சட்ட முரணானதாக்காது. அவ்வொப்பந்தம் செல்லத்தக்கதே.

(2) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் தங்களுக்கிடையே ஏற்கனவே எழுந்துள்ள பிரச்சனை எதையும் இசைவுத் தீர்ப்பிற்கு விட வேண்டும் என உடன்பட்டு செய்து கொள்ளும் ஒப்பந்தம் எதையும், மேற்கண்ட பிரிவு சட்ட முரணானதாக்காது (பிரிவு 28–ன் கீழான விளக்கங்கள்).

Benett v. Benett[1] - எனும் வழக்கில், மணமுறிவுப் பிரிவு உடன்பாடு ஒன்றில், கணவன், மனைவிக்கு ஆண்டுப் பராமரிப்புத் தொகையை வழங்க வேண்டியதென்றும், அதற்குப் பதிலாக மனைவி பராமரிப்பு கோரி கணவன் மீது வழக்கிடக் கூடாது என்றும் உடன்பாடு செய்து கொள்ளப்பட்டிருந்தது. ஆனால் அதன்படி கணவன் ஆண்டுப் பராமரிப்புத் தொகையை, மனைவிக்கு வழங்க வில்லை. எனவே அத்தொகையைக் கோரி, மனைவி வழக்கிட்டாள். ஆனால் கணவன் மேற்படி உடன்பாட்டைச் சுட்டிக்காட்டி, அவ்வாறு வழக்கிட மனைவிக்கு உரிமையில்லை என்று எதிர்வாதுரைத்தான். இவ்வாறு மனைவி செய்து கொண்ட உடன்பாடு இல்லாநிலையது என்பதால், நீதிமன்றம் அவள் தொடுத்த வழக்கை தள்ளுபடி செய்துவிட்டது. எனினும், பராமரிப்புத் தொகை வழங்குவதற்காக நிறுவப்பட்டுள்ள உரிய நீதிமன்றத்தில் (Court for maintenance) மனு தாக்கல் செய்து, தனது நிலுவை பராமரிப்புத் தொகையைப் பெற மனைவிக்கு உரிமையுண்டு என்றும், அவ்வுரிமை மேற்கண்ட உடன்பாட்டால் மறைந்துவிடாது என்றும் நீதிமன்றம் கருத்துரைத்தது.

Saroj Bandu v. Jnanada[2] -எனும் மற்றொரு வழக்கில், பராமரிப்புத் தொகை பெற உரிமை படைத்தவர், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகளாக நிலுவை நிற்கும் பராமரிப்புத் தொகையைக் கோரி வழக்கிடக் கூடாது என்று உடன்பாடு செய்து கொள்ளப்பட்டது. கால வரையறைச் சட்டம் குறிப்பிட்டுள்ள கால வரையறையைக் கட்டுப்படுத்தும் வண்ணம் செய்து கொள்ளப்படும் உடன்பாடுகள் இல்லாநிலையன என்று கல்கத்தா உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. கால வரையறைச் சட்டத்தால் ஒரு உரிமை மறைவதற்கு (extinguish) முன்னதாக, அதனை மறையச் செய்யும் வண்ணம் செய்து கொள்ளப்படும் உடன்பாடுகள் எதுவும் செல்லத்தகாதவை என்றும் மேலும் அந்நீதிமன்றம் கருத்துரைத்தது.

5. கடமைக்கு எதிராக உரிமையை ஏற்படுத்தும் உடன்பாடுகள் (Agreements tending to create interest opposed to duty) : ஒருவர்,

1. (1952) 1 KB 249
2. AIR 1932 Cal. 720

தான் செய்து கொள்ளும் உடன்பாட்டின் மூலம் பொதுக் கடமைக்கு எதிரான ஒன்றைச் செய்வதாக உறுதியுரைத்தால், அது இல்லாநிலை உடன்பாடாகும்.

Neville v. Dominion of Canada News Co. Ltd.[1] - எனும் வழக்கில் ஒரு குறிப்பிட்ட முதலீட்டு நிறுவனம் குறித்து விரோதமான விமர்சனம் எதையும் பதிப்பு செய்தல் கூடாது என்று செய்தித்தாள் ஒன்றுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்பாடு இல்லாநிலையது எனப்பட்டது.

அதேபோல், முகவர் ஒருவர், முதல்வருக்கு எதிராக, இரகசியமான ஆதாயம் பெறும் பொருட்டு, ஒரு மூன்றாம் நபருடன் செய்து கொண்ட உடன்பாடு, மேற்கண்டவாறு பொதுக் கொள்கைக்கு எதிரானதாகும்.

6. வணிகத்தை தடுத்து நிறுத்தும் உடன்பாடுகள் (Agreements in Restraint of Trade) : ஒவ்வொரு மனிதனும் அவரவர் விருப்பப்படி சட்ட விரோதமற்ற வியாபாரம் அல்லது தொழில் செய்ய சுதந்திரம் உண்டு. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 27–வது பிரிவு, இத்தகையை உரிமையை தடை செய்யும் உடன்பாட்டை ஏற்றுக் கொள்வதில்லை. இத்தகு உடன்பாடுகள் பொதுக் கொள்கைக்கு எதிரானதால், இல்லாநிலையதாகும். (மேலும் விரிவாக வினா எண் 40–ல் காண்க).

7. பெற்றோரது உரிமைகளைத் தடுத்து நிறுத்தும் உடன்பாடுகள் (Agreements in Restraint of Parental Rights) : ஒரு தகப்பனாரோ அல்லது தாயாரோ ஒரு வயதடையாத மகன்/மகளுக்கு சட்டப்படியான பாதுகாவலராவர். அவர்கள் தங்கள் உரிமையைப் செயல்படுத்தி குழந்தையின் நலன்களைக் காப்பார்கள். அவை, பெற்றோர் உரிமைகள் எனப்படுகின்றன. அவ்வுரிமைகளைத் தடுத்துக் கொள்ளும் பொருட்டு உடன்பாடு ஏதேனும் செய்து கொண்டால், அது பொதுக் கொள்கைக்கு எதிரானதாகும்.

***Re* Andrews**[2] எனும் வழக்கில் பெற்றோர்கள் தங்கள் பெற்றோர் உரிமைகளை மற்றும் பொறுப்புகளை மற்றொருவருக்கு மாற்றிக் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்து கொண்டால், அது பொதுக் கொள்கைக்கு எதிரானதாகும் என்று கூறப்பட்டது.

Besant v. Narayaniah[3] எனும் இந்திய வழக்கொன்றில் தந்தை ஒருவருக்கு இரண்டு மகன்கள். அவர்கள் இருவரும் இளவர்கள். அவர் அம்மகன்களுக்கு காப்பாளராக இருக்கும் உரிமையை திருமதி. அன்னிபெசன்ட்

1. (1915) 3 K.D. 556
2. (1873) L.R. 8 Q.B. 153
3. (1915) I.L.R. 38 Mad. 807 : AIR 1914 P.C. 41.

எனும் ஒரு அம்மையாருக்கு மாற்றிக் கொடுக்க உடன்படுவதாகவும், அவ்வாறு மாற்றிக் கொடுப்பதை இரத்து செய்வதில்லை என்றும் அந்த அம்மையாருடன் உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்கிறார். இந்நிலையில், அம்மகன்கள் இருவரும், மேல்படிப்பிற்காக இங்கிலாந்து சென்றனர். அப்பொழுது, அவர்களின் தந்தை தனது மனதை மாற்றிக் கொண்டு, அவர்களை மீண்டும் தம் வசமே ஒப்படைக்க வேண்டுமென்றும், தாம்தான் அவர்களின் முறையான மற்றும் சட்டப்படியான காப்பாளர் (lawful guardian) என்று விளம்புகை செய்யக் கோரியும் மேற்படி அம்மையார் மீது வழக்கொன்றைத் தொடுத்தார். அவர்தான் மேற்படி மகன்களின் முறையான மற்றும் சட்டப்படியான காப்பாளர் என்பதை கீழமை நீதிமன்றம் ஏற்றுக் கொண்டது. ஆனால் அவர் தகுந்த அதிகாரவரம்புடைய நீதிமன்றத்தில் வழக்கிட வில்லை எனும் சட்டரீதியான காரணத்திற்காக அவரது வழக்கை தள்ளுபடி செய்துவிட்டது.

பின்னிட்டு பிரிவி கவுன்சில் நீதிமன்றத்தில் செய்து கொள்ளப்பட்ட மேல்முறையீட்டில், ஒரு தந்தை, அவர் தனது வாழ்நாளில், தனது குழந்தைகளின் மீதுள்ள காப்பாளர் உரிமைகளை மற்றொருவருக்கு மாற்றித் தரவியலாது என்றும், எனினும் அவர் தனது தன்விருப்புரிமை அதிகாரத்தைப் செயற்படுத்தி, அவ்வுரிமையை மற்றொருவருக்கு மாற்றித் தரலாம் என்றும், அவ்வாறு மாற்றித் தந்தாலும், அம்மற்றொருவருவர், அக்குழந்தைகளை சரிவர பேணிக்காக்கவில்லை யானால், அவ்வாறு மாற்றிக் கொடுத்ததை அவர் இரத்து செய்து கொள்ள அவருக்கு அனைத்து உரிமைகளும் உண்டு என்றும், பெற்றோர் தங்கள் பெற்றோர் உரிமைகளை மாற்றிக் கொடுத்ததை, அப்பெற்றோர் எப்பொழுது வேண்டுமானலும் இரத்து செய்து கொள்ளலாம் என்றும், இங்கு அப்பெற்றோர் செய்து கொள்ளும் உடன்பாட்டிற்கு எவ்வித முக்கியத்துவமும் இல்லை என்றும் பிரிவி கவுன்சில் தீர்ப்புரைத்து, அம்மகன்களை அவரது தந்தையிடம் ஒப்படைக்குமாறு மேற்படி அன்னிபெசன்ட் அம்மையாருக்கு உத்தரவிட்டது.

8. தனிப்பட்ட சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் உடன்பாடுகள் (Agreement in restraint of Personal Freedom) : உடன்பாட்டுத் தரப்பினர்களின் தனிப்பட்ட சுதந்திரத்தை கட்டுப்பாடு செய்யும்படியாக அமைந்த உடன்பாடுகள் பொதுக் கொள்கைக்கு எதிரானதாகும். ஆகவே அவை இல்லா நிலையதாகும்.

9. திருமணத்தைத் தடை செய்யும் உடன்பாடுகள் (Agreements in restraint of Marriage) : திருமணம் என்பது ஒருவரின் தனிப்பட்ட உரிமையாகும். ஆகவே, அதில் எவ்வித கட்டுப்பாடும் இருத்தல் கூடாது. இதன் அடிப்படையில் இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **பிரிவு 26–ஆனது,** இளவர் அல்லாத

வேறு எந்நபரின் திருமணத்தையும் தடுத்து நிறுத்தும் வண்ணம் செய்து கொள்ளும் உடன்பாடு ஒவ்வொன்றும், இல்லாநிலையது என்று கூறுகிறது.

எடுத்துக்காட்டாக, A என்பவர் B என்பவரை திருமணம் செய்து கொள்ள உடன்படுகிறார். இது ஒரு செல்லத்தக்க ஒப்பந்தமாகும். இதையே A என்பவர், தான் C என்பவரை திருமணம் செய்து கொள்ளமாட்டேன் என்று B–யிடம் உறுதியுரை அளித்தால், அது செல்லத்தகாததாகும். ஏனெனில் அவ்வுறுதியுரை, திருமணம் செய்து கொள்ள A–க்கு உள்ள சட்டப்படியான சுதந்திரத்தை தடுப்பதாக உள்ளது.

Lowe v. Peers[1] - எனும் வழக்கில் பிரதிவாதி, வாதியைத் தவிர வேறு எவரையும் திருமணம் செய்து கொள்வதில்லை என்றும், அவ்வாறு செய்து கொண்டால், வாதிக்கு 1000 பவுண்டு பணம் அளிக்க வேண்டுமென்றும் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. பிரதிவாதி இந்த ஒப்பந்தத்தை மீறி, வாதியை விடுத்து மற்றொருவரை திருமணம் செய்து கொண்டார். எனவே ஒப்பந்தத்தின்படி 1000 பவுண்டு பணத்தைத் தருமாறு கோரி வாதி வழக்கிட்டார். ஆனால், மேற்கண்ட ஒப்பந்தம் திருமணத்தை தடை செய்வதற்காக செய்து கொள்ளப்பட்ட ஒன்று என்றும், எனவே இல்லாநிலையது என்றும் கூறி வாதியின் வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது.

10. திருமணத் தரகு ஒப்பந்தங்கள் (Marriage Brokage Contracts): பணத்தை (தரகு) மறுபயனாகக் கொண்டு ஒரு நபர் மற்றொரு நபருக்கு திருமண ஏற்பாடு செய்வதற்காக மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்கள், பொதுக் கொள்கைக்கு எதிரானதாகும். எனவே அவை இல்லாநிலையன.

Hermann v. Charlesworth[2] - எனும் ஆங்கில வழக்கில், பிரதிவாதி, ஒரு திருமண விளம்பரப் பத்திரிக்கையை நடத்தி வருபவர். அவரிடம் ஒரு பெண்மணி, தனக்குரிய வரனை தேடித் தருமாறு அல்லது அறிமுகப்படுத்துமாறு கேட்டுக் கொண்டாள். அவரும் அவ்வாறு அறிமுகப்படுத்தி, அது திருமணத்தில் முடிந்தால், தனக்கு 250 பவுண்டு பணத்தை தரகுத் தொகையாக கொடுக்க வேண்டுமென்று கோரினார். இதற்கு அப்பெண்மணியும் சம்மதித்தார். மேலும் இதன் அடிப்படையில், அவர் 'சிறப்புக் கட்டணமாக' 52 பவுண்டு பணத்தை அப்பெண்மணியிடமிருந்து முன்பணமாக பெற்றுக் கொண்டார். அவர் பல்வேறு வரன்களையும், அப்பெண்மணிக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஆனால் எவரையும் அப்பெண்மணிக்கு பிடிக்கவில்லை. எனவே எவருடனும் திருமணமும் நடக்கவில்லை. இதனால், தான் முன்பணமாகக் கொடுத்த 52 பவுண்டு பணத்தை

1. (1768) 98 E.R. 160.
2. (1905) 2 K.B. 123.

திரும்பத் தருமாறு கோரி அப்பெண்மணி, அவர் (பிரதிவாதி) மீது வழக்கிட்டார். ஆனால் வாதியும் பிரதிவாதியும் செய்து கொண்ட உடன்பாடு, திருமணந் தாகு ஒப்பந்தமாகும் என்றும், அத்தகு ஒப்பந்தங்கள் சட்ட முரணானவை என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. மேலும் மேற்படி வழக்கில் அச்சட்ட முரணான ஒப்பந்தத்தின் நோக்கம் பூர்த்தியடையாத காரணத்தால், அப்பணத்தை வாதிக்கு திரும்பத் தர பிரதிவாதிக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

Vaithyanadham v. Gangarazu[1] - எனும் இந்திய வழக்கில், வாதி ஒரு புரோகிதர். பிரதிவாதி, வாதியிடம் தனக்கு ஒரு இரண்டாம் மனைவியைத் தேடித் தருமாறும், அதற்காக ரூ.50/– கொடுப்பதாகவும் உறுதியுரைத்தார். ஆனால், அவ்வாறு தேடிக் கொடுத்தும், பிரதிவாதி ரூ.50/–அய் வாதிக்கு கொடுக்கவில்லை. எனவே அப்பணத்திற்காக வாதி வழக்கிட்டார். ஆனால் இப்படிப்பட்ட உடன்பாடுகளை வலியுறுத்திச் செயல்படுத்தவியலாது என்றும், எனவே அத்தொகையைப் வாதி பெறவியலாது என்றும் சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

Venkata Krishna v. Venkatachalam[2] - எனும் மற்றொரு இந்திய வழக்கில், திருமணத் தரகு ஒப்பந்தங்களின் கீழ் கொடுக்கப்படும் தரகுத் தொகைகளை திரும்பப் பெறவியலாது என்று சென்னை உயர் நீதிமன்றத்தின் முழு ஆயம் கருத்துரைத்துள்ளது.

பொதுக் கொள்கைக்கு எதிரான உடன்பாடுகள் சட்ட முரணானவையா? (Are the Agreements opposed to public policy illegal?)

உடன்பாடு ஒன்று, சட்டத்திற்கு எதிரானதாக இருப்பின், அது சட்ட முரணானது (illegal) ஆகும். ஆனால் அதுவே, பொதுக் கொள்கைக்கு எதிரான தாக இருப்பின், சட்டத்திற்கு புறம்பானதாகும் (unlawful). அவை சட்ட முரணானவையாகாது. பொதுவாக சட்ட முரணான உடன்பாடு ஒவ்வொன்றும் சட்டத்திற்கு புறம்பானதாகும். ஆனால் சட்டத்திற்கு புறம்பான உடன்பாடுகள் ஒவ்வொன்றும் சட்ட முரணானதாகாது (All illegal agreements unlawful; but all unlawful agreements are not illegal). எனவே, இவையிரண்டு பதங்களுக்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன என்பதை நாமறியலாம். ஒரு உடன்பாடு சட்ட முரணானது எனில், அது அவ்வுடன்பாட்டை இல்லாநிலையாக்கு வதுடன், அது குறித்த மற்ற தொடர்புகளையும் இல்லாநிலையதாக்கும். ஆனால்

1. (1893) I.L.R. 17 Mad. 9 (Cf.)
2. (1908) 32 Mad. 185 (F.B.)

சட்டத்திற்கு புறம்பான உடன்பாடானது, அதன் தரப்பினர்களுக்கிடையே ஏற்பட்ட உடன்பாட்டை மட்டுமே இல்லாநிலையதாக்குகிறதே தவிர, அவ்வுடன்பாடு குறித்த மற்ற தொடர்புகளை பாதிப்பதில்லை.

39. Champerty and Maintenance - Write short notes. (வழக்கு வகைப்பங்கு ஊதியமும் வழக்காடு உதவியும் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

"Agreements in restraint of legal proceedings are void". Discuss the statement and state the exceptions if any. ("சட்ட வழக்கு தொடர்வை தடை செய்யும் உடன்பாடுகள் இல்லாநிலை உடன்பாடுகள்" – இக்கூற்றை விவாதித்து இதற்கான விதிவிலக்குகள் இருப்பின் குறிப்பிடுக.)

[வினா எண் 38–ல் காண்க.]

40. Agreements in Restraint of Trade - Write short notes. (வணிகத்தை தடுத்து நிறுத்தும் உடன்பாடுகள் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

'Agreements in restraint of trade are void' Examine this the exceptions, if any. (வணிகத்தை தடுக்கும் உடன்பாடுகள் இல்லா நிலையது. இதை விதிவிலக்குகள் ஏதேனுருப்பின் குறிப்பிட்டு ஆராய்க.)

(அல்லது)

Explain and illustrate the rule that agreements in restraint of trade are void. How does Indian law differ from English law in this respect? (வணிகத்தை தடுக்கும் உடன்பாடுகள் இல்லாநிலையது எனும் விதியை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக. இது குறித்து இந்தியச் சட்டம் ஆங்கிலச் சட்டத்திலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?)

(அல்லது)

State the law relating to agreements in restraint of trade. (வணிகத்தை தடுத்து நிறுத்தல் ஒப்பந்தங்கள் சம்பந்தமான சட்டத்தைக் கூறுக.)

(அல்லது)

Norden felt v. Maxim Norden felt and Co. - Write short notes. (நார்டன் பெல்ட் எதிர் மாக்ஸிம் நார்டன் பெல்ட் கம்பெனி – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை:

ஒவ்வொருவரும், அவரவர் விருப்பப்படி, சட்டத்திற்குட்பட்ட வியாபாரம் அல்லது தொழில் செய்ய சுதந்திரம் படைத்தவர்கள். இதைத் தடுத்து நிறுத்தக் கூடிய வகையில் செய்து கொள்ளும் உடன்பாடுகள், செல்லாதவையாகும். சற்று விரிவாக வருமாறு.

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 27 கூறுவதாவது:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **27–வது பிரிவு**, "சட்டப்படியான தொழில், வணிகம் அல்லது வியாபாரம் எதையும் செய்வதிலிருந்து தடுக்கும்படி உடன்பாடு செய்து கொண்டால், அவ்வாறு தடுக்கப்பட்ட அளவிற்கு அவ்வுடன்பாடு இல்லாநிலையை அடையும்"[1] என்று கூறுகிறது. ஏனெனில், இத்தகு உடன்பாடுகள் பொதுக் கொள்கைக்கு எதிரானதாகக் கருதப்படுகின்றன.

மேற்கண்ட பிரிவின்படி, வணிகம் அல்லது வியாபாரம் (trade or business) மட்டுமல்லாது, செய்யும் தொழிலில் (பணியில்) (profession) தடை விதிக்கும் வண்ணம் உடன்பாடுகள் ஏதேனும் செய்து கொண்டாலும், அவையும் இல்லாநிலையதே என்பது தெளிவாகிறது. மேலும் அவ்வுடன்பாட்டில் எந்த அளவிற்கு அவற்றின் மீது தடை விதிக்கப்படுகிறோ, அந்த அளவிற்கு மட்டுமே அவ்வுடன்பாடும் இல்லாநிலையை (.....to that extent void) அடையும். மாறாக அவ்வுடன்பாடு முழுவதுமே இல்லாநிலையை அடைந்துவிடாது.

இவ்வாறு பிரிவு 27 கூறினாலும், அப்பிரிவின் கீழ் விதிவிலக்கு ஒன்றும் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்கண்டவற்றை தடுக்கும்படி செய்து கொள்ளப் படும் உடன்பாடுகள் செல்லத்தக்கதாகும். அதனைச் சற்று காண்போமா?

விதிவிலக்கு:

ஒரு வியாபாரத்தின் நற்பெயரை (good will of a business) விற்கும் பொழுது, அதன் மீது சில தடைகளை விதித்து அதை விற்பவரும் – வாங்குபவரும் உடன்பாடு செய்து கொள்ளலாம். அத்தகு தடைகள் வருமாறு.

(1) அந்நற்பெயரை விற்பவர், குறிப்பிட்ட வட்டார எல்லைக்குள் அதையொத்த வணிகம் எதையும் செய்தல் கூடாது;

(2) மேற்கண்ட தடை, அந்நற்பெயரை வாங்குபவர் அல்லது அவரிடமிருந்து அதனை பெறுபவர், அதையொத்த வணிகத்தை செய்யும் வரை நீடித்திருக்கும்.

1. "Every agreement by which any one is restrained from exercising a lawful profession, trade or business of any kind, is to that extent void" - **Section 27 of the Indian Contract Act, 1872.**

(3) தடை விதிக்கப்படும் அத்தகு வட்டார எல்லை, நீதிமன்றத்திற்கு நியாயமானதாகத் தோன்றுதல் வேண்டும். மேலும் இதன் பொருட்டு அவ்வியாபாரத்தின் தன்மையைக் கருத்தில் எடுத்துக் கொண்டிருக்க வேண்டும்.

வணிகத்தின் மீது தடை விதிக்கும் உடன்பாடுகள் இல்லாநிலையது என்று கூறும் பிரிவு 27–ன் கீழ் முன்னதாக மூன்று விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டிருந்தன. அவற்றில் 1–வது விதிவிலக்கைகத்தான், நாம் மேற்கண்டவாறு கண்டோம். 2 மற்றும் 3–வது விதிவிலக்குகள், 1932–ஆம் ஆண்டின் இந்திய கூட்டாண்மைச் சட்டத்தினால் நீக்கப்பட்டு, அச்சட்டத்தில் சேர்க்கப்பட்டுவிட்டன. இவ்வாறு இந்திய ஒப்பந்தச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டாலும், அவ்விதி விலக்குகளும், இங்கு பொருந்தக் கூடியதே. எனவே அவற்றைப் பின்வருமாறு காண்போமா?

இந்தியக் கூட்டாண்மைச் சட்டத்தின் கீழான விதிவிலக்குகள் (Exceptions under the Indian Partnership Act, 1932): (1) கூட்டாண்மை நிறுவனத்தில் பங்குதாராராக இருக்கும் ஒருவர், அவ்வாறு பங்குதாராராக தொடர்ந்திருக்கும் காலத்தில், அந்நிறுவனத்தின் வியாபாரத்திற்கு போட்டியாக வியாபாரம் எதையும் செய்தல் கூடாது என்று அப்பங்குதாரர் உடன்பாடு செய்து கொள்ளலாம்.

(2) அக்கூட்டாண்மை நிறுவம் கலைக்கப்பட்ட பிறகு, அதன் பங்கு தாரர்களில் சிலர் அல்லது அனைவரும், அந்நிறுவத்தின் வியாபாரத்தையொத்த வியாபாரம் எதையும் ஒரு குறிப்பிட்ட வட்டார எல்லைக்குள் செய்வதில்லை என்று உடன்பாடு செய்து கொள்ளலாம்.

சில முக்கிய இந்திய வழக்குகள்:

Oakes & Co. v. Jackson[1] – இவ்வழக்கில் பிரதிவாதி, வாதியின் நிறுவனத்தில் பெண்டிர் ஆடை உற்பத்தி செய்யும் துறையில் பணி புரிய விண்ணப்பித்தார். அப்பொழுது, வாதி ஒரு தடை விதித்தார். அதன்படி பிரதிவாதிக்கு, வாதியின் நிறுவனத்தில் பணியளிக்கப்பட்டு, பின்னிட்டு அவர் அப் பணியிருந்து விலகினால், சென்னையிலிருந்து 800 மைல்கள் தூரத்திற்குள் உள்ளதும் மேற்கண்ட ஆடை உற்பத்தி செய்யும் வணிகத்தையொத்த வணிகம் செய்வதுமான வேறு எந்த நிறுவனத்திலும் பிரதிவாதி பணி புரிதல் கூடாது என்பதே அத்தடையாகும். பிரதிவாதியும் இதற்குச் சம்மதித்தார். எனவே அவரை வாதி தனது நிறுவனத்தில் பணிக்குச் சேர்த்துக் கொண்டார். ஆனால் இத்தடைக்கு, பிரதிவாதி கட்டுப்படவில்லை. எனவே வாதி, நீதிமன்றத்திற்குச் சென்றார். அங்கு மேற்கண்ட தடை இல்லாநிலையது என்றும், எனவே வலியுறுத்திச் செயல்படுத்த முடியாது என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

1. (1876) I.L.R. 1 Mad. 134.

Brahmaputra Tea Company Ltd. v. E. Scarth[1] – இவ்வழக்கில் தொழிலாளி ஒருவர் தனது முதலாளியுடன், தான் பணியை விட்டுச் சென்றபின், 40 மைல் சுற்றளவிற்குள் தனது முதலாளிக்கு போட்டியாக அதே தொழிலைத் தொடங்க மாட்டேன் எனவும், முதலாளியின் நன்மைக்கு ஊறு ஏற்படும் வகையில் தொழிற் காலத்தில் பணியில் ஈடுபட மாட்டேன் எனவும் இரண்டு உறுதியுரைகள் அளித்து ஒப்பந்தத்தில் ஈடுபட்டார். முதல் உறுதியுரையானது, வணிகத்தை தடை செய்வதாக இருப்பதால், அது இல்லா நிலையது என்றும், இரண்டாவது உறுதியுரையானது, அவ்வாறான தடை எதையும் செய்யாததால், அது செல்லக் கூடியதே என்றும் நீதிமன்றம் சற்று மாறுபட்ட கோணத்தில் ஆராய்ந்து தீர்ப்புரைத்தது.

Fraser & Co., Bombay Ice Manufacturing Co.,[2] – எனும் மற்றொரு வழக்கில் பனிக்கட்டியின் விலையினைக் குறைப்பதைத் தடுக்கும் பொருட்டு, நான்கு பனிக்கட்டி உற்பத்தி செய்யும் தொழிலதிபர்கள் ஒன்று சேர்ந்து, பனிக்கட்டிகளை ஒரு குறிப்பிட்ட விலைக்குக் கீழ் விற்பதில்லை என்று உடன்பாடு செய்துக் கொண்டனர். இந்த உடன்பாடு பிரிவு 27–ன்படி இல்லாநிலையானதல்ல என்றும், இது வணிகத்தின் மீதான தடையாகாது என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. வணிகங்களை கூட்டாக நடத்திக் கொள்வதில் (Trade Combinations) தவறில்லை எனும் கருத்தையும் நீதிமன்றம் கூறியது. எனினும்,

Shakil Kala v. Ram Saran Bhagat[3] – எனும் வழக்கில் தங்கள் நலனுக்காக சில தடைகளின் அடிப்படையில் வணிகங்களை கூட்டாக நடத்திக் கொள்வதை விடுத்து, சந்தையில் சர்வாதீனமாக (முற்றுரிமையாக) (Monopoly) விளங்கும் பொருட்டு, தொழிலதிபர்கள் ஒன்று சேர்ந்து உடன்பாடு செய்து கொண்டால், அது பிரிவு 27–ன் கீழ் இல்லாநிலையதாகும் என்று நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

இங்கிலாந்தின் நிலை :

இங்கிலாந்து நாட்டில் எலிசபெத் அரசு நடந்து கொண்டிருக்கும் கால கட்டத்தில், வணிகத்தை தடை செய்யும் உடன்பாடுகள் அனைத்தும் இல்லா நிலையதெனக் கூறப்பட்டது. ஏனெனில் அத்தகு உடன்பாடுகள், வணிகச் சந்தையில் ஒரு சர்வாதீனப் போக்கையும், பொது மக்களுக்கு இன்னலையும் விளைவிக்கக் கூடியதாகக் கருதப்பட்டது. பின்னிட்டு **Mitchel v. Reynolds**[4]

1. (1885) I.L.R. 11 Cal. 545.
2. (1905) I.L.R. 29 Bom. 107
3. (1909) 13 CWN 338
4. (1711) I.P. Woms. 181

எனும் வழக்கினால் 1711–ஆம் ஆண்டில் மேற்கண்ட நிலைப்பாட்டில் ஒரு மாற்றம் கொண்டு வரப்பட்டது. அவ்வழக்கில் கருத்துரைத்த **நீதிப்பெருமகனார் மெக்செல்ஸ்ஃபீல்டு (Lord Maccelfield)** அவர்கள், வணிகத்தின் மீது விதிக்கப்படும் தடை இங்கிலாந்து நாடு முழுவதற்கும் பொருந்தும் எனில், அதனை **'பொதுத் தடை' (General Restraint)** என்றும், அதுவே இங்கிலாந்தில் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு மட்டுமே பொருந்தக் கூடியது எனில், அதனை **'பகுதியளவு தடை' (Partial Restraint)** என்றும் வேறுபடுத்தி, அவற்றிற்கான சட்ட விளைவை எடுத்துரைத்தார். அதன்படி வணிகத்தின் மீது விதிக்கப்படும் பொதுத் தடைகள், முழுவதுமாக இல்லாநிலையன என்றும், பகுதிளவுத் தடைகள், செல்லத் தக்கவையே என்றும், ஆனால் அவை நியாயமாக இருக்க வேண்டும் என்றும், மேலும் கூறினார். இந்நிலைப்பாடு, இங்கிலாந்தில் 1894–ஆம் ஆண்டு வரை அமலில் இருந்தது.

எனினும் பின்னிட்டு **இங்கிலாந்தில் வணிகத்தின் மீதான தடைகள் குறித்து விளைந்த நவீன விதியின்படி (Modern rule in England as to restraints on Trade)**, வணிகத்தின் மீது எத்தடை விதிக்கப்பட்டாலும், அது முதற்தோற்றத்தில் இல்லாநிலையது (prima facie void) என்று அனுமானிக்கப் பட்டது. இதை மறுத்துக் கூற வேண்டுமெனில், அத்தகு வணிகத் தடை குறித்த உடன்பாட்டினால் பயனடையும் தரப்பினர் பின்வரும் இரு விடயங்களை மெய்ப்பித்தல் வேண்டும். (1) அத்தடை, உடன்பாட்டின் தரப்பினர்களுக்கு நலம் பயக்கக் கூடிய வகையில் நியாயமானதாக உள்ளது; மேலும் (2) பொது மக்களுக்கும் நலம் பயக்கக் கூடிய வகையில் நியாயமானதாக உள்ளது. அத்தகு உடன்பாட்டிலிருந்து தப்பித்துக் கொள்ள விழையும் தரப்பினர், அத்தடை பொது நலனுக்கு ஊறு விளைவிப்பதாக உள்ளது என்பதை மெய்ப்பித்தல் வேண்டும். இவ்விதி 1894–ஆம் ஆண்டில் பின்வரும் மிக முக்கியமான மற்றும் புகழ் பெற்ற வழக்கொன்றில், நீதிப் பெருமகனார்கள் அவையால் (House of Lords) எடுத்துரைக்கப்பட்டது.

Nordenfelt v. Maxim Nordenfelt Guns and Ammunition Co.,[1]

இவ்வழக்கின்படி, சுவீடன் நாட்டைச் சார்ந்த நார்டன்ஃபெல்ட் என்பவர் துப்பாக்கி தயார் செய்யும் வணிகத்தை நடத்தி வருபவர். அவரது வணிகத்தை இங்கிலாந்து நிறுவனம் ஒன்று விலைக்கு வாங்கியது. அதற்கு விலையாக 287500/– பவுண்டு பணத்தை நார்டன்ஃபெல்ட்டுக்கு கொடுத்தது. அப்பொழுது ஏற்பட்ட உடன்பாட்டில், அவர் மேற்படி இங்கிலாந்து நிறுவனத்திடம் பின்வருமாறு உடன்பாடு செய்து கொண்டார். அஃதாவது, (1) அந்நிறுவனத்திற்காக தவிர இன்னும் 25 ஆண்டுகளுக்கு அவர் துப்பாக்கி தயார் செய்யும் தொழிலில் ஈடுபடுதல்

1. (1894) AC 535

கூடாது; (2) அந்நிறுவனத்தின் வணிகத்திற்கு எந்த வகையிலாவது போட்டியாக விளங்கும் எந்த நிறுவனத்திலும் அவர் பணிபுரிதல் கூடாது. மேற்படி வழக்கில் எழுந்த பிரச்சனை யாதெனில், மேற்கண்ட இரு தடைகளுக்கு நார்டன்ஃபெல்ட் கட்டுப்பட்டவரா அல்லது அத்தடைகள் இல்லாநிலையனவா என்பதுதான். இங்கு மேற்கண்ட தடைகள் இங்கிலாந்து நாடு முழுவதும் அமலில் இருக்கக் கூடிய ஒன்று என்பதால், அவை 'பொதுத் தடைகளாகும்' (General Restraints)

வழக்கை ஆராய்ந்த நீதிப்பெருமகனார்கள் அவை, ஒரு பொதுத் தடை இல்லாநிலையதாகவே எப்பொழுதும் அறிவிக்கப்பட வேண்டும் எனும் அவசியம் ஏதும் இல்லை; பின்வரும் கூறுகள் இருக்கும் பொழுது, ஒரு பொதுத் தடை செல்லத் தக்கதே என்று கூறியது. அவை, **(1) அத்தடை, உடன்பாட்டின் இரு தரப்பினர் களுக்கும் நியாயமான ஒன்றாக இருக்க வேண்டும்; (2) அது பொது மக்களுக்கும் நியாயமானதாக இருக்க வேண்டும். [(1) The restraint must be reasonable to both parties; and (2) reasonable to the public]**

மேற்படி இரண்டு தடைகளில், நார்டன்ஃபெல்ட் துப்பாக்கிகளை தயார் செய்யக் கூடாது எனும் முதல் தடை, நியாயமானதே என்றும், ஏனெனில் அவர் ஒரு கணிசமான தொகைக்கு அவரது வணிகத்தை விற்றுள்ளார் என்றும், மேலும் பொது நலனின் அடிப்படையிலும் அத்தடை நியாயமானதே என்றும், ஏனெனில், அயல்நாட்டவர் ஒருவரின் கண்டுபிடிப்பினால் விளைந்த பயனை ஒரு இங்கிலாந்து நிறுவனம் அடைகிறது என்றும் நீதிப்பெருமகனார்கள் அவை கருத்துரைத்தது. ஆனால் நார்டன்ஃபெல்ட் அந்நிறுவனத்திற்கு போட்டியான வணிகங்களில் ஈடுபடக் கூடாது எனும் இரண்டாவது தடை, நியாயமற்றது என்றும், ஏனெனில், நார்டன்ஃபெல்ட்–டிடமிருந்து அந்நிறுவனத்தால் அடையப் பெற்ற உடைமை உரிமையை (proprietary right) அத்தடை பாதுகாக்கவில்லை என்றும் நீதிப் பெருமகனார்கள் அவை மேலும் கூறியது.

மேற்படி வழக்கில் வணிகத்தின் மீது விதிக்கப்பட்ட தடை, பகுதியளவு தடை (Partial Restraint) அல்ல. எனினும் நீதிப்பெருமகனார்கள் அவை, பகுதியளவுத் தடைகளும், பொதுத் தடைகளுக்குண்டான அதே நிலைப்பாட்டையே பெற்றுள்ளது என்றும், அவையும் முதற்தோற்றத்தில் இல்லாநிலையதுதான்; ஆனால் அத்தடைகளின் நியாயத்தன்மை குறித்து கூறும் மேற்கண்ட இரண்டு கூறுகள் பூர்த்தியாகியிருப்பின், அவை செல்லத்தக்கதே என்றும் கருத்துரைத்தது. எனவே, இங்கிலாந்து முழுவதும் பொருந்தக் கூடிய தடை (பொதுத் தடை), ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு மட்டும் பொருந்தக் கூடிய தடை (பகுதியளவு தடை) எனும் இரண்டு தடைகளை ஏற்படுத்தி, அவற்றிற்கு இடையே காட்டப்பட்ட மேற்படி வேறுபாடான சட்ட விளைவானது, மேற்படி வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பினால்

நடப்பொழுதிருந்து யோகாது என்றுதான் கூறு கொண்டுள்ளது. இதனால் இங்கிலாந்தைப் பொறுத்தவரை, வணிகத்தின் மீதான ஒரு தடை பொதுவானதா, பகுதியானதா என்பதைக் கண்டறிய கோண்டியதில்லை. அந்தத் தடைக்கு இரண்டு கூறுகளின் அடிப்படையில் நியாயமானதா என்பதை நீதிமன்றங்கள் ஆய்ந்தறிந்து கொண்டுள்ளன என்பதையும், நியாயமற்றதாக இருந்தால், அதற்கான இங்கு நிலையென்றும் நீதிமன்றங்கள் விளக்கம் கொண்டுள்ளன என்பதையும் நாம் மேற்கண்ட வழக்கிலிருந்து உணர்கிறோம்.

Mason v. Provident Clothing & Supply Co. Ltd.,[1]

பகுதியளவுத் தடைகள் (Partial Restraint), நியாயமானவை என வகைப்படுத்தப்பட்டுள்ளனவாக, அவைகளும் முற்றுமுழுதாகத் தடுத்தல் போன்றே இங்கு நிலையது என்று நீதிபெருமக்கள் அவை மேற்படி வகைக்கு தரப்படுத்தியுள்ளது. இவ்வழக்கின்படி, ஒரு நிறுவனத்தின் இங்கிலாந்து கிளையில் பணிபுரியும் ஒருவர், தனது பணியை இராஜினாமா செய்த பிறகு, அதன் ஆண்டுகளுக்கு இலண்டனில் 22 மைல்களுக்கு சுற்றளவில் வேறு எங்கும் பணி புரிவதில்லை என்று அந்நிறுவனத்துடன் உடன்பாடு செய்து கொண்டார். இத்தடை ஒரு பகுதியளவுத் தடையாகும். எனினும் அது நியாயமற்ற ஒன்றாக இருந்து காரணத்தால், இல்லாநிலையது என்று நீதிபெருமக்கள் அதை தீர்மானித்தது.

வணிகத்தின் மீதான தடை குறித்து இங்கிலாந்திற்கும் இந்தியாவிற்கும் உள்ள வேறுபாடான நிலைப்பாடு:

தற்பொழுது இங்கிலாந்தில் வணிகத்தின் மீதான ஒவ்வொரு தடையும் முதற்தோற்றத்திலேயே இல்லாநிலையதாகும். எனினும், அத்தடை, சம்பந்தப்பட்ட உடன்பாட்டின் தரப்பினர்களுக்கும், பொது மக்களுக்கும் நியாயமானதாக இருப்பின், அவை செல்லத்தக்கதாக நீதிமன்றங்கள் விளம்பியுள்ளன. அதாவது நாம் மேலே கண்ட இரண்டு கூறுகள் பூர்த்தியாகியிருந்தால், அத்தடைகள் செல்லத்தக்கதே.

ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை, இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 27-வது பிரிவின்படி, வணிகத்தின் மீதான தடையானது, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கானதாக அல்லது ஒரு குறிப்பிட்ட இடத்திற்கானதாக இருப்பினும், அவை இல்லாநிலையதே. அவை செல்லத்தக்கதாக கூறப்பட வேண்டுமெனில், பிரிவு 27-ன் கீழ் கூறப்பட்டுள்ள விதிவிலக்கிற்குட்பட்டதாக இருக்க வேண்டும். இங்கு வணிகத்தின் மீதான தடையானது பொதுக் கொள்கைக்கு எதிரானதாக கருதப்படுகிறது. எனினும் அத்தடை ஒரு உடன்பாட்டில் எந்த அளவிற்கு உள்ளதோ, அந்த அளவிற்குத்தான் இல்லாநிலையதாகும்.

1. (1913) AC 724

41. "Agreements void, if considerations and objects unlawful in part" - Explain ("மறுபயன்களும், நோக்கங்களும் பகுதியளவில் சட்ட முரணாக இருப்பின், அவ்வுடன்பாடு இல்லாநிலையதாகும்" – விளக்குக.)

(அல்லது)

What is the effect of severability on an illegal or void contract? (சட்டவிரோத அல்லது இல்லாநிலைய ஒப்பந்தத்தின் மேல் பிரிக்கத் தக்க தன்மை வாய்ந்ததின் விளைவு என்ன?)

(அல்லது)

Blue Pencil Rule - Write Short notes. (நீலநிறப் பென்சில் விதி – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Severability - Write Short notes. (பிரிபடக்கூடிய தன்மை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Reciprocal promises - Write short notes. (எதிரெதிரான உறுதியுரைகள் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Alternative promises - Write short notes. (ஒற்றை மாற்று உறதியுரைகள் – சிறு குறிப்பு எழுதுக.)

பகுதியளவில் சட்டப் புறம்பாக இருக்கும் மறுபயன்களும் நோக்கங்களும் - பிரிவு 24 கூறுவதாவது:

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நோக்கங்கள் கொண்ட ஒப்பந்தத்தின் ஒரே மறுபயனின் ஏதேனும் ஒரு பகுதி சட்டத்திற்குப் புறம்பாயிருப்பினும், அல்லது ஒரே நோக்கத்தினைக் கொண்ட ஒப்பந்தத்தின் பல மறுபயன்களில் ஏதேனும் ஒன்றின் அல்லது அதன் ஒரு பகுதி சட்டத்திற்குப் புறம்பாயிருப்பினும், உடன்பாடு இல்லாநிலையதாகும் என்று இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 24–வது பிரிவு[1] கூறுகிறது.

1. "If any part of a single consideration for one or more objects, or any one or any part of any one of several considerations for a single object, is unlawful, the agreement is void" - Section 24 of the Indian Contract Act, 1872.

எடுத்துக்காட்டு :

B என்பவர் நீலச் சாயம் (indigo) உற்பத்தி செய்பவராகவும் (சட்டத்திற் குகந்த செயல்), வேறு பொருள்களை சட்ட முரணாக வணிகஞ் செய்பவராகவும் (illegal traffic) உள்ளார். அவருக்குச் சார்பாக, A என்பவர் தாமே அச்செயல்களை கவனித்துக் கொள்வதாக மேற்படி B என்பவரிடம் உறுதியுரைக்கிறார். இதற்கு A–க்கு ஆண்டுச் சம்பளமாக ரூ.10,000/– தர B உறுதியுரைக்கிறார். இவ்வுடன்பாடு இல்லாநிலையை அடையும். ஏனெனில், A அளித்த உறுதியுரையின் நோக்கமும், B அளித்த உறுதியுரைக்கான மறுபயனும் பகுதியளவில் சட்டப் புறம்பானதாகும்.

பிரிபடக்கூடிய தன்மை (Severability) :

சில ஒப்பந்தங்களில் ஒரே மறுபயனுக்காக இரண்டு உறுதியுரைகள் செய்யப்படுவதுண்டு. எடுத்துக்காட்டாக, ஒரு ஒப்பந்தத்தில் A என்பவர் மறுபயனாக ரூ.100/–அய் பெற்றுக் கொண்டு, பின்வரும் இரண்டு உறுதியுரைகளை அளிக்கிறார். அவை, (1) B–யின் தோட்டத்தில் குழிகள் வெட்டுவதற்காக (2) B–யின் எதிரியான C–யைக் கொலை செய்வதற்காக. ஒரே மறுபயனுக்கான இரண்டு நோக்கங்களில் ஒன்று, இங்கு சட்ட முரணானதாக உள்ளது. எனவே இவற்றைப் தனித்தனியாக பிரித்து, வலியுறுத்தச் செய்ய முடியாது. மேற்கண்ட இரண்டு உறுதியுரைகளுமே இல்லாநிலையை அடைகின்றன.

ஆனால், சில ஒப்பந்தங்களில், இரண்டு தனித்தனியான மறுபயன்களுக் காக, இரண்டு உறுதியுரைகள் செய்யப்படுவதுண்டு. எடுத்துக்காட்டாக, (1) A என்பவர் மறுபயனாக ரூ.50/–அய் பெற்றுக் கொண்டு, B–யின் தோட்டத்தில் குழிகள் வெட்ட உறுதியுரைக்கிறார்; மற்றும் (2) அவரே மறுபயனாக ரூ.50/–அய் பெற்றுக் கொண்டு, B–யின் எதிரியான C–யைக் கொலை செய்வதாகவும் உறுதியுரைக்கிறார். இங்கு இந்த இரண்டு உறுதியுரைகளையும் தனித்தனியாக பிரித்தெடுக்க முடியும். ஏனெனில், அவ்வுறுதியுரைகள் ஒவ்வொன்றுக்கும் தனிதனியாக மறுபயன்கள் உள்ளன. எனவே அவற்றில், கொலை செய்வதற்கான சட்ட முரணான உறுதியுரையை பிரித்தெடுத்து, குழிகள் தோண்டுவதற்கான உறுதியுரையை வலியுறுத்திச் செயல்படுத்தச் செய்யலாம். ஒருவேளை இந்த இரண்டு உறுதியுரைகளும், பிரித்தெடுக்க முடியாதபடி ஒன்றுடன் ஒன்று பிணைந்திருப்பின், அவற்றைப் பிரித்தெடுத்து வலியுறுத்த முடியாது. இதுவே ஒப்பந்த உறுதியுரைகளின் பிரிபடக் கூடிய தன்மை எனப்படுகிறது.

நீலநிறப் பென்சில் விதி (Blue Pencil Rule) :

மேற்கண்டவாறு பிரிப்பது எப்பொழுது சாத்தியமென்றால், ஒரு

ஒப்பந்தத்தில் உள்ள சட்ட முரணான பகுதியை, அவ்வொப்பந்தத்தின் எஞ்சிய பகுதியிலிருந்து சொற்சார்வாய் (verbally) பிரிக்க முடியும் எனும் பொழுதுதான். இதுவே **'நீலநிறப் பென்சில் விதி' (Blue Pencil Theory)** எனப்படுகிறது. அதாவது, ஒரு ஒப்பந்தத்தின் குற்றமுள்ள பகுதியை (சட்ட முரணான பகுதியை) நீலநிறப் பென்சில் கொண்டு அடித்துவிடக் கூடியதாக இருக்க வேண்டும். அப்படி அடித்துவிட்ட பிறகு, எஞ்சியிருக்கும் பகுதியில் எவ்வித மாற்றமும் ஏற்படக் கூடாது. அது ஒரு புதிய ஒப்பந்தத்தையும் தோற்றுவிக்கத்தக்க வகையில் அமைந்துவிடக் கூடாது. நீதிமன்றமும் இதையே கருத்தில் கொண்டு செயல்பட வேண்டுமே தவிர, அடித்துவிட்ட பகுதியின் மீது, தன்னுடைய சொந்த சொற்களைக் கொண்டு, எதையும் நிரப்புதல் கூடாது.

Goldsoll v. Goldman[1] எனும் வழக்கில் A என்பவர் இலண்டனில் உள்ள தனது 'கவரிங்' நகைக் கடையை B என்பவருக்கு விற்றார். அப்பொழுது, அவர், 'தான் இனி இரண்டு ஆண்டுகளுக்கு பிரிட்டனில், அல்லது ஃபிரான்சில் அல்லது அமெரிக்காவில் அசல் அல்லது 'கவரிங்' நகைக் கடை வியாபாரம் எதையும் தொடங்குவதில்லை' என B–யிடம் உறுதியுரைத்து உடன்பாடு செய்து கொண்டார். வணிகத்தின் மீதான இத்தடை, நில எல்லையைப் பொறுத்த அளவில் மிகப் பரந்த அளவில் உள்ளதால், அது நியாயமற்றது என்று நீதிமன்றம் கூறியது. எனினும், 'ஃபிரான்சில் அல்லது அமெரிக்காவில்' எனும் சொற்கள் குற்றமுள்ள பகுதியாக உள்ளதால் அதை மேற்கண்ட விதியின்படி அடித்துவிட்டு, எஞ்சியுள்ள பகுதி (பிரிட்டனில்) செல்லத்தக்கதே என்று தீர்ப்புரைத்தது. அஃதாவது, இலண்டனில் உள்ள 'கவரிங்' நகைக் கடை மற்றொருவருக்கு விற்கப்படுகிறது. எனவே 'இலண்டனில்' (பிரிட்டனில்) அதையொத்த நகைக்கடையை தொடங்கக் கூடாது எனும் தடை நியாயமானது. அதை விடுத்து 'ஃபிரான்சிலும், அமெரிக்காவிலும்' நகைக் கடை தொடங்கக் கூடாது என்பது நியாயமானதல்ல. எனவே நியாயமானதை, நியாயமற்றதிலிருந்து நீதிமன்றம் பிரித்தெடுத்து, நியாயமான உறுதியுரையை செல்லத்தக்கதாக விளம்பியது.

ஒப்பந்தத்தின் பிரிபடக் கூடிய தன்மை குறித்து, நாம் இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **57, 58** ஆகிய பிரிவுகளையும் காணுதல் நலம். அவை வருமாறு.

எதிரெதிரான உறுதியுரைகள் (Reciprocal Promises) (பிரிவு 57):

'ஒரு ஒப்பந்தத்தின் தரப்பினர்கள், முதலாவதாக, சட்டத்திற்குகந்த சில செயல்களைச் செய்யவும், மற்றும் இரண்டாவதாக, சில சூழ்நிலைகளின் கீழ்,

1. (1915) 1 Ch. 292

சட்டத்திற்கு முரணான வேறு சில செயல்களைச் செய்யவும் எதிரெதிராக உறுதியுரைகள் செய்திருந்தால், உறுதியுரைகளின் முதற் தொகுதி ஒரு 'ஒப்பந்தம்' ஆகும். ஆனால் இரண்டாவது 'இல்லாநிலை' உடன்பாடாகும்'[1] **(பிரிவு 57).**

எடுத்துக்காட்டு :

'A' தனது வீட்டை 'B'-க்கு ரூ. 10,000/–க்கு விற்க உறுதியுரைக்கிறார். ஆனால் 'B' அதனை சூதாட்ட விடுதியாகப் பயன்படுத்தினால் ரூ.50,000/– கொடுக்க வேண்டும் என்று உடன்படுகிறார்.

இவற்றில் எதிரெதிர் உறுதியுரைகளின் முதல் தொகுதி, அதாவது வீட்டை விற்பது, அதற்காக ரூ.10,000/– கொடுப்பது என்பது ஒரு ஒப்பந்தமாகும்.

இரண்டாவது தொகுதி சட்டப்புறம்பான நோக்கத்தை கொண்டதாகும். அதாவது, 'B' அந்த வீட்டை சூதாட்ட விடுதியாக பயன்படுத்தல். எனவே இது, இல்லாநிலை உடன்பாடாகும்.

சில வழக்குகள்:

Poonoo Bibi v. Fyez Baksh[2] – எனும் வழக்கில், 'ஒன்று சட்டத்திற்குட்பட்டதாகவும், மற்றொன்று சட்ட முரணானதாகவும் என இரண்டு மாறுபட்ட பிரிக்கத்தக்க உறுதியுரைகளின் தொகுதி இருந்தால்தான், மேற்படி பிரிவு 57 பொருந்தும்' என்று நீதிமன்றம் கருத்துரைத்தது.

Daviat Singh v. Pandu[3] – எனும் வழக்கில், 'ஒப்பந்தத்தின் தரப்பினர்களே, தாங்கள் எதிரெதிராக செய்து கொண்ட உறுதியுரைகளில் ஒன்றிலிருந்து மற்றொன்றை பிரித்தெடுக்க முடியாதபடி ஒன்றெனக் கொண்டதாக பாவித்தால், அவை பிரிக்கமுடியாதவை என்று நீதிமன்றம் கருதி, அவ்வொப்பந்தம் முழுவதையுமே இல்லாநிலையதாக அறிவிக்கும்,' எனக் கூறப்பட்டது.

ஒற்றைமாற்று உறுதியுரைகள் (Alternative Promises) (பிரிவு 58) :

ஒற்றை மாற்று உறுதியுரைகளைக் கொண்ட ஒப்பந்தத்தின் ஒரு கிளை

1. "Where persons reciprocally promise, firstly, to do certain things which are legal, and, secondly, under specified circumstances, to do certain other things which are legal, the first set of promises is a contract, but the second is a void agreement" - **Section 57 of the Indian Contract Act, 1872.**
2. (1874) 15 Bom. LR 5
3. (1884) 9 Bom. 176

சட்டத்திற்குகந்தாகவும், மற்றொரு கிளை சட்ட முரணானதாகவும் இருந்தால், சட்டத்திற்குகந்த கிளை மட்டுமே செயல்படுத்ததக்கதாகும்[1] (பிரிவு 58).

எடுத்துக்காட்டு :

'A' என்பவர் 'B' என்பவருக்கு ரூ. 1,000/– தருவதாகவும், இதற்கு மறுபயனாக அரிசியோ அல்லது கடத்தல் செய்யப்பட்ட போதைப் பொருளோ 'B' –க்கு வழங்க வேண்டும் எனும் உடன்பாட்டில், அரிசி வழங்குவது என்பது செல்லத் தகு ஒப்பந்தம், கடத்தல் செய்யப்பட்ட போதைப் பொருள் வழங்குவது, இல்லாநிலை உடன்பாடாகும்.

42. "Ex turpi causa non oritur actio" - Explain. ("சட்ட முரணான செயலைச் சார்ந்தெழாது வழக்குரிமை" – விளக்குக.)

(அல்லது)

"In pari delicto potior est conditio defendantis" - Explain this maxim. ("சம அளவு தவறிழைத்தவர்களில், பிரதிவாதியின் நிலையே மேம்பட்டது" – இம்மூதுரையை விளக்குக.)

(அல்லது)

"In pari delicto potior est conditio possidentis" - Explain this maxim. ("சம அளவு தவறிழைத்தவர்களில், சொத்தின் சுவாதீனத்தில் உள்ளவரின் நிலையே மேம்பட்டது" – இம்மூதுரையை விளக்குக.)

(அல்லது)

"In cases of equal guilt, the position of the defendent is better"- Justify with the exceptions of this rule. ("சமமான குற்ற நிகழ்வுறுகளில் எதிர்வாதியின் நிலை மேம்பட்டதாக உள்ளது" – விலக்குகளுடன் இந்த விதி நியாயமானது என்பதை எடுத்துக்காட்டுக.)

(அல்லது)

Examine the scope of the rules as to recovery of money paid or property delivered under contracts opposed to law morals or public policy. (சட்டத்திற்கு, அறநெறிக்கு அல்லது பொதுக் கொள்கைக்கு எதிரான ஒப்பந்தங்களின் கீழ் கொடுத்த பணத்தை அல்லது வழங்கிய சொத்தைத் திரும்பப் பெறுவதற்கான விதிகளின் பரவெல்லையை ஆய்க.)

---

1. "In case of an alternative promise, one branch of which is legal and the other illegal, the legal branch alone can be enforced" - **Section 58 of the Indian Contract Act, 1872.**

முன்னுரை:

பொதுக் கொள்கைக்கு எதிரான உடன்பாடுகள் சட்டத்திற்கு புறம்பான தாகும் (unlawful). அதுபோல் சட்டத்திற்கு எதிரான உடன்பாடுகள் சட்ட முரணானதாகும் (அல்லது எதிரானதாகும்) (illegal). இத்தகு உடன்பாடுகள் இல்லாநிலையதாகின்றன. இவற்றை நாம் முன்னரே கண்டுள்ளோம்.

'இல்லாநிலை', 'சட்ட முரணான' ஒப்பந்தம் - வேறுபாடு:

இங்கு நாம், 'இல்லாநிலை' (void) ஒப்பந்தம் மற்றும் 'சட்ட முரணான' (illegal) ஒப்பந்தம் ஆகிய இரண்டிற்குமிடையே உள்ள நுணுக்கமான வேறுபாட்டை அறிதல் வேண்டும். மேற்கண்ட இரண்டு ஒப்பந்தங்களையும் வலியுறுத்திச் செயல்படுத்த முடியாது என்பது உண்மைதான். ஆனால் சட்ட முரணான ஒப்பந்தத்தில், அதற்குத் துணையாக நடந்த அனைத்து நடவடிக்கைகளையுமே (collateral transactions), வலியுறுத்திச் செயல்படுத்த முடியாததாகிறது.

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 65–வது பிரிவு, இல்லாநிலை ஒப்பந்தம் ஒன்றின் வாயிலாக, பிரதிவாதி பலன் எதையும் பெற்றிருந்தால், அதனை எவரிட மிருந்து பெற்றாரோ அவரிடமே திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்று கூறுகிறது. இது இல்லாநிலை ஒப்பந்தங்களுக்கு மட்டுமே பொருந்தக் கூடியதாகும். எனவே இந்நிலைப்பாடு சட்ட முரணான ஒப்பந்தத்திற்கு பொருந்தாது. அது ஒப்பந்தத் துடன் இணைந்த அனைத்து துணை நடவடிக்கைகளையுமே செல்லாததாக்குகிறது.

எடுத்துக்காட்டாக, 'அ' என்பவர் 'இ' என்பரைக் கொலை செய்வதற்காக 'ஆ' என்பவருக்கு ரூ.1000/– தருவதாக உறுதியுரைக்கிறார். இங்கு மறுபயனாகத் தரப்படும் ரூ.1000/–, இல்லாநிலையது மட்டுமல்ல. சட்ட முரணானதுமாகும். ஏனெனில், கொலை செய்தல் என்பது குற்றமாகும். எனவே 'ஆ' என்பவர் அம்மறுபனைக் கேட்கவோ அல்லது 'அ' என்பவர் அம்மறுபனை 'ஆ' –விடமிருந்து திரும்பப் பெறவோ முடியாது.

மூன்று மூதுரைகள்:

இத்தகு சட்ட முரணான ஒப்பந்தங்களைப் பொறுத்த வரை பின்வரும் மூன்று சட்ட மூதுரைகள் பொருந்துகின்றன. அவை, **(1) "சட்ட முரணான செயலைச் சார்ந்தெழாது வழக்குரிமை" (*Ex turpi causa non oritur actio*); (2) "சம அளவு தவறிழைத்தவர்களில், பிரதிவாதியின் நிலையே மேம்பட்டது" (*In pari delicto potior est conditio defendantis*); (3) "சம அளவு தவறிழைத்தவர்களில், சொத்தின் சுவாதீனத்தில் உள்ளவரின் நிலையே மேம் பட்டது" (*In pari delicto potior est conditio possidentis*).**

'சட்ட முரணான செயலைச் சார்ந்தெழாது வழக்குரிமை' எனும் முதல் மூதுரையின் நோக்கம் யாதெனில், மக்களிடையே சட்ட முரணான செயல்கள், உறுதியுரைகள், ஒப்பந்தங்கள் ஆகியவை எழாமல் தடுப்பதே ஆகும். வேறு விதத்தில் கூறுவதானால், பொதுக் கொள்கைக்கு எதிரான அல்லது சட்டத்திற்கு முரணான வழக்கு மூலத்தை வைத்து வழக்காட இயலாது என்பதே இதன் விளக்கம். எனவே, அத்தகைய செயல்களினால் உடன்பாடு கொண்டோர், கொடுத்த பணம், வழங்கிய சொத்துக்கள் எவற்றையும் சட்டத்தின் துணையினால் திருப்பிப் பெற இயலாது என்பது தெளிவு. இங்கு அச்செயலின் துணை நடவடிக்கைகள் அனைத்துமே, செல்லாததாகின்றன.

அந்த வகையில் இரண்டாவது மூதுரையான **"சம அளவு தவறிழைத்தவர் களில், பிரதிவாதியின் நிலையே மேம்பட்டது"** என்பது எப்பொழுது பொருந்துமெனில், ஒப்பந்தத்தின் இரண்டு தரப்பினர்களுமே, சமமான அளவில் தவறிழைத்திருக்க வேண்டும். அப்பொழுது ஒரு தரப்பினர் கொடுத்த பணத்தை அல்லது பொருளை மற்றொரு தரப்பினர் பெறவியலாது. அதற்காக வழக்காட இயலாது. இங்கு பணத்தை அல்லது சொத்தைப் பெற்றவரிடமே (பிரதிவாதியிடம்), அவை இருக்கக் கூடியதாகிறது. எனவே வாதியை விட, பிரதிவாதியின் நிலை இங்கு மேம்பட்டதாக உள்ளது. இதை பின்வரும் ஒரு வழக்கு விளக்கும்.

Atkinson v. Denby[1] – எனும் வழக்கில், வாதி பலரிடம் கடன் பெற்றிருந்தார். அவற்றைத் தீர்ப்பதற்காக கடனீந்தவர்கள் ஒவ்வொருவரிடமும் ஒரு கடன் தீர்வு ஒப்பந்தமொன்றைச் (Composition) செய்து கொண்டார். அதன்படி, கடனீந்தவர் ஒவ்வொருவருக்கும் 1 பவுண்டு பணத்தில் 5 ஷில்லிங் பணத்தை வாதி கொடுத்துவிட வேண்டும் என்று ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால் மேற்படி வழக்கில் பிரதிவாதியாக உள்ள ஒரு கடனீந்தவர், கூடுதலாக 50 பவுண்டு பணத்தை இரகசியமாகப் பெற்ற பிறகே, தனது இசைவை மேற்படி கடன் தீர்வு ஒப்பந்தத்திற்குக் கொடுத்தார். இது பிற கடனீந்தவர்களை மோசடி செய்வதாகும். பின்னிட்டு வாதி தான் கூடுதலாகக் கொடுத்த 50 பவுண்டு பணத்தைப் திரும்பப் பெற பிரதிவாதியின் மீது வழக்கிட்டார். இங்கு, இருவருமே தவறு செய்த நிலையில் உள்ளதால், மேற்கண்ட மூதுரையின்படி பிரதிவாதியின் நிலையே மேம்பட்டதாக உள்ளது; எனவே பணத்தைத் திரும்பப் பெற வாதிக்கு உரிமையில்லை என்று பிரதிவாதி வாதம் செய்தார். ஆனால் வழக்கை ஆராய்ந்த நீதிமன்றம், இங்கு இருவரின் நோக்கம், வாதிக்கு கடன் கொடுத்த மற்றவர்களை மோசடி செய்வதாக இருந்தாலும், இங்கு பிரதிவாதி சொல்வதைக் கேட்டுக் கொள்ளும் நிலையில் வாதி இருந்துள்ளார், பிரதிவாதி கூறியபடி ஒப்பந்தம் செய்து கொள்ள வாதி அவரால் தூண்டப்பட்டுள்ளார். எனவே இருவரும் சம அளவில் தவறு

1. (1862) 7 H & N 934

புரிந்திருக்கவில்லை. இதனால் மேற்படி மூதுரை பொருந்தாது என்று கூறி, வாதியின் பணத்தை பிரதிவாதி திரும்பச் செலுத்த வேண்டும் என்று தீர்ப்புரைத்தது.

மூன்றாவது மூதுரையான **"சம அளவு தவறிழைத்தவர்களில், சொத்தின் சுவாதீனத்தில் உள்ளவரின் நிலையே மேம்பட்டது"** என்பதின்படி, ஒப்பந்தத்தின் இரு தரப்பினர்கள் செய்த தவறு (குற்றம்) சம அளவில் இருப்பின், அவ்வொப்பந்தம் குறித்த சொத்தின் சுவாதீனத்தில் உள்ளவரின் நிலையே மேம்பட்டதாகும்; வலிமையுடைய தாகும். அவரிடமிருந்து சுவாதீனத்தை திரும்பப் பெற முடியாது. எடுத்துக்காட்டாக,

Apparao v. Ramalingamurthi[1] – எனும் வழக்கில், A என்பவர் தனக்கு கடனீந்தவர்களை மோசடி செய்யும் நோக்குடன் தனது சொத்தை B என்பவருக்கு ஒரு கிரயப் பத்திரம் மூலம் உரிமை மாற்றம் செய்து கொடுத்து விட்டார். ஆனால் அச்சொத்தின் சுவாதீனத்தில் A என்பவரே தொடர்ந்திருந்தார். அவருக்கு கடனீந்தவர்கள், B என்பவர்தான் சொத்தின் உரிமையாளர் என்று நம்பியதால், அவர்கள் A–க்கு கொடுத்த கடனை வசூலிக்கத் தவறிவிட்டனர். பின்னிட்டு, கடனீந்தவர்களை மோசடி செய்வதற்காக வஞ்சகமாகச் செய்து கொண்ட கிரயப் பத்திரத்தின் அடிப்படையில், B என்பவர் அக்கிரயச் சொத்தின் சுவாதீனத்தைக் கோரி A என்பவர் மீது வழக்கிட்டார். உச்ச நீதிமன்றம், மேற் கண்ட மூதுரையை இவ்வழக்கில் பயன்படுத்தி தீர்ப்பு கண்டது. அதன்படி, A, B ஆகிய இருவருமே சமமான அளவில் மோசடிக் குற்றம் புரிந்துள்ளனர். இருவரின் நோக்கமும் ஒன்றாக இருந்துள்ளது. எனவே, B என்பவர் அக்கிரயப் பத்திரத்தின் அடிப்படையில் சொத்தின் சுவாதீனத்தைப் பெற முடியாது; அவருக்கு நீதிமன்றம் உதவிக்கு வராது என்று கூறி, B–யின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டது.

சம அளவு தவறு நிகழ்வு மூதுரைக்கு விதிவிலக்குகள் (Exceptions to the maxim of *in pari delicto*):

1. ஒப்பந்தத்தின் சட்ட முரணான நோக்கம் நிறைவேறும் முன்பாக, தரப்பினர்கள் தங்கள் எண்ணத்தை மாற்றிக் கொண்டால், மேற்கண்ட மூதுரை பொருந்தாது. பணத்தை அல்லது சொத்தை வாதி திரும்பப் பெறலாம். (when illegal purpose not yet accomplished).

2. ஒரு குறிப்பிட்ட வகுப்பினரைப் பாதுகாக்கும் பொருட்டு ஒரு ஒப்பந்தம் சட்ட முரணானது என்று கூறப்பட்டால், அங்கும் மேற்படி மூதுரை பொருந்தாது. (where a contract is made illegal only for protecting a particular class of persons). எடுத்துக்காட்டாக வட்டித் தொழிலர்களின் (Money lenders) வணிக நடவடிக்கைகளில், கடன் பெற்றவர்கள் பரிகாரத்தைப் பெறவியலும்.

1. (1962) SCJ 437

3. ஒப்பந்தத்தின் இரு தரப்பினர்களும், சம அளவில் தவறிழைத்திருக்காத பொழுது, மேற்கண்ட மூதுரையைப் பயன்படுத்தவியலாது. எடுத்துக்காட்டாக, கடனீந்தவரின் (creditor) மோசடியினால், அல்லது அவர் கொடுத்த நெருக்கடியால் தூண்டப்பட்டுக் கடனாளி ஓர் ஒப்பந்தம் மேற்கொண்டால், அவ்வொப்பந்தத்தினால் கடனாளி தான் தந்த பணத்தை மீட்டுப் பெறலாம். இந்நிலைப்பாட்டை நாம் ஏற்கனவே **Atkinson v. Denby**[1] எனும் வழக்கில் கண்டுள்ளோம்.

4. வாதியிடம் கணக்குகளை ஒப்படைக்க வேண்டிய பொறுப்பின் கீழ் பிரதிவாதி இருந்தால், அப்பிரதிவாதிக்கு மேற்கண்ட மூதுரையின் பாதுகாப்பு கிடைக்காது (when the defendant is under a duty to render accounts to the plaintiff). அவரிடமுள்ள வாதியின் பணத்தை, அவ்வாதி திரும்பப் பெறவியலும்.

1. (1862) 7 H & N 934

12

சட்டத்தால் இல்லாநிலையதென அறிவிக்கப்பட்ட உடன்பாடுகள் [Agreements Declared Void by Law]

43. Enumerete the agreements which are declared void by law. (சட்டத்தால் இல்லாநிலையதென அறிவிக்கப்பட்ட உடன்பாடுகளை பட்டியலிடுக.)

எல்லா அடிப்படைக் கூறுகளும் ஒரு ஒப்பந்தத்தில் இருந்தாலும், அது ஒரு நாட்டின் சட்டப்படி இல்லாநிலை அடைந்ததாக அறிவிக்கப்பட்டிருக்கக் கூடாது. இந்திய ஒப்பந்தச் சட்டம் இவ்வாறு சில உடன்பாடுகளை இல்லாநிலை அடைந்தவையென அறிவித்துள்ளது. அவை வருமாறு:

1. ஒப்பந்தம் கொள்ளத் தகுதியற்றவர் செய்யும் உடன்பாடுகள் **(பிரிவு 11).**
2. பொருண்மை பற்றி பரிமாற்றத் தவறுடன் கூடிய உடன்பாடுகள் **(பிரிவு 20).**
3. சட்ட முரணான மறுபயனோ, நோக்கமோ கொண்ட உடன்பாடுகள் **(பிரிவு 23).**
4. பகுதியான சட்ட முரணான மறுபயனோ, நோக்கமோ கொண்ட உடன் பாடுகள் **(பிரிவு 24).**

5. மறுபயனற்ற உடன்பாடுகள் (பிரிவு 25).
6. திருமணத்தைத் தடை செய்யும் உடன்பாடுகள் (பிரிவு 26).
7. வணிகத்தைத் தடை செய்யும் உடன்பாடுகள் (பிரிவு 27).
8. சட்ட நடவடிக்கைகளைத் தடை செய்யும் உடன்பாடுகள் (பிரிவு 28).
9. உறுதியற்ற பொருள் (Uncertainity) கொண்ட உடன்பாடுகள் (பிரிவு 29).
10. பணையம் வழியான (Wager) உடன்பாடுகள் (பிரிவு 30).
11. நிகழ்வுசார் ஒப்பந்தங்கள் (Contingent Contracts) (பிரிவுகள் 32, 36).
12. நடக்க இயலாத செயலைச் செய்வதற்கான உடன்பாடுகள் (பிரிவு 56).
13. எதிரெதிர் உறுதியுரை, ஒற்றை மாற்று உறுதியுரை கொண்ட உடன் பாடுகளில், சட்டமுரணான பகுதி மட்டிலும் இல்லாநிலையது. (பிரிவுகள் 57, 58)

[மேற்கண்டவற்றில் பலவற்றை நாம் சென்ற அத்தியாயத்தில் விரிவாகக் கண்டுள்ளோம். அங்கு காணாதவற்றை தற்பொழுது இந்த அத்தியாயத்தின் வழியாகக் காண உள்ளோம். மேலே தொடர்வோமா?]

44. What is a wager agreement? What are the effects of wagering agreements. (பணைய உடன்பாடு என்றால் என்ன? பணைய உடன்பாடுகளின் விளைவுகள் யாவை?)

(அல்லது)

What is a wager? Is an agreement by way of wager void or illegal? Is contract of insurance wager? ('பகடைப் பணைய' ஒப்பந்த மென்றால் என்ன? அவ்வொப்பந்தமானது இல்லாநிலையுடையதா அல்லது சட்ட விரோதமானதா? காப்பீட்டு ஒப்பந்தம் பகடைப் பணைய ஒப்பந்தமாகுமா?)

(அல்லது)

What is a wagering contract and by what tests you determine whether a contract is a wagering contract or not? Examine when a contract of insurance can become a wagering contract? (பணைய ஒப்பந்தம் என்றால் என்ன? ஒரு ஒப்பந்தம் பணைய ஒப்பந்தமா இல்லையா என்பதை எச்சோதனைகளைக் கொண்டு நீவிர் தீர்மானிப்பீர்? எப்பொழுது ஒரு காப்பீட்டு ஒப்பந்தம் பணைய ஒப்பந்தமாகும் என்பதை ஆய்க.)

(அல்லது)

Define 'wager'. Point out the difference between a 'wagering agreement' and 'contingent contract'. Also state if an insurance contract is one of wager. ('பகடைப் பணையம்' என்பதினை வரையறை செய்க. 'பகடைப் பணைய உடன்படிக்கையினை' 'நிகழ்வுசார் ஒப்பந்தத்தினின்று' வேறுபடுத்திக் கூறுக. மேலும் காப்பீட்டு ஒப்பந்தமொன்று பகடைப் பணைய ஒப்பந்தமாகுமா என்பதினையும் கூறுக.)

(அல்லது)

Wagering contracts - Write short notes. (பகடை பணைய ஒப்பந்தங்கள் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Wagering agreements - Write short notes. (பகடை பணைய உடன்படிக்கைகள் – சிறு குறிப்பு எழுதுக.)

பணைய உடன்பாடுகள் அல்லது பகடைப் பணையம் (Wagering agreements or wager) [பிரிவு 30]:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 30–வது பிரிவு, பணைய வழி உடன் பாடுகள் இல்லாநிலையை அடையும் என்று கூறுகிறதே தவிர, அதற்கான வரையறையையோ, விளக்கத்தையோ கொடுக்கவில்லை.

பணையம் என்பதற்கு ஒப்பந்தச் சட்டவியல் அறிஞர் **சர் வில்லியம் ஆன்சன்** அவர்கள், 'உறுதியற்ற நிகழ்ச்சி ஒன்று முடிவுறுவதின் அல்லது நிகழ்வுறுதின் பேரில், பணத்தை அல்லது பண மதிப்புள்ளவற்றை தருவதாக உறுதியுரைப்பதே' பணையம் என்றும், 'உறுதியற்ற நிகழ்ச்சி முடிவுறுதலே அவர்களது ஒப்பந்தத்தின் ஒரே நிபந்தனையாக இருக்க வேண்டியது என அவர்கள் கருதியிருக்க வேண்டும்'[1] என்று கூறுகிறார்.

வேறுவிதத்தில் எளிமையாகக் கூறுவதென்றால், 'பணையம்' என்பதை, 'பந்தயம் கட்டுதல்' (betting) எனலாம். ஒரு உறுதியற்ற நிகழ்ச்சி அல்லது நிகழ்வதற்கு அய்யப்பாடாக உள்ள ஒரு விடயம் எவ்வாறு முடிகிறது என்பதைப் பொறுத்து, பணமளிப்பதாக உறுதியுரைப்பதே, பணையம். எடுத்துக்காட்டாக,

1. "Wager is a promise to give money or money's worth upon the determination or acertainment of an uncertain event," and that "the parties must contemplate the determination of uncertain event as the sole condition of their contract" - Sir William Anson, Law of Contract, 17th Edition, pp 221-22.

விளையாட்டுப் போட்டிகள், குதிரைப் பந்தயங்கள் போன்றவை. இதுபோன்று நிகழுமா, நிகழாதா எனும் உறுதியற்ற நிகழ்ச்சிகள் அல்லது வெற்றி, தோல்வி யாருக்கு எனும் போட்டிகள் ஆகியவற்றின் அடிப்படையில், பணமளிப்பதாக உறுதியுரைத்து 'பணைய (பந்தய) உடன்பாடுகள்' மேற்கொள்ளப்படுகின்றன. கருங்கக் கூறின் ஒரு உறுதியற்ற நிகழ்ச்சி நடந்தால் இவ்வளவு தொகை தருகிறேன் என்று ஒருவரும், அந்நிகழ்ச்சி நடக்காவிட்டால், இவ்வளவு தொகை தருகிறேன் என்று மற்றொருவரும் பரஸ்பரம் செய்து கொள்ளும் உடன்பாடு, பணைய உடன்பாடாகும். ஆனால், இத்தகு பணைய உடன்பாடுகள் மேற்படி பிரிவு 30-ன்படி இல்லாநிலையன.

எடுத்துக்காட்டுகள்:

(1) திங்களன்று மழை பெய்தால் 'அ'வும், மழை பெய்யாவிட்டால் 'ஆ'வும் ஒருவர் மற்றவர்க்கு ரூ. 10 செலுத்துவதாக உடன்பட்டால், இது ஒரு பணைய உடன்பாடு.

(2) 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு குறிப்பிட்ட தொகையை ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நடந்தால் தருவதாகவும் 'ஆ' என்பவர் ஒரு குறிப்பிட்ட தொகையை 'அ' என்பவருக்கு அந்நிகழ்ச்சி நடைபெறாவிட்டால் தருவதாகவும், அந்நிகழ்ச்சிக்கு சிறிதும் தொடர்பில்லாத 'அ'–வும் 'ஆ'–வும் செய்யும் உடன்பாடு பணைய உடன்பாடு ஆகும்.

(3) பரிசுச் சீட்டு (Lottery Ticket) விற்பனை. இதில் தனக்குத்தான் பரிசு விழும் என்று அச்சீட்டை வாங்குவதன் மூலம், அதனை விற்பவரிடம், வாங்குபவர் பந்தயம் கட்டுகிறார். விற்பவர், அவ்வாறு பரிசு விழாது எனும் அடிப்படையில், அச் சீட்டை விற்கிறார். இங்கு எச்சீட்டிற்கு பரிசு விழுகிறது அல்லது விழாமல் போகிறது என்பது குலுக்கலின் முடிவில் தெரிகிறது. ஆகவே இது ஒரு பணைய உடன் பாடாகும். இதனால் சில மாநிலங்களில், பரிசுச் சீட்டு தடை செய்யப்பட்டுள்ளது.

பணையத்தின் முக்கியக் கூறுகள்:

1. உடன்படும் நிகழ்ச்சி, உறுதியற்ற ஒன்றாக இருக்க வேண்டும்.
2. இரு தரப்பாளர்களில் ஒருவர் வெற்றி பெற அல்லது தோல்வியுற (gain or loss) வாய்ப்பிருக்க வேண்டும்.
3. பணமோ, பண மதிப்புள்ள பொருளோ கொடுக்க உறுதியுரை செய்ய வேண்டும்.
4. இரு தரப்பாளர்களுக்கும் அந்நிகழ்ச்சியில் எவ்வித அக்கறையும் (interest) இருத்தல் கூடாது.

5. இரு தரப்பாளர்களும் அந்நிகழ்ச்சியின்மேல் எவ்வித கட்டுப்பாட்டையும் (control) கொண்டிருக்கக் கூடாது.

பணைய உடன்பாடுகளுக்கு விதிவிலக்குகள் (Exceptions):

1. குறுக்கெழுத்துப் போட்டி (Crossword Competition). இது திறமையை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், பணைய உடன்பாடாகாது.

2. திறமையின் அடிப்படையிலான விளையாட்டிற்கான பரிசு போட்டிகள் (Games of Skill) பணையங்களல்ல. ஆனால் பரிசுத் தொகை ரூ. 1000/–த்திற்கு அதிகமாகக் கூடாது.

3. குதிரைப் பந்தயங்கள். ஆனால் பரிசுத் தொகை ரூ. 500/–க்கு மேல் இருத்தல் வேண்டும்.

4. பங்குச் சந்தை நடவடிக்கையில் (Share market transactions) பங்குகளை வாங்கி விற்கும் நோக்கத்தில் ஈடுபடுதல்.

5. காப்பீட்டு ஒப்பந்தம் (Contract of Insurance).

6. சீட்டு நிதி நடவடிக்கைகள் (Chit fund transaction).

7. அரசு நடத்தும் பரிசுச் சீட்டுக்கள் (Lottery Ticket Sales).

மேற்கூறியவைகள் பணையமாகத் தோன்றினாலும், அதன் தன்மையைப் பொறுத்து பணையமாகக் கருதப்படுவதில்லை.

பணைய உடன்பாடும், காப்பீட்டு ஒப்பந்தமும்- வேறுபாடுகள் (Wagering Agreement and Contract of Insurance - Distinctions) :

காப்பீட்டு ஒப்பந்தங்களும், பணைய உடன்பாடுகளும் மேலெழுந்தவாரியாகக் கண்டால் ஒன்றாகவே தோன்றினாலும், அவை பின்வரும் கூறுகளில் வேறுப்பட்டவை.

1. காப்பீட்டில், காப்பீடு செய்து கொள்பவருக்கு அதைப் பற்றி அக்கறை (Interest) உண்டு. பணைய உடன்பாட்டில் அவ்வித அக்கறை இல்லை.

2. காப்பீட்டில் இரு தரப்பினர்களும் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். ஆனால் பணைய உடன்பாட்டில் ஒரு தரப்பினர் முழுமையாக வெற்றியடைய வேண்டும் அல்லது ஒரு நபர் முழுமையாக தோற்க (இழக்க) வேண்டும்.

3. காப்பீட்டு ஒப்பந்தம், இழப்பை ஈடு செய்து கொள்வதற்காக மேற் கொள்ளப்படுகிறது. பணைய உடன்பாட்டில் ஒருவரின் இழப்பே, மற்றொருவரின் வெற்றி.

4. காப்பீடு பொதுமக்களுக்கு பயனளிப்பதாக இருக்கிறது. பணைய உடன்பாடு அவ்வாறு பயனளிப்பதாக இல்லை.

5. காப்பீட்டு ஒப்பந்தத்தில், வரவிருக்கும் இடரின் மதிப்பு (value of risk) அறிவியலின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. பணைய உடன்பாடு இவ்வாறில்லை. இது ஒரு சூதாட்டம் போன்றதே.

6. காப்பீட்டு ஒப்பந்தம் சட்ட இயல்பு கொண்டதாக இருப்பதால் செயல் படுத்த முடியும். பணைய உடன்பாடு, சட்டப்படி இல்லாநிலையதாகும். எனவே வலியுறுத்திச் செயல்படுத்த முடியாதது.

7. காப்பீட்டில் உரிய கட்டணமாக, முனைமம் (Premium) செலுத்தப் படுகிறது. பணைய ஒப்பந்தத்தில் கட்டணம் ஏதும் செலுத்தப்படுவதில்லை.

ஒரு காப்பீட்டு ஒப்பந்தத்தில் ஒரே ஒரு கூறு மட்டும் இல்லையெனில், அது பணைய உடன்பாடாகிவிடும். அக்கூறு, 'காப்பீடு செய்யத்தக்க நலன்' (Insurable interest) எனப்படும்.

பணைய உடன்பாட்டின் விளைவு (Effect) :

பணைய உடன்பாடுகள், இல்லாநிலையதென ஒப்பந்தச் சட்டத்தின் 30–வது பிரிவால் வெளிப்படையாகவே அறிவிக்கப்பட்டுள்ளன. எனவே, பணையத்தின் முடிவில் வெற்றி பெற்றால் அதற்காக அறிவிக்கப்பட்ட பணத்தைப் பெறவோ அல்லது எந்நிகழ்ச்சியின் பொருட்டு பணையம் மேற்கொள்ளப்பட்டதோ அதன் முடிவின்படி நடந்து கொள்ளக் கோரியோ எந்நீதிமன்றத்திலும் வழக்கிட முடியாது.

45. Distinguish between Wager and Insurance contract.

வேறுபடுத்துக :
பணையம் மற்றும் காப்பீட்டு ஒப்பந்தம்

[முந்தைய வினாவின் விடையில் காண்க]

46. What is meant by a contingent contract? How does it differ from a wagering contract? (நிகழ்வுசார் ஒப்பந்தங்கள் என்பதின் பொருள் என்ன? அது ஒரு பணைய உடன்பாட்டிலிருந்து எவ்வாறு வேறு படுகிறது?)

(அல்லது)

Contingent Contract - Write short notes. (நிகழ்வுசார் ஒப்பந்தம் – சிறு குறிப்பு எழுதுக.)

நிகழ்வுசார் ஒப்பந்தம் (Contingent Contract) – விளக்கம்:

ஓர் ஒப்பந்தம் முழுமையான ஒப்பந்தமாகவோ அல்லது நிகழ்வுசார் ஒப்பந்தமாகவோ இருக்கலாம். இங்கு அவ்விரண்டு ஒப்பந்தங்களுக்கிடையிலான வேறுபாட்டை அறிதல் அவசியம். அஃதாவது, உறுதியுரை அளிப்பவர் எவ்வித தன்மையிலும் எவ்வித கட்டுபாடுமின்றி ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதாகக் கூறும் ஒப்பந்தம் முழுமையான ஒப்பந்தமாகும் **(Absolute Contract)**. எதிர்காலத்தில் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி நிகழ்வதைப் பொறுத்தோ அல்லது நிகழாமல் இருப்பதைப் பொறுத்தோ ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டி இருந்தால், அது நிகழ்வுசார் ஒப்பந்தமாகும் **(Contingent Contract)**. நிகழ்வுசார் ஒப்பந்தங்களை 'நிபந்தனையுடன் கூடிய ஒப்பந்தங்கள்' என்றும் அழைக்கலாம்.

பிரிவு 31 கூறும் வரையறை:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **31–வது பிரிவு**, நிகழ்வுசார் ஒப்பந்தத்திற்கு பின்வருமாறு வரையறை தருகிறது. அதன்படி, "ஒப்பந்தத்திற்கு துணையான ஒரு நிகழ்ச்சி நடைபெறுவதை அல்லது நடைபெறாமலிருப்பதைப் பொறுத்து ஏதாவது ஒன்றைச் செய்வது அல்லது செய்யாமலிருப்பது எனும் ஒப்பந்தம் நிகழ்வுசார் ஒப்பந்தமாகும்".[1]

எடுத்துக்காட்டு:

A என்பவர் B என்பவரின் வீடு தீ–யினால் பாதிக்கப்பட்டால் ரூ. 10,000/– தருவதாக ஒப்பந்தம் செய்கிறார். இது ஒரு நிகழ்வுசார் ஒப்பந்தமாகும்.

நிகழ்வுசார் ஒப்பந்தத்தின் அடிப்படைக் கூறுகள் (Essentials) :

1. நிகழ்வுசார் ஒப்பந்தத்தின் நிறைவேற்றம் வருங்காலத்தில் நிகழக் கூடிய அல்லது நிகழாது இருக்கக் கூடிய ஒரு செயலால் தீர்மானிக்கப்படுகிறது. வருங்கால செயலைச் சார்ந்திருப்பதுதான், நிகழ்வுசார் ஒப்பந்தத்தை மற்ற ஒப்பந்தங்களிலிருந்து வேறுபடுத்துகிறது.

1. "A 'contingent contract' is a contract to do or not to do something, if some event, collateral to such contract does or does not happen" - **Section 31 of the Indian Contract Act, 1872.**

2. நிகழ்ச்சி உறுதியற்ற இருக்க வேண்டும் (uncertain). நிகழ்ச்சி நடை பெறுவது நிச்சயமென்றால் அது நிகழ்வுசார் ஒப்பந்தமாகாது.

3. ஒப்பந்தம் நிறைவேறுவதற்கு ஒப்பந்தத்தைச் சார்ந்த நிகழ்ச்சி ஒன்று நிகழ வேண்டும்.

4. அந்நிகழ்ச்சி, ஒப்பந்தம் செய்து கொள்ளும் நபர்களின் சக்திக்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். அதாவது நிகழ்வுசார் ஒப்பந்தத்தில் உறுதியற்ற எதிர்கால நிகழ்ச்சி ஏற்படுவது, ஒப்பந்தம் செய்துக் கொள்ளும் நபர்களின் சக்திக்கு மீறிய செயலாக இருக்க வேண்டும். அவர்களின் கட்டுப் பட்டிற்குட்பட்டதாக அந்நிகழ்ச்சி இருத்தல் கூடாது.

இவை யாவும் நிகழ்வுசார் ஒப்பந்தத்தின் அடிப்படைக் கூறுகளாகும். காப்பீட்டு ஒப்பந்தங்கள் (Contract of Insurance), ஈட்டுறுதி (Indemnity), பொறுப்புறுதி ஆகியன யாவரும் அறிந்த நிகழ்வுசார் ஒப்பந்தங்களாகும்.

நிகழ்வுசார் ஒப்பந்தம் தொடர்பான விதிகள் (Rules regarding Contingent Contract) :

நிகழ்வுசார் ஒப்பந்தங்கள் செயல்படுவது குறித்து இந்திய ஒப்பந்தச் சட்டமானது, சில விதிமுறைகளை வகுத்துள்ளது. இவ்விதிமுறைகள் இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 32 முதல் 36 வரையுள்ள பிரிவுகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

1. உறுதியற்ற வருங்கால நிகழ்ச்சியொன்று நடப்பதன் பேரில், ஒரு செயலைச் செய்ய அல்லது செய்யாமல் இருக்க நிகழ்வுசார் ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டால், அந்நிகழ்ச்சி நடைபெறும் வரை, அவ்வொப்பந்ததை வலியுறுத்திச் செயற்படுத்த முடியாது. அந்நிகழ்ச்சி நிறைவேற வாய்ப்பில்லாமல் போனால் ஒப்பந்தம் இல்லாநிலையதாகும் **(பிரிவு 32).**

எடுத்துக்காட்டாக, B என்பவர் C என்பவரை திருமணம் செய்து கொள்ளும் காலத்தில், A என்பவர் B என்பவருக்கு ஒரு தொகை தருவதாக உடன்படுகிறார். ஆனால், C என்பவர் இறந்துவிட்டதால், அவரை B-யால் திருமணம் செய்து கொள்ள முடியவில்லை. இங்கு ஒப்பந்தம் இல்லாநிலையை அடைகிறது.

2. உறுதியற்ற ஒரு வருங்கால நிகழ்ச்சியொன்று நடைபெறாமல் போனால், ஒரு செயலைச் செய்ய அல்லது செய்யாமல் இருக்க நிகழ்வுசார் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டால், அந்நிகழ்ச்சி நடைபெற சாத்தியமில்லாமல் (impossible) போனதும் அவ்வொப்பந்தத்தைச் செயல்படுத்தலாம் **(பிரிவு 33).**

எடுத்துக்காட்டாக, ஒரு குறிப்பிட்ட கப்பல் திரும்ப வந்து சேராவிட்டால்,

A என்பவர் B-க்கு ஒரு தொகையைத் தருவதாக ஒப்பந்தம் செய்து கொள்கிறார். அக்கப்பல் கடலில் மூழ்கிவிட்டது. இதை அறிந்தவுடன் அவ்வொப்பந்தத்தைச் செயற்படுத்தலாம்.

3. குறிப்பிட்ட காலவரம்புக்குள்ளாக, நபர் ஒருவரின் அத்தகு செயல் ஒன்றினால் அல்லது வேறு சில நிகழ்வுகளினால் (contingencies) நடைபெற சாத்தியமில்லாமல் போகக் கூடியதுமான, நிகழ்வுசார் ஒப்பந்தத்தில் காணப்படுகின்ற வருங்கால நிகழ்ச்சியினை வரையறுத்துக் குறிப்பிடப்படாத காலத்தில், நபர் ஒருவர் செய்கின்ற செயலினால், அந்நிகழ்ச்சி நடைபெறுவதற்கு சாத்தியமில்லாத ஒன்றாகிவிட்டதாகக் கருதப்படும். **(பிரிவு 34).** சற்று குழப்பாக உள்ள இச்சட்டப் பிரிவை பின்வரும் எடுத்துக்காட்டைக் கண்டால் எளிதில் விளங்கிவிடும்.

எடுத்துக்காட்டாக, B என்பவர் C என்பவரை மணந்து கொண்டால், B என்பவருக்கு ஒரு தொகை தருவதாக A என்பவர் உடன்படுகிறார். இந்நிலையில் C என்பவர் D என்பவரை மணக்கிறார். இங்கு ஒருக்கால் D என்பவர் இறந்து விட்டால், பின்னிட்டு C என்பவர் B என்பரை மணந்து கொள்ளும் சாத்தியக் கூறு உள்ளது. இருப்பினும், தற்பொழுது B மற்றும் C–யின் திருமணம் நடைபெற சாத்தியமில்லாமல் போன ஒன்றாகக் கருதப்படுகிறது.

4. நிர்ணயிக்கப்பட்ட ஒரு காலகட்டத்திற்குள் ஒரு குறிப்பிட்ட உறுதியற்ற நிகழ்ச்சி நடப்பதன் பேரில், ஒரு செயலைச் செய்ய அல்லது செய்யாமல் இருக்க மேற்கொள்ளப்படும் நிகழ்வுசார் ஒப்பந்தமானது, அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் அக்குறிப்பிட்ட நிகழ்ச்சி நடைபெறவில்லையானால் அல்லது அக் காலத்திற்கு முன்பாகவே, அந்நிகழ்ச்சி நடைபெறுவதற்கு சாத்தியமில்லாத ஒன்றாக ஆகிவிட்டால், (அந்நிகழ்வுசார் ஒப்பந்தம்) இல்லாநிலையதாகும் **(பிரிவு 35–ன் கீழான முதற்பத்தி).**

எடுத்துக்காட்டாக, A என்பவர் B என்பவருக்கு ஒரு குறிப்பிட்ட கப்பல் ஓராண்டிற்குள் திரும்பி வந்தால் ஒரு தொகை தருவதாக உறுதியுரைக்கிறார். கப்பல் அந்த ஆண்டிற்குள் திரும்பி வந்தால் அவ்வொப்பந்தத்தை செயற்படுத்தலாம். அந்த ஆண்டிற்குள் எரிந்து போனால் அவ்வொப்பந்தம் இல்லாநிலையதாகும்.

5. நிர்ணயிக்கப்பட்ட ஒரு காலகட்டத்திற்குள் ஒரு குறிப்பிட்ட உறுதியற்ற நிகழ்ச்சி நடக்காமலிருப்பதன் பேரில், ஒரு செயலைச் செய்ய அல்லது செய்யாமல் இருக்க மேற்கொள்ளப்படும் நிகழ்வுசார் ஒப்பந்தமானது, அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவடைந்துவிட்டால் மற்றும் அந்நிகழ்ச்சி நடைபெறவில்லையானால், அல்லது அக்குறிப்பிட்ட காலம் முடிவடைவதற்கு முன்பாகவே, அந்நிகழ்ச்சி நடைபெறாது என்பது உறுதியாகிவிட்டால், அவ்வொப்பந்தத்தை சட்டப்படி செயல்படுத்தலாம் **(பிரிவு 35–ன் கீழான இரண்டாவது பத்தி).**

எடுத்துக்காட்டாக, A என்பவர் B என்பவருக்கு ஒரு குறிப்பிட்ட கப்பல் ஓராண்டிற்குள் திரும்பி வராவிட்டால் ஒரு தொகை தருவதாக உறுதியுரைக்கிறார். கப்பல் அந்த ஆண்டிற்குள் திரும்பி வராவிட்டால் அல்லது அந்த ஆண்டிற்குள் எரிந்து போனால், அவ்வொப்பந்தத்தை வலியுறுத்திச் செயற்படுத்தலாம்.

6. நடப்பதற்கு சாத்தியமில்லாத ஒரு நிகழ்ச்சி நடைபெறுமானால், ஒரு செயலைச் செய்வதாக அல்லது செய்யாமல் இருப்பதாக மேற்கொள்ளப்படும் நிகழ்வுசார் உடன்பாடுகள், அந்நிகழ்ச்சி நடைபெறுவதற்கு சாத்தியமில்லா ஒன்று என்பது அவ்வுடன்பாடுகளின் தரப்பினர்களுக்கு அவ்வுடன்பாடுகள் மேற்கொள்ளப் படும் காலத்தில் தெரிந்திருந்தாலும் அல்லது தெரிந்திருக்காவிட்டாலும், அவை இல்லாநிலையை அடையத்தக்கதே **(பிரிவு 36).**

எடுத்துக்காட்டாக, (1) இரண்டு நேர்க் கோடுகளை ஓரிடத்தில் இணையச் செய்தால், ரூ.1,000/– தருவதாக A என்பவர் B என்பவருடன் உடன்படுகிறார். இவ்வுடன்பாடு இல்லாநிலையதாகும்.

(2) A என்பவர் தன்னுடைய மகளான C என்பவரை B என்பவர் மணந்து கொண்டால், B–க்கு ரூ.1,000/– தருவதாக A என்பவர் உடன்படுகிறார். ஆனால் அவ்வாறு உடன்பாடு செய்து கொள்ளும் காலத்திலேயே, C என்பவர் இறந்து விட்டிருந்தார். இவ்வுடன்பாடு இல்லாநிலையதாகும்.

பணைய உடன்பாடு மற்றும் நிகழ்வுசார் ஒப்பந்தம் – வேறுபாடுகள் :

பணைய உடன்பாடு [Wagering Agreement]	நிகழ்வுசார் ஒப்பந்தம் [Contingent Contract]
1. **பரிமாற்றமான உறுதியுரைகள்:** தரப்பினர்கள் தங்களுக்குள் பரிமாற்றமாக ஒருவருக்கொருவர் உறுதியுரைப்பார்கள்.	இங்கு பரிமாற்றமான உறுதியுரைகள் இல்லாமல் இருக்கலாம்.
2. **செயல்படும் தன்மை :** முழுக்க முழுக்க இல்லாநிலையது.	இது ஒரு செல்லத்தகு ஒப்பந்தமாகும்.
3. **நிறைவேற்றம் :** தரப்பினர்கள் ஒப்பந்த நிறைவேற்றத்தை விரும்பு வதில்லை.	இங்கு அவ்வாறில்லை.

4. **கருப்பொருளின் மேல் அக்கறை (Interest)** : தரப்பினர்களுக்கு பணையத் தொகை தவிர உடன் பாட்டின் கருப்பொருளின் மீது எவ்வித அக்கறையும் கிடையாது.	தரப்பினர்களுக்கு ஒப்பந்தத்தின் கருப்பொருள் மீது ஏதாவது அக்கறை இருக்கும். ஒரு நிகழ்ச்சி நடப்பதையே அல்லது நடக்காமலிருப்பதையோ எதிர்பார்த்திருப்பார்கள்.
5. **எதிர்கால நிகழ்ச்சி** : எதிர்கால நிகழ்ச்சியை முழுக்க சார்ந்தது.	எதிர்கால நிகழ்ச்சி, ஒப்பந்தத்திற்கு சார்பானது மட்டும்தான்.
6. **தன்மை (Nature)**: அடிப்படையில் இது நிகழ்வுசார் தன்மையுடையது.	இது பணையத் தன்மையற்றது.
7. **விளைவு (Effect)**: இது இல்லா நிலையது என்பதால், இதன் அடிப்படையில் நீதிமன்றத்தில் வழக்கிட இயலாது.	இது செல்லத்தக்கது. எனவே, இதனை நீதிமன்றத்தின் வாயிலாக வலியுறுத்திச் செயல்படுத்தலாம்.

13

ஒப்பந்த நிறைவேற்றம்
[Performance of Contract]

47. What is performance of contract? By whom a contract must be performed? Who can demand performance? (ஒப்பந்த நிறைவேற்றம் என்றால் என்ன? அது யாரால் செய்யப்பட வேண்டும்? யார் ஒப்பந்த நிறைவேற்றத்தைக் கோரலாம்?)

ஒப்பந்த நிறைவேற்றம் – சட்ட விளக்கம் :

ஒப்பந்தத் தரப்பாளர்கள், தங்களின் ஒப்பந்தத்தால் ஏற்பட்ட கடப்பாடுகளை (Obligations) குறித்த காலத்திற்குள், குறித்த முறைப்படி நிறைவு செய்தால், அங்கு 'ஒப்பந்தத்தின் நிறைவேற்றம்' (Performance of Contract) நடைபெறுகிறது என்று பொருளாகும். ஒரு ஒப்பந்தம் இரு தரப்பாளர்களாலும் நிறைவேற்றப்பட்டால் அவ்வொப்பந்தம் மனநிறைவுடன் முடிவடைகிறது. அதற்கு மேல் மீதியாக எதுவும் இருப்பதில்லை. எல்லாத் தரப்பாளர்களும் தங்கள் கடப்பாடுகளை நிறைவேற்றிவிட்டால், அது ஒரு இயல்பான முறையிலான ஒப்பந்த விடுவிப்பாகும் (Discharge of contract).

ஒப்பந்த நிறைவேற்றம் யாரால் செய்யப்பட வேண்டும்?

1. ஒப்பந்தத் தரப்பாளர்களால் (Parties of contract) [பிரிவு 37–ன் கீழான முதற்பத்தி] : ஒப்பந்தத் தரப்பாளர்கள் தங்கள் உறுதியுரைகளை, ஒப்பந்தச்

சட்டத்தாலோ அல்லது வேறு எந்தச் சட்டத்தாலோ, அவ்வொப்பந்தத்தின் நிறைவேற்றம் தளர்த்தப்பட்டிருந்தாலன்றி (dispensed with) (a) நிறைவேற்ற வேண்டும் அல்லது (b) நிறைவேற்ற முனைவு (offer to perform) செய்ய வேண்டும். எனவே, ஒப்பந்தத் தரப்பாளர்கள் தங்கள் உறுதியுரைகளை நிறைவேற்ற வேண்டும் அல்லது நிறைவேற்ற முனைவு செய்ய வேண்டும் என்பது பொதுவிதி. அத்தகு நிறைவேற்றம் இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் கீழோ, அல்லது வேறு சட்டம் எதன் கீழோ தளர்த்தப்பட்டிருப்பின், அவ்வொப்பந்தத்தினை நிறைவேற்ற வேண்டிய அவசியமில்லை. எடுத்துக்காட்டாக, நொடிப்புநிலைச் சட்டத்தின் கீழ் (Insolvency Act), நொடிப்பு நிலை எய்தியவர் (Insolvent), தனது ஒப்பந்த உறுதியுரையை நிறைவேற்ற வேண்டிய அவசியமில்லை.

2. சட்டப்படியான பின்னுரிமையர் (Legal Representative) (பிரிவு 37–ன் கீழான இரண்டாம் பத்தி): உறுதியுரை வழங்கியவர், ஒப்பந்த நிறைவேற்றத்திற்கு முன் இறந்துவிட்டால், எதிர்மறையான விருப்பம் அவ்வொப்பந்தத்தில் காணப்பட்டாலொழிய, உறுதியுரை, அவரது சட்டப்படியான பின்னுரிமையரைக் கட்டுப்படுத்தும்.

ஆனால் தனிப்பட்ட சேவைக்கான (Personal Service) ஒப்பந்தங்கள், உறுதியுரை வழங்கியவரின் சட்டப்படியான பின்னுரிமையாளராலோ அல்லது அவருக்கு எதிராகவோ செயல்படுத்த முடியாது.

3. உறுதியுரை வழங்கியவர் (Promisor) [பிரிவு 40] : உறுதியுரை வழங்கியவர்தாம், அவரது உறுதியுரையை நிறைவேற்ற வேண்டும் என்பது ஒப்பந்தத் தரப்பாளர்களின் விருப்பமாகக் காணப்பட்டால், அந்த உறுதியுரையை, உறுதியுரை வழங்கியர்தான் நிறைவேற்ற வேண்டும். சொந்தத் திறமை, அறிவு முதலியவற்றை பயன்படுத்துவதுதான் ஒரு ஒப்பந்தத்தின் நோக்கமெனில் (எ.கா) – படம் வரைய, பாட்டுப்பாட) அல்லது தரப்பாளர்களின் தனி நம்பிக்கையின் அடிப்படையில் அவ்வொப்பந்தம் அமைந்துள்ளதென்றால் (எ.கா. திருமண ஒப்பந்தம்) உறுதியுரையை, அதனை வழங்கியவரே நிறைவேற்ற வேண்டும். வேறு நேர்வுகளில் உறுதியுரை அளித்தவர், தனது உறுதியுரையை நிறைவேற்றுவதற்காக பணிக்கமர்த்தும் தகுதியுடைய அவரது பிரதிநிதிகளால் அவ்வொப்பந்தம் நிறைவேற்றப்படலாம்.

4. மூன்றாம் நபர் (Third Party) (பிரிவு 41): சில நேரங்களில் உறுதியுரை ஒரு மூன்றாம் நபரால் கூட நிறைவேற்றப்படலாம். உறுதியுரை ஏற்பவர் (Promisee) மூன்றாம் நபரால் உறுதியுரை நிறைவேற்றப்படுவதை ஏற்றுக் கொண்டால், பின்னர் உறுதியுரை வழங்கியவருக்கு எதிராக அதைச் செயல் படுத்த முடியாது.

5. இணை உறுதியுரை வழங்கியவர்கள் (Joint Promisors) (பிரிவுகள் 42 மற்றும் 43): இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் இணைந்து உறுதியுரை வழங்கியிருப்பின், அவர்கள் அனைவரும் சேர்ந்தே, அவ்வுறுதியுரையை நிறைவேற்ற வேண்டும். ஒருவேளை அவர்களில் எவரேனும் ஒருவர் இறந்து விட்டால், இறந்து போனவரின் சட்டப்படியான பின்னுரிமையர்கள் (வாரிசுகள்) உயிருடன் உள்ள மற்ற உறுதியுரை வழங்கியவர்களுடன் சேர்ந்து அவ்வுறுதியுரையை நிறைவேற்ற வேண்டும். ஆனால் இதற்கு மாறான எண்ணம் எதுவும் அவர்களது ஒப்பந்தத்தில் இருத்தல் கூடாது.

யார் ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கோரலாம் ?

1. உறுதியுரை ஏற்பவர் (Promisee) : ஒரு ஒப்பந்தத்தின் நிறை வேற்றத்தை உறுதியுரை ஏற்பவர்கள்தான் கோரமுடியும். பிற எந்த நபரும் அவருக்கு ஒப்பந்தத்தின் பலன் சென்று அடைவதாக இருந்தாலும், ஒப்பந்தத்தை நிறை வேற்றக் கோர முடியாது. உதாரணமாக A என்பவர் C என்பவருக்கு ரூ.1,500/– தருவதாக B என்பவரிடம் உறுதியுரை செய்கின்றார். ஆனால் A, C–க்கு அவ்வாறு பணம் தரவில்லை. இதனால், C என்பவர் A–யின் மீது நடவடிக்கை எடுக்க முடியாது. B என்பவர்தான் A–க்கு எதிராக அவ்வுறுதியுரையை நிறைவேற்றக் கோர முடியும்.

2. பின்னுரிமையர் (Representative): உறுதியுரை ஏற்பவர் இறந்து விட்டால், அவரது சட்டப்படியான பிரதிநிதிகள் (வாரிசுகள்), ஒப்பந்தத்தை நிறைவேற்ற உரிமை கோரலாம். ஆனால் இதற்கு மாறான எண்ணம் எதுவும் அவ்வொப்பந்தத்தில் இருத்தல் கூடாது.

3. இணைந்து உறுதியுரை ஏற்பவர்கள் (Joint Promisees) : உறுதியுரையொன்றை இருவர் அல்லது அதற்கும் மேற்பட்டவர்கள் இணைந்து ஏற்றுக் கொண்டால், அவர்கள் அனைவரும் இணைந்து உறுதியுரையின் நிறைவேற்றத்திற்கு உரிமை கோரலாம். இணைந்து உறுதியுரை ஏற்பவர்களில் ஒருவர் இறந்துவிட்டால், அவரது சட்டப்படியான பின்னுரிமையர்கள் (வாரிசுகள்) உறுதியுரை நிறைவேற்றத்திற்கு உரிமை கோரலாம்.

4. மூன்றாம் நபர் (Third Person) : பின்வரும் நிலைகளில் ஒரு மூன்றாம் நபர் கூட உறுதியுரை நிறைவேற்றத்திற்கு உரிமை கோரலாம்.

(அ) ஒரு பொறுப்புரிமை அமைக்கப்பட்டு, அதன் பொறுப்பாண்மையராக நியமிக்கப்பட்டவர் உறுதியுரையின் நிறைவேற்றத்திற்கு உரிமை கோரலாம்.

(ஆ) திருமணச் செலவுக்காக, இந்து கூட்டுக் குடும்பத்தின் பெண்கள் ஒப்பந்த நிறைவேற்றத்திற்கு உரிமை கோரலாம்.

(இ) ஒரு ஒப்பந்தத் தரப்பினர் மூன்றாம் நபர் ஒருவரிடம் தனது பொறுப்பை ஒப்புக் கொண்டால் அவர் அதை மறுக்க முடியாது. இதனை 'முரண்தடை' என்பர். இந்த மூன்றாம் நபர், ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கோரலாம்.

(ஈ) உரிமை மாற்றம் பெற்றவர், ஒப்பந்தத்திலுள்ள பலனைப் பெற உறுதியுரையை நிறைவேற்றக் கோரலாம்.

48. What is meant by tender of performance? What are the essential conditions for a valid tender? (நிறைவேற்ற அளிப்பு முனைவு என்றால் என்ன? ஒரு செல்லத்தக்க அளிப்பு முனைவிற்குண்டான முக்கியக் கூறுகள் யாவை?)

(அல்லது)

Explain the essentials of an Offer of performance or Tender (நிறைவேற்றத்திற்கான ஒரு முனைவு அல்லது முற்படுதலின் முக்கியக் கூறுகளை விளக்கு.)

(அல்லது)

Tender of Performance - Write short notes. (நிறைவேற்ற அளிப்பு முனைவு – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

'நிறைவேற்ற அளிப்பு முனைவு' (Tender of Performance) என்பதைத் தெரிந்து கொள்வதற்கு முன், நிறைவேற்றத்தின் இரண்டு முக்கிய வகைகளைத் தெரிந்து கொள்வது அவசியமாகும். அவை 1. நடைமுறை நிறை வேற்றம் (Actual Performance) 2. முயற்சிக்கப்பட்ட நிறைவேற்றம் (Attended Performance).

நிறைவேற்றத்தின் இரு முக்கிய வகைகள் - விளக்கம்:

1. நடைமுறை நிறைவேற்றம் (Actual Performance) : ஒப்பந்தம் ஒன்றின் தரப்பாளர் ஒருவர், தன்னுடைய பங்கு கடப்பாட்டை நிறைவு செய்தால், அவர் நடைமுறைப்படி அவ்வொப்பந்தத்தை நிறைவேற்றம் செய்கிறார் என்று பொருள். இதன் பின் மறு தரப்பாளரும் தன் பங்கைச் செய்து முடிக்க வேண்டும். இரு தரப்பாளர்களும் தங்களது பங்கை நிறைவு செய்தால், அவ்வொப்பந்தம் நடைமுறையில் நிறைவேற்றம் அடைகிறது. இவ்வாறு நடைமுறை நிறைவேற்றம் ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து விடுகிறது.

2. முயற்சிக்கப்பட்ட நிறைவேற்றம் (அல்லது) நிறைவேற்ற அளிப்பு முனைவு : முயற்சிக்கப்பட்ட நிறைவேற்றம் (Attended Performance) என்பதே, **'நிறைவேற்ற அளிப்பு முனைவு'** (Tender of Performance) எனப்படுகிறது. இதனை பின்வரும் ஒரு எடுத்துக்காட்டின் வழியாகக் கண்டால் எளிதில் விளங்கும்.

எடுத்துக்காட்டாக, A தனது காரை B-க்கு விற்றிட ஒப்பந்தம் செய்து கொள்கிறார். அதன்படி A தனது காரை B-க்கு அளிக்க முனைவு செய்கிறார். இங்கு A ஒப்பந்த நிறைவேற்றத்திற்கென முனைவு செய்து (முயற்சித்து) விட்டார். B மேற்படி ஒப்பந்தத்தில் தன்னுடைய பங்கை நிறைவேற்ற வேண்டியுள்ளது. இவ்வுதாரணத்தில் A செய்தது **நிறைவேற்ற அளிப்பு முனைவு (Tender of Performance)** ஆகும்.

ஒப்பந்தத்தின்படி உறுதியுரைப்பவர், உறுதியுரை ஏற்றவரிடம் நிறைவேற்ற அளிப்பு முனைவு செய்தால், அவ்வுறுதியுரை ஏற்றவர்தான் நிறைவேற்றத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு ஏற்றுக் கொள்ளவில்லையெனில், ஒப்பந்த நிறைவேற்றாமைக்கு (Non-Performance of contract) உறுதியுரைப்பவர் பொறுப்பல்ல. அவர் ஒப்பந்தத்தின்பாலுள்ள எவ்வித உரிமையும் இழக்கமாட்டார். **[பிரிவு 38–ன்படி].** மேலும் உறுதியுரைப்பவர், ஒப்பந்தத்தின்படி, தன்னுடைய பங்கை நிறைவேற்றிவிட்டதால், அவர் இனி நிறைவேற்ற வேண்டியது ஏதுமில்லை. அத்தோடு மட்டுமில்லாமல், உறுதியுரை ஏற்பவர் மீது ஒப்பந்த முறிவிற்காக (Breach of contract) வழக்குத் தொடரும் உரிமையையும் உறுதியுரைப்பவர் பெறுகிறார். (மேற்கண்ட எடுத்துக்காட்டின்படி B தனது பங்கை **ஒப்பந்தத்தை** நிறைவேற்றாததால், அவர் மீது ஒப்பந்த மீறுகைக்காக A வழக்கு தொடரலாம்.)

ஒரு செல்லத்தக்க அளிப்பு முனைவிற்காக முக்கிய மூலக்கூறுகள் (Essential conditions for a valid Tender) [பிரிவு 38] :

1. அளிப்பு முனைவு நிபந்தனையற்றதாக (Tender must be unconditional) இருக்க வேண்டும். நிபந்தனையுடன் கூடிய முனைவு நல்ல முனைவு அல்ல. மறுதரப்பாளர் அதை மறுக்க உரிமை உடையவராவார். அளிப்பு முனைவு ஒப்பந்தத்தின் விதிகளின்படி இல்லை என்றால், நிபந்தனையுடன் கூடிய முனைவு (Conditional Tender) ஆகும்.

2. ஒப்பந்தம் செய்யப்பட்ட முழு அளவுக்கும் அல்லது முழுக் கடப்பாட்டுக்குமாக அளிப்பு முனைவு இருக்க வேண்டும். முழுவதுமான தொகையைச் செலுத்துவதற்கான ஒப்பந்தத்தில், தொகையைத் தவணை முறையில் கொடுப்பதாகக் கூறுவது, ஒரு செல்லத்தக்க முனைவாகாது.

ஆனால் ஒப்பந்தத்தில் உள்ள மாறுபாடு புறக்கணிக்கக் கூடிய அளவுதான் (negligible) இருந்ததென்றால், நீதிமன்றம் நடைமுறைக் கண்ணோட்டத்துடன் நிறைவேற்றம் சரியான முறையில் செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளும்.

3. அது செய்யக்கூடிய நிலையிலுள்ள, விருப்பமள்ள ஒரு நபரால் செய்யப்பட வேண்டும்.

4. அது குறிப்பிட்ட காலத்திலும், இடத்திலும் செய்யப்பட வேண்டும் (Tender must be made at a proper time and place). பொருள்களை வழங்க முனைவது வியாபார நேரத்துக்கு அப்பால் இருந்தாலோ, பணம் செலுத்துவது குறிப்பிடப்பட்ட நாளுக்கு முன்பிருந்தாலோ செல்லத்தக்க முனைவாகாது.

5. அது சரியான நபரிடம் (உறுதியுரை ஏற்றவரிடம் அல்லது பிரதிநிதியிடம்) செய்யப்பட வேண்டும். அது சரியான படிவத்திலும் இருக்க வேண்டும்.

6. அது பொருள்கள் வழங்குவது பற்றியதாக இருத்தல், உறுதியுரை ஏற்றவர் பொருள்களைப் பார்வையிட வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். அவர் பார்வையிட முடியாத நேரத்தில் பொருள்களை வழங்க முனைந்தால் அது ஒரு செல்லத்தக்க முனைவாகாது.

7. இணையாக உறுதியுரை ஏற்றவர்களில் (Joint Promisees) எவரேனும் ஒருவரிடம் முனைவு செய்யப்படலாம். அவ்வாறு செய்தால், அது அனைவரிடமும் செய்யப்பட்ட முனைவாகவே கருதப்படும்.

8. உறுதியுரை ஏற்றவர், ஒப்பந்தத்தின் நிறைவேற்றத்திற்காக உறுதியுரை வழங்கியவருக்கு நியாயமான வசதி செய்து கொடுக்க வேண்டும். அவ்வாறு செய்யாவிட்டால் உறுதியுரை வழங்கியவரின்பால் அவரது செயல்களுக்காக எவ்வித குறையும் கூற முடியாது.

49. What are the rules laid down in the Indian Contract Act as to the devolution of joint liabilities? Is there any difference between the Indian and the English law in this respect? Explain. (இணைந்த பொறுப்புகளை மாற்றுவது குறித்து இந்திய ஒப்பந்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள விதிகள் யாவை? இது தொடர்பாக இந்திய மற்றும் இங்கிலாந்து சட்டத்திற்கிடையே வேறுபாடுகள் உள்ளனவா? விளக்குக.)

(அல்லது)

Discuss the provisions of the Contract Act regarding devolution of joint liabilities and rights. (இணைந்த பொறுப்புகளையும், உரிமைகளையும் மாற்றுவது தொடர்பான ஒப்பந்தச் சட்டத்தின் வகைமுறைகளை விவாதிக்க.)

(அல்லது)

Joint Promises - Write Short Notes. (இணைந்த உறுதியுரைகள் – சிறு குறிப்பு எழுதுக.)

இணைந்த உறுதியுரைகள் (Joint Promises) :

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுடன் இணைந்து உடன்பாடு (Joint agreement) செய்து கொள்ளலாம். இவர்கள் கொடுக்கும் உறுதியுரை, இணைந்த உறுதியுரை (Joint Promise) எனப்படும். இதனால் இணைந்த பொறுப்புகளும் (Joint Liabilities) உரிமைகளும் (Rights) எழுகின்றன.

இணைந்த உறுதியுரைகளை நிறைவேற்றுதல் (Performance of Joint Promises) :

இவ்வாறு உறுதியுரைப்பவர் ஒருவருக்கு மேலிருந்தால், அவர்கள் 'இணைந்து உறுதியுரை அளிப்பவர்' எனப்படுவர். ஒன்றுக்கு மேற்பட்ட உறுதியுரை ஏற்பவர்கள், 'இணைந்து உறுதியுரை ஏற்பவர்கள்' என்று அழைக்கப்படுவர். இவ்வுறுதியுரைகள் 1. இணைந்த உறுதியுரையாகவோ (Joint Promises); 2. இணைந்தும் தனித்தனியானதுமான உறுதியுரையாகவோ (Joint and Several Promises) இருக்கலாம்.

இந்தியா மற்றும் இங்கிலாந்தின் நிலை :

இந்தியாவில், ஒப்பந்தங்களில் மாறுபட்ட கருத்துக் கூறப்பட்டிருந்தாலொழிய, எல்லா இணைந்த உறுதியுரைகளும் இணைந்த மற்றும் தனித்தனியான உறுதியுரைகளே. இங்கிலாந்தில் இவையிரண்டும் வேறாகக் கருதப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, A, B, C ஆகிய மூவரும் D-யிடமிருந்து கடனுறுதிச் சீட்டின் அடிப்படையில் ரூ.3,000/– கடன் பெற்றால் இந்தியச் சட்டப்படி அவர்கள் மூவரும், இணைந்தும் தனித்தனியாகவும் கடனைத் திரும்பச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இங்கிலாந்தில் இணைந்து மட்டுமே கடமைப்பட்டவர்களாகிறார்கள். இணைந்தும் தனித்தனியாகவும் அல்ல.

இணைந்த உறுதியுரை நிறைவேற்றம் குறித்த விதிகள் :

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 42 முதல் 45 வரையுள்ள பிரிவுகள், இணைந்த உறுதியுரை நிறைவேற்றத்திற்கான சட்ட விதிகளைக் கூறுகின்றன. மேற்கண்ட வேறுபாடுகளை இவ்விதிமுறைகளில் விளக்கமாகக் காணலாம்.

1. இணைந்த பொறுப்படைவுகளின் மாற்றம் (Devolution of Joint Liabilities) (பிரிவு 42) :

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர் இணைந்து உறுதியுரை அளித்திருப்பின், அவர்களது வாழ்நாளில், அவர்கள் அனைவரும் சேர்ந்து, தங்கள் உறுதியுரையை நிறைவு செய்தல் வேண்டும். அவர்களில் எவரேனும் இறந்து போயிருப்பின், இறந்து போனவரின் சட்டப்படியான பின்னுரிமையர்கள் (வாரிகைகள்), எஞ்சியுள்ள மற்றவர்களுடன் இணைந்து, அவ்வுறுதியுரையை நிறைவு செய்தல் வேண்டும். எஞ்சியுள்ளவர்களில், இறுதியாக உள்ளவரும் இறந்துவிட்டால், அனைவரது சட்டப்படியான பின்னுரிமையர்களும் இணைந்து அவ்வுறுதியுரையை நிறைவு செய்தல் வேண்டும். ஆனால் மேற்கண்ட நிலைப்பாட்டிற்கு மாறான எண்ணம் எதும், அவ்வொப்பந்தத்தில் இருத்தல் கூடாது.

(எ.கா.) A, B, C ஆகிய மூவரும் இணைந்து கடனுறுதிச் சீட்டின் அடிப்படையில் D-யிடமிருந்து கடனாக ரூ. 1,000/– பெற்றனர். அதனை D கோரும் பொழுது, வட்டியுடன் திருப்பித் தர உறுதியுரை அளிக்கின்றனர். 'A' இறக்கிறார். எனவே A–யின் சட்டப்படியான பின்னுரிமையர், B மற்றும் C–யுடன் இணைந்தும், தனித்தனியாகவும் அப்பணத்தை D-க்கு செலுத்தக் கடமைப்பட்டவர்களாகிறார்கள். ஆனால் ஆங்கிலச் சட்டப்படி, மேற்கண்ட நேர்வில், A இறந்தால் 'A'–யின் சட்டப்படியான பின்னுரிமையர் கடமைப்பட்டவராகமாட்டார். B மற்றும் C மீது மட்டுமே அக்கடனைத் தீர்க்கும் பொறுப்புச் சுமத்தப்படும். இவர்கள் இருவரும் இணைந்து அக்கடன் தொகையை D-க்குச் செலுத்த வேண்டும்.

2. இணைந்த உறுதியுரை அளித்தவர்களில் எவரேனும் ஒருவர் உறுதியுரை நிறைவேற்ற வற்புறுத்தப்படலாம் (Any one of joint promisors may be compelled to perform) (பிரிவு 43–ன் கீழான முதற்பத்தி):

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர் இணைந்து உறுதியுரை அளித்தால், உறுதியுரை ஏற்றவர், மாறுபாடான உடன்பாடு இருந்தாலொழிய, அவ்வுறுதியுரை முழுவதையும் நிறைவேற்றக் கோரி அத்தகு இணைந்து உறுதியுரை அளித்தவர்களில் எவரேனும் ஒருவரை அல்லது அதற்கு மேற்பட்டவரை வற்புறுத்தலாம்.

(எ.கா.) A,B,C ஆகிய மூவரும் இணைந்து D- யிடமிருந்து கடனாகப் பெற்ற தொகையான ரூ. 3,000/–த்தை அவருக்குத் திரும்பச் செலுத்த உறுதியுரை அளிக்கின்றனர். மேற்படி A,B,C ஆகியவர்களில் எவரேனும் ஒருவரே தனக்கு ரூ.3,000/– முழுவதையும் திரும்பச் செலுத்த வேண்டும் என்று D என்பவர் வற்புறுத்த முடியும். ஆனால், ஆங்கிலச் சட்டப்படி D என்பவர் மேற்படி ரூ.3,000/–த்தில் ஒவ்வொருவரிடமிருந்தும் ரூ. 1,000/–க்கு மேல் திரும்பப் பெற வற்புறுத்த முடியாது.

3. இணைந்த உறுதியுரை அளிப்பவரிடையே விகிதப் பொறுப்பு (Each promisor may compel contribution) (பிரிவு 43-ன் கீழான இரண்டாம் மற்றும் மூன்றாம் பத்தி):

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இணைந்து உறுதியுரை அளித்தவர்கள் ஒவ்வொருவரும், அவ்வுறுதியுரையை நிறைவேற்ற தனக்குச் சமமான விகிதப் பொறுப்பளிக்கும்படி (to contribute equally with himself), மற்ற இணைந்து உறுதியுரை அளித்தவர்கள் ஒவ்வொருவரையும் வற்புறுத்தலாம்.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட இணைந்து உறுதியுரை அளித்தவர்களில் எவரேனும் ஒருவர், அவ்வாறு விகிதப் பொறுப்பளிக்கத் தவறினால், மீதமுள்ள இணைந்த உறுதியுரை அளித்தவர்கள் அத்தவறுகையால் (default) ஏற்பட்ட நட்டத்தை சரிசம பங்களவில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(எ.கா.) (1) A,B,C ஆகிய மூவரும் D-க்கு ரூ.3000/- செலுத்த இணைந்து உறுதியுரை அளிக்கின்றனர். இங்கு மேற்கண்ட மூவரும் இணைந்தும், தனித் தனியாகவும் ரூ.3,000/- செலுத்த பொறுப்புடையவர்கள். (தனித்தனியாக எனில், தலா ரூ.1,000/- செலுத்த வேண்டும்). எனினும், அத்தொகை முழுவதையும் C-யே செலுத்த வேண்டும் என்று D வற்புறுத்தி, அத்தொகையை பெற்றுவிடுகிறார். இந்நிலையில், A என்பவர் நொடிந்தவராகிவிடுகிறார். ஆனால் அவரது சொத்துக்கள், அவருக்குரிய மேற்படி கடனில் பாதியை அடைக்கப் போதுமானதாக உள்ளது. எனவே A-யின் சொத்துக்களிலிருந்து ரூ.500/-அய்ப் பெற C உரிமை உடையவர். மீதம் ரூ.2500/- உள்ளது. அதில் சரிசம பங்குத் தொகையான ரூ.1,250/-அய் C என்பவர் B-யிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொள்ள உரிமை படைத்தவர்.

(2) A,B,C ஆகிய மூவரும் D-க்கு ரூ.3000/- செலுத்த இணைந்து உறுதியுரை அளிக்கின்றனர். இங்கு C என்பவர் எத்தொகையையும் செலுத்த முடியாத நிலையில் உள்ளார். எனவே மேற்படி ரூ.3000/- முழுவதையும் செலுத்துமாறு A என்பவரை D வற்புறுத்துகிறார். எனவே, B-யிடமிருந்து விகிதப் பொறுப்புத் தொகையான ரூ.1,500/- அய்ப் பெற A உரிமை பெற்றவர்.

4. இணைந்து உறுதியுரை அளித்தவர் ஒருவரின் விடுவிப்பினால் ஏற்படும் விளைவு (Effect of release of one joint promisor) (பிரிவு 44):

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் இணைந்து உறுதியுரை ஒன்று அளித்திருந்தால், அவர்களில் ஒருவரை உறுதியுரை ஏற்றவர் விடுவிப்பு செய்து விடுவதனால், அது ஏனைய இணைந்த உறுதியுரை அளித்தவர்களை விடுவிப்பு செய்து விடாது. அதுபோல், அவ்வாறு விடுவிப்புப் பெற்றவரை, மற்ற இணைந்த உறுதியுரை அளித்தவர்களிடம் அவருக்குள்ள பொறுப்பிலிருந்தும் விடுவிப்பு செய்து விடாது.

(எ.கா.) A, B, C ஆகிய மூவரும் D-க்கு ரூ. 1000/– தர உறுதியுரை அளிக்கின்றனர். மேற்படி D, A-யை பொறுப்பிலிருந்து விடுவிப்பு செய்கிறார். ஆனால் B-யும், C–யும், D-க்கு பொறுப்புடையவர்களாகவே இருப்பார்கள். அது போல், மேற்படி A என்பவர் B–க்கும் C–க்கும் பொறுப்புடையவராகவே இருப்பார். D அத்தொகையை B, C இருவரிடமிருந்தும் பெற்றுக் கொண்டால், அவர்கள் A-யிடமிருந்தும் விகிதப் பொறுப்பின் அடிப்படையில் தொகை பெற உரிமையுடையவராகிறார்கள்.

ஆங்கிலச் சட்டப்படி, இணைந்து உறுதியுரையொன்றை அளிப்பவர் விடுவிக்கப்பட்டால், கடனீந்தவர் வெளிப்படையாக மற்ற இணைந்த உறுதியுரையளித்தவர்களுக்கெதிராக தனக்குள்ள உரிமையைக் காத்துக் கொண்டாலொழிய, மற்றவர்களும் விடுவிப்பு பெற்றவர்களாவார்கள்.

5. இணைந்த உரிமை மாற்றம் (Devolution of Joint Right) (பிரிவு 45) :

ஒரு நபர், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுக்கு கூட்டாக உறுதியுரை அளித்திருந்தால், அவ்வுறுதியுரையை நிறைவேற்றக் கோரும் உரிமை, அவர்களது வாழ்நாளில் அவர்கள் அனைவரையும் சார்ந்திருக்கும். அவர்களில் எவரேனும் ஒருவர் இறந்துவிட்டால், அவரது சட்டப்படியான பின்னுரிமையருடன் இணைந்து மற்ற உயிருடன் உள்ளவர்களையும் சார்ந்திருக்கும். உறுதியுரை ஏற்றவர்கள் அனைவரும் இறந்துவிட்டால், அவர்கள் அனைவரின் சட்டப்படியான பின்னுரிமையர்களையும் அவ்வுறுதியுரையை நிறைவேற்றக் கோரும் உரிமை சாரும்.

(எ.கா.) B-யும், C-யும் இணைந்து A-க்கு ரூ. 5,000/–த்தை கடனாகக் கொடுக்கின்றனர். அத்தொகையை மேற்படி B மற்றும் C ஆகிய இருவருக்கும் வட்டியுடன் திருப்பியளிக்க A-யும் உறுதியுரைக்கிறார். B இறந்துவிடுகிறார். உறுதியுரையை நிறைவேற்றக் கோரும் உரிமை, B-யின் சட்டப்படியான பின்னுரிமையருக்கும், C-க்கும் கிட்டும். C-யும் இறந்தால் B, C ஆகிய இருவரின் சட்டப்படியான பின்னுரிமையர்களுக்குக் கிட்டும்.

50. Explain the provisions relating to the time and place of performance of contract. Is time the essence of contract? (ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதற்கான காலமும், இடமும் தொடர்பான வகை முறைகளை விளக்குக. காலம் ஒப்பந்தத்தின் ஒரு இன்றியமையாத கூறா ?)

(அல்லது)

"Time is not the essence of contract."- Do you agree? ("காலம் ஒப்பந்தத்தின் ஒரு இன்றியமையாக் கூறல்ல" – ஒத்துக் கொள்கிறீர்களா?)

ஒப்பந்த நிறைவேற்றத்திற்கான காலம் (Time for Performance of Contract) :

1. காலம் குறிப்பிடப்படாவிட்டால் (When no time fixed) (பிரிவு 46):

ஒப்பந்தமொன்றை நிறைவேற்ற வேண்டிய காலமானது அவ்வொப்பந்தத்தில் குறிப்பிடப்படாத பொழுது, மற்றும் உறுதியுரை ஏற்றவரின் விண்ணப்பத்தின் பேரில் அல்லாமல், உறுதியுரை அளித்தவர் அவ்வுறுதியுரையை நிறைவேற்ற வேண்டியிருக்கையில், அதனை ஒரு நியாயமான காலத்திற்குள் நிறைவேற்ற வேண்டும் (withing a reasonable time). "நியாயமான காலம் எது" என்பது பொருண்மை சார்ந்த ஒரு பிரச்சனையாகும் (question of fact). அதாவது, அது வழக்கின் தன்மையையும், ஒப்பந்த நபர்களின் எண்ணத்தையும் பொறுத்தாகும்.

2. காலம் குறிக்கப்பட்டிருந்தால் (When time is fixed) (பிரிவு 47) :

உறுதியுரையொன்று ஒரு குறிப்பிட்ட நாளில் நிறைவேற்றப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்து, மற்றும் உறுதியுரை ஏற்றவரின் விண்ணப்பத்தின் பேரில் அல்லாமல் உறுதியுரை அளித்தவர் அதனை நிறைவேற்ற பொறுப்பேற்றுக் கொண்டிருப்பின், அவ்வுறுதியுரையை அந்நாளில் வழக்கமான அலுவலக நேரத்தில் எப்பொழுது வேண்டுமானாலும் மற்றும் அவ்வுறுதியுரை எந்த இடத்தில் நிறைவேற்றப்பட வேண்டுமோ அந்த இடத்திலும் அவர் நிறைவேற்றலாம்.

(எ.கா.) A என்பவர் B என்பவரின் பண்டக சாலைக்கு ஜனவரி முதல் தேதியில் சரக்குகள் வழங்குவதாக உறுதியுரைக்கிறார். அந்த நாளில் A அச் சரக்குகளை வழக்கமான அலுவலக நேரத்திற்குப் பின் B–யின் பண்டக சாலைக்கு கொண்டு வருகிறார். எனவே, அவை பெறப்படவில்லை. இங்கு A தன் உறுதியுரையை நிறைவேற்றவில்லை.

3. நிறைவேற்றத்திற்கான விண்ணப்பம் தேவைப்படும் பொழுது (When application for performance is needed) (பிரிவு 48) :

உறுதியுரையொன்று ஒரு குறிப்பிட்ட நாளில் நிறைவேற்றப்பட வேண்டியிருந்து, மற்றும் உறுதியுரை ஏற்றவரின் விண்ணப்பத்தின் பேரில் அவ்வுறுதியுரையை நிறைவேற்றுவதாக உறுதியுரை அளித்தவர் பொறுப்பேற்றுக் கொள்ளாத பொழுது, அதனை உரியதொரு இடத்திலும் மற்றும் வழக்கமான அலுவல் நேரத்திற்குள்ளாகவும் நிறைவேற்ற உறுதியுரை அளித்தவரிடம் விண்ணப்பிக்க வேண்டியது, உறுதியுரை ஏற்றவரின் கடமையாகும். "உரிய காலம் மற்றும் இடம் எது" என்பது ஒவ்வொரு வழக்கிலும் பொருண்மை சார்ந்த ஒரு பிரச்சனையாகும் (question of fact).

நிறைவேற்றத்திற்கான இடம் (Place for Performance of Contract) :

நிறைவேற்றத்திற்காக விண்ணப்பம் செய்யப்பட வேண்டாதவிடத்து மற்றும் நிறைவேற்றத்திற்கான இடம் குறிப்பிடப்படாதவிடத்து உறுதியுரையை நிறைவேற்றுவதற்கான இடம் (Place of performance of promise, where no application to be made and no place fixed for performace) (பிரிவு 49): உறுதியுரை ஏற்றவர் விண்ணப்பிக்காமல் உறுதியுரை நிறைவேற்றப்பட வேண்டியிருந்தாலும், நிறைவேற்றத்திற்கான இடம் குறிப்பிடப்படாவிட்டாலும், அவ்வுறுதியுரையை நிறைவேற்றுவதற்காகவும், அதனை அத்தகு இடத்தில் நிறை வேற்றுவதற்காகவும் ஒரு நியாயமான இடத்தை நிர்ணயிக்கக் கோரி உறுதியுரை ஏற்றவரிடம் விண்ணப்பிக்க வேண்டியது, உறுதியுரை அளித்தவரின் கடமையாகும்.

நிறைவேற்றும் முறை (Manner of Performace) :

நிறைவேற்றத்திற்கான காலம் அல்லது முறையானது உறுதியுரை ஏற்றவர் குறிப்பிட்டவாறு அமைதல் வேண்டும் (Performance in manner or at time prescribed or sanctioned by promisee) (பிரிவு 50) : உறுதியுரை ஏற்றவர் குறிப்பிடும் நேரம் அல்லது நிறைவேற்றும் முறையில் உறுதியுரை எதுவும் நிறைவேற்றப்படலாம்.

(எ.கா.) B என்பவர், A–க்கு ரூ.100/– கடன்பட்டிருக்கிறார். இந்நிலையில் ஒரு நூறு ரூபாய் தாளை, தபாலில் அனுப்பும்படி A என்பவர், B–யைக் கேட்டுக் கொள்கிறார். அத்தாள் அடங்கிய கடிதமொன்றை A–யின் முகவரியிட்டு, B அஞ்சலில் இட்டவுடன், மேற்படி கடன் தீர்ந்து விடுகிறது. இவ்வாறு உறுதியுரை ஏற்றவர் (A) குறிப்பிட்ட முறையில், அவ்வுறுதியுரை நிறைவேற்றப்பட்டுவிட்டது.

காலம், ஒப்பந்தத்தின் ஓர் இன்றியமையாக் கூறு (Time is the essence of contract) (பிரிவு 55) :

சில சமயங்களில் ஒரு ஒப்பந்தத் தரப்பாளர் தன் கடப்பாட்டை உடன்பாட்டில் குறிப்பிடப்பட்ட நாளில், அல்லது காலத்திற்குள் நிறைவேற்றாமல் போகலாம். அத்தருணங் களில், "மறுதரப்பாளர் ஒப்பந்தத்தை நீக்கலாமா?" என்ற வினா எழும். இதற்கான விடை, மற்றொரு வினாவின் விடையைப் பொறுத்து அமையும். அஃதாவது, "காலம் ஒப்பந் தத்தின் அடிப்படைக் கூறாக இருந்ததா?" என்பதே அவ்வினா. இவ்வினாவிற்கு விடை 'ஆம்' என்றால் மறு தரப்பாளர் ஒப்பந்தத்தை நீக்கலாம். 'இல்லை' என்றால் நீக்க முடியாது. பின்னர் கூறிய (இல்லை எனும்) நிகழ்வில் மறுதரப்பாளர் ஒப்பந்த நிறைவேற்றத் தவறுகைக்கான இழப்பீடு மட்டுமே கோர உரிமை படைத்தவர்.

Hind Construction Contractors v. State of Maharashtra[1] – இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, ஆறு ஒன்றின் குறுக்கே கால்வாய்ப் பாலம் (aqueduct) ஒன்றைக் கட்டுவதற்காக ஒப்பந்தக்காரர் (Contractor) ஒருவர் ஒப்பந்தம் செய்து கொண்டார். அதில் அப்பணியை 12 மாதங்களுக்குள் முடித்துத் தருவதாகவும் ஒப்புக் கொண்டார். காலம், அவ்வொப்பந்தத்தின இன்றியமையாக் கூறு என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆனால் ஒப்பபந்தக்காரர், அக்காலத்திற்குள் அப்பணியை முடிக்கவில்லை. எனவே அவருக்கு பணியளித்தவர், அவ்வொப்பந்தத்தை நீக்கிக் (rescind) கொண்டார். இதனால் அவர் செலுத்தியிருந்த காப்பு வைப்பீடும் (security deposit) ஒப்பந்த வரைமுறைகளின்படி பறிமுதல் செய்யப்பட்டது: இந்நிலையில் அவ்வைப்பீட்டுத் தொகையை திரும்பத் தரக்கோரி ஒப்பந்தக்காரர் நீதிமன்றத்தில் வழக்கிட்டார். அதில் மேற்கண்ட ஒப்பந்தத்திற்கு காலம் ஒரு இன்றியமையாக் கூறா எனும் வினா எழுந்தது. அப்பொழுது உச்ச நீதிமன்றம், மேற்படி வினாவிற்கான விடையானது, **ஒப்பந்தத் தரப்பினர்களின் உண்மையான உள்ளக் கிடக்கையைச் சார்ந்துள்ளது (whether time is of the essence of the contract depends upon the real intention of parties)** என்று கூறியது. மேற்படி ஒப்பந்தத்தில் இருந்த பின்வரும் இரண்டு கூறுகளை உச்ச நீதிமன்றம் ஆராய்ந்தது. அவற்றின்படி (1) சில நெருக்கடிகளில், காலத்தை நீட்டித்துக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது; (2) காலதாமதம் ஏற்பட்டால், அதற்கு அபராதம் செலுத்தவும் வகை செய்யப் பட்டுள்ளது. இந்த இரண்டு கூறுகளிலிருந்து, அவ்வொப்பந்ததின் தரப்பினர்கள், காலத்தை ஒரு இன்றியமையாக் கூறாகக் கருதவில்லை என்பது புலனாகிறது என்று கூறி, ஒப்பந்தக்காரர் தனது காப்பு வைப்பீட்டுத் தொகையை திரும்பப் பெற உரிமையுடையவர் என்று தீர்ப்புரைத்தது. எனவே ஒரு ஒப்பந்தத்திற்கு காலம் ஒரு இன்றியமையாக் கூறா என்பது, அவ்வொப்பந்தத் தரப்பினர்களின் உண்மையான உள்ளக்கிடக்கையை (எண்ணத்தைச்) சார்ந்ததாகும்.

1. காலம் ஒப்பந்தத்தின் இன்றியமையாக் கூறாக இருக்கின்ற பொழுது (When time is of the essence of contract) (பிரிவு 55 பத்தி 1):

காலம், இன்றியமையாக் கூறாக உள்ள ஒரு ஒப்பந்தத்தில் உறுதியுரை அளித்தவர் தன் உறுதியுரையை அதில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தில் நிறைவேற்றத் தவறினால், அவ்வொப்பந்தம் உறுதியுரை ஏற்றவரின் விருப்பத்திற்கேற்ப தவிர்தகு நிலையை (voidable) அடைகிறது.

Caltex (India) Ltd. v. Bhagwan Devi[2] – எனும் வழக்கில், ஒரு

1. AIR 1979 SC 720
2. AIR 1969 SC 405

குத்தகையை புதுப்பித்துக் கொள்ள விண்ணப்பம் செய்து கொள்வதற்கென ஒரு காலம் அக்குத்தகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருப்பின், அங்கு அவ்வொப்பந்தத்தின் இன்றியமையாக் கூறாக காலம் உள்ளது என்றும், அவ்வாறு காலம் எதுவும் குறிப்பிடப்படவில்லையெனில், அக்குத்தகையை அதன் காலம் முடிவடைவற்கு முன்பாக ஒரு நியாயமான காலத்திற்குள் அத்தகு புதுப்பிக்கும் விண்ணப்பம் செய்து கொள்ள வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தது.

Rayadurai v. Muttuswami[1] – எனும் வழக்கில், அசையாச் சொத்து விற்பனை குறித்த ஒப்பந்தங்களில் சாதாரணமாக, காலம், ஒப்பந்தத்தின் ஒரு இன்றியமையாக் கூறல்ல என்றே அனுமானிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டது.

2. காலம் ஒப்பந்தத்தின் இன்றியமையாக் கூறாக இல்லாவிட்டால் (When time is not of the essence of contract) (பிரிவு 55 பத்தி 2) :

ஒரு ஒப்பந்தத்தில் காலம் ஒரு இன்றியமையாக் கூறாக கருத வேண்டிய தில்லை என்று அவ்வொப்பந்தத்தின் தரப்பினர்கள் கருதியிருந்தால், உறுதியுரை அளித்தவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அவருடைய பொறுப்பை நிறைவேற்றத் தவறியதன் காரணமாக, அவ்வொப்பந்தம் தவிர்தகு நிலையை அடைந்துவிடாது. ஆனால் அத்தவறுகையினால் உறுதியுரை ஏற்றவருக்கு நட்டம் ஏதும் ஏற்பட்டிருந்தால், அதனை உறுதியுரை அளித்தவரிடமிருந்து பெற அவர் உரிமையுடையவர்.

3. பின் அறிவிப்பு மூலம் காலம் இன்றியமையாக் கூறாக ஆகுதல் (Time becomes the essence of contract by subsequent notice) :

ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் ஒரு அறிவிப்பின் மூலம் காலத்தை அந்த ஒப்பந்தத்தின் ஒரு இன்றியமையாக் கூறாக ஆக்கலாம். அவ்வாறு செய்யும் போது நீண்ட காலம் கெடுவாக கொடுக்கப்பட வேண்டும்.

51. Explain the rules regarding the performance of reciprocal promises. (எதிரெதிரான உறுதியுரைகளை நிறைவேற்றுவது தொடர்பான விதிகளை விளக்குக.)

எதிரெதிரான உறுதியுரைகள் (Reciprocal Promises) :

"ஒன்றுக்கொன்று மறுபயனாக அல்லது மறுபயனின் பகுதியாக அமையும் உறுதியுரைகள் எதிரெதிரான உறுதியுரைகளாகும்"[1] என பிரிவு 2 (f) கூறுகிறது.

1. AIR 1962 Mad. 489
2 "Promises which form the consideration or part of the consideration for ach other are called reciprocal promises" - Section 2(f) of the Indian Contract Act, 1872.

எடுத்துக்காட்டாக, A என்பவர் ஒன்றினைச் செய்யவோ அல்லது செய்யாமலிருக்கவோ உறுதியுரைக்கிறார். இதற்கு மறுபயனாக மற்றொருவர் ஒன்றினைச் செய்யவோ அல்லது செய்யாமலிருக்கவோ உறுதியுரைக்கிறார். இவை "எதிரெதிரான உறுதியுரைகளாகும்" (Reciprocal Promises). இவை, "பரஸ்பர உறுதியுரைகள்" (Mutual Promises) என்றும் அழைக்கப்படுகின்றன.

எதிரெதிரான உறுதியுரைகள் எந்த முறையில், எந்த வரிசையில் நிறைவேற்றப்பட வேண்டுமென ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்டிருந்தால், அந்த முறையில், அந்த வரிசையில் அவை நிறைவேற்றப்பட வேண்டும். அவ்வாறு குறிக்கப்படாவிட்டால், ஒப்பந்தத்தின் தன்மையைப் பொறுத்த வரிசையின்படி நிறைவேற்றப்பட வேண்டும்.

எதிரெதிரான உறுதியுரைகளின் நிறைவேற்றம் பற்றிய விதிகள் (Rules regarding performance of reciprocal promises) :

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 51 முதல் 54 வரையுள்ள பிரிவுகளும், 57–வது பிரிவும் இது குறித்து பின்வருமாறு கூறுகின்றன.

1. எதிரெதிரான உறுதியுரைகளை ஒரே சமயத்தில் நிறைவேற்றல் (Simultaneous performance of reciprocal promises) (பிரிவு 51): ஒரு ஒப்பந்தம் ஒரே சமயத்தில் நிறைவேற்ற வேண்டிய எதிரெதிர் உறுதியுரைகளைக் கொண்டிருந்தால், உறுதியுரை ஏற்பவர் தனது எதிரெதிரான உறுதியுரையை நிறைவேற்றத் தயாராகவும், விருப்பத்துடனும் இருந்தாலொழிய, உறுதியுரை அளிப்பவர் தனது உறுதியுரையை நிறைவேற்றத் தேவையில்லை.

எடுத்துக்காட்டாக, A என்பவர் B–க்கு சரக்கை வழங்க வேண்டும் என்றும், அவ்வாறு வழங்குகையில் B என்பவர் அதற்குரிய தொகையை செலுத்த வேண்டுமென்றும் அவர்கள் இருவரும் ஒப்பந்தம் செய்து கொள்கின்றனர். இங்கு B என்பவர் அச்சரக்குகளை வழங்கப் பெறும் பொழுது, அதற்குரிய தொகையை செலுத்தத் தயாராகவும், விருப்பத்துடனும் இல்லாதுபோனால், A என்பவர் அச்சரக்குகளை வழங்கத் தேவையில்லை. அதுபோல், A என்பவர் அச்சரக்குகளை வழங்குவதற்குத் தயாராகவும் விருப்பத்துடன் இல்லாதுபோனால், B என்பவர் அதற்குரிய தொகையை செலுத்தத் தேவையில்லை.

2. எதிரெதிரான உறுதியுரைகளின் நிறைவேற்றத்தின் வரிசை முறை (Order of performance of reciprocal promises) (பிரிவு 52): எதிரெதிரான உறுதியுரைகள் நிறைவேற்றப்பட வேண்டிய வரிசை, ஒப்பந்தத்தில்

வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டிருந்தால், அவை அதே வரிசையில் நிறை வேற்றப்பட வேண்டும். அவ்வரிசை முறை வெளிப்படையாக குறிப்பிடப்படாவிட்டால், அவ்வொப்பந்த நடவடிக்கையின் தன்மைக்கு தேவைப்படும் அத்தகு வரிசையில் அவை நிறைவேற்றப்பட வேண்டும்.

3. ஒரு நபர், மற்றொரு நபரின் உறுதியுரையை நிறைவேற்றுவதை தடை செய்வதின் விளைவு (Effect of one party preventing another from performing his promise) (பிரிவு 53): ஒரு ஒப்பந்தம் எதிரெதிரான உறுதியுரை களைக் கொண்டிருந்து, ஒப்பந்தத் தரப்பாளரில் ஒருவர், மற்றொருவர் அவரது உறுதியுரையை நிறைவேற்றுவதை தடை செய்தால், அவ்வாறு தடை செய்யப் படுபவரின் விருப்பத்தின் பேரில் அவ்வொப்பந்தம் தவிர்தகு நிலையதாகிறது. ஒப்பந்தம் நிறைவேற்றப்படாததால், அவருக்கு இழப்பு ஏதும் ஏற்பட்டிருந்தால், அதற்கான இழப்பீட்டை மறுதரப்பினரிடமிருந்து பெறும் உரிமை அவருக்குண்டு.

4. முதலில் நிறைவேற்றப்பட வேண்டிய உறுதியுரையின் தவற்றால் ஏற்படும் விளைவு (Effect of default as to promise to be performed first) (பிரிவு 54) : எதிரெதிரான உறுதியுரைகளின் தன்மை, ஒரு உறுதியுரை நிறைவேற்றப்பட்டாலொழிய மற்றொன்றை நிறைவேற்ற முடியாது என்றிருந்தால், முதலில் நிறைவேற்றத் தவறியவர், மற்றவர் அவரது உறுதியுரையை நிறைவேற்றக் கோர முடியாது. இந்நிலையில் ஒப்பந்த நிறைவேற்றமையால் மற்றவருக்கு இழப்பு ஏதும் ஏற்பட்டிருந்தால், அதற்கான இழப்பீட்டை அவருக்குக் கொடுக்க வேண்டும்.

5. சட்ட ரீதியான செயல்களையும், சட்ட முரணான செயல்களையும் செய்வதற்கான எதிரெதிரான உறுதியுரை (Reciprocal promise to do things legal and also other things illegal) (பிரிவு 57) : 'ஒரு ஒப்பந்தத்தின் தரப்பினர்கள், முதலாவதாக, சட்டத்திற்குகந்த சில செயல்களைச் செய்யவும், மற்றும் இரண்டாவதாக, சில சூழ்நிலைகளின் கீழ், சட்டத்திற்கு முரணான வேறு சில செயல்களைச் செய்யவும் எதிரெதிராக உறுதியுரைகள் செய்திருந்தால், உறுதியுரைகளின் முதற் தொகுதி ஒரு 'ஒப்பந்தம்' ஆகும். ஆனால் இரண்டாவது 'இன்னினை' உடன்பாடாகும்'.

முடிவுரை:

இதிலிருந்து ஒரு உறுதியுரைக்கு மற்றொரு உறுதியுரை, எதிரெதிரான உறுதியுரை ஆகிறது என்பதையும், இதனால் ஒப்பந்தம் செய்துக் கொள்ளும் இரு தரப்பினர்களும் ஒருவருக்கொருவர் உறுதியுரை அளிக்கலாம் என்பதும் புலனாகிறது.

52. State the principles governing the appropriation of payments when a debtor owes several debts to the same creditor. (கடனாளி ஒருவர் ஒரே கடனாளருக்கு பல்வேறு கடன்கள் பட்டிருக்கும்போது, செலுத்தும் பணத்தை எந்த கடனுக்கு எதிராக ஒதுக்கி வைத்தல் கூடும் என்பது பற்றிய விதிமுறைகளைக் கூறுக.)

(அல்லது)

Briefly summarise the provisions relating to appropriation of payments. (செல் ஒதுக்கல் தொடர்பான விதிகளை சுருக்கமாக கூறு.)

முன்னுரை:

ஒரு கடனாளி ஒரு நபருக்கு பல்வேறுபட்ட தனித்தனியான கடன்களைக் (several distinct debts) கொண்டவராக இருந்தால், எல்லாக் கடன்களையும் அடைக்க முடியாத பொழுது, ஒரு தொகையைச் செலுத்தினால் எந்தக் கடனுக்கு அந்தத் தொகை ஒதுக்கப்பட வேண்டும் அல்லது வரவு செய்யப்பட வேண்டும் என்ற வினாவுக்கு இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **59** முதல் **61** வரையுள்ள பிரிவுகள் விடை பகர்கின்றன.

தொகை ஒதுக்கல் (அல்லது) தொகையைப் பயன்படுத்தல் தொடர்பான விதிகள் (Rules regarding Appropriation of Payments (or) Application of Payments):

1. கடனாளி தனது கடனைத் தீர்க்க வேண்டிய விதத்தை சுட்டிக்காட்டியிருக்கும் பொழுது, தொகையைப் பயன்படுத்தல் (Application of payment where **debt to be discharged is indicated by debtor) (பிரிவு 59) :**

ஒரு நபருக்கு பல்வேறுபட்ட தனித்தனியான கடன்களைக் கொண்ட கடனாளி ஒருவர், தான் செலுத்தும் ஒரு தொகையை குறிப்பிட்ட ஒரு கடனைத் தீர்ப்பதற்காக பயன்படுத்த வேண்டும் என்று வெளிப்படையாக அறிவித்திருந்தால், அல்லது அவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டும் சூழ் நிலைகளின் கீழ், அச்செலுத்தல், கடனீந்தவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டால், அவ்வாறே பயன்படுத்தப்பட (ஒதுக்கப்பட) வேண்டும்.

எடுத்துக்காட்டாக, A என்பவர் B என்பவரிமிருந்து வாங்கியிருந்த பல கடன்களில், ஒரு கடன் கடனுறுதிச் சீட்டின் அடிப்படையில் பெறப்பட்டது. அதன் தொகை ரூ.1,000/– ஆகும். அக்கடனுறுதிச் சீட்டு, ஜூன் 1–ஆம் தேதியன்று செலுத்தப்படக் கூடியதாகிறது. ஜூன் 1–ஆம் தேதியன்று A என்பவர் ரூ.1,000/–

த்தைச் B–க்குச் செலுத்துகிறார். இத்தொகை, அக்கடனுறுதிச் சீட்டின் பேரிலான கடனைத் தீர்ப்பதற்காக பயன்படுத்தப்பட வேண்டும். [இங்கு எக்கடனுக்காக அத் தொகையைப் பயன்படுத்த (ஒதுக்க) வேண்டும் என்பதை சூழ்நிலைகள் சுட்டிக் காட்டுகின்றன.]

2. கடனாளி தனது கடனைத் தீர்க்க வேண்டிய விதத்தை சுட்டிக்காட்டாத பொழுது, தொகையைப் பயன்படுத்தல் (Application of payment where debt to be discharged is not indicated by debtor) (பிரிவு 60) :

கடனாளி ஒருவர், தான் செலுத்தும் ஒரு தொகையை குறிப்பிட்ட ஒரு கடனைத் தீர்ப்பதற்காக பயன்படுத்த வேண்டும் என்பதை அறிவிக்காமல் விட்டிருந்தாலும் மற்றும் அதைச் சுட்டிக்காட்டக் கூடிய வேறு சூழ்நிலைகள் அங்கு இல்லையென்றாலும், கடனாளியிடமிருந்து தனக்குச் செலுத்தப்படத் தக்கதாக உள்ளதும், உள்ளபடியாக பாக்கி நிற்கக் கூடியதுமான ஏதேனும் ஒரு சட்டப்படியான கடனைத் தீர்ப்பதற்காக, அத்தொகையை, கடனீந்தவர் தன்னுடைய விருப்புரிமைக் கிணங்க பயன்படுத்தலாம். அக்கடனை வசூலிப்பதற்காக வழக்கிடும் உரிமை, காலவரையறைச் சட்டத்தால் தடுக்கப்பட்டுள்ளதா அல்லது தடுக்கப்படவில்லையா என்பது இங்கு ஒரு பொருட்டல்ல.

Krishnaswamy Iyer v. Natesa Iyer[1] – இவ்வழக்கில் 59–வது பிரிவின் வழியாக அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அனுகூலத்தை கடனாளி ஒருவர் பயன்படுத்திக் கொள்ளவில்லையானால், மேற்படி பிரிவு 60–ன் கீழ் வழங்கப் பட்டுள்ள விருப்புரிமை அதிகாரத்தின் அனுகூலத்தை கடனீந்தவர் பயன்படுத்தி, அக்கடனாளியால் தனக்குச் செலுத்தப்படக் கூடியதாக உள்ள சட்டப்படியான கடன் எதனையும் தீர்ப்பதற்காக, அக்கடன் காலம் கடந்த ஒன்றாக இருப்பினும், கடனாளி செலுத்தும் தொகையைப் பயன்படுத்தலாம் என்று கூறப்பட்டது.

Malli Muktar v. Mt. Bibi Rahimunnisa[2] – எனும் வழக்கில், மேற்படி பிரிவுகளில், கடனாளி செலுத்தும் தொகையை வட்டிக்கு வரவு வைத்தல் குறித்து எதுவும் வெளிப்படையாகக் கூறப்படாவிட்டாலும், அப்பிரிவுகளின் வழியாக விளக்கப்பட்டுள்ள கொள்கை வட்டிக்கும் பொருந்தும், என்று கூறப்பட்டது.

Megaraj v. Mst. Bayabai[3] – எனும் வழக்கில் அசலும் வட்டியும் பாக்கி நிற்கும் கடன்களில், கடனாளி செலுத்தும் தொகையை முதலில் வட்டிக்கும், அதுபோக மீதியிருக்கும் தொகையை அசலுக்கும் ஒதுக்க வேண்டும் எனப்பட்டது.

1. AIR 1930 Mad. 594
2. (1922) Pat. 369
3. AIR 1970 SC 161

3. கடனாளியும், கடனீந்தவரும் ஒதுக்கல் செய்யாதவிடத்து, தொகையைப் பயன்படுத்தல் (Application of payment where neither party appropriates) (பிரிவு 61) :

செலுத்தப்பட்டுள்ள தொகையை எக்கடனைத் தீர்ப்பதற்காக பயன் படுத்துவது என்பது குறித்து கடனாளி சுட்டிக்காட்டாமல் இருந்தாலும், அவ்வாறே கடனீந்தவர் அதனை எக்கடனுக்காகவும் ஒதுக்கிக் கொள்ளவில்லையென்றாலும், கடன்களின் கால வரிசைப்படி (in order of time) அவற்றைத் தீர்ப்பதற்காக பயன் படுத்தப்பட வேண்டும். அக்கடன்கள் சமகாலத்தில் எழுந்தவையாக இருப்பின், அவை ஒவ்வொன்றையும் விகிதாச்சாரமாக தீர்ப்பதற்கு பயன்படுத்தப்பட வேண்டும்.

கிளோட்டோன் வழக்கு விதி (Rule in Clayton's Case)

கிளோட்டோன் வழக்கு என்று சுருக்கமாக அழைக்கப்படும் **Deveynes v. Noble**[1] எனும் வழக்கில், ஒரு வங்கியில் பல்வேறு கடன்களை உடைய கடனாளி ஒருவர் செலுத்தும் தொகையை, வங்கியர் எக்கடனுக்காக வரவு வைப்பது (அல்லது ஒதுக்குவது) என்பது குறித்த விதிமுறைகளை சர் வில்லியம் கிராண்ட் எனும் நீதிபதி வகுத்துரைத்தார். அவ்விதிமுறைகளே, மேற்கண்ட 59 முதல் 61 வரையிலான பிரிவுகளில் பிரதிபலிக்கின்றன என்று சொன்னால் அது மிகையல்ல.

அவற்றின்படி, பொதுவாக கடனாளி ஒருவர் தான் செலுத்தும் தொகையை எக்கடனுக்காக வங்கியர் ஒதுக்கிக் கொள்ள வேண்டும் என்பதை வங்கியருக்கு தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கத் தவறினால், வங்கியர் அவருடைய விருப்புரிமைக்கிணங்க (at his discretion), எந்தக் கணக்கிலும் ஒதுக்கிவிடலாம்.

மேலும் வங்கியரிடம் செலுத்தப்படும் பணத்தை, வங்கியர் எவ்வாறு வாடிக்கையாளர்களின் கணக்கிற்கு ஒதுக்கீடு செய்வது என்பது குறித்த பொது விதி ஒன்றும் மேற்படி வழக்கில் வகுக்கப்பட்டது. அதன்படி, ஒரு நடப்புக் கணக்கில் (Current Account), முதலில் செலுத்தப்படும் தொகை, முதலில் எடுக்கப்படும் தொகையாக அனுமானிக்கப்படும் (it is presumed that the sum first paid is the sum first drawn out). பற்றுப் பக்கத்தில் உள்ள முதல் தொகையானது, வரவுப் பக்கத்தில் உள்ள முதல் தொகையால் குறைக்கப்படுகிறது. எனவே வரவுப் பக்கத்தில் உள்ள பதிவுகள் பற்றுப் பக்கத்தில் உள்ள பதிவுகளை கால வரிசைக்கிரமப்படி சரிக்கட்டிக் கொள்கிறது. அதாவது ஒரு கணக்கின் வரவுப் பக்கத்தில் உள்ள தொகையினங்கள் தேதிவாரியாக பற்றுப் பக்கம் உள்ள தொகையினங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். இவையே கிளேட்டன் வழக்கின் விதிகள் ஆகும்.

1. (1816) I Mer. 529, 572

53. Assignment of Contract - Write short notes. (ஒப்பந்தங்களை மீளா மாற்றுரிமை அளித்தல் – சிறு குறிப்பு எழுதுக.)

ஒப்பந்தம் சார்ந்த உரிமைகளையும், பொறுப்புகளையும் மூன்றாம் நபர் ஒருவருக்கு மாற்றிக் கொடுத்தால், அது 'மீளா மாற்றுரிமை அளித்தல்' (Assignment) எனப்படும். இந்திய ஒப்பந்தச் சட்டத்தில் இதற்கென்று தனியே சட்டப் பிரிவுகள் இல்லையென்றாலும், இதை பின்வருமாறு விளக்கிக் கூறலாம். மீளா மாற்றுரிமையானது 1. சட்டச் செயற்பாட்டினாலும் (Operation of Law) 2. தரப்பாளர்களின் செய்கையாலும் (Act of parties) நிகழலாம்.

1. சட்டச் செயல்பாட்டினால் நிகழும் மீளா மாற்றுரிமை :

(a) மரணம்: ஒப்பந்தத்தின் தரப்பாளர் ஒருவர் இறந்துவிட்டால் ஒப்பந்தத்திலுள்ள அவருடைய உரிமைகளும், பொறுப்புகளும் அவருடைய வாரிசுகளுக்கும் மற்றும் சட்டப்படியான பின்னுரிமையாளர்களுக்கும் மரபுரிமைப்படி வந்தடையும். தனித்திறமை, சேவை சார்ந்த ஒப்பந்தங்களுக்கு இது பொருந்தாது.

(b) நொடிப்புநிலை : ஒப்பந்தத் தரப்பாளர் ஒருவர் நொடிப்புநிலை எய்தி விட்டால், அவர் நொடிந்தவர் (Insolvent) எனத் தீர்மானிக்கப்படு முன்னர் பெற்ற உரிமைகளும் பொறுப்புகளும் சொத்தாட்சி அலுவலருக்கு (Official Receiver or Assignee) மாறும்.

2. தரப்பாளரின் செய்கையால் :

ஒப்பந்தக் கடப்பாடுகளை மீளா மாற்றுரிமையளித்தல் : (i) தனித் திறமை (Personal skill) சார்ந்த ஒப்பந்தக் கடப்பாட்டை மீளா மாற்றுரிமை செய்ய முடியாது (பிரிவு 40). உதாரணமாக பாட்டிசைக்க, படம் வரைய, நடிக்க, திருமணம் புரிய ஆகியவை தனித்திறமை வாய்ந்த ஒப்பந்தக் கடப்பாடுகளாகும்.

(ii) உறுதியுரை அளித்தவர், ஒப்பந்தக் கடப்பாடுகளை அல்லது பொறுப்புகளை மீளா மாற்றுரிமை அளிக்க முடியாது.

ஒப்பந்த உரிமைகளை மீளா மாற்றுரிமையளித்தல் : (i) ஒரு ஒப்பந்தத்தின் மூலமாக கிடைக்கும் உரிமைகளையும், ஆதாயங்களையும் மீளா மாற்றுரிமை அளிக்கலாம் (தனித்திறமை சார்ந்த உரிமைகளை மாற்றுரிமை அளிக்க முடியாது).

(ii) வழக்காடத் தக்க உரிமைக் கோரிக்கையை எத்தருணத்திலும் மீளா மாற்றுரிமை அளிக்கலாம். பிணக்கடன், நிறுவனத்தின் பங்குகள் போன்றவற்றை எவ்வித தடையும் இன்றி மாற்றுரிமை செய்யலாம்.

14

ஒப்பந்த விடுவிப்பு
[Discharge of Contract]

54. Examine the various ways in which a contract may be discharged. (ஒரு ஒப்பந்தம் விடுவிப்பு செய்யப்படக் கூடிய பல்வேறு வழிகளை விளக்குக.)

(அல்லது)

Discuss the different methods by which a contract is validly discharged. (ஒரு ஒப்பந்தம் செல்லத்தக்க விதத்தில் விடுப்பு செய்யப்படக் கூடிய பல்வேறு முறைகளை விவாதி.)

(அல்லது)

Discuss the various methods by which a contract is discharged. (ஒப்பந்தம் எந்த எந்த வகைகளில் விடுபடுகிறது என்பதை விரிவாக விவாதிக்கவும்)

(அல்லது)

What are the different methods by which a contract comes to an end ? (ஒரு ஒப்பந்தம் முடிவுக்கு வரக்கூடிய பல்வேறு முறைகள் யாவை ?)

(அல்லது)

State and explain the circumstances in which a contract is discharged by Impossibility of Performance. Give leading cases. (எவ்விதச் சூழ்நிலைகளில் நிறைவேற்ற இயலாமையினால் ஒரு ஒப்பந்தம் விடுவிக்கப்படுகிறது என்பதைக் கூறி விளக்குக. முக்கிய வழக்குகளைத் தருக.)

(அல்லது)

"Impossibility of Performance is, as a rule not an excuse for non performance of a contract." Discuss. ("நிறைவேற்ற இயலாமை என்பது, ஒப்பந்தத்தை நிறைவேற்றாமைக்கு ஒரு சமாதானமாகாது என்பது ஒரு விதியாகும்". விவாதிக்க.)

(அல்லது)

'Impossibility of Performance of contract is not an excuse for non performance of a contract; but is intended to meet certain situations arising beyond the control of parties' Explain this statement and point out the limitations available to this doctrine. ('ஒப்பந்த நிறைவேற்றயியலாமை என்பது ஒப்பந்தத்தை நிறைவேற்றம் காண முடியாமல் இருக்கும் போது மன்னித்து விடுவதற்காக ஏற்படுத்தப்பட்ட கோட்பாடன்று. ஆனால் அக்கோட்பாடானது தரப்பினர்களுக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் ஏற்படும் நிகழ்வினைக் குறிப்பிடுவதாகும்'. இக்கூற்றினை அதற்குரிய வரையறைகளுடன் விளக்குக.)

(அல்லது)

What are the cases in which the performance of a contract becomes impossible ? Explain the effect of war on contracts. (ஒப்பந்தமொன்றின் நிறைவேற்றம் இயலாமல் போகக் கூடிய நேர்வுகள் யாவை? ஒப்பந்தங்களின் பேரில் போரால் ஏற்படும் விளைவை விவாதிக்க.)

(அல்லது)

Discharge by performance - Write short notes. (நிறைவேற்றம் மூலம் முடிவுறுதல் – சிறு குறிப்பு எழுதுக.)

ஒப்பந்த விடுவிப்பு (Discharge of contract) - விளக்கம் :

ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திய உரிமைகளும், பொறுப்புகளும் முடிவுக்கு வந்துவிட்டால், அவ்வொப்பந்தம் விடுவிக்கப்பட்டது என்று பொருளாகும். இத்தகு ஒப்பந்த விடுவிப்பு பல்வேறு முறைகளில் நடைபெறலாம். அவை வருமாறு :

ஒப்பந்த விடுவிப்பு முறைகள் (Methods or Modes of Discharge of Contract) :

(a) ஒப்பந்த நிறைவேற்றத்தின் மூலம் அல்லது நிறைவேற்ற அளிப்பு முனைவு மூலம்; (b) நிறைவேற்ற இயலாமை மூலம்; (c) புதிய உடன்பாடு அல்லது இசைவு மூலம்; (d) ஒப்பந்த மீறுகை மூலம். இவை தவிர பின்வரும் மற்ற முறைகளிலும் ஒப்பந்த விடுவிப்பு நடைபெறுகிறது. அவை, (e) சட்டச் செயல் பாட்டால் (Operation of law); (f) கருநிலைத்திருத்தத்தால் (Material alteration); (g) காலக் கடப்பினால் (Lapse of Time). இவை ஒவ்வொன்றையும் பின்வருமாறு சற்று விரிவாகக் காண்போமா?

(a) ஒப்பந்த நிறைவேற்றத்தின் மூலம் அல்லது நிறைவேற்ற அளிப்பு முனைவு மூலம் (Discharge by Performance of Contract or Tender of Performance) (பிரிவுகள் 37 & 38) :

செய்து கொண்ட ஒப்பந்தத்தினை நிறைவேற்றுவது, ஒரு வழக்கமான மற்றும் இயல்பான ஒப்பந்த விடுவிப்பு முறையாகும். ஒப்பந்தத்தின் தரப்பாளர் தனது கடப்பாட்டை நிறைவேற்றினால், அவ்வொப்பந்தம் முடிவுக்கு வருகிறது. உறுதியுரைத்தபடி, எந்த முறையிலும், எந்தக் காலத்திலும் நிறைவேற்றம் செய்யலாம் அல்லது அவ்வொப்பந்தத்தை நிறைவேற்ற முனைய வேண்டும். இது 'நிறைவேற்ற அளிப்பு முனைவு' (Tender of Performance) எனப்படுகிறது. இதன் மூலமும் ஒப்பந்தம் விடுவிப்படைகிறது. (இது குறித்து நாம் சென்ற அத்தியாயத்தில் மிக விரிவாகக் கண்டுள்ளோம். எனவே அங்குள்ள விபரங்களைப் படித்தறிக.)

(b) நிறைவேற்ற இயலாமையின் மூலம் (Discharge by Impossibility of Performance) (பிரிவு 56) :

ஒரு ஒப்பந்தம் நிறைவேற்றத்தக்கதாக இருக்க வேண்டும். நிறைவேற்ற இயலாததாக இருந்தால், அது இல்லாநிலையடையும் (Void), என்று **பிரிவு 56–ன்** கீழான முதற் பத்தி குறிப்பிடுகிறது. இது பின்வரும் இரண்டு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். அஃதாவது, (i) சட்டம் இயலாதவற்றை ஏற்பதில்லை (Law does not recognise impossibility); (ii) இயலாத செயல் கடப்பாட்டை உருவாக்குவதில்லை (An impossible act does not create any obligation). ஆகவே, ஒரு ஒப்பந்தத்தின் நிறைவேற்ற இயலாமையானது, அவ்வொப்பந்தத் தரப்பாளர்களுக்கு விடுவிப்பு அளிக்கிறது. இயலாமையை பின்வரும் இரண்டு தலைப்புகளின் கீழ் காணலாம்.

1. "An agreement to do an act impossible in itself is void" - **First paragraph of Section 56 of the Indian Contract Act, 1872.**

1. தொடக்கத்திலிருந்த இயலாமை (Initial Impossibility) :

ஒப்பந்தம் உருவாக்கப்படும் காலத்திலேயே ஏற்பட்டிருந்த இயலாமை, தொடக்கத்திலிருந்த இயலாமை எனப்படும். இதனை ஒப்பந்தத்திற்கு முந்திய இயலாமை (Pre-contractual impossibility) எனவும் கூறலாம். இயலாமை பற்றிய உண்மை, தரப்பாளர்கள் அறிந்ததாகவும் இருக்கலாம் ; அறியாததாகவும் இருக்கலாம்.

(அ) தரப்பாளர் அறிந்த இயலாமை : இதை 'முழுமையான இயலாமை' (absolute impossibility) என்பர். இது ஒரு ஒப்பந்தத்தை அடிமுதலே இல்லா நிலையதாக்குகிறது (Void abinitio).

(ஆ) தரப்பாளர்கள் அறியாத இயலாமை : ஒப்பந்தம் உருவாகிய காலத்தில் இரு தரப்பாளருக்கும் ஒப்பந்தக் கருப்பொருளின் அழிவு தெரியா மலிருந்தது போலவே, ஒப்பந்தம் பரிமாற்றமான தவறால் ஏற்பட்டதாகக் கொண்டு இல்லாநிலையடையும். ஆனால் ஒரு தரப்பாளர் மட்டும் ஒப்பந்தம் ஏற்படும் போது ஒப்பந்த நிறைவேற்ற இயலாமையைப்பற்றி அறிந்திருந்தால், அவர் உறுதியுரை ஏற்றவருக்கு, ஒப்பந்தம் நிறைவேற்றப்படாமல் போனதால் ஏற்பட்ட இழப்பை நிறையீடு செய்ய வேண்டும் **(பிரிவு 56–ன் கீழான மூன்றாம் பத்தி).**

2. ஒப்பந்தம் உருவாகிய பின்னர் தோன்றிய இயலாமை (அல்லது) இடையிட்டு நிகழ்வுறு இயலாமை (Impossibility arising subsequent to the formation of contract or Supervening impossibility) :

ஒப்பந்தம் உருவாகியபோது, அது நிறைவேற்ற இயலும் தன்மையுடையதாக இருந்து, அதன் பின்னர் இயலாமை தோன்றினால், அது ஒப்பந்தத்திற்கு பிந்திய இயலாமை (Post-contractual impossibility) எனப்படும். இதனையே **'இடையிட்டு நிகழ்வுறு இயலாமை' (Supervening impossibility)** என்றும் கூறுவர். இவ்வித இயலாமையால், ஒரு ஒப்பந்தம் இல்லாநிலையடையும் **(பிரிவு 56 –ன் கீழான இரண்டாம் பத்தி).**

ஒப்பந்தம் நிறைவேற்ற இயலாமைக்கு, ஒப்பந்தம் நிறைவேறாதது ஒரு **மன்னிப்பாக அல்லது சமாதானமாக (excuse)** எடுத்துக் கொள்ளப்படமாட்டாது, என்பது பொதுவிதி. ஆனால், மேற்படி இயலாமையானது ஒப்பந்தத் தரப்பினர் களின் சக்திக்கு மீறிய நிகழ்ச்சிகளும், எதிர்பாராத சம்பவங்களும் ஏற்பட்டு உண்டானால் ஒப்பந்த தரப்பினர்கள், தங்கள் உறுதியுரைகளை மேற்கொண்டு நிறைவேற்றுவதிலிருந்து விடுவிக்கப்படுவார்கள். (விதிவிலக்கு).

(எ.கா.) A-யும், B-யும் மணம் புரிய ஒப்பந்தம் கொண்டனர். மணமாவதற்கு முன் A பித்துநிலை அடைகிறார். இவ்வொப்பந்தம் இல்லாநிலையடையும்.

இடையிட்டு நிழ்வுறு இயலாமையால் ஒப்பந்த விடுவிப்பு (Discharge by supervening impossibility):

இடையிட்டு நிகழ்வுறு இயலாமையானது ஒப்பந்தத் தரப்பினர்களின் சக்திக்கு மீறிய நிகழ்ச்சியால் ஏற்பட்டதாக இருப்பின், அவ்வொப்பந்தத் தரப்பினர்கள், ஒப்பந்த நிறைவேற்றத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள் என மேலே கண்டோம். அத்தகு சூழ்நிலைகள் (நிகழ்ச்சிகள்) எவை என்பதை இங்கு காண வேண்டியது அவசியமாகும். அவை வருமாறு.

(அ) ஒப்பந்தக் கருப்பொருள் அழிவு (Destruction of subject matter of Contract) : ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னர் ஒப்பந்தத் தரப்பினர்களின் தவற்றால் அன்றி, அவ்வொப்பந்தத்தின் கருப்பொருள் அழிந்துபட்டால், ஒப்பந்தம் விடுவிப்பு பெறும். முக்கிய வழக்கு வருமாறு.

Taylor v. Caldwell[1] – இவ்வழக்கில், ஒப்பந்தத்தின் கருப்பொருள் ஒரு இசையரங்கு ஆகும். அதனை C என்பவர் T என்பவருக்கு, சில குறிப்பிட்ட நாட்களுக்கு இசை நிகழ்ச்சி நடத்த வாடகைக்கு விட்டார். ஆனால் அது, இசை நிகழ்ச்சியின் முதல் நாளுக்கு முன்னர் தீ விபத்தால் அழிந்தது. எனவே T என்பவர் ஒப்பந்த மீறுகைக்காக இழப்பீடு கோரி C மீது வழக்கிட்டார். ஆனால் மேற்கண்ட தீ விபத்தால் ஒப்பந்தத்தின் கருப்பொருள் அழிந்துவிட்டது; எனவே இடையிட்டு நிகழ்வுறு இயலாமையால், அவ்வொப்பந்தம் விடுவிப்படைகிறது என்று C எதிர் வாதம் புரிந்தார். இந்த எதிர்வாதத்தை நீதிப்பெருமகனார் பிளாக்பர்ன் அவர்கள் கருத்தில் கொண்டு, அவ்வொப்பந்தம் இல்லாநிலை (Void) அடைந்ததாகக் கூறி, T–யின் வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார்.

(ஆ) ஒப்பந்தத் தரப்பாளர்கள் இறந்து விடுதல் அல்லது தனிச் சேவை புரியும் தகுதியை இழந்துவிடல் (Death or incapacity of parties for personal service) : ஒப்பந்த நிறைவேற்றமானது, தரப்பாளரின் தனித்திறமை, தகுதி முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தால், அவர் இறந்தவுடன் அல்லது உடல் நலம் குன்றியவுடன் ஒப்பந்தம் விடுவிப்பு பெறுகிறது. ஏனெனில் இறப்பும் இயலாமையும், கடவுள் செயலாகும் (Act of God or Vis Major). ஒப்பந்த நிறைவேற்றத்திற்கு மனிதனின் வாழ்வு, ஒரு உட்கிடை நிபந்தனையாகும் (Implied Condition). முக்கிய வழக்கு வருமாறு.

Robinson v. Davison[2] – இவ்வழக்கில் ஒரு இசைக்கலைஞர், குறிப்பிட்ட தினத்தில் இசை நிகழ்ச்சி நடந்த உறுதியுரைத்தார். அந்த இசை

1. (1863) 122 ER 309 : (1863) 3 B & S 826
2. (1871) 90 KJ Ex 172 : (1871) LR 6 Ex 269

நிகழ்ச்சியில் பங்கேற்கும் முன்னர், அவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டது எனவே அவரால் இசை நிகழ்ச்சியை நடத்த இயலவில்லை. எனவே ஒப்பந்தம் நிலை குலைந்துபோனது என்றும், இடையிட்டு நிகழ்வுறு இயலாமையினால், அவர் ஒப்பந்தத்திலிருந்து விடுவிப்படைந்தார் என்றும், அவரிடமிருந்து ஒப்பந்த மீறுகைக்காக இழப்பீடு எதையும் பெறவியலாது என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(இ) சட்டமாற்றம் (Change of Law): ஒப்பந்தம் உருவாகும் பொழுது அது சட்டத்திற்கு முரண்பாடானதாக இருந்தால், அவ்வொப்பந்தம் இல்லா நிலையடையும். ஆனால் ஒரு ஒப்பந்தம் உருவாகும் காலத்தில், சட்டத்திற்குட்பட்ட தாக இருந்து, பின்னர் சட்ட மாற்றத்தினால், சட்ட முரணானதானால் அது விடுவிப் படையும். அதன் தரப்பினர்களும் ஒப்பந்தத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள்.

Baily v. De Crespigny[1] – எனும் வழக்கில், D என்பவர் தன் நிலத்தை B என்பவருக்கு, அந்நிலத்தில் கட்டிடங்கள் எதையும் கட்டக் கூடாது எனும் நிபந்தனையுடன் விற்றார். ஆனால், அதன் பின்னர், பாராளுமன்றத்தால் இயற்றப் பட்ட ஒரு சட்டத்தால், அந்நிலமானது புகைவண்டி நிறுவனத்தால் B-யிடமிருந்து அரசுடைமையாக்கப்பட்டு, கட்டிடங்கள் எழுப்பப்பட்டன. எனவே D என்பவர், B-யின் மீது வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கில், சட்ட மாற்றத்தினால், மேற்படியாரகளின் விற்பனை ஒப்பந்தமானது நிறைவேற்ற முடியாததாகிவிட்டதால், மேற்படி B ஒப்பந்தப் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறார் எனத் தீர்ப்பானது.

Reilly v. The King[2] – இவ்வழக்கில் R என்பவர், 1928–ஆம் ஆண்டில் கூட்டாட்சி மேல்முறையீட்டு வாரியத்தின் (Federal Appeal Board) உறுப்பினராக அய்ந்தாண்டு காலத்திற்கு அரசால் நியமனம் செய்யப்பட்டார். ஆனால் அவ்வுறுப்பினர் பதவி, சட்டம் ஒன்றினால் இரத்து செய்யப்பட்டு, மேற்படி R அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டார். இதை எதிர்த்து R வழக்கிட்டார். ஆனால் சட்ட மாற்றம் ஏற்பட்டதினால் ஒப்பந்தம் விடுவிப்படைகிறது என்றும், எனவே, அவரை நியமனம் செய்த அரசும் ஒப்பந்தப் பொறுப்பிலிருந்து விடுவிப்படைகிறது என்றும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

(ஈ) போர்ப் பிரகடனம் (Declaration of War): ஒரு நாட்டிற்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்யும் நாடு, பகை நாடு. எனவே அந்நாட்டுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம் சட்டத்திற்கு முரணானதாகும். எனவே இதனை நிறைவேற்ற இயலாது. எனினும் அத்தகு போர் பிரகடனத்திற்கு முன்பு செய்து கொண்ட ஒப்பந்தத்தை நிறுத்தி வைக்க வேண்டும். போர் தொடர்ந்து நடந்தால் ஒப்பந்தம் இல்லாநிலையடைகிறது. அதாவது விடுவிப்படைகிறது.

1. (1869) 4 Q.B. 180
2. (1934) A.C. 176 (180)

(உ) ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான முக்கிய அம்சம் இல்லாமல் போய்விடுவது அல்லது ஏற்படாமலிருப்பது (Non existence or Non-occurance of a particular state of thing): ஒரு ஒப்பந்தத்திற்குத் தேவையான சில அம்சங்கள் தொடர்ந்து நீடித்திருக்கும் எனும் அடிப்படையில் ஒப்பந்தம் ஏற்படுகிறது. ஆனால் அந்த அம்சங்கள் தொடர்ந்து இல்லாமல் போனால் அல்லது மாறினால் ஒப்பந்தம் விடுவிக்கப்பட்டதாகும். ஒரு பிரபல வழக்கு வருமாறு.

Krell v. Henry[1] – இது 'முடிசூடல் விழா வழக்கு' (Coronation Case) எனச் சிறப்பாக அழைக்கப்படுகிறது. இவ்வழக்கில் ஏழாம் எட்வர்ட் அரசரின் முடிசூடல் ஊர்வலத்தைக் காண 1902–ம் ஆண்டு ஜூன் 26, 27 தேதிகளுக்கு K என்பவரின் மாடித் தளம் (Flat) ஒன்றை H என்பவர் வாடகைக்கு எடுத்திருந்தார். ஆனால் அரசரின் திடீர் உடல் நலக் குறைவினால் ஊர்வலம் கைவிடப்பட்டது. எனவே H என்பவர் வாடகைப் பணம் தர வேண்டியதில்லை. ஏனெனில் ஒப்பந்தம், ஊர்வலம் நிகழும் என்பதன் அடிப்படையில்தான் எழுந்தது. ஆனால், இறுதியில் ஊர்வலம் இல்லையென்றாகிவிட்டது. ஆகவே ஒப்பந்தம் விடுவிப்படைகிறது.

மேற்கண்ட இடையிட்டு நிகழ்வுறு இயலாமையானது 'ஒப்பந்த நிலை குலைவு' (Doctrine of Frustration) என ஆங்கிலச் சட்டத்தில் அழைக்கப் படுகிறது. (அடுத்த வினாவில் விரிவாகக் காண உள்ளோம்.)

'இடையிட்டு நிகழ்வுறு இயலாமை' மன்னிக்கக் கூடியதாக அல்லது சமாதானமாக எடுத்துக் கொள்ளப்படாத சூழ்நிலைகள் (The circumstance in which the impossibility of performance is not excused) :

பின்வரும் சூழ்நிலைகளில் இடையிட்டு நிகழ்வுறு இயலாமையின் அடிப்படையில் ஒரு ஒப்பந்தம் விடுவிப்படைவதில்லை.

1. நிறைவேற்றத்தின் கடினத் தன்மை (Difficulty of Performance): ஒரு ஒப்பந்தம், அதன் நிறைவேற்றம் உருவாகிய காலத்திலிருந்ததை விடக் கடினமானதாக, அதிகம் செலவேற்படுத்தக் கூடியதாக, குறைந்த ஆதாயத்தை தரக் கூடியதாக ஆகிவிட்ட காரணத்திற்காகவே, விடுவிப்பு பெற்றிடாது.

2. வணிகஞ்சார்ந்த இயலாமை (Commercial impossibility) : 'வணிகஞ்சார்ந்த இயலாமையால்' ஒப்பந்த நிறைவேற்றக் கடமையிலிருந்து தப்ப முடியாது. மூலப் பொருள்களின் விலையேற்றம், கூலி, ஊதியம் முதலியவை அதிகமாதல், எதிர்பார்த்ததை விட ஆதாயம் குறைவு முதலிய வணிகஞ்சார்ந்த காரணங்கள் ஒரு ஒப்பந்தத்தை விடுவிப்பு செய்துவிடாது.

1. (1903) 2 KB 740

3. உறுதியுரை வழங்கியவர் நம்பியிருந்த மூன்றாம் நபரின் தவறுகையால் ஏற்பட்ட இயலாமை : உறுதியுரை அளித்தவர், மூன்றாம் நபர் ஒருவரின் செய்கையை நம்பி உறுதியுரை அளித்திருக்கலாம். அந்த மூன்றாம் நபர் தன் பணியைச் செய்து முடிக்காமல் போனால் உறுதியுரை அளித்தவர் அந்த ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாமற் போகலாம். ஆனால், இதன் பொருட்டு அவர் ஒப்பந்தத்தினின்றும் விடுவிப்பு பெறமாட்டார்.

4. வேலை நிறுத்தம், கதவடைப்பு, கலகம், சமூகச் சண்டைகள் முதலியவை : ஒப்பந்தத்தில் மேற்கண்ட காரணங்களுக்கென விலக்கு வாசகங்கள் கூறப்பட்டிருந்தாலொழிய, அவைகளால் ஒரு ஒப்பந்தம் முடிவுக்கு வராது.

5. நோக்கங்களில் ஒன்றின் தவறுகை : பல நோக்கங்களைக் கொண்ட ஒப்பந்தத்தில், ஒரு நோக்கம் நிறைவேற்ற இயலாமற் போனால், ஒப்பந்தம் முழுமையும் விடுவிப்புப் பெறாது.

இடையிட்டு நிகழ்வுறு இயலாமையின் சட்ட விளைவுகள் (Effects) :

1. இதனால் ஒரு ஒப்பந்தம் இல்லாநிலை அடையும். **(பிரிவு 56, பத்தி 2).**

2. உறுதியுரைப்பவர் அறிந்து, ஆனால் உறுதியுரை ஏற்பவர் ஒப்பந்தத்தின் நிறைவேற்ற இயலாத் தன்மையினை அல்லது சட்ட முரணாகப் போகும் தன்மையை, அதனை உருவாக்கும் முன் அறியாதவராக இருந்தால், முன்னவர் பின்னவருக்கு, நிறைவேற்றாமையால் ஏற்பட்ட நட்டத்தை ஈடு செய்ய வேண்டும். **(பிரிவு 56, பத்தி 3).**

3. ஒரு உடன்பாடு இல்லாநிலையடைந்தது கண்டுபிடிக்கப்பட்டாலோ அல்லது ஒரு ஒப்பந்தம் இல்லாநிலையை அடைந்தாலோ, அந்த உடன்பாட்டின் கீழோ அல்லது ஒப்பந்தத்தின் அடிப்படையிலோ, பெற்ற ஆதாயத்தை, அதனைப் பெற்றவர் அதனை அளித்தவருக்குத் திருப்பியளிக்க வேண்டும் அல்லது இழப்பீடு (Compensation) வழங்க வேண்டும். **(பிரிவு 65).**

(c) புதிய உடன்பாடு அல்லது இசைவு மூலம் ஒப்பந்த விடுவிப்பு (Discharge by Agreement or Consent) (பிரிவுகள் 62 முதல் 67 வரை) :

இரு நபர்களின் உடன்பாட்டினால், ஒரு ஒப்பந்தம் உருவாகுவது போல் அவர்களின் இசைவின் பேரில் அல்லது ஒரு புதிய உடன்பாட்டின்படி அவ்வொப் பந்தமானது விடுவிக்கப்படலாம். இந்நிலைப்பாட்டை *'Eodem modo quoquid constituitur, eodem modo destruitur'* என இலத்தீன் சட்ட மூதுரை

கூறுகிறது. 'ஒரு பொருள் எவ்வாறு உருவாக்கப்பட்டதோ அவ்வாறே அழிக்கப் படலாம்' என்பது மேற்படி சட்ட மூதுரையின் பொருளாகும். (A thing may be destroyed in the same manner in which it is constituted). ஒரு ஒப்பந்தம், தரப்பினர்களின் வெளிப்படையான அல்லது உட்கிடையான உடன்பாட்டின் மூலம் விடுவிப்பு அடையலாம்.'

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 62–வது பிரிவானது, ஒரு ஒப்பந்தத்தின் தரப்பினர்கள் (அ) அவ்வொப்பந்தத்தை வேறு ஒரு புதிய ஒப்பந்தத்தால் மாற்றீடு (Substitute) செய்யவோ, (ஆ) நீக்கம் அல்லது இறுத்தம் (Rescind) செய்யவோ, (இ) திருத்தம் (Alteration) செய்யவோ உடன்பட்டால், முதல் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டியதில்லை, என்று கூறுகிறது. எனவே இப்படிப்பட்ட ஒப்பந்த விடுவிப்பானது பின்வரும் வழிகளில் ஏதேனுமொன்றின் கீழ் அமைகிறது. அவை,

(அ) புத்தீடு அல்லது புதிய ஒப்பந்தம் (Novation) :

ஒரு புதிய ஒப்பந்தத்தின் மூலம் ஏற்கனவே செயல்பாட்டில் இருக்கும் ஒரு ஒப்பந்தத்தை மாற்றீடு செய்வது, **'புத்தீடு' (Novation)** எனப்படும். புத்தீடு ஒரு புதிய ஒப்பந்தத்தை உருவாக்குகிறது. முதல் ஒப்பந்தத்தை அது விடுவித்து, இல்லாமல் ஒழிக்கிறது. புது ஒப்பந்தத்தின் மறுபயன், முன் ஒப்பந்தத்தின் விடுவிப்பு ஆகும். புத்தீடு, (அ) முதல் ஒப்பந்தத்தின் அதே தரப்பினர்களுக்கிடையே ஏற்படலாம் அல்லது (ஆ) முதல் ஒப்பந்தமே தொடர்ந்து, புதிய தரப்பினர்களை உருவாக்கலாம்.

(எ.கா.) A என்பவர் B-க்கு ஒரு ஒப்பந்தத்தின் கீழ் பணம் தரவேண்டும். A-யும், B-யும், C-யுடன் சேர்ந்து, அப்பணத்தை C,B-க்கு கொடுக்க வேண்டும் என்று ஒப்பந்தம் செய்து கொண்டால், A விடுவிப்பு பெறுகிறார். இதனால் C, B-க்கு கொடுக்க வேண்டிய கடனுக்காக ஒப்பந்தம் உருவாகியுள்ளது.

புத்தீட்டின் இன்றியமையாக் கூறுகள் : 1. புத்தீடு, ஒப்பந்தத்தின் இரு தரப்பாளர்களின் இசைவினால் ஏற்படுகிறது. 2. புதிய ஒப்பந்தம் சட்டத்தால் செயல் படத்தக்கதாக இருக்க வேண்டும். இல்லையேல், பழைய ஒப்பந்தத்திற்கு பழைய தரப்பாளர்கள் கட்டுப்பட்டவர்களாவார்கள். 3. புத்தீடு ஒப்பந்தம், பழைய ஒப்பந்தம் காலாவதியாவதற்கு முன்னர் உருவாக வேண்டும். பழைய ஒப்பந்தத்தின் மீறுகைக்கு (Breach) பின்னர் ஏற்படக் கூடாது.

புத்தீட்டின் சட்ட விளைவு (Effect) : 'புத்தீடு' செயலாக்கப்பட்டால், பழைய ஒப்பந்தம் முற்றிலும் அழிந்துபடுகிறது. எந்த நடவடிக்கையும் பழைய ஒப்பந் தத்தின் மீது மேற்கொள்ள முடியாது. ஆனால், புதிய ஒப்பந்தம் செயலாக்கப்பட முடியாததாகி விட்டால், பழைய ஒப்பந்தமே புதுப்பிக்கப்படும்.

(ஆ) நீக்கம் அல்லது இறுத்தம் (Recission) :

ஒரு ஒப்பந்தத்தின் அனைத்து அல்லது சில நிபந்தனைகள் (Terms) விலக்கி வைக்கப்பட்டால், அது 'நீக்கம்' அல்லது 'இறுத்தம்' எனப்படும். இது நீக்கம் செய்யப்பட்ட நிபந்தனைகளிலிருந்து தரப்பினர்களை விடுவிக்கிறது. மேலும் இது (i) தரப்பினர்களின் பரிமாற்றமான இசைவால் நிகழலாம்; அல்லது (ii) ஒரு தரப்பினர் ஒப்பந்த மீறுகை புரிந்திருந்திருக்கும் பொழுது, பாதிக்கப்பட்ட தரப்பினரால் செய்யப்படலாம். இதனால் பாதிக்கப்பட்டவரின் இழப்பீடு கோரும் உரிமை பறிபோகாது.

(எ.கா.) A என்பவருக்கு B என்பவர் சில குறிப்பிட்ட பொருள்களை ஆறு மாத காலத்தில் வழங்குவதாக ஒப்பந்தம் செய்து கொண்டார். இடையில் அப் பொருள்கள் காலத்திற்கு ஒவ்வாதனவாயின (Out of fashion). இந்நிலையில் அவர்கள் இருவரும் ஒப்பந்த நீக்கம் செய்யலாம்.

நீக்கம் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இருக்கலாம். ஒப்பந்தம் முழுவதையும் விடுவிப்பு செய்வது முழுமையான நீக்கமாகும். பகுதியான நீக்கம் என்பது, (i) ஒப்பந்தத்தின் சில நிபந்தனைகளை நீக்கம் செய்யவோ, அல்லது (ii) பழையனவற்றிற்காக புதிய நிபந்தனைகளை மாற்றீடு செய்யவோ, அல்லது (iii) முற்றிலும் புதிய நிபந்தனைகளை ஏற்கனவே உள்ள நிபந்தனைகளை பாதிக்காமல் சேர்க்கவோ இருக்கலாம்.

(இ) திருத்தம் (Alteration) :

ஒரு ஒப்பந்தத்தின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிபந்தனைகளை பரிமாற்றமான இசைவுடன் தரப்பினர்கள் மாற்றினால், அது 'திருத்தம்' எனப்படுகிறது. இங்கு நிபந்தனைகள் மட்டுமே மாற்றப்படலாம். தரப்பினர்கள் அல்ல.

(எ.கா.) A என்பவர் B-க்கு 100 பேல்கள் பருத்தியை, தன் பண்டக சாலையிலிருந்து (godown) மே மாதம் முதல் தேதி அளிப்பதாக ஒப்பந்தம் கொள்கிறார். பின்பு பருத்தி வழங்குதலை ஆகஸ்டு மாதம் முதல் தேதிக்கு மாற்றம் செய்து A-யும், B-யும் பரிமாற்றமாக உடன்படுகிறார்கள். இது ஒப்பந்தத் திருத்தம் ஆகும்.

திருத்தமும் புத்தீடும் (Novation) ஒன்றல்ல. திருத்தத்தில் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளில் மாற்றம் அதே தரப்பாளர்களால் செய்யப்படுகிறது. ஆனால், புத்தீட்டில் தரப்பாளர்களே கூட மாறிவிடலாம்.

திருத்தத்தின் சட்ட விளைவு : ஒப்பந்தத் தரப்பாளர்களின் இசைவோடு, ஒப்பந்தத்தில் ஏதேனும் மாற்றம் செய்யப்பட்டால், முன்பிருந்த ஒப்பந்தம் விடுவிப்பு பெறுகிறது. அதை நிறைவேற்றம் செய்யத் தேவையில்லை.

(ஈ) குறைத்தல் (Remission) :

ஒப்பந்த விடுவிப்புக்கு தேவையானதை விட குறைவான நிறை வேற்றத்தை ஒப்புக் கொள்ளுதல் 'குறைத்தல்' எனப்படும். 63–வது பிரிவு, ஒப்பந்த நிறைவேற்றத்தை அதிகாரத்துடன் கேட்கும் உரிமையுடைய ஒருவர் (1) அதை முழுவதுமாகவோ பகுதியாகவோ இல்லாது கழிக்கலாம் அல்லது குறைத்துக் கொள்ளலாம். (2) நிறைவேற்றக் காலத்தை நீட்டிக்கலாம். (3) நிறைவேற்றத்திற்குப் பதில் வேறு மனநிறைவை, ஏற்றுக் கொள்ளலாம். எடுத்துக்காட்டாக, ஒரு கடனாளி முழுக் கடனுக்கும் மனநிறைவாக ஒரு குறைந்த தொகையை ஏற்றுக் கொள்ளலாம்.

(எ.கா.) A, B-க்கு ரூ. 5,000/– தர வேண்டும். ரூ. 4,000/– மட்டும் A குறிப்பிட்ட காலத்திலும் இடத்திலும் செலுத்துகிறார். B அதை முழுக் கடனுக்கும், மனநிறைவாக ஏற்றுக்கொள்கிறார். முழுக்கடனும் தீர்வடைகிறது. இங்கு முழுத் தொகையையும் கேட்கும் உரிமையை B குறைத்துக் கொண்டுள்ளார்.

(உ) தளர்த்தீடு (Waiver) :

ஒப்பந்தத் தரப்பினர்கள், ஒப்பந்தம் தங்களை இனிமேல் கட்டுப்படுத்தாது என உடன்பட்டால் 'தளர்த்தீடு' ஆகும். இதனை ஒப்பந்தத் தரப்பாளர்களின் பரிமாற்றமான கைதுறுப்பு (Abandonment) எனக் கூறலாம். ஒப்பந்தத் தரப்பாளர் ஒருவர் ஒப்பந்தத்தின் கீழ் தனக்குள்ள உரிமையை 'தளர்த்தீடு' செய்யலாம். இதனால் மறுதரப்பாளர் அவருடைய கடப்பாட்டினின்றும் விடுபடுகிறார்.

(எ.கா.) A தனக்கு ஒரு படம் வரைய B–யை அமர்த்துகிறார். பின்பு B படம் வரைவதை A தடை செய்கிறார். B ஒப்பந்தத்தை நிறைவேற்றக் கடமைப் பட்டவரல்ல.

(ஊ) கலப்பிணைவு (Merger) :

ஒரு ஒப்பந்தத்தில் ஏற்படும் குறைந்த (Inferior) உரிமை ஒன்று, அதே ஒப்பந்தத் தரப்பாளர்கள் கொண்ட அதே அல்லது வேறு ஒப்பந்தத்தின் கீழ் பெற்ற மேம்பட்ட (Superior) உரிமையுடன் இணையும்போது 'கலப்பிணைவு' நிகழ்கிறது. எடுத்துக்காட்டாக, சிறிய பிணையத்திற்குப் பதில் பெரிய பிணையம் (Security) ஒன்று ஏற்கப்பட்டால், அச்சிறு பிணையம் மறைந்தழிந்து பெரும்பிணையத்துடன் இணையும்.

(எ.கா.) A சில சொத்துக்களை B-யிடமிருந்து குத்தகையாகப் பெற்றிருக்கிறார். A அவற்றைப் பின்னர் B-யிடமிருந்து விலை கொடுத்தே வாங்கி விடுகிறார். அவருடைய குத்தகை பெற்றவர் என்ற உரிமை, உரிமையாளர் என்ற உரிமையுடன் கலப்பிணைவாகிறது.

(எ) ஒத்திசைவும் உளநிறைவும் (Accord and Satisfaction) :

மேற்படி இரு சொற்களும் ஆங்கிலச் சட்டத்துக்கு மட்டுமே பொருந்தும். இந்தியச் சட்டத்துக்குப் பொருந்தாது. இதன்படி மறுபயன் (Consideration) ஒப்பந்த உருவாக்கத்திற்கு மட்டுமல்லாமல், ஒப்பந்த விடுவிப்பிற்கும் தேவைப் படுகிறது. இதனை இங்கிலாந்து நாட்டின் விந்தையான விதியென்றும் கூறலாம்.

பொதுவாக, **இருதலை ஒப்பந்தத்தில் (Bilateral Contract)** இரு தரப்பினரும் தங்கள் உறுதியுரைகளை மேற்கொண்டு வலியுறுத்துவதில்லை என சம்மதித்து உடன்பாடு செய்து கொண்டால், அவ்வுடன்பாடு மறுபயன் உள்ள ஒன்றெனக் கருதப்பட்டு செல்லுநிலை (Valid) அடைகிறது. அந்த ஒப்பந்தமும் விடுவிப்படைகிறது. இதற்கு பின்வரும் எடுத்துக்காட்டை கவனிப்போம்.

A என்பவர் 100 பேனாக்களை B-க்கு கொடுக்க வேண்டியது என்றும், அதற்கு மறுபயனாக மேற்படி B என்பவர், 100 பென்சில்களை A-க்கு கொடுக்க வேண்டியதென்றும், அவர்கள் இருவரும் ஒப்பந்தம் செய்து கொண்டனர். இதன் பின்னர் மேற்படி A-யும், B-யும் மீண்டும் ஒரு உடன்பாடு செய்து கொள்கின்றனர். அதன்படி, A 100 பேனாக்களை B-க்குத் தரவேண்டியதில்லையென்றும், அது போல் B, 100 பென்சில்களை A-க்குத் தரவேண்டியதில்லையென்றும் ஒப்புக் கொள்கின்றனர். இவ்வுடன்பாடு செல்லத்தக்கதே. ஏனெனில், இருதலை ஒப்பந்தத்தில் முன்னர் செய்து கொண்ட உறுதியுரைகளை வற்புறுத்துவதில்லை என்று பின்னர் இருவரும் செய்து கொள்கின்ற உறுதியுரைகளே, அவ்வுடன் பாட்டிற்கு மறுபயனாகும். அதாவது ஒப்புக் கொண்டபடி ஒருவருக்கொருவர் பேனா, பென்சில்களைக் கொடுக்க வேண்டியதில்லை என A-யும், B-யும் செய்து கொண்ட உறுதியுரைகளே, பின்னால் ஏற்பட்ட உடன்பாட்டிற்கு மறுபயனாக அமைகின்றன. இதன்படி A-யும் B-யும் ஆரம்ப ஒப்பந்தத்திலிருந்து விடுவிக்கப் படுகின்றனர். **ஆனால்,**

ஒருதலை ஒப்பந்தத்தைப் (Unilateral Contract) பொறுத்தவரை நிலைமை வேறாக இருக்கிறது. மேற்கண்ட இருதலை ஒப்பந்தத்தில் இரு தரப்பினரும் தங்களது உறுதியுரைகளை நிறைவேற்றாமல் இருக்கின்றனர். ஆனால் ஒருதலை ஒப்பந்தத்தில் இருவரில் ஒருவர் தமது பங்கு ஒப்பந்தத்தை ஏற்கனவே, அதாவது ஒப்பந்தம் உருவாகின்றபோதே நிறைவேற்றிவிட்டார். மற்றொருவர் தன் பங்கு ஒப்பந்தத்தை மட்டும் நிறைவேற்ற வேண்டிய நிலையில் இருக்கிறார். இந்த நிலையில் அவர் ஒப்பந்தத்திலுள்ள உறுதியுரைக்குப் பதிலாக வேறொன்றைச் செய்வதாகக் கூறி அதை மற்றவர் ஒப்புக் கொள்ளச் செய்யலாம். அதன்பின் அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும். இவ்வாறு ஒப்பந்தத் தரப்பினர் ஒருவரின் இசைவினைப் பெற்று மற்றொருவர் அதற்கு மாறாக வேறொன்றினை

நிறைவேற்றுவதே "ஒத்திசைவும் உளநிறைவும்" (Accord and Satisfaction) என்றழைக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டு : A, B-யிடமிருந்து ஒரு குதிரையை விலைக்கு வாங்குகிறார். அதற்குரிய விலையான ரூ.1,000/–த்தை ஒரு மாதத்தில் தருவதாக A ஒப்புக் கொள்கிறார். ஆனால் ஒப்பந்தப்படி, ஒரு மாதத்தில் A, B-க்கு மேற்படி ரூ.1000/–த்தை செலுத்த இயலவில்லை. எனவே A-யும் B-யும் பின் வேறொரு புது உடன்பாடு செய்து கொள்கின்றனர். அதன்படி A, B-க்கு ரூ.1,000/– செலுத்துவதற்குப் பதிலாக ஒரு மூட்டை அரிசி கொடுக்க ஒப்புக் கொள்கிறார். B–ம் அத்தொகைக்கு ஈடாக மேற்படி 1 மூட்டை அரிசியை பெற ஒப்புக்கொள்கிறார். A, B-க்கு ஒரு மூட்டை அரிசியைக் கொடுத்தவுடன், மேற்படி ரூ.1,000/– செலுத்தப்பட்டுவிட்டதாகிறது.

இந்த எடுத்துக்காட்டில், B, ரூ.1,000/– பெறுவதற்கு பதிலாக ஒரு மூட்டை அரிசியை பெற ஒப்புக்கொண்டு அதற்கு இசைவு தருகிறார். அது **'ஒத்திசைவு' (Accord)** எனப்படுகிறது. பின் ஒப்புக் கொண்டபடி A, B-க்கு ஒரு மூட்டை அரிசியை கொடுக்கும்பட்சத்தில் செலுத்தப்பட வேண்டிய தொகையான மேற்படி ரூ. 1,000/– தீர்க்கப்படுகிறது. இதனால் B-யின் உள்ளத்திற்கு நிறைவு ஏற்படுகிறது. இது **'உளநிறைவு' (Satisfaction)** எனப்படுகிறது. எனவே "ஒத்திசைந்த இந்த உடன்பாட்டில் உளநிறைவே மறுபயனாகும்." எனினும் இதற்கு பின்வரும் இரண்டு வரம்புகள் உண்டு. அதற்கு உட்பட்டே இது செயலுறும்.

வரம்புகள் (Limitations) – இரண்டு :

1. உளநிறைவு ஏற்பட வேண்டுமெனில், பின்னர் ஏற்பட்ட உடன்பாடானது முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும்: மேற்படி எடுத்துக்காட்டின்படி, A கொடுக்க வேண்டிய ரூ.1,000/–த்திற்கு பதிலாக ஒரு மூட்டை அரிசியை B ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது பின்னர் ஏற்பட்ட உடன்பாடு ஆகும். அவ்வுடன் பாட்டின்படி A, B-க்கு ஒரு மூட்டை அரிசியைக் கொடுத்துவிட வேண்டும். அப்பொழுதுதான் B-க்கு உளநிறைவு ஏற்படும். ஒரு வேளை A அவ்வுடன்பாட்டின் படி ஒரு மூட்டை அரிசியைக் கொடுக்கத் தவறினால், B தமக்கு செலுத்தப்பட வேண்டிய தொகையான ரூ.1,000/–த்தை வசூலிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம். ஒப்புக் கொண்டபடி B, ஒரு மூட்டை அரிசியைத்தான் கேட்க முடியுமே தவிர, ரூ.1,000/–த்தை கேட்க முடியாது என A வாதிட முடியாது. எனவே, உள நிறைவு ஏற்படுவதற்கு பின்னர் ஏற்பட்ட உடன்பாட்டினை முழு அளவில் செயல் படுத்த வேண்டும். இல்லாது போனால், முந்தய உடன்பாட்டிற்கு வலிமை வந்துவிடும்.

2. இவ்விரண்டாவது வரம்பானது பின்னெல் (Pinnal) என்பவரின் வழக்கில் விதியாக ஏற்படுத்தப்பட்டது. அவ்வழக்கும் விதியும் வருமாறு.

பின்னெல் வழக்கில் ஏற்படுத்தப்பட்ட விதி (Rule in Pinnel's Case): கடனுக்காக முழுத் தொகையைக் கொடுக்காமல் குறைவான தொகையைச் செலுத்தினால் அது முழுக் கடனைத் தீர்த்ததற்கான உளநிறைவைத் தருவதில்லை. ஆனால் ஒரு பகுதி பணத்துடன் வேறு ஏதேனும் ஒன்றைச் சேர்த்துக் கொடுத்தால் அது முழுமையான கடனைத் தீர்த்ததற்கு ஒப்பாகும், என்பது இவ்வழக்கின் விதியாகும். அதன் பொருண்மைகளை பின்வருமாறு காண்போமா?

Pinnel v. Cole[1] – **பின்னெல்** என்பவர் தமக்குச் சேரவேண்டிய 8 பவுண்டு மற்றும் 10 ஷில்லிங் கடனுக்காக **கோல்** (Cole) என்பவர் மீது வழக்குத் தொடர்ந்தார். ஆனால், மேற்படி கோல், தாம் ஏற்கனவே கொடுத்த 5 பவுன் 2 ஷில்லிங்–அய் முழுக்கடனுக்கும் ஈடாக மேற்படி பின்னல் முழு உளநிறைவுடன் ஏற்று கொண்டுவிட்டார்; ஆகவே, தாம் எத்தொகையையும் தர வேண்டியதில்லை என எதிர்வாதம் புரிந்தார். ஆனால் நீதிமன்றம், கோலின் எதிர்வாதத்தை ஏற்க மறுத்து, முழுக் கடனுக்கும் ஈடாக தொகையை செலுத்த வேண்டும் அல்லது அதற்கு ஈடாக ஏதாவது ஒரு பொருளை (உதாரணமாக குதிரை, பருந்து அல்லது உடை போன்றவைகளை) அல்லது ஓரளவு பணமும், பாக்கி நிற்கும் தொகைக்கு ஏதாவது ஒரு பொருளையும் (அம்மதிப்பிற்கு சமமாக இருக்க வேண்டுமென்பதில்லை) சேர்த்துக் கொடுத்து அதைக் கடன் கொடுத்தவர் ஏற்றுக் கொண்டால், அது உள நிறைவாகும் என்றும், அவ்விதம் இல்லாமல் கடனுக்கான முழுத்தொகையை விடக் குறைவான தொகையை மட்டும் செலுத்தினால் அதனை உளநிறைவாக ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் தீர்ப்பு வழங்கியது. இதனால் அவ்வொப்பந்தமும் விடுவிப்படையாது. ஆகவே, ஒரு ஒப்பந்தம் விடுவிப்படைவதற்கும் ஆங்கிலச் சட்டப்படி மறுபயன் தேவைப்படுகிறது.

பின்னெல் வழக்கு விதிக்கு விதிவிலக்குகள் (Exceptions to the Rule in Pinnel's Case): (1) கடனீந்தவர்களுடன் கடன் ஒத்திசைவு (Composition with creditors): தனது கடன்களை முழுவதுமாக அடைக்க இயலாத கடனாளி ஒருவர், தனக்கு கடனீந்தவர்களுடன் ஒரு கடன் ஒத்திசைவு செய்து கொள்ளலாம். இக்கடன் ஒத்திசைவுத் திட்டத்தின்படி (scheme of composition), தனது கடனின் ஒரு பகுதியை அடைக்க அவர் ஒப்புக் கொள்கிறார். உதாரணமாக, கடனீந்தவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ரூபாயில் 25 பைசாவை திருப்பிச் செலுத்தல். இக்கடன் ஒத்திசைவுத் திட்டத்தை கடனீந்தவர்கள் ஏற்றுக் கொண்டவுடன், அவர்கள் அதற்குக் கட்டுப்பட்டவர்களாகிறார்கள். ஒப்புக் கொண்ட தொகைக்கு மேலாக, கடனீந்தவர்கள் எதையும் கோர முடியாது.

(2) மூன்றாம் நபர் ஒருவரிடமிருந்து கடன் தொகைக்கும் குறைவாக

1. (1602) 77 E.R. 237

உள்ள ஒரு தொகையைப் பெற்றுக் கொள்ளல் (Taking from a third party less than what is due from the debtor): கடனாளி செலுத்த வேண்டிய கடன் தொகைக்கும் குறைவான ஒரு தொகையை மூன்றாம் நபர் ஒருவரிடமிருந்து பெற்றுக் கொண்டு, கடனாளியை விடுவிப்பு செய்வதாக கடனீந்தவர்கள் உறுதியுரை அளித்தால், அத்தொகைக்கும் மேலாக எதையும் அவர்கள் கோர முடியாது. "முழுக் கடனையும் விடுவிப்பதற்காக, அக்கடனில் ஒரு பகுதியை அயலவர் (stranger) ஒருவர் செலுத்தி, அதை கடனீந்தவர்கள் ஏற்றுக் கொண்டால், அங்கு அம்முழுக் கடனும் தீர்ந்து போவதாகப் பொருளாகும். ஒருவரின் கடனுக்காக மற்றொருவர் செலுத்திய குறைவான தொகையை ஏற்றுக் கொண்டு, மீதித் தொகைக்கு அந்த அயலவருக்கு எதிராக வழக்காற்ற இயலாது. அவ்வாறு வழக்கிட்டால், அது கடனீந்தவர்கள் செய்யும் மோசடியாகும்" என்று, **Cook v. Lister**[1] எனும் வழக்கில் கருத்துரைக்கப்பட்டது.

(3) முரண்தடை–போல்வு விதி (Rule of quasi-estoppel): ஒன்றை ஒப்புக் கொண்டு, பின் அதற்கு முரணாகக் கூறுவது சட்டத்தால் தடை செய்யப் படுகிறது. எனவே இந்நிலைப்பாட்டிற்கு 'முரண்தடை' என்று பெயர். மேற்படி 'முரண்தடை போல்வு' விதி, **Central London Property Trust Ltd. v. High Trees House Ltd.**[1] (popularly known as High Trees Case) எனும் வழக்கில் உருவாக்கப்பட்டது. இவ்விதி, பின்னெல் வழக்கின் விதிக்கு, ஒரு முக்கிய விதிவிலக்காக உள்ளது. வழக்கின் பொருண்மைகளின்படி, வாதிகள், அடுக்கு மாடிக் கட்டிடம் ஒன்றின் உரிமையாளர்கள். அவர்கள், 1937–ஆம் ஆண்டில், பிரதிவாதிகளுக்கு அக்கட்டிடத்தை ஆண்டொன்றுக்கு 2,500 பவுண்டு வீதம் 99 வருடத்திற்கு வாடகைக்கு விட்டனர். இந்நிலையில் 1941–ஆம் ஆண்டில் போர் மூண்டது. எனவே அக்கட்டிடத்தின் மாடித்தளங்களை பிரதிவாதிகளால் அதிக அளவில் விற்க இயலவில்லை. இதையறிந்த வாதிகள் தங்கள் வாடகைக் தொகையை, ஆண்டொன்றுக்கு 1,250 பவுண்டாக குறைத்துக் கொள்வதாக ஒப்புக் கொண்டனர். ஆனால் இவ்வாறு ஒப்புக் கொண்டதற்கு முரணாக, வாதிகள் பழைய வாடகையான 2,500 பவுண்டு பணத்தைக் கோரி வழக்கிட்டனர். குறைவான வாடகையைப் பெற்றுக் கொள்ள ஒத்துக் கொண்டு, அதற்கு முரணாக மீண்டும் பழைய அதிக வாடகையைக் கோருவது சட்டப்படி தடை செய்யப்பட்டது என்றும், வாதிகள் அவ்வாறு பழைய வாடகையைக் கோர உரிமை படைத்தவர் களல்ல என்றும், ஒப்பந்தம் விடுவிப்படைந்துவிட்டது என்றும் கூறி அவர்களது வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது. எனவே முழுத் தொகைக்கு எதிராக குறைவான ஒரு தொகையைப் பெற்றுக் கொள்வதாக ஒப்புக் கொண்டு

1. 1863 (13) CB 543
2. 1947 KB 130

விட்டால், பின்னர் முழுத் தொகையையும் கோர முடியாது என்பதையும், இந்நிலைப்பாடு மேற்கண்ட பின்னெல் வழக்கின் விதிக்கு நேர்மாறாக உள்ளது என்பதையும் நாம் மேற்கண்ட வழக்கிலிருந்து அறியலாம்.

'ஒத்திசைவும் – உளநிறைவும்' எனும் கோட்பாட்டை இந்தியச் சட்டம் ஏற்கவில்லை– ஏன் ? மேற்கண்ட "ஒத்திசைவும் உளநிறைவும்" எனும் கோட்பாடு இந்தியாவில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அதுபோன்று பின்னல் வழக்கில் வழங்கப்பட்ட விதிமுறைக்கும் இந்தியச் சட்டத்தில் இடமளிக்கப்படவில்லை.

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 63–வது பிரிவு, "கடனுக்கான முழுத் தொகையை விட குறைந்த தொகையை செலுத்துவது சிறந்த மறுபயனாகும்" என உணர்த்துகிறது. அதாவது குறைந்த தொகையைச் செலுத்தும் போது அத்துடன் மீதியுள்ள தொகைக்கு ஏதாவது ஒரு பொருளையும் சேர்த்துக் கொடுத்தால் உளநிறைவு ஏற்படுகிறது என பின்னல் வழக்கு மூலம் இங்கிலாந்துச் சட்டம் வலியுறுத்துகிறது. ஆனால் இந்தியச் சட்டமோ அவ்விதம் எப்பொருளையும் கொடுக்காமலேயே குறைந்த தொகையைச் செலுத்தி அதை மறுதரப்பினர் ஏற்றுக் கொண்டால், அது முழு மனநிறைவை (Full Satisfaction) ஏற்படுத்தலாம் எனக் கூறுகிறது.

(d) ஒப்பந்த மீறுகையின் மூலம் (Discharge by Breach of Contract) (பிரிவுகள் 39 மற்றும் 73):

ஒப்பந்தமொன்றின் தரப்பாளர்கள் தங்கள் தங்கள் உறுதியுரைகளை நிறைவேற்றுதல் வேண்டும். ஒரு தரப்பாளர் தனது கடப்பாட்டை நிறைவேற்ற மறுத்தால் அல்லது அவரால் செய்ய இயலாமல் போனால், அங்கு **'ஒப்பந்த மீறுகை'** நிகழ்கிறது. இதனால் ஒப்பந்தம் விடுவிப்படைகிறது. எனவே, ஒரு ஒப்பந்த மீறுகை எவ்வழிகளில் நிகழலாம், அதன் விளைவுகள் யாவை, அதற்குரிய தீர்வழிகள் என்ன என்பதை நாம் காண வேண்டியது இங்கு அவசியமாக உள்ளது. முதற்கண் ஒரு 'ஒப்பந்த மீறுகை' பின்வரும் வழிகளில் நிகழலாம்.

1. உள்ளபடியான மீறுகை (Actual Breach) :

(அ) ஒப்பந்த நிறைவேற்றம் நிகழ வேண்டிய நேரத்தில்; (ஆ) ஒப்பந்த நிறைவேற்றம் நிகழும் நேரத்தில் ஆகிய இவ்விரண்டு நேரங்களில் நிகழும் மீறுகை, 'உள்ளபடியான மீறுகை' எனப்படுகிறது. சற்று விரிவாக வருமாறு.

(அ) ஒப்பந்த நிறைவேற்றம் நிகழ வேண்டிய நேரத்தில் (At the time when the performance is due) : ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக **நிருணயிக்கப்பட்ட நேரத்தில்,** அவ்வொப்பந்தத்தின் தரப்பாளர் ஒருவர் தன் கடப்

பாட்டை நிறைவேற்றத் தவறினாலோ அல்லது மறுத்தாலோ, அங்கு **'உள்ளபடியான (ஒப்பந்த) மீறுகை'** நிகழ்கிறது.

(எ.கா.) A என்பவர் ஜனவரி மாதம் முதல் தேதி 5 பேல்கள் பருத்தியை B-க்கு வழங்கிட உடன்பட்டார். ஆனால் A ஜனவரி மாதம் முதல் தேதி பருத்தி வழங்கிடவில்லை. இது ஒரு உள்ளபடியான ஒப்பந்த மீறுகையாகும்.

Bhudra Chand v. Betts[1] – இவ்வழக்கில் காட்டு யானைகளைப் பிடிப்பதற்காக பழக்கப்படுத்தப்பட்ட யானையொன்றை வாதிக்கு வழங்குவதாக பிரதிவாதி உடன்பாடு செய்து கொண்டார். அந்த யானை, பிரதிவாதியால் 1910–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1–ஆம் தேதியில் வழங்கப்பட வேண்டும். ஆனால் பிரதிவாதி அவ்வாறு வழங்கவில்லை. மாறாக மேலும் ஒரு வார காலத்தை நீட்டித்து வழங்கும்படி வாதியிடம் கேட்டுக் கொண்டார். வாதியும், அக்டோபர் மாதம் 6–ஆம் தேதி வரை காலத்தை நீட்டித்து வழங்கினார். ஆனால் அந்த தேதியிலும் பிரதிவாதி யானையை வழங்கவில்லை. இறுதியாக அக்டோபர் மாதம் 11–ஆம் தேதியில் யானை வழங்கிவிடுவதாக பிரதிவாதி முனைவு செய்தார். ஆனால் வாதியோ அந்த யானையை ஏற்க மறுத்துவிட்டார். நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் யானை வழங்காததால், பிரதிவாதி உள்ளபடியான ஒப்பந்த மீறுகை புரிந்துள்ளார் என்றும், அதற்காக தனக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் வாதி மேற்கண்ட வழக்கைத் தொடர்ந்தார். அதில், மேற்படி ஒப்பந்தத்தில் காலம் ஒரு இன்றியமையாத கூறாக இருந்துள்ளது என்றும், வாதி குறிப்பிட்ட நேரத்தில் பிரதிவாதி யானை வழங்காமல், பின்னிட்டு வழங்கியதால், வாதி அதனை ஏற்றுக் கொள்ளாமல் மறுத்தது நியாயமானதே என்றும், பிரதிவாதி இழப்பீடு கொடுக்கப் பொறுப்புடையவர் என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. எனவே, நிறைவேற்ற வேண்டிய காலம் கடந்து நிறைவேற்றப்படும் ஒப்பந்தம் நியாயமானதாகாது.

(ஆ) ஒப்பந்த நிறைவேற்றம் நிகழும் நேரத்தில் (During performance of Contract) : ஒரு ஒப்பந்தம் நிகழும் நேரத்தில் ஒப்பந்த மீறுகை ஏற்படலாம். அதாவது ஒரு ஒப்பந்தம் நிறைவேறிக் கொண்டிருக்கும் போது அதைத் தொடர்ந்து நிறைவேற்றிட ஒரு தரப்பினர் மறுத்தால், அது ஒப்பந்த மீறுகை ஆகும். மற்றவர் அதற்காக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம். இங்கு ஒன்றைக் கவனித்தல் அவசியம். அதாவது ஒரு ஒப்பந்தத்தில் காணப்படும் நிபந்தனையை (Condition) பொறுத்து மீறுகை ஏற்பட்டால், அந்த ஒப்பந்தம் இல்லாநிலையதாகும் (Void). ஆனால் அதே ஒரு உத்திரவாதத்தைப் (Warranty) (நம்புறுதி) பொறுத்து மீறுகை ஏற்பட்டால், அந்த ஒப்பந்தம் தவிர்தகுநிலையடையும் (Voidable). அதாவது ஒப்பந்தம் நிறைவேற்றப்படலாம். ஆனால் பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும்.

1. (1915) 22 Cal. L.J. 566 : 33 I.C. 347

Behn v. Burness[1] இவ்வழக்கில் 'தற்பொழுது ஆம்ஸ்டர்டேம் துறைமுகத்தில் நின்று கொண்டிருக்கும் கப்பலில்' எனும் நிபந்தனையிடப்பட்டு, அதில் சரக்குகளை ஏற்றுவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட நேரத்தில், அக்கப்பல் அத்துறைமுகத்தில் இல்லை என்பது தெரியவந்தது. அக்கப்பல் பின்னிட்டு சில தினங்கள் கழித்து அத்துறைமுகத்திற்கு வந்தது. ஆனால் சரக்கின் உடைமையாளர்கள், சரக்குகளை கப்பலில் ஏற்க மறுத்து, அவ்வொப்பந்தத்தின்படி நடக்க மறுத்தனர் (repudiated the contract). 'தற்பொழுது' ஆம்ஸ்டர்டேம் துறைமுகத்தில் நின்றுள்ள கப்பலில் என்று ஒப்பந்தம் செய்து கொண்டு, ஆனால் அச்சமயத்தில் அங்கு அக்கப்பலே இல்லாததால், இது ஒப்பந்த நிபந்தனையை மீறியதாகும் என்றும், பின்னிட்டு அங்கு வந்தடைந்த கப்பலில் சரக்கின் உடைமையாளர்கள் சரக்குகளை ஏற்ற மறுத்தது நியாயமானதே என்றும், அவ்வொப்பந்தம் இல்லாநிலையது என்றும், எனவே அவர்கள் இழப்பீடு பெற உரிமையுடையவர்கள் என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

Bettini v. Gye[2] – ஒரு கலையரங்கத்தில் பாடுவதற்காக பாடகர் ஒருவர் ஒப்புக் கொண்டார். மேலும் ஒத்திகை பார்ப்பதற்கு ஆறு நாட்கள் முன்னரே அக்கலையரங்கத்திற்கு வந்து விடுவதாகவும் சொன்னார். ஆனால், கச்சேரி நடப்பதற்கு இரண்டு நாட்கள் முன்னர்தான் அவர் வந்தார். இங்கு மேற்படி பாடகர் அளித்த உத்திரவாதம் (Warranty) மட்டுமே மீறப்பட்டிருப்பதால், இழப்பீடு கோர கச்சேரி நடத்துனருக்கு உரிமை உண்டு. எனினும், அவ்வொப்பந்தம் நிறைவேற்றப் படலாம் அல்லது பாதிக்கப்பட்ட நபரின் விருப்பின் பேரில் ஒப்பந்தம் தவிர்க்கப் படலாம் (Voidable).

2. எதிர்பார்க்கப்பட்ட மீறுகை அல்லது முன் நிகழும் மீறுகை (Anticipatory Breach) :

எதிர்பார்க்கப்பட்ட மீறுகை பற்றி இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **39**–வது பிரிவு கூறுகிறது. அதன்படி, ஒரு ஒப்பந்தத்தின் நிறைவேற்றக் காலம் வரும் முன்னரே, ஒப்பந்தத்தை நிறைவேற்ற இயலாது என ஒப்பந்தத்தின் ஒரு தரப்பினர் தன் கருத்தை வெளியிட்டு நிறைவேற்றத்தை விட்டுவிடலாம். அந்நேரத்திலிருந்து ஒப்பந்தம் மீறப்பட்டு விட்டதாக கருதப்படும். இத்தகு 'முன் நிகழும் ஒப்பந்த மீறுகையானது' பின்வரும் வழிகளில் நிகழலாம்.

(அ) தன்னுடைய ஒப்பந்தக் கடப்பாட்டை வெளிப்படையாக ஒப்புக் கொள்ள இணங்காதிருத்தல் (Renouncing); அல்லது (ஆ) ஒரு தரப்பினர் தனது செய்கை ஒன்றால் நிறைவேற்றம் இயலாமற் போகும்படி செய்தல்.

1. (1863) 122 E.R. 281
2. (1876) 1 Q.B.D. 183

(எ.கா.) A என்பவர் B என்பவருக்கு மே மாதம் 1–ஆம் தேதி சில சரக்குகளை அனுப்புவதாகக் கூறுகிறார். ஆனால், அத்தேதிக்கு முன்பே, தான் சரக்குகளை அனுப்பப் போவதில்லை என A தெரிவித்துவிடுகிறார். இது வெளிப் படையாக தனது கடப்பாட்டை ஒப்புக் கொள்ள மறுக்கும் முன்நிகழும் ஒப்பந்த மீறுகையாகும். இது 'கொள்நிலையான மீறுகை' (Constructive breach) என்றும் அழைக்கப்படுகிறது.

முன் நிகழும் ஒப்பந்த மீறுகையால் பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்குள்ள தீர்வழிகள் (Remedies) : (அ) பாதிக்கப்பட்ட தரப்பினர் அவ்வொப்பந்தம் விடுவிப்புப் பெற்றதாகக் கருதி அதன் கீழ் இனி தனக்கு எவ்விதக் கடப்பாடுமில்லாமல் செய்து கொள்ளலாம். அவ்வாறு செய்தால், அவர் உடனடியாக சட்டப்படியான தீர் வழிகளைப் பெறலாம். அதாவது, இழப்பீட்டிற்காகவோ (damages), அவ்வொப்பந்தத்தை குறித்த வகையில் நிறைவேற்றவோ (Specific Performance) அல்லது உறுத்துக்கட்டளைக்காகவோ (Injunction) வழக்கு தொடரலாம். இதற்காக ஒப்பந்த நிறைவேற்றத்திற்கென குறிக்கப்பட்டிருந்த நாள் வரும் வரை, பாதிக்கப்பட்டவர் காத்திருக்கத் தேவையில்லை.

Hochster v. De La Tour[1] - இவ்வழக்கில் மூன்று மாத வெளி நாட்டுப் பயணம் செய்வதற்கு ஒரு டிராவல் ஏஜென்ஸியின் உதவி நாடப்பட்டது. அதன் பணி, ஜூன் மாதம் முதல் தேதி ஆரம்பமாகவிருந்தது. ஆனால் மே மாதம் 11–ஆம் தேதியே அவருடைய சேவை தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டது. அதாவது, நிறைவேறுங்காலம் வருவதற்குள்ளே உடன்பாடு இரத்து செய்யப்பட்டு விட்டது. மேற்படி டிராவல் ஏஜென்ஸி, முன்நிகழ்வான ஒப்பந்த மீறுகையினால் ஏற்படும் நட்டத்திற்கு இழப்பீடு கோரி **உடனே** வழக்குத் தொடுத்தார். வழக்கில் வெற்றியும் பெற்றார். வழக்காட மேற்படி டிராவல் ஏஜென்ஸிக்கு உரிமை உண்டென்றும், ஒப்பந்தம் நிறைவேற்றும் காலம் வரும் வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லையென்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

(ஆ) பாதிக்கப்பட்ட தரப்பினர், மேற்கண்ட தீர்வழியைப் பெறமுடியாமல், அவர் செய்து கொண்ட ஒப்பந்தம் இன்னமும் செயல்முறையில் (Operative) இருப்பதாகவும், உயிர்த்துடிப்புடன் உள்ளதாகவும் கருதி அதன் நிறைவேற்றக் காலம் வரும் வரும் வரை காத்திருக்கலாம். பின்பு மீறுகை புரிந்தவரை ஒப்பந்த நிறைவேற்றாமைக்காக, பின்விளைவுக்குள்ளாக்கலாம். இங்கு, ஒப்பந்தமானது நிறைவேற்றப்பட வேண்டிய காலம் வரும் வரை உயிர்த்துடிப்புடன் இருக்கும். உறுதியுரைத்தவர், இத்தருணத்தில் தன் மனதை மாற்றிக் கொண்டு ஒப்பந்தத்தை நிறைவேற்றலாம். ஆனால் இடைப்பட்டக் காலத்தில் இடையிட்டு நிகழ்வுறு

1. (1853) 118 ER 922

இயலாமைச் சூழ்நிலை ஏதும் நடந்து, ஒப்பந்தமானது சட்டப்படி விடுவிப்படைந்தால் (Discharge by supervening impossibility) மீறுகை புரிந்த தரப்பினர், அச்சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாக எடுத்துக் கொள்ளலாம். இதனால் பாதிக்கப்பட்ட தரப்பினர் தனது இழப்பீடு கோரும் உரிமையை இழப்பார்.

(e) சட்டச் செயல்பாட்டால் விடுவிப்பு (Discharge by Operation of law) :

ஒப்பந்தத் தரப்பினர்களின் விருப்பத்திற்கு மாறாக சட்டத்தின் செயல்பாட்டால் ஒப்பந்தம் விடுவிப்படைகிறது. இது பின்வரும் தருணங்களில் நிகழ்கிறது.

(அ) இறத்தல் (Death) : தனித்திறமையை அடிப்படையாகக் கொண்ட ஒப்பந்தத்தில் உறுதியுரை செய்தவர் இறந்துவிட்டால் ஒப்பந்தம் விடுவிப்பு பெறுகிறது. பிற ஒப்பந்தங்களில் இறந்தவர்களுக்கான உரிமையும், பொறுப்பும் அவர்களுடைய சட்டப்படியான பின்னுரிமையர்களுக்கு (வாரிசுகளுக்கு) சென்றடைகிறது.

(ஆ) இணைத்தல் (Merger) : குறைந்த உரிமைகள் கொண்ட ஒரு ஒப்பந்தத்தை செய்து கொண்ட நபர்கள், பிறகு அதை விட அதிகப்படியான உரிமை உடைய ஒப்பந்தத்தை மேற்கொள்ளும் போது இணைப்பு ஏற்படுகிறது. இங்கு முதல் ஒப்பந்தம் இரண்டாவது ஒப்பந்தத்துடன் இணைந்து விடுகிறது. இதனால் குறைந்த உரிமைகள் கொண்ட முதல் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதிலிருந்து ஒப்பந்த நபர்கள் விடுபடுகிறார்கள்.

(இ) நொடிப்பு நிலை (Insolvency) : ஒருவர் அளவுக்கு மீறிய கடன் பெற்று நொடிந்தவர் என்று நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்பட்டால் அவர் செய்திருந்த ஒப்பந்தங்களிலிருந்து அவர் விடுவிக்கப்படுகிறார். அவரது உரிமைகளும், கடமைகளும் சொத்தாட்சி அலுவலருக்கு (Assignee) மாறிவிடும். பிறகு ஒப்பந்த நிறைவேற்றம் தொடர்பாக எவரும் நொடிந்தவர் மீது வழக்குத் தொடர முடியாது.

(ஈ) உரிமையும், கடமையும் ஒருவரிடத்தில் இருத்தல் (By rights and liabilities becoming vested in the same person): சில சமயங்களில் ஒப்பந்தங்களிலுள்ள உரிமைகளும், கடமைகளும் ஒரு தரப்பினர் மீதே வந்து சேரும். அப்பொழுது ஒப்பந்தம் விடுவிப்புப் பெறும். உதாரணமாக மாற்றுச் சீட்டு (Bill of Exchange) - அதை ஏற்பவரின் (acceptor) கையில் வந்தடைந்ததும் விடுவிப்படைகிறது.

(f) கருநிலைத் திருத்தம் மூலம் (Discharge by Material Alteration):

எழுத்து வடிவத்தில் அமைந்த ஒப்பந்தம் ஒன்றில் உறுதியுரை ஏற்றவர் ஒப்பந்தத்தின் நிபந்தனையை உறுதியுரை அளித்தவரின் இசைவின்றி திருத்தம்

செய்தால் ஒப்பந்தம் விடுவிப்பு பெறுகிறது. கருநிலைத் திருத்தம் ஒப்பந்தத்தின் பண்பை அல்லது ஒப்பந்தத் தரப்பினரின் உரிமைகளையும் கடமைகளையும் மாற்றுவதாகும்.

செலுத்த வேண்டிய தொகையில் திருத்தம், செலுத்த வேண்டிய காலத்தில் திருத்தம், பெயரில் திருத்தம், இடத் திருத்தம் போன்றவை கருநிலைத் திருத்தமாகும். இத்திருத்தங்களால் ஒப்பந்தம் விடுவிப்படைகிறது.

(எ.கா.) A என்பவர் ரூ.500/–க்கு B-யிடம் கடனுறுதிச் சீட்டு (Pronote) ஒன்றை எழுதித் தருகிறார். B அதனை ரூ. 5000/– என்று மாற்றம் செய்தால், பின்னர் ரூ. 5,000/–த்திற்கோ அல்லது ரூ.500/–க்கோ உரிமை கோர முடியாது. இங்கு ஒப்பந்தம் விடுவிப்படைகிறது.

(g) காலம் கடந்தமையால் ஒப்பந்த விடுவிப்பு (Discharge by lapse of time):

இந்திய காலவரையறைச் சட்டப்படி (Law of Limitation) ஒரு ஒப்பந்தம் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றப்பட வேண்டும். அக்காலத்திற்குள் நிறைவேற்றப்படாவிட்டால் அல்லது நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், அந்த ஒப்பந்தம் விடுவிக்கப்படுகிறது. உதாரணமாக சரக்கானது கடனுக்கு (Credit) விற்பனை செய்யப்பட்டால், அக்கடனை கால வரையறைச் சட்டப்படி மூன்று ஆண்டுக்குள் திரும்பப் பெற வேண்டும். அவ்வாறு திரும்பப் பெறத் தவறினால் கடன், காலம் கடந்ததாகும். எனவே திரும்பப் பெற முடியாது. இதனால் குறிப்பிட்ட காலத்திற்குள் ஒப்பந்தம் நிறைவேற்றப்படவில்லை எனில் அது விடுவிக்கப்பட்டதாகி விடுகிறது.

55. Novation - Write short notes. (புத்தீடு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Doctrine of Novation - Write short notes. (புத்தீடு கோட்பாடு – சிறு குறிப்பு எழுதுக.)

(முந்தைய வினாவின் விடையில் காண்க.)

56. Explain the rule in Pinnel's case and mention the exceptions. (பின்னெல் விதியினை விளக்கி அதன் விதிவிலக்குகளை குறிப்பிடுக.)

(அல்லது)

What do you understand by the Rule in Pinnel's case? What

are the limitations to that rule ? (பின்னொல் வழக்கின் விதியால் அறியப்படுவது யாது ? அவ்விதிக்குள்ள கட்டுப்பாடுகள் யாவை ?)

(அல்லது)

Describe the scope of accord and satisfaction (ஒத்திசைவும் உளநிறைவும் என்றக் கோட்பாட்டின் எல்லையை ஆய்க.)

(அல்லது)

Doctrine of accord and satisfaction - Write short notes. (ஒத்திசைவும் உளநிறைவும் கோட்பாடு – சிறு குறிப்பு எழுதுக.)

(வினா எண். 54-ன் வினாயில் காண்க.)

57. Explain the rule relating to anticipatory breach. What are the respective remedies of the parties such cases? (முன் நிகழும் ஒப்பந்த மீறுகை விதியை விளக்குக. அத்தகைய வழக்குகளில் தரப்பினர்களுக்குள்ள தீர்வழிகள் யாவை?)

(அல்லது)

What is anticipatory breach of contract? Discuss the remedies available in anticipatory breach of contract. (எதிர்நோக்கிய ஒப்பந்த மீறுகை என்றால் என்ன? எதிர்நோக்கிய ஒப்பந்த மீறுகையின் போது கிடைக்கக் கூடிய பரிகாரங்களை விவாதிக்க.)

(அல்லது)

What is meant by anticipatory breach of contract? State the rights of parties upon such breach ("எதிர்நோக்கிய ஒப்பந்த முறிவு" என்பதால் அறியப்படுவது யாது? அத்தகைய முறிவில் தரப்பினர்களின் உரிமைகளை எடுத்துக் கூறு.)

(அல்லது)

What is meant by anticipatory breach of contract? Discuss with leading cases. (நிறைநாளுக்கு முன்னர் ஒப்பந்த மீறுகை என்றால் என்ன? தலையாய தீர்ப்புகளின் மூலம் ஆய்க.)

(அல்லது)

Anticipatory breach of contract - Write Short notes. (முன்னெதிர்ப் ஒப்பந்த மீறுகை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Anticipatory breach - Write Short notes. (முன்னிகழ் மீறுகை – சிறு குறிப்பு எழுதுக.)

(வினா எண். 54–ன் விடையில் காண்க.)

58. Explain the doctrine of frustration pointing out the limitations to it. ("ஒப்பந்த நிலைகுலைவு" கோட்பாட்டை அதன் வரையறைகளை எடுத்துக் கூறி விளக்குக.)

(அல்லது)

Discuss the doctrine of frustration in relation to discharge of contractual obligations. Add a note on frustration by delay. (ஒப்பந்தக் கடப்பாடுகளை விடுவித்தல் தொடர்பாக ஒப்பந்த நிலைகுலைவுக் கோட்பாட்டை விவாதிக்க. காலதாமதத்தால் நிலைகுலைவு குறித்து ஒரு குறிப்பையும் தருக.)

(அல்லது)

Explain the doctrine of frustration in the light of the case Satyabrata Ghose v. Magneeram Bangur (AIR 1954 SC 44) [சத்தியப்பிரதா கோஷ் எதிர் மக்னீராம் பாங்குர் வழக்கின் (ஏஐஆர் 1954 எஸ்சி 44) அடிப்படையில், ஒப்பந்த நிலைகுலைவுக் கோட்பாட்டினை விளக்குக.]

(அல்லது)

Explain the Doctrine of Frustration. What effect does this doctrine have on the rights and duties of the parties? Is there any change brought about under English Law (நிலைகுலைவுக் கோட்பாட்டினை விளக்குக. அக்கோட்பாட்டினால் சம்பந்தப்பட்ட தரப்பினரின் கடமைகள், உரிமைகள் எவ்விதம் பாதிக்கப்படும் என்று விளக்குக. இங்கிலாந்து சட்டத்தில் இது குறித்து ஏதேனும் மாற்றம் நிகழ்ந்ததா?)

(அல்லது)

Frustration - Write short notes. (நிலை குலைவு – சிறு குறிப்பு எழுதுக.)

ஒப்பந்த நிலைகுலைவு கோட்பாடு (Doctrine of Frustration):

ஆங்கிலச் சட்டத்தின்படி, ஒரு ஒப்பந்தத்தின் பொதுவான நோக்கம்,

மேலும் நிறைவேற்ற முடியாமற் போனால், நீதிமன்றம் அந்த ஒப்பந்தம் முடிவடைந்து விட்டதாக (Discharged) அறிவிப்பு செய்யும் எனவே நடை முறைப்படுத்தப் படுகின்றது. இது சுருக்கமாக, 'நிலைகுலைவினால் ஒப்பந்த விடுவிப்பு' (Discharge of contract by frustration) எனப்படுகிறது. இது 'சட்டம் நடக்க இயலாததைக் கட்டாயப்படுத்துவதில்லை' (Law does not compel the impossible) எனும் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்ததாகும். இதன் இணையான இந்திய கோட்பாடு 'இடையிட்டு நிகழ்வுறு இயலாமை' (Supervening impossibility) ஆகும்.

நிலைகுலைவின் விளக்கம் :

'ஒரு ஒப்பந்தத்தின் நோக்கம் மேற்கொண்டு செயலாக்க முடியாமல் போனாலோ அல்லது அவ்வொப்பந்தம் தரப்பினர்களின் கட்டுப்பாட்டுக்கு மீறியதான காரணத்தினால் இயலாமற் போனாலோ, அது நிலைகுலைந்ததாகக் கொள்ளப்படும்' என்று நிலைகுலைவின் விளக்கம் கூறப்பட்டுள்ளது. இவ்விதத் தருணங்களில், நீதிமன்றம் அவ்வொப்பந்தம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாகக் கருதி அதன் நிறைவேற்றத்தை வலியுறுத்தாமல் மன்னித்து விட்டுவிடும். (excused).

நிலைகுலைவு கோட்பாடு பயன்படுத்தப்படும் தருணங்கள் :

நிலைகுலைவு கோட்பாடு பின்வரும் தருணங்களில் பயன்படுத்தப்படும். 1. ஒரு இடையிட்ட நிகழ்வு, ஒப்பந்தத்தின் நிறைவேற்றத்தை இயலாத ஒன்றாக செய்திருக்க வேண்டும் (இடையிட்ட நிகழ்வுறு இயலாமை) 2. ஒப்பந்தத்தின் பொது நோக்கம் இடையிட்ட நிகழ்வினால் நிலைகுலைந்திருக்க வேண்டும் (சூழ்நிலை மாற்றம்).

நிலைகுலைவு நிகழும் தருணங்கள் :

1. ஒப்பந்தத்தை தொற்றுவித்த போது, தரப்பினர்கள் எண்ணவியலாத முடியாத ஒரு நிகழ்ச்சி நடந்து விட்டால், அவ்வொப்பந்தம் நிலைகுலைந்ததாகி விடும். நாம் விளக்க எண். 54-ன் விடையில் காண்க **Taylor v. Caldwell**[1] எனும் வழக்கு. இதற்கு நன்கு பொருந்தக் கூடிய ஒரு எடுத்துக்காட்டு வழக்காகும்.

2. தரப்பினர்கள் பொறுப்பாக முடியாத ஒரு நிகழ்ச்சி நடந்திருந்தால் (கடவுள் செயல் முதலியன).

3. ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டால், அது தரப்பினர்கள் செய்து கொண்ட

1. (1863) 122 ER 309 : (1863) 3 B & S 826

பேரத்துக்கு (Bargain) முற்றிலும் மாறுபட்டதாக இருந்தால், அவ்வொப்பந்தம் நிலைகுலைந்ததாகி விடும். நாம் வினா எண். 54–ன் விடையில் கண்ட **Krell v. Henry**[1] எனும் வழக்கு, இதற்கு நன்கு பொருந்தக் கூடிய ஒரு எடுத்துக்காட்டு வழக்காகும்.

நிலைகுலைவு கோட்பாட்டின் வரம்புகள் (Limitations):

1. ஒப்பந்தத்தில் வெளிப்படையாக கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு முரண்பாடான ஒரு நிபந்தனையை உட்கிடையானதாகக் கொள்வது கடினம்.

2. தரப்பாளர்களின் மனதாரத் திட்டமிட்டு, இழைக்கப்பட்ட செய்கையால் விளைந்த நிகழ்வுகளுக்கு இது பயன்படுத்தப்படுவதில்லை.

3. ஒரு தரப்பாளர் ஏற்கனவே இயலாமையை அறிந்திருந்தால், அவ்வொப்பந்தம் நிலைகுலைவினால் விடுவிப்படையாது.

4. வணிகஞ்சார்ந்த இயலாமை, மூன்றாம் நபரினால் ஏற்பட்ட இயலாமை போன்றவற்றிற்கு இது பயன்படுவதில்லை.

நிலைகுலைவு பற்றி இந்தியச் சட்டம் :

நிலைகுலைவு பற்றிய ஆங்கிலச் சட்டம் இந்தியாவில் பயன்படாது. ஏனெனில் இந்தியாவில், 'நிலைகுலைவு' பற்றிய விதிகளை நேரடியாக 'இடையிட்டு நிகழ்வுறு இயலாமை' என்ற தலைப்பின் கீழ் இந்திய ஒப்பந்தச் சட்டமானது பிரிவு 56–ன் வாயிலாக மிகத் தெளிவாகக் கூறியுள்ளது (வினா எண். 54–ல் விரிவாகக் கண்டுள்ளோம்).

ஆகவே, தரப்பாளர்களின் விருப்பத்தின் அடிப்படையில் எதையும் தீர்மானிப்பதற்கு இந்திய ஒப்பந்தச் சட்டம் விட்டுவிடுவதில்லை. ஒப்பந்தத்தின் நிறைவேற்றமானது, எந்த அளவிற்கு நடைமுறைச் சாத்தியம் கொண்டுள்ளது என்பதனடிப்படையில் **'இடையிட்டு நிகழ்வுறு இயலாமை' (Supervening impossibility)** என்ற விதியை இந்திய நீதிமன்றங்கள் பின்பற்றுகின்றன. அதாவது பிரிவு 56–ல் கூறப்பட்டுள்ள வாசகங்களை அப்படியே பொருள் கொள்ளாமல் நடைமுறை சாத்தியபடி (practical not literal) தீர்மானித்து இந்திய நீதிமன்றங்கள் ஒரு ஒப்பந்தத்தை நிலைகுலைந்ததா, இல்லையா என்பது குறித்து முடிவெடுக்கின்றன. இந்திய உச்ச நீதிமன்றம் பின்வரும் வழக்கில் நிலைகுலைவு பற்றிய இந்திய நிலையை விளக்கியுள்ளது.

1. (1903) 2 KB 740

முக்கிய வழக்கு:

Satyabrata Ghose v. Magneram Bangur[1] – இவ்வழக்கில் A என்ற நிறுவனம் B என்பவருடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டது. அதில் நிறுவனம் தனது குடியிருப்பு திட்டத்தின் கீழ் சில மனைகளை B-க்கு விற்றிட உடன்பாடு கொண்டிருந்தது. நிறுவனம் தன் பங்கிற்கு, அப்பகுதிக்கு வேண்டிய சாலைகள் மற்றும் கால்வாய்களை அமைத்துத் தர இசைந்தது. B என்பவர் தன் பங்குக்கு முன் பணமாக ஒப்பந்த நாளில் ஒரு சிறிய தொகையினையும், வசதிகள் ஏற்படுத்தித் தந்த ஒரு மாதத்திற்குள், பத்திரப் பதிவு நாளன்று மூன்றில் ஒரு பங்கைச் செலுத்தியும், மீதியை ஆறு ஆண்டுகளில் 6% வட்டியுடனும் செலுத்துவ தாக ஒப்புக் கொண்டிருந்தார். இவ்வொப்பந்தம் ஏற்பட்ட சில நாட்களிலேயே அந்த மனைகள் அமைந்த ஒரு பகுதியை இராணுவத் தேவைக்காக அரசானது ஆர்ஜிதம் (Aquisition) செய்தது. இதனால் சாலை மற்றும் கால்வாய் அமைக்கும் வேலை நின்றது. இவ்வழக்கில், ஒப்பந்த நிலைகுலைவு ஏற்படவில்லை என்று இந்திய உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. இதற்கான காரணங்கள் வருமாறு

1. ஒப்பந்தக் காலத்தில் சாலை மற்றும் கால்வாய் வேலையை முடிப்பதற்கு காலக்கெடு என்று எதுவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை.

2. அரசால், மனைகள் ஆர்ஜிதம் செய்யப்பட்டது தற்காலிகக் தன்மை உடையது. அது ஒப்பந்தத்தை அழிக்கின்ற அளவுக்கு தடை எதுவும் ஏற்படுத்தி யிருக்கவில்லை. ஆகவே ஒப்பந்தம் விடுவிப்பு அடையவில்லை என்று கூறப்பட்டது.

எனவே, இறுதியாக, இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 56–வது பிரிவு ஒப்பந்த நிறைவேற்ற இயலாமை பற்றிய விதிகளை மிக விரிவாகக் கூறுவதால், ஆங்கிலச் சட்டக் கோட்பாட்டை இறக்குமதி செய்தல் தேவையில்லாதது என்றும், இவ்வாறான சூழ்நிலைகளில், இந்திய நீதிமன்றங்கள், இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 32, 56 ஆகிய பிரிவுகளின் துணையைத்தான் நாட வேண்டும் என்றும் இந்திய உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தது.

1. AIR 1954 SC 45

15

ஒப்பந்த மீறுகைக்கான தீர்வழிகள் [Remedies for Breach of Contract]

59. What are the remedies available under the Indian Contract Act for breach of contract? Discuss in detail. (இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் ஒப்பந்த மீறுகைக்கு கிடைக்கும் தீர்வழிகள் யாவை? விரிவாக விவாதி.)

முன்னுரை :

ஒப்பந்தத்தின் ஒரு தரப்பாளர், அவரது உறுதியுரையை நிறைவேற்ற மறுத்தால், ஒப்பந்த மீறுகை நிகழ்கிறது. இவ்வித தருணத்தில் பாதிக்கப் பட்டவர்கள், (மீறுகை புரியாதவர்) சில சட்ட வழிமுறைகளை நாடலாம். அவற்றின் மூலம் தனக்கு ஏற்பட்ட நட்டம், இழப்பு, தீங்கு முதலியவற்றை ஈடு செய்து கொள்ளலாம். இவற்றையே தீர்வழிகள் (Remedies) என்பர்.

இத்தீர்வழிகளை, பொதுச் சட்டத்தின் (Common Law) மூலமாகவும் கிடைக்கப் பெறலாம். நேர்மை நெறிக் கோட்பாட்டுச் சட்டத்தின் (Principles of Equity) மூலமாகவும் கிட்டலாம். பொதுச் சட்டத் தீர்வழிகள் ஒப்பந்தச் சட்டத்தின் 73 மற்றும் 74–வது பிரிவுகளில் கூறப்பட்டுள்ளன. இதர தீர்வழிகளை குறித்தவகை நிவாரணச் சட்டம் (Specific Relief Act 1963) கொடுக்கிறது. அதாவது, இழப்பீடு அளிப்பது பொதுச் சட்டத் தீர்வழியாகும். ஏனையவை நேர்மை நெறிக் கோட்பாடுச் சட்டத் தீர்வழிகளாகும். விரிவாக விளக்கங்கள் வருமாறு.

ஒப்பந்த மீறுகைக்கான தீர்வழிகள் - என்னென்ன?

ஒப்பந்த மீறுகையால், பாதிக்கப்பட்டத் தரப்பாளருக்குக் பின்வரும் தீர்வழிகளில் ஒன்றோ அல்லது அதற்கு மேலானவையோ கிடைக்கத்தக்கதாகும். 1. ஒப்பந்த நீக்கம் அல்லது இறுத்தம் (Recession); 2. இழப்பீடு கோரி வழக்கு தொடுத்தல் (Damages); 3. பணித்தகு தொகை (Quantum Meruit); 4. ஏற்றதை குறித்த வகையில் ஆற்றும்படி கோரி வழக்கு தொடர்தல் (Specific Performance) 5. உறுத்துக்கட்டளை கோரி வழக்கிடல் (Injunction). இவற்றை பின்வருமாறு விரிவாகக் காண்போமா?

1. ஒப்பந்த நீக்கம் அல்லது இறுத்தம் (Recession of Contract):

ஒப்பந்தத் தரப்பாளர்களிலொருவர் மீறுகை புரிந்தால் அதனால் பாதிப்படைந்த மறுதரப்பாளர், ஒப்பந்தம் நீக்கப் பெற்றுவிட்டதாகக் கருதலாம். இதனால் அவர் ஒப்பந்தத்தின் மூலம் தனக்கேற்பட்ட கடப்பாடுகள் அனைத் திலிருந்தும் விடுவிக்கப் பெறுவார். பிரிவு 64–ன்படி, இவ்வாறு ஒப்பந்த நீக்கம் புரிந்தவர் அவ்வொப்பந்தத்தின் கீழ் தான் பெற்ற பலனை அதனை அளித்தவரிடமே திரும்ப அளிக்க வேண்டும். பிரிவு 75–ன்படி, ஒரு ஒப்பந்தத்தை சரியான முறையில் நீக்கும் (rightfully recinding) தரப்பினர் ஒருவர், அவ்வொப்பந்ததின் நிறை வேறாமையால் அவருக்கு ஏற்பட்ட இழப்புக்கு, இழப்பீடு கோர உரிமை பெற்றவர்.

(எ.கா) A என்ற பாடகர் B என்ற இசை அரங்கு மேலாளரிடம் ஒவ்வொரு வாரமும் இரு இரவுகள் பாடுவதற்காக ஒரு இரவுக்கு ரூ. 100/– எனும் வீதம் ஒப்பந்தம் செய்துக் கொள்கிறார். ஆனால் குறிப்பிட்டப்படி பாடகர், பாட வரவில்லை. எனவே B என்பவர் அவ்வொப்பந்தத்தை நீக்கிவிடுகிறார். இது சரியான முறையில் நீக்கம் செய்ததாகும். எனவே அவர் ஒப்பந்த நிறைவேற்றாமைக்காக தனக்கு ஏற்பட்ட இழப்பிற்காக, அப்பாடகரிடமிருந்து இழப்பீடு கோரலாம்.

2. இழப்பீடு (Damages):

ஒரு ஒப்பந்தம் மீறுகை செய்யப்பட்டால் அதனால் பாதிக்கப்பட்ட தரப்பாளர், இழப்பீடு கோரி வழக்கு தொடுக்க உரிமை பெற்றுள்ளார். (மேலும் விரிவாக அடுத்த வினாவில் காண்க.)

3. பணித்தகு தொகை (Quantum *Meruit*):

'பணித்தகு தொகை' என்பதன் பொருள். 'எவ்வளவு ஈட்டப்பட்டதோ அவ்வளவு' (as much as he earned) அல்லது 'எவ்வளவு தகுமே அவ்வளவு' (as much as he deserves (or) merited) என்பதாகும். அதாவது, ஒப்பந்தத்தின் ஒரு பகுதி ஒரு தரப்பினரால் நிறைவேற்றப்பட்டு, மறு பகுதியானது

மறு தரப்பினரால் நிறைவேற்றப்படாமல் ஒப்பந்த மீறுகை ஏற்படும் பொழுது, அவ்வொப்பந்தம் விடுவிப்படைகிறது. இந்நிலையில் நிறைவேற்றப்பட்ட ஒரு பகுதிக்கு தொகை கோரி வழக்குரைப்பது 'பணித்தகு தொகை' கோரி வழக்கிடல் என்பதாகும். கருங்கக் கூறின், செய்யப்பட்ட செயலுக்கு செலுத்தப்பட வேண்டிய தாக, மறுதரப்பாளரின் உட்கிடையான உறுதியுரையின் அடிப்படையில் இது எழுகிறது. இந்த பணித்தகு தொகை, பிரிவு 70–ன்படி இந்திய நீதிமன்றங்களால் அளிக்கப்படுகிறது. இது, பணி செய்யப்பட்டு, சேவை நிறைவேற்றப்பட்டு, அதற்கான விலை ஒரு ஒப்பந்தத்தின் மூலம் குறிப்பிடப்படாத போது வழங்கப்படும். இது உட்கிடையான ஒப்பந்தம் அளிக்கும் தொகையாகக் கருதப்படும். மேலும், அது நியாயமான இழப்பீடாக அமையும்.

பணித்தகு தொகைக்கும், இழப்பீட்டிற்கும் உள்ள வேறுபாடுகள்:

(a) ஆன்சனின் கூற்றுப்படி, மறுதரப்பாளர் ஒப்பந்த மீறுகை புரியாமல் இருந்தால், பாதிக்கப்பட்ட தரப்பாளர் எந்நிலையில் இருப்பாரோ அந்நிலையில் அவரையிடுவது இழப்பீட்டின் நோக்கமாகும். ஒப்பந்தமே உருவாகாமலிருந்தால், அவர் எந்நிலையிலிருந்திருப்பாரோ, அந்நிலையில் அவரையிடுவது பணித்தகு தொகையின் நோக்கமாகும்.

(b) பணித்தகு தொகைக்கான கோரிக்கை உரிமை, ஒப்பந்தம் வாயிலாக வருவதில்லை. ஒப்பந்தப் போல்வு (quasi-contract) மூலம் எழும் உரிமையாகும். இது ஒப்பந்த மீறுகை சார்ந்த ஒன்றாகும். ஆனால், இழப்பீடு கோரும் உரிமை ஒப்பந்தம் ஒன்றின் மூலமாகவே விளைகிறது.

(c) பணித்தகு தொகை, இழப்பீட்டிற்கான மாற்று வகை (Alternative) ஆகும். இழப்பீடு, தீர்வழியின் ஒரு படிவமாகும்.

பணித்தகு தொகை வாயிலாக உரிமை கோரல் :

இருவகை நிலைகளில் 'பணித்தகு தொகை' எழுகிறது. முதலாவதாக ஒப்பந்தம் எதுவுமேயில்லாமல், ஒரு தரப்பாளர், ஏதாகிலும் பணி செய்தோ, பொருள்களை விற்பனை செய்தோ இருந்தால், அவர் அச்செயலுக்காக ஈடு செய்யப்பட வேண்டுமென்பது இயற்கையே. இது அச்செயலுக்காக மறு தரப்பாளரின் உட்கிடையான உறுதியுரையை அடிப்படையாகக் கொண்டதாகும். இரண்டாவதாக ஒரு ஒப்பந்தம் உருவாக்கப்பட்டு, ஒரு தரப்பாளர் தனது பங்கை நிறைவேற்றி, மீதியை நிறைவேற்ற மறுதரப்பாளரால் தடையேற்படுத்தப்பட்டு, அதன் விளைவாக ஒப்பந்தம் விடுவிப்பு பெற்றதால் உண்டாகும். இத்தருணத்தில் முதல் தரப்பாளர் தனது பகுதியை நிறைவேற்றியமைக்காக ஈடு செய்யப்பட வேண்டும். இதுவே 'பணித்தகு தொகை' கோட்பாடாகும்.

'பணித்தகு தொகை'–க்கான உரிமைக்கோரல் (Claim) எப்பொழுது எழுகிறது?

(a) ஒப்பந்த மீறுகை : ஒப்பந்த மீறுகையேற்பட்டால், பாதிக்கப்பட்ட தரப்பாளர், அவ்வொப்பந்தத்தின் கீழ், தான் செய்த பணிக்கு நியாயமான இழப்பீடு கோர உரிமை பெற்றவர்.

(b) ஒப்பந்தம் 'இல்லா நிலையதென' கண்டறியப்பட்டால் (பிரிவு 65) : ஒரு உடன்பாடு இல்லாநிலை அடைந்து விட்டதாகக் கண்டறியப்பட்டால், அல்லது ஒரு ஒப்பந்தம் இல்லாநிலை அடைந்துவிட்டால், அந்த உடன்பாட்டின் மூலம் அல்லது ஒப்பந்தத்தின் மூலம் ஏதாவது ஆதாயம் அடைந்த நபர், அதை அளித்தவருக்கு அதனைத் திருப்பித் தரக் கடமைப்பட்டவராகிறார்.

(c) கொடை நோக்கமின்றி (Non-gratuitously) ஏதாகிலும் செய்யப்பட்டிருந்தால் (பிரிவு 70) : கொடை நோக்கமின்றி, ஒரு நபர் பணி செய்திருந்தால், அல்லது பொருட்கள் வழங்கியிருந்தால், அதன் பலனைப் பெற்ற நபர், பணி செய்த அல்லது பொருட்களை வழங்கிய அந்நபருக்கு அவ்வாறான பணிக்கோ, பொருட்களுக்கோ ஈடு அளிக்க கடமைப்பட்டவராவர்.

(d) ஒப்பந்தம் பிரிக்கத்தக்கதாக இருப்பின் : ஒரு ஒப்பந்தம் பிரிக்கத்தக்கதாக இருந்து, அதன் ஒரு தரப்பாளர் அவருடைய கடப்பாட்டின் ஒரு பகுதியை செய்திருந்தால், 'பணித்தகு தொகை' கோட்பாட்டின் கீழ் வழக்குரைக்க உரிமை பெறுகிறார். இந்த விதி ஒப்பந்த மீறுகை புரிந்த தரப்பாளர்களுக்கும் பொருந்தும்.

4. ஏற்றதை குறித்த வகையில் ஆற்றும்படி கோரல் (Specific Performance):

ஒரு ஒப்பந்தத்தை அதில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள வரைமுறைகளின்படி அப்படியே நிறைவேற்ற வழக்குத் தொடர்தல் என்பதே, 'ஏற்றுக் கொண்டதை ஏற்றுக் கொண்டவாறு செயலாற்றும்படி கோரல்' என்று பொருளாகும். இழப்பீடுகள் போதுமான தீர்வழியாக அமையாவிட்டால், நீதிமன்றம் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயலையேச் செய்து ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும் என உத்திரவிடலாம். நீதிமன்றம் இது போன்ற விருப்புரிமையை (discretion) குறிப்பிட்ட சில வழக்குகளில்தான் செயல்படுத்தமுடியும். பின்வரும் சூழ்நிலைகளில் 'ஏற்றது ஆற்றல்' எனும் தீர்ப்பாணை நீதிமன்றத்தால் அளிக்கப்படுகிறது.

(a) ஒப்பந்த மீறுகைக்கு பண இழப்பீடு போதுமான தீர்வழியாக இல்லாத பொழுது;

(b) ஒப்பந்த நிறைவேற்றாமையினால் தோன்றிய இழப்பை அளவிட சரியான அளவுகோல் இல்லாத பொழுது;

(c) ஒப்பந்த நிறைவேற்றாமைக்கு பணம், ஒரு போதுமான இழப்பீடாக, அமையாத பொழுது.

பொருட்கள் விற்பனையைப் பொறுத்தவரை, அவை குறித்தவகையான பொருட்களாக (Specific goods) இருந்தால் இவ்வாணை அளிக்கப்படும். பொருள்கள் தனித்தன்மை வாய்ந்தவையாக (Unique) இல்லாமலும், சந்தையில் எளிதில் வாங்கக் கூடியதாகவும் இருந்தால் இவ்வாணை கிட்டாது. நிலம், அரும் பொருள்கள் (Rare articles), பழமையான பொருள்கள் (antiques) முதலிய விற்பனைகளில் நீதிமன்றம் பொதுவாக இவ்வாணையைப் பிறப்பிக்கும்.

5. உறுத்துக்கட்டளை கோரி வழக்குரைத்தல் (Injunction):

ஒரு நபரை ஒரு செயல் செய்வதிலிருந்து தடை செய்ய நீதிமன்றம் இடும் ஆணை, உறுத்துக்கட்டளை எனப்படும். ஒப்பந்தத்தில் ஒரு தரப்பினர், தான் ஒன்றைச் செய்வதில்லை என உறுதியுரைத்து, அதை செய்து ஒப்பந்த மீறுகை புரியவிருந்தால், பாதிக்கப்படவிருக்கும் நபர் நீதிமன்றத்தை நாடி உறுத்துக் கட்டளைக்கான ஆணையைப் பெறலாம். இந்த ஆணை ஒப்பந்தத்திற்கு மாறான செயலை செய்வதை தடுப்பதாக அமையும். [மேலும் அதிக விபரங்களுக்கு இந்நூலாசிரியரின் 'குறித்தவகை நிவாரணச் சட்டம்' (The Specific Relief Act) எனும் நூலில் காணவும்.]

60. Quantum Meruit - Write short notes. (பணித்தகு தொகை – சிறு குறிப்பு எழுதுக.)

[முந்தைய வினாவின் விடையில் காண்க]

61. Explain the nature of "damages" in the law of contract. Mention the different types of "damages" (ஒப்பந்தச் சட்டத்தில் "இழப்பீட்டின்" தன்மையை விளக்குக. "இழப்பீட்டின்" பல்வேறு வகைகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

What us the rule in Hadley Vs. Baxendale? When can special damages be granted? (ஹேட்லி எதிர் பேக்ஸன்டேல் வழக்கு விதியைக் கூறு. எப்போது சிறப்பு இழப்பீடு தரப்படும்?)

(அல்லது)

Wtite Short notes on the kinds of damages. State the facts of Hadley Vs. Baxendale and discuss the rule derived from

it. (இழப்பிடுகளின் வகைகள் குறித்து சிறு குறிப்புகள் எழுதுக. ஹேட்லி எதிர் பேக்ஸன்டேல் வழக்கின் பொருண்மைகளைக் குறிப்பு, அதிலிருந்து பெறப்பட்ட விதியை விவாதிக்க)

(அல்லது)

Nominal damages - Write short notes. (பெயரளவு இழப்பீடு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Special damages - Write short notes. (சிறந்த இழப்பீடு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Hadley Vs. Baxendale - Write short notes. (ஹாட்லி எதிர் பாக்ஸன்டேல் – சிறு குறிப்பு எழுதுக.)

இழப்பீடு – தன்மை :

ஒரு ஒப்பந்தம் மீறுகை செய்யப்பட்டால், அதனால் பாதிக்கப்பட்ட தரப்பாளர், இழப்பீடு கோரி வழக்கிடும் உரிமை பெற்றிருக்கிறார். இழப்பீடு என்பது, 'பாதிக்கப்பட்டவருக்கு ஒப்பந்த மீறுகையால் ஏற்பட்ட இழப்புக்காக நீதிமன்றத்தால் ஆணையிடப்பட்டு கொடுக்கப்படும் பண நிறையீடேயாகும்'. இழப்பீடுகள் ஆணை யிடப்படுவதன் நோக்கம், 'ஒப்பந்த மீறுகையின்றி, அவ்வொப்பந்தம் நிறைவேற்றப் பட்டிருந்தால், பாதிக்கப்பட்டவர், எந்த நிதி நிலையில் இருப்பாரோ, அதே நிலைக்கு அவரைக் கொண்டு சேர்ப்பதாகும்', என்று **B. Sunley & Co. v. Cunard White Star Ltd.**[1] எனும் வழக்கில் கூறப்பட்டது. ஆனால் இது முழுமையான விதியல்ல. ஏனெனில் சில சமயங்களில் ஒப்பந்தம் மீறப்பட்டிருக்கும். ஆனால் இழப்பு ஏதும் ஏற்பட்டிருக்காது. அதுபோல் எல்லா இழப்புகளுக்கும் இழப்பீடு கிடைப்ப தில்லை. ஏனெனில் அவை மிகவும் விலகிய இழப்புகளாக (Remote loss) கருதப்படுபவையாக இருக்கும்.

இழப்பீடு குறித்து பிரிவு 73 கூறுவதாவது:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 73–வது பிரிவானது, ஒரு ஒப்பந்தம் மீறப் பட்டால், பாதிக்கப்பட்ட தரப்பினர், பின்வரும் கோரிக்கைகளை எழுப்ப உரிமை பெற்றவராகிறார், என்று கூறுகிறது. அவை

1. (1940) K.B. 740, 745

(1) மீறுகையால் ஏற்பட்ட இயல்பான இழப்பீட்டை கோரி வழக்கிடலாம். இது சாதாரண இழப்பீட்டு வகையைச் (Ordinary damages) சார்ந்ததாகும்.

(2) தரப்பாளர்கள், ஒப்பந்தம் உருவாகிய காலத்தில் அறிவித்திருந்த சிறப்பு சூழ்நிலைகள் காரணமாக எழுந்த இழப்புகளுக்காக இழப்பீடு கோரி வழக் கிடலாம். இது சிறப்பு இழப்பீட்டு வகையைச் (Special damages) சார்ந்ததாகும். [மேற்படி இரு விதிகளும் **Hadley v. Baxendle** எனும் வழக்கிலிருந்து பெறப் பட்டதாகும். அதன் பொருண்மைகளை பின்னர் விரிவாகக் காண உள்ளோம்.]

(3) மீறுகையால் ஏற்பட்ட மிக விலகிய, மறைமுகமான நட்டம் அல்லது இழப்புக்கு, இழப்பீடு கிடையாது.

(4) ஒப்பந்தப் போல்வு (Quasi-Contract) ஒன்றின் மீறுகையினால் இழப்புக்கு தரப்படும் இழப்பீடு, மற்ற ஒப்பந்த மீறுகைக்கு தரப்படும் இழப்பீடு போன்றதே.

இழப்பீடுகளின் வகைகள் :

1. சாதாரண இழப்பீடு (Ordinary Damages) அல்லது பொதுவான இழப்பீடு (General Damages) அல்லது போதுமான இழப்பீடு (Substantial Damages):

ஒருவர் செய்த ஒப்பந்த மீறுகையினால் மற்றொருவருக்கு உண்மையிலேயே (actually) ஏற்பட்ட இழப்பிற்கு சரிநிகராக ஈடு செய்யும் வகையில் அளிக்கப்படும் இழப்பீடே "சாதாரண இழப்பீடு" என்றழைக்கப்படுகிறது.

(எ.கா) A என்பவர் B என்பவருக்கு 10 மூட்டை அரிசியை சனவரி மாதம் முதல் தேதியன்று கொடுப்பதாக ஒப்புக் கொள்கிறார். மூட்டை ஒன்றுக்கு ரூ. 900/– என விலை நிர்ணயம் செய்து கொள்ளப்படுகிறது. ஆனால் ஒப்பந்தம் மேற் கொண்ட பிறகு, மூட்டை ஒன்று ரூ. 1000/–க்கு சந்தையில் விற்கப்படுவதைக் கண்ட A என்பவர், தான் ஒப்புக் கொண்டபடி B–க்கு அரிசி மூட்டைகளை கொடுக்க மறுக்கிறார். அதனால் மேற்படி B என்பவர், மற்றொரு அரிசி வியாபாரியான C என்பவரிடமிருந்து மூட்டை ஒன்றுக்கு ரூ. 1000/– வீதம் 10 மூட்டைகளை வாங்குகிறார். இங்கு A என்பவர் செய்த ஒப்பந்த மீறுகையினால் B-க்கு இழப்பு ஏற்படுகிறது. ஆகவே அந்த இழப்பிற்கு ஈடாக ஏதாவது ஒரு இழப்பீட்டுத் தொகையை B-க்கு, மேற்படி A கொடுக்கச் சட்டப்படி கடமைப்பட்டவராகிறார். இதில் இழப்பீட்டுத் தொகையாக எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்ற வினா எழுகிறது. B-க்கு ஏற்பட்ட உண்மையான இழப்பிற்கு (actual loss) சரி ஈமமாக இழப்பீடு அளிக்கப்பட வேண்டும்.

அதாவது மேற்படி எடுத்துக்காட்டில் A என்பவர், அரிசி மூட்டை ஒன்றை

ரூ. 900/– மீதம் கொடுக்க ஒப்புக் கொண்டிருந்தார். ஆனால் ஒப்புக் கொண்டபடி A என்பவர் அரிசி மூட்டைகளை கொடுக்காததால், B என்பவர், மற்றொரு அரிசி வியாபாரியான C என்பவரிடம் மூட்டை ஒன்றுக்கு ரூ.1000/– மீதம் வாங்குகிறார். அதாவது மூட்டை ஒன்றுக்கு ரூ. 100/– அதிகம் கொடுத்து வாங்குவதால் 10 மூட்டைகளுக்கு B என்பவர் ரூ. 1000/– அதிகம் கொடுக்க வேண்டி வந்தது. ஒப்புக் கொண்டபடி A என்பவர் அரிசியைக் கொடுத்திருந்தால் B-க்கு ரூ. 1000/– இழப்பு ஏற்பட்டிருக்காது. இதில் உண்மையிலேயே ரூ. 1000/– இழப்பு ஏற்படுவதால், அந்த இழப்பிற்கு சரி நிகராக A என்பவர், B என்பவருக்கு ரூ.1000/– இழப்பீட்டுத் தொகையாகக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறார்.

இது போன்ற ஒப்பந்த மீறுகையில், ஒப்பந்த விலைக்கும் (Contract price), சந்தை விலைக்கும் (Market price) உள்ள வேறுபாட்டின் அளவையே இழப்பீடாகப் பெற முடியும்.

2. சிறப்பு இழப்பீடு (Special Damages) :

வழக்கில் நிரூபிக்கப்படும் சிறப்புச் சூழ்நிலைக்கேற்ப கோரப்படும் இழப்பீட்டை 'சிறப்பு இழப்பீடு' என்பர். ஒப்பந்த தரப்பாளர்கள் தாங்கள் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் அதிக இலாபம் பெறக்கூடிய சிறப்புச் சூழ்நிலைகள் (special circumstances) இருப்பதுண்டு. அத்தகைய சூழ்நிலைகளில் ஏற்படுகின்ற ஒப்பந்தங்களில் ஒப்பந்த மீறுகை ஏற்பட்டால், அதற்கு சிறப்பு இழப்பீடு தர வேண்டும். அத்தகைய சிறப்பு சூழ்நிலைகள் அவ்வொப்பந்தத்தில் இருப்பதை ஒப்பந்தம் செய்து கொள்ளும்போது தரப்பாளர்களில் சம்பந்தப்பட்டவர், மற்றொருவரின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும். அவ்விதம் கொண்டுவரத் தவறினால் பாதிக்கப்பட்டவர் சிறப்பு இழப்பீடு பெற முடியாது. இது குறித்து பின்வரும் ஒரு முக்கியமான வழக்கை கவனிப்போம்.

Hadley v. Baxendale[1]

இவ்வழக்கில் A என்பவர் ஆலை (Mill) ஒன்றின் அதிபர். அவரது ஆலையில் உள்ள ஒரு இயந்திரத்தின் ஊடச்சு (crank-shaft) உடைந்துவிட்டது. இந்த ஊடச்சு இல்லாமல், அந்த ஆலை இயங்காது. எனவே பழுது பார்ப்பதற்காக அதனை, B என்பவர் மூலம் கிரீன்விச் எனுமிடத்தில் உள்ள பழுது நீக்குமிடத்திற்கு அனுப்பி வைத்தார். ஆனால் அந்த இயந்திரம் இல்லாமல் ஆலை இயங்காது எனும் விபரத்தை A என்பவர் B என்பவரிடம் தெரிவிக்கவில்லை. அந்த ஊடச்சை பழுது பார்த்து திரும்பக் கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டதால், ஒரு குறிப்பிட்ட காலம் வரை அவ்வாலை இயங்காமல் இருந்தது. அதனால் இழப்பீடு (Damages) கோரி

1. (1854) 9 Ex. 341

A என்பவர் B என்பவர் மீது பின்வரும் இரண்டு காரணங்களின் பேரில் வழக்குத் தொடர்ந்தார். அவை (1) பழுதுபார்த்துக் கொடுப்பதில் ஏற்பட்ட கால தாமதத்திற்காக (2) அந்த ஊர்ச்ச குறித்த காலத்தில் பழுது பார்த்துக் கொடுக்கப்படாததால், ஆலை இயங்காமல் இருந்தது; அதனால் இலாப இழப்பு ஏற்பட்டதற்காக.

வழக்கை ஆராய்ந்த நீதிமன்றம், முதல் காரணத்திற்காக கிடைக்கத்தக்க இழப்பீடு 'பொது இழப்பீடு' (General Damages) என்றும், அதைப் பெற A-க்கு உரிமையுண்டு என்றும், இரண்டாவது காரணத்திற்காக கோரப்படும் இழப்பீடு, சிறப்பு இழப்பீட்டு (Special Damages) வகையைச் சார்ந்ததாகும் என்றும், அதைப் பெற A-க்கு உரிமையில்லை என்றும், ஏனெனில், A-யின் ஆலையில் உபரியாக ஊர்ச்ச ஏதும் இல்லை; எனவே உடைந்து போன அவ்வூர்ச்ச குறித்த காலத்தில் பழுது நீக்கிக் கொடுக்கப்படாவிட்டால், ஆலை இயங்காது; அதனால் இலாப இழப்பு ஏற்படும் எனும் சிறப்புச் சூழ்நிலைகளை B-க்கு A என்பவர் தெரிவிக்கவில்லை என்றும் கூறி, A-க்கு சிறப்பு இழப்பீட்டை வழங்க நீதிமன்றம் மறுத்துவிட்டது. எனவே, ஒரு ஒப்பந்தத்தில், அதற்கு தொடர்புடைய சிறப்பு சூழ்நிலைகளை வெளிப்படுத்தியிருந்தால்தான், சிறப்பு இழப்பீடு பெற முடியும் எனும் முக்கியமான கருத்து மேற்படி வழக்கில்தான் விளைந்தது என்றால் அது மிகையல்ல.

3. எச்சரிக்கை இழப்பீடு (Examplary or Vindictive Damages):

தனது மன உணர்வை மற்றொருவர் புண்படுத்தியதற்காக அவரிடமிருந்து பெறும் இழப்பீடே 'எச்சரிக்கை இழப்பீடு' (Examplary Damages) ஆகும். இதனை 'பழி கொள்ளத்தக்க இழப்பீடு' (Vindictive Damages) என்றும் கூறுவர். ஆனால் இத்தகு இழப்பீட்டிற்கு தீங்கியல் சட்டத்தில்தான் (Law of Torts) இடமிருக்கிறதே தவிர, ஒப்பந்தச் சட்டத்தில் கிடையாது.

(எ.கா.) A என்பவர் B என்ற பெண்ணை திருமணம் செய்து கொள்வதாக உறுதியுரை அளிக்கிறார். திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்து முடித்த பிறகு, A, B-யை திருமணம் செய்துகொள்ள மறுத்து விடுகிறார். இதனால் மன வருத்தமடைந்த B 'எச்சரிக்கை இழப்பீடு' கோரி A என்பவர் மீது வழக்கு தொடரலாம்.

4. பெயரளவு இழப்பீடு (Nominal Damages):

ஒப்பந்த மீறுகை ஏற்பட்டிருந்தும், அதனால் மற்றவருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாத சூழ்நிலையில் அளிக்கப்படும் இழப்பீடு பெயரளவு இழப்பீடாகும். இவ்வித இழப்பீடுகள், பாதிக்கப்பட்டவரின் இழப்பீடு கோரும் உரிமையை நிலை நாட்ட வழங்கப்படுபவை. இழப்பீடாக ரூ.1/– அல்லது ரூ. 2/– வழங்கப்படும். இவை

இழப்பீடு கோரும் வழக்கில் பாதிக்கப்பட்டவர் வெற்றி பெற்றதை குறிக்கும் வகையில் வழங்கப்படுகிறது.

62. State the basic rules govering the assessment of damages for breach of contract. Discuss the duty of the plaintiff to mitigate damages. (ஒப்பந்த முறிவிற்கு இழப்பீட்டை மதிப்பீடு செய்ய வகைப் படுத்தும் அடிப்படை விதிகளை எடுத்து கூறுக. இழப்பீட்டை மட்டுப்படுத்த வாதியின் கடமையை விவாதிக்கவும்).

(அல்லது)

"If the Contract is broken, the law will endeavour, so far as money can do, to place the injured party in the same position as if the contract had been performed"- Discuss. ("ஒரு ஒப்பந்தம் மீறப்பட்டால், இழப்பு அடைந்த தரப்பினரை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருப்பின், எந்நிலையில் இருப்பாரோ அந்நிலையில் பணத்தால் முடிந்தவரை வைக்க சட்டம் முயலும்." விவாதிக்க.)

(அல்லது)

Discuss the basic principles and guiding factors for awarding damages for breach of contract. (ஒப்பந்த மீறுகைக்கான இழப்பீடு அளிப்பதற்குண்டான அடிப்படைக் கொள்கைகளையும் வழிகாட்டும் கூறுகளையும் விவாதிக்க.)

(அல்லது)

Explain the principles governing the ascertainment of damages for breach of contract. (ஒப்பந்த முறிவினால் ஏற்படும் இழப்பீடுகளைத் தீர்மானிக்க உதவும் சம்பந்தப்பட்ட நெறிமுறைகளை விளக்குக.)

(அல்லது)

State the principles relating to the award of damages for breach of contract. (ஒப்பந்த முறிவிற்காக அளிக்கப்படும் இழப்பீடுகள் பற்றிய விதிகளைக் கூறுக.)

(அல்லது)

Damages for breach of contract - Write short notes. (ஒப்பந்த முறிவின் இழப்பீடுகள் – சிறு குறிப்பு எழுதுக.)

ஒப்பந்த மீறுகைக்கான இழப்பீட்டை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படை விதிகள் :

இவ்விதிகளைப் பற்றி இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 73 முதல் 75 வரை உள்ள பிரிவுகள் விளக்குகின்றன. அவை வருமாறு.

1. பண இழப்பீடு (Money Compensation) :

ஒப்பந்த மீறுகையால் ஒரு தரப்பாளருக்கு இழப்பு ஏற்பட்டு, அவ்விழப்பை சரிக்கட்டுவது பணத்தால் முடியுமென்றால், ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டால், அவர் எந்நிலையில் இருந்திருப்பாரோ, அந்நிலையை அடையத்தக்க அளவில் அவருக்குக் கொடுக்கப்படும் இழப்பீடானது அமைய வேண்டும். இதைத்தான், "**ஒரு ஒப்பந்தம் மீறப்பட்டால், இழப்பு அடைந்த தரப்பினரை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருப்பின், எந்நிலையில் இருந்திருப்பாரோ அந்நிலையில் பணத்தால் முடிந்தவரை வைக்க சட்டம் முயலும்,**" என்று கூறப்படுகிறது. இவ்விதி **B. Sunley & Co. v. Cunard White Star Ltd.**[1] எனும் வழக்கிலிருந்து பெறப்பட்டதாகும்.

2. உண்மையான இழப்பு (Actual loss):

பொதுவாக பாதிக்கப்பட்ட தரப்பாளர், தனக்கு நேரிட்ட உண்மையான இழப்பிற்கு மட்டுமே இழப்பீடு பெற உரிமையானவர் ஆவார். எனினும் அவர் வழக்கு தொடுத்து, தீர்ப்பாணை பெறுவதற்கான செலவுத் தொகையை (Cost of Decree) ஒப்பந்த மீறுகை புரிந்த பிரதிவாதியிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

3. இழப்பைக் கணக்கிடுதல் (Calculation of loss) :

ஒப்பந்த மீறுகையால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உள்ளபடியாக அதாவது உண்மையாக எவ்வளவு இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதை முதலில் கணக்கிட வேண்டும். அதன் அடிப்படையில் இழப்பீட்டை தீர்மானித்தல் வேண்டும். அது நியாயமான ஒன்றாக இருக்க வேண்டும்.

4. மிக விலகிய விளைவுகளுக்கு இழப்பீடு கிடையாது (No damages for remote consequences):

நேரடியாக ஏற்படும் இழப்புகளுக்கு மட்டுமே இழப்பீடு வழங்கப்பட வேண்டும். மிக விலகிய மறைமுகமான விளைவுகளுக்கு இழப்பீடு கிடையாது.

5. இழப்பீட்டை மதிப்பிடுவதில் கடினம் (Difficulty of assessing damages):

இழப்பீட்டை மதிப்பிடுவது கடினமாக உள்ளது எனும் காரணத்தால் மட்டுமே, ஒப்பந்த மீறுகை புரிந்த தரப்பினரை இழப்பீடு வழங்குவதிலிருந்து விடுவித்துவிடாது. பாதிக்கப்பட்ட தரப்பினர் இழப்பீடு பெற உரிமை படைத்தவரே.

6. சிறப்பான குழ்நிலைகள் ஒப்பந்தத்தில் வெளிப்படுத்தப்பட்டிருந்தால் மட்டுமே சிறப்பு இழப்பீடு (Special damages awarded only when there is special circumstances expressed in the contract):

ஒரு ஒப்பந்தம் மீறுகை புரியப்பட்டால், அதனால் இலாப இழப்பு ஏற்படும் என்பதற்குண்டான சிறப்பான குழ்நிலைகளை, அவ்வொப்பந்தம் செய்து கொள்ளும் பொழுதே, வெளிப்படுத்தியிருந்தால் மட்டுமே, சிறப்பு இழப்பீடு வழங்கப்படும். இந்நிலைப்பாடு குறித்து நாம் ஏற்கனவே **Hadley v. Baxendale**[1] எனும் வழக்கில் கண்டோம். அங்கு சிறப்பு இழப்பீடு வழங்கப்படவில்லை. ஆனால் பின்வரும் மற்றொரு வழக்கில் அத்தகு இழப்பீடு வழங்கப்பட்டது.

Simpson v. London and North Western Railway Co.[2] – இவ்வழக்கில், வாதியானவர், தனது சரக்குகளின் மாதிரிகளை (specimens) நாட்டில் ஆங்காங்கே நடக்கும் வேளாண் பொருட்காட்சிகளில் பார்வைக்கு வைப்பதற்காக அனுப்புவதை வழக்கமாகக் கொண்டவர். அவ்வாறு பெட்ஃபோர்ட் எனுமிடத்தில் நடந்த பொருட்காட்சியில் அவரது சரக்குகளின் மாதிரிகளை பார்வைக்கு வைத்த பின்னர், அவற்றை நியூகேசில் எனுமிடத்தில் நடக்கும் பொருட்காட்சியில் வைப்பதற்காக அனுப்பும் பொருட்டு, பிரதிவாதியின் முகவரிடம் ஒப்படைத்தார். சரக்குச் சீட்டில் (consignment note) **"திங்கட்கிழமையன்று நிச்சயமாக அவை நியூகேசிலில் இருத்தல் வேண்டும்" ("Must be at Newcastle Monday certain")** என்று வாதி குறிப்பிட்டார். ஆனால் அம்மாதிரிகள், காலதாமதமாக நியூகேசிலை வந்தடைந்தன. இதனால் அவற்றை பொருட்காட்சியில் பார்வைக்காக வைக்க இயலவில்லை. எனவே தனக்கு இலாப இழப்பு ஏற்பட்டதாக கோரி சிறப்பு இழப்பீடு கோரி வாதி மேற்படி வழக்கிட்டார். வழக்கை ஆராய்ந்த நீதிமன்றம், சரக்குகளின் மாதிரிகளை நியூகேசிலில் நடக்கும் பொருட்காட்சியில் பார்வைக்காக வைக்க வேண்டும் எனும் சிறப்பு குழ்நிலையை, பிரதிவாதியின் முகவர், அம்மாதிரிகளை அனுப்புகைக்காக வாதியிடமிருந்து பெறும் பொழுதே அறிவார் என்றும், அறிந்தும் காலதாமதம் செய்ததால் ஏற்பட்ட இலாப இழப்பிற்காக, வாதிக்கு பிரதிவாதி சிறப்பு இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் தீர்ப்புரைத்தது.

7. ஒப்புக் கொள்ளப்பட்ட தொகை (Agreed Amount) :

ஒப்பந்த மீறுகை ஏற்பட்டால், இழப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பது ஒப்பந்தத் தரப்பாளர்களால் ஒப்பந்த நேரத்தில் ஏற்கனவே ஒப்புக் கொள்ளப் பட்டிருந்தால், அத்தொகையை இழப்பீடாக வழங்க வேண்டும். அவ்வாறு ஒப்புக் கொள்ளப்பட்டதற்கு அதிகமாக இழப்பீடு பெற முடியாது.

1. (1854) 9 Ex. 341
2. (1876) 1 QBD 274

Cellulose Acetate Silk Co. v. Widnes Foundry[1] – எனும் வழக்கில், காலதாமதம் ஏற்படும் ஒவ்வொரு வாரத்திற்கும் 20 பவுண்டு பணத்தை தண்டத் தொகையாக (penalty) செலுத்த வேண்டும் என்று ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அந்த வகையில் 30 வாரங்கள் காலதாமதம் ஏற்பட்டது. எனவே ஒப்பந்தத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டபடி 600 பவுண்டு பணத்தை தண்டத் தொகையாக காலதாமதம் செய்து ஒப்பந்த மீறுகை புரிந்த தரப்பினர், பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு செலுத்த வேண்டும் என்று தீர்ப்புரைக்கப்பட்டது.

8. இழப்பீட்டை மட்டுப்படுத்த வாதிக்குள்ள கடமை (Duty of plaintiff to mitigate damages) :

ஒப்பந்த மீறுகையின் மூலம் ஒரு தரப்பாளருக்கு இழப்பு ஏற்பட்டால், அவர் உடனே அதனால் தனக்கு மேலும் இழப்பு ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாது விடுத்தால் அவருக்கு மேற்கொண்டு ஏற்படும் இழப்பிற்கு மறு தாப்பாளரிடமிருந்து இழப்பீடு கோர முடியாது.

அதாவது இழப்பீடு கோரி வழக்கு தொடுக்கும் பாதிக்கப்பட்ட தரப்பாளர் (வாதி) அதனை மட்டுப்படுத்துவதற்கு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமோ, அவற்றினை உடனே செய்ய வேண்டும். இதற்கு மாறாக, மேலும் இழப்பு ஏற்படட்டும் என பேசாமல் இருந்துவிட்டு, அதற்கும் சேர்த்து பிரதிவாதி யிடமிருந்து இழப்பீடு கோர முடியாது.

எடுத்துக்காட்டாக, B என்பவரின் விரிசலான சுவற்றை சரி செய்வதற்கு A என்பவர் ஒப்புக் கொண்டார். ஆனால் ஒப்புக் கொண்டபடி A அச்சுவற்றை சரி செய்யவில்லை. இதைச் சாதகமாக பயன்படுத்திக் கொண்டு, வரப்போகும் மழையில் மேலும் அச்சுவர் நனைந்து முற்றிலும் இடிந்து விழுந்த பிறகு அதற்கும் சேர்த்து ஒட்டு மொத்தமாக A–யிடமிருந்து இழப்பீடு கோரலாம் என்று B பேசாமல் இருப்பின் அவருக்கு சட்டம் உதவாது. மாறாக, அச்சுவற்றை வேறு ஏதேனும் வழியில் சரி செய்யத் தேவையான நடவடிக்கைகளை B எடுத்திருக்க வேண்டும். அதன் பிறகு இழப்பீடு கோரினால், அது மிக்க நியாயமானதாகும்.

ஏற்பட்டுள்ள உண்மையான இழப்பிற்கு ஈடுகட்டும் விதத்தில் அளிக்கப் படும் தொகையே இழப்பீடு ஆகும். இதை விடுத்து நியாயமற்ற விதத்தில் செயல் பட்டு, அதிகமான தொகையை வாதி இழப்பீடாக கோர முடியாது. ஆகவே, இழப்பீட்டை சரியான அளவிற்கு குறைத்தல் வாதியின் கடமையாகும்.

1. (1931) 2 K.B. 393 affirmed on appeal (1933) A.C. 20

9. எச்சரிக்கை இழப்பீடு (Vindictive damages) :

ஒப்பந்த மீறுகைக்காக எச்சரிக்கை இழப்பீடு அளிக்க முடியாது. ஆனால் இதற்கு திருமணை உறுதியுரை மீறல், வங்கியால் தவறுதலாக மதிப்பு மதிக்கப்பட்ட காசோலை (Dishonoured Cheque) ஆகியவை விதிவிலக்காகும்.

10. பெயரளவு இழப்பீடு (Nominal damages) :

பாதிக்கப்பட்ட தரப்பாளருக்கு பெரிய இழப்பு ஏதும் ஏற்படவில்லையெனில், இழப்பீடு கோரும் உரிமையை நிலைநாட்ட பெயரளவு இழப்பீடு வழங்கப்படும். இது மிகக் குறைந்த தொகையின் அளவில் இருக்கும். (எ.கா.) ரூ.1/– அல்லது ரூ.2/–.

11. விற்பனை ஒப்பந்தங்கள் (Contract of Sale) :

விற்பனை மற்றும் கொள்முதல் ஒப்பந்தங்களில் பொதுவாக ஒப்பந்த விலைக்கும், ஒப்பந்த மீறுகை ஏற்பட்ட தேதியில் இருந்த சந்தை விலைக்கும் உள்ள வேறுபாடு இழப்பீடாகக் கணக்கிடப்படும்.

12. வட்டியை இழப்பீடாக அளித்தால் (Interest as Damages):

குறிப்பிட்ட நாளில் பணம் செலுத்தாததால் ஏற்படும் மீறுகைக்கு, நீதிமன்றம் அசல் தொகையை அதற்கான வட்டியுடன் கணக்கிட்டு இழப்பீடாகத் தரும்படி நீதி மன்றம் ஆணையிடும். எனவே அசல் செலுத்தத் தவறியதன் காரணமாக அதிகரிக் கப்பட்ட வட்டியை ஒப்பந்தத்தில் நிருணயித்துக் கொள்வது, பிரிவு 73–ன்படி 'தண்டப் பணமாகும்'. வட்டி கீழ்காணும் தருணங்களில் மட்டுமே இழப்பீடாக அளிக்கப்படும்.

(அ) ஒப்பந்தத்தில், ஒரு குறிப்பிட்ட தினத்தில் பணம் செலுத்தத் தவறினால், அதற்குபின் அந்த தொகைக்கு வட்டி தரப்பட வேண்டுமென்று விதியிருக்க வேண்டும். (ஆ) வணிக வழக்காறுகளில் வட்டி வழங்குவது இயல்பாக இருக்க வேண்டும். (இ) 1830–ம் ஆண்டின் வட்டிச் சட்டம், அல்லது 1930–ன் சரக்குகள் விற்பனைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் வட்டி வழங்கப்படலாம்.

நீதிமன்றம் நியாயமான வட்டியையே அளிக்கும். ஒப்புக் கொள்ளப்பட்ட வட்டி அதிகமானதாக இருப்பின், அதற்கு வேறு தீர்வழி (Relief) அளிக்கும்.

13. வசதிக்கேட்டிற்கும், நலக்குறைவுக்கும் இழப்பீடு (Damages for Inconvenience and discomfort):

பிரிவு 73–ல் கூறப்பட்ட விளக்கத்தில், ஒப்பந்த மீறுகையால் விளையும் இழப்பைக் கணக்கிடும் போது, ஒப்பந்த நிறைவேற்றாமையால் ஏற்படும் வசதிக் கேட்டிற்கான தீர்வழியின் வழிவகைகளும் கணக்கில் கொள்ளப்படும் என்று கூறப்

பட்டுள்ளது. (ஆனால் அதே நேரத்தில், நாம் மேலே கண்டவாறு இழப்பீட்டைக் குறைத்துக் கொள்வது பாதிக்கப்பட்டத் தரப்பாளரின் கடமையாகும்.)

63. What is meant by "Penalty"? How is it distinguished from liquidated damages. ("தண்டத்தொகை" என்றால் என்ன? அதிலிருந்து அறுதியிட்ட இழப்பீடு எங்ஙனம் வேறுபடுத்தப்படுகிறது ?)

(அல்லது)

Penalty- Write short notes. (தண்டப்பணம் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Liquidated damages - Write short notes. (அறுதியிட்ட இழப்பீடு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Liquidated damages and penalty - Write short notes. (அறுதியிட்ட இழப்பீடும் தண்ட பணமும் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Distinguish between liquidated damages and penalty. (அறுதியிடப்பட்ட இழப்பீட்டையும் தண்டப் பணத்தையும் வேறுபடுத்துக)

தண்டத்தொகையும் அறுதியிட்ட இழப்பீடும் (Penalty and Liquidated Damages) :

ஒப்பந்த மீறுகை ஏற்பட்டால், பாதிக்கப்பட்ட தரப்பாளர் மீறுகையால் நேர்ந்த இழப்புக்கு, மீறுகை புரிந்த மறு தரப்பாளரை பொறுப்புக்குள்ளாக்க உரிமை படைத்தவராவார். இது ஒப்பந்தத்தில் குறிக்கப்பட்ட ஒரு தொகையாக இருக்கலாம். அத்தொகை (a) தண்டத்தொகையாகவோ; அல்லது (b) அறுதியிட்ட இழப்பீட்டுத் தொகையாகவோ இருக்கலாம்.

ஆங்கிலச் சட்டத்தின்படி:

ஆங்கிலச் சட்டத்தில் இவை இரண்டுக்கும் இடையே வேறுபாடு காணப் படுகிறது. அதாவது 'அறுதியிட்ட இழப்பீடு' (Liquidated damages) என்பது, ஒப்பந்தத்தில் அதன் மீறுகைக்காக கொடுக்கப்பட வேண்டிய தொகையாக தாப்பாளர்களால் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள இழப்பீட்டுப் பணமாகும். இவை இழப்பீடு குறித்து நியாயமாக, நேர்மையாக ஏற்கனவே அறுதியிட்டுக் கொண்ட

கணக்கிடலாகும். ஆனால் அவ்வாறு குறிப்பிடப்பட்ட தொகை, ஏற்படக் கூடிய இழப்பின் அளவுக்கு மீறிய வகையில் உச்ச அளவில் இருப்பின், அத்தொகை 'தண்டத் தொகை (அல்லது) தண்டப் பணம்' (Penalty) எனப்படும்.

இவை இரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாட்டை காட்டிக்காட்டிய வழக்கு :

Dunlop Pneumatic Tyre Co. Ltd., v. New Garage and Motor Co. Ltd.,[1] - எனும் வழக்கில் இவை இரண்டுக்கும் உள்ள வேறுபாடு கூட்டிக் காட்டப்பட்டது. அதாவது, மீறுகை புரியும் தரப்பாளரை அச்சுறுத்தும் (in terrorem) வகையில் நிர்ணயிக்கப்படும் தொகையே, 'தண்டத் தொகையின்' அடிப்படையாக அமைகிறது. ஒப்பந்த மீறுகை ஏற்படுமேயானால், அதனால் எந்த அளவிற்கு இழப்பு ஏற்படுமோ, அதன் மெய்யான மதிப்பை முன்கூட்டியே கணக்கிட்டு, அதனை அவ்வொப்பந்தில் அறுதியிட்டு குறிப்பிடுதல், 'அறுதியிட்ட இழப்பீட்டின்' அடிப்படையாக அமைகிறது.

எனவே, ஒரு தொகை தண்டத் தொகையா அல்லது அறுதியிட்ட இழப்பீட்டுத் தொகையா என்பதை நீதிமன்றங்கள் தீர்மானித்த பின், அது தண்டத் தொகை எனில் நியாயமான தொகையை அளிக்க ஆணையிடும். அறுதியிட்ட இழப்பீட்டுத் தொகையென்றால், அத்தொகை முழுவதையும் அளிக்க ஆணையிடும். இவ்வகையில் இழப்பீட்டுத் தொகை இயல்பான இழப்பைவிட அதிகமானதா அல்லது குறைவானதா என்பதை நீதிமன்றங்கள் கருத்தில் கொள்வதில்லை. ஏனெனில் ஒப்பந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்ட அறுதியிட்ட இழப்பீட்டைக் கூட்டவோ அல்லது குறைக்கவோ நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை. ஆனால் தண்டத் தொகையை நிருணயிப்பதைப் பொறுத்த வரையில், நீதிமன்றங்களுக்கு தன்விருப்புரிமை அதிகாரம் (discretionary power) உண்டு. எனவே நியாயமான தொகையை, தண்டத் தொகையாக அளிக்க ஆணையிடலாம்.

முக்கிய வழக்குகள் :

Dunlop Pneumatic Tyre Co. Ltd., v. New Garage and Motor Co. Ltd.,[1] – இவ்வழக்கில் தங்களிடம் டயர் வாங்கி மறுவிற்பனை செய்யும் சில்லரை விற்பனையாளர்கள், தாங்கள் குறிப்பிடும் விலையை விட குறைவான விலைக்கு டயர்களை விற்றால், ஒரு டயருக்கு 5 பவுண்டு வீதம் இழப்பீடு கொடுக்க வேண்டும் என டயர் தயாரிப்பாளர்கள் ஒப்பந்தத்தில் நிபந்தனை விதித்தனர். இது 'அறுதியிட்ட இழப்பீடு' என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பின்வரும் மற்றொரு வழக்கில் தண்டத் தொகை நிருணயம் பற்றி கூறப்பட்டது.

1. (1915) A.C. 79

Ford Motor Co. v. Armstrong[1] - வாதியிடமிருந்து காரின் உதிரி பாகங்களை சில்லரை விற்பனைக்காக பிரதிவாதி விலைக்கு வாங்கினார். இதற்கென ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு நிபந்தனைகளில் பிரதிவாதி எதை மீறினாலும், அப்படிப்பட்ட மீறுகை ஒவ்வொன்றுக்கும் 250 பவுண்டு தொகையை வாதிக்கு அளிக்க வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டது. இங்கு மேற்படி 250 பவுண்டு தொகையானது 'தண்டத் தொகை' (Penalty) என நீதிமன்றம் கூறியது. ஏனெனில், அந்நிபந்தனைகளில் சிலவற்றின் மீறுகை, மிகக் குறைந்த அளவு இழப்பையே (பாதிப்பையே) வாதிக்கு ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது; அதற்கும் 250 பவுண்டு இழப்பீடாக அளிக்க வேண்டும் என்பது நியாயமல்ல என்று கூறி, இழப்பிற்கேற்ப, அத்தொகையை நீதிமன்றம் குறைத்து நிருணயித்தது.

இந்தியச் சட்டப்படி :

அறுதியிட்ட இழப்பீடு மற்றும் தண்டத்தொகை பற்றிய இந்திய ஒப்பந்தச் சட்டம் முற்றிலும் மாறுபட்டது. இவை இரண்டுக்கும் இந்தியச் சட்டம் வேறுபாடு காண்பதில்லை. **74–வது பிரிவின்படி** ஒப்பந்த மீறுகையினால் 'பாதிக்கப்பட்ட மறு தரப்பாளர்' நியாயமான தொகையையே இழப்பீடாகப் பெற முடியும். ஒரு ஒப்பந்தம் மீறப்பட்டால், அத்தகு ஒப்பந்த மீறுகைக்கு இழப்பீடாக ஒரு தொகை கொடுக்கப் பட வேண்டும் என்று ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்தாலோ அல்லது தண்டத் தொகை வடிவில் வேறு ஏதாவது நிபந்தனை அவ்வொப்பந்தத்தில் உள்ளடங்கியிருந்தாலோ, மீறுகை பற்றி முறையிடும் தரப்பாளர் (Party complaining breach) உண்மையான இழப்பை (actual loss) நிரூபித்தாலும், இல்லாவிடினும், ஒப்பந்த மீறுகை புரிந்த தரப்பாளரிடமிருந்து, ஒப்பந்தத்தில் கூறப்பட்ட தொகையை அல்லது விதிக்கப்பட்ட தண்டத் தொகையை மீறாத ஒரு நியாயமான தொகையை இழப்பீடாகப் பெற உரிமை உடையர். மேலும், அசல் தொகையை செலுத்தத் தவறிய நாளிலிருந்து அதிக வட்டி செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை தண்டத் தொகைக்கான நிபந்தனையாக கூறப்படலாம் என்று **74–வது பிரிவின் கீழான விளக்கம் (Explanation)** கூறுகிறது.

இதன்படி, இந்தியாவில், ஒப்பந்தத்தில் கூறப்பட்ட தொகையை அறுதியிட்ட இழப்பீடாகக் கொள்ள வேண்டியதில்லை. உண்மையான இழப்பு அல்லது நியாயமான இழப்பீடு எது என்பதைக் காணும் உரிமையும், அதிகாரமும் நீதிமன்றத் திற்கே உண்டு. அதையே அது வழங்கும். ஆனால், அது ஒப்பந்தத்தில் குறிப்பிடப் பட்டுள்ள தொகையை விட அதிகமாக இருக்காது. ஆனால் பிணையாவணம் (Bail Bond) அல்லது அது போன்ற பத்திரங்கள் இதற்கு விதிவிலக்காகக் கொள்ளப்படும். அவற்றில் குறிப்பிடப்பட்ட தொகையே, இழப்பீடாகக் கொள்ளப்படும்.

1. (1915) 31 T.L.R. 267

16

ஒப்பந்தப் போல்வு
[Quasi-Contract]

64. What are quasi contracts? Enumerate quasi contracts provided for by the Indian Contract Act. (ஒப்பந்தப் போல்வுகள் என்றால் என்ன ? இந்திய ஒப்பந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப் போல்வுகளை எடுத்துக் கூறுக.)

(அல்லது)

What are quasi contracts ? State the provisions of the Indian Contract Act relating to quasi contracts. Explain with illustrative cases. (ஒப்பந்தப் போல்வுகள் யாவை ? ஒப்பந்தப் போல்வுகள் சம்பந்தமான இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் வகைமுறைகளைக் கூறுக. உதாரணங்களோடு கூடிய வழக்குகளை விவரிக்கவும்.)

(அல்லது)

"No one shall enrich himself unjustly at the expense of another". How far this principle is incorporated in the Indian Contract Act? ("அடுத்தவர் செலவில் நேர்மையற்ற முறையில் ஒருவர் தன்னைத்தானே வளர்த்துக் கொள்ளலாகாது." இக்கொள்கை, இந்திய ஒப்பந்த சட்டத்தில் எந்த அளவுக்கு கூட்டிணைவு செய்யப்பட்டுள்ளது என்பதை ஆய்க.)

(அல்லது)

"No one shall enrich himself unjustly at the expense of another". To what extent does the Indian Contract Act give effect to this principle? ("ஒருவரது இழப்பினால், எந்த ஒரு நபரும் நியாயமற்ற ஆதாயங்களை அடையக் கூடாது" – இந்திய ஒப்பந்தச் சட்டம் எந்த அளவிற்கு இக்கோட்பாட்டினைச் செயல்படுத்துகிறது?)

(அல்லது)

Discuss the various relations resembling those created by contract recognised under the Indian Contract Act. (இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டவாறு ஒப்பந்தத்தால் உருவாக்கப் பட்டடதாகத் தோன்றும் பல்வேறு தொடர்புகளை விவாதிக்க.)

(அல்லது)

Quasi-Contract-Write short notes. (ஒப்பந்தப் போல்வு – சிறு குறிப்பு எழுதுக.)

ஒப்பந்த போல்வு – விளக்கம் :

இருவர், தங்களுக்குள் இசைந்து கொள்ளும் சட்டப்படியான உடன்பாடு, ஒரு 'ஒப்பந்தம்'; இருவருக்கிடையிலான உறவு முறையைக் கொண்டு, அவர்களுக் கிடையே சட்டமே உருவாக்கும் ஒரு ஒப்பந்தம் 'ஒப்பந்தப் போல்வு' ஆகும்.

இது, ஒப்பந்தத் தரப்பாளர்களுக்கிடையே முனைவு, ஏற்பு, மறுபயன் கருத்தொருமை, அவர்களது இசைவு ஆகியன இல்லாத பொழுது, சூழ்நிலை களிலிருந்தும், அவர்களின் உறவிலிருந்தும், நடத்தையிலிருந்தும் அவர்களுக் கிடையே சட்டம் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்குவதைக் குறிக்கிறது. இது ஒப்பந்தத் தரப்பாளர்களிடையே ஏற்படும் உடன்பாடுகளால் தோன்றியவை அல்ல. வழக் கறிஞர்களாலும், நீதிபதிகளாலும் தோற்றுவிக்கப்பட்ட ஒப்பந்தமாகும். எனவே இது ஒரு ஒப்பந்தமல்ல; ஒப்பந்தத்தைப் போன்றது. எனவே இதனை 'ஒப்பந்தப் போல்வு' என்கிறோம். இத்தகு ஒப்பந்தப் போல்வுகள் தகைமை நெறி, நீதி, நன்மனச்சாட்சி எனும் கோட்பாட்டின் (Doctrine of Equity, Justice and Good Conscience) அடிப்படையில் அமைந்ததாகும். இவற்றை 'அரைகுறை ஒப்பந்தங்கள்' அல்லது 'முழுமையற்ற ஒப்பந்தங்கள்' என்றும் அழைக்கலாம்.

ஒப்பந்தப் போல்வின் நோக்கம் :

"அடுத்தவர் செலவில் நேர்மையற்ற முறையில் ஒருவர் தன்னைத்தானே வளர்த்துக் கொள்ளலாகாது" (No one shall enrich himself unjustly at the expense of another) எனும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு

ஒப்பந்தப் போல்வு செயலுறுகிறது. அதாவது, தரப்பாளர்களிடையே ஒப்பந்தமில்லாது போனாலும், சூழ்நிலைகளை அனுசரித்து நேர்மையற்ற முறையில் இலாபம் பெற்ற தரப்பாளரை ஒப்பந்தப் போல்வின் அடிப்படையில் நீதிமன்றங்கள் பொறுப்புக் குள்ளாக்குகிறது.

சட்டங்கள் கூறுவதென்ன ?

ஆங்கிலச் சட்டங்கள், ஒப்பந்தப் போல்வை, கொள்நிலையான ஒப்பந்தம் (Constractive contract) அல்லது உட்கிடை ஒப்பந்தம் (Implied contract) என அழைக்கின்றன. அமெரிக்காவில், மீட்டளிப்பு (Restitution) என்று கூறப்படு கிறது. இந்தியச் ஒப்பந்தச் சட்டமானது, "ஒப்பந்தங்களினால் தோற்றுவிக்கப்படும் சில தொடர்புகளைப் போன்றாகும்" (certain relations resembling those created by contract) என்று கூறுகிறது. இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 68 முதல் 72 வரையுள்ள பிரிவுகள் ஒப்பந்தப் போல்வுகளைப் பற்றி கூறுகின்றன.

ஒப்பந்தமும், ஒப்பந்தப் போல்வும் - வேறுபாடுகள் :

ஒரு ஒப்பந்தத்தில் தரப்பாளர்களின் இசைவே, கடப்பாடுகளை உரு வாக்குகிறது. ஆனால், ஒப்பந்தப் போல்வில் இசைவு என்ற வினாவே எழுவதில்லை. சூழ்நிலைகளை அனுசரித்து சட்டமே தரப்பாளர்களுக்கிடையே கடப்பாடுகளை உண்டாக்குகிறது. ஒப்பந்தப் போல்வு உண்மையில், ஒரு ஒப்பந்தமேயல்ல. ஏனெனில், அங்கு எவ்வித உடன்பாடும் தரப்பாளர்களிடையே கிடையாது. எனினும் அது சில கடப்பாடுகளை உருவாக்குகிறது. ஆகவே, சட்டம் அதனையும் ஒரு ஒப்பந்தமாகவே கருதுகிறது.

ஒப்பந்தப் போல்வின் வகைகள் (Types of Quasi Contract):

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 68 முதல் 72 வரை உள்ள பிரிவுகள் ஒப்பந்தப் போல்வின் அய்ந்து வகைகளை குறிப்பிடுகிறது. அவை வருமாறு :

1. இன்றியமையாதன அளித்தல் (Supply of Necessaries) (பிரிவு 68) :

இந்திய ஒப்பந்தச் சட்டப்படி, இளவர் மற்றும் திட மனநிலை அற்றவர் களுக்கு ஒப்பந்தத்தில் ஈடுபடும் தகுதியில்லை. இவர்களால் செய்து கொள்ளப் படும் உடன்பாடு இல்லாநிலை அடையும். எனினும் 68–வது பிரிவு இதற்கு ஒரு விதிவிலக்கை அளித்துள்ளது. அதன்படி, இளவர் மற்றும் திட மனநிலையற்றவர் களின் வாழ்க்கைக்கு இன்றியமையாததாக தேவைப்படும் பொருட்களுக்காக ஒருவர் மற்றொருவரிடம் செய்து கொள்ளும் உடன்பாடு சட்டப்படி செல்லத் தக்கதாகும்.

இதனைப் பற்றி ஒப்பந்தச் சட்டத்தின் 68–வது பிரிவு பின்வருமாறு கூறுகிறது. அஃதாவது, "ஒப்பந்தம் செய்து கொள்ளத் தகுதியற்ற ஒரு நபருக்கோ அல்லது அவரது ஆதரவில் வாழ்பவருக்கோ, அவரது வாழ்க்கைக்கு இன்றியமை யாத பொருட்களை ஒருவர் அளித்தால், அவ்விதம் அளித்தவர் அத்தகுதியற்ற நபரின் சொத்திலிருந்து அதை திரும்பப் பெற்றுக் கொள்ள உரிமை உடையவரா கிறார்."

எடுத்துக்காட்டாக A என்பவர், இளவர் ஒருவருக்கு, அவருக்கு அவசிய மான பாடப் புத்தகங்களை அளித்தார். அப்பாடப் புத்தகங்களுக்குண்டான விலையை மேற்படி A என்பவர், மேற்படி இளவரின் சொத்துக்களிலிருந்து திரும்பப் பெறுவதற்கு உரிமை உடையவராகிறார். இது ஒப்பந்தப் போல்வின் அடிப்படையில் தோன்றியதாகும்.

2. அக்கறையுடைய நபரால் தொகை செலுத்தப்படல் (Payment by interested person) (பிரிவு 69) :

மற்றொருவர் நபர் சட்டப்படி செலுத்த வேண்டிய தொகையில் அக்கறை கொண்டு, ஒருவர் அதற்கு பணம் செலுத்தியிருந்தால், அவர் அந்த மற்ற நபரால் ஈடு செய்யப்பட உரிமை பெற்றவராவார். இவ்வுரிமை கிடைக்க வேண்டுமெனில் பின்வரும் சில நிபந்தனைகளின்படி தொகை செலுத்துபவர் செயல்பட்டிருக்க வேண்டும்.

(அ) தொகை செலுத்தல் செய்பவர், அவ்வாறு செய்வதில் அக்கறை (interest) கொண்டுள்ளவராக இருக்க வேண்டும்.

Exall v. Partridge[1] - இவ்வழக்கில் A என்பவர் தன்னுடைய காரை B என்பவர் குடியிருக்கும் பகுதியில் நிறுத்தினார். B-யின் இடத்திற்கு சொந்தக் காரர், B வீட்டு வாடகை செலுத்தாததால் A-யின் காரை பறிமுதல் செய்கிறார். A என்பவர் வாடகை செலுத்தி தன்னுடைய காரை விடுவித்துக் கொண்டார். தற்போது A என்பவர் அப்பணத்தை B என்பவரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

(ஆ) செலுத்துபவரே பணம் செலுத்துவதில் கடமைப்பட்டவராக (bound) இருத்தல் கூடாது. எதிர்தரப்பாளர்தான் பணம் செலுத்த சட்டப்படி கடமைப்பட்டவ ராக இருத்தல் வேண்டும், அதாவது யாருக்காக பணம் செலுத்தப்படுகிறதோ, அவர் சட்டப்படி பணம் செலுத்தக் கடமைப்பட்டவராக இருக்க வேண்டும்.

(இ) பணத்தை செலுத்த வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டிருக்க வேண்டும்.

1. (1799) 8 Term, R. 308

(ஈ) செலுத்தல் செய்பவர், மூன்றாம் நபருக்கு தொகை செலுத்தியிருக்க வேண்டும்.

3. கொடையெனக் கருதாத செயல்களுக்கு செலுத்த வேண்டிய கடப்பாடு (Obligation to pay for non-gratuitous acts) (பிரிவு 70) :

கொடையெனக் கருதாமல் ஒருவர் மற்றொருவருக்கு ஏதாவது ஒரு செயலை செய்ய நேரிடலாம். அச்செயலினால் ஏற்பட்ட நன்மையை அடைந்தவர், அச்செயலை செய்தவருக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்ய கடமைப்பட்டவராகிறார், என பிரிவு 70 கூறுகிறது.

எடுத்துக்காட்டாக, A என்ற வியாபாரி B என்பவர் வசிக்கும் வீட்டில் தனது பொருள்களை தவறுதலாக வைத்து விடுகிறார். B என்பவர் அவற்றை தன்னுடைய பொருளாகக் கருதி பயன்படுத்திக் கொள்கிறார். இதற்காக A என்பவருக்கு, மேற்படி B என்பவர் ஈடு செய்ய வேண்டும்.

State of West Bengal v. B.K. Mondal & Sons[1] – ஒரு நபரை மேற்கண்டவாறு பொறுப்புக்குள்ளாகக் வேண்டுமெனில், பின்வரும் நான்கு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என மேற்படி வழக்கில் கூறப்பட்டது. அவை,

(i) ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்பவர், அச்செயலை கொடையாகச் (இலவசமாக) செய்ய வேண்டும் என்ற நோக்குடன் செய்திருக்கக் கூடாது. தொடக்கத்திலிருந்தே அப்பணிக்கு பணம் பெற எண்ணி இருக்க வேண்டும். (ii) யாருக்காக அச்செயல் செய்யப்பட்டதோ அவருக்கு அச்செயலை மறுக்கும் உரிமையிருந்தால்தான், அவர் அதற்காக பணம் தரக் கடமைப்பட்டவராகிறார். (iii) அச்செயல் நல்லெண்ணத்துடனும், சட்டத்திற்குகந்ததாகவும் இருக்க வேண்டும். (iv) யாருக்காக அச்செயல் செய்யப்பட்டதோ, அவர் அதன் மூலம் ஏதாகிலும் நன்மை அல்லது ஆதாயம் அடைந்திருக்க வேண்டும்.

4. பொருள் கண்டெடுத்தவரின் பொறுப்பு (Responsibility of finder of goods) (பிரிவு 71) :

ஒரு நபர் வேறு நபருக்குச் சொந்தமான பொருளைக் கண்டெடுத்து தன் பாதுகாப்பில் வைத்துக் கொண்டால், அவர் ஒப்படைவு பெறுபவருக்குண்டான (Bailee) பொறுப்புகளைப் பெறுகிறார். இச்சூழலில் பொருளைக் கண்டெடுத்த வருக்கும், பொருளின் சொந்தக்காரருக்கும் இடையே ஒரு உட்கிடையான உடன் பாட்டை சட்டம் உருவாக்குகிறது. முன்னவர், தாம் கண்டெடுத்த பொருளை

1. AIR 1962 SC 779

சாதாரண செயல்திறன் கொண்ட மனிதன் அவ்வித சூழ்நிலைகளில் எவ்வாறு பாதுகாப்பாரோ, அவ்வாறே பாதுகாக்க வேண்டும்.

காணாமற்போன பொருள்களைக் கண்டெடுத்தவரின் உரிமைகள்:

(அ) பொருளின் சொந்தக்காரர் தவிர மற்றெல்லாருக்கும் எதிராக, கண்டெடுத்தவர் உரிமை பெறுகிறார்.

(ஆ) அந்தப் பொருளைப் பாதுகாப்பதற்கான செலவுகளைப் பெற அப் பொருளின் மேல் அவருக்கு பற்றுரிமை (Lien) உண்டு.

(இ) பொருளின் சொந்தக்காரர், ஒரு குறிப்பிட்ட சன்மானம் அளிக்க முனைவு செய்திருந்தால், அச்சன்மானத்தை பெற வழக்குரைத்து, அதைப் பெறும் வரை, அப்பொருளை கண்டெடுத்தவரே வைத்துக்கொள்ளலாம்.

(ஈ) எனினும் பின்வரும் சூழல்களில், அவர் கண்டெடுத்த பொருள்களை விற்பனை செய்துவிட்டு, தனக்கு ஏற்பட்ட சட்டப்படியான செலவுகளை ஈடு செய்து கொள்ளலாம். அப்பொருள்,

(i) அழுகும் தன்மையுடையதாக இருந்தால்; (ii) அப்பொருள், அதன் மதிப்பில் பெரும்பகுதியை இழந்துவிட்டிருந்தால்; (iii) சொந்தக்காரர், கண்டு பிடிக்கப்படாமல் இருந்தால்; (iv) சொந்தக்காரர், கண்டுபிடிக்கப்பட்டு அவர் சட்டப் படியான செலவினங்களை தர மறுத்தால்; (v) சட்டப்படியான செலவினங்கள், அப்பொருளின் மதிப்பில் மூன்றில் இரண்டு பங்காயிருந்தால்.

காணாமற்போன பொருள்களைக் கண்டெடுத்தவரின் கடமைகள்:

(அ) காணாமற்போன பொருளைக் கண்டெடுத்தவர், அது எத்தன்மைய தாக இருந்தாலும், எவ்வளவு மதிப்புடையதாகவும், சூழ்நிலை எவ்வளவு மோசமாக இருந்தாலும், அதன் பொறுப்பை ஏற்க (take charge) வேண்டிய கடப்பாடு உடையவரல்ல. ஆனால் அவற்றைப் பொறுப்பேற்றுக் கொண்டால் சாதாரண செயல்திறன் கொண்ட ஒரு மனிதன், அம்மாதிரியான சூழ்நிலைகளில் எவ்விதம் பாதுகாப்பாரோ அதே மாதிரி அப்பொருளைப் பாதுகாக்கக் கடமைப்பட்டவராவார்.

(ஆ) அப்பொருளை அவர் தனதாக கருதிவிடக் கூடாது அல்லது தன் சொந்த நலனுக்காக பயன்படுத்திக் கொள்ளக் கூடாது; அவ்வாறு அவர் செய்தால், இந்திய தண்டனை சட்டத்தின் 403–வது பிரிவின்படி கையாடல் குற்றத்திற்காளாவார்.

(இ) அவர் பொருளின் சொந்தக்காரரைக் கண்டுபிடிக்க அயராத முயற்சிகளை எடுக்க வேண்டும். அவர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரிடம் பொருளை ஒப்படைக்க வேண்டும்.மேற்கண்ட கடமைகள், ஒப்பந்தப் போல்வின் வாயிலாக விளைவதாகும்.

5. தவறுதலாக அல்லது வலுக்கட்டாயத்தின் பேரில் செலுத்தப்பட்ட பணத்தை அல்லது வழங்கப்பட்ட பொருளை பெற்ற நபரின் பொறுப்பு (Money paid or goods delivered under mistake or coercion) (பிரிவு 72) :

தவறுதலாக அல்லது வலுக்கட்டாயத்தின் பேரில் செலுத்தப்பட்ட பணத்தை அல்லது வழங்கப்பட்ட பொருளைப் பெற்ற நபர், அப்பணத்தை அதற்குரியவரிடம் திரும்பச் செலுத்த வேண்டும் அல்லது அப்பொருளை திரும்ப ஒப்படைக்க வேண்டும். எனவே ஒரு ஒப்பந்தம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் தவறுதலாக அல்லது வலுக்கட்டாயத்தின் பேரில் செலுத்தப்பட்ட பணத்தை, அல்லது வழங்கப்பட்ட பொருளைப் பெற்றவர், மீண்டும் அதை உரியவர் வசமே திரும்ப ஒப்படைக்கக் கடமைப்பட்டவர்.

எடுத்துக்காட்டாக A-யும் B-யும் சேர்ந்து C என்பவருக்கு ரூ. 100/– தர வேண்டும். A என்பவரே ரூ.100/– முழுவதையும் C-க்கு செலுத்திவிடுகிறார். இதை அறியாத B-யும் ரூ.100/–அய் C-க்கு செலுத்தி விடுகிறார். இவ்வாறு தவறுதலாகப் பெற்ற மேற்படி தொகையான ரூ. 100/–அய் C என்பவர், B என்பவருக்கு திரும்பிச் செலுத்தக் கடமைப்பட்டவராகிறார்.

மேற்கூறிய அய்ந்து நிலைப்பாடுகளும், ஒப்பந்தப் போல்வின் அடிப்படையில் அமைந்துள்ளன. இவை தவிர, பணித்தகு தொகை கோரலும் (Quantum Meruit) ஒரு ஒப்பந்தப் போல்வாகவே கருதப்படுகிறது. இது குறித்து நாம் ஏற்கனவே கண்டுள்ளோம்.

ஒப்பந்தப் போல்வினால் விளைந்த கடப்பாட்டை நிறைவேற்றத் தவறினால் இழப்பீடு (Damages for the breach of obligation arising from quasi contract) (பிரிவு 73–ன் கீழான மூன்றாம் பத்தி):

ஒப்பந்தப் போல்வு ஒன்றில் ஏற்பட்ட கடப்பாட்டை நிறைவேற்றத் தவறினால், பாதிக்கப்பட்ட தரப்பாளர், தவறுகை புரிந்த தரப்பாளரிடமிருந்து (ஒரு ஒப்பந்தம் மீறுகையடைந்தது போல) இழப்பீடு கோர உரிமை பெற்றவராகிறார்.

17

பிரச்சனைகளும் தீர்வுகளும் [Problems and Solutions]

சட்டத்தால் வலியுறுத்தப்படக் கூடிய உடன்பாடுகளே ஒப்பந்தங்கள்

1. 'A' promises to pay a reward of Rs.500 to 'B' his close friend, if he refrains from smoking for 2 years. Is the contract enforceable?

'B' என்னும் தன்னுடைய நெருங்கிய நண்பர் இரண்டு வருட காலத்திற்கு புகை பிடிக்கும் பழக்கத்தை கைவிட்டால் ரூ.500 வெகுமதியாக தருவதாக 'A' என்பவர் உறுதியளிக்கிறார். இந்த ஒப்பந்தம் செல்லும் தன்மையதா?

தீர்வு:

மேற்கண்ட ஒப்பந்தம் செல்லத்தக்கதல்ல. ஏனெனில், இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 2(h)-ன்படி, சட்டத்தால் வலியுறுத்தப்படக்கூடிய உடன்பாடுகளே ஒப்பந்தங்களாகின்றன என்று கூறுகிறது. எனவே, சட்டத்தால் வலியுறுத்திச் செயல்படுத்த முடியாத உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் ஆவதில்லை.

உதாரணமாக, ஒரு நண்பர் விருந்திற்கு அழைக்கும் பொழுது, அதில் கலந்து கொள்வேன் என உறுதியளிப்பது, அவ்வாறே திரைப்படத்திற்கு வருகிறேன் என உறுதியளிப்பது இவையெல்லாம் உடன்பாடுகள்தான். ஆனால், இவற்றை சட்டத்தால் வலியுறுத்திச் செயல்படுத்த முடியாது. விருந்திற்கு வராத நண்பரை, கட்டாயம் விருந்திற்குச்

செல்ல வேண்டும் என சட்டம் ஆணையிட முடியாது. ஏனெனில் தரப்பினர்களிடையே சட்டப் பிணைப்பு (legal relationship) ஏதும் கிடையாது.

எனவே ஒரு உடன்பாடு ஒப்பந்தமாக மாற வேண்டுமெனில் அவ்வுடன்பாடு தரப்பினர்களிடையே ஒரு சட்டப்பிணைப்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஒரு சட்டக் கடப்பாட்டை (சட்டப் பிணைப்பு) ஏற்படுத்தும் எண்ணமில்லாத சமூக உடன்பாடுகள் (Social agreements) ஒப்பந்தங்களாவதில்லை. எடுத்துக்காட்டாக பின்வரும் இரு வழக்குகளைக் கவனிப்போம்.

Kalai haldar v. Sheikh[1] – A என்பவர் B என்பவரை விருந்திற்கு அழைத்தார். B என்பவர் விருந்திற்கு செல்ல இயலவில்லை. மேற்படி A என்பவர் B என்பவருக்காகத் தயாரிக்கப்பட்ட உணவு வீணாயிற்று என்று வழக்குத் தொடுத்தார். ஆனால், இங்கு தரப்பினர்களிடையே சட்டக் கடப்பாடு ஏதுமில்லையாதலால் மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

Balfour v. Balfour[2] – A என்பவர் இலங்கையில் பணி செய்து வருகிறார். அவரது மனைவி B என்பவர் உடல் நலம் சரியில்லாததால் இங்கிலாந்தில் வசித்து வருகிறார். அவ்வாறு அவர் அங்கு வசித்து வரும் காலம் வரையிலும் மாதந்தோறும் 3 பவுண்டு பணம் அளிப்பதாக மேற்படி A ஒப்புக் கொண்டிருந்தார். ஆனால் ஒப்புக் கொண்டபடி மேற்படி A நடந்து கொள்ளவில்லை. ஆகவே, அவர் மீது, அவரது மனைவியாகிய B வழக்குத் தொடுத்தார். ஆனால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. **நீதிபதி அட்கின்** தனது தீர்ப்பில், "இத்தகைய ஒப்பந்தங்கள் நெருக்கமான குடும்ப உறவின், நட்பின் காரணமாக ஏற்பட்ட ஒப்பந்தங்கள். ஆகவே சட்டபடி செல்லத்தக்கவை அல்ல' என்று குறிப்பிட்டுள்ளார்.

எனவே, சட்டப்பிணைப்புகளை (கடப்பாடுகளை) ஏற்படுத்தும் உடன்பாடுகள் மட்டுமே ஒப்பந்தமாகும், என்று கூறலாம். எதிர்மறையாக கூறுவதானால், ஒரு கடப்பாடு, நாட்டின் பொதுச் சட்டத்தால் சுமத்தப்பட்டிருந்தும் (நீதிமன்றத் தீர்ப்பு, சட்ட விதிகளை கடைப்பிடிப்பது போன்று), அங்கு அது குறித்து தரப்பினர்களிடையே உடன்பாடு ஏதும் இல்லையென்றால், அது ஒரு ஒப்பந்தமாகாது.

சுருங்கக்கூறின், "ஒப்பந்தம் ஒன்றை உருவாக்க சட்டக் கடப்பாடுகளில் ஈடுபட வேண்டும் என்னும் ஒரு பொது எண்ணம் ஒப்பந்தத் தரப்பினர்களுக்கு இருக்க வேண்டும்" ("To create a contract there must be common intention of the parties to enter into legal obligations").

மேற்கண்ட பிரச்சனையிலும், அத்தகு ஒரு சமூக உடன்பாடுதான் ஏற்பட்டுள்ளது. அதாவது, 'B' என்னும் தன்னுடைய நெருங்கிய நண்பர் இரண்டு வருட காலத்திற்கு புகை பிடிக்கும் பழக்கத்தை கைவிட்டால் ரூ.500 வெகுமதியாக தருவதாக 'A' என்பவர் அளிக்கும் உறுதியுரை, நட்பின் அடிப்படையில் எழுந்த ஒரு சமூக உடன்பாடாகும். இதனை **'கனவான்களின் உடன்பாடு' (Gentlemen's Agreement)** என்றும் கூறலாம்.

1. 23 W. R. 217 A
2. (1919) 2 K.B. 571

இங்கு "புகைப் பிடிப்பதை இரண்டு ஆண்டு காலத்திற்கு நிறுத்திவிட்டேன்; அதனால் உறுதியுரைத்தபடி வெகுமதி ரூ.500/– கொடு" என்று A–மிடம் B கோர முடியாது; அதுபோல் "இரண்டு ஆண்டுகளாக நீ புகைப்பிடிப்பதை நிறுத்தவில்லை; எனவே ரூ.500/– பெற உனக்கு உரிமையில்லை" என்று கூற B–க்கு உரிமையுண்டா எனில், 'இல்லை' என்றுதான் கூற வேண்டும். ஏனெனில், இது சட்டப்படியான விளைவுகளை ஏற்படுத்த வேண்டும் எனும் அடிப்படையில் செய்து கொள்ளப்பட்டதல்ல. நட்பை மதித்து செய்து கொள்ளப்பட்டது. அவ்வுடன்பாட்டை மதித்து நடப்பதும், நடக்காததும் நட்பின் ஆழத்தைத் பொறுத்ததே தவிர, சட்டத்தின் வலிமைக்கு பயந்து அல்ல. எனவே, அதனை சட்டத்தால் வலியுறுத்த முடியாது. சட்டத்தால் வலியுறுத்த முடியாத உடன்பாடு, ஒரு ஒப்பந்தமல்ல. எனவே அவர்களது ஒப்பந்தம் செல்லத்தக்கதல்ல என்பதே இங்கு மறுக்கமுடியாத தீர்வாகும்.

முனைவும் ஏற்பும்

2. Raman offered a reward of Rs. 5,000 to any person who finds his missing daughter Kamali. Krishnan a good friend of Raman saw the advertisement and thereafter traced out the missing person. Kamali, was, thereafter, restored to Raman. Krishnan did not claim the reward as he forgot about the same. But after some time Krishnan claims the reward, which was denied by Raman. Krishnan, therefore, files a suit for recovery of the reward. Will he succeed?

இராமன் என்பவர் தன்னுடைய காணாமற் போன கமலி என்னும் பெயருடைய மகளை கண்டுபிடித்து கொணர்பவருக்கு ரூ.5,000 வெகுமதி தருவதாக அறிவிப்பொன்று கொடுத்திருந்தார். இராமனின் நெருங்கிய நண்பர் கிருட்டிணன் என்பவர் அறிவிப்பினை பார்த்து விட்டு காணாமற்போன நபரை கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபடுத்திக் கொண்டார். கமலி என்பரை கண்டுபிடித்து அதன் பின்னர் அவளை இராமன் என்பவரிடம் ஒப்படைத்தார். அச்சமயம் கிருட்டிணன் என்பவர் வெகுமதியினை பற்றி மறந்துவிடவே, அதனை அவர் கோரவில்லை. ஆனால் சில காலம் கழித்து வெகுமதியினை கோரும் போது இராமன் அதனை தர மறுக்கின்றார். எனவே கிருட்டிணன் என்பவர் வெகுமதியினை பெற வழக்கொன்று தாக்கல் செய்கிறார். அவர் வெற்றி பெறுவாரா?

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **4–வது பிரிவின்** சாரம்சப்படி, யாரிடம் முனைவு செய்ய விழையப்படுகிறதோ, அவருடைய அறிவுக்கு எட்டத்தக்க வகையில் அம்முனைவு அவருக்கு தெரிவிக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான், அவர் அம்முனைவை ஏற்றுக் கொள்வதா, வேண்டாமா என்பது குறித்த தனது விருப்பத்தை தெரிவிக்க முடியும். எனவே ஒவ்வொரு முனைவும் முனைவேற்பாளருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் (Every of-

fer must be communicated to the acceptor). முனைவு தெரிவிக்கப்படாவிட்டால், ஏற்புச் செய்ய முடியாது. முனைவு இருப்பதே அறியாமல், ஏற்புச் செய்தால் அது ஏற்பேயாகாது. ஏற்பானருக்கு எவ்வித உரிமையையும் அது வழங்காது. செய்தித்தாள் வாயிலாக பொது மக்கள் அனைவருக்கும் (offer at large) செய்யப்படும் முனைவிலும், அம்முனைவை அறியாமல் ஒருவர் ஏதாவது செய்தால், பின்னிட்டு அதற்காக முனைவு செய்தவரை பொறுப்பிற்குள்ளாக்க முடியாது. இந்நிலைப்பாடு குறித்து நாம் பின்வரும் இரு முக்கிய வழக்குகளை காணுதல் அவசியம்.

Fitch v. Snedakar[1]–'S' என்பவர் காணாமற்போன தன் நாயைக் கண்டுபிடித்துக் கொடுப்பவருக்கு பரிசுத் தொகை தருவதாக முனைவு செய்தார். 'F' என்பவர் 'S'–ன் நாயைக் கண்டுபிடித்துக் கொண்டு வந்தார். ஆனால் 'S'-ன் முனைவை அவர் அறியவில்லை. 'F' அந்தப் பரிசுத் தொகைக்கு உரிமையுடையவரல்ல எனத் தீர்ப்புக் கூறப்பட்டது.

Lalman Shukul v. Gauri Dutt[2]– வாதி, பிரதிவாதியிடம் பணி புரிந்து வந்தார். பிரதிவாதியின் காணாமல் போன உறவுக்காரப் பையனைக் கண்டுபிடித்து வர வாதி அனுப்பப்பட்டார். பின்னர் பையனைப் பற்றிய தகவல் தருவோருக்குப் பரிசு வழங்குவதாகப் பிரதிவாதி அறிவிப்பு ஒன்றினை வெளியிட்டிருந்தார். இந்த அறிவிப்பினைக் காணாமலேயே வாதி, பையனைக் கண்டு பிடித்துக் கொணர்ந்தார். சில நாட்கள் கழித்து வாதி பரிசு கோரி வழக்கிட்டார். நீதிமன்றம், முனைவு பற்றிய அறிவிப்பினை அறியாமல் ஏற்பு செய்ய இயலாது என மேற்படி வழக்கில் தீர்ப்பு வழங்கியது.

மேற்கண்ட இரு வழக்கிலும், முனைவைத் தெரிந்து கொள்ளாமல் செயல்பட்டவரின் நிலைப்பாட்டை எடுத்துரைக்கின்றன. அவர்கள் அங்கு முனைவு செய்யப்பட்ட பரிசைப் பெற இயலவில்லை. அதற்கு அவர்களுக்கு உரிமையுமில்லை. ஆனால் மேற்படி பிரச்சனையில், இராமன் ரூ.5000/– வெகுமதி தருவதாக செய்த அறிவிப்பை கண்ட பிறகுதான், அவரது நண்பர் கிருட்டினன் என்பவர், அவரது மகள் கமலியை கண்டுபிடிக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, அவ்வாறே கண்டுபிடித்து கமலியை இராமனிடம் ஒப்படைத்தும் விடுகிறார். எனவே இராமன் செய்த முனைவின் அடிப்படையில்தான், கிருட்டினன் செயல்பட்டுள்ளார் என்பதும், அம்முனைவை கிருட்டினன் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதும், இங்கு அவர்களுக்கிடையே ஒரு செல்லத் தக்க ஒப்பந்தம் எழுந்துள்ளது என்பதும், இங்கு தெளிவாகப் புலனாகிறது. ஆனால் அவ்வெகுமதியை உடனே கோர கிருட்டினன் மறந்துவிடுகிறார். இவ்வாறு மறந்து விட்டதால், வெகுமதியைப் பெறவே முடியாது என்று சட்டம் கூறவில்லை. அதனைப் பெற கிருட்டினனுக்கு உரிமையுண்டு. கால வரையறைச் சட்டம் குறிப்பிடும் கால வரம்பிற்குள் கிருட்டினன், இராமன் என்பவர் மீது அவ்வெகுமதிக்காக வழக்கிட்டால், அதில் நிச்சயம் வெற்றி பெறுவார் என்பதே தீர்வு.

மேற்படி இரு வழக்குகளிலும் முனைவுப் பற்றி அறிந்து கொள்ளாமல் சம்பந்தப் பட்டவர்கள் செயல்பட்டுள்ளனர். எனவே அவர்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை. ஆனால், மேற்படி பிரச்சனையில் இராமன் செய்த முனைவை கிருட்டினன் அறிந்து

1. (1868) 38 N.Y. 248
2. (1918) 11 All. L.J. 489 : 19 I.C. 576

கொண்டு, அதனடிப்படையில் செயல்பட்டுள்ளார். எனவே முனைவு செய்யப்பட்ட வெகுமதி அவருக்கு கிடைப்பதாக உள்ளது.

3. A issued a pamphlet offering to pay Rs. 1,000 to any one who brings to him his missing son. 'B' traced the boy and brought his to 'A' before he read the pamphlet. Can 'B' claim the reward?

காணமற்போன தன்னுடைய மகனை யார் கண்டுபிடித்து கொண்டு வந்தாலும் அவருக்கு ரூ.1,000 தருவதாக 'A' என்பவர் ஒரு துண்டு பிரகரம் வெளியிடுகிறார். அந்த விளம்பரத்தைப் படிப்பதற்கு முன்பே 'B' என்பவர் அச்சிறுவனை கண்டுபிடித்து 'A'யிடம் கொண்டு வந்தார். 'B' அந்த வெகுமதியைக் கோர முடியுமா?

தீர்வு:

இதற்கு முன் சென்ற பிரச்சனையின் தீர்வில் கண்ட இரு வழக்குகளின் அடிப்படையில், B என்பவர் A விளம்பரம் செய்த வெகுமதியைக் கோர முடியாது. ஏனெனில், B என்பவர் A என்பவர் துண்டு பிரகரம் மூலம் செய்த முனைவைப் பற்றி அறிந்து கொள்ளாமலேயே அச்சிறுவனைக் கண்டுபிடித்துள்ளார். (சென்ற பிரச்சனையில் கண்ட சட்ட விளக்கங்களையும், வழக்குகளையும் இங்கும் குறிப்பிடுதல் வேண்டும்.)

4. B Offered to sell his car to A for Rs.15,000/-. A accepts to purchase it for Rs.14,500/-. B refused to sell the car for Rs. 14,500/-. Subsequently A agrees, to purchase the car for Rs. 15,000/-; but B refused to sell the car, A sues B for the specific performance of the contract. Will he succeed?

"ஆ" என்பவர் அவருடைய கார் ஒன்றினை "அ" என்பவருக்கு ரூ. 15,000/–க்கு விற்பதற்காக முனைவு செய்கிறார். "அ" என்பவர் அக்காரினை ரூ. 14,500/–க்கு வாங்குவதற்காக ஏற்பு தெரிவிக்கிறார். "ஆ" என்பவர் விற்க மறுத்து விடுகிறார். ஆகையால் "அ" என்பவர் மீண்டும் ஏற்பு தெரிவித்து ரூ. 15,000/–க்கு சம்மதம் தெரிவிக்கிறார். ஆனால் "ஆ" என்பவர் விற்க மறுக்கிறார். எனவே "ஆ"வின் மீது ஒப்பந்தத்தினை குறித்தவகை நிவாரணச் சட்டப்படி நிறைவேற்றம் செய்ய வேண்டுமென்று கோரி வழக்கொன்று தாக்கல் செய்கிறார். அவர் வெற்றி பெற முடியுமா ?

தீர்வு:

இங்கு B என்பவர் தன்னுடைய காரை ரூ. 15,000/–க்கு விற்க A யிடம், முனைவு (Offer) செய்கிறார். ஆனால் A என்பவரோ அக்காரை ரூ.14,500/–க்கு வாங்குவதாக ஏற்பு (acceptance) தெரிவிக்கிறார். ஆனால் அதற்கு B ஒத்துக் கொள்ளவில்லை. எனவே இங்கு ஒப்பந்தம் ஏதும் எழவில்லை. பின்னர், மேற்படி அதே A என்பவரே, மேற்படி அதே காரை B சொன்ன அதே விலைக்கே அதாவது ரூ. 15,000/–திற்கே வாங்க ஒப்புக் கொள்கிறார். ஆனால் அவ்விலைக்கே B அக்காரை விற்க B ஒத்துக் கொள்ளவில்லை.

இங்கு ஒன்றை நன்கு புரிந்து கொள்ளல் அவசியம். அதாவது ஒப்பந்தச் சட்டத்தின் 7(1)–வது பிரிவின்படி, ஏற்பு முழுமையானதாகவும் நிபந்தனையற்றதாகவும் இருக்க வேண்டும். ஆனால் மேற்படி பிரச்சனையில் ஏற்பு முழுமையானதாக இல்லை. அதில் மாற்றம் உள்ளது. அதாவது, B கூறிய விலையை அப்படியே A ஏற்றுக் கொள்ளவில்லை. காரின் விலையை A குறைத்து கேட்கிறார். விடுக்கப்பட்ட முனைவை அப்படியே ஏற்றுக் கொள்ளாததால் இது ஒரு ஏற்பாகாது. அதனால் ஒரு ஒப்பந்தமுமாகாது. இது பிரச்சனையின் முதல் பகுதி. இரண்டாவது பகுதியில் அதே விலைக்கே அக்காரை வாங்க A ஒத்துக்கொண்டு ஏற்பு தெரிவிக்கிறார். ஆனால் தற்பொழுது அவ்விலைக்கு விற்க B ஒத்துக் கொள்ள வில்லை. அதாவது அக்கார் விற்பனை தொடர்பான ஒரு புது ஒப்பந்தம் தொடங்குகிறது. உண்மையில் முதற்பகுதியில் ஏற்பு செய்த A என்பவர், இரண்டாவது பகுதியில் காரை ஒரு குறிப்பிட்ட விலைக்கு வாங்க முனைவு (offer) செய்கிறார். அவ்வாறே, முதற்பகுதியில் முனைவு செய்த B இரண்டாவது பகுதியில் ஏற்பு செய்ய வேண்டிய நிலையில் உள்ளார். அவர் (B), A கூறும் முனைவை ஏற்றுக் கொள்ளலாம் அல்லது ஏற்றுக் கொள்ளாமலும் இருக்கலாம். இங்கு B அவ்விலைக்கு அக்காரை விற்க மறுத்து விடுகிறார். அதாவது A-யின் முனைவை ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே இங்கும் ஒப்பந்தம் ஏதும் எழவில்லை. எனவே அக்காரை ரூ.15,000/–க்கு தனக்கு விற்க வேண்டும் எனக்கோரி ஒப்பந்தத்தின் குறித்த வகை நிவாரணத்திற்காக A என்பவர் B-யின் மீது வழக்கிட்டு வெற்றி பெற முடியாது. ஏனெனில் அங்கு ஒரு ஒப்பந்தமே எழவில்லை என்பதுதான் உண்மை.

ஒப்பந்தப் புள்ளி (அல்லது) முனைவிற்கான அழைப்பு

5. 'A' agrees to sell to the University hostel upto 200 quintals of rice for a period of two years as and when orders are placed by the University. The University placed orders and 'A' supplied the required rice. But before the expiry of two years 'A' withdrew his offer to supply further rice and refused to comply with the orders placed thereafter. Provide legal advise to the University.

'அ' என்பவர் பல்கலைக்கழக விடுதிக்கு இரண்டு வருட காலத்திற்கு 200 குயின்டால் வரை அரிசி பல்கலைக்கழகம் அவ்வப்போது தேவைப்படும் போது விற்க ஒப்புதல்அளிக்கிறார். பல்கலைக்கழகம் தேவைப்பட்ட போது 'அ' தேவையான அரிசியை வழங்கவும் செய்தார். ஆனால் இரண்டு வருட காலம் முடிவதற்கு முன்பே, 'அ' மேற் கொண்டு அரிசி வழங்குவதற்கான தனது முனைவை திரும்பப் பெறுவதோடு அதற்குப் பின் பல்கலைக்கழகம் தேவைப்பட்ட போது அரிசி வழங்கவும் மறுக்கிறார். பல்கலைக் கழகத்திற்கு சட்ட ஆலோசனை வழங்கவும்.

தீர்வு:

மேற்படி பிரச்சனையில் பல்கலைக்கழகத்திற்கு இரண்டு வருட காலத்திற்கு 200

குயின்டால் வரை அரிசி வழங்க 'அ' என்பவர் அளிக்கும் ஒப்புதல், ஒரு ஒப்பந்தப் புள்ளி (Tender) ஆகும். ஒரு ஒப்பந்தப் புள்ளி முனைவாகாது. அது நிலைத்த முனைவு (Standing offer) அல்லது தொடரும் முனைவு (Continuous Offer) ஆகும். அதிக அளவில் அளவில் சாமான்கள் அல்லது சேவைகள் (services) தேவைப்படும் பொழுது இந்த ஒப்பந்தப் புள்ளிகள் (அதாவது குறிப்பிட்ட விலை அல்லது கட்டண வீதத்தில் பொருள் அல்லது சேவை வழங்கும் முனைவேற்பு) வரவேற்கப்படுகின்றன.

ஒரு ஒப்பந்தப் புள்ளி, முனைவிலிருந்து மாறுபட்டதாகும். அது ஒரு முனைவு அல்ல. மாறாக முனைவிற்கான அழைப்பு (invitation to offer) மட்டுமேயாகும். ஒரு ஒப்பந்தத்திற்கான முனைவை ஏற்றுக் கொள்ளுதல் என்பது, ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். அது எப்பொழுது ஒரு ஒப்பந்தப் புள்ளியைப் பொறுத்தவரை ஏற்படுகிறதென்றால், ஒரு நிச்சயமான காலத்திற்கு, ஒரு நிச்சயமான அளவுடைய சரக்குகளை அளிப்பதாக ஒப்பந்தப் புள்ளி ஏற்பவரால் ஏற்கப்படும் பொழுதுதான். எடுத்துக் காட்டாக, சனவரி முதல் தேதி முதல் டிசம்பர் 31–ஆம் தேதி முடிய உள்ள காலகட்டத்திற்குள், 1000 டன் நிலக்கரியை அளிக்க வேண்டியது என்பதாக ஒப்பந்தப் புள்ளி இருக்கும் பொழுது, அதற்கு ஒத்துக் கொண்டு அவ்வாறு அளிப்பதாக, அம்முனைவிற்கான அழைப்பை ஏற்றுக் கொள்ளும் பொழுது, அங்கு இரு தரப்பினர்களையும் கட்டுப்படுத்தும் ஒரு ஒப்பந்தம் சட்டப் படியாக எழுகிறது. ஆனால் இதற்கு மாறாக, மேற்படி எடுத்துக்காட்டில், 1000 டன்னிற்கு மிகாத நிலக்கரியை அடுத்து வரும் ஆண்டில் எப்பொழுதெல்லாம் கேட்கப்படுகிறதோ அப்பொழுதெல்லாம் அளிக்க வேண்டும் எனும் ஒப்பந்தப் புள்ளியை ஏற்றுக் கொள்வது, ஒரு சட்டப்படியான ஒப்பந்தத்தை உருவாக்காது. அவ்வொப்பந்தப் புள்ளி, ஒரு முனைவை ஒப்பந்தமாக மாற்றாது. இங்கு 1000 டன் நிலக்கரியையும் எடுத்துக் கொள்வதாகவோ அல்லது எத்தனை டன் நிலக்கரியை எடுத்துக் கொள்வேன் என்றோ ஒப்பந்தப் புள்ளிக்கு அழைப்பு விடுத்தவர் குறிப்பிடவில்லை. அவர் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மிகாத நிலக்கரியை தான் எடுத்துக் கொள்ளலாம் என்று மட்டுமே குறிப்பிடுகிறார். எனவே அதற்குண்டான முனைவிற்கான அழைப்பை ஏற்றுக் கொண்டவர், நிலக்கரியை அளிக்கவில்லையானால், ஒப்பந்தப் புள்ளிக்கான முனைவைச் செய்தவர் ஒப்பந்த மீறுகைக்காக வழக்கிட முடியாது.[1]

இந்நிலைப்பாடுதான் நமது மேற்படி பிரச்சனையிலும் இழையோடுகிறது. அதன்படி, 'அ' என்பவர் பல்கலைக்கழக விடுதிக்கு இரண்டு வருட காலத்திற்கு 200 குயின்டால் வரை அரிசியை பல்கலைக்கழகம் அவ்வப்போது தேவைப்படும் போது விற்க ஒப்புதல் அளிக்கிறார். இங்கு அரிசியின் அளவு எவ்வளவு என்பது நிச்சயமானதாக இல்லை. மாறாக, '200 குயின்டால் வரை' என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை 'அ' ஏற்றுக் கொண்டதால் மட்டுமே, அங்கு ஒரு கட்டுப்படுத்தத்தக்க, சட்டப்படியான ஒரு ஒப்பந்தம் உருவாகிவிட வில்லை. எனவே அவர் மேற்படி இரண்டு ஆண்டு காலம் முடிவடைவதற்கு முன்பே, அரிசி வழங்குவதை நிறுத்தி விட்டதை காரணமாகக் காட்டி, அவர் ஒப்பந்த மீறுகை புரிந்துவிட்டார் எனும் அடிப்படையில், இழப்பீடு கோரி பல்கலைக்கழகம் அவர் மீது வழக்கிட முடியாது. எனினும் அவ்வாறு வழக்கிட முடியும் என **Great Northern Railway Co. v. Witham** எனும் வழக்கில் கூறப்பட்டுள்ளது. அதனை இந்நூலின் பக்கம் எண் 31–ல் காண்க.

1. The Law of Contracts, Venkatesa Iyer, Asia Law House, 4th Edn. p. 32.

முனைவு மற்றும் ஏற்பை அறிவித்தல்

6. A through post communicates his offer to B. B posted his letterof acceptance on the same day he received the offer. Before the letter of acceptance reached A, B through telephone informed his refusal. Is there a contract between A and B - Decide.

அ என்பவர் ஆ என்பவருக்கு தபால் மூலம் முனைவை தெரிவித்தார். முனைவு கிடைக்கப் பெற்ற அன்றே ஆ என்பவர் தனது ஏற்பு கடிதத்தை தபால் பெட்டியில் சேர்த்தார். இக்கடிதம் அ–விற்கு கிடைக்கப் பெறும் முன்பே ஆ என்பவர் தொலைபேசி வழியாக மறுப்பு தெரிவித்தார். 'அ' விற்கும் 'ஆ'விற்குமிடையே ஒப்பந்தம் உருவாகியுள்ளதா – தீர்மானிக்க.

தீர்வு:

இரு தரப்பினர்களிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட வேண்டுமெனில், ஒப்பந்தச் செயல் அல்லது செயல் தவிர்ப்பு குறித்து, அவ்விரு தரப்பினர்களுக்கு இடையேயும் பரஸ்பர இசைவு இருத்தல் வேண்டும். இந்த பரஸ்பர இசைவு எவ்வாறு பெறப்படுகிறது? ஒரு தரப்பினர் ஒரு செயலைச் செய்ய அல்லது செய்யாமல் இருக்க மற்றொருவரின் இசைவைப் பெற வேண்டி முனைவு செய்கிறார். அம்மற்றொருவர் அம்முனைவை ஏற்பு செய்தால், அங்கு ஒரு செல்லத்தக்க ஒப்பந்தம் உருவாகிறது. எனவே மேற்கண்ட 'முனைவும்' அதன் 'ஏற்பும்' முழுமை பெற வேண்டுமானால் அது பரஸ்பரம் மேற்கண்ட இரு தரப்பினர்கள் இடையேயும் அறிவிக்கப்படல் (Communication) வேண்டும். முனைவு அறிவிக்கப்படவில்லை யானால், அதை 'ஏற்பு' செய்ய முடியாது. மேலும் முனைவை அறியாமல் ஏற்பதும் ஒரு செல்லத்தக்க ஏற்பாகாது. அவ்வித 'ஏற்பு' முனைவேற்பாளருக்கு எவ்வித உரிமையையும் வழங்கிடாது. அதுபோல் பொதுவாக ஏற்பு, முனைவாளருக்கு அறிவிக்கப் படாமல் ஒப்பந்தமும் எழாது. இவ்வாறு அறிவித்தல் குறித்த விதிகளில்தான், மேற்படி பிரச்சனைக்குண்டான தீர்வும் உள்ளது.

முனைவை அறிவித்தல் (Communication of an offer): 'எவருக்கு முனைவு செய்யப்படுகிறதோ, அவரது அறிவுக்கு எட்டிய பின், முனைவின் அறிவிப்பு முடிவுறுகிறது **(பிரிவு 4–ன் கீழான முதற்பத்தி).** அதாவது முனைவைத் தாங்கிய கடிதம் ஏற்பாளரை அடைந்தவுடன் முனைவின் அறிவிப்பு முடிகிறது.

ஏற்பை அறிவித்தல் (Communication of acceptance): (i) முனைவாளருக்கு எதிராக ஏற்பின் அறிவித்தல் (Communication of acceptance as against the proposer): கடிதம் அனுப்புகை முறையில் ஏற்பாளரால் இடப்பட்டு, அவரது சக்திக்கு அப்பாற்பட்டதானவுடன் ஏற்பின் அறிவித்தல் முடிகிறது. **(ii) முனைவேற்பாளருக்கு எதிராக ஏற்பின் அறிவித்தல் (Communication of acceptance as against the acceptor):** ஏற்பானது முனைவாளரின் அறிவுக்கு எட்டியபின் முடிகிறது. **(பிரிவு 4–ன் கீழான இரண்டாம் பத்தி)**

திரும்பப் பெறுலை அறிவித்தல் (Communication of revocation): திரும்பப் பெறுதலின் அறிவித்தல் (i) 'திரும்பப் பெறுதலை' செய்பவருக்கு எதிராக 'திரும்பப் பெறுதல்' கடிதம் அனுப்புகை முறையில் அஞ்சலிலிடப்பட்டு, அவரது சக்திக்கு அப்பாற்பட்டதாக ஆனவுடன் முடிவுறுகிறது. (ii) 'திரும்பப் பெறுதல்' யாருக்குச் செய்யப்படுகிறதோ அவருக்கு எதிராக, அவருடைய அறிவுக்கு எட்டியவுடன் முடிவுறுகிறது. **(பிரிவு 4–ன் கீழான மூன்றாம் பத்தி).**

5–வது பிரிவின் கீழான இரண்டாம் பத்தி, ஏற்பின் அறிவித்தல், ஏற்பாளருக்கு எதிராக முடிவுறும் முன்னர், எந்நேரமும் ஏற்பைத் திரும்பப் பெறலாம்; ஆனால் அதற்குப் பின்னிட்டு முடியாது, என்று கூறுகிறது.

இனி மேற்படி பிரச்சனைக்கு வருவோம். அதில் 'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு தபால் மூலம் முனைவை தெரிவித்தார். இம்முனைவு அனுப்பபட்ட அன்றே 'ஆ'–க்கு கிடைத்து விடுகிறது. எனவே முனைவின் அறிவித்தல், **பிரிவு 4–ன் கீழான முதற் பத்தியின்படி** முடிந்துவிடுகிறது. முனைவு கிடைக்கப் பெற்ற அன்றே 'ஆ' என்பவர் தனது ஏற்புக் கடிதத்தை தபால் பெட்டியில் சேர்த்துவிடுகிறார். இங்கு **பிரிவு 4–ன் கீழான இரண்டாம் பத்தியின்படி,** 'அ'–க்கு (முனைவாளர்) எதிராக, அந்த ஏற்புக் கடிதம், அஞ்சலில் இடப்பட்டு, அவரது சக்திக்கு அப்பாற்பட்டதானவுடன் ஏற்பின் அறிவித்தல் முடிகிறது. ஆனால், 'ஆ'–க்கு (முனைவேற்பாளருக்கு) எதிராக, ஏற்பானது முனைவாளரின் அறிவுக்கு எட்டியபின் முடிகிறது.

இங்குதான் மேற்படி பிரச்சனையின் போக்கில் மாற்றம் ஏற்படுகிறது. அதாவது 'ஆ' அனுப்பிய ஏற்புக் கடிதம் 'அ' எனும் முனைவாளருக்கு கிடைக்கவில்லை. அதாவது 'ஆ'–வின் ஏற்பு, 'அ' எனும் முனைவாளரின் அறிவுக்கு எட்டவில்லை. எனவே 'ஆ'–க்கு (முனைவேற்பாளருக்கு) எதிராக முனைவேற்பின் அறிவித்தல் முடிவுறவில்லை. இவ்வாறு முனைவேற்புக் கடிதம் கிடைப்பதற்கு முன்பாகவே 'ஆ' என்பவர் தொலைபேசி வழியாக மறுப்பு தெரிவித்தார். **5–வது பிரிவின் கீழான இரண்டாம் பத்தியின்படி,** ஏற்பின் அறிவித்தல், ஏற்பாளருக்கு எதிராக முடிவுறும் முன்னர், எந்நேரமும் ஏற்பைத் திரும்பப் பெறலாம். இங்கு ஏற்பின் அறிவித்தல், 'ஆ' எனும் முனைவேற்பாளருக்கு எதிராக முன்கண்டபடி முடிவுறவில்லை. எனவே அவர் தொலைபேசி வழியாக தெரிவித்த மறுப்பிற்கு, அதாவது தனது ஏற்பை திரும்பப் பெற்றுக் கொண்டதற்கு சட்ட வலிமை உண்டு. எனவே, இங்கு 'அ'–விற்கும் 'ஆ'–விற்குமிடையே ஒப்பந்தம் உருவாகவில்லை என்பதே தீர்வாகும். அது, முனைவேற்பின் அறிவிப்பு, முனைவாளரை (அ) அடையும் முன்பே, முனைவேற்பாளரின் (ஆ) மறுப்பால் செயலிழந்துவிட்டது.

இங்கு மற்றொன்றையும் கவனிக்க வேண்டும். அஃதாவது, தொலைபேசி மூலம் எழும் ஒப்பந்தங்கள் செல்லத்தக்கவையா? இது பற்றி இந்திய ஒப்பந்தச் சட்டம் எதுவும் கூறாவிட்டாலும், நேரில் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்களுக்குண்டான விதிமுறைகளே இதற்கும் பொருந்தும், என்று நீதிமன்றத் தீர்ப்புகள் உள்ளன. அந்த வகையில் பேசிக் கொண்டிருக்கையில் தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டால், மீண்டும் முனைவைக் கூறி, ஏற்பைப் பெற்று ஒப்பந்தத்தை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

மறுபயன்

7. Suresh promised Rs. 1000 towards the construction of a public library. The convenor of the library committee incurred certain liabilities to the contractor. Suresh did not pay the promised amount. Will a suit lie for the recovery of the amount?

சுரேஷ் பொது நூலகம் கட்டுவதற்கு ரூபாய் 1,000 கொடுப்பதாக உறுதியளிக்கிறார். நூலகக் குழு கூட்டுநர் கட்டிட ஒப்பந்ததாரருக்கு சில பொறுப்பு நிலைக்கு ஆளாகின்றார். சுரேஷ் அவர் உறுதியளித்த தொகையை செலுத்தவில்லை. அந்த தொகையைப் பெறுவதற்கு வழக்கு தொடர இயலுமா?

தீர்வு:

இப்பிரச்சனைக்கு தீர்வு காண நாம் பின்வரும் இரண்டு வழக்குகளை ஆய்தல் அவசியம். முதற்கண், **Abdul Azeez v. Mazum Ali**[1] - எனும் வழக்கில், மசூதி ஒன்றினைப் புதுப்பிக்க B என்பவருக்கு ரூ.500/– கொடுப்பதாக A என்பவர் உறுதியுரை செய்தார். ஆனால் அவர் அத்தொகையினைத் தரவில்லை. அந்த உறுதியுரையின் வாயிலாக ஏற்பட்ட ஒப்பந்தத்தினால் A என்பவருக்கு எவ்விதமான நன்மையும் ஏற்படவில்லை. அதுபோல் B என்பவருக்கு எவ்விதமான பொறுப்போ, இழப்போ ஏற்படவில்லை. எனவே அவ்வொப்பந்தம் இல்லா நிலையது என மேற்படி வழக்கில் தீர்ப்பு கூறப்பட்டது. ஏனெனில், இங்கு மறுபயன் ஏதும் கிடையாது.

ஆனால், **Kedar Nath v. Gorie Mohamed**[2] - எனும் வழக்கில், ஹௌரா நகரில் 'டவுன் ஹால்' கட்டிடம் ஒன்றைக் கட்டுவதற்காக பலரிடமும் சந்தா வசூலிக்கப் பட்டது. பிரதிவாதி, ரூ.100/– செலுத்துவதாக வாதியிடம் உறுதியுரைத்து, சந்தா புத்தகத்தில் எழுதி, கையொப்பமிட்டார். ஆனால் ரூ.100/– தரவில்லை. சந்தா பணத்தை நம்பி, அக்கட்டிடத்தைக் கட்டுவதற்காக, வாதியும் கட்டிட ஒப்பந்தக்காரருடன் ஒப்பந்தம் செய்து கொண்டார். எனவே, வாதிக்கு அவ்வொப்பந்தத்தின்படி ஒப்பந்தக்காரருக்கு பொறுப்புடையவர் ஆனார். இவ்வாறு உறுதியுரையை நம்பி, உறுதியுரை ஏற்பவர் (promisee) சில பொறுப்புகளுக்குள்ளாகும் பொழுது, அவ்வுறுதியுரையை வலியுறுத்திச் செயல்படுத்த உரிமையுடையவர் என்றும், இங்கு அத்தகு பொறுப்பு, வாதிக்கு ஏற்பட்டுள்ளது என்றும், எனவே பிரதிவாதியிடமிருந்து ரூ.100/– பெற வாதி உரிமையுடைவர் என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

நாம் கண்ட முதல் வழக்கில், உறுதியுரை அளிக்கப்பட்ட தொகைக்கு எதிராக, B என்பவருக்கு எவ்வித பொறுப்பும் ஏற்படவில்லை. ஆனால் இரண்டாவது வழக்கில் வாதிக்கு பொறுப்பு ஏற்பட்டுள்ளது. நமது மேற்படி பிரச்சனையும் இந்த இரண்டாவது வழக்கின் அடிப்படையில் அமைந்ததாகும். இங்கு சுரேஷ் அளிக்க உறுதியுரை செய்த

1. (1914) I.L.R. 36 All. 268
2. (1886) I.L.R. 14 Cal. 64

தொகையான ரூ.1000/–த்தின் அடிப்படையில், நூலகக் குழு கூட்டுநருக்கு ஒப்பந்தக் காரருடன் சில பொறுப்புகள் ஏற்பட்டுள்ளன. இப்பொறுப்புகளே, அத்தொகைக்கு மறுபயனாக விளங்குகிறது. எனவே சுரேஷ்–யிடமிருந்து அத்தொகையைப் பெற வழக்கு தொடர இயலும் என்பதே திட்டவட்டமான தீர்வாகும்.

8. X, the only son of Y, fell into a well and Z saved him. Y in gratitude made an oral promise to pay Z Rs. 5,000. But Y died before making any payment. Z claims the amount from X. Will he succeed?

Y என்பவரின் ஒரே மகனான X என்பவர் கிணற்றில் விழ அவரை Z என்பவர் காப்பாற்றினார். நன்றியின் பெயரில் Y, Z என்பவருக்கு ரூ.5,000 கொடுப்பதாக வாய் மொழியாக வாக்குறுதி அளித்தார். ஆனால் பணம் எதையும் கொடுக்கும் முன்பு Y இறந்து விடுகிறார். Z என்பவர் X-யிடமிருந்து அந்தத் தொகையை உரிமையின் பேரில் பெறக் கோருகிறார். அவர் வெற்றி பெறுவாரா?

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **பிரிவு 25–ன்படி 'மறுபயனில்லாத உடன்பாடு இல்லாநிலையதாகும்'**. ஆனால் இதற்கு அப்பிரிவிலேயே விதிவிலக்குகள் கூறப்பட்டுள்ளன. அவற்றில் **பிரிவு 25(2)–ன்படி,** உறுதியுரைப்பவருக்காக அல்லது அவர் சட்டப்படி செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ள ஒன்றிற்காக செயல் எதையும் ஏற்கனவே தன்னிச்சையாக செய்த ஒருவருக்கு இழப்பீடு அளிப்பதாக அவர் உறுதியுரைத்திருந்தால், அங்கு மறுபயன் ஏதுமில்லாத பொழுதும், அவர்களுக்கிடையிலான உடன்பாடு செல்லத்தக்கதே.

இங்கு கிணற்றில் விழ இருந்த Y-ன் மகனான X என்பவரை Z என்பவர் காப்பாற்று கிறார். இது Z என்பவர் Y என்பவருக்காக ஏற்கனவே தன்னிச்சையாக செய்த செயலாகும். இதற்கு நன்றிப் பெருக்கின் காரணமாக Y என்பவர் Z–க்கு ரூ.5,000/– கொடுப்பதாக உறுதியுரைக்கிறார். இங்கு ஆரம்பத்தில் Y–க்கும் Z–க்குமிடையே எவ்வித ஒப்பந்தம் ஏதுமில்லை. எனவே மறுபயனும் இல்லை. ஆனால் அவர் செய்த செயலுக்காக, ரூ.5,000/– தருவதாக Y உறுதியுரைத்தவுடன் மறுபயன் தோன்றிவிடுகிறது. ஒப்பந்தமும் எழுகிறது. எனவே அதனைப் பெற Z உரிமையுடையவர்.

ஆனால் இடையில், Y என்பவர் இறந்துவிடுகிறார். இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு **6(4)–ஆனது,** முனைவாளரின் (உறுதியுரை அளிப்பவர்) இறப்பு அல்லது பித்து நிலையானது, அவரது முனைவு ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு முன்பாக முனைவேற்பாளரின் அறிவுக்கு எட்டியிருப்பின், அம்முனைவு திரும்பப் பெறப்பட்டதாகிறது (offer is revoked) என்று கூறுகிறது. ஆனால் இங்கு முனைவாளரின் (அதாவது Y-ன்) இறப்பிற்கு முன்பே Y-ன் ரூ.5,000/–த்திற்கான முனைவை Z என்பவர் ஏற்றுள்ளார் என்பது மேற்படி பிரச்சனை யிலிருந்து தெரிய வருகிறது. ஏனெனில் அவர் வாய்மொழியாக, தனது உறுதியுரையை (வாக்குறுதியை) X-க்கு தெரியப்படுத்தியுள்ளார். எனவே Z என்பவர் அத்தொகையை Y என்பவர் இறந்துவிட்டிருந்தாலும், அவர் விட்டுச் சென்ற சொத்துக்களிலிருந்து பெற முடியும்.

மேலும் Y அளிப்பதாக கூறிய ரூ.5,000/–, இங்கு 'கடந்த கால மறுபயனாக (முந்தய மறுபயனாக) உள்ளது. **பிரிவு 2(d)–ன்படி,** கடந்த கால மறுபயன் செல்லும். எனவே அனைத்து நேர்வுகளிலும், Z என்பவர் மேற்படி ரூ.5,000/–த்தை கோரிப் பெற உரிமையுடைவர் என்பதே தீர்வாகும். எனினும், Y என்பவர் வாய்மொழியாக அளித்த உறுதியுரையை Z என்பவர் தக்க சாட்சியங்களின் வழியாக மெய்ப்பிக்க வேண்டியுள்ளது.

ஒப்பந்தத்திற்கு வெளியார்

9. A contract was entered into between the parents of a boy and girl, each promissing to pay them a sum of Rs. 1,000 per month for a period of one year if the boy and girl get married. The boy's parents further gave a charge of some of their properties as part of their commitment towards the promise. After the marriage was over the boy's parents failed to pay the amount as promised. The girl filed a suit against her in-laws to revocer the amount promised by them. Can she succeed?

ஓர் பையனின் பெற்றோர்களும் பெண்ணின் பெற்றோர்களும் அவர்களுடைய பையன்–பெண் முறையே திருமணம் முடித்துக் கொண்டால் ஓர் ஆண்டிற்கு மாதம் ஒன்றிற்கு ரூ.1,000 அவர்களுக்கு தருவதாக ஒப்பந்தம் மேற்கொண்டனர். மேலும் பையனின் பெற்றோர்கள் தங்கள் உறுதியுரையினை ஊர்ஜிதம் செய்த வண்ணம் சில சொத்துக்களின் மீது பிணையமொன்றும் ஏற்படுத்திக் கொடுத்தனர். திருமணம் முடிந்த பின்னர் பையனின் பெற்றோர்கள் உறுதி செய்து கொடுத்த பணத்தை கொடுக்க தவறிவிட்டனர். எனவே திருமணமான பெண் இப்பணத்தை பெறுவதற்காக பையனின் பெற்றோர்கள் மீது வழக்கொன்று தாக்கல் செய்கிறார். இந்த பெண் இந்த வழக்கில் வெற்றி பெறுவாரா?

தீர்வு:

இப்பிரச்சனைக்குத் தீர்வு காண, நாம் 'ஒப்பந்தத்திற்கு வெளியார் வழக்கிட முடியுமா' எனும் வினாவிற்கு விடை காண வேண்டும். ஆங்கில மற்றும் இந்தியச் சட்டத்தின்படி 'ஒப்பந்தத்திற்கு வெளியார் வழக்கிட முடியாது". அறிஞர் ஆன்சன் அவர்கள், "ஒரு ஒப்பந்தம், அந்த ஒப்பந்தத்தின் தரப்பினரல்லாத ஒருவர் மீது, அந்த ஒப்பந்தத்தின் நோக்கமே அவருக்கு பயனிக்க வேண்டுமென்பதாக இருந்த போதிலும் கூட, எந்தவித உரிமையையும் வழங்க முடியாது என்பது ஆங்கிலச் சட்டத்தின் பொது விதி" என்று கூறுகிறார். இது இந்தியச் சட்டத்திற்கும் பொருந்துவதாக உள்ளது.

மேற்கண்ட பிரச்சனையில், பெற்றோர்கள் செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு அப்பையனும், பெண்ணும் வெளியார்கள். எனவே சட்டப்படி அவர்கள் அவ்வொப்பந்ததை வலியுறுத்த வழக்கிட முடியாது.

எனினும், அதற்கு சில விதிவிலக்குகளை இந்திய நீதிமன்றங்கள் வகுத்துள்ளன.

அவற்றின்படி, (1) குடும்ப ஏற்பாட்டிற்காக (family settlement) ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கும் பொழுது, அதனால் பயனடைபவர்கள், அவ்வொப்பந்தத்திற்கு வெளியராக இருந்தாலும், அவ்வொப்பந்ததை வலியுறுத்த வழக்கிடலாம். (2) ஒருவருக்குச் சாதகமாக அவரது நன்மைக்காக சட்ட முறையிலோ, ஒப்பந்தம் வாயிலாகவோ, ஒரு நிலையான சொத்தின் மீது பொருட்பிணைப் பொறுப்பு (பிணையம்) (Charge) அல்லது வேறு அக்கறை (interest) ஏற்படுத்தியிருந்தால், அவர், ஒப்பந்தத் தரப்பாளராக இல்லாவிடினும் அவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் வழக்கிட்டு, வலியுறுத்தலாம்.

இங்கு மேற்படி பிரச்சனையில் பையன், பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால், மாதந்தோறும் ரூ.1000/– அளிப்பதாக அவர்களது பெற்றோர்கள் உறுதியுரைத்திருப்பது, ஒரு குடும்ப ஏற்படாகும். அதனால் பயனடைபவர்கள், இரு குடும்பத்தையும் சார்ந்த நபர்கள். எனவே இதனை வலியுறுத்த முடியும். மற்றொன்று, இவ்வுறுதியுரையை ஊர்ஜிதம் செய்யும் வண்ணம் அப்பெற்றோர்கள் சில சொத்துக்களின் மீது பொருட்பிணைப் பொறுப்பை (பிணையம்) ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர். இப்பிணையம், அப்பையன் மற்றும் பெண்ணின் நன்மைக்காக அவர்களது பெற்றோர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே இதனையும் வலியுறுத்த முடியும்.

முடிவாக, அப்பெண் மாதந்தோறும் ரூ.1000/– பெறவும், பிணையத்தின் பலனை அடையவும், அவள் அவ்வொப்பந்தத்திற்கு வெளியராக இருந்தாலும், பையனின் பெற்றோர்கள் மீது வழக்கிட முடியும். அதில் அவள் நிச்சயம் வெற்றி பெறுவாள் என்பதே தீர்வு.

மேற்கண்ட பிரச்சனை, **Khwaja Muhamad v. Husaini Begum**[1]– எனும் வழக்கின் பொருண்மைகளை அப்படியே அடியொற்றியதாகும். அவ்வழக்கிலும், பெண்ணிற்கு சார்பாகவே மேற்கண்ட விதிவிலக்குகளின் அடிப்படையில் தீர்ப்புரைக்கப்பட்டது.

10. At the time of partition of the family property it was agreed that the two male members 'A' and 'B' will bear the marriage expenses of 'C' the female member of the family. 'A' and 'B' fails to fulful the promise. Provide legal advise to 'C'.

குடும்பச் சொத்தினை பாகப்பிரிவினை செய்யும் போது ஆண் உறுப்பினர்களாகிய 'அ' மற்றும் 'ஆ' என்பவர்கள் பெண் உறுப்பினரான 'இ'ன் திருமணச் செலவுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஒப்புக் கொண்டார். ஆனால் 'அ' மற்றும் 'ஆ' தங்களது வாக்குறுதியை நிறைவேற்றத் தவறுகின்றனர். 'இ' என்பவருக்கு சட்ட ஆலோசனை வழங்கவும்.

தீர்வு:

ஆங்கில மற்றும் இந்தியச் சட்டத்தின்படி, ஒப்பந்தத்திற்கு வெளியார், அவ்வொப்பந்தத்தை வலியுறுத்தக் கோரி வழக்கிட முடியாது என்பது ஒரு பொது விதி. ஆனால் இதற்கு ஒரு முக்கிய விதிவிலக்குண்டு. அது, குடும்ப ஏற்பாடு **(Family Settlement)** ஆகும்.

1. (1910) I.L.R. 32 All. 410

இந்துக் குடும்பங்களில் ஆண்களால் செய்யப்படும் குடும்ப ஏற்பாட்டில் பெண்களுக்கு பங்கு ஏற்பட்டிருந்தால், அவ்வேற்பாட்டு ஒப்பந்தத்தில் தரப்பினர்களாக இல்லாத பெண்கள், அதன் மீது வழக்குத் தொடரலாம். பெண்களின் திருமணம், குடும்பச் சொத்து, பாகப்பிரிவினை முதலியவற்றில் எவருக்கேனும் பயன் ஏற்பட்டிருந்தால் அந்தப் பயனாளி அந்தப் பங்கைப் பெற வழக்கு தொடர முடியும். அதாவது இங்கு அப்பெண்கள், குடும்ப ஏற்பாட்டு ஒப்பந்தத்திற்கு வெளியார்களாக இருந்தாலும், அவ்வொப்பந்தத்தில் வாயிலாக எழுந்த பயனை தங்களுக்கு அளிக்கக் கோரி ஒப்பந்தத் தரப்பாளர்கள் மீது வழக்கிட இயலும். இந்நிலைப்பாட்டை பின்வரும் இரு வழக்குகளைக் கண்டால் விளங்கும்.

Shuppu Ammal v. Subramanyan[1]– எனும் வழக்கில், சொத்துக்களை பாகம் பிரித்ததின் பேரில், இரு சகோதரர்கள் தங்களது தாயின் பராமரிப்புக்கான தொகையை சரிசமமாகப் பிரித்து அளித்து வருவது என அவர்கள் இருவரும் ஒப்பந்தம் செய்து கொண்டனர். இங்கு அவர்களது தாயார் ஒப்பந்தத்திற்கு வெளியார். இருப்பினும், மேற் கண்ட விதிவிலக்கின்படி மேற்படி இரு மகன்களிடத்திலிருந்தும் பராமரிப்புத் தொகையைப் பெற வழக்குத் தொடர முடியும் என மேற்படி வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

Sundararaja v. Lakshmi Ammal[2] –எனும் மற்றொரு வழக்கில், குடும்ப பாகப்பிரிவினையின் பொழுது, சகோதரிக்கு திருமணச் செலவுகளை அளிக்க வேண்டும் என்று சகோதரர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் சகோதரி ஒரு தரப்பினராக இல்லை. எனினும், அச்செலவுகளைப் பெற அவள் வழக்கிட உரிமை படைத்தவள் என்றும், அதனை சகோதரர்கள் அளிக்க வேண்டும் என்றும் சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

மேற்படி பிரச்சனையில், குடும்பச் சொத்தினை பாகப்பிரிவினை செய்யும் போது ஆண் உறுப்பினர்களாகிய 'அ' மற்றும் 'ஆ' என்பவர்கள் பெண் உறுப்பினரான 'இ'ன் திருமணச் செலவுகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று செய்து கொண்ட ஒப்பந்தத்திற்கு மேற்படி 'இ' ஒரு வெளியாராக இருந்தாலும், மேற்கண்ட வழக்குகளின்படி, அவர்கள் மீது வழக்கிட்டு, தனது திருமணத்திற்குரிய செலவுகளை 'இ' கோரிப் பெறலாம். இதற்காக அவர் தனது 'அ' மற்றும் 'ஆ' எனும் இரு சகோதரர்கள் மீது வழக்கிட வேண்டும். இதுதான் நாம் 'இ' அளிக்கும் சட்ட ஆலோசனை ஆகும்.

தரப்பினர்களின் ஒப்பந்தக் தகுதி

11. 'X' a minor falsely representing himself as major enters into an agreement to sell his property to "Y" and receives from him as price a sum of Rs. 50,000/- as advance. Out of this advance sum, he buys a scooter, a T.V. and spends the rest on a pleasure

1. (1910) ILR 33 Mad. 238 : 4 I.C. 1083 ; 19 MLJ 739
2. (1915) ILR 38 Mad. 788 : 24 I.C. 943

trip to Singapore. After the minor attained majority, "Y", sues him for the conveyance of the property; or, in the alternative to make over the scooter and the T.V. to 'Y' together with the damages for the balance - Decide.

'X' என்ற இளவர், தாம் வயதடைந்தவர் என நேர்மையற்ற முறையில் கூறி, தன்னுடைய சொத்தை Y-க்கு விற்கும் பொருட்டு ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட்டு, அச்சொத்தின் விலையில் ரூ.50,000/–த்தை முன் பணமாக Y-யிடமிருந்து பெற்றுக் கொள்கிறார். மேற்படி தொகையிலிருந்து, X ஆனவர் ஒரு ஸ்கூட்டர் மற்றும் T.Vயை வாங்குகிறார். மேலும் மீதித் தொகையில் சிங்கப்பூர் சென்று உல்லாசமாக செலவழிக் கிறார். மேற்படி X எனும் இளவர், உரிமை வயதடைந்தவுடன் Y ஆனவர், சொத்தை தனக்கு விற்கும்படி அல்லது அதற்கு பதிலாக தான் கொடுத்த முன் பணத்திலிருந்து X வாங்கிய ஸ்கூட்டர் மற்றும் T.V.–யை மற்றும் மீதித்துகைக்கு நஷ்டஈட்டையும் வழங்குமாறு X மீது வழக்கிடுகிறார். – தீர்க்க.

தீர்வு:

ஒரு இளவர் ஒப்பந்தத்தில் ஈடுபட முடியாது. அவ்வாறே அவ்விளவர், நேர்மையற்ற முறையில் தம்மை ஒரு உரிமை வயதடைந்த நபராக (major) காட்டிக் கொண்டு ஒப்பந்தம் செய்து கொண்டிருந்து, இதனால் அவ்விளவர் மீது பிற்காலத்தில் வழக்கொன்று எழுந்தால், அப்பொழுது அவர் தனது வயதடையாத நிலையை பாது காப்பாகக் காட்டி எதிர்வாதம் புரிதலை யாரும் தடுக்க வியலாது.

மேற்கண்டதின் அடிப்படையில், நமது மேற்படி பிரச்சனையில் Y ஆனவர், சொத்தை தனக்கு விற்கும்படி கோரி X-ன் மீது வழக்கிட முடியாது. X உடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும் காலத்தில், அவர் உரிமை வயதடைந்தவர்தானா என்பதை அறிந்து Y விழிப்புடன் செயல்பட்டிருக்க வேண்டும்

எனவே, Y கொடுத்த ரூ. 50,000/–த்தை திரும்பப் பெற வழியில்லையா என்று கேட்டால், அதற்கு சட்டம் ஒரு தீர்வழியை Y-க்கு வழங்குகிறது. அதுவே மீட்டளிப்பு (Restitution) என்பதாகும்.

அதாவது X என்பவர், தான் Y-யிடமிருந்து பெற்றுக் கொண்ட தொகையான ரூ. 50,000/–த்திலிருந்து வாங்கிய பொருட்களை, மேற்படி Y திரும்ப பெற்றுக் கொள்ள முடியும். X வாங்கிய ஸ்கூட்டர் மற்றும் T.V.–யை பெற்றுக் கொள்ள X மீது Y வழக்கிட லாம். அதில் வெற்றியும் பெறலாம். ஆனால் மீதித் தொகைக்கு நஷ்ட ஈடு கோரி வழக்கிட முடியாது. அவ்விளவர், சிங்கப்பூர் சென்று செலவழித்த தொகையை Y கோர முடியாது. Y கொடுத்த பணத்திலிருந்து வாங்கிய பொருட்களை திரும்பப் பெறலாம். அல்லது அவற்றை விற்று வந்த பணத்திலிருந்து வாங்கப்பட்ட வேறு பொருள்களை திரும்பப் பெறலாம் என்பதே தீர்வு.

மேற்கண்டவற்றை பார்க்கும் பொழுது ஒப்பந்தத்தில் ஈடுபடும் இளவர்க்கு சொந்தப் பொறுப்பு (Personal liability) ஏதுமில்லை என்பது தெளிவாகும். எனவே ஒருவருடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும் பொழுது, சிறிது சந்தேகம் ஏற்பட்டாலும், அவரது வயதை

முறி சோதித்தறிந்து அவர் உரிமை வயதடைந்தவர்தானா என்பதை தீர்மானித்துக் கொண்டே பிறகே ஒப்பந்ததில் ஈடுபட வேண்டும்.

12. 'A', a minor representing himself as a major buys a motor car on credit. Can the seller recover the price or the car back?

'அ' என்ற வயது வராதவர், தன்னை வயது வந்தவர் எனத் தெரிவித்து, ஒரு மோட்டார் காரை, கடனுக்கு வாங்குகிறார். விற்பனையாளர் காரின் விலையையோ காரையோ திருப்பிப் பெற முடியுமா?

தீர்வு:

நாம் முன்கண்ட பிரச்சனைக்கு அளித்த தீர்வினையொட்டி இப்பிரச்சனைக்கும் தீர்வு பகரலாம். அதன்படி, விற்பனையாளர் காரின் விலையை திரும்பப் பெறவியலாது. ஆனால் அக்கார் 'அ'–விடம் இருப்பின், அதனை திரும்பப் பெறவியலும். இதனை 'மீட்டளிப்பு' என்கிறோம். இந்திய ஒப்பந்தச் சட்டப்படி, பணத்தை திரும்பக் கொடுக்க, இளவருக்கு சொந்தப் பொறுப்பு ஏதுமில்லை. பெற்ற பொருளை, திரும்பக் கொடுக்கும் பொறுப்பு மட்டுமே உண்டு. ஒருவேளை அக்காரை விற்று, அப்பணத்தையும் 'அ' செலவழித்து விட்டிருந்தால், விற்பனையாளருக்கு எவ்வித உரிமையும் இல்லை.

13. 'A' renders some service to B during his minority at the request of B. B on attaining majority enters into an agreement with A to compensate A for services rendered during B's minority. Is the agreement valid ?

"ஆ" என்பவர் இளவர் நிலையிலிருக்கும் போது வேண்டுகோள் செய்ததற்கிணங்க "அ" என்பவர் பணி புரிகிறார். அந்த இளவர் வயது வந்தவுடன் "அ"வுடன் ஒப்பந்தமொன்று செய்து கொண்டு அவர் செய்து முடித்த பணிகளுக்காக ஈடுகொடுக்க இசைகிறார். இந்த ஒப்பந்தம் செல்லத்தக்கதா?

தீர்வு:

மேற்படி ஒப்பந்தம் செல்லத்தக்கதே. முதலில் ஒன்றை இங்கு புரிந்து கொள்ள வேண்டும். அதாவது B எனும் இளவர், தான் உரிமை வயது வந்த பிறகே A-யுடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். எனவே அடிப்படையில் இந்த ஒப்பந்தம் செல்லத்தக்கதே.

ஒரு இளவருக்கு, அவர் இளவர் நிலையிலிருக்கும் பொழுது, செய்யப்படும் பணிகள் மற்றும் சேவைகளுக்குண்டான ஈட்டுத் தொகையை அவருக்காக பணிபுரிந்தவர் இளவரின் சொத்துக்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். இத்தீர்வழியை ஒப்பந்தம் ஏதும் இல்லாமலே, இளவருக்கு சேவை புரிந்தவர்களுக்கு சட்டம் வழங்குகிறது. இது ஒப்பந்தம் செய்து கொள்வதனால் மேலும் உறுதியடைகிறது. எனவே மேற்படி ஒப்பந்தம் செல்லத் தக்கதே. B எனும் இளவருக்கு பணி செய்த A ஆனவர், அவ்வொப்பந்தத்தின் அடிப்படையில் தாராளமாக தனக்குண்டான ஈட்டுத் தொகையை கோரிப் பெறலாம், என்பதே தீர்வு.

14. 'A' borrowed a sum of Rs.5,000 from 'B', a minor and agreed to return the same within 3 years. But 'A' did not return it. Decide minor's right in this case.

'அ' என்பவர் 'ஆ' என்கிற இளவரிடமிருந்து ரூ.5,000 கடனாக பெற்று அதனை மூன்று வருடங்களுக்குள் திருப்பி தர ஒப்புக் கொள்கிறார். ஆனால் 'அ' அவ்வாறு கடனாக பெற்ற பணத்தை திருப்பித் தரவில்லை. இந்த நிலையில் இளவரின் உரிமைகளை முடிவு செய்க.

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 10–வது பிரிவின்படி, ஒப்பந்தத் தகுதி படைத்தவர்களுடன் செய்து கொள்ளும் உடன்பாடுகளே, ஒப்பந்தங்களாகும். எனவே ஒப்பந்தத் தரப்பினர், ஒருவர் இளராக, பித்து நிலை அடைந்தவராக, சட்டங்களால் ஒப்பந்தம் செய்து கொள்ளத் தகுதியற்றவர்களாக அறிவிக்கப்பட்டரவாக இருத்தல் கூடாது. அப்படிப்பட்ட நபர்களுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம் இல்லாநிலையதாகும். **Mohori Bibi v. Dharmadas Ghose**[1]- எனும் வழக்கில் இளவர் ஒருவர், தம்மை வயதடைந்தவராக திரித்துக் கூறி, அடைமானக் கடன் ஒன்றைப் பெற்றார். இப்பணத்தை திரும்பக் கோரி தொடுக்கப்பட்ட வழக்கில், இளவருடன் செய்து கொள்ளும் ஒப்பந்தம், **'அடிமுதலே இல்லாநிலையது'** (void abinitio) என்றும், எனவே கடன் கொடுத்தவர், அதனைத் திரும்பப் பெற முடியாது என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

ஆனால் இளவர் ஒருவர் மற்றொருவருக்கு கடன் கொடுக்க, சட்டப்படி தடையேது மில்லை. **Ranga Raju v. M.Basapa**[2] எனும் வழக்கில், கடனுறுதிச் சீட்டு ஒன்றின் அடிப்படையில் பணம் கடன் கொடுத்த இளவர் ஒருவர், அதனைத் திரும்பப் பெற முடியும், என்று தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதுபோல், **Abdul Gaffar v. Plarelal**[3] எனும் வழக்கில், வாதியாக உள்ள இளவர், விற்ற பொருட்களுக்குண்டான சரக்குகளின் விலையை, அவர் திரும்பப் பெற முடியும் என்று தீர்ப்புரைக்கப்பட்டது. எனவே ஒருவர் இளவராக இருக்கும் பொழுது, மற்றொருவருக்கு கொடுத்த கடனையும், விற்ற சரக்குகளின் மதிப்பையும் திரும்பப் பெறவியலும் என்பது தெளிவாகிறது.

எனவே மேற்கண்டவற்றின் அடிப்படையில், 'அ' என்பவர் 'ஆ' என்கிற இளவரிட மிருந்து கடனாகப் பெற்ற ரூ.5,000/–த்தைப் அவரிடமிருந்து வட்டியுடன் திரும்பப் பெற 'ஆ' எனும் அவ்விளவருக்கு உரிமையுண்டு என்பதே இங்கு முடிவாகும்.

15. 'A' enters into a contract with B, a person of unsound mind but during the period of lucid interval. Is the contract valid?

மனச் சீர்கேடுற்ற 'ஆ' என்பவருடன் அவர் மனத் தெளிவுள்ள இடைக் காலத்தில் 'அ' என்பவர் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்கிறார். இந்த ஒப்பந்தம் செல்லத் தக்கதா?

1. (1903) 30 Cal. 539
2. (1913) 24 MLJ 363
3. (1934) Lah. 480

தீர்வு:

மேற்படி ஒப்பந்தம் செல்லத்தக்கதே. மேலும் விளக்கத்திற்கு வினா எண்.25-ல் 'திடமற்ற மனமுடையோர்' எனும் தலைப்பின் கீழ் காண்க.

தன்னிசையான இசைவு (அல்லது) இசைவில் குறைபாடு

16. A Hindu, threatened to commit suicide if his wife and son did not execute a release deed in favour of his brother in respect of certain properties which they claimed as their own. Does his act amount to coercion?

இந்து ஒருவர் தம் மனைவியும் மகனும் சில சொத்துக்களைத் தம் சகோதரருக்குச் சாதகமாக மாற்றம் செய்து தராவிட்டால் தற்கொலை செய்து கொள்வதாக மிரட்டினார். அவருடைய செயல் வலுக்கட்டாயமாகுமா?

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **15-வது பிரிவானது,** 'யாராகிலும் ஒருவரை உடன்பாடு ஒன்றில் சேர வைக்கும் நோக்கோடு, இந்திய தண்டனைச் சட்டத்தால் (i) தடை செய்யப் பட்டுள்ள குற்றச் செயலொன்றை செய்தல், அல்லது (ii) செய்வதாக அச்சுறுத்தல், அல்லது (iii) சட்டப்புறம்பாக அவரது உடைமையை கொடாமல் வைத்தல், அல்லது (iv) வைத்துக் கொள்வதாக அச்சுறுத்தல் வலுக்கட்டாயமாகக் கருதப்படும்' என்று கூறுகிறது.

மேலும், 'வலுக்கட்டாயம்' என்பது ஒப்பந்தத் தரப்பாளரிடமிருந்து வர வேண்டு மென்பதில்லை. மூன்றாவது நபர் ஒருவரிடமிருந்தும் தோன்றலாம்.

மேற்படி பிரச்சனை **Ammi Raju v. Soshamma**[1]- எனும் வழக்கின் பொருண்மைகளை ஒத்ததாகும். இவ்வழக்கில், ஓர் கணவன் தனது மனைவியும், மகனும் அவர்களுக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்களை தன் பெயருக்கு விடுதலைப் பத்திரம் (Release-deed) எழுதி வைக்காவிடில், தான் தற்கொலை செய்து கொள்ளப் போவதாகப் அச்சுறுத்தினார். உண்மையிலே அவர் தற்கொலை செய்து கொண்டு விடுவாரோ என அஞ்சிய அவரது மனைவியும், மகனும் அவரது விருப்பப்படியே அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை, அவர் பெயருக்கு விடுதலைப் பத்திரம் ஒன்று எழுதிக் கொடுத்தார்கள். பின் மேற்சொன்ன விடுதலைப் பத்திரம் அவர்களை வலுக்கட்டாயப் படுத்தி எழுதி வாங்கப்பட்டதென்றும், எனவே அவ்விடுதலைப் பத்திரம் சட்டப்படி செல்லாதென்றும் அவர்கள் வழக்குத் தொடர்ந்தார்கள். தற்கொலை செய்து கொள்ள முயற்சிப்பது (attempt to commit suicide) இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 309-வது பிரிவின்படி குற்றமாகும் என்றும் அக்குற்றச் செயலை செய்யப்போவதாக பயமுறுத்தி தனது மனைவியிடமும், மகனிடமும் இசைவு பெற்றது வலுக்கட்டாயம் என்றும்,

1. (1917) 41 Mad. 33 : M.L.J. 494 : 5 L.W. 735 : (1917) M.W.N. 423

மேற்கொண்ட விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுப்பது சம்பந்தமாக கொடுத்த இசைவு தன்னிச்சையாக கொடுக்கப்பட்டதல்ல என்றும், எனவே அவர்கள் எழுதிக் கொடுத்த விடுதலைப் பத்திரம் செல்லாதென்றும் நீதிமன்றம் தீர்ப்பு கூறியது.

மேற்கண்ட பிரிவு 15 மற்றும் மேற்படி வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் மேற்படி பிரச்சனையில் இந்து ஒருவர் செய்த செயல், அவர் ஒப்பந்தத்திற்கு ஒரு மூன்றாவது நபராக இருந்தாலும், வலுக்கட்டாயமே என்பதுதான் இங்கு முடிவான தீர்வு.

17. 'P' sold his business to 'Q' without disclosing to his customers. 'M', an old customer sent an order for goods to 'P' by name. 'Q' the new owner, executed the order. Is 'M' bound to accept the goods.

'P' என்கிற வியாபாரி தன்னுடைய வாடிக்கையாளர்களுக்கு தெரிவிக்காமல் அவர் செய்து வந்த வியாபாரத்தினை 'Q' என்பவருக்கு விற்று விட்டார். 'M' என்கிற பழைய வாடிக்கையாளர்களில் ஒருவர் 'P' என்பரின் பெயருக்கு ஒரு ஆர்டர் அனுப்பி வைத்தார். 'Q' என்கிற புதிய சொந்தக்காரர் அந்த ஆர்டரினை பெற்று, அதன்படி நிறைவேற்றுவதற்கு முன் வருகிறார். 'M' என்பவருக்கு அவ்வாறு, கொடுக்கப்படும் சரக்குகளை அவர் பெற்றுக் கொள்ள கடமைப்பட்டவரா?

தீர்வு:

ஒப்பந்தம் செய்து கொள்ளும் நபர்களுக்கிடையே பொருண்மை (ஒப்பந்தத்தின் சங்கதி) சம்பந்தமாக தவறு ஏற்படுவதுண்டு. அத்தவறு ஒப்பந்த நபர்களிடையே கருத்தொருமித்தலை (Identity of mind - consensus) தவிர்க்கிறது. இத்தகைய ஒப்பந்தங்கள் இல்லாநிலை (void) அடைகின்றன. அந்த வகையில் **ஒப்பந்தம் செய்து கொள்ளும் நபரின் அடையாளம் குறித்த தவறு (Unilateral mistake as to identity of the party)** முக்கியமானதாகும். ஒப்பந்தத்தின் ஒரு தரப்பாளர், தான் எண்ணியிருந்த மறுதரப்பாளருடன் அல்லாமல், வேறு ஒரு நபருடன் ஒப்பந்தம் செய்து கொண்டால், அங்கு நபரின் அடையாளம் பற்றிய தவறு ஏற்பட்டுள்ளது என்று பொருளாகும். இத்தகு ஒப்பந்தங்கள் இல்லாநிலையதாகும்.

ஆனால், ஒப்பந்தத் தரப்பாளரின் அடையாளம் குறித்த தவறு பின்வரும் நிபந்தனைக் குட்பட்டே சம்பந்தப்பட்ட ஒப்பந்தத்தை இல்லாநிலையதாக்கும். அவை, 1. ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட வேண்டிய நபரின் அடையாளம், அந்த ஒப்பந்தத்திற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருத்தல் வேண்டும். 2. தவறுதலாக ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட நபர், சம்பந்தப்பட்ட மறு தரப்பாளருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள எண்ணியிருத்தல் கூடாது.

மேற்படி பிரச்சனையில், 'P' என்கிற வியாபாரி தன்னுடைய வாடிக்கையாளர் களுக்கு தெரிவிக்காமல் அவர் செய்து வந்த வியாபாரத்தினை 'Q' என்பவருக்கு விற்று விடுகிறார். 'M' என்கிற பழைய வாடிக்கையாளர்களில் ஒருவர் 'P' என்பரின் பெயருக்கு

ஒரு ஆர்டர் அனுப்பி வைக்கிறார். 'Q' என்கிற புதிய சொந்தக்காரர் அந்த ஆர்டரினை பெற்று, அதன்படி நிறைவேற்றுவதற்கு முன் வருகிறார். இங்கு ஒப்பந்தம் செய்து கொள்ளும் நபரின் அடையாளம் குறித்த தவறு எழுகிறது. 'M' என்பவர், தாம் 'P' எனும் வியாபாரிக்கு ஆர்டர் அனுப்புவதாகக் கருதிதான் அந்த ஆர்டரை அனுப்பினார். மாறாக அவர் 'Q' என்பவருடன் எவ்வித ஒப்பந்தத்தையும் செய்து கொள்ள விழையவில்லை. எனவே, இங்கு கருத்தொருமித்தல் இல்லை. இதனால், மேற்படி 'M'–க்கும், 'Q' –க்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம், தவறுகையானது. இல்லாநிலையது. எனவே 'M' என்பவர் 'P'–யின் பெயருக்கு அனுப்பிய ஆர்டரின் பேரில், 'Q' என்பவர் அனுப்பிய சரக்குகளை அவர் ('M') பெற்றுக் கொள்ள கடமைப்பட்டவரல்ல. (இத்தீர்வு குறித்த சில முக்கியமான வழக்குகளுக்கு வினா எண். 35–ன் விடையில் காண்க.)

சட்ட முரணான உடன்பாடுகள்

18. Mohan promises Kumar to pay Rs.20,000 if he murders Rani. What would be the rights of Kumar (a) if he commits the murder and (b) if Kumar has already received the amount and fails to murder Rani.

குமார் என்பவர் ராணியை கொன்றுவிட்டால் ரூ.20,000 அவருக்கு தருவதாக மோகன் என்பவர் உறுதியளிக்கின்றார். இதன் அடிப்படையில் பின்வரும் சூழ்நிலைகளில் குமாரின் உரிமைகள் யாவை?

(அ) குமார் ராணியைக் கொன்றுவிட்டால்; மற்றும் (ஆ) குமார் பணத்தினை பெற்றுக் கொண்டு ராணியைக் கொல்ல தவறும் பொழுது.

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **23–வது பிரிவில்** சட்டத்திற்குப் புறம்பான பரிபயனும் நோக்கமும் ஆறு வகைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. பரிபயனும் நோக்கமும் அவ்வாறில்லை எனில், அவை சட்டத்திற்குகந்தவை என்ற கூறப்பட்டுள்ளது. அந்த வகையில் சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ள செயலைச் செய்ய உறுதியுரைப்பது, சட்டப்படியான பரிபயனும், நோக்கமும் கொண்டவை ஆகாது. எனவே அவை இல்லாநிலையதாகும்.

இத்தகு சட்ட முரணான ஒப்பந்தங்களைப் பொறுத்தவரை "சட்ட முரணான செயலைச் சார்ந்தெழாது வழக்குரிமை" (Ex turpi causa non oritur actio) என்று ஒரு சட்ட மூதுரை கூறுகிறது.

'சட்ட முரணான செயலைச் சார்ந்தெழாது வழக்குரிமை' எனும் முதல் மூதுரையின் நோக்கம் யாதெனில், மக்களிடையே சட்ட முரணான செயல்கள், உறுதியுரைகள், ஒப்பந்தங்கள் ஆகியவை எழாமல் தடுப்பதே ஆகும். வேறு விதத்தில் கூறுவதானால், பொதுக் கொள்கைக்கு எதிரான அல்லது சட்டத்திற்கு முரணான வழக்கு மூலத்தை வைத்து வழக்காட இயலாது என்பதே இதன் விளக்கம். எனவே, அத்தகைய செயல்

களினால் உடன்பாடு கொண்டோர், கொடுத்த பணம், வழங்கிய சொத்துக்கள் எவற்றையும் சட்டத்தின் துணையினால் திருப்பிப் பெற இயலாது என்பது தெளிவு. இங்கு அச்செயலின் துணை நடவடிக்கைகள் (collateral transactions) அனைத்துமே, செல்லாததாகின்றன.

தற்பொழுது மேற்கண்டவற்றின் அடிப்படையில், மேற்படி பிரச்சனையை ஆராய்ந்தால் நமக்கு தீர்வு கிடைத்துவிடும். அதாவது 'கொலை செய்தல்' என்பது சட்டத்தால் தடை செய்யப்பட்ட செயல். எனவே, ராணியை கொலை செய்வதற்காக குமாரும், மோகனும் கொண்ட உடன்பாடே சட்ட முரணானது. அப்படியிருக்கும் பொழுது, குமார் ராணியைக் கொன்று விட்டபிறகு, மோகன் உறுதியுரைத்த ரூ.20,000/–த்தை கோரி குமார் எந் நீதிமன்றத்திலும் வழக்கிட முடியாது. ஏனெனில் முதல் மூதுரையின்படி, சட்ட முரணான செயலைச் சார்ந்தெழாது வழக்குரிமை. ஒருவேளை அப்படி வழக்கிட்டால், முதலில் குமாரின் மீதுதான் கொலைக் குற்றத்திற்காக, குற்றவியல் சட்டம் பாயும். எனவே, மேற்படி பிரச்சனையில் எழுப்பட்டுள்ள முதல் வினாவின்படி, குமார் ராணியைக் கொன்று விட்டாலும், அவர் மோகனிடமிருந்து ரூ.20,000/–த்தைப் பெற உரிமையுடையரல்ல.

இரண்டாவதாக, குமார் பணத்தினை பெற்றுக் கொண்டு ராணியைக் கொல்லத் தவறும் பொழுது, அவரே அப்பணத்திற்கு உரியவராகிவிடுகிறார். அதை மேற்படி மூதுரையின்படி, மோகன் திரும்பப் பெறவியலாது. அதற்காக எந்நீதிமன்றத்திலும் மோகன் வழக்குரைக்க முடியாது. அப்பணம், குமாரைச் சேர்ந்துவிடும். இதுவே, மேற்படி பிரச்சனையின் இரண்டாவது வினாவிற்கு தீர்வாகும்.

எனவே சட்டத்திற்குட்ட மறுபயனையும், நோக்கத்தையும் கொண்ட உடன்பாட்டில் ஈடுபட்டால்தான், ஒப்பந்த மீறுகையின் பொழுது, அவ்வொப்பந்ததின் இரு தரப்பினர் களுக்கும் சட்டம் துணை நிற்கும், என்பது இங்கு தெளிவாகிறது.

வணிகத்தை தடை செய்யும் உடன்பாடுகள்

19. 'A' agrees to sell all the goods manufactured by him to 'B'. In breach of the said agreement 'A' sold some goods to 'C'. There upon 'B' sued 'A' for breach of contract. Will 'B' succeed?

'அ' என்பவர் தான் தயாரிக்கும் அனைத்துப் பொருள்களையும் 'ஆ'விற்கு விற்பதாக ஒப்புக் கொள்கிறார். இவ்வுடன்படிக்கையினை மீறி 'அ' என்பவர் தயாரித்த சில பொருட்களை 'இ' என்பவருக்கு விற்று விடுகிறார். ஆகையால் 'ஆ' என்பவர் 'அ'வின் மீது ஒப்பந்த முறிவு செய்வதற்காக வழக்கிடுகிறார். 'ஆ' வெற்றி அடைய முடியுமா?

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **27–வது பிரிவு,** "சட்டப்படியான தொழில், வணிகம் அல்லது வியாபாரம் எதையும் செய்வதிலிருந்து தடுக்கும்படி உடன்பாடு செய்து கொண்டால்,

அவ்வாறு தடுக்கப்பட்ட அளவிற்கு அவ்வுடன்பாடு இல்லாநிலையை அடையும்" என்று கூறுகிறது. ஏனெனில், இத்தகு உடன்பாடுகள் பொதுக் கொள்கைக்கு எதிரானதாகக் கருதப்படுகின்றன. அதன்படி, 'அ' என்பவர் தயாரிக்கும் அனைத்துப் பொருட்களையும், 'ஆ'–விற்கே விற்க ஒப்புக் கொள்வது, அவரது வணிகத்தின் மீதான தடையாகும். இம் மாதிரியான உடன்பாடுகள் **'தனியுரிமை உடன்பாடுகள்' (Solus Agreements)** எனப் படுகின்றன. **Esso Petroleum Co. Ltd., v. Harper's Garage (Stourport) Ltd.,**[1]-எனும் வழக்கில், ஒருவர் தயாரிக்கும் பொருட்களை தன்னைத் தவிர மற்றவர் களுக்கு விற்கக் கூடாது என்று தடை விதித்து செய்து கொள்ளும் உடன்பாடு, முதற் தோற்றத்திலேயே இல்லாநிலையது (prima-facie void) என்று கருத்துரைக்கப் பட்டுள்ளது. எனவே மேற்படி பிரச்சனையில் 'அ' என்பவர் 'ஆ' என்பவருடன் செய்து கொண்ட உடன்பாட்டினை மீறி, தனது தயாரிப்புப் பொருட்களை 'இ' என்பவருக்கு விற்றால், அதற்காக இழப்பீடு ஏதும் கோரி, 'ஆ' என்பவர் வழக்கிட முடியாது. அப்படி வழக்கிட்டாலும், அவ்வழக்கில் வெற்றியடைய முடியாது. மேலும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அவ்வாறு விற்கக் கூடாது என்று 'ஆ' தடை விதித்திருப்பின், அது நியாயமான தடையாக இருந்திருக்கும். ஆனால் மேற்படி பிரச்சனையில், அவ்வாறு காலம் ஏதும் குறிப்பிடவில்லை. எனவே அது 'அ'–வின் வணிகச் சுதந்திரத்தின் மீது முழுமையான தடையாக உள்ளது. எனவே அவ்வுடன்பாடு இல்லாநிலையது. எனவே அவ்வுடன்பாட்டின் மீறுகைக்காக எத்தீர்வழியையும் கோரி வழக்கிட 'ஆ' என்பவருக்கு எவ்வித முகாந்திரமும் இல்லை.

நிகழ்வுசார் ஒப்பந்தம்

20. Peter agrees to pay David a sum of money if David marrries Celin, but Celin marries James. James dies and David marries Mrs. Celine James. David sues Peter to recover the money. Will he succeed?

செலின் என்பவளை டேவிட் திருமணம் செய்தால் குறிப்பிட்ட தொகை கொடுப்ப தாக பீட்டர் என்பவர் ஒப்பிசைவளித்தார். ஆனால் செலின், ஜேம்ஸ் என்பவரை மணந்தார். ஜேம்ஸ் இறந்த பின்னர் டேவிட், திருமதி. செலின் ஜேம்ஸ்–யை மணந்தார். பீட்டர் ஒப்பிசைவளித்த தொகையினைப் பெற டேவிட் வழக்குத் தொடுத்தார். வழக்கில் அவர் வெற்றி பெறுவாரா?

தீர்வு:

டேவிட் வெற்றி பெறவியலாது. இப்பிரச்சனை, இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 34–வது பிரிவின் கீழான எடுத்துக்காட்டை அடியொற்றியதாகும்.

பிரிவு 34–ன்படி, குறிப்பிட்ட காலவரம்புக்குள்ளாக, நபர் ஒருவரின் அத்தகு செயல் ஒன்றினால் அல்லது வேறு சில நிகழ்வுகளினால் (contingencies) நடைபெற சாத்தியமில்லாமல் (impossible) போகக் கூடியதுமான, நிகழ்வுசார் ஒப்பந்தத்தில்

1. (1968) AC 269

காணப்படுகின்ற வருங்கால நிகழ்ச்சியினை வரையறுத்துக் குறிப்பிடப்படாத காலத்தில், நபர் ஒருவர் செய்கின்ற செயலினால், அந்நிகழ்ச்சி நடைபெறுவதற்கு சாத்தியமில்லாத ஒன்றாகி விட்டதாகக் கருதப்படும். சற்று குழப்பாக உள்ள இச்சட்டப் பிரிவை பின்வரும் எடுத்துக் காட்டைக் கண்டால் எளிதில் விளங்கிவிடும்.

எடுத்துக்காட்டாக, B என்பவர் C என்பவரை மணந்து கொண்டால், B என்பவருக்கு ஒரு தொகை தருவதாக A என்பவர் உடன்படுகிறார். இந்நிலையில் C என்பவர் D என்பவரை மணக்கிறார். இங்கு ஒருக்கால் D என்பவர் இறந்து விட்டால், பின்னிட்டு C என்பவர் B என்பரை மணந்து கொள்ளும் சாத்தியக் கூறு உள்ளது. இருப்பினும், தற்பொழுது B மற்றும் C–யின் திருமணம் நடைபெற சாத்தியமில்லாமல் போன ஒன்றாகக் கருதப்படுகிறது.

எனவே மேற்படி பிரச்சனையில், செலின் என்பவளை டேவிட் திருமணம் செய்தால் குறிப்பிட்ட தொகை கொடுப்பதாக பீட்டர் என்பவர் உறுதியுரை அளித்தார் (ஒப்பிசைவளித் தார்). ஆனால் செலின், ஜேம்ஸ் என்பவரை மணந்தார். ஜேம்ஸ் இறந்த பின்னர் டேவிட், திருமதி. செலின் ஜேம்ஸ்–யை மணந்தார். இவ்வாறு ஜேம்ஸ் இறந்த பிறகு, டேவிட் என்பவர் திருமதி. செலின் ஜேம்ஸ்–யை மணந்து கொண்டதாலே, பீட்டர் உறுதியுரையளித்த தொகையை டேவிட் பெற முடியாது. பீட்டர் அளித்த உறுதியுரையின் வலிமை, செலின் என்பவள், டேவிடை விடுத்து, ஜேம்ஸ் என்பவரை மணந்து கொண்ட பொழுதே முடிந்து விட்டது. டேவிடின் திருமணம், செலினுடன் நடப்பதற்கு சாத்தியமில்லாத ஒன்றாகிவிட்டது. பின்னிட்டு அதற்கு உயிர் தர முடியாது. எனவே டேவிட் என்பவர் செலினை மணந்து கொண்டு விட்டேன்; ஆகவே உறுதியுரைத்த தொகையைத் தனக்குத் தர வேண்டும் என்று பீட்டர் மீது வழக்கிட முடியாது. அப்படி வழக்கிட்டால், அவர் தோல்வியுறுவது திண்ணம்.

ஒப்பந்த நிறைவேற்றம்

21. A contracts to marry B after the life time of A's father. But before A's father expired A married C. Can B file a suit for breach of contract?

அ என்பவர், தனது தந்தையின் வாழ்நாளிற்கு பிறகு ஆ என்பவரை திருமணம் செய்வதாக ஒப்பந்தம் செய்து கொண்டார். 'அ'வின் தந்தை மரணம் அடைவதற்கு முன்னரே அ என்பவர் இ என்பவரை திருமணம் செய்து கொண்டார். ஆ என்பவர் ஒப்பந்த மீறுகை வழக்கு தொடர இயலுமா?

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **39–வது பிரிவானது,** ஒப்பந்தத்தின் ஒரு தரப்பினர், தனது உறுதியுரையை அதன் முழுமைக்கும் நிறைவேற்ற மறுக்கும் பொழுது அல்லது அதனை நிறைவேற்றுவதற்கு தன்னை இயலாதவாறு ஆக்கிக் கொள்ளும் பொழுது, உறுதியுரை ஏற்பவர் அவ்வொப்பந்தம் தொடர்ந்து நீடித்திருப்பதற்கு சொற்களாலோ,

நடத்தையாலோ தனது இசைவைக் சுட்டிக்காட்டினாலொழிய, அவர் அவ்வொப்பந்தத்தை ஒரு முடிவிற்கு கொண்டு வரலாம், என்று கூறுகிறது. அதாவது, இப்பிரிவு, 'முன்னிகழ் ஒப்பந்த மீறுகை' (Anticipatory Breach of Contract) பற்றிக் கூறுகிறது.

ஒரு ஒப்பந்தத்தின் நிறைவேற்றக் காலம் வரும் முன்னரே, அதனை நிறைவேற்ற இயலாது என்றோ, அல்லது அதனை நிறைவேற்றுவதற்கு தன்னை இயலாதவாறு ஆக்கிக் கொண்டாலோ, அத்தருணத்திலிருந்து அவ்வொப்பந்தம் மீறப்பட்டு விட்டதாக கருதப் படும். எனவே ஒப்பந்த மீறுகைக்காக இழப்பீடு கோரி மறு தரப்பினர் உடனே அவர் மீது வழக்கு தொடரலாம். அவரும் அவ்வொப்பந்தத்தின் நிறைவேற்றக் காலம் வரும் வரை காத்திருக்கத் தேவையில்லை.

மேற்படி பிரச்சனையில், அ என்பவர், தனது தந்தையின் வாழ்நாளிற்கு பிறகு 'ஆ' என்பவரை திருமணம் செய்வதாக ஒப்பந்தம் செய்து கொண்டார். ஆனால், 'அ'–வின் தந்தை மரணம் அடைவதற்கு முன்னரே 'அ' என்பவர் 'இ' என்பவரை திருமணம் செய்து கொண்டார். இங்கு 'தந்தையின் வாழ்நாளிற்குப் பிறகு' என்பது 'அ' என்பவர் 'ஆ' என்பவரை திருமணம் செய்து கொள்வதாக உடன்பட்ட ஒப்பந்தத்தின் நிறைவேற்றக் காலமாகும். ஆனால் அதற்கு முன்பாக, 'அ' என்பவர் 'இ' என்பவரை திருமணம் செய்து கொண்டுவிட்டார். எனவே, மேற்படி பிரிவின்படி, 'அ' என்பவர் ஒப்பந்தம் செய்து கொண்டபடி 'ஆ' என்பவரை திருமணம் செய்து கொள்வதற்கு தன்மை இயலாதவராக ஆக்கிக் கொண்டார். இது ஒரு முன்னிகழ் ஒப்பந்த மீறுகை ஆகும். இங்கு அவ்வொப்பந்தத்தின் மேற்படி நிறைவேற்றக் காலம் (அதாவது 'தந்தையின் வாழ்நாளிற்குப் பிறகு') என்பது இன்னும் வரவில்லை. எனினும் தனது முன்னிகழ் ஒப்பந்த மீறுகைக்காக, 'அ' என்பவர், 'ஆ' என்பவருக்கு இழப்பீடு அளிப்பதற்கு பொறுப்புடையவர். இதன் பொருட்டு, 'ஆ' என்பவர் அவ்வொப்பந்தத்தை முடிவிற்கு கொண்டு, இழப்பீடு கோரி உடனடியாக 'அ' என்பவர் மீது வழக்கிட வேண்டும். ஒப்பந்த நிறைவேற்றக் காலம் வரும் வரை காத்திருக்கத் தேவையில்லை. எனவே 'ஆ' என்பவர் ஒப்பந்த மீறுகை வழக்கு தொடரவியலும் என்பதே தீர்வு.

22. 'A' contracts to marry 'B'. Since 'A' already married to 'C' and being forbidden by the law, he refuses to marry her later. 'B' sues 'A' for compensation for the loss and non-performance of the promise. Is 'A' liable?

'அ', 'ஆ'வை மணக்க ஒப்பந்தம் செய்து கொள்கிறார். ஏற்கனவே 'அ', 'இ'யை மணந்திருப்பதாலும், அவ்வாறு மணப்பது சட்டத்தினால் தடை செய்யப்பட்டிருப்பதாலும் 'அ' அவரை மணக்க மறுக்கிறார். வாக்குறுதியை நிறைவேற்றாததற்கும், இழப்பிற்கும் இழப்பீடு கோரி 'அ'வின் பேரில் 'ஆ' வழக்கு தொடர்கிறார். 'அ' பொறுப்பாவரா?

தீர்வு:

மேற்கண்ட பிரச்சனை இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 56–வது பிரிவின் கீழான (c) எனும் எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றியதாகும். இங்கு முதற்கண் பிரிவு 56 என்ன கூறுகிறது என்பதை கவனிக்க வேண்டும்.

ஒரு ஒப்பந்தம் நிறைவேற்றத்தக்கதாக இருக்க வேண்டும். நிறைவேற்ற இயலாத ஒரு செயலைச் செய்வதாக உடன்பாடு செய்து கொள்வது செல்லாது. எனவே உடன்பாடு இல்லாநிலையடையும் (Void), என்று **பிரிவு 56–ன்** கீழான **முதற் பத்தி** குறிப்பிடுகிறது.

ஒரு செயலைச் செய்வதற்கான ஒப்பந்தமொன்று, அவ்வொப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட பின்னர், உறுதியுரை அளித்தவர் தடுக்க இயலாத சில நிகழ்ச்சிகளின் காரணமாக, அவ்வொப்பந்தம் நிறைவேற்ற இயலாததானால், அல்லது, அவ்வொப்பந்தமே சட்டப்புறம்பானால், அச்செயல் அவ்வாறு நிறைவேற்ற இயலாததாக அல்லது சட்டப்புறம்பானதாக ஆனவுடன், இல்லாநிலையடைகிறது என்று **பிரிவு 56 –ன்** கீழான **இரண்டாம் பத்தி** கூறுகிறது.

ஒப்பந்தமொன்றில் உறுதியுரைக்கப்பட்ட ஒரு செயல், நிறைவேற்ற இயலாதது அல்லது சட்டப்புறம்பானது என்பது உறுதியுரை அளிப்பவருக்கு தெரிந்திருந்து, ஆனால் உறுதியுரை ஏற்பவருக்கு தெரியாமல் இருப்பின், அவ்வுறுதியுரையின் நிறைவேற்றாமையால் உறுதியுரை ஏற்றவருக்கு இழப்பு ஏதேனும் ஏற்பட்டால், அதற்குரிய இழப்பீட்டை உறுதியுரை அளிப்பவர் அளிக்க வேண்டும் என்று **பிரிவு 56–ன் கீழான மூன்றாம் பத்தி** கூறுகிறது.

மேற்படி பிரச்சனைக்கு தீர்வு காண, நமக்கு பிரிவு 56–ன் கீழான மூன்றாம் பத்தி உதவிக்கு வருகிறது. அதன்படி, 'அ' என்பவர் 'ஆ' என்பவரை மணக்க ஒப்பந்தம் செய்து கொள்கிறார். இங்கு ஏற்கனவே 'அ', 'இ'யை மணந்துள்ளார். எனவே 'ஆ' என்பவருடன் திருமணம் செய்து கொள்வது, சட்டப்புறம்பானது என்றும் ஒப்பந்தம் செய்து கொள்ளும் காலத்திலேயே 'அ'–க்குத் தெரியும். எனவே 'அ' என்பவர் 'ஆ'–வை மணம் செய்து கொள்வதாக அளித்த உறுதியுரையின் நிறைவேற்றாமையால், 'ஆ'–க்கு ஏற்பட்ட இழப்பிற்கு, பிரிவு 56–ன் கீழான மூன்றாம் பத்தியின்படி 'அ' இழப்பீடு அளிக்க வேண்டும். அதற்கு 'அ' பொறுப்புடையவரே என்பதுதான் தீர்வு.

ஒப்பந்த விடுவிப்பு

23. 'A' musician agrees to sing in a theatre owned by 'B' on a particular day. 'A' requests to be excused owing to his inability to sing on that day, because of a severe cold. Is 'A' liable for damages to 'B'.

'A' என்னும் ஒரு இசை வல்லுநர் 'B'க்கு உரிமையான அரங்கில் குறிப்பிட்ட ஒரு நாளில் பாடுவதாக ஒப்புக் கொள்கிறார். கடுமையான சளி காரணமாக அந்த நாளில் பாடுவதற்கு தம்முடைய இயலாமையை 'A' மன்னித்து விடும்படி வேண்டுகிறார். 'B'க்கு இழப்பீடு கொடுக்க 'A' கடமைப்பட்டவரா?

தீர்வு:

ஒப்பந்தம் உருவாகியபோது, அது நிறைவேற்ற இயலும் தன்மையுடையதாக இருந்து, அதன் பின்னர் இயலாமை தோன்றினால், அது ஒப்பந்தத்திற்கு பிந்திய இயலாமை (Post-contractual impossibility) எனப்படும். இதனையே **'இடையிட்டு நிகழ்வுறு இயலாமை'**

(Supervening impossibility) என்றும் கூறுவர். இவ்விதி இயலாமையால், ஒரு ஒப்பந்தம் இல்லாநிலையடையும் **(பிரிவு 56–ன் கீழான இரண்டாம் பத்தி).**

ஒப்பந்தம் நிறைவேற்ற இயலாமைக்கு, ஒப்பந்தம் நிறைவேறாதது ஒரு **மன்னிப்பாக அல்லது சமாதானமாக (excuse)** எடுத்துக் கொள்ளப்படமாட்டாது, என்பது பொதுவிதி. ஆனால், மேற்படி இயலாமையானது ஒப்பந்தத் தரப்பினர்களின் சக்திக்கு மீறிய நிகழ்ச்சிகளும், எதிர்பாராத சம்பவங்களும் ஏற்பட்டு உண்டானால் ஒப்பந்த தரப்பினர்கள், தங்கள் உறுதியுரைகளை மேற்கொண்டு நிறைவேற்றுவதிலிருந்து விடுவிக்கப்படுவார்கள்.

அதாவது, ஒரு ஒப்பந்தத்தின் நிறைவேற்றமானது, தரப்பாளரின் தனித்திறமை, தகுதி முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தால், அவர் இறந்தவுடன் அல்லது உடல் நலம் குன்றியவுள் ஒப்பந்தம் விடுவிப்பு பெறுகிறது (Death or incapacity of parties for personal service will discharge the contract). ஏனெனில் இறப்பும் இயலாமையும், கடவுள் செயலாகும் (Act of God or Vis Major). ஒப்பந்த நிறைவேற்றத்திற்கு மனிதனின் வாழ்வு, ஒரு உட்கிடை நிபந்தனையாகும் (Implied Condition). முக்கிய வழக்கு வருமாறு.

Robinson v. Davison[1] – இவ்வழக்கில் ஒரு இசைக்கலைஞர், குறிப்பிட்ட தினத்தில் இசை நிகழ்ச்சி நடந்த உறுதியுரைத்தார். அந்த இசை நிகழ்ச்சியில் பங்கேற்கும் முன்னர், அவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டது. எனவே அவரால் இசை நிகழ்ச்சியை நடத்த இயலவில்லை. எனவே ஒப்பந்தம் நிலை குலைந்து போனது என்றும், **இடையிட்டு நிகழ்வுறு இயலாமையினால் (supervening impossibility)**, அவர் ஒப்பந்தத்திலிருந்து விடுவிப்படைந்தார் என்றும், அவரிடமிருந்து ஒப்பந்த மீறுகைக்காக இழப்பீடு எதையும் பெறவியலாது என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

இவ்வழக்கின் அடிப்படையில் அமைந்ததுதான், மேற்படி பிரச்சனையும். எனவே, கடுமையான சளி காரணமாக ஒப்புக் கொண்ட நாளில் பாடுவதற்கு தம்முடைய இயலாமையை கூறி, தன்னை மன்னித்து விடும்படி 'A' வேண்டுகிறார். இது ஒரு இடையிட்டு நிறைவேற்ற இயலாமை என்பதால், அவர் 'B'-க்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்பதே தீர்வு.

ஒப்பந்தப் போல்வு

24. Mani a tradesman leaves a bag of rice at Selvam's house by mistake. Selvam consumes the goods for his own use. Can Mani recover the price of the goods from Selvam?

செல்வம் என்பவரின் வீட்டுக்கு தவறுதலாக அரிசி மூட்டை ஒன்றை மணி என்பவர் அனுப்புகிறார். அப்பொருளை தன் சொந்த உபயோகத்திற்கு செல்வம் பயன்படுத்துகிறார். செல்வம் என்பவரிடமிருந்து அப்பொருளுக்கான விலையை மணி என்பவர் பெற முடியுமா?

1. (1871) 40 L.J. Ex. 171

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் 70–வது பிரிவானது, ஒரு நபர் கொடை நோக்கமின்றி மற்றொரு நபருக்காக செயல் எதையும் அல்லது பொருட்கள் வழங்குகை எதையும் சட்டப் படியாகச் செய்து, அம்மற்றொரு நபர் அச்செயலின் அல்லது பொருளின் பயனை அனுபவித்திருந்தால், பின்னவர் அச்செயலுக்காக முன்னவருக்கு இழப்பீடு வழங்க வேண்டும் அல்லது அவ்வாறு வழங்கப்பட்ட பொருளை முன்னவரிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டும், என்று கூறுகிறது.

எனவே ஒரு ஒப்பந்தம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் சட்டப்படியாக செய்யப்பட்ட செயலுக்காக இழப்பீடு கோரலாம் அல்லது வழங்கப்பட்ட பொருளை, திரும்பப் பெறலாம் என்பது மேற்படி பிரிவிலிருந்து தெளிவாகிறது. இங்கு அப்படிப்பட்ட ஒப்பந்தம் எதுவும் தரப்பினர்களுக்கிடையே இல்லையென்றாலும், சட்டமே அவர்களுக்கிடைய ஒரு ஒப்பந்தத்தை உருவாக்கிறது. இதனை 'ஒப்பந்தப் போல்வு' (quasi-contract) என்பர்.

இப்பிரிவின் அடிப்படையில், செல்வத்தின் வீட்டிற்கு மணி என்பவர் தவறுதலாக அரிசி மூட்டை ஒன்றை அனுப்பியுள்ளார். எனவே இங்கு அது கொடை நோக்கம் (இலவசமாக) எதுவுமின்றி மணி என்பவரால் செல்வத்தின் வீட்டிற்கு அனுப்பப்பட்டுள்ளது தெளிவாகிறது. அதனை செல்வம் தனது சொந்த உபயோகத்திற்காக பயன்படுத்தி விட்டார். எனவே அதற்குரிய விலையை, மணி என்பவர் செல்வத்திடமிருந்து திரும்பப் பெறலாம் என்பதே தீர்வு.

25. A fruit parcel was delivered under mistake to B, who consumes the fruit thinking that it is a birthday present. Is B bound to pay for the fruits to the true owner?

ஒரு பழக்கூடை தவறுதலாக B என்பவரிடம் அளிக்கப்பட்டது. அது தனது பிறந்த நாள் பரிசு என எண்ணி B அந்த பழங்களை உட்கொள்கிறார். B அதற்கான விலையை பழத்தின் உரிமையாளருக்கு கொடுக்க வேண்டுமா?

தீர்வு:

இப்பிரச்சனை, இதற்கு முந்தய பிரச்சனையை ஒத்ததாகும். எனவே அதில் தீர்வளிக்கப்பட்டவாறு, இங்கு இந்திய ஒப்பந்தச் சட்டத்தின், 70–வது பிரிவின்படி பழத்திற்கான விலையை அதன் உரிமையாளருக்கு B என்பவர் கொடுத்துதான் ஆக வேண்டும்.

அறுதியிட்ட இழப்பீடும் தண்டப்பணமும்

26. A undertakes ro repay B a loan of Rs. 2,000 by five equal monthly instalments with a stipulation that in default of payment of any instalment, the whole shall become due. Can this stipulation be enforced?

ஏதாவது ஒரு தவணையைச் செலுத்தத் தவறினால் கடன் தொகை முழுவதையும் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் A, B–யிடம் வாங்கிய கடன் தொகையான ரூ.2,000 ஐ ஐந்து மாதங்களில் சம அளவு தவணைகளில் செலுத்த பொறுப்பேற்றுக் கொண்டார். இந்நிபந்தனையை வலியுறுத்த இயலுமா?

தீர்வு:

இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் **74–வது பிரிவின்படி** ஒப்பந்தத்தின் ஒரு தரப்பாளரின் ஒப்பந்த மீறுகையினால் 'பாதிக்கப்பட்ட மறு தரப்பாளர்' நியாயமான தொகையையே இழப்பீடாகப் பெற முடியும். ஒரு ஒப்பந்தம் மீறப்பட்டால், அத்தகு ஒப்பந்த மீறுகைக்கு இழப்பீடாக ஒரு தொகை கொடுக்கப்பட வேண்டும் என்று ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருந்தாலோ அல்லது தண்டத் தொகை வடிவில் வேறு ஏதாவது நிபந்தனை அவ்வொப்பந்தத்தில் உள்ளடங்கியிருந்தாலோ, மீறுகை பற்றி முறையிடும் தரப்பாளர் (Party complaining breach) உண்மையான இழப்பை (actual loss) நிரூபித்தாலும், இல்லாவிடினும், ஒப்பந்த மீறுகை புரிந்த தரப்பாளரிடமிருந்து, ஒப்பந்தத்தில் கூறப்பட்ட தொகையை அல்லது விதிக்கப்பட்ட தண்டத் தொகையை மீறாத ஒரு நியாயமான தொகையை இழப்பீடாகப் பெற உரிமை உடையவராகிறார்.

அசல் தொகையை செலுத்தத் தவறிய நாளிலிருந்து அதிக வட்டி செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை (கட்டுவரம்பு) தண்டப் தொகைக்கான நிபந்தனையாக சொல்லப்படலாம் என்று **74–வது பிரிவின்** கீழான **விளக்கம் (Explanation)** கூறுகிறது.

மேற்படி பிரிவு 74–ன் கீழான எடுத்துக்காட்டுகளில் (f) எனும் எடுத்துக்காட்டே, மேற்படி பிரச்சனையாக மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளது. பொதுவாக இழப்பீடு கோரும் வழக்குகளில், ஒரு ஒப்பந்தத்தில் அதன் மீறுகைக்காக குறிப்பிடப்பட்டுள்ள இழப்பீடு, 'அறுதியிடப்பட்ட இழப்பீடா' அல்லது 'தண்டப் தொகையா' என்பதை கண்டறிதல் நீதி மன்றங்களுக்கு அவசியமாக உள்ளது. 'அறுதியிடப்பட்ட இழப்பீடு' என்பது, உண்மையான இழப்பின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு, ஒப்பந்தத்தில் நிர்ணயிக்கப்படுவதாகும். எனினும் அதை அப்படியே வழங்கவோ அல்லது நியாயமான தொகையை 'அறுதியிடப்பட்ட இழப்பீடாக' நிருணயித்து வழங்கவோ நீதிமன்றத்திற்கு தன்விருப்புரிமை அதிகாரம் உண்டு. 'தண்டத் தொகை' என்பது உண்மையான இழப்பைக் கணக்கிட்டு, அதன் அடிப்படையில் நிர்ணயிக்கப்படாததாகும். அபராதத்தின் தன்மை கொண்டதாகும். எனவே இழப்பீட்டுத் தொகையாக ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது தண்டத் தொகை எனில், அதை அப்படியே நீதிமன்றம் வழங்காது. நியாயமான தொகையைக் கணக்கிட்டு அதனை இழப்பீடாக வழங்கும்.

மேற்படி பிரச்சனையில், ஏதாவது ஒரு தவணையைச் செலுத்தத் தவறினால் கடன் தொகை முழுவதையும் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் A, B–யிடம் வாங்கிய கடன் தொகையான ரூ.2,000/–ஐ அய்ந்து மாதங்களில் சம அளவு தவணைகளில் செலுத்த பொறுப்பேற்றுக் கொண்டுள்ளார். இது தண்டப் பணத்தின் வடிவிலான நிபந்தனை கிடையாது. அந்நிபந்தனை நியாயமான ஒன்றே. A என்பவர் தவணைகளைத்

தவறாமல் முழுமையாக செலுத்த வேண்டும் என்பதற்காக B விதித்த நிபந்தனையாகும். எனவே ஒப்பந்தப்படி அதனை B வலியுறுத்த முடியும் என்பதே தீர்வு.

இந்நிலைப்பாடானது, பிரிவு 73-ன் கீழான (e) எனும் எடுத்துக்காட்டை கண்டால் மேலும் விளங்கும். அதன்படி B என்பவருக்கு A என்பவர் கடன்பட்டுள்ளார். அத்தொகையை செலுத்தும் பொருட்டு, ஒரு குறிப்பிட்ட தினத்தில் 10 மூட்டை நெல்லை அளிப்பதாக உடன்படுகிறார். அவ்வாறு அந்தினத்தில் அளிக்கத் தவறினால் 20 மூட்டை நெல்லை அளிக்க வேண்டும் எனும் நிபந்தனைக்கும் A உடன்படுகிறார். இந்நிபந்தனை, தண்டத் தொகைக்குரியதாகும். எனவே என்பவர் A மீறுகை புரிந்தால் B என்பவர் நியாயமான இழப்பீட்டை மட்டுமே பெற உரிமை படைத்தவர் ஆவார்.

குறித்தவகை நிவாரணச்சட்டத்தின் கீழான சில பிரச்சனைகள்

27. A singer contracted to sing in a theatre owned by Yogi for 5 days in the month of December. The same contract contained a clausse stating that the singer will not sing in any other theatre during this period. The singer violated this clause and agreed to sing in another theatre. Yogi filed a suit to restrain the singer from singing in any other theatre. Will Yogi succeed?

போகி என்பவரின் அரங்கில் டிசம்பர் திங்களில் 5 நாட்களுக்கு பாடுவதற்கு ஓர் பாடகர் ஒப்பந்தமொன்று செய்து கொண்டார். இக்காலத்தில் வேறு அரங்கில் பாட ஒப்புக் கொள்ள மாட்டேன் என்றும் அவ்வொப்பந்தத்தில் கூறப்பட்டிருந்தது. ஆனால் அந்தப் பாடகர் இந்தச் சரத்தினை மீறி வேறு அரங்கில் பாடுவதற்கு ஒப்புக் கொண்டார். எனவே போகி என்பவர் அப்பாடகரை வேறு அரங்கில் பாடுவதை தடை செய்ய வேண்டி வழக்கொன்று தாக்கல் செய்கிறார். போகி வெற்றி பெற முடியுமா?

தீர்வு:

மேற்கண்ட பிரச்சனையில் போகி என்பவருக்கும், பாடகருக்கும் இடையிலான ஒப்பந்தத்தில் இரண்டு உடன்பாடுகள் உள்ளன. ஒன்று, அந்த நாட்களுக்கு வேறு அரங்கு எதிலும் பாட அப்பாடகர் ஒப்புக் கொள்ளக் கூடாது எனும் எதிர்மறை உடன்பாடு (Negative Agreement). மற்றொன்று, போகியின் அரங்கில் மட்டுமே அந்த அந்த நாட்களுக்கு பாட வேண்டும் எனும் நேர்மறை உடன்பாடு (Affirmative or Postive Agreement).

இங்கு தனது அரங்கில் மட்டுமே அப்பாடகர் பாட வேண்டும் எனும் நேர்மறை உடன்பாட்டை நிறைவேற்ற கட்டாயப்படுத்த முடியாது. ஏனெனில், மேற்படி ஒப்பந்தம் ஆள்சார் தகுதியை உள்ளடக்கியதாகும். குறித்தவகை நிவாரணச் சட்டத்தின் பிரிவு 14(1)(b)-ன்படி, ஆள்சார் தகுதியை உள்ளடக்கிய ஒப்பந்தங்களை குறித்தவகையில் நிறைவேற்றக் கட்டாயப்படுத்த முடியாது. ஆனால் அச்சட்டத்தின் 42-வது பிரிவின்படி,

அய்ந்து நாட்களுக்கு வேறு எந்த அரங்கிலும் அப்பாடகர் பாடக் கூடாது எனும் எதிர்மறை உடன்பாட்டை நிறைவேற்ற யோகி நீதிமன்றத்தை அணுகி உறுத்துக்கட்டளை பெறலாம். மேற்படி பிரச்சனை பிரபலமான **Lumley v. Wagner**[1] எனும் வழக்கை அப்படியே அடியொற்றியதாகும்.

28. In the course of employment as an advocate Raman got possession of some letters written by his client Mala. Raman threatens to disclose the contents of the letters to a stranger. Can Mala sue for injunction?

இராமன் என்கிற வழக்கறிஞர் அவர் தொழில் முறையில் அமர்த்தப்பட்டிருக்கும் போது தன் கட்சிக்காரரான மாலா என்பவரிடமிருந்து எழுதிய சில கடிதங்களை தம் கைவசம் பெற்றார். இராமன் என்பவர் அக்கடிதங்களில் உள்ள விஷயங்களை அன்னியர் ஒருவரிடம் தெரிவிப்பதாக பயமுறுத்துகிறார். மாலா என்பவர் உறுத்துக்கட்டளை கோரி வழக்குப் போட முடியுமா?

தீர்வு:

மாலா உறுத்துக்கட்டளை கோரி வழக்குப் போட முடியும். அதாவது இராமன் எனும் வழக்கறிஞர் அக்கடிதங்களில் உள்ளடங்கிய விஷயங்களை அன்னியர் ஒருவரிடம் தெரிவிக்கப் போவதை தடை செய்யக் கோரி, நிலையான உறுத்துக்கட்டளை பெற மாலாவிற்கு உரிமையுண்டு. எவ்வாறெனில், இராமன் அக்கடிதங்களை அன்னியர்களுக்கு காண்பிக்கக் கூடாது என்று, மாலாவிற்கு ஆதரவான ஒரு கடப்பாட்டை, வழக்கறிஞர் என்று முறையில் உட்கிடையாக இராமன் கொண்டுள்ளார். இதை அவர் மீறும் பொழுது, அது 'ஒப்பந்த மீறுகை' ஆகிறது. எனவே அதற்குத் தீர்வழியாக, மாலா உறுத்துக்கட்டளை பெற நீதிமன்றத்தில் வழக்கிடலாம் என்பதே இங்கு தீர்வு.

29. A after contracting with B for selling an antique painting, refuses to sell it. Can B file a suit for specific performance?

அ என்பவர் ஓர் பழங்கால ஓவியத்தை ஆ என்பவருக்கு விற்க ஒப்பந்தம் செய்த பிறகு, விற்க மறுத்தார். ஆ என்பவர் குறித்த வகை நிறைவேற்றல் கோரி வழக்கிட முடியுமா?

தீர்வு:

குறித்த வகை நிவாரணச் சட்டத்தின் **பிரிவு 10(a)–ன்படி,** ஒரு ஒப்பந்தத்தின் கீழ் செய்வதாக உடன்பட்ட செயலைச் செய்யாமல் போனதால் ஏற்பட்ட இழப்பீட்டை உறுதி செய்வதற்கு அளவு ஏதும் இல்லாத போது, நீதிமன்றம் தனது தன் விருப்புரிமையின் அடிப்படையில் அவ்வொப்பந்தத்தினை குறித்த வகையில் நிறைவேற்றக் கட்டாயப் படுத்தலாம். 'ஆ' என்பவர் குறித்த வகை நிறைவேற்றல் கோரி வழக்கிட முடியும்.

மேற்படி பிரச்சனையில் 'அ' என்பவர் 'ஆ' என்பவருடன் ஒரு பழங்கால ஓவியத்தை

1. (1852) 1 De G M & G 604

விற்பதற்கான ஒப்பந்தத்தில் ஈடுபடுகிறார். பிறகு அந்த ஓவியத்தை 'ஆ' என்பவருக்கு விற்க மறுக்கிறார். மேற்படி பழங்கால ஓவியத்தை 'ஆ'–வுக்கு 'அ' என்பவர் விற்காது போனால், அதனால் 'ஆ'–க்கு ஏற்படும் இழப்பை, எதைக் கொண்டு மதிப்பிட்டு இழப்பீடு வழங்குவது? இங்கு இழப்பீட்டை உறுதி செய்வதற்கென்று (நிருணயிப்பதற்கென்று) அளவு ஏதும் கிடையாது. ஏனெனில் விற்கப்பட ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட ஓவியமோ, பழங்காலத்தைச் சார்ந்ததாகும். இப்படிப்பட்ட பழமையான பொருட்கள் என்றாலே, கூடவே அதன் பெருமையும், பாரம்பரியமும் சேர்ந்துவிடுகிறது. பலதரப்பட்ட மக்கள் பலவிதமான மதிப்பைக் கூறுவார்கள். பார்ப்பவர்களின் கலை மற்றும் அழகுணர் விற்கேற்ப அதன் விலையும் மாறுபடும். எனவே, அதன் சந்தை விலையை இன்னதுதான் என்று அளவிட்டு கூறவியலாது.

எனவே, அந்த ஓவியத்தை விற்காது போனால், 'ஆ'–வுக்கு எந்த அளவிற்கு இழப்பீட்டைத் தர 'அ' பொறுப்புடையவர் என்பதை உறுதி செய்ய இங்கு அளவு ஏதுமில்லை. ஆகவே, தனக்கு அந்த பழங்கால ஓவியத்தை 'அ' விற்றே ஆக வேண்டும் என்று கூறு, 'ஆ' அவ்வொப்பந்தத்தின் குறித்தவகை நிறைவேற்றத்தைக் கோரி 'அ' மீது வழக்கிடலாம் என்பதே தீர்வு. (குறித்தவகை நிவாரணச் சட்டத்தின் விபரங்களுக்கும், பிரச்சனைகளுக்கும் இந்நூலாசிரியரின் 'குறித்தவகை நிவாரணச் சட்டம்' எனும் நூலை வாங்கிப் பயன் பெறுக.)

வாழ்க தமிழ்!
வளர்க சட்டத்தமிழ்!!